Mrinalini's

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

தமிழ்வள மேம்பாட்டில்
முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

முனைவர் உலகநாயகி பழனி

ஆய்வேட்டின் நூல்வடிவு

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

தமிழ்வள மேம்பாட்டில் முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

முனைவர் உலகநாயகி பழனி

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications

ISBN: 978-81-939502-2-7

eBOOK ~ மின் நூல்

தமிழ்வள மேம்பாட்டில்
முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

முனைவர் உலகநாயகி பழனி

சென்னை பல்கலைக்கழக
முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் நூல்வடிவு

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

தமிழ்வள மேம்பாட்டில்
முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchaser.

Published by:

1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications
AD-13, 5th Street
Anna Nagar West
Chennai – 600 040

நவம்பர் 2018

Price: Rs.625.00

ISBN 978-81-939502-2-7

9 788193 950227

Wrapper Design: Centenary Committee
Printed at: DJ Printers, Chennai – 600 095

முனைவர் உலகநாயகி பழனி

பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் தமிழ் உலகம் அறிந்த ஒரு நபர். கடந்த 35 ஆண்டுகளாக தமிழ்கூறும் நல்லுலகில் தமிழ்ப்பணி ஆற்றி வருபவர். “உறவுச் சுரங்கம்” என்ற ஓர் இலக்கிய அமைப்பை உருவாக்கி கடந்த 5 ஆண்டுகளில் 60-க்கும் மேற்பட்ட மாதாந்திர இலக்கிய நிகழ்வினை நடத்தி வரும் பேராசிரியர். 20-க்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். 12 அயல்நாட்டுக் கருத்தரங்குகளை நடத்தியவர். 20-க்கும் மேற்பட்ட உள்நாட்டுக் கருத்தரங்குகளை நடத்தியவர். தமிழ் மூலம் 52 நாடுகள் சுற்றுப்பயணம் செய்தவர். தமிழ்ப் பணியே தன் வாழ்நாள் பணியாகக் கருதுபவர். முனைவர் பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் அவர்களின் படைப்புகளை முனைவர் பட்ட ஆய்வு செய்த முதல் தமிழ் ஆய்வாளர்.

பதிப்புரை

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015-2016), நூற்றாண்டுக்குழு பன்னிரெண்டு நூட்களை வெளியிட்டது. அவரது 100+ நூல்கள் இணையதளத்தில் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. (http://tinyurl.com/nsr100books)

'தமிழ்வள மேம்பாட்டில் முனைவர் ந சுப்புரெட்டியாரின் பணி' எனும் இந்நூல், முனைவர் உலகநாயகி பழனி (பேராசிரியர் (ஓய்வு), தமிழ்த்துறை, ஸ்டெல்லா மாரிஸ் மகளிர் கல்லூரி, சென்னை – 600 086) அவர்களால் சென்னை பல்கலைக்கழகத்தில் 1993-ல் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேட்டின் (***'தமிழ்வள மேம்பாட்டில் டாக்டர் ந சுப்புரெட்டியாரின் பணி')*** நூல்வடிவு. இவ்வாய்விற்கு, பேராசிரியரின் தலைமாணாக்கரான முனைவர் ந கடிகாசலம் அவர்கள் நெறியாளராக இருந்து உதவினார். 1993 வரை பேராசிரியர் படைத்த **78** நூட்கள் ஆய்வுக்கு மையக் களமாக அமைந்தன. பேராசிரியர் அவர்கள் தம் வாழ்நாளில் படைத்த நூட்கள் 135.

'***ந சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணிகள்***' எனும் தலைப்பில், முனைவர் க ஜோதிமணி, (உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை – 625 014) அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 2015-ல் முனைவர் பட்டத்திற்காக ஓர் ஆய்வேட்டினை சமர்ப்பித்தார். 2017-ல் முனைவர் பட்டம் வழங்கப்பெற்றது. பின்னர், அவ்வாய்வேடு 2018-ல் நூலாக வெளியிடப் பெற்றது. இவ்வாய்வில் பேராசிரியர் படைத்த 135 நூட்களும் பயன்படுத்தப் பெற்றன.

கே அரிகர சுதன், முழுநேர ஆய்வாளர் (கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்), பேராசிரியரின் வைணவ நூட்களை (20) மையமாகக் கொண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டுள்ளார். முனைவர் பட்டம் பெற்ற பின்பு, அவ்வாய்வேடு நூலாக வெளியிடப்பெறும்.

பேராசிரியரின் நூட்களை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ள விழையும் ஆராய்ச்சி மாணவர்கள் வரவேற்கப்பெறுகின்றனர்.

நூற்றாண்டுக் குழு

நன்றியுரை

ஆய்வு செய்ய வாய்ப்பளித்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரிக்கு என் உளங்கனிந்த நன்றி. ஆய்வு செய்ய வாய்ப்புத் தந்த கல்லூரி முதல்வர் அருட்திரு சகோதரி டாக்டர் ஹெலன் வின்சென்ட் அவர்களுக்கும், தற்போதைய முதல்வர் அருட்திரு சகோதரி டாக்டர் அன்னம்மா பிலிப் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி விஜயா ஆசிர் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். துணை முதல்வர்கள் அருட்திரு சகோதரி டாக்டர் மேரி ஜான், இன்முக நண்பர், பேராசிரியர் டாக்டர் மீராபால் அவர்களுக்கும் என் நன்றி.

ஆய்வுக் கட்டுரை எழுதும் நிலையில் சேகரித்த குறிப்புகளை தலைப்பிற்கு ஏற்றவண்ணம் வகைதொகை செய்து குழப்பங்களை நீக்கித் தெளிவுபடுத்திப் புதிய முறைகளை கையாண்டு கட்டுரைகள் நெறியான முறையில் முழுவடிவம் அமையப் பல்லாற்றானும் ஆய்வேடு செம்மையடைய உடன் நின்று, நன்னெறிப்படுத்திய மேற்பார்வையாளர் டாக்டர் ந. கடிகாசலம் அவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி எப்பொழுதும் உரியது.

ஆய்வுத் தலைப்பை தேர்ந்தெடுத்ததும் எனக்குப் பல்வேறு வகையில் உதவி செய்து, ஆய்வுக்குத் துணையான முதன்மை நூல்கள் <u>அனைத்தையும்</u> கொடுத்து ‘தாயினும் நல்லாராகத்’ திகழ்ந்த பேராசிரியர் என் வணக்கத்திற்குரிய டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு என் உயிர் உள்ளவரை என் நன்றி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பகுதிநேர ஆய்வு மாணவியாக நான் சேரத் துணைநின்ற இயக்குநர் டாக்டர் சிலம்பொலி ஐயா அவர்களுக்கும், என் ஆய்வுக் கருத்துகளை கருத்தரங்குகளில் படிக்க வாய்ப்பு நல்கிய பேராசிரியர் இயக்குநர் பொறுப்பில் இருக்கும் டாக்டர் அன்னிதாமஸ் அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது. ஆய்வு மாணவியாக, தமிழ்

கூறும் நல்லுலகில் என்னை ஈடுபடுத்திய என் பெற்றோர்க்கு யான் என்றும் கடப்பாடுடையேன். இவ்வாய்வு பல்லாற்றானும் சிறக்க பாடுபட்ட என் அருமைத் துணைவர் திரு பழனி அவர்களுக்கும் நான் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்த ஆய்வேட்டை நன்முறையில் தட்டச்சு செய்து தந்த நண்பர் வசந்தன் அவர்களின் குடும்பத்கிற்கு என் நன்றி என்றும் உரியது. இந்த ஆய்வு வெற்றி அடைய இன்முகத்துடன் உதவி செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தார்க்கும் என் நன்றி. நான் ஆய்வு மாணவி என்றதும் என்னைப் பல்லாற்றாலும் ஊக்குவித்த ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்களுக்கு என் நன்றி. குறிப்பாக பொருளாதாரத் துறைத் தலைவர் என் சிந்தனைகளின் கிரியா ஊக்கியாகத் திகழும் டாக்டர் ரமணி அவர்களுக்கு என் நன்றி. எல்லா நிலைகளிலும் என் ஆய்வு வெற்றிபெற இறைவனை வேண்டிக்கொண்ட என் அருமைத் தமிழ் மாணவிகள் (ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி) அனைவர்க்கும் என் உளம் நிறைந்த நன்றி.

உலகநாயகி பழனி

சுருக்க விளக்கம்

அ.ப.மு.	-	அறிவியல் பயிற்றும் முறை
அப். தேவா.	-	அப்பர் தேவாரம்
ஆ.ஹி.	-	ஆசார்ய ஹிருதயம்
இராம.நூற்.	-	இராமானுஜ நூற்றந்தாதி
இரண்.திருவந்.	-	இரண்டாந் திருவந்தாதி
க.உ.கோ.	-	கல்வி உளவியல் கோட்பாடு
க.ப.மு.	-	கவிதை பயிற்றும் முறை
கம்பரா.யுத்த.	-	கம்பஇராமாயணம் யுத்தகாண்டம்
கம்பரா.மூலபலம.	-	கம்பஇராமாயணம் மூலபலம்வதைப்படலம்
கம்பரா.ஆரணிய.	-	கம்பஇராமாயணம் ஆரணிய காண்டம்
கம்பரா.மாரீ.வதை.	-	கம்பஇராமாயணம் மாரீசன் வதைப்படலம்
கம்பரா.கிட்கிந்தை	-	கம்பஇராமாயணம் கிட்கிந்தை காண்டம்
சம்.தேவா.	-	சம்பந்தர் தேவாரம்
சி.ஞா.போ.	-	சிவஞானபோதம்
சிலப்.நாடுகாண்	-	சிலப்பதிகாரம் நாடுகாண்காதை
சிவபு.	-	சிவபுராணம்
சுந்.தேவா.	-	சுந்தரர் தேவாரம்
சோ.நா.தி.	-	சோழநாட்டுத் திருப்பதிகள்
சை.ச.வி.	-	சைவசமய விளக்கு
ஞான.தேவா.	-	ஞானசம்பந்தர் தேவாரம்
த.ப.மு.	-	தமிழ் பயிற்றும் முறை
தா.பா.	-	தாயுமானவர் பாடல்
திருவா.	-	திருவாசகம்
திருவாய்.	-	திருவாய்மொழி
திருமந்.	-	திருமந்திரம்
திருவா.கீர்த்தி.	-	திருவாசகம் - கீர்த்திஅகவல்
திருவா.சிவ.புரா.	-	திருவாசகம் - சிவபுராணம்
திருவா.திருவெம்.	-	திருவாசகம் - திருவெம்பாவை
தே.பி.	-	தேசிக பிரபந்தம்
தேவா.	-	தேவாரம்
தொல்.பொருள்.மர.	-	தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல்
தொ.நா.தி.	-	தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
நூற்.	-	நூற்பா
பா.க.	-	பாரதியார் கவிதைகள்
பா.நா.தி.	-	பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
பா.க.	-	பாரதிதாசன் கவிதைகள்
பரிபா.	-	பரிபாடல்
புறம்	-	புறநானூறு
பெரிய.திரு.	-	பெரிய திருமொழி

பெரியாழ்.திரு.	-	பெரியாழ்வார் திருமொழி
பெரிய.உருத்திரபசு.புரா.	-	பெரியபுராணம் உருத்திரபசுநாயனார் புராணம்
பெரிய.திருநீலநக்.புரா.	-	பெரியபுராணம் திருநீலநக்கநாயனார் புராணம்
பெரிய.திருஞான.புரா.	-	பெரியபுராணம் திருஞானசம்பந்த நாயனார் புராணம்
ம.நா.தி.	-	மலைநாட்டுத் திருப்பதிகள்
வ.நா.தி.	-	வடநாட்டுத் திருப்பதிகள்

{☺}{☺}{☺}*****{☺}{☺}{☺}

பொருளடக்கம்

பதிப்புரை
நன்றியுரை
சுருக்க விளக்கம்

பகுதி	இயல்	தலைப்பு	பக்கம்
I	1	நுழைவாயில்	1 - 3
II	2	கல்வியியல் தமிழ்	4 - 29
III	3	அறிவியல் தமிழ் - 1 (இயற்பியல்)	30 - 72
	4	அறிவியல் தமிழ் - 2 (உயிரியல்)	73 - 97
IV	5	இலக்கியத் தமிழ்	98 - 102
	6	திறனாய்வுத் தமிழ்	103 - 127
	7	ஆராய்வுத்தமிழ்	128 - 138
	8	மொழிபெயர்ப்புத் தமிழ்	139 - 165
V	9	தெய்வத்தமிழ் (வைணவம்)	166 - 185
	10	தெய்வத்தமிழ் (சைவம்)	186 - 228
VI	11	பயண இலக்கியத் தமிழ்	229 - 256
	12	வாழ்வியல் தமிழ்	257 - 286
VII	13	பேராசிரியரின் தமிழ்ப் பணி	287 - 307
	14	ஆய்வு முடிவுகள்	308 - 313
		பின்னிணைப்புகள்	
	1	ஆய்வு மூலங்களாக அமைந்த பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்	314 - 327
	2	துணைநூற்பட்டியல்	328 - 333
	3	பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்	334 - 336

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

பகுதி – I

இயல் - 1

நுழைவாயில்

பகுதி 1 :<>: இயல் – 1

நுழைவாயில்

ஆராய்ச்சி என்பது, ஒரு குறிப்பிட்ட பொருளை ஒழுங்கான நெறிமுறைப்படி தகவல்களைத் தேடி எடுத்து அவற்றை ஒரு திட்டமிட்ட முறையில் ஒழுங்குபடுத்தி வரைவதாகும். இன்று தமிழ் இலக்கிய ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சி பல்வேறு தலைப்புகளில் ஆராயப்படுகின்றன. காவியத்தை எடுத்துக்கொண்டால் காவிய அமைப்பு, பாத்திரப்படைப்பு, சிறுபாத்திரப் படைப்பு, காவியத்தில் இயற்கை என்ற தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்படலாம். பக்தி இலக்கியத்தை எடுத்துக்கொண்டால் சமய தத்துவநெறிகள், இயற்கை என்ற தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்படலாம். தனிப்பட்ட எழுத்தாளர் என்று எடுத்துக்கொண்டால் மறைமலை அடிகளின் தமிழ்த் தொண்டு, திரு.வி.க. தமிழ்த் தொண்டு, அயல்நாட்டார் தமிழ்த் தொண்டு, கிறித்துவத் தமிழ்த் தொண்டு, பௌத்தர்களின் தமிழ்த் தொண்டு, சமணர்களின் தமிழ்த் தொண்டு என்றெல்லாம் தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆராயலாம். இன்னும் ‘சிற்றிலக்கியங்கள் தோற்றமும் வளர்ச்சியும்’, தமிழ்ப் புதினங்கள், வரலாற்றுத் தமிழ்ப் புதினங்கள், சமூகப் புதினங்கள் என்றெல்லாம் ஆராய்ச்சி தொடங்கலாம். இன்று பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், அதிகக் கவனத்தை ஈர்ப்பது நாட்டுப்புறப் பாடல்கள். இவற்றில் எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகள் தோன்றிய நிலையில் உள்ளன.

மறைமலை அடிகள், திரு.வி.க., டாக்டர் மு.வ., நாமக்கல் கவிஞர், பாரதியார், பாரதிதாசன் இவர்களெல்லாம் தமிழ்ப்பற்றிய கருத்துகளையே வெளியிட்டுள்ளனர். அதனால் இவர்களைப்பற்றிய ஆய்வு முழுவதும் தமிழ் பற்றியே அமையும். இவ்வாய்வாளர் எம்.ஏ. தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தபொழுது பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் எழுதிய தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, அகத்திணைக் கொள்கைகள் ஆகிய நூல்களில் ஆழங்கால்பட்டுப் படிக்க நேர்ந்தது.

அந்த அந்த நூல்களின் பின்னிணைப்பில் பேராசிரியர் நூல்கள் என்ற தலைப்பில் 1.கல்வி-கல்வி உளவியல், 2. இலக்கியம், 3. சமயம்-தத்துவம், 4. திருத்தலப் பயணங்கள், 5. திறனாய்வு நூல்கள், 6. அறிவியல் நூல்கள், 7. தன்வரலாறு - வாழ்க்கை வரலாற்று நூல்கள், 8. ஆய்வு நூல்கள் ஆகிய தலைப்புகளில் பலதுறை நூல்களைப் பார்க்க நேர்ந்தது. ஆதலால் இவருடைய நூல்களை ஆராயலாம் என்ற விடுப்பூக்கம் (curiosity) இந்த ஆய்வாளரை

உந்தினதால் ‘தமிழ்வள மேம்பாட்டில் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் பணி’ என்ற தலைப்பை இந்த ஆய்வாளர் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இவ்வாய்வாளரும் அவருக்கு வழிகாட்டியாக அமைந்த டாக்டர் ந. கடிகாசலமும் இந்த தலைப்புபற்றி பல நாள் கலந்து ஆய்ந்து இதையே ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்தனர். இந்த ஆய்வுக்கட்டுரை அடியிற் கண்டவாறு ஏழு பகுதிகளாகவும், பதினான்கு இயல்வுகளாகவும் அமைந்துள்ளது.

பகுதி I: இதில் பொதுவாக நுழைவாயில் என்ற தலைப்பில் **இயல் 1** அமைந்துள்ளது.

பகுதி II: இது கல்வியியல்-கல்வி உளவியல் பற்றியது. இதில் **இயல் 2** கல்வியியல் தமிழ் என்று அமைந்துள்ளது.

பகுதி III: இஃது அறிவியல் தமிழ்பற்றியது. இதில் இரண்டு இயல்கள் அடங்கியுள்ளன. அவை:

இயல் 3 - அறிவியல் தமிழ்-1 (இயற்பியல் பற்றியது)
இயல் 4 - அறிவியல் தமிழ்-2 (உயிரியல் பற்றியது)

பகுதி IV: இது பலதுறை இலக்கியத் தமிழ் பற்றியது. இதில் நான்கு இயல்கள் அடங்கியுள்ளன. அவை:

இயல் 5 - இலக்கிய தமிழ்பற்றியது
இயல் 6 - திறனாய்வுத் தமிழ்பற்றியது
இயல் 7 - ஆய்வுத் தமிழ்பற்றியது
இயல் 8 - மொழிபெயர்ப்புத் தமிழ்பற்றியது

பகுதி V: இது தெய்வத்தமிழ்ப் பற்றியது. இதில் சைவம் வைணவம் என்ற இரு பிரிவுகள் அடங்கியுள்ளன. இதில் உள்ள இயல்கள்:

இயல் 9 - தெய்வத்தமிழ் (வைணவம்)
இயல் 10 - தெய்வத்தமிழ் (சைவம்)

பகுதி VI: இதில் பயண இலக்கியத் தமிழ், வாழ்வியல் தமிழ் ஆகிய இரண்டு இயல்கள் அமைந்துள்ளன. அவை:

இயல் 11 - பயண இலக்கியத் தமிழ்
இயல் 12 - வாழ்வியல் தமிழ்

<u>பகுதி VII</u>: இதில் ‘தமிழ்வள மேம்பாட்டில் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் பணி’ என்ற தலைப்பில் பகுப்பாய்வு முறையில் பல தலைப்புகளில் ஆராயப்பெற்றுள்ளது. இதில் இரண்டு இயல்கள்அடங்கியுள்ளன.

<u>இயல் 13</u> - பேராசிரியரின் தமிழ்ப்பணிபற்றியது
<u>இயல் 14</u> - ஆய்வு முடிவுகள் பற்றியது.

இந்த ஆய்வுக் கட்டுரையில் பின்னிணைப்புகளாக:

1. பேராசிரியரின் நூல்கள் - பொருள்முறைப் பகுப்பின்படி
2. துணைநூற் பட்டியல்
3. பேராசிரியர்பற்றி சில பேராசிரியர்கள் கருத்துகள்
4. பேராசிரியர்பற்றி பலரது கருத்துகள்
5. பேராசிரியர் வாழ்க்கைக் குறிப்புகள்

என்ற ஐந்து இணைப்புகள் அடங்கியுள்ளன.

****



ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்
முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

பகுதி – II

இயல் - 2

கல்வியியல் தமிழ்

பகுதி 2 :<>: இயல் – 2

கல்வியியல் தமிழ்

கல்வி ஆராய்ச்சிகளும் மக்களைப் பற்றிப் பிற துறைகளால் அறிந்தனவும் கல்வியை மக்களின் நடத்தையை மாற்றும் ஒரு செயல்முறை என்று காட்டுகின்றன. சற்றேறக்குறைய அரை நூற்றாண்டுகட்கு மேல் கல்வி உலகில் சிறந்து திகழும் பேராசிரியர் ரெட்டியார் கல்வியியலில் ஐந்து நூல்களைப் படைத்துள்ளார். இத்துறையில் தனிக்கவனம் செலுத்தி வருபவர்கள் இவர்தம் படைப்புகளைப் பயின்று அவைமூலம் முகிழ்த்த நூல்கள் பல.[1] கல்வியியலில் மூன்று அடிப்படை கூறுகள் உள்ளன. அவை தனியாள், அவன் வாழும் சூழ்நிலை, தனியாளுக்கும் சூழ்நிலைக்கும் இடையில் இடையறாது நிகழ்கின்ற இடைவினை. மனிதன் ‘கரு ஊரி’’லிருந்து உறையூருக்கு வந்து வாழ்ந்து முடியும் வரையில் அவனுக்கும் அவன் வாழும் சூழ்நிலைக்கும் இடையறாத இடைநிகழ்ச்சியும் இடைவினையும் நடைபெற்று வருகின்றன. தனியாள் சூழ்நிலையில் பாதிக்கப் பெறுகிறான்; சூழ்நிலை அவனை மாற்றுகின்றது. அவன் இடையறாது இயற்றும் இடை வினைகளால் சூழ்நிலையும் மாற்றப்பெறுகின்றது. இந்த இடை வினைகளால்தான் கல்வி ஏற்படுகின்றது.

கல்வியியல் ‘சூழ்நிலை’ என்பது சற்று விரிந்த பொருளுடையது. பிறந்த குழந்தை இவ்வுலகிற்கு வந்ததும் இரண்டுவித சூழ்நிலைகளைச் சந்திக்கின்றது. ஒன்று இயற்பியல் சூழ்நிலை; குழந்தை சிறுவனாக வளர்ந்து கல்வி கற்கத் தொடங்கும்போது வேறு மூன்று சூழ்நிலைகளை எதிர்நோக்கி நிற்கின்றது. இவை கருத்து நிலையில் (Ideational) அமைந்த சூழ்நிலைகளாகும். அவற்றுள் ஒன்று, அறிவாற்றலுள்ள சூழ்நிலை; இதில் மனித பரம்பரை சேர்த்து நூலாக்கி வைத்துள்ள அறிவியல், பொறியியல், மருத்துவயில், வான் இயல், கணித இயல் போன்ற துறைகளிலுள்ள எண்ணற்ற நூல்கள்; மற்றொன்று, மனவெழுச்சியை நல்கும் சூழ்நிலை. இதில் கவிதை, இலக்கியம், சிற்பம், இசை, நாடகம் வேறு பல நுண்கலைகள் போன்ற துறைகளிலுள்ள எண்ணற்ற நூல்கள், இசைக்கருவிகள், திரை அரங்குகள் முதலியன. பிறிதொன்று துணிப்பாற்றல் பற்றிய சூழ்நிலை; இதில் அறநூல்கள், நீதி நூல்கள், சட்டதுறை நூல்கள் முதலியன அடங்கும். இந்தச் சூழ்நிலைகள் மிக விரிந்தவை; விரிந்து கொண்டே செல்பவை.

எந்த உயிரியும் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் இயல்பினுடையது. இதுவே வாழ்கையின் ‘இலக்கணமும்’ ஆகும். மனிதனும் ஒருவகை உயிரியே. ஆகவே, அவனும் தன் சூழ்நிலையோடு இடையறாது இடைவினை இயற்றிப் ‘பொருத்தப்பாடு’’ (Adjustment) அடைகின்றான். மனிதன் தனக்கும் தன் சூழ்நிலைக்கும் இயைந்த தொடர்பை அடையும் பொருட்டுத் தன் நடத்தையை இடைவிடாது மாற்றும் முறையே பொருத்தப்பாடு ஆகும். மனிதன் சூழ்நிலையுடன் மூன்று விதங்களில் பொருத்தப்பாடு அடைகின்றான். ஒன்று: தன் நடத்தையையும் மனப்பான்மைகளையும் சூழ்நிலைக்கேற்றவாறு மாற்றிக்கொள்வது; மற்றொன்று: தன் நடத்தைக்கேற்றவாறு சூழ்நிலையை மாற்றியமைத்துக் கொள்வது; பிறிதொன்று: இரண்டும் கலந்த கலவையினால் அமைத்துக்கொள்வது. குழந்தைப் பருவத்திலும் குமரப் பருவத்திலும் இந்தப் பொருத்தப்பாடு மிகத் தீவிரமாக நடைபெறுகின்றது. மனிதனின் நோக்கம் வாழ்க்கை மட்டுமன்று; உண்மை, நேர்மை, அழகு போன்றவை நிறைந்த நல் வாழ்க்கையாகும் அது. மனிதன் மேற்குறிப்பிட்ட பல்வேறு சூழ்நிலைகளுடன் பொருத்தப்பாடு அடைவதில் பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும், பெரும்பங்கு கொள்கின்றன. கற்பித்தலும், கற்றலும் இப் பொருத்தப்பாட்டை மெய்ப்பிக்கின்றன. இவற்றால் மனிதனும் தான் விரும்பும் துறையைத் தேரந்தெடுத்துக் கொண்டு மிகச் சிக்கலான வாழ்க்கைக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகின்றான். இதற்காகவே மனிதனின் வளர்ச்சிப் பருவங்கள் நீண்டு அமைந்துள்ளன. இந்தப் பருவங்களில் மனிதனுடைய கல்வி முழுதும் அமைகின்றது.

<u>**பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்**</u>: பேராசிரியர் ரெட்டியார் கல்வியுலகில் தம் நீண்டகாலப் பட்டறிவின் காரணமாக 1. தமிழ் பயிற்றும் முறை, 2. கவிதை பயிற்றும் முறை, 3. அறிவியல் பயிற்றும் முறை, 4. கல்வி உளவியல் கோட்பாடுகள், 5. யுனஸ்கோ அறிவியல் பயிற்றும் மூல முதல்நூல் என்ற ஐந்து நூல்களைப் படைத்துத் தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளார். இவற்றுள் முதல் நான்கும் தாமே படைத்து வழங்கிய முதல் நூல்கள்; ஐந்தாவதாக குறிப்பட்டது மொழி பெயர்ப்பு நூல். இவற்றுள் கல்வி பற்றிய அடிப்படைக் கருத்துகள், பயிற்றுதல் பற்றிய இன்றியமையாத கருத்துகள் விளக்கப்பெற்றுள்ளன. பயிற்றும் பல்வேறு முறைகள், கற்றலுக்கு ஊக்குவிக்கும் வழிகள், தமிழ் பயிற்றலில் இலக்கியம், இலக்கணம், மொழிப்பயிற்சிகள், கட்டுரை எழுதுதல், பயிற்றுவித்தல் போன்றவை; அறிவியல் பயிற்றலில் அறிவியல்முறை, செய்முறையில் பயிற்றல், ஆய்வகம்

அமைத்தல் போன்றவை; தேர்வுமுறைகள் இவை உளவியல் அடிப்படையில் விளக்கம் பெற்றிருக்கும் பாங்கு ஆகியவை இந்த இயலில் ஆய்வு செய்யப்பெறுகின்றன. குழந்தைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்றுள்ளது. அதுவும் ஈண்டு ஆராயப்பெறுகின்றது.

<u>**கற்றல்**</u>: கற்றலின் பல்வேறு கூறுகளை உளவியல் அடிப்படையில் அறிந்து கொண்டால்தான் கற்பிக்கும் முறைகளைத் தெளிவாக மேற்கொள்ள முடியும். கற்றல் வாழ்க்கை முழுதும் இடையறாது நடைபெறுகின்றது. அதனை ஒரு குறுகிய வரையறைக்குள் அடக்கிக் கூறமுடியாது. அஃது அகன்றதும் பலதிறப்பட்டதுமான ஒரு துறை. அது மனிதன் இயற்றும் எல்லா வினைகளையும் அடக்கிக் கொண்டிருப்பது.

கற்றல் முற்றுதல், அநுபவம், தன்னியக்கம் என்ற மூன்று நிலைகளில் நடைபெறுகின்றது. (அ) <u>முற்றுதல்</u>: கற்றலுக்கு முதல் நிலையாக வேண்டப்பெறுவது. உடலுறுப்புகள், மூளையின் பகுதிகள் ஆகியவை தக்க வளர்ச்சி ஏற்பட்டபிறகே இயக்கம் பயன்படும். குழந்தையின் முற்றுதலுக்கு ஏற்றவாறு கற்பித்தல் அமையின் அது குழந்தைக்கு மகிழ்ச்சியைத் தரும்; பயனையும் தரும். (ஆ) <u>அநுபவம்</u>: அநுவபத்திற்கேற்ப கற்றலும் வளர்கின்றது. முன்னைய அநுபவம் பின்னைய இயக்கத்தை அறுதி இடுகின்றது. அநுபவத்தைக் கொண்டே தேர்ச்சி பெறுகின்றோம்; கற்கின்றோம். (இ) <u>தன்னியக்கம்</u>: கற்றல் என்பது ஒருவருடைய தன்னியக்கத்தால் ஏற்படும் செயல். ஆசிரியரின் செயல் தூண்டுதலுடன் நின்று விடுகின்றது; வழிகாட்டுதலுடன் அவர் பொறுப்பு முற்றுப்பெறுகின்றது. நாம் கற்றவை அனைத்தும் சொந்தமாக கற்றவையே ஆகும். எனவே, கற்பித்தல் என்பது கற்றலை மையமாகக் கொண்டது; கற்றலைத் தழுவியது; அத்துடன் தொடர்பும் கொண்டது.

கற்கும் செயல்கள் பலதிறப்பட்டவையாயினும் அவை இயக்கத் திறன்பெறல், எழுத்துகளைக் கற்றல் என இருவகையினுள் அடங்கும். மிதிவண்டி சவாரி, தட்டச்சுப் பொறியினை இயக்குதல், நூற்றல் போன்றவை முன்னதில் அடங்கும். செய்யுளை ஒப்புவித்தல், கணிதத் தேற்றம், ஒன்றைச் செய்ப்பித்தல், ஒரு பொறி செயற்படும் நுட்பத்தை அறிதல் போன்றவை கருத்துக்களைக் கற்றல் ஆகும்.

<u>**கற்கும் முறைகள்**</u>: பேராசிரியர் (அ) முயன்று தவறிக் கற்றல் (ஆ) பார்த்துச் செய்து கற்றல் (இ) உற்றுநோக்கிக் கற்றல்

(ஈ) ஆக்கநிலை ஏற்றிய மறிவினை (Conditioned reflex) (உ) உள்நோக்கு வழிக்கற்றல் (Learning by insight) என்ற ஐந்து முறைகளையும் எடுத்துக்காட்டுடன் விளக்குவர்.[2]

கற்றல் விதிகள் (Laws of Learning): தார்ன்டைக் என்ற அமெரிக்க நாட்டுக் கல்வி அறிஞர் பிராணிகளும் மனிதர்களும் கற்கும் செயல்கள் பற்றி (அ) பயன்விதி (Law of Effect) (ஆ) பயிற்சி விதி (Law of Exercise) (இ) ஆயத்தவிதி (Law of Readiness) என்ற மூன்று விதிகளைப் பேராசிரியர் எடுத்துக்காட்டியும் அவற்றை வகுப்பறையில் எவ்வாறு பொருத்தப்பெற வேண்டும் என்று விளக்கியும் தெளிவாக்குவர்.[3]

கற்றலுக்கு இன்றியமையாத நிலைமைகள்: இவற்றைப் பேராசிரியர் (அ) ஒட்டுமை (Contiguity) (ஆ) விடுப்பு (Curiosity) (இ) நோக்கமுடமை (Motivation) (ஈ) ஊக்கநிலையில் உறைப்பு (Intensity) (உ) செயலாற்றுதல் (Execution) (ஊ) அணிமைக் காலத்தவை (Recency) என்ற பலநிலைகளை எழுத்துக்காட்டி விளக்குவர். இந்நிலை ஒவ்வொன்றும் தனித்தனியாக அதிகப் பயன்தருவதில்லை என்றும், கற்றலில் இவற்றுள் சிலவோ பலவோ ஒரே சமயத்தில் பங்குபெறும் என்றும் தெளிறுத்துவர் பேராசிரியர்.

கற்றலில் அடங்கிய மூலக்கூறுகள்: கல்விக் கூடங்களில் பயிற்றும் ஆசிரியர் மாணாக்கர்களின் கற்றலில் அடங்கிய மூலக் கூறுகளைத் தெளிவாக அறிந்துகொள்ளுதல் வேண்டும். மூலக்கூறுகளாக அக்கறை, கவனம், புலன்காட்சி (Perception), கற்பனை, சிந்தனை, ஆய்தல், நினைவு, பொருளறிதல், புதுமைப்படுத்துதல், பழக்கங்கள், திறன்கள், பரிவு, பின்பற்றல், கருத்தேற்றம் (Suggestion), விளையாட்டு, பயிற்சி மாற்றம் போன்ற பல கூறுகளைப் பல நுண்ணிய கருத்துகளுடன் தெளிவுபட விளக்குகின்றார் பேராசிரியர். இது கற்பிக்கும் ஆசிரியர்க்கு ஒரு கலைக்களஞ்சியம் போன்றதாகும்.[4]

கற்பித்தல்: (அ) பழைய முறைகள்: பழைய முறைகள் எவ்வாறு இருந்தன என்பது பற்றித் திட்டமாக அறிந்து கொள்ளும் சாதனங்கள் ஒன்றுமில்லை. ஒருசில கருத்துகளை ஊகத்தால்தான் கொள்ளவேண்டும். இன்றுள்ள அச்சுவசதி, உரைநடை நூல்கள், வானொலி, தொலைக்காட்சி முதலிய நவீன வசதிகள் இல்லாமை இருந்ததனால் கற்பித்தலில் நெட்டுருச் செய்தல் முக்கிய நிலை பெற்றிருக்க வேண்டும். இது தவிர இக்காலத்தில் உள்ளவைபோல் பல ஆயிரக்கணக்கான கல்விநிலையங்கள் அக்காலத்தில் இருந்தன

என்பதற்குச் சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. கல்வி கற்றவர்கள் பெரும்பாலும் ஆசிரியர் இல்லத்திலேயே தங்கி, குருகுல முறையில் கற்றார்கள் என்பதை நச்சினார்க்கினியர் தொல்காப்பிய சிறப்பாயிர உரையில் காட்டும் மேற்கோள் நூற்பாவாலும், நன்னூல் நூற்பாவாலும் ஒருவாறு ஊகம் செய்யலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியில் மொழி கற்பித்தல், பயிற்சி பெறாத ஆசிரியர்களால் கற்பிக்கப் பெற்று வந்தது. அதை இவ்வாறு ஊகிக்கலாம்: முதலில் எழுதவும் படிக்கவும் கற்பிக்கப்பெற்றது. எழுத்தைக் கற்பித்த பிறகு படிப்பு கற்பிக்கப் பெற்றது; படிப்பையும் எழுத்து முறையிலேயே கற்பித்தனர். எழுத்துகள் ஒன்று சேர்ந்து சொற்கள் ஆதலையும், சொற்கள் பல சேர்ந்து சொற்றொடர்களாகி ஒரு கருத்தை விளக்குதலையும் கண்டு அவ்வாறே காரணகாரிய முறைப்படி (Logical order) எழுத்து, சொல், தொடர், மொழி என்ற முறையால் கற்பித்தல் நடைபெற்றது. இம் முறையில் சில சொற்களையும், சில சொற்றொடர்களையும் படிக்கத் தெரிந்ததும் மூதுரை, நீதிநூல் போன்ற சிறிய அறநூல்களைப் படிப்படியாக கற்பிப்பர். பிறகு நிகண்டு, நன்னூல், அந்தாதி, கலம்பகம் முதலியவற்றையும் கற்பிப்பர். நாளடைவில் பெரிய இலக்கிய இலக்கணங்கள் கற்பிக்கப்பெறும். இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற முறையில் கற்பிக்கப்பெற்றது. சிறு வயதிலேயே இலக்கணத்தைக் கற்பித்தனர். மனப்பாடம் செய்யும் பழக்கம் எல்லா நிலைகளிலும் வற்புறுத்தப்பட்டது. மாணாக்கர் அடைந்த தண்டனைக்குச் செல்வாக்கு இருந்தது. சுருக்கமாகக் கூறினால் மாணாக்கர் வாழ்வில் பாடத்திட்டம் முக்கிய இடம் பெற்றதேயன்றி (Subject-centred) மாணாக்கர் மனநிலையினை ஒருவரும் சிந்தித்தார் இலர்.

<u>**கற்பித்தல்: (ஆ) புதியமுறைகள்**</u>: மேல் நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்திலிருந்து புதிய கல்விமுறை தொடங்கியதாகக் கருதலாம். ஃபிரெஞ்சு புரட்சியுடன் பழைய முறைகள் மறைந்தன. ஃபிரெஞ்சு நாட்டறிஞர் ரூஸோவின் 'எமிலி'' என்ற நூல்தான் புதிய முறைகளின் வித்து எனலாம். ரூஸோவின் கல்வி பற்றிய கருத்துகள் தெளிவாக அதில் காணப்படுகின்றன. அவர் கருத்துப்படி கல்வி என்பது மனிதனால் வளர்க்கப்பெற்ற செயற்கை முறை நாகரிகத்திற்கு ஒரு குழந்தையை ஆயத்தம் செய்வது அல்ல; ஆனால் குழந்தையின் இயல்பு மனிதனால் படைக்கப்பெற்ற சமூகத்தினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அவர் விருப்பம். 'இயற்கை அன்னையிடம் எவையும் சிறந்து விளங்குகின்றன; ஆனால் அவை

அனைத்தும் மனிதன் கைப்பட்டதும் சீரழிகின்றன' என்பது அவர்தம் கொள்கை. இயற்கை அன்னை ஈன்ற குழந்தையை மனிதன் படைத்த சமூகத்தில் பழக்கி கெடுக்கக்கூடாது என்பதும், கல்வி புகட்டுதலில் குழந்தைதான் முக்கியக் கூறு, மனிதன் வளர்த்த பண்பாடு அல்ல என்பதும் அவர்தம் கருத்தாகும். இதனால்தான் ரூஸோவை 'கல்வி முறையின் காபர்னிகஸ்'' என்ற கூறுகின்றனர். இவர் காலத்திலிருந்துதான் கல்வி கற்பிக்கும்முறை குழந்தையை மையமாக வைத்துக் கற்பிக்கப்பெற வேண்டும் என்ற கருத்து எழுந்தது. இவருக்குப்பிறகு தோன்றிய அறிஞர்கள் 'பெஸ்டல்லாசி' (ஸ்விட்ஸர்லாந்து), 'ஹெர்பார்ட்' (ஜெர்மனி), '.:.பிராபெல்' (ஜெர்மனி), 'மாடிசிச்சாலி'' (இத்தாலி), 'ஜான்ட்யூபி' (அமெரிக்கா) என்ற அறிஞர்கள் மேலும் பல புதிய கருத்துகளைச் சேர்த்துப் பயிற்சி முறைகளை வளமாக்கினர்.[5]

<u>**கற்பித்தலில் அடிப்படை விதிகள்**</u>: ஆசிரியர் மாணக்கர்களைச் சூழ்நிலைக்கு இயையத்தரும் பயிற்சியே பயிற்றல் ஆகும். குழந்தையையும் பயிலவேண்டிய உலகையும் ஒன்று சேர்த்தலே ஆசிரியரின் பணி ஆகும். இதற்கு ஆசிரியர் உளவியல் அடிப்படையில் அமைந்த சில விதிகளை கையாளுதல் வேண்டும். அவை: (அ) ஊக்குவித்தல் (ஆ) செயல் மூலம் கற்றல் (இ) கற்பனவற்றை வாழ்க்கையுடன் இணைத்துக் காட்டல், (ஈ) கற்றலில் அக்கறையை உண்டாக்கல், (உ) ஒழுங்கான படிகள் (ஹெர்பார்ட்); அவை: அ) மனத்தைத் தயாரித்தல் ஆ) பாடநோக்கம், இ) எடுத்துக்கூறல், ஈ) ஒப்பிடல், உ) பொதுவிதிகாணல், ஊ) பொதுவிதியைச் செயற்படுத்துதல்.

<u>**வழிகாட்டும் சில உண்மைகள்:**</u> (அ) தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றிக்குப் போதல் (ஆ) முழுதிலிருந்து கருத்துநிலைக்குச் செல்லல் (இ) சிறப்பிலிருந்து பொதுவிற்குப் போதல் (ஈ) எளிமையிலிருந்து அருமைக்குப் போதல், (உ) தெளிவிலிருந்து சிக்கலுக்குப் போதல் (ஊ) தெளிவற்ற நிலையிலிருந்து தெளிவான நிலைக்குப் போதல் என்ற கருத்துகள் ஆகியவை ஆசிரியர் எப்பொழுதும் நினைவில் வைக்கவேண்டிய குறிப்புகள்.[6]

<u>**கற்பிக்கும் முறைகள்**</u>: மேல்நாட்டு முறைகளை நன்கு பயின்ற பேராசிரியர் தம்முடைய தமிழ்பயிற்றும்முறை என்ற நூலில் இருவகைப்படுத்தி விளக்குவர். ஒன்று: குழுவாகக் கற்பிக்கும் முறைகளாக (1) கிண்டர் கார்டன் முறை; (2) விளையாட்டு முறை;

(3) செயல்திட்டமுறை; (4) வார்தா கல்விமுறை; (5) நடிப்பு முறை என்ற ஐந்து முறைகளை விளக்கி இவை தமிழ் பயிற்றலில் எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதை தெளிவாக்குவர். மற்றொன்று, தனியாகக் கற்பிக்கும் முறைகளாக (1) தனிப்பயிற்சி முறை, (2) டால்டன் திட்டம், (3) மாண்டிச்சாரி முறை, (4) மேற்பார்வை படிப்பு முறை, (5) கண்டறிமுறை ஆகியவற்றை விரிவாக விளக்கி அவை மொழி பயிற்றலில் எவ்வாறு கையாளப் பெற வேண்டும் என்பதை தெளிவாக்குவா்.[7]

அறிவியல் பயிற்று முறை: பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தம்முடைய அறிவியல் பயிற்றும் முறை என்ற நூலில் அறிவியல் பயிற்றலுக்கே சிறப்பாக உரிய முறையாகிய அறிவியல் முறையை மிக விரிவாக விளக்குவார். இம்முறையின் வளர்ச்சி நிலைகளாக அமைந்தது என்பதைத் தெளிவாக்குவார்.[8] மூன்று நிலைகளாக வளர்ந்த அறிவியல் முறையைத் தெளிவாக்கும் பொருட்டு (1) பிரச்சினைகளை அறிவித்தல், (2) பிரச்சினைகளைப் பாகுபாடு செய்தல், (3) பிரச்சினைக்குரிய விடைகளின் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், (4) தகவல்கள் எடுகோள் விளக்கம், (5) கருதுகோள் (Hypothesis), (6) முடிவு காணுதலும் விதிகளை ஆக்கலும், (7) விதிகளைப் புதிய இடங்களில் கையாளுதல் என்று ஏழு பகுதிகளாக பிரித்துகொண்டு இந்த முறையை எடுத்துக்காட்டுக்களுடன் மிகத் தெளிவாக விளக்குவார்.

இது தவிர, அறிவியல் பயிற்றலுக்கு பொதுவாகப் பயன்படும் முறைகளை தொடக்க காலத்தில் வழிவழியாக் கையாளப்பெற்ற விதிகளை ஒருமுறையாகவும், நவீன கல்வி அறிஞர்கள் கண்ட சில புதிய முறைகளை இன்னொரு பகுதியாகவும் வகைப்படுத்தி விளக்குவார். முதற்பகுதியில் (1) விரிவுரைமுறை (2) செய்துகாட்டல்முறை (ஆய்வகமுறை), (3) ஆய்வகமுறை (4) பாடநூல்முறை, (5) வளர்ச்சி முறை (6) வரலாற்று முறை என்ற ஆறு முறைகளையும்; இரண்டாவது பகுதியில் (1) தாமாகக் கண்டறிமுறை (Heuristic method), (2) பிரச்சினை முறை (Problem method), (3) டால்டன் திட்டம், (4) தன்னோக்கமுயற்சி முறை, (5) விளையாட்டு முறை என்ற ஐந்து முறைகளை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவாக விளக்குவர். இவை அறிவியல் பயிற்றும் ஆசிரியர்க்கு சிறந்த கையேடாக உதவுபவை.[9]

அறிவியல் பயிற்றலில் புதிய போக்குகள்: மேல்நிலைப்பள்ளிகளில் ஓரளவும், கல்லூரி பல்கலைக் கழங்களில் சிறப்பாகவும்

மேற்கொள்ளப்பெற வேண்டிய புதிய போக்குகள் ஈண்டு காட்ட பெறுகின்றன. புதிய முறைகள் என்று கூறுவதைவிட புதிய நோக்குகள் (New approaches) என்று கூறுவது சாலப் பொருந்தும். இவற்றை (1) விளக்க முறை வாயிலான மாணாக்கர்கட்கு விரிவுரை தருதல் (2) விரிவுரையைத் துண்டுபட வீழ்த்தி (Filmstrip Projector) ஒளிப்படம் ஆகியவற்றைக் கொண்டு விளக்கம் தருதல் (3) கலந்தாய்தல் (4) கருத்துரைக்கோவை (5) செய்வினைகளன், (6) கருத்தரங்கு, (7) ஒப்புடைப்புகள் முறை (8) மேற்பார்வைப் படிப்பு (9) கூட்டாக பயிற்றுதல் (Team Teaching) (10) சிறுசிறு பத்திகளாகப் பயிற்றுவிக்கும் முறை (Micro Teaching) (11) படைப்புத்திறனை வளர்க்கும் முறையில் பயிற்றல் என்ற பலமுறைகளை எடுத்துக்காட்டுகளைக் கொண்டு விளக்குவர்.[10]

<u>ஆய்வக அமைப்பு</u>: அறிவியல் பயிற்றலில் பெரும்பங்கு பெறுவது இந்த அறை விளையாட்டு அரங்கு விளையாடுவோர்க்கு பயன்படுவது போல. ஆய்வகம் என்பது, மாணாக்கர்கள் பல்வேறு சோதனைகளைச் செய்து கற்கப்பயன்படுவது. இந்த அறையை அமைப்பது உத்தேச அமைப்பு என்ற தலைப்பில் பல செய்திகளை காட்டுவார். இது தவிர (1) ஆய்வகம் (2) ஆயத்த அறை (3) சேகர அறை (4) இருட்டறை (5) சில்லரைச் சாமான் அறை (6) அறிவியல் ஆசிரியர்கள் அறை (7) பொது அறிவியலுக்கு ஏற்ற ஆய்வகம் (8) ஆய்வகம்-பயிற்றும் அறை கலந்ததோர் அமைப்பு இவற்றை எடுத்துகாட்டுகளுடன் இருக்கை வசதிகள் செய்ய வேண்டிய முறையுடன் விளக்குவர். இந்த ஆய்வகத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைக் கட்டுபாட்டு விதிகள் என்ற தலைப்பில் தெளிவாக விளக்குவார்.

<u>துணைக்கருவிகள்</u>: துணைக் கருவிகள் இல்லாமல் அறிவியல் பயிற்றுவது என்பது வெறுங்கையால் முழம் போடுவதோடு ஒக்கும். இந்த துணைக் கருவிகளைப் பற்றி விளக்கும் பேராசிரியர் (1) துணைக் கருவிகளின் இன்றியமையாமை (2) பள்ளியின் பொருளாதார நிலைக்கேற்றவாறு அவற்றை வாங்கும் முறைகள் (3) துணைக்கருவிகள் சேமித்துவைக்கும் இடம் (4) உதவி ஆட்கள் (5) பள்ளித் தொழிற்சாலை (6) சொந்தமாகச் செய்தல் (துணைக் கருவி) (7) பொருள்களை வாங்குவதில் கவனிக்க வேண்டிய குறிப்புகள் (8) பொருள்களை அடுக்கி வைத்தல் (9) பொருள்களின் பாதுகாப்பு முறை (10) ஆண்டுக்கொருமுறை ஆய்வகத் தணிக்கை[11] என்று பிரித்துக்காட்டி விளக்குவார்.

<u>ஆய்வகம் பாதுகாப்பும் முதல் உதவியும்</u>: ஆய்வகத்தில் பொருள்களை எளிதில் எடுக்ககூடிய இடத்தில் வைக்க வேண்டும். ஆய்வகத்தில் மாணாக்கர்கள் புழங்கும்போது பல்வேறு சிறுசிறு விபத்துகள் நேரிடக்கூடும், அவை: (1) வெடித்தல் (2) தீ (3) அமிலங்கள், காரங்களால் ஏற்படும் விபத்துகள் (4) கண்ணாடிகளால் ஆன துணைக்கருவிகளைப் பயன்படுத்தும்போது நேரிடும் தீங்குகள். இவற்றையெல்லாம் எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதை ஆசிரியர் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். மாணாக்கர்களுக்கும் தெளிவுறுத்த வேண்டும். இவற்றைப் பேராசிரியர் (1) ஆசிரியர்க்குரிய விதிகள் (2) மாணக்கர்க்குரிய விதிகள் என்ற இரண்டு தலைப்புகளில் பட்டியலிட்டு காட்டுவர்.

<u>முதலுதவி</u>: ‘வந்தபின் காப்பதைவிட வருமுன் தடுப்பது சிறந்தது’ என்பது ஒரு பொதுவிதி. அறிவியல் பயிலும் மாணாக்கர்கள் கவனக்குறைவாலும் எதிர்பாராவகையினாலும் சில விபத்துகளை சந்திக்க நேரிடும். எடுத்துக்காட்டாக (அ) வெட்டுக் காயங்களும், கீறல்களும் (ஆ) தழற் புண்களும், அழற் புண்களும் (இ) கண்ணில் நேரும் ஊறுகள் (ஈ) சில வாயுக்களை சுவாசித்தலால் ஏற்படும் விபத்துக்கள் (உ) நஞ்சுள்ள அல்லது அபாயகரமான வேதியியற் பொருள்களை வாரிப்போடுவதால் நேரிடும் விபத்துக்கள். இவற்றை விரிவாகவும் விளக்கமாகவும் விளக்குவார். முதலுதவி பற்றிய பொது குறிப்புகளாக சில விதிகளையும் வகுத்துக் காட்டுவர். ஆய்வகத்தில் நேரிடும் விபத்துகளை அவற்றிற்கெனத் தனியாக வைக்கப்பெற்றுள்ள பதிவேட்டில் பெயர், தேதி, நடந்த விவரம், சோதனையின் நோக்கம், சேதம், நேரிட்ட விபத்து, பொறுப்பாக இருந்த ஆசிரியரின் குறிப்பு இவற்றைத் தெளிவாக விளக்குவர்.[12]

<u>பயிற்றலில் மேற்கொள்ளும் சாதனங்கள்</u>: இதை இரண்டு பகுதிகளாக விளக்குவர். **<u>முதல் பகுதியில்</u>** (1) துணைக் கருவிகளும் பிற பொருள்களும், (2) கரும்பலகை, (3) விளம்பரப் பலகை, (4) படிமங்கள், படங்கள், கோட்டுப்படங்கள் முதலியவை, (5) பள்ளித் தோட்டம் (6) வேறுவாய்ப்புத் திறன்கள்: (அ) அறிவியல் மூலை (ஆ) நீர்பொருட்காட்சி நிலையம் (இ) பிராணிகளின் கூடுகள் (ஈ) வானிலை நிலையங்கள் (உ) அறிவியல் பாடநூல்கள் (ஊ) நூலகப் பகுதிகள் (எ) அறிவியல் நூலகம் (ஏ) இயற்கை பஞ்சாங்கம் - இவைபற்றிய செய்திகள் எடுத்துக்காட்டுகளுடனும் படங்களுடனும் விளக்குவர்.[13] **<u>இரண்டாம் பகுதியில்</u>**: மேற்கொள்ளும் சாதனங்களாக (1) அறிவியற் கழகம் (2) சுற்றுலாக்கள் (3) அரும்பொருட்காட்சியகம் (4) பொருட்காட்சி (5) அறிவியல்

ஈடுபாட்டுக் கலைகள் (6) வானொலி (7) தொலைக்காட்சி (8) பிம்பம் வீழ்த்து கருவிகள்: (அ) படம் பெருக்கி (ஆ) ஃபிலிம் ஸ்டிரில் புரொஜெக்டர் (இ) எபிஸ்கோப்பு (ஈ) எபிடயாஸ் கோப்பு (உ) மைக்ரோ புரொஜெக்டர் (ஊ) ஃபிலிம் புரொஜெக்டர் என்பவற்றையும் அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் விளக்குவர்.

<u>அறிவியலும் பிற பாடங்களும்</u>: 'அநுபவமே கல்வி'' என்பது திருவாக்கு போன்றது. இந்த அநுபவம் பெறுவதற்கு பொருத்திப் பயிற்றல் பெருந்துணை புரியும். பொருத்திப் பயிற்றலில் 1) மொழிப்பாடல், 2) கணிதம், 3) புவியியல், 4) வரலாறு, 5) கைத்தொழில், 6) உடலியலும் நலவழியும் 7) இசை, 8) சமயம், 9) அறிவியல் கழகங்கள், 10) தகவல் மூலங்கள், 11) மக்கள் தொடர்பு, 12) நூலகங்கள், 13) அரும்பொருள் காட்சியகங்கள், 14) உயிர்காட்சி நிலையம், 15) தொழிலகங்கள் 16) ஆராய்ச்சி வெளியீடுகள். இவை பற்றிய செய்திகளை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.[14]

<u>மொழி பயிற்றலில் சில உத்திகள்</u>: பயிற்றும் முறைகளைக் கையாளும் ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய சில உத்திமுறைகளைப் பேராசிரியர் விளக்குகின்றார். பெரும்பாலும் இந்த உத்திமுறைகள், மாணாக்கர்களின் கவனத்தை ஈர்க்கவும், புலன்களின் வாயிலாக இவர்கட்குப் பல கருத்துகளைப் புகட்டிக் கற்கும் பாடங்களில் அழுத்தமான அறிவை பெறச் செய்யவும் பயன்படுகின்றன. உடலும் உளமும் ஒத்தியங்கி, கற்கத்துணை செய்கின்றன. மொழிப் பயிற்றலில் பயன்படும் உத்திமுறைகளாக 1) வாய்மொழி வினாக்கள், 2) விளக்கம் தருதல், 3) துணைக்கருவிகள்,[15] 4) வீட்டு வேலை ஆகியவற்றை குறிப்பிடலாம்.

<u>அறிவியல் பயிற்றலில் மேற்கொள்ளும் உத்திமுறைகள்</u>: 1) துணைக் கருவிகள், 2)கரும்பலகை, 3) விளம்பரப் பலகை, 4) பிம்பங்கள், 5) பள்ளித்தோட்டம், 6) பல்வேறு வாய்ப்புத் திறன்கள், 7) அறிவியல் பாடநூல்கள், 8) அறிவியல் நூலகம், 9) இயற்கை பஞ்சாகம் ஆகியவற்றைக் கையாளும் முறைகளை மிக விவரமாக விளக்குவர்.[16] மேலும் இந்த உத்திமுறைகளை விரிபடுத்துவதற்காக 1) அறிவியல் கழகம், 2) சுற்றுலாக்கள், 3) அரும்பொருட் காட்சியகம், 4) பொருட்காட்சி, 5) அறிவியல் ஈடுபாட்டுக் கலைகள், 6) வானொலி, 7) தொலைக்காட்சி, 8) பிம்பம் வீழ்த்துக் கருவிகள் ஆகியவற்றைக் கையாளும் முறைகளை மிக விரிவாகவும், தெளிவாகவும் விளக்குவர்.[17]

பொருத்திப் பயிற்றல்: குழந்தை கல்வி பெறுவது என்பது முன்னோர் திரட்டி வைத்துள்ள பட்டறிவை, அக்குழந்தை தெரிந்து பொள்வதுதான் என்று உளவியல் அறிஞர்களும் கல்வியாளரும் கூறுகின்றனர்.[18] அறிவியல் பயிற்றலில் பொருத்திப் பயிற்றவை மூன்று விதமாக மேற்கொள்ளலாம் என்று கல்வி அறிஞர்கள் நுவல்வர். அவை 1) ஒரு பாடத்திற்குள்ளேயே பல பகுதிகளை இணைத்துக் கற்பித்தல், 2) ஒரு பாடத்தைப் பிற பாடங்களுடன் தொடர்புபடுத்தி கற்பித்தல் 3) பாடத்தை வாழ்கையுடன் பொருத்திக் கற்பித்தல் - இந்த மூன்று முறைகள் எல்லா பாடத்திற்கும் பொருந்தும். அறிவியலுக்கு மிக நன்றாகப் பொருந்தும், அறிவியலை 1) மொழிப்பாடம், 2) கணிதம், 3) புவியியல், 4) வரலாறு, 5) கைத்தொழில், 6) உடலியலும் நலவழியும் 7) இசை, 8) சமயம், 9) அறிவியல் கழகங்கள், 10) தகவல் மூலங்கள், 11) மக்கள் தொடர்பு, 12) நூலகங்கள், 13) அரும்பொருள் காட்சியகங்கள், 14) உயிர்காட்சி நிலையம், 15) தொழிலகங்கள் 16) ஆராய்ச்சி வெளியீடு ஆகியவற்றுடன் அறிவியலைப் பொருத்திப் பயிற்றும் வழிகளைப் பேராசிரியர் மிகத் தெளிவாக விளக்குவர்.[18]

மொழிப் பயிற்றலில் போக்குகள்: மொழியாற்றலில் பல பகுதிகள் உள்ளன. இவை கற்பிக்கும் ஆசரியர்களால் கவனத்துடன் கையாளப்பெற வேண்டியவை.

(அ)வாய்மொழிப் பயிற்சி: இம்முறை தொடக்கநிலைப் பள்ளி, நடு நிலைப்பள்ளி, கல்லூரி மாணாக்கர்களுக்கு ஏற்ப சில சில மாற்றங்களுடன் மேற்கொள்ளப்பெறும். அவை 1) உரையாடல், 2) செவிலிப் பாடல்களும் ஆட்டப் பாடல்களும், 3) கதை சொல்லுதல், 4) நடிப்பு, 5) படங்கள், 6) சிறு சொற்பொழிவுகள், 7) கலந்தாய்தல், 8) சொற்போர், 9) சொற்பொழிவுகள், 10) திருந்தியப் பேச்சு, 11) ஒலி பிறப்பியல் ஆகியவை மாணாக்கர்களின் மனநிலை, வயதுநிலை, கருத்துணரும் ஆற்றல், உலக அநுபவம், இவற்றிற்கேற்பப் பயன்படுத்தும் முறைகளைத் தெளிவாக விளக்குவார்.

(ஆ)படிப்பு: வாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்த முக்கியமான பிரிவு படிப்பு. ‘ஓதுவது ஒழியேல்’’ என்ற ஔவை வாக்கு இதனைத் தெளிவாக்கும். படிப்பின் நோக்கம் 1) கருத்துணர்தல், 2) இலக்கிய இன்பம் நுகர்தல், 3) கற்பனை ஆற்றலை வளர்த்தல் 4) மொழித்திறன் அடைதல் என்பவை.

(இ)படிப்பின் வகைகள்: குறிக்கோளைத் தெளிவாகக் கொண்டால்தான் எந்தச் செயலையும் வெற்றியுடன் கொண்டு செலுத்த இயலும்.

கல்வியியலார் நோக்கங்களை அனுசரித்துப் படிக்கை மூன்றுவகையாக பிரித்துக் காட்டுவர். அவை 1) திறன்களை வளர்க்கும் படிப்பு, 2) பொழுதுபோக்குப் படிப்பு, 3) பயன் கருதிய படிப்பு. இந்த மூன்று வகைப் படிப்பும் தனித்தனியாக இருக்கும் என்று சொல்லமுடியாது. ஒன்றையே நோக்கமாகக் கொண்டு படித்தலில் ஏனைய இரண்டும் கைவரப்பெறும். இந்த மூன்றுவகைப் படிப்புகளும் எல்லா நிலையிலும் படிப்பைக் கற்பிக்கத் துணையாக இருக்கும்,[20] என்று பேராசிரியர் விளக்குவார்.

படிப்பு கற்பிக்கும் ஆசிரியர் கருத்தில் இருத்த வேண்டிய செய்திகள்: 1) படிப்பு தொடங்க வேண்டி நிலை, 2) படிப்பில் ஊக்குவித்தல், 3) படிப்பு பயிற்றும் முறைகள், 4) படிப்பில் பயிற்சி தரவல்ல துணைக் கருவிகள், 5) வாய்க்குள் படித்தல், 6) வாய்விட்டுப் படித்தல், 7) கருத்துணரும் ஆற்றல், 8) படிப்பில் வேகம், 9) சொற்களஞ்சியப் பெருக்கம். இந்தத் தலைப்புகளில் படிப்பு கற்பிக்கும் பல்வேறு முறைகளையும் அவற்றின் பயன்களையும் பேராசிரியர் தெளிவாக விளக்குவர். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவை சிறந்த கையேடாக பயன்படும் என்று சொல்லலாம்.[21]

<u>**எழுத்துப் பயிற்சி**</u>: மொழி ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு எழுத்துப் பயிற்சி தருதல் மிகவும் இன்றியமையாதது. கீழ்வகுப்புகளில் இதில் நன்கு கவனம் செலுத்தப் பெற்றால் எழுத்துகள் நன்றாகத் திருந்தும். இதற்குச் சில கையெழுத்துப் பயிற்சி முறைகளாக 1) பார்த்து எழுதுதல், 2) அச்சிட்ட பயிற்சி ஏடுகளில் எழுதுதல், 3) சொல்லுவதை எழுதுதல் ஆகியவற்றைப் பயிற்சிகளாகக் காட்டுவர் பேராசிரியர். நல்ல கையெழுத்தின் பண்புகளாக 1)தெளிவு, 2) விரைவு 3) அழகு இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார். நல்ல கையெடுத்து அமையாவிட்டால் மாணாக்கர் வாழ்க்கை பல நிலைகளில் பாதிக்கப்படும் என்ற கருத்தை அடிக்கடி வற்புறுத்துவார்.

<u>**மொழிப்பயிற்சிகள்:**</u> எல்லா நிலைகளிலும் இப்பயிற்சிகள் மிகவும் இன்றியமையாதவை. மொழிப்பயிற்சிகளாக பேராசிரியர் 1) எழுத்துகள் பற்றியவை, 2) சொற்கள் பற்றியவை, 3) வாக்கியங்கள் பற்றியவை, 4)சொந்த வாக்கியங்களில் அமைத்தல், 5) பல்வகை வாக்கியவடிவு மாற்றங்கள், 6) பலவகையான பிழைத்திருத்தங்கள் பற்றியவை, 7) நிறுத்தக் குறிகளை ஏற்ற இடங்களில் இடுதல், 8) பிறவகைப் பயிற்சிகள் ஆகிய தலைப்புகளில் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் வியக்குவது[22] மொழி ஆசிரியர்களுக்குத் தம் ஆசிரிய வாழ்க்கையில் சஞ்சீவி மருந்துபோல் உதபுபவை.

கட்டுரைப் பயிற்சி: பல்வேறு நிலைகளில் பல்வேறுவகை கட்டுரைகளை எழுதும் பயிற்சித் தருதல் மாணாக்கர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. கட்டுரை வகைகளாக 1) கதைக் கட்டுரை, 2) படக் கட்டுரை, 3) கடிதம் வரைதல், 4) உரையாடல், 5) கட்டுரைகள் என ஐந்து பிரிவுகளாகப் பிரித்து விளக்குவார். கதைக்கட்டுரை எழுத வேண்டிய மாணாக்கர்களின் நிலை, படக்கட்டுரை எழுதவேண்டிய மாணாக்கர்களின் நிலை, இவை எழுத வேண்டிய படிமுறைகளையும் விளக்குவார். கடிதம் வரைதல் என்ற பகுதியில் பல்வேறு வகை கடித வகைகளை விளக்குவார். கட்டுரை அமைப்பு என்ற தலைப்பில் கட்டுரைப் பொருளை 1) முகவுரை, 2) கட்டுரை உடல், 3) முடிவு என்று உட்பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு எழுத வேண்டும் என்றும் இவற்றிற்கு ஏற்ற தலைப்புகளில் பொருள்களை எவ்வாறு திரட்டவேண்டும் என்ற குறிப்புகளையும் விளக்குவார்.

கட்டுரை வகைகளாக 1) வரலாற்று கட்டுரை, 2) வர்ணனைக் கட்டுரை, 3) விளக்கியல் கட்டுரை, 4) சிந்தனைக் கட்டுரை, 5) தருக்கியல் கட்டுரை, 6) பாணிப்புக் கட்டுரை, 7) ஆராய்ச்சிக் கட்டுரை, 8) அங்கதக் கட்டுரை, 9) நோட்டக் கட்டுரை, 10) புகழ்ச்சிக் கட்டுரை என்று பலவகைக் கட்டுரைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குவது மொழி ஆசிரியர்க்கு நல்ல குறிப்புகளாக அமைகின்றது.

இவை தவிர, சுருக்கி வரைதல், பெருக்கி வரைதல், பொழிப்புரை வரைதல், கருத்துனர் பயிற்சிகள், மொழிபெயர்ப்பு போன்றவற்றையும் கட்டுரைப் பயிற்சியில் விளக்கிக் காட்டுவார். கட்டுரைகளை திருத்தும் முறைகளைப் பற்றியும் ஆசிரியாகளுக்கு நடைமுறை குறிப்புகளைத் தருவார். ஒவ்வொரு நிலை பள்ளி மாணாக்கர்களுக்கும் எந்த எந்த வகை கட்டுரைகளைப் பயிற்சிக்குத் தரவேண்டும் என விளக்குவார். இவை தவிர, படைப்பாற்றலுக்கு வழிகோலும் பாங்கைப் பற்றியும் ஆசிரியர்களுக்கு குறிப்புகள் தருவார்.[23]

இலக்கியம் கற்பித்தல்: இலக்கியம் கற்பித்தல் என்ற கருத்து எல்லா நிலை மாணவர்களுக்கும் அவரவர் அறிவு நிலைக்கு ஏற்பப் பயன்படுவது. இது 1) கவிதை கற்பித்தல், 2)உரைநடை கற்பித்தல், 3) துணைப் பாடநூல் கற்பித்தல் என்ற மூன்று நிலையில் இயங்கும். இந்த மூன்றும் அந்தந்த வகை கற்பித்தலில் அந்தந்தவகைக்கேற்ப மாணாக்கர்களின் மனம் விரியச் செய்யும்.

<u>1. கவிதை கற்பித்தல்:</u> மொழிப்பாடத்தில் கவிதை பயிற்றுவித்தலே உயிராயது. இதைக் கற்பித்தலின் நோக்கம் மாணாக்கர்களிடம் முருகுணர் திறனை வளர்ப்பது; வளர்த்து கவிதையை அவர்கள் அநுபவிக்கும் ஆற்றலை வளர்ப்பது. இதை முதல் நோக்கமாகக் கொண்டு கற்பிக்கும் ஆசிரியர் கவிதையைப் பயிற்றல் வேண்டும் என்பது பேராசியர் இத்துறையில் உணர்த்தும் உண்மை. கவிதை பயிற்றும் ஆசிரியர் கவிதையை யாத்த கவிஞன் உணர்த்தும் உணர்ச்சியை முதலில் தாம் பெற்றுப் பின்னர் அதை கவிஞன் வெளிப்படுத்தியது போல கை அசைவு, முகபாவனை, ஓசை ஏற்றம், அழுத்தும் முதலிய உத்திகளைக் கையாண்டு கற்பிக்க வேண்டும். அதாவது கவிஞன் கவிதையை ஆக்கும்போது கொண்ட சூழ்நிலையையே, திரும்பவும் வகுப்பறையில் உண்டாக்குதல் வேண்டும். அப்பொழுது மாணாக்கர் தம்மை மறந்து, தம் வகுப்பறையை மறந்து, கவிதையை யாத்த கவிஞன் காலத்திற்குச்சென்று கவிஞனே, அப்பாடலை சொல்வதுபோது அநுபவித்து மகிழ்வர். இதற்கு எடுத்துக்காட்டாக திருப்பாவை சீயர் (இராமானுசர்) மாதுகரத்திற்குச் சென்றிருந்தபோது பெரிய நம்பியின் திருமகள் அத்துழாய் ‘செந்தாமரைக் கையால் சீரார்வளையொலிப்ப’’ (திருப்.18) தாழ்ப்பாளை நீக்கித் திறந்ததை இராமானுசர் தம்மையே மறந்து நப்பின்னைபிராட்டியே கதவை நீக்கினாதக் கருதி அச் சீமாட்டியை தண்டனிட்ட நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுவர்.[24]

<u>கற்பிக்கும் முறைகள்</u>: மேற்கண்ட குறிக்கோள் நிறைவேற வேண்டுவதற்காகச் சில முறைகளைக் கூறிவிளக்குவார்.

<u>1) கவிஞர் வரலாறு கூறும் முறை</u>: இந்த முறையை விளக்குவதற்காக ‘இவ்வே, பீலி அணிந்து’’ (புறம்.95) என்ற பாடலை எடுத்துக்காட்டி ‘இப்பாடலை புரிந்து கொள்வதற்கு அவ்வையாரின் ஆதியோடந்த வரலாறு தேவையில்லை. அதுபோலவே தொண்டமான் அதியமானின் வரலாறுகளும் தேவையில்லை. அவ்வையாருக்கும் அதியமானுக்கும் இடையே இருந்த நட்பும் நம்பிக்கையும், தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் ஏற்பட்ட பகைமை உணர்ச்சியும் தெளிவாக அறிவிக்கப்பெற்றால்போதும். பாடல் தோன்றிய சூழ்நிலையை மாணாக்கர் அறிந்து கொண்டால் பாடலின் உயிர்நாடி, பேசத் தொடங்கி விடும், பாடலும் துலக்கமாகும’[25] என்பர்.

<u>2)விளக்கமுறை:</u> இந்த முறையை விளக்கும் பேராசிரியர் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார். ‘மணங்கமழ் பூவையும்’ (அழகர்

கலம்பகம் செய்யுள் 45) என்ற பாடலை விளக்கும்போது அதனை எங்ஙனம் விளக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவது ஆசிரியர்கட்குக் கையிறுப்பாக உள்ள சஞ்சீவி ஆகும். இப்பாடலை விளக்கும் முறையைத் தெளிவாக எடுத்துக் காடடுவார்.[26]

3)சூழ்நிலை காட்டும் முறை: இந்த முறையைத் தெளிவாக விளக்குவார். பாடல் எழுந்த சூழ்நிலையை மாணாக்கர்களுக்கு ஒரு சிறிது விளக்கி, பாடத்தை துவங்குவது சூழ்நிலைகாட்டும் முறை. இதை விளக்குவதற்கு எடுத்துக்காட்டாக 'ஆசு கவியால்' என்ற பாடலையும் 'நான் என்றால் நஞ்சிருக்கும்' என்ற இரட்டைப்புலவர்கள் பாடலை எடுத்துகாட்டி விளக்குவது மிகச் சிறந்த முறையாகும்.[27]

4)வினாமுறை: இதைப் பேராசிரியர் என்பார் தொகுத்தறி முறை என்று வழங்குவர். இந்த முறையினால் கவிதையை மாணாக்கரிடமிருந்து வருவித்தல் முடியாது. 'கவிஞரின் உணர்ச்சியை முதலில் தாம் பெற்று, பிறகு மாணாக்கர்கட்கு வழங்க வேண்டும். சொற்சுவையும் பொருட்சுவையும் தொடை நயமும் அணிநயமும் இடத்திற்கேற்ற சந்த இனிமையும் கொண்டு விளங்கும் பாடல்களில் மாணாக்கர்களைத் திளைக்க வைத்தலே தமிழாசிரியர்களின் முதற் கடமையும் முதலாய கடமையுமாகும். கவிதைகளின் கவி உணர்ச்சியை அறியச் செய்யாது பாடல்களைப் பயிற்றுவதால் பயனொன்றுமில்லை. தொடக்கநிலையில் கற்ற பாடல்களைளே உயர்நிலையிலும் கற்பிக்க வேண்டிய முறையில் கற்பித்தால் கட்டாயம் புதிய பொருள்கள் துலங்கும்; மாணாக்கர்கள் கவிதையைச் சுவைப்பதிலும் குறைவு வராது'[28]. இதனை எடுத்துக்காட்டுவதற்கு 'விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுன்ன' என்ற கலிங்கத்து பரணியின் பாடலை எடுத்துக் கொண்டு விளக்குவது சிறப்பாகும்.

'பருந்தினத்தையும் கழுகினத்தையும்' அவை என்ன செய்து கொண்டிருக்கின்றன? 'வீரர்களின் உடல்களை உண்டு கொண்டிருக்கின்றன', வீரர்களின் முகங்கள் எப்படிக் காணப்படுகின்றன? 'முகமலர்ச்சியுடன்'; இவ்விடத்தில் ஆசிரியர் வீரர்கள் வீரத்துடன் போர்புரிந்து, களிப்புடன் உயிர் துறந்தமையால் அவர்கள் முகம் மலர்ச்சியுட்ன விளங்கின என்பதைக் கூறலாம். மேலோர் என்பவர் யாவர்? 'இல்லறத்தில் உயர்ந்தோர்', அவர்கள் முகம் மலர்வதற்கு காரணம்? 'விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்பதால்', 'இயல்பாக இறந்துகிடக்கும் வீரர்களின் முகமலர்ச்சிக்குத் தம் உடல்கள்

பருந்துகளுக்கும் கழுகுகளுக்கும் விருந்தாகப் பயன்படுவதால்தான்’ என்று கவிஞன் படைத்துக் காட்டும் கற்பனையை ஆசிரியர் எடுத்து இயம்பலாம்.[29]

<u>**பாடல்களை நெட்டுருச் செய்தல்**</u>: இது கருத்து வேறுபாடுள்ள கூறு. இதை நடைமுறையில் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை பேராசிரியர் தெளிவாக விளக்குவார். ‘நெட்டுருச் செய்தல் என்பது உளவியல் கூறாகிய ‘நினைவு’ என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தது. நினைவில் நான்கு கூறுகள் அமைந்துள்ளன. அவை:

1) பதிவுபெறுதல் அல்லது முத்திரைகளை வாங்குதல்;
2) இருத்துதல் அல்லது கடந்த அநுபவங்களைச் சேமித்தல்;
3) மீட்டு மொழிதல் அல்லது கடந்த அநுபவங்களை நினைவுகூர்தல்;
4) மீட்டறிதல் அல்லது நினைவு கூர்ந்த கருத்துகளை முன் அநுபவத்தில் அறிந்தவையாக இனங்கண்டறிதல்

என்பவையாகும். இவை ஒவ்வொன்றையும் தெளிவாக விளக்குவர். இவற்றை நன்கு அறிந்துகொண்டால்தான் நெட்டுருச் செய்தலில் அடங்கியுள்ள பல உளவியல் படிகளை அறிந்துகொள்ள இயலும்.[30]

கவிதைச் சுவையை அநுபவித்து மகிழும் மாணாக்கர்களுக்கு அவர்கள் தம் வாழ்வில் மனத்தைக் கவர்ந்த பாடல்களை தொகுக்குமாறு கூறும் வழி மிக பயனள்ளதாகும். இது மாணாக்கர்கள் தம் வாழ்க்கையைத் திரும்ப நோக்குங்கால் அவர்களுக்கே மகிழ்வூட்டத்தக்கது.

<u>**2.உரைநடை கற்பித்தல்**</u>: உரைநடை பயிற்றல் தாய்மொழிப் பாடத்தில் முக்கியமானதொன்று. நடைமுறையில் பயன்தரத்தக்க முறை இது. உரைநடையில் தெளிவான நடையையே யாவரும் மேற்கொள்ள வேண்டுமென்பதைப் பேராசியர் வற்புறுத்துவார். உரைநடை பயிற்றும் நோக்கங்களாக பல செய்திகளைக் கூறியுள்ளார். பிறபாடங்களும் தாய்மொழியில் கற்பிக்கப்பெறுவதால் அதற்கு வேண்டிய அறிவையும் தமிழ் உரைநடைச்செல்வம் நல்க வேண்டும்.

‘நடைமுறையில் வழங்கும் மொழியிலும், இலக்கியத்தில் பயின்றுவரும் மொழியிலும் காணக்கூடிய அருஞ்சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், அரிய சொல்லாட்சிகள், இலக்கண வழக்காறுகள் முதலியவற்றின் பொருளையுணர்ந்து அவற்றை ஏற்ற இடங்களில் தம்

வாக்கில் வைத்து வழங்கக் கூடிய பயிற்சிகளைப் பெற்றால் மாணாக்கர்களின் மொழிவளம் பெருகும்.[31] மக்கள் ஆட்சியும் ஆராய்ச்சித் துறையும் பெருகிவரும் இக்காலத்தில் உரைநடையின் நடைமுறைப் பயன் அளவற்றது. அதனை எய்துவித்ததற்குரிய நோக்கத்துடன் உரைநடைப் பாடம் நடத்தப் பெறுதல் வேண்ம்.[32]

பயிற்றுமுறையைத் தெளிவாக விளக்குவது ஆசிரியர் கவனத்திற்குரியது. இதில் மொழி ஆசிரியர்கள் கலந்தாய்தல் என்னும் புது முறைகளையும் உரைநடை பாடத்தில் மேற்கொள்ளலாம் என்பதைக் காட்டுவார். ‘மொழிப் பயிற்சிகள்’ என்ற தலைப்பில் மேலே கூறிய சில கருத்துகளை நினைவில் கொண்டு ஈண்டு வகுப்பறையில் செயற்படுத்துதல் மிகவும் பொருத்தமான செயலாகும். அன்றியும் துணைப்பாட நூல்களைக் கற்பித்தலிலும் ஆசிரியர் வெவ்வேறு முறைகளைக் கையாண்டு கற்பிக்க வேண்டுமென்பது பேராசிரியரின் கொள்கை.

3.இலக்கணம் கற்பித்தல்: உடற்கூற்றியல் அறிவு, மருத்துவத்துறை வல்லார்க்கு பயன்படுதல் போல, இலக்கணம் அறிவுமொழியைக் கற்பிப்பார்க்கு பெருந்துணையாக இருக்கும். பேச்சு வழக்கில் காணப்படும் மொழி மரபுகளை நமக்குத் தெற்றென படுத்துக்காட்டுவதற்கும் பேச்சிலும் எழுத்திலும் நேரிடும் பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கும், செய்யுட்களை பிரித்துப் பொருள் காண்பதற்கும் சிலேடைப் பொருள்களைக் கண்டு மகிழவும், செய்யுளில் வரும் இலக்கண அமைதிகள், அரிய சொல்லாட்சிகள் முதலியவற்றை அறியவும், அவற்றில் காணப்படும் இறைச்சி, உள்ளுறை உவமம் குறிப்புப் பொருள், போன்ற அரிய இலக்கண நுட்பங்களை அறிந்து இலக்கிய இன்பத்தை நுகரவும் வாய்ப்பு ஏற்படும். இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். இவற்றை ஓரளவு அறிந்தால்தான் தமிழ் இலக்கியங்களை ஓரளவு கற்றுச் சுவைக்க முடியும். இலக்கணம் பயிற்றலில் 1) தொடக்கநிலை, 2) நடுநிலை, 3) உயர்நிலை, 4) மேல்நிலை 5) கல்லூரி நிலை போன்ற பல நிலைகளில் இலக்கணம் பயிற்றும் முறைகளைப்பற்றி பல்வேறு கருத்துகளை விளக்குவார் பேராசிரியர். பொதுவாக இலக்கணம் கற்பித்தலில் விதிவரும்முறை, விதிவிளக்கும்முறை என்ற இரண்டு முறைகள் கூறப்பெறுகின்றன. இவை மாணாக்கர்களின் வயது நிலைக்கேற்ப பயன்படுத்தப்பெறும்.

விதிவரும்முறை: விதி வருவித்தல் முறையை ஒரு எடுத்துக்காட்டால் விளக்குவர். ஆகு பெயரையும் அதன் வகைகளையும்

மாணக்கர்களுக்கு விளக்கும்முறை எடுத்துக்காட்டுடன் விளக்கப்படுகிறது.[33]

விதிவிளக்கும்முறை: மேற்கூறிய ஆகுபெயரை இம்முறையிலும் விளக்கலாம். சில எடுத்துக்காட்டுகளை ஆசிரியர் கூறி, மாணாக்கர்களை விளக்கச்செய்து விதியில் முறைகளையும் நான்காம் படிவ மாணவர்களுக்கு நான்காம் வேற்றுமை பொருள்களை விளக்கும் முறையைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகளுடன் தெளிவாக விளக்குவார்.[34]

தொடர்மொழிகளும் மரபுத் தொடர்களும்: கண்ணும் கருத்துமாய் இருத்தல்; ‘தன்னுயிர்பால் மண்ணுயிரைக் காத்தல்’, ‘அடிமுதல் முடிவரை’, ‘எலும்பும் தோலுமாய் இருத்தல்’ இவை எல்லாம் தொடர்மொழிகள். இங்ஙனமே ‘எரிந்து விழுதல்’, ‘அகடவிகடம்’, ‘அகலக் கால்வைத்தல்’, ‘அவசர குடுக்கை’, ‘ஆறப்போடுதல’’’, ‘அள்ளிக் கொட்டுதல்’, ‘எடுப்பார்க் கைப்பிள்ளை’, ‘ஏட்டுச் சுரைக்காய’, ‘ஒற்றைக்காலில் நிற்றல்’, ‘ஓட்டைவாயன்’, ‘கங்கணம் கட்டுதல்’, ‘கச்சை கட்டுதல’’’, ‘தென்காசி வழக்கு’ இவை எல்லாம் மரபுத் தொடர்கள் (Idioms). இவற்றையெல்லாம் இலக்கண ஆசிரியர் இலக்கணம் பயிற்றும்போது தாமே எடுத்துக்காட்டியும், சிலவற்றை மாணாக்கர்களிடமிருந்து வருவித்தும் இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டியும் விளக்க வேண்டுமென்று பேராசிரியர் வற்புறுத்துவார். இவை தவிர விலங்கு, பறவை முதலிய பிராணிகளில் ஆணுக்கும், பெண்ணுக்கும் அவற்றின் இளையவற்றிற்குரிய பெயர்களையும் பிராணிகளின் ஒலிகளுக்கு உள்ள சொற்களையும் தொடக்கநிலை பள்ளி வகுப்பு மாணாக்கர்களுக்கும், நடுநிலை பள்ளி வகுப்பு மாணாக்கர்களுக்கும் தெளிவாக அறியச் செய்தல் வேண்டும்[35] என்பது பேராசிரியன் கருத்து.

பள்ளிக்குரிய நூல்கள்: பள்ளிக்குரிய நூல்களைப் பேராசிரியர் அ) பாடநூல்கள், ஆ) துணைப்பாடநூல்கள், இ) நூலகத்துகுரிய நூல்கள், ஈ) தகவல் நூல்கள் என்று பாகுபடுத்திக் காட்டுவார். பாட நூல்களை தேர்ந்தெடுக்கும்போது அ) புறத்தோற்றம், ஆ) அகத்தோற்றம், இ) பொருளமைப்பு, ஈ) கவிதைப்பாட பகுதிகள், உ) உரைநடைப் பகுதிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். இவை மாணாக்கர்களின் வயதுநிலை, மனநிலை, படிக்கும் வகுப்பு நிலை இவற்றிற்குப் பொருந்துவனவாகத் தோந்தெடுக்க வேண்டும். குருவித்தலையில் பனங்காயைக்

கட்டுவதுபோன்ற முறை எந்த நிலையிலும் தலைஎடுக்கக் கூடாது என்பதை வற்புறுத்துவார்.

<u>ஆ)துணைப்பாடநூல்கள்</u>: திரிசொல் அதிகமின்றி, இயற்சொற்கள் அதிகமாக அமைந்து நடைத்தெளிவும், கருத்துத் தெளிவும், சிறு சிறு வாக்கிய அமைப்பும், பொருந்திய நூல்களே இப்பகுதிக்கு ஏற்றவை. எவருடைய துணையுமின்றி மாணாக்கர்களே விரைவாகப் படித்துப் பொருள் உணரும் திறனை வளர்க்கும் முறையில் இந்த நூல்கள் அமைய வேண்டும்.[36]

<u>இ)நூலக நூல்கள்</u>: இக்காலத்தில் பல்வேறு மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. புதினங்கள், சிறுகதைகள், சுவையான கட்டுரைகள், எளிய யாப்பில் அமைந்த கவிதை நூல்கள், புதுக்கவிகைள், நாடகங்கள், எளிய திறனாய்வு நூல்கள் இவை எல்லாம் இப்பகுதி நூல்களுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். நூலகத்தில் இவை இருக்க ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டும்.

<u>ஈ)தகவல் நூல்கள்</u>: இவை இன்னும் அதிகமாக தோன்றவில்லை. ஒருசில நல்ல நூல்கள் இப்பொழுதுதான் தோன்றத் தொடங்கியுள்ளன. பள்ளி மாணாக்கர்களுக்கென அவர்களின் பருவநிலைக்கேற்றவாறு, இயற்பியல், உளவியல், தாவரஇயல், வேதியியல், வானியல், புவியியல், நிலஉட்கூற்றியல், உடலியல் போன்ற துறைகளில் 'Basic Science Series', 'Wonder Book Series' என்ற தொடர்களில் அமைந்துள்ள நூல்களைப்போல் தமிழ் மொழியிலும் தோன்றுதல் வேண்டும் என்பது பேராசிரியரின் அவா.

<u>மாணவர் உடல்நலமும் உடல்நல இயலும்</u>: உடற்செயல்களும், உளச்செயல்களும், சூழ்நிலைக்குத் தக்கவாறு பொருத்தமுற்றால்தான் உடல்நலம் (Health) செம்மையாக இருப்பதற்கு அறிகுறி. உடல்நலமென்பது உடலின் நன்னிலை, உடல்நல இயல் (Hygine) என்பது, உடல் நலத்தைக் காத்து, அதனை வளர்க்கும் ஓர் அறிவியல் துறை. இவை இரண்டும் ஆசிரியர் கவனத்தில் இருத்தல் வேண்டும். குழந்தைப் பருவம், முன்-குமரப்பருவம், பின்-குமரப்பருவம் ஆகிய பருவ நிலைகளுக்கு ஏற்ப உடல்நலமும் உடல்நலஇயலும் மாறுபடும். இதனையும் ஆசிரியர் கவனத்தில் இருத்தல் வேண்டும்.[37]

சாதாரணமாக மாணவர்களிடம் கண்ணில் குறைபாடுகள் (முதிர் காட்சி, குழல் பார்வை) போன்றவையும், காதில் குறைபாடுகளாக (அரைச்

செவிடு, இசைச்செவிடு, காதுநோய்கள்) போன்றவையும், பற்களின் குறைகளாகப் பலவும், ஆசிரியர் கவனத்திற்கு வரும்.. இவற்றை ஆசிரியர்கள் கவனித்து பெற்றோர்களிடம் தொடர்புகொண்டு அக்குறைகளை நீக்க முயற்சி செய்தல் வேண்டும்.

<u>மாணவர்களின் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகள்</u>: பொருத்தப்பாடு என்பது தொடர்ந்து நடைபெறுவது. அது மிகவும் சிக்கலானது. ஒரேவிதமான நிலைமைகளில் பல்வேறு தனி ஆட்கள் (Individual) பல்வேறு விதமாகப் பொருத்தபாடு அடைகின்றனர். விரைவில் பல்வேறு பொருத்தப்பாடுகள் வேறுபடுகின்றன. பலனற்ற முறைகளில் பொருத்தப்பாடு அடைவதை உளவியலார் பிறழ்வான பொருத்தப்பாடு (The Mal-adjusted) என்று வழங்குவர். அங்ஙனம் அடைபவர்கள் பிறழ்வான பொருத்தப்பாடு உடையவர்கள் (Mal-adjustment) எனப்படுவர். சமூகத்திற்கு ஒவ்வாத நடத்தையை பொதுவாக இயல்வு பிறழ்ந்த நடத்தை (Abnormal behavior) என்று வழங்குவர் உளவியலார்.[38]

இவ்வாறு இயல்பு பிறழ்ந்த நடத்தைக்குக் குடும்பநிலைகள் ஒரு காரணமாக அமையும். அ) காப்பின்மை, ஆ) பாதுகாப்பு மிகுதி (ஆதிக்கம், பணிதல்), இ) பெற்றோரின் பிறழ்ச்சி, ஈ) சரியான தொடர்பின்மை, உ) உயர்ந்த அறநெறிநிலை, ஊ) வறுமை இவை இயல்பு பிறழ்ந்த நடத்தைக்கு ஏதுக்களாக அமையும்.

பள்ளியினுடைய பழக்கவழக்கங்களும் குழந்தையின் இத்தகைய நடத்தைக்குக் காரணங்களாக அமைகின்றன. அ) ஆசிரியரின் போக்கு, ஆ) ஒவ்வாத பாடத்திட்டம் (குருவித் தலையில் பனங்காய் கட்டின மாதிரி உள்ளவை), இ) வகுப்பறையில் அளவிறந்த கட்டுப்பாடு - இவை யாவும் இயல்பு பிறழ்ந்த நடத்தைக்குத் துணை புரிவன.[39]

<u>பொருத்தப்பாடு அடையமுடியாத குழந்தைகள்</u>: சில குழவிகள் பல காரணங்களால் பொருத்தப்பாடு அடையமுடிவதில்லை. அவற்றுள் சில: அ) உடற்குறை உடையவர்கள், ஆ) நோய்வாய்ப்பட்ட குழவிகள், இ) புலக்குறைபாடுகள் உடையவை, ஈ) மீத்திறம் பெற்ற குழந்தைகள், உ) மந்தக் குழவிகள், ஊ) ஒதுக்கப்பெற்ற குழவிகள், எ) தாழ்வுணர் குழவிகள், இவர்கள் அடங்கிய வகுப்புகளில் ஆசிரியர் பாடம் புகட்டுவதில் பொருத்தப்பாடு ஏற்படுத்த முடிவதில்லை.

<u>நெறிபிறழ்ந்த குழந்தைகள்</u>: பொதுவாக இவர்கள் நகர்ப்புறங்களில் ‘கெட்ட’’ பகுதிகளிலேயே காணப்படுவர். சில அறிதிறன்மிக்க

சிறுவர்களும் வாழ்க்கையின் உண்மையைக் கருதாது நெறிபிறழ்ந்த நடத்தையாய் இயங்குகின்றனர். இவர்கள் தம் தவறுக்காக தாம் வருந்துவதில்லை. தாம் பிடிபட்டதற்காகவே வருந்துகின்றனர். வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டுத் தீயநெறியில் நெஞ்சு உரம்பெறுகின்றது. கட்டுப்பாடு ஆக ஆக அவர்கள் நடத்தை மேலும் உரம்பெறுகின்றது.

<u>நெறிபிறழ்வினைத் தடுத்தல்</u>: அடியிற் கண்ட விதிகள் இதற்குப் பெருந்துணைப் புரியும். அ) காரணங்களை கண்டறிவது, ஆ) இயன்றவரை காரணங்களை அகற்றுதல், இ) உடன்பாடான கல்விமுறைச் சிகிச்சையினைத் தருதல் போன்றவை. இவை தவிர அன்பு, பாதுகாப்பு, மனநிறைவு, தன்மதிப்பு, போன்றவை மீண்டும் இக்குழவிகளுக்கு கிடைக்கச் செய்தால் அவர்கள் தீச்செயலில் இறங்கமாட்டார்கள் என்பது உறுதி என விளக்குவர் பேராசிரியர். பெரும்பாலான நெறிபிறழ்ந்த நடத்தைகள் குழவிகளின் நனவிலி மனத்திலிருந்து எழுவதாக விளக்குவர். உளவியார் நெறிபிறழ்வான நடத்தைகளில் அ) பெருவிரல் சுவைத்தல், ஆ) நகங் கடித்தல் (Nail biting), இ) பொய் சொல்லுதல் (Lying), ஈ) தூக்கத்தில் சிறுநீர் கழித்தல் (Bed wetting), உ) களவாடுதல் (Steeling), ஊ) ஊர்சுற்றுதல் (Truancy), எ) பொறாமை (jealousy), ஏ) கூச்சம் (shyness), ஐ) வெளித்தோற்றம் (showing off), ஒ) தாக்குந்தன்மை (Aggressiveness) போன்றவை; பேராசிரியர் உளவியல் அடிப்படையில் இவற்றுக்குரிய காரணங்களையும், அவற்றை நீக்கும் முறைகளையும் விளக்குவர். கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவை சிறந்த குறிப்புகளாக உதவும்.

<u>தேர்வுகள்</u>: இவற்றில் பழையமுறைச் சோதனைகள், புதியமுறைச் சோதனைகள் என இருவகைப்படுத்தி விளக்குவார்.

<u>பழையமுறைச் சோதனைகள்</u>: இது கட்டுரைச் சோதனைகள் ஆகும். இவற்றில் அளந்தறியக் கூடிய பொருளறிவு மிகக்குறைவு. சிறிய கால அளவில் ஆண்டு முழுதும் படித்த அறிவை ஐந்தாறு வினாக்கள் கொண்டு தேறிவிட முடியும் என்று எண்ணுவது பொருந்தாததொன்று. அப்படி அளப்பதில் ஒரு சில முக்கிய எல்லைப் பரப்புகளை மட்டிலும்தான் அறிய இயலும். இவைபோன்ற பல குறைகளை எடுத்துக்காட்டி அவை சரியான அளவுகோல் அன்று என்பதை நிலை நாட்டுவார்.[40] திருத்துவோனின் மனநிலையும் ஒரு மாதிரியாக இருப்பதில்லை. முக்குணவசத்தால் முறை பிறழ்ந்த

போவதுடன் நில்லாது, சினம், மகிழ்ச்சி முதலியவற்றிற்கு ஏற்ப மதிப்பெண்கள் மிகுந்தும், குறைந்தும் போதல் கூடும். இத்தகைய நிலைகளைக் கண்டு மாணாக்கர்கள் ‘இல்லாள் ஊடி நின்ற காலத்தில் இந்தத்தேர்வாளர் இவ்வாறு குறைவாக மதிப்பிட்டார் போலும்’ என்று எள்ளி நகையாடுவதை நாம் கேள்விப்படத்தான் செய்கின்றோம். இவ்விடத்தில் ‘பேலார்டு’’ என்ற அறிஞர் கூறும் நிகழ்ச்சி ஒன்றினை எடுத்துக்காட்டி விளக்குவர்.[41] அந்த அறிஞர் திருத்துவோரைப்பற்றி கூறும் கருத்து இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. ‘மருத்துவர்களின் தவறுகள் கல்லறைக்குக் கீழ்’ மறைந்து கிடப்பதைப்போலவே, தேர்வாளர்களின் தவறுகள் பொதுமக்கள் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுள்ளன.[42] இத்தேர்வுகளால் ஏற்படும் பல்வேறு குறைகளையும் நிறைகளையும் எடுத்துக்காட்டி விளக்குவார.[43] இவை தவிர, தரப்படுத்திய சோதனைகள் என்ற தலைப்பில் 1. அறிதிறன் சோதனைகள், 2. நாட்டச் சோதனைகள், 3. அக்கறை அறி சோதனைகள், 4. முன்னேறி சோதனைகள், 5. அடைவுச் சோதனைகள், 6. குறை அறிசோதனைகள் ஆகிய பல்வேறு சோதனைகள் பற்றி விரிவாக விளக்குவார்.[44]

புதுமுறைச் சோதனைகள்: இவற்றில் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட வகைகள் உள்ளன என்றாலும் இவற்றை அறிஞர்கள் 1) மறித்துணர்வகை 2) நினைவுகூர்வகை என்று இரு கூறிட்டு வழங்குவர். மறித்துணர் வகையில் சரி-தவறு, சோதனைகள் பல்விடையிற் பொறுக்குச் சோதனைகள், பொறுத்தற் சோதனைகள் அடங்கும். நினைவுகூர்வகையில் நிரப்புச் சோதனைகள் போன்றவை அடங்கும். சோதனைத்துறையில் முன்னேற்றம் அடைய அடைய அறிஞர்கள புதிய வகையைக் கண்டு கொண்டே வருகின்றனர். இவ்வகைகளின் எண்ணிக்கையும் வளர்ந்துகொண்டே வருகிறது. ஆயினும் ஏழுவகை, எட்டுவகை சோதனைகளே நடைமுறையில் பயன்பட்டு வருகின்றன. பேராசிரியர் ‘தேர்வுகள்’ என்ற தலைப்பில் தம்முடைய தமிழ்ப் பயிற்றும் முறையிலும் அறிவியல் பயிற்றும் முறையிலும் இவை பொருந்துமாற்றை விளக்குவார்.

இவ்வகைத் தேர்வுகளை மதிப்பிடுதல் எளிது. வினாக்களுக்கேற்ற விடைகளை முன்னதாகவே ஆயத்தம் செய்துகொள்ளல் வேண்டும். ஒவ்வொரு வகைச் சோதனைக்கும் ஒவ்வொருமுறை உண்டு. உறுதியாக அறியாமல், உத்தேசமாக விடையிறுப்பதை ஒழிப்பதற்கு வழிவகைகள் கண்டறியப்பெற்றுள்ளன. எல்லாவகைச் சோதனைகளிலும் உத்தேசமாக விடை அளிப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. சரி-தவறு

சோதனைகளிலும், பல்விடையிற் பொறுக்குச் சோதனைகளிலும் அவர்கள் உத்தேசமாக விடை அளிப்பதை தவிர்ப்பதற்கு S=R-W/N-1 என்ற வாய்பாட்டைப் பயன்படுத்தி மதிப்பெண்கள் குறைக்கப்படுகின்றன. இதில் S என்பது மாணக்கர்கள் பெறும் மதிப்பெண். R என்பது சரியான விடைகள்; W என்பது தவறான விடைகள்; N என்பது உத்தேச விடைகள், சரி-தவறு சோதனையில் இவ்வாய்பாடும் S=R" என்று அமைந்து விடுகின்றது. பல்விடையிற் பொறுக்குச் சோதனைகளில் 2, 3, 4, 5 உத்தேச விடைகள் இருக்கும்பொழுது அது முறையே S=R-W/2, S=R-W/3, S=R-W/4, S=R-W/5 என்று அமைகின்றது. உத்தேச விடைகளின் எண்ணிக்கை அதிகப்பட அதிகப்பட மாணாக்கர்கள் உத்தேசித்து விடையறுப்பது குறைவதை அறியலாம். இச் சோதனைகளை ஆயத்தம் செய்யும் முறைகளையும், நல்ல சோதனைகளின் இலக்கணத்தையும் இரண்டு நூல்களிலும் தெளிவாக விளக்குவர்.

<u>**பயிற்றும் ஆசிரியர்கள்**</u>: பேராசிரியர் தமிழ் பயிற்றலைப் பற்றியும் கல்வி உளவியல் கோட்பாடுகள் பற்றியும் தமிழில் நூல்கள் படைத்துள்ளார். இதனால் இரண்டு பிரிவு ஆசிரியர்களும் உளவியல் நுட்பங்களைத் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். தவிர இருசாராரும் தம்முடைய வேலைத்திட்டங்கள் பற்றி தெளிவாக வகுத்துக் கொள்ளல் வேண்டும். அறிவியல் ஆசான் என்ற தலைப்பில் தெளிவாக விளக்குவர்.[45]

தமிழ் பயிற்றும் ஆசிரியர்களிடம் அகன்ற கல்வியறிவு, மொழி அறிவு, மொழிப்பற்று, உச்சாகம், உளவியல் அறிவு, தருவழிகாணும் திறம் (Resourcefulness), பயிற்றலின் அடிப்படை விதிகளை நடைமுறையில் கையாளல் ஆகிய திறன்கள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும். இவ்விடத்தில்

'பொங்கரில் நழைந்து வாவி
புகுந்துபங் கயம்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன் போல்இயங்கும் அன்றே'

என்ற பரஞ்சோதி முனிவரின் பாடலை எடுத்துக்காட்டி ஆசிரியர்கள் அங்கங்கே கலைகள் தேடும் அறிவன்போல் பல பன்னூல்களைக் கற்றுக் கற்று பாடற்பொருளை பல கோணங்களில் நன்கறிந்து பாடம்

நடத்தினால் அவர்கட்கு நல்லாசான் என்ற நற்பெயர் தானாக வந்து அமையும் என்பது பேராசிரியரின் கருத்து. இறுதியாக அவர் கூறுவது: "ஏனைய பாட ஆசிரியர்கள் மாணாக்கர்களின் அறிவைப் பெருக்குவதற்குக் காரணமாக இருக்க, இலக்கியம் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்கள் அவர்களின் உள்ளத்தைப் பன்படுத்துபவர்களாக அமைகின்றனர். இது இவர்தம் பெரும்பேறாகும்; இறைவனின் திரு உள்ளக்குறிப்புமாகும். இதனைத் தாய்மொழி ஆசிரியர்கள் சிந்தித்துத் தம் கடமைகள் - தம் பொறுப்புகளை உணர்வார்களாக"[46] என்பது.

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. கற்றலைப்பற்றிய பல்வேறு உளவியல் கருத்துகள் விளக்கப்பெறுகின்றன.
2. கற்றலை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் நடைபெறவேண்டுமென்பது வற்புறுத்தப்பெறுகின்றது.
3. கற்பித்தலின் அடிப்படை விதிகளும் கற்பிக்கும் முறைகளும் தெளிவுறுத்தப் பெறுகின்றன.
4. அறிவியல் பயிற்றலில் 'அறிவியல் பயிற்றும் முறை' என்ற ஒரு தனிமுறை தெளிவாகப் பெறுகின்றது.
5. அறிவியல் பயிற்றலில் பல புதிய போக்குகள் தெளிவாக்கப் பெறுகின்றன.
6. மொழிபயிற்றலில் வாய்மொழிப் பயிற்சி, படிப்பு போன்றவை வற்புறுத்தப்பெறுகின்றன.
7. மொழிபயிற்றலில் எழுத்துப் பயிற்சியில் இன்றியமையாமை வற்புறுத்தப்பெறுகின்றது.
8. கவிதை கற்பித்தலில் கவிதையை நுகர்வதை முக்கிய நோக்கமாக வற்புறுத்தப்பெறுகின்றது.
9. உரைநடை கற்பித்தலில் இலக்கணத்தை பொருத்தும் முறையில் கற்பித்தால் பெரும் பயன் விளைவிக்கும் என்பது எடுத்துக்காட்டப் பெறுகின்றது.
10. இலக்கணம் கற்பித்தலில் தொடர்மொழிகளையும், மரபுத் தொடர்களையும் விளக்கும்முறை, இணைத்துக் கற்பிக்கும் முறை வற்புறுத்தப்பெறுகின்றன.
11. பள்ளிக்குரிய பல்வேறு நூல்களின் இன்றியமையாமையும் அவை தேர்ந்தெடுக்கும் முறையும் விளக்கப்பெறுகின்றன.
12. பள்ளி வாழ்வில் மாணாக்கர் உடல்நலம் கற்றலில் பெரும்பங்கு பெறுவதால் அதை ஆசிரியர் கவனத்தில் இருத்துதல் வேண்டும்.

13. பல்வேறு நிலை மாணவர்கள் மீத்திறம் பெற்றவர்கள், மந்தநிலையினர், இயல்பு பிறழ்ந்த நடத்தையினர், இவர்கள் பொருத்தப்பாடு அடையும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் முறைகள் விளக்கப் பெறுகின்றன.
14. பல்வேறு வகைத் தேர்வுகள் அவற்றின் நிறைகுறைகளுடன் விளக்கப்பெறுகின்றன.
15. பயிற்றும் ஆசிரியர்களே பள்ளி வாழ்வில் பெருவிசை என்பது மிகவும் வற்புறுத்தம் பெறுகின்றது.

<u>அடிக்குறிப்புகள்:</u>

1. பேராசிரியர் ச.மெய்யப்பன்- தமிழ்ப் பயிற்றும் முறை (மூன்றாம் பதிப்பு-பதிப்புரையில்)
2. கல்வி உளவியல் கோட்பாடுகள் - பக். 207-209
3. மேலது - இயல் - 7-பக் 210-215
4. மேலது - இயல் - 7-பக் 230-294
5. தமிழ் பயிற்றும் முறை - பக். 84-91
6. மேலது - பக். 57-79 இயல் - 3
7. மேலது - இயல் - 4, 5
8. அறிவியல் பயிற்றும் முறை -பக். 41, இயல் - 5
9. மேலது - இயல் - 6, 7
10. மேலது - இயல் - 8
11. மேலது - இயல் - 10
12. மேலது - இயல் - 11
13. மேலது - இயல் - 12
14. மேலது - இயல் - 14
15. 1. பார்க்கவேண்டியது பொருள்கள் 2. பொம்மைகள் 3. படங்கள் 4. வரி படங்கள் 5. வாய்மொழி சொற்கள் என்று வகைப்படுத்தி விளக்குவர் த.ப.மு-பக் 150-151
16. அறிவியல் பயிற்றும் முறை - இயல் -12 பக் 146-182
17. மேலது - இயல் - 13 பக். 163-186
18. Education is the sharing of racial experience.
19. அறிவியல் பயிற்றும் முறை - இயல் -14 பக் 187-197
20. தமிழ் பயிற்றும் முறை - பக். 203-204
21. மேலது - பக் 204, 249
22. மேலது - இயல் - 10
23. மேலது - இயல் - 11
24. கவிதை பயிற்றும் முறை- ப .190
25. மேலது - பக்- 31-32
26. தமிழ் பயிற்றும் முறை 2ம் பதிப்பு பக். 455-456
27. மேலது - பக். 459-491

28. மேலது (இரண்டாம் பதிப்பு இயல்-12 ப . 467
29. மேலது ப - 469
30. கல்வி உளவியல் கோட்பாடுகள்-பக். 268-274
    ஒப்பிடுக: தமிழ் பயிற்றும் முறை- பக்.388-389
31. தமிழ் பயிற்றும் முறை- பக்.479-491
32. மேலது - ப. 488
33. மேலது - பக் 506-507
34. மேலது - பக் 512-513
35. மேலது - ப. 527
36. மேலது - பக் 592-595
37. கல்வி உளவியல் கோட்பாடுகள்-பக். 318-324
38. மேலது - ப. 341
39. மேலது -இயல்-10 ப. 342
40. தமிழ் பயிற்றும் முறைஇ ப . 620
41. தமிழ் பயிற்றும் முறைஇ ப . 621
42. மேலது - ப. 621
43. மேலது - பக். 621-624
44. மேலது - பக். 624-633
45. அறிவியல் பயிற்றும் முறை-இயல்-16
46. தமிழ் பயிற்றும் முறை - மூன்றாம் பதிப்பு - ப . 344

****

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ III

இயல் - 3

அறிவியல் தமிழ்-I

(இயற்பியல்)



பகுதி 3 :<>: இயல் – 3

அறிவியல் தமிழ் ~ 1 (இயற்பியல்)

'அறிவியல் தமிழ்' அண்மைக் காலத்தது. இயல், இசை, நாடகம் என்று வளர்ந்து செழித்துள்ள முத்தமிழுடன் இது நான்காவதாகச் சேர்ந்து கொண்டது. நாட்டுப்பற்று மிகுந்து அது விடுதலை இயக்கமாக மாறத் தொடங்கிய நாள்தொட்டு அதனுடைய இரட்டைப் பிறவிபோல் மொழிப்பற்றும் அதனுடன் தோன்றி ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றது. பல்வேறு வகையில் இதற்கு உரம் இட்டும் நீர்வார்க்கப்பெற்றும் வருவதால் இத்துறை விரைவாக வளர்ந்து வருகின்றது.

சென்றிடு வீரஎட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்[1]

என்பன போன்ற ஊக்கு மொழிகளாலும் அறிஞர்கள் பலர் ஆற்றிவரும் தொண்டுகளாலும் கடந்த சில ஆண்டுகளாக 'அறிவியல் தமிழ்'' புதிய வேகத்துடன் வளர்ந்து வருகின்றது.

<u>அறிவியல் தமிழ் முன்னோடிகள்</u>: வெள்ளையர் ஆட்சியிலேயே தமிழில் ஒரு சில அறிவியல் நூல்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. 1855இல் டாக்டர் கரோல் என்பவர் 'இயற்கணிதம்'' நூலையும், விசுவநாதன் என்பார் 'வீசு கணிதம்'' நூலையும் வெளியிட்டதாகத் தெரிகின்றது. 1861இல் ஜோ. ஆர்னோல்டு என்பவரால் 'வான சாஸ்திரம்'' என்ற நூல் வெளியிடப் பெற்றது. அதன் பிறகு வேறு சில நூல்கள் வெளிவந்திருக்கலாம். அவை இந்த ஆய்வாளர் கவனத்திற்கு வரவில்லை. அடுத்து அமரத்துவம் எய்திய இராஜாஜி, தி.சு. அவினாசிலிங்கம், சி.சுப்பிரமணியம் போன்ற அரசியல் தலைவர்கள் தந்த ஊக்கத்தால் பொதுமக்கள் படிப்பதெற்கென்று பல அறிவியல் நூல்கள் தோன்றலாயின. இராஜாஜியின் 'தமிழில் முடியுமா?'', 'திண்ணை இரசாயனம்'' ஆகிய நூல்களும், திரு. பெ.ந.அப்புசாமி எழுதிய 'மின்சாரம்'', 'வானக்காட்சி'' போன்ற நூல்களும், பேராசிரியர் ஆர்.கே. விசுவநாதன் எழுதிய 'அணுவியல் ஆனந்தத்தாண்டவம்'', 'விசுவரூபம்'', 'ஆலாயமணி'' போன்ற நூல்களும், பேராசிரியை ஈ.தா. இராஜேஸ்வரி அம்மையார் எழுதிய 'சூரியன்'', 'வான்குமிழி'', 'அணுப்புரானம்'' போன்ற நூல்களும் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் யாவரும் இத்துறையில் தொடக்கக் காலத்தில் பணியாற்றிய

முன்னோடிகளாவர். அரசியல் துணையோ பிறர் துணையோ இன்றித் தாமாகவே தாய்மொழிப் பற்றுடன் அறிவியல் தமிழை வளர்த்த பெரியார்கள் இவர்கள். இவர்களை அடுத்து இத்துறையில் பணியாற்றிய பேராசிரியர் சவரிமுத்து, ந. குழந்தைவேலன் (என்.கே. வேலன்), பெ.தூரன், எஸ்.எஸ்.இராமசாமி ஆகியயோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார்: இந்நிலையில் பேராசிரியர் ரெட்டியார் அறிவியல் தமிழ் அரங்கிற்கு வருகின்றார். சிறுவர்கட்கும் வளாந்தவர்கட்கும் இவர் ‘அணுவின் ஆக்கம்’(1958), ‘இளைஞர் வானொலி’ (1962), ‘இராக்கெட்டுகள்’ (1963), ‘அதிசய மின்னணு’ (1963), ‘இளைஞர் தொலைக்காட்சி’ (1966), ‘அணுக்கரு பௌதிகம்’ (1966), ‘அறிவியல் விருந்து’ (1968), ‘அம்புலிப் பயணம்’ (1973), ‘தொலை உலகச் செலவு’ (1976), என்ற இயற்பயில் துறை சார்ந்த ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். ‘விண்வெளிப்பயணம்’’ அச்சேறப்போகிறது. ‘வானமண்டலக்காட்சி’’ இன்னும் அச்சேறவில்லை. இந்த ஒன்பது நூல்களைத் தவிர, ‘அறிவியல் தமிழ்’’ என்ற நூலில் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவற்றுள் ‘மானிட உடல்’, ‘அணுக்கரு பௌதிகம்’ ஆகிய இரண்டும் மொழி பெயர்ப்பு நூல்கள். ஏனையவை முதல் நூல்கள். மேலும் ‘மானிட உடல்’, ‘நமது உடல்’, இல்லற நெறி’’, ‘வாழையடி வாழை’ ஆகிய நான்கும் உயிரியலைச் (Live Science) சார்ந்தவை. ஏனையவை அறிவியல், வானியலைச் (Space Science) சார்ந்தவை. இந்நூல்கள்தாம் இந்த ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பெறுகின்றன.

அண்மைக்காலக் கண்டுபிப்புகள், புதுப்புனைவுகள்: கல்லூரியில் இடைநிலை வகுப்பிலும், இளங்கலைப் பட்டப்படிப்பிலும் கணிதம், அறிவியல் இவற்றை விருப்பப்பாடங்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றில் ஆழங்கால்பட்டு ஆழ்ந்து கற்ற பேராசிரியர் அத்துறைகளிலெல்லாம் நல்ல அடிப்படை அறிவைப் பெற்றமை காரணமாக அவருடைய விருப்பார்வம் எல்லாம் அறிவியல் துறையிலேயே சென்றது. இதனால் அறிவியல் துறைகளில் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள், புதுப்புனைவுகள் இவற்றால் நாட்டம் செலுத்தி அவற்றையெல்லாம் ஆழ்ந்து கற்றார். இத்துறைகளிலெல்லாம் தமிழ்ச் சிறுவர்களையும் இளைஞர்களையும்

உட்படுத்த வேண்டும் என்ற பெருநோக்குடன் அவற்றை தமிழில் எழுதச் தொடங்கினார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
துமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்[2]

என்ற பாரதியாதின் குரல் அவரைத் தட்டி எழுப்பியிருத்தல் வேண்டும், உந்து விசையைத் தந்திருத்தல் வேண்டும். 'நண்பர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியர் துறை பல வல்ல ஒரு பெருந் தமிழ்ப் பேராசிரியர் என்பதனை நாடறியும். ஐம்பூத நுட்பவியலை அழகான தமிழில் ஆற்றலுடன் எழுத முடியும் எனத் தமிழின் மொழியாண்மையயைக் காட்டி மூன்று பரிசுகள் பெற்றவர். பாடநூலாகப் பழைய அறிவியலை எழுதித் தமிழைப் பிற்படுத்தாமல் புத்தம் புதிய அறிவியல் பிடிப்புகளை வளரும் தமிழில் வரையாது எழுதி வரும் ஆக்க எழுத்தாளர்; இத் தனிச்சிறப்பு பேராசிரியர்க்கே உண்டு''[3] என்று பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் அவர்களின் கூற்று இக்கருத்துக்கு அரன் செய்யும்.

<u>**தமிழ் இலக்கியங்களில் அறிவியல் பற்றிய குறிப்புகள்**</u>: அறிவியலில் ஆராக்காதலையுடைய பேராசிரியர் ரெட்டியார் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்பற்றிய குறிப்புகளை முதலில் தேடிக் காட்டுகின்றார். நினைப்பிற்கெட்டாத நெடுங்காலமாகவே தமிழர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கினர் என்பது வரலாற்று அறிஞர்கள் ஒப்புக் கொண்ட உண்மை. அறிவியற் கலைகள் அவர்களிடம் பயன்முறைக் கலைகளாக மிளிர்ந்தன என்பதற்குப் பல்வேறு இலக்கியச் சான்றுகளை எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.[4] இங்கு அவர் பண்டைக் காலத்தில் அறிவியல் அறிஞர்கள் இருந்தனர் என்பதை உறையூர் முதுக்கண்ணன் சாத்தனாரின் புறப்பாட்டை (புறம்-30) எடுத்துகாட்டி விளக்குவர். இவர்கள் வானியல், கோளியல், உயிரியல், இயற்பியல், பொறியில் முதலிய பல்வேறு துறைகளிலும் வல்லுநர்களாகத் திகழ்ந்திருத்தல் கூடும் என்பது பேராசிரியர் ரெட்டியாரின் கணிப்பு. வானியலில் தொடர்ந்து **வானியல் துறையில்** அறிவுமிக்கு விளங்கினர் என்பதை 'எறிகடல் ஏழின் மணல் அளவாக'' (திருமந்.2258) வுள்ள விண்மீன்களில் இருபத்தேழு விண்மீன்களைக் குறித்து அமைத்து வானியலை வளர்த்து இருந்தனர் என்பதை விளக்குவர். கோள்களின் இயக்கத்தால் இயற்கை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை

இலக்கிய சான்றுகளை அடுக்கிக் காட்டுவர்;[5] சங்கப் புலவர்கள் கணியர்களாகவும் இருந்தனர் என்பதை நிலை நாட்டுவர்.

வெட்ட வெளியும் அதனுள் அடங்கியிருக்கும் அண்டங்கள் யாவும் சேர்ந்ததுதான் இந்த அகிலம் (Universe). கோடிக்கணக்கான மீன்மண்டலங்களும் அவற்றினின்று விடுபட்ட தனித்தனி மண்டலங்களும், வால்மீன்களும், எரி மீன்களும் எண்ணற்றவை இந்த அகிலத்தில் சுழன்று கொண்டுள்ளன. இவற்றின் பிறப்பு, மூப்பு, சாக்காடு இவைபற்றிய செய்திகளை இன்றைய வானநூல் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். மணிவாசகப் பெருமான் இதைப்பற்றிக் கூறியிருப்பதை,

அண்டப் பகுதியல் அண்டப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன

என்ற வாசகப் பகுதியை (திருவண்டப் பகுதி- 4191-4) எடுத்துக்காட்டவர். பேராசிரியர் ஐன்ஸ்டைன் அகிலத்தின் வெளி வளைந்துள்ளது என்றும் அது விரிந்து கொண்டே போகிறது என்றும் கூறுவர். ஓர் இரப்பர் பலூனின்மேல் பல புள்ளிகளை வரைந்து அப்பலூனை ஊதினால் அது பெரிதாக ஆக ஆக, அப்புள்ளிகளின் இடையிட்ட தொலைவும் அகன்றுகொண்டே போகின்றது. இதைப்போலவே, விண்வெளியும் மீன் மண்டலங்களையும் கோள் மண்டலங்களையும் ஏந்திக்கொண்டு அகன்று கொண்டே போகின்றது என்பது இன்றைய அறிவியலார் கண்ட முடிவு. மணிவாசகரின 'நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன'' என்ற அடி இதனை விளக்குவதாகக் கருதலாம் என்பது பேராசிரியரின் விளக்கம்.

<u>பொறியியல்:</u> பண்டைத் தமிழர்கள் பொறியியலிலும் வல்லுநர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதைச் சிந்தாமணியில் விசையை கவர்ந்து சென்ற மயில் பொறியும், பெருங்கதையில் வரும் யூகியால் இயற்றப்பெற்ற இயந்திர யானையும், இராமாயணத்தில் வரும் புட்பகவிமானமும், 'வலவன் ஏவாவானவூர்தியும்'' (புறம்-27) நம்மைச் சிந்திக்க வைக்கின்றன; ஊகிக்கவும் செய்கின்றன.[6]

<u>இயற்பியல்</u>: இயற்பியல்பற்றிய ஒரு சில கருத்துகளையும் எடுத்துக் காட்டுவார். மேலே செல்லச் செல்ல காற்று இலேசாக இருக்கும் என்பது இயற்பியல் உண்மை. கம்பராமாயணத்தில் இதனைக்

கவிஞன் மிகச் சமத்காரமாகக் காட்டுவான். இலங்கையிலுள்ள மாளிகைகள் தேவர் உலகை எட்டும் நிலையில் உள்ளன. மேருவையும் வருத்தக்கூடிய வாயு அந்த உயரமான இடங்களில் தென்றலாய் வீசுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக சுந்தரகாண்டம் ஊர்தேடு படலத்தில்

ஆகாயம் அஞ்சஅகன் மேருவை அணுக்கும்
மாகால் வழங்கு சிறு தென்றல்வர நின்ற (ஊர்தேடு-2)

என்ற பாடற்பகுதியில் இக்கருத்து அமைந்திருப்பதைக் காட்டுவர்.

கதிரவன் மகரரேகைக்கு தெற்கே செல்வதில்லை என்பது அறிவியல் உண்மை. இலங்கை மகரரேகைக்குத் தெற்கே நெடுந்தொலைவில் இருப்பதால் அங்கு சூரிய ஒளி படுவதில்லை. இதனைக் கம்பன்,

முன்னம் யாவரும் இராவணன் முனியும் என்(று) எண்ணிப்
பொன்னின் மாநகர் மீச்செலான் கதிர்எனப் புகழ்வார்
கன்னி யாரையின் ஒளியினில் கண்வழுக் குறுதல்
உன்னி நாடொறும் விலங்கினன் போதலை உணரார் (ஊர்தேடு-21)

என்று கூறுவான். ‘ கதிரவன் இராவணனது ஆணைக்கு அஞ்சி இலங்கை நகரத்துக்கு மேலே தன் வெப்பக் கதிரிகளை வீசுவதில்லை என்று கூறுவது தவறு; இலங்கை மதிலின் ஒளியினால் கண்கூசுவதனால் கவன் விலகிச் செல்லுகின்றான்’ என்ற கருத்தைக் கற்பனைத் திறத்தினால் கவிஞன் சுவைதரும்படி மாற்றிக் கூறுகின்றான்.

மேகநீர் மிகவும் வெப்பமாக இருக்கும் என்பது இயற்பியலார் கண்ட உண்மை. கிட்டத்தட்ட 100°C-க்குக் குறையாது அதன் வெப்பம். இரணியனுடைய சுகாநுபவத்தைக் கம்பன் ‘கொண்டல் கொண்டநீர் குளிர்ப்பில என்றவன் குளியான்’ (இரணியவதை-4) என்று கூறுவான். மேகநீர் சூடாயிருப்பதால் அதில் அவன் நீராடான் என்பது குறிப்பு. வேறு சில இடங்களில் நீராடான் என்று கூறி இதையும் குறிப்பிடுகின்றான் கவிஞன் என்று காட்டுவார் பேராசிரியர்.

<u>**உயிரியல்**</u>: இன்று உயிரியல் துறையில் டார்வின் போன்ற அறிஞர்களால் குறிப்பிடப்பெறுவது கூர்தல் அறம் (Theory of Evolution) என்பது. இதுபற்றி அறிவியல் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இத்தகைய கொள்கை போன்றதொரு கருத்தினை,

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் (திருவா.விபு.அடி(26-31)

என்று மணிவாசகப் பெருமானும் கூறியுள்ளதை எடுத்துக்காட்டுவர் பேராசிரியர் ரெட்டியார்.

<u>மருத்துவ இயல்:</u> பண்டைய இலக்கியங்களில் மருத்துவ இயல் பற்றிய செய்திகளையும் சிகிச்சை முறைகளையும் காணலாம். திருக்குள் 'நோய் நாடி...'' (குறள்-948) என்பதால் நோய்வருவதன் காரணங்களையும் அது வாராது தடுக்கும் முறைகளையும், வந்தால் தீர்க்கும் வழியையும் பற்றிய பல்வேறு செய்திகள் தரப்பெறுகின்றன என்று விளக்குவார். கண் முதலிய நுட்பமான பகுதிகளில் இரும்புத்தூள் முதலியன புகுந்து கொண்டால் காந்தத்தைக் கொண்டு இக்காலத்தில் சிகிச்சை செய்கின்றனர். பண்டையோரும் இம்முறையையும் அறிந்திருந்தனர் என்பதைப் பேராசிரியர் யுத்தகாண்டம் மீட்சிப்படலத்திலுள்ள 'அன்று கேகயன் மகள் கொண்ட' (118) என்ற பாடலில் வந்திருப்பதை எடுத்துக்காட்டுவர். கருவுயிர்த்த மங்கையர் குழந்தையை நீராட்டி மருந்தூட்டி வளர்க்கும் திறம் சிந்தாமணியின் 'காடியாட்டித் தராய்ச்சாறும்'' (சிந்தா-2703) என்ற பாடலில் குறிப்பிடப் பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுவார்.

<u>அணுவியல்</u>: அணு மிகச் சிறிய துகள் என்பதை மட்டிலுமே அறிந்திருந்தனர் என்பதற்குப் பல இலக்கியக் குறிப்புகள் உள்ளன. திருக்குறளின் பெருமையைப் பேசவந்த ஔவையார்,

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள. (திருவள்ளுவமாலை-55)

என்று கூறுவர். கம்பராமாயணத்தில் மேகநாதன் இறந்ததுபற்றிய மண்டோதரி புலம்பலில்,

உக்கிட வானமேரு அணுஒன்றுஓடி
உதைத்தது போலும் அம்மா (இராவணன் சோகப்-52)

என்ற பாடலில் அணுப்பற்றிய குறிப்பு வருகின்றது. ‘மேருமலையை அணு ஒன்று ஓடி உதைத்தது போலல்லவா இருக்கிறது’ என்று புலம்புகிறாள் மண்டோதரி.[7] இந்த இரண்டு எடுத்துக்காட்டிலும் அணு மிகச் சிறிய துகள் என்ற கருத்திலேயே கூறப்பெற்றுள்ளது. பிறிதோரிடத்தில் நாராணனின் இருப்பைக் கூறவந்த பிரகலாதன் வாய்மொழியாக,

சாணிலும் உளன்ஓர் தன்மை அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன் (இரணியன்வதை-124)

என்று கூறுவன். ஈண்டும் அணு ஒரு சிறிய துகள் என்ற பொருளிலே வந்தது. கோண் அணுவின் நூறில் ஒரு பங்கு. இஃது அளவேயன்றி அணுத்துகள்கள் (Atomic Particles) அன்று.

‘அண்டத்தில் போலத்தான் பிண்டத்திலும்’’ என்பது நம் நாட்டில் வழங்கும் பழமொழி. வானவெளியில் கோடானுகோடி அண்டங்கள் தொங்குகின்றன. நடுவில் கதிரவன் இருக்க அக்கோளைச்சுற்றிப் பலப்பல மண்டலங்களில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், யுரேனஸ், நெப்டியூன் முதலிய கோள்கள் சுற்றிச் சுற்றி வருகின்றன. இந்தக் கதிரவ மண்டலத்தைப் போலத்தான் அணு மண்டலமும் அமைந்துள்ளது. அணுவின் நடுப்பகுதியைச் சுற்றிப் பல வட்டங்களில் மின் துகள்கள் இடைவிடாது சுற்றிச் சுற்றி வந்து கொண்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டுதான் பாரதியாரும் ‘இடையின்றி அணுக்களெல்லாம் சுழலுமென இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்’’ (பாஞ்.சப.செய்.206) என்று கூறினார். அறிவியல் ஆய்ந்து கண்ட உண்மையினைப் பரஞ்சோதியார்,

அணட்ங்கள் எல்லாம் அணுவாக அணுக்கள் எல்லாம்
அண்டங்களாகப் பெரிதாய்ச்சிறி தாயி வானும்
அண்டங்கள் உள்ளும் புறம்புங்கரி யாயி னானும்
அண்டங்கள் ஈன்றாள் துணை என்பர் அறிந்த நல்லோர்
(திருவிளை-பாயிரம்.6)

என்று கூறுவர். இதில் அறிவியல் அநுபவ இயலாக முகிழ்த்துள்ளமையைக் காட்டுவார் பேராசிரியர்.

சமண மதம் பேசுவது அணுக் கொள்கையைத்தான். மணிமேகலை என்ற நூலில்,

எல்லையில் பொருள்களில் எங்கும்எப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்டு கின்ற
வரம்புஇல் அறிவன் இறை நூற் பொருள்கள் ஐந்து
உரம்தரு உயிரொடு, ஒருநால் வகைஅணு
அவ்வாறு உற்றும், கண்டும் உணர்ந்திட
பெய்வகை கூடிப் பிரிவதும் செய்யும்;
நிலம்நீர் தீகாற்று எனநால் வகையினை
மலைமரம் உடம்புஎனத் திரள்வதும் செய்யும்;
வெவ்வேறு ஆகி விரிவதும் செய்யும்;
அவ்வகை அறிவது உயிரெனப் படுமே
(சமயக்கர், அடி 110-119)

என்று ஆசீவகவாதி தன் சமயத்தை எடுத்துரைக்கின்றான். நியாய மதம், வைசேடிக மதம் என்பவையும் அணுக் கொள்கையையே பேசுகின்றன. வைசேடிக மதத் தலைவராகிய கணாதர் ‘அணுவிழுங்கியார்’’ என்றே வழங்கப்பெறுகின்றார். விநாயகரகவலிலும் அணுபற்றிய கொள்கை தலைகாட்டுகின்றது.

அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமற்றி நின்ற கரும்புளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தில் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே (வி.அ.கடி.64-71)

என்ற பகுதியை எடுத்துக்காட்டுவர் பேராசிரியர்.

<u>கலைச் சொல்லாக்க முயற்சிகள்</u>: அறிவியல் தமிழ் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் பெரிய இடர்ப்பாடாக இருப்பது கலைச் சொல்லாக்கம். கலைச் சொற்களை ஆக்கும் தீர்மானம் சென்னை மாகாணத் தமிழர் முதாலாண்டு மாநாட்டில் (சூன் 10 ,11-1934) தோன்றியது. ஆதனை நியைவேற்ற ஓர் உட்கழகம் அப்பொழுதே உருப்பெற்றது. அம்மாநாட்டில் தோன்றிய சென்னை மாகாணத்தமிழ்ச் சங்கம் அவ்வுட்கழகத்தைக் கூட்டி (14-10-1934) சொல்லாக்கக் கழகம் எனப் பெயர் தந்து வேலை தொடங்கியது. அதனால் உருப்பெற்ற பல்வேறு துறைச் சொற்கள் பல்வேறு அறிஞர்களால் திருத்தம் செய்யப் பெற்றுச் செப்பம் அடைந்தன. இயற்பியல், வேதியியல், கணித இயல் போன்ற ஒன்பது துறைகளில் கலைச் சொற்கள் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் (1938) வெளிவந்தன. இதில் சென்னை மாகாண முதல் அமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் தந்த ஆக்கமும்

ஊக்கமும் குறிப்பிடத்தக்கவை. இந்த முயற்சிகள் பல நல்லகலைச் சொற்களை உருவாக்கியுள்ளன. நல்ல பல தனித் தமிழ் சொற்களும் தோன்றின. இச் சொற்கள் சுமார் பத்து ஆண்டுக் காலம் நூல்கள் எழுதுவோருக்குப் பெருந் துணையாக இருந்தன.

நாடு விடுதலைபெற்ற பிறகு இத்துறை வளர்ச்சியில் ஒரு தனிவேகம் உண்டாயிற்று. திரு.தி.சு. அவினாசலிங்கம் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இந்த வேகத்தை மேலும் முடுக்கினார். இவர் காலத்தில் மீண்டும் பல்வேறு துணைகட்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப் பெற்றன. இவற்றின் துணையால் இதுகாறும் தனியார் முயற்சியால் தோன்றிய பல்வேறு கலைச் சொற்களும் நூல்கள் எழுதுவோர் தத்தம் நூல்களில் இறுதியில் பின்னிணைப்புகளாகத்[8] தொகுத்து ஒருசேரத் தொகுக்கப் பெற்று, மேலும் பல புதிய சொற்கள் சேர்க்கப் பெற்றுச் சென்னை மாநில அரசின் ஆதரவில் (1947) மீண்டும் நூல் வடிவாக வெளியாயின. இவை ஒரு பத்தாண்டுகள் நூல்கள் எழுதுவோருக்குத் துணைநின்றன. இந்நிலையில் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக அமைதல் வேண்டும் என்ற கருத்து அறிஞர்களிடையே முகிழ்த்தது. இதற்கு இதுகாறும் வெளிவந்த சொற்கள் போதா என்பதையும் அவர்கள் உணர்ந்தனர்.

இந்நிலையில் இளங்கலை பட்டத்தில் சில அறிவியல் துறைகளைத் துணைப் பாடங்களாக அமைக்கலாம் என்ற கொள்கையைச் சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புக் கொண்டது. இதற்கு உடனடியாகத் தமிழில் பல நூல்கள் எழுதப்பெற வேண்டிய இன்றியமையாமையும் எழுந்தது. திரு. சி. சுப்பிரமணியம் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் திரு. ஜி.ஆர். தாமோதரன் அவர்களைத் தலைவராகக் கொண்டு அரசினால் ‘கல்லூரித் தமிழ்க் குழு’ என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பெற்றது. அது பல்வேறு துறைகட்கென அமைக்கப் பெற்ற உட்குழுக்களின் துணையால் பல்வேறுதுறைக் கலைச் சொற்களை உருவாக்கியது. இவையாவும் நூல்வடிவில் (1960) வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றிலும் குறைகள் இல்லாமல் இல்லை என்றாலும் நூல்கள் எழுதுவோருக்கு இவை துணையாக நின்றன. நூல்கள் எழுதுவோர், மாணாக்கர்கட்குக் கற்பிப்போர் இவர்களிடம் சொற்கள் நன்கு செப்பமுற்று வருகின்றன. இங்ஙனம் அந்ததந்த நேரங்களில் சில அவசர நிலைகளுக்கேற்ப வெளியிடப்பெற்ற கலைச் சொல் அகராதிகளில் பல குறைகள் உள்ளன. இம் முயற்சிகள் விட்டு விட்டு நடைபெறுவதால் அறிஞர்களின் சிந்தனையும் அறுபடுகின்றது. இதனால் உருப்படியான முறையில் ஒருநிலையில் ஆக்கப்பெற்ற

கலைச்சொல் அகராதிகள் தோன்ற முடியாத நிலையினை காணலாம். இலங்கையிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கும் முயற்சி நடைபெற்று, பல்லாண்டுகட்கு முன்னரே இளங்கலைப் படிப்பு நிலைகளில் கலைச்சொற்களை ஆக்கியுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கட்கு அளிக்கப்பெறும் பயிற்சியும் தாய்மொழியிலேயே இருக்க வேண்டும் என்று கருதப்பெற்றது. இதற்கேற்ற கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடும் பொறுப்பைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ஏற்றுக் கொண்டது. அப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கான குழு ஒன்றை அப்பொழுது கல்வித்துறை இயக்குநராக இருந்த தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் தலைமையில் அமைக்கப்பெற்றது. சுமார் ஐயாயிரம் கலைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களையும் தொகுத்துக் கலைச் சொல்லாக்க அடிப்படை வேலையைச் செய்தது. பிறகு இச்சொற்களை ஆய்ந்து ஒரு நிலையாக்கி நூல் வடிவில் (1959) வெளியிட்டது. ‘உள்ளது சிறத்தல்’’ மூலமே இச்சொற்கள் நடைமுறையில் திருத்தங்கள் பெற்றுப் புது மெருகேறி வருகின்றன.

அண்மையில் கோவை ‘கலைக்கதிர்’’ நிறுவனம் இதுகாறும் பல்வேறு மூலங்களில் வெளிவந்த கலைச்சொற்கள் எல்லாவற்றையும் தொகுத்து பெரிய அளவில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. பொதுவாக இதுகாறும் வெளிவந்துள்ள கலைச்சொல் அகராதிகளை உற்று நோக்கினால் இவற்றுள் ஒரே சொல்லுக்குப் பலப்பல சமயங்களில் வெவ்வேறு சொற்கள் மொழி பெயர்ப்பாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆதலின் இந்த ஆக்கத்தில் சில விதிகளை வகுத்துக்கொண்டு அந்நெறிப்படிச் சொற்களைப் படைத்தல் மிகவும் இன்றியமையாதது. பலர் பல விதங்களில் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். துறை அறிவு இல்லாதவர்களும் முந்திரிக் கொட்டை போல் ஏதோ சொல்லி வருகின்றனர். ‘டாக்டர் வா.செ.குழந்தைசாமி கூறும் ஏழு வழிகள்: 1) பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து, சொற்களைத் தொகுப்பது, 2) தற்கால இலக்கிய சொல்லாட்சிகளை பயன்படுத்துவது, 3) பேச்சு வழக்கிலிருந்து நல்ல சொற்களைக் கையாளுதல், 4) தேவையான தொடர்புள்ள பிற மொழிச் சொற்களை எடுத்தாளுவது, 5) பிற மொழிச் சொற்களை மொழி பெயர்த்தல், 6) புதுச் சொற்களைஉருவாக்கல், 7) உலக வழக்கை அவ்வண்ணமே ஏற்றல். அதே போல் மாற்ற இயலாத குறியீடுகள் (ஆல்ஃபா, பீட்டா, காமா, பை, சை போன்ற

கிரேக்க எழுத்துகள் குறிப்பானவை) பற்றியும் சிந்திக்க வேண்டும். மீட்டர், இராடார் போன்றவற்றை மொழி மாற்றம் செய்வதிலும் பல சிக்கல்கள் உள்ளன. இதனால் சிலவற்றை மட்டிலும் மொழி பெயர்ப்புக்குள் அடக்க முடிகின்றது. ஏனையவற்றை ஒலி பெயர்த்து மட்டிலும் கூற வேண்டியுள்ளது. ஓம் (Ohm), ஆம்பியர் (Ampere), வாட் (Watt) போன்றவைகளை ஒலி பெயர்க்க மட்டிலுமே முடியும். ரேடியோவை 'வானொலி'' என்றும் டெலிவிஷனைத் 'தொலைக்காட்சி'' என்றும் மொழி பெயர்த்ததுபோல் சிலவற்றை மொழி பெயர்க்க முடியாது.[9]

<u>**சில சங்கடங்கள்**</u>: சில நுண்ணிய வேறுபாடுகளைச் சொல்லாக்கத்தில் கொண்டு வருங்கால் சில சங்கடங்கள் நேரிடுகின்றன. (Air) காற்று, (wind) வீசுவளி என மொழி பெயர்க்கலாம். Atmosphere வளிமண்டலம் எனலாம். ஒரு காலத்தில் Oxygen-னை பிராணவாயு என்றனர். பிராணவாயு வட சொல் எனக் கருதி உயிர்கவளி என மாற்றப்பட்டது. இந்த உயிர்வளி செம்புடன் சேர்ந்து சேர்க்கைப் பொருளாகும்போது Copper oxide ஆகிறது. இதை எப்படி மொழி பெயர்ப்பது? செம்பு ஆக்ஸைடு எனலாம். இப்படிச் சொல்வதைவிட 'காப்பர் ஆக்ஸைடு'' என்றே வைத்துக் கொள்ளலாம். வேதியியலில் வரும் ஆயிரக்கணக்கான சேர்க்கைப் பொருள்களை மொழி பெயர்ப்பதில் காலத்தைப் போக்குதல் வீண். அங்கக வேதியிலில் வரும் கலைச் சொற்களை மொழிபெயர்ப்பது இயலாத செயல். தாவர இயல் விலங்கியல் போன்றவற்றை ஆங்கிலத்தில் படிக்கும்போது இலத்தீன், கிரேக்க சொற்களை மாற்றாமல் அப்படியே வைத்துக்கொள்கிறோமல்லவா? இதனால் மொழிபெயர்க்க முடியாத கலைச்சொற்களை அப்படியே ஒலி பெயர்த்துப் பயன்படுத்துவது மேல். பின்னர் ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் நூல்களைப் பயிலும்போது எளிதாகி விடுகின்றது. இத்தகைய நோக்கத்ததைக் கொண்டவர் பேராசிரியர் ரெட்டியார். இலக்கியத்தில் உள்ள மொழித் தூய்மையை அறிவியல் தமிழில் எதிர்பார்க்க முடியாது என்பது அவர்தம் முற்போக்கு கருத்தாகும்.

<u>**கலைச்சொல் விளக்கம்**</u>: அறிவியல் தமிழ் வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் சத்துணவு போன்றது. பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பெரும்பாலும் தமது ஒவ்வொரு நூலிலும் கலைச் சொல் அகராதி, பொருட்குறிப்பு அகராதி போன்றவற்றைப் பின்னிணைப்புகளாகத் தொகுத்துச் சேர்ப்பதை இன்றியமையாத பணிகளாகக் கொண்டிருப்பதைக் காணலாம். கலைச்சொல் அகராதி நூல்

எழுதவோருக்குப் பயன்படும். ஏன்? நூலாசிரியருக்கே இவை கண்ணில் படும்போதெல்லாம் இவற்றில் மாற்றங்கள் செய்யவும் தோன்றும். பெரும்பாலான அறிவியல் நூல்களில் 'கலைச்சொல் விளக்கம்'' என்ற பின்னிணைப்பையும் சேர்ந்திருப்பதைக் காணலாம்.[10] இந்த வாசகங்கள் அறிவியல் தமிழைப் புதிதாக கற்போருக்குச் சிறந்த கையேடாக உதவும். அகச்சிவப்புக் கதிர்கள், அண்டக்கதிர்கள், அயனி மண்டலம், ஏவுகணை, ஒலித்தடை, புறஊதாக்கதிர்கள், வெப்பத்தடை போன்ற கருத்துகள் அறிவியல் தமிழை முதன்முதலில் பயில்வோருக்குப் புதிய கருத்துகள். அங்ஙனமே அலைக் கொள்கை, ஒலி அலைகள், மின்காந்த அலைகள், வாகன அலைகள், வானொலி அலைகள் போன்ற கருத்துகளும் இவர்கட்குப் புதியவை. உயிரியல் தமிழைப் பயில்வாருக்கு அகட்டு நீர், அகட்டுப்பாகு, ஊற்றறைகள், ஏற்றறைகள், கண்திரை போன்ற கருத்துகளில் விளக்கம் பெருந்துணை புரியும். வானொலி, தொலைக்காட்சி, நமது உடல், அணுவாற்றல், மின்னாற்றல், போன்ற துறைகள் அன்றாட வாழ்க்கையில் மூச்சு விடுதல்-வாங்குதல் போன்றது. கலைச்சொல் விளக்கம் இத்துறைகளில் விளக்கம்பெற விழைவாருக்குப் பெரும் துணைபுரியும் என்பதற்கு ஐயம் இல்லை.

<u>**பேராசிரியர் நூல்களில் சில முக்கிய கருத்துகள்**</u>: அறிவியல் தமிழ் வளர்ச்சியில் பேராசிரியர் எழுதிய நூல்களில் உள்ள சில முக்கிய கருத்துகளை - மக்கள் நினைவில் இருத்த வேண்டியவற்றை - ஆய்வாளர் தொகுத்துக் கூறுகின்றார். அறிவியல் தமிழ் அறிவில் நாட்டம் கொள்பவர்கட்கு இக்கருத்துகள் எய்ப்பினில் வைப்பாக இருக்கும்.

<u>(1) வானொலி, தொலைக்காட்சி</u>:

வானொலி, தொலைக்காட்சி பற்றி 'இளைஞர் வானொலி', 'இளைஞர் தொலைக்காட்சி' என்ற இரண்டு நூல்களை எழுதியுள்ளார். இவற்றிலுள்ள சில முக்கிய கருத்துகள் இந்த ஆய்வாளரால் பட்டியலிட்டு நிரலே காட்டப் பெறுகின்றன.

<u>**1.மந்திர அலைகள்**</u>: நாம் வசிக்கும் அறையில் கோடிக்கணக்கான, கண்ணால் காணமுடியாத மிகச் சிக்கலான ஒலி அலைகள் உள்ளன. இவற்றுள் ஒவ்வொன்றும் பிறிதொன்றினின்றும் முற்றிலும் வேறுபட்டவை. அவை சுவர்கள் வழியாகவும், தரை வழியாகவும், கூரை வழியாகவும், நம்முடைய வீட்டிற்குள் நுழைகின்றன. இந்த அலைகள் இங்குமங்கும்

குறுக்கிட்டு வலையைப்போல் பின்னிக் கிடக்கின்றன. இவை நம்முடைய சாமானியக் காதுகளுக்குக் கேட்பதில்லை. ஒலியலைகளைப் போலவே, ஒளியை ஏற்றிச் செல்லும் அலைகளும் ஒன்றோடொன்று பின்னிக் கிடக்கின்றன. இவை யாவும் நம்முடைய சாமானியக் கண்களுககுத் தோன்றுவதில்லை. இந்த அலைகள் வான வெளியில் அலைந்து திரிந்த வண்ணம் உள்ளன. நமக்கு அமைதியாகத் தோன்றுவதுபோல் காணப்படும் வானவெளி உண்மையில் அமைதி உடையதன்று. அ.்.து எப்பொழுதும் சலனம் உடையது; சஞ்சலம் நிறைந்தது. இத்தகைய வான வெளியில் வானி (Ether) என்ற ஒரு பொருள் நிறைந்துள்ளது.[11]

<u>2.வானி அலைகள்</u>: எங்கும் நிறைந்துள்ளன. அவற்றை நம்மால் தொட்டு உணர முடியாது. இத்தகைய நுண்ணிய வாணிதான் வானொலியின் ஊர்தி, வாகனம். அறிவியலறிஞர்கள் தம் விருப்பம்போல் இவற்றை ஆட்டிவைக்கக் கற்றுள்ளனர்.[12]

<u>3.**மின்காந்தம்**</u>: இது நன்கு விளக்கம் பெறுகின்றது.[13] மின்காந்தம் மட்டிலும் கண்டுபிடிக்கப்படாமலிருந்திருந்தால் வானொலியும் தொலைக்காட்சியும் தோன்றியிரா. மின்னாக்கப் பொறியும் எழுந்திராது.[14]

<u>4.தொலைபேசி</u>: ஒலியலைகள் மின்னோட்டமாக மாற்றப் பெறுகின்றன. அந்த மின்னோட்டம் திரும்பவும் ஒலியலைகளாகின்றன. ஒலியலைகள் சாதாரணமாகக் காற்றில் விநாடியொன்றுக்கு 1100 அடி வீதம் செல்லும். ஆனால், மின்னோட்டத்தை கம்பிகளின் மூலம் ஆயிரக்கணக்கான மைல்கள் அனுப்பலாம். நாம் பேசும் குரல் ஒலிகள் மின்னோட்டமாக மாற்றப்பெற்றுக் கம்பிகளின்மூலம் நம்முடைய நண்பரின் வீட்டை அடைகின்றன. அங்குள்ள ஏற்கும் கருவியில் இந்த மின்னோட்டம் திரும்பவும் முன்னைய ஒலியலைகளாக மாற்றப்பெறுகின்றன. நம்முடைய நண்பர் நாம் பேசுவதை எல்லாம் கேட்க முடிகின்றது. தொலைபேசி செயற்படும் முறை வானொலியில் பெரும்பங்கு பெறுகின்றது.[15]

5. ஒலிபெருக்கி, ஒளிவாங்கி இவற்றின் அமைப்புமுறை நன்கு விளக்கப்பெறுகின்றது.[16]

<u>6. வானொலி அலைகள்</u>: இவை ஒலியலைகளை விடக் கிட்டத்தட்டப் பத்து இலட்சம் தடவை விரைவாகப் பயணம் செய்கின்றன.

ஒலியலைகளைப் போல் இவை செல்லுவதற்குக் காற்றோ அதனைப் போன்ற வேறு ஊடகமோ தேவை இல்லை. அவை வானவெளியில் எல்லா திசைகளிலும் விநாடியொன்றுக்கு 1,86,000 மைல் வீதம் கடந்து செல்லுகின்றன. இவை சுவரையும் தரையையும் வீட்டின் கூரையையும் ஊடுருவிச் செல்லுகின்றன. இங்கிருந்து அவை சந்திரமண்டலத்திற்குச் சென்று திரும்பி வருவதற்கு மூன்று விநாடிகள் கூட ஆவதில்லை.[17]

7. வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பெறும் இசை அல்லது பேச்சு எங்ஙனம் இல்லத்திலுள்ள வானொலிப் பெட்டியில் நுழைந்து நாம் கேட்கும் அளவுக்கு நேரிடுவதைப் பேராசிரியர் ஒன்பது நிலைகளில் தரும் விளக்கம் மிகத் தெளிவாக உள்ளது.

8.வாகன அலைகள்: இவைதாம் வானொலி நிலையம், தொலைக்காட்சி நிலையம் ஆகிய இடங்களிலிருந்து ஒலி (ஒளி) பரப்பப்பெறும் நிகழ்ச்சிகளை ஏற்கும் கருவிகளுக்குக் கொண்டு செல்பவை. ஆனால் இவற்றின் அதிர்பு-எண்கள் வேறுபட்டவை. வானொலி அலைகளைப்போல் 150 மடங்குகட்கு மேல் அதிர்கின்றன தொலைக்காட்சி அலைகள். வூனொலி அலைகள் வினாடியொன்றுக்கு 560,000 தடவைகள் அதிர்கின்றன. தொலைக்காட்சி வாகன அலைகள் வினாடியொன்றுக்கு 100,00,000 தடவைகள் அதிர்கின்றன.[18]

9. தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகள் தொலைக்காட்சிப் பெட்டியை அடைவதை ஆறு நிலைகளில் பேராசிரியர் தரும் விளக்கம் மிகத் தெளிவாக உள்ளது.[19]

(2) அணுவியல்

அணுவியலைப்பற்றி ‘அணுக்கரு பௌதிகம்’ (1965), ‘அணுவின் ஆக்கம்’ (1958) என்ற இரண்டு நூல்களையும், ‘அறிவியல் விருந்து’ (1967) என்ற நூலில் ‘பொங்கலும் அணுவும்’, ‘அணுவின் அளப்பரிய ஆற்றல்’, ‘கதிரியக்க ஓரிடத்தான்கள்’, ‘தொல்பொருட்காட்சியில் புதிய ஆராய்ச்சி முறை’’ என்ற நான்கு கட்டுரைகளையும், ‘அறிவியல் தமிழ்’ (1976) என்ற நூலில் ‘அறிவியல் தமிழ்’ என்ற கட்டுரையும் வெளியிட்டுள்ளார். இவற்றில் அணுவைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய பல முக்கிய கருத்துகள் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன. அவை இந்த ஆய்வாளரால் பட்டியலிட்டுக் காட்டப் பெறுகின்றன.

1.அணுவின் அமைப்பு: அணுவின் அமைப்பும் அண்டத்தின் அமைப்பும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. பூமி சூரியனைச் சுற்றும்போது சூரியன் பூமியைக் கவர்ச்சி விசையால் இழுக்கின்றான். பூமி சூரியனை இடைவிடாது சுற்றும்பொழுது அந்தச் சுழற்சியின் பயனாக உண்டாகும் புறமுக ஆற்றல் (மையம் விட்டோடும் விசை) வெளிப்புறமாக வீசப்பெறுகின்றது. இந்த இரண்டு ஆற்றல்களுக்கிடையில் பூமி இருந்த இடத்திலேயே தன் வட்ட வழியை விட்டுப் பிழந்து போகாமல் சுழன்று வருகின்றது. இங்ஙனமே ஒரு நீரிய அணுவில் அதன் நடுவில் இருக்கும் உட்கரு தன்னைச் சுற்றிவரும் எலக்ட்ரானை உள்ளுக்கு இழுக்கிறது. புறமுக ஆற்றலும் கவர்ச்சி விசையும் சமநிலையை அடைந்து விடுவதால் எலக்ட்ரான் உட்கருவினுள் போய் விடாமல் சுற்றிவருகின்றது. இது கோள்நிலை எலக்ட்ரான் என வழங்கப்பெறும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் ஏராளமான காலியிடம் இருப்பது போலவே அணுவின் உட்கருவிற்கும் அதைச் சுற்றி வரும் எலக்ட்ரானுக்கும் இடையே ஏராளமான இடம் உள்ளது. எலக்ட்ரானின் ஓட்டத்தினால் அது அணுவிற்குத் தின்மையைத் தருகின்றது. இதனால் அணுவின் உட்கரு நன்கு பாதுகாக்கப் பெறுகின்றது.

யுரேனிய அணு அமைப்பில் உட்கருவில் 92 புரோட்டான்களும் 143 நியூட்ரான்களும் உள்ளன. இவை எடையில் சமமானவை. 92+143=235 இதுதான் அணுவின் எடை. புரோட்டான் நேர் மின்னூட்டம் பெற்றவை; எலக்ட்ரான் எதிர் மின்னூட்டம் பெற்றவை. நியூட்ரான்கட்கு மின்னூட்டம் இல்லை. இவை உட்கருவில் இருப்பதால் மின்னூட்டம் மிகுதிப் படுவதில்லை. உட்கருவினைச் சுற்றி ஏழு வட்டங்களில் ஒருவித கணக்கில் 92 எலக்ட்ரான்கள் சுற்றிவருகின்றன. இந்த எலக்ட்ரான்கள் கருவைச் சுற்றி வருவது வயது முதிர்ந்த துருக்கி நாட்டு மன்னன் தன்னுடைய 92 தேவிமார்களுடன் நடனமாடியதோடொக்கும் என்பார் பெட்ரண்ட் ரஸல் என்ற ஆங்கில அறிவியல் அறிஞர் தன்னுடைய அணு அரிச்சுவடியில்.[20] ஒரு கருவினுள் புரோட்டானோ எலக்ட்ரானோ வந்தால் மின்னூட்டம் மாறுவதில்லை.

2.அணுத்துகள்கள்: அணுவினுள் மேஸான், பாஸிட்ரான், எலக்ட்ரான், நியூட்ரான் என்ற நான்கு துகள்கள் உள்ளன என்பது உறுதி. அணுவைச் சிதைக்கும் பொழுது இந்த நான்கு வகையான துகள்கள் வீசப்பெறுகின்றன. இவற்றைத் தவிர மேஸான் நியூட்ரினோ என்ற துணுக்குகளும் உள்ளன. பாஸிட்ரோன் என்பது மேஸானுடன் பிறநதம இரட்டைக் குழந்தை. அளவிலும் எடையிலும் எலக்ட்ரானையொத்தது,

ஆனால் நேர் மின்னூட்டம் பெற்றது. இதன் வாழ்நாள் மிகச் சிறியது. மேஸானும் அற்பாயுளை உடையது. நியூட்ரினோ என்பது மேஸானைப் போன்ற மிகச் சிறிய துணுக்கு. இதற்கு எடையுமில்லை, மின்னூட்டமும் இல்லை. இவற்றைத் தவிர கேமுயு-கு, கேபை-டு என்ற வேறு இரண்டு துகள்கள் கண்டறியப்பெற்றுள்ளன. இன்னும் அணுவின் உள்ளகத்தில் 21 வித துகள்கள் இருப்பதாகக் கூறுகின்றனர்.[21]

<u>3.பிணைப்பாற்றல்</u>: இரண்டுவகைச் செங்கற்களால் கட்டப்பட்ட வீடுபோல் எல்லாஅணுக்களின் உட்கருக்களும் புரோட்டான், நியூட்ரான் என்ற இரண்டு வகைத் துணுக்குகளால்தான் அமைந்துள்ளன. உட்கருவின் செறிவும் எம்மருங்கும் ஒருபடித்தாகவே உள்ளது. இந்தத் துணுக்குள் யாவும் மிக இறுக இணைக்கப்பெற்றுள்ளன. நாம் அறிந்த ஆற்றல்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியவை. இந்த ஆற்றல் உட்கருவின் பிணைப்பாற்றல் என்று வழங்கப்படுகின்றது. அணுக்கருவிலுள்ள எலக்ட்ரான்கட்கும் அவற்றின் உட்கருக்களுக்கும் இடையேயுள்ள மின்னாற்றலைவிட இவ்வாற்றல் பத்து இலட்சம் மடங்கு பெரியது, வன்மையும் வாய்ந்தது. இந்த ஆற்றலே அணுவாற்றல்.[22]

இந்த ஆற்றலை இருநியின் அமைப்புக் கொண்டும் விளக்குவார் பேராசிரியர். இருநி என்பது ஒரு புரோட்டானும் ஒரு நியூட்ரானும் சேர்வதால் உண்டாகும் ஒருநீரிய உட்கரு. இவற்றின் எடைகளைத் தனித் தனியாகக் கணக்கிட்டு அவற்றின் மொத்த எடையைவிட இரண்டும் ஒன்றாக இணைந்த இருநியின் எடை 0.0024 குறைந்து காணப்பெறுகின்றது. இது 2,200,000 வோல்ட்டுகளின் ஆற்றலுக்குச் சமம். ஆல்ஃபா துணுக்கு என்பது அணு எண் 2 கொண்ட கரிதியத்தின் உட்கருவாகும். இது இரண்டு புரோட்டான்களும் இரண்டு நியூட்ரான்களும் இணைந்ததால் உண்டான ஆல்ஃபா துணுக்கின் பொருண்மை 0.0315 குறைவாக உள்ளது. இதற்கு ஈடான ஆற்றலின் அளவு 28,000,000 எலக்ட்ரான் வோல்ட். இந்த அளவு ஆற்றலைப் பயன்படுத்தினாலன்றி அதன் உட்கருவைத் தகர்க்க முடியாது. இருநி அமைப்பிலும் பரிதியக் கரு அமைப்பிலும் ஆற்றல் மறைந்ததற்குக் காரணம் வெறுத்துத் தள்ளப்பெறும் ஒரே நேர்மின்னூட்டமுள்ள துணுக்குகள் ஒன்றையொன்று வெறுத்துத்தள்ளிப் பிய்த்துக் கொண்டு போகாமல் ஒன்றாக இணையவைத்துத் திரட்டுவதற்குறிய ஆற்றல் செலவிடப்பட்டுள்ளது. இது புரோட்டான்களை அழுத்தி வைத்துக் கொண்டு கிடக்கின்றது.

<u>4.அணு ஆற்றல்</u>: அணுவாற்றல் என்பது அணுவின் உட்கருவிலிருந்து வெளிப்படுவது. இதனை உட்கருவாற்றல் (Atomic Energy) என்று தவறாக வழங்கிவிட்டனர். அப்பெயரே வழக்கிலும் வந்துவிட்டது. இந்த ஆற்றலை அணுச் சிதைவுக் கருவிகளால்தான் வெளிப்படுத்த முடியும். (எ-டு) வான்-டி.கிராப் நிலைஇயல் மின்னாக்கி உட்கருவின் பிணைப்பாற்றல்தான் அணுவாற்றலாக வெளிப்படுத்துகிறது. அதாவது உட்கருவில் துணுக்குகள் இணையும்போது மறைந்த ஆற்றல்தான் இது. இந்த மறைந்த ஆற்றல்தான் அணுகுண்டுவின் திருவிளையாடலில் பங்கு கொண்டது. ஹிரோஷிமா, நாகசாகி என்ற ஜப்பான் நகரங்களை நாசமாக்கியது.[23]

<u>5.இணைதல் - சிதைதல்</u>: அணுத் துணுக்குகள் ஒன்றாகச் சேர்ந்து உட்கருக்களாவதே ‘இணைதல்’’ (Fusion) எனப்படும். கதிரவனில் உள்ள அணுக்கள் தம்முள் இணைவதால் ஆற்றல் வெளிப்படுகின்றது. நீரிய அணு வெடிக்கும்பொழுது வெளிப்படும் ஆற்றலும் அணு இணைவதால் ஏற்படுவதே. அணுக்களின் உட்கருக்கள் பல பாகங்களாகப் பிரிந்தால் அது ‘சிதைதல்’’ (Fission) எனப்படும். யுரேனியம், புளுட்டோனியம் ஆகியவற்றால் இயற்றப்பெறும் அணுகுண்டுகளில் அணுச்சிதைவினால்தான் ஆற்றல் வெளிப்படுகின்றது.[24]

<u>6.தொடர்நிலை விளைவு:</u> யுரேனிய அணுவைப் பிளப்பது எளிதான செயல் அன்று. ஏனெனில் உட்கருவைப் பிணைத்துக் கொண்டிருக்கும் அற்புத விசை அளவற்றது; நம்முடைய கற்பனைக்கும் அப்பாற்பட்ட வலிவுடையது. இதைத்தவிர, உட்கருவினைச் சுற்றிச் ‘சக்கர வியூகங்கள்’’ போன்ற பாதுகாப்பு முறைகள் ஏழு வட்டங்களில் அமைந்துள்ளன.[25] எனவே யுரேனிய அணுவைப் பிளக்க வேண்டுமானால் இந்த ஏழு ‘சக்கர வியூகங்களையும்’’ கடந்து சென்று உட்கருவினை அடைதல் வேண்டும். அணுவின் உள்ளமைப்பில் பெரும்பகுதி குடுக்கைகோல் வெற்றிடமாக இருந்தகோதிலும் ரவைகளாகச் செல்லும் மின்னிகளில் பல தம் இலக்குகளைத் தாக்கிப் பல அணுக்களின் உட்கருக்களுடன் இணைகின்றன, அல்லது அவற்றைச் சிதைக்கின்றன.[26]

யுரேனிய அணுவினை நியூட்ரான் தாக்கும்போது அ∴து இரண்டாகப் பிரிந்து விடுகின்றது. அக்கருவிலிருந்து மூன்று நியூட்ரான்கள் வெளிப்படுகின்றன. அவை அருகிலுள்ள வேறு யுரேனிய அணுக்களைச் சிதைத்து அவற்றைப் பக்கு விடச் செய்கின்றன.

எனவே, ஒரு நியூட்ரானால் துவக்கப்படும் இவ்விளைவு தொடர்ந்து நிகழ்ந்து கோடிக்கணக்கான யுரேனிய அணுக்களைப் பிளந்து ஏராளமான ஆற்றலை வெளிப்படுத்தலாம். முதல் தடவையில் மூன்று நியூட்ரான்கள் வெளியாகி மூன்று யுரேனிய அணுக்களைத் தாக்கி ஒன்பது நியூட்ரான்களை வெளிப்படுத்துகின்றன. இவை ஒன்பது உட்கருக்களைத் தாக்கி இருபத்தேழு நியூட்ரான்களை வெளிப்படுத்தும். இவ்வாறு யு-235 அணுக்கள் உள்ளவரை நியூட்ரான்கள் வெளியேறிக் கருவினைத் தாக்கிக் கொண்டே போகும். இதுவே தொடர் நிலை விளைவு. இதனைப் படத்தாலும் விளக்குவர் பேராசிரியர்.[27]

7.அணுகுண்டு: உட்கருவில் உறைந்து கிடந்த ஆற்றலை வெளிப்படுத்திதான் அணுகுண்டு ஆக்கப்பெற்றது. முதன்முதலில் யு-235 என்ற பொருளைத்தான் அணுகுண்டில் பயன்படுத்தினர். 1945ஆம் ஆண்டு சூலை மாதம் 16ம் நாள் மெக்சிகோ பாலைவனத்தில் நடத்தப்பெற்ற சோதனையில் பயன்பட்ட அணுகுண்டும், அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ம் நாள் ஹிரோஷிமா என்ற நகரத்தின் மீது விசப் பெற்ற அணுகுண்டும் யு-235 என்ற பொருளால் ஆனது. மூன்று நாள் கழித்து நாகசாகி என்ற நகரத்தின் மீது வீசப்பெற்ற அணுகுண்டு புளுட்டோனியம் என்ற பொருளால் ஆனது. இந்த இரண்டு அணுகுண்டுகள்தாம் இரு நகரங்களையும் சின்னாபின்னப்படுத்தின.

8.கதிரியக்கம்: யுரேனிய அணு சிதைவுறுவதைப் ‘பக்குவிடுதல்’’ என்ற பெயரால் குறிப்பிடப் பெறுகின்றது. கதிரியக்கம் என்பது அணுக்கள்பட்டு விடுதலைப் போன்ற ஒரு நிகழ்ச்சி. குதிரியக்கத்திலும் உட்கரு சிதைவுறுதல் நடைபெறுகின்றது. இது மெதுவாக நடைபெறுகின்றது. இதனை முதன் முதலாக கண்டறிந்தவர் ஹென்றி பெக்குரல் என்பார். இங்கு சிதைந்தழிதல் பிற தலையீடு இன்றி தானாக நடைபெறுவது, நடைபெற்றுக் கொண்டே இருப்பது. 82க்கு மேல் அணு எண்களைக்க கொண்ட தனிமங்களில்தாம் இச்செயல் நடைபெறுகின்றது. யுரேனியம் ஆட்டம் கொடுக்கும் நிலையில் மூன்றுவிதக் கதிர்களாக வெளிவருகின்றன. அவை ஆல்பா-கதிர்கள், பீட்டா- கதிர்கள், காமா-கதிர்கள் என்று பெயரிட்டு வழங்குகின்றனர். ஆல்பா, பீட்டா, காமா என்பவை கிரேக்க நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகள். ஆல்பா-கதிர்கள் நேர் மின்னூட்டம் பெற்ற பரிதிய அணுக்கள். இதன் வேகம் விநாடி ஒன்றுக்கு சுமார் 12,000 மைல் வேகம் செல்லுகின்றது. பீட்டா கதிர்கள் எதிர் மின்னூட்டம் பெற்றவை. இவை விரைந்தோடும் மேஸான்களைக் கொண்டவை. இவை ஏறக்குறைய ஒளியின் வேகத்தைக் கொண்டவை. காமா-கதிர்களில்

மின்னிகள் இல்லை. இவை புதிர்க் கதிர்கள் போன்ற மின்காந்தக் கதிர் வீச்சுகளைக் கொண்டவை. குறைந்த அலை நீளங்களுடையவை. காமா-கதிர்கள் ஒளியணுக்கள் என்றும் வழங்கப்பெறுகின்றன. இவை உயிருக்கு உலைவைக்கக் கூடிய மறவிக் கதிர்களாகும்.[28] கதிர்களை அல்லது அணுப்பொறிகளை (Atomic Sparks) வெளிவிடும் பொருள்கள் 'கதிரியக்கப் பொருள்கள்' என்று வழங்கப்பெறும். ரேடியம் இயற்கையிலேயே கதிரியக்கம் பெற்ற (Radioactive) பொருளாகும்.

<u>9.அரைவாழ்வு:</u> கதிரியக்கப் பொருள்கள் ஒரு மாறாத வேகத்தில் சிதைந்தழிந்து கொண்டிருக்கும்; குறைவாக்கவும் முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுள்ள தனிமம் அது பாதியாவதற்கு எடுத்துக் கொள்ளும் காலத்தை அளவாகக் கொண்டு அத்தனிமத்தின் சிதைந்தழியும் வேகத்தை அளக்கலாம். அக்கால அளவு (Half-life) அத் தனிமத்தின் அரைவாழ்வு என்று வழங்கப்படும். அரை-வாழ்வு என்பது ஒரு குறிப்பிட்ட அளவு கதிரியக்கத் தனிமம் அந்த அளவில் பாதியாக மாறுவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம். எடுத்துக்காட்டாக ஒரு கிராம் ரேடியம் அரை கிராம் ரேடியமாகச் சிதைந்தழிவதற்கு 1600 ஆண்டுகளாகும். எனவே, ரேடியத்தின் அரைவாழ்வு 1600 ஆண்டுகள். இவ்வாறே யுரேனியத்தின் அரை-வாழ்வு 4000 மில்லியன் ஆண்டுகள். போலேனியத்தின் அரை-வாழ்வு 136 நாட்களாகும்.[29]

<u>3.ஐசோட்டோப்புகள்</u>

ஓவ்வொரு தனிமத்திலும் அடங்கியுள்ள வெவ்வேறு வகைப் பொருளுக்கும் சூட்டப்பட்ட பெயர் 'ஐசோடோப்பு'' (Isotope) என்பது. ஐசோடோப் என்பது ஐசோ (Iso), டோபாஸ் (topas) என்ற இரண்டு கிரேக்க சொற்கள் அடங்கிய ஒரு கூட்டுச்சொல்லாகும். ஐசோ என்பதற்கு 'ஒரே'' (place) என்பது பொருள். டோபாஸ் என்பது இடம் என்ற பொருளைத் தருவது. பிரெடெரிக் சாடி என்ற ஆங்கில அறிஞர்தான் முதன்முதலாக இப்பெயர் சூட்டினார்.[30]

கதிரியக்க ஐசோடோப்புகளில் இருவகை உண்டு. அவற்றுள் ஒருவகை நிலைத்த தன்மையுடையவை. இவற்றின் ஒரு பகுதி சிதைந்தழிந்து நாளடைவில் நிலைத்த தன்மையைப் பெறுகின்றது. மற்றொரு வகை நிலையற்றவை. இவையே கதிரியக்க ஐசோடோப்புகள். இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட ஐசோடோப்புகள் கண்டறியப்பெற்றுள்ளன. அணு ஆராய்ச்சி என்ற நீண்டதோர் பாதையில் செயற்கைமுறை

ஐசோடோப்புகளின் உற்பத்தி பெரிய மைல் கற்களில் ஒன்றாக அமைகின்றது. இந்த ஐசோடோப்புகள் உயிரியல் ஆராய்ச்சி, மருத்துவ இயல், வேளாண்மையியல், தொழிற்சாலை முதலிய பல துறைகளிலும் பயன்படுத்தும் திறமையான முறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

<u>**1.உயிரியல் ஆராய்ச்சி**</u>: கதிர் வீச்சால் எவ்வாறு உயிரணுக்கள் பாதிக்கப் பெறுகின்றன, அது இழையங்களை எவ்வாறு பாதிக்கின்றன, உயிருள்ள பொருள்கள் கதிர் வீச்சால் எங்ஙனம் கேடு அடைகின்றன, பிசிதப் பொருள்கள், நுரை புளியங்கள் எவ்வாறு பாதிக்கப் பெறுகின்றன, கதிர்வீச்சினால் குடிவழிப்பண்புகள் எவ்வாறு பாதிக்கப்பெறுகின்றன போன்றவற்றை அறிந்து பொள்வதற்கும் கதிரியக்க ஐசோடோப்புகள் பயன்படுகின்றன.[31]

<u>**2.மருத்துவத் துறையில்**</u>: நவீன மருத்துவத் துறையில் கதிரியக்க ஐசோடோப்புகள் பயன்படுத்தப் பெறுகின்றன. அரை-வாழ்வு குறைவாகவுள்ள கதிரியக்க ஓரிடத்தான்கள் இங்கு பெரிதும் பயன்படுகின்றன. இன்று புற்று நோய் சிகிச்சையில் கதிரியக்கச் சோடியம், கோபால்ட்-60, ரேடியம்-137 போன்ற பொருள்கள் பயன்படுகின்றன. கதிரியக்கச் சோடியத்தைப் புற்று நோய் உள்ள இடத்தில் வைத்து விட்டால் அது விரைவாகப் பீட்டா-கதிர்களை வெளியிட்டுப் புற்றுநோயை அழிக்கின்றது. புற்றை விளைவிக்கும் கிருமிகள் மடிந்து விடுகின்றன. இது விரைவில் தன் கதிரியக்கப் பண்பை இழந்து விடுவதால், இச்சிகிச்சை ரேடியத்தைப் போலன்றி வரம்பு கடந்து சென்று அபாயகரமான கோளாறுகளை விளைவிக்க வழியில்லை.[32] கோபால்ட்-60ஐக் கையாளும் முறை நன்கு விளக்கப் பெறுகின்றது.[33] தொண்டைக் கழலை நோயில் அயோடின்-131 பயன்படுகின்றது.[34] கதிரியக்கப் பாஸ்வரம்-32 பாலிசைத்தீமியா, லூக்கிமியா என்ற நோய்களில் சிகிச்சையில் நன்கு பயன்படுகின்றது.[35] இது அறுவை சிகிச்சையில் குறையறி கருவியாகவும் பயன்படுகின்றது. நோய்களைத் தீர்ப்பதற்கு கதிரியக்கப் பொருள்களை பயன்படுத்தும் முறைகள் பல்கிப் பெருகிக் கொண்டு வருகின்றன.

<u>**3. வேளாண்மைத் தொழில்**</u>: கதிரியக்க ஓரிடத்தான்கள் வேளாண்மைத் தொழிலில் பயன்படும் முறைகள் எண்ணிலடங்கா. **அ)** <u>**உரமிடுதலில்**</u>: முதிர்ந்த தாவரங்களிலுள்ள பாஸ்வரச் சத்து மண்ணில் இயற்கையில் பதிந்து கிடக்கும் பாஸ்பேட் உப்பிலிருந்து வந்ததா? அன்றி உழவர்கள் இடும் செயற்கை உரத்திலிருந்து வந்ததா என்பது

அறுதியிடப்பெற்றது. கதிரியக்க ஐசோடோப்புகள் சத்துப் பொருள்கள் தாவரங்களுக்கு மண்ணின் மூலமும் அங்கிருந்து வேர்களுக்கும் அவற்றிலிருந்து தாவரங்களுக்கும் எந்த அளவில் செல்லுகின்றன, எவ்வளவு வேகத்தில் செல்லுகின்றன என்பதை வழி-துலக்கி அறியப் பயன்படுகின்றன. இன்னும் இவை தாவரங்களின் வளர்ச்சிப் பருவங்களில் எப்பருவத்தில் உரம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்று தீர்மானிக்கவும், தாவரங்களுக்கு முழு நன்மை பயக்க வேண்டுமானால் உரத்தை எங்கு எவ்வாறு இட வேண்டும் என்றும், நாட்டின் பல்வேறுபட்ட மண்ணிற்கேற்றவாறு எவ்வகை உரங்கள் நன்மை பயக்கின்றன என்பதை நிலை நிறுத்தவும், இன்னும் உரமிடுதலில் இன்னோரன்ன நடைமுறைப் பிரச்சனைகளைத் தீர்மானிக்கவும் துணை செய்கின்றன. இதனால் உரமிடுதலில் ஏற்படும் வீண் செலவு குறைக்கப்பட்டது.[36] **ஆ) <u>ஒளிச்சேர்க்கை ஆய்வில்</u>**: ஐசோடோப்புகள் குறிப்பாக கதிரியக்கக் கரியமிலவாயு பயன்படுகின்றது. இவ்வாறு தாவரங்கள் தயாரிக்கும் கதிரியக்கப் பொருள்களைப் பிரித்தெடுத்து, தூய்மைப்படுத்தி வழி-துலக்கிளாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. பெரும்பாலும் இவை மருத்துவத்துறையிலும் சத்துணவு ஆராய்ச்சியில் பயன்படுகின்றன.[37] **இ) <u>கிருமி நாசமருந்துச் செலவு குறைதலில்</u>**: கதிரியக்க ஐசோடோப்புகள் பெரும் பங்கு பெறுகின்றன. (எ-டு.) துரு நோய் என்ற ஒரு வகைத் தவார நோயினால் பாதிக்கப்பெறாத புதுவகை ஓட்சைப் படைத்தல். சடுதி மாற்றத்தால் தாவரங்களின் விளைச்சலை அதிகப்படுத்த கதிரியக்க ஐசோடோப்புகள் பயன்படுகின்றன. ‘காமாநில ஏற்பாடு’’ இதற்குரிய ஒரு வழியாகும்.[38] **ஈ) தாவர நோய்கள்**: பைங்கூழ் வளர்ச்சியில் தடையாக இருக்கும் களைகளை அழிக்கவும், பூச்சிகளால் நேரிடும் அழிவு பற்றி அறியவும் கதிரியக்க ஓரிடத்தான்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஈக்கள், கொசுக்கள், வெட்டுக்கிளிகள் போன்ற பூச்சிகளைக் கதிரியமுடையனவாகச் செய்து அவற்றின் நடவடிக்கைகளை ஆராயவும் இவை பயன்படுகின்றன.[39]

<u>4.கால்நடைப்பண்ணை</u>: பிராணிகளின்மீது கதிரியக்க ஐசோடோப்புகளைச் செலுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். (எ-டு.) கோழி முட்டைகளின் உற்பத்திப் பெருக்கும், பன்றிகளையும் கோழிகளையும் கொழுக்க வைக்கும் முறைகள்.[40]

<u>5.இலவலேசத் தணிமங்கள்</u>: நுண்சத்துப் பொருள்கள் தாவரங்களுக்கும் பிராணிகட்கும் ஊட்டம் அளிக்கும் தனிமங்கள். அயம், தாமிரம்,

மாங்கனீசு, போரன், மாலிப்டினம், துத்தநாகம் ஆகியவை இவை. (எ-டு.) துத்தநாகம் சீமைத் தக்காளிச் செடிகட்கு முக்கியமானது.[41]

<u>6.தொழில்துறையில்</u>: **அ) அளவிடுதல்**: அளவு சரியாக இருப்பதற்கு பொருள்களைப் பொட்டணங்களிலும், டப்பாக்களிலும் அடைக்கும் செயலில் கதிரியக்க ஐசோடோப்புகளைப் பயன்படுத்தி அவை சரியான அளவுகளில் அடைக்கப் பெற்றுள்ளனவா என்று சோதித்துச் சரிபார்க்கப் பெறுகின்றன. **ஆ) அடையாளமிடுதல்**: பெட்ரோலியத் தொழிற்சாலைகளில் நூற்றுக்கணக்கான மைல் நீளமுள்ள குழல்களின் வழியாக பல்வேறு எண்ணெய் வகைகளை அனுப்புவதில் கதிரியக்க ஐசோடோப்புகள் வழிதுலக்கிகளாகப் பயன்படுகின்றன.[42] புவியின் அடியிலுள்ள கனிப் பொருள்களைக் கண்டறிவதில் இவை பயன்படுத்துப்பெறுகின்றன. இவை இரண்டுக்கும் வரைபடங்களாலும் விளக்கம் பெறுகின்றன. **இ) தேய்மானச் சோதனைகளில்** இவை அற்புதமாகப் பயன்படுகின்றன.[43]

<u>7.தொல்பொருட்கலையில்</u>: கதிரியக்கக் கரியின் (C-14) அரைவாழ்வு 5,600 ஆண்டுகள். 10 கதிரியக்க கரியணுக்களிலிருந்து தொடங்குவோம். 5600 ஆண்டுகட்குப் பிறகு அவற்றில் 50 அணுக்களே காணப்பெறும். ஏனையவை பிரிந்தழிந்துவிடும். அடுத்த 5600 ஆண்டுகளில் எஞ்சியுள்ள அணுக்களில் பாதி - அதாவது 25 அணுக்கள் சிதைந்து பிரிந்தழியும். இப்பண்புகளைக் கொண்டு தொல்பொருட்கலையில் பல்பொருள்களின் கால வரையறைகளை அறுதியிட்டுள்ளனர். C-14 பண்டைக்கால வரலாற்றின் திறவு கோலாகப் பயன்படுகின்றது.[44]

<u>எதிர்காலத்தில்</u>: எதிர்காலத்தில் அணுவாற்றல் மின்னாற்றல் உற்பத்தி, உணவுப்பொருள் பாதுகாப்பு, செய்கை முறையில் உணவு உற்பத்தி, மருத்துவம், தொழில்முறை, போக்குவரவு, குடியேற்ற மாறுதல்கள், தட்ப-வெட்பநிலை, தொல்பொருட்கலை போன்ற துறைகளில் பயன்படப்போகும் அற்புத விளைவுகள் முற்கூறப் பெறுகின்றன.[45]

<u>4.விண்வெளிப் பயணம்</u>

விண்வெளிப் பயணத்தை விளக்கும் பாங்கில் பேராசிரியர் ரெட்டியார் எழுதி வெளியிட்ட நூல்கள் இராக்கெட்டுகள் (1964), அம்புலிப்பயணம் (1973), தொலை உலகச் செலவு (1978) ஆகிய மூன்று நூல்களாகும். இவற்றைத் தவிர பணம், ஞாயிறுக் குடும்பம் என்ற கட்டுரைகளையும்[46] 'தமிழ் இலக்கியங்களில் தொலைகாட்சி'[47] என்ற கட்டுரைகளையும்

வெளியிட்டுள்ளார். இவற்றிலுள்ள சில இன்றியமையாத கருத்துகள் ஆய்வாளரால் பட்டியலிட்டு நிரலே காட்டப்பெறுகின்றன.

1.மும்மூர்த்திகள்: சூரிய குடும்பத்தில் உடங்கியுள்ளவை 10 கோள்கள்: அவை சூரியன், புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளோட்டோ என்பவையாகும். இந்த வரிசைகளில்தாம் இவை அமைந்துள்ளன. ஆனால் நம் கண்ணுக்குத் தெரிபவை பூமி, சூரியன், சந்திரன் என்ற மூன்றுமேயாதலால் 'மும்மூர்த்திகள்'' என்று குறிப்பிடப் பெறுகின்றன.[48]

2.வளிமண்டலம்: ஒரு போர்வையைப்போல் பூமியைச் சூழ்ந்துள்ள வளிமண்டலம் புரியும் நன்மைகளாக ஆறினைக் குறிப்பிடுகின்றார். அவை: அ) கதிரவன் காலும் புறஊதாக் கதிர்களைப் பூமியில் அதிக அளவு படியாதவாறு தடுத்து நிறுத்துதல், ஆ) விண்கற்கள் பூமியில் விழாதவாறு தடுத்தல் இ) அண்டக்கதிர்கள் பூமியில் அதிகம் விழாதவாறு தடுத்தல் ஈ) சூரிய வெப்பத்தால் பூமியினின்று மேலெழும் நீராவியை மழையாகப் பொழியச் செய்தல், உ) தட்ப வெப்ப நிலையைச் சமப்படுத்தல், ஊ) இரவு நேரத்தில் பூமி தன் வெப்பத்தை அதிகம் இழக்காதிருக்கச் செய்தல் ஆகியவையாகும்.[49]

3.இராக்கெட்டு: விண்வெளியினை ஊடுருவிச் செல்ல ஊர்தியாகப் பயன்படுவது இராக்கெட்டு. சீறுவானம் செய்யும் முறையை அடிப்படையாக வைத்துப் பெரிய அளவில் செய்யப் பெறுவது இது. இதன் இயக்கம் தெளிவாக விளக்கப் பெறுகிறது படங்களின் துணைகொண்டு.

4.ஒலித்தடை: கடல் மட்டத்தில் மணிக்குச் சற்றேறக்குறைய 765 மைல் வேகத்தில் ஒலி செல்லுகின்றது. அதைவிட வேகமாகச் செல்லக்கூடிய ஊர்தியினை மீஒலி வேகமுடைய (Supersonic) என்றும், அதைவிடக் குறைந்த வேகமுடைய ஊர்தியினை ஒலிக்கும் உட்பட்ட வேகமுடையது (Subsonic) என்றும் வழங்குவர். ஒரு விமானம் ஒலியின் வேகத்தை அடையும்போது அது திடீரென்று குலுங்கி துள்ளிக் குதிக்கத் தொடங்குகின்றது. அதாவது ஒரு நெருக்கமமைடந்துள்ள காற்றுப் பைகளை (Airpockets) தாக்குவது போன்ற அதிர்ச்சி ஏற்படுகின்றது. சில சமயம் இத்தாக்குதல் மிகக் கடுமையாக ஏற்பட்டு விமானத்தின் இறக்கைகள் பிய்த்துக் கொண்டு போவதுண்டு. இதற்கு காரணம் விமானம் ஒலித்தடையை (sound barrier) எட்டி விடுகின்றது. ஒலியின் வேகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதால் இப் பெயர்

பெறுகின்றது. மீஒலி வேக விமானங்கள் (Supersonic Planes) கொண்டு இத்தடை சமாளிக்கப் பெறுகின்றது.[51]

<u>5.வெப்பத்தடை</u>: விமானத்தின் வேகம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகும்பொழுது வெப்பத்தடை (Heat barrier) என்ற பிரச்சனை எழுகின்றது. இதனை வெப்பத் தாக்குதல் என வழங்குகின்றனர். இராக்கெட்டு விமானம் இரண்டு அடுக்குகளுடன் கூடிய டைட்டேனியம் என்ற உலோகங்களால் கட்டப்பெற்றும் விமானிகள் இருக்கும் அறைகள் காப்புறை அமைக்கப்பெற்று குளிர்சாதன வசதிகள் செய்யப்பெற்றும் இதனைச் சமாளிக்கின்றனர்.

<u>6.ஈர்ப்பு ஆற்றல்</u>: பொருள்களைப் பூமி தன் மையத்தை நோக்கிக் கவரும் ஆற்றலே ஈர்பபு ஆற்றல். இதுவும் இராக்கெட்டு இயங்குவதில் தடையை ஏற்படுத்துகின்றது. பல நிலை இராக்கெட்டுகளை (multi-staged) அமைத்து இத்தடையை எளிதில் வென்று விடலாம்.[53] கிட்டத்தட்ட மணிக்கு 25,000 மைல் (வினாடிக்கு ஏழு மைல்) வேகத்தில் இராக்கெட்டு செல்லுமாறு அமைத்து கவர்ச்சி ஆற்றலைச் சமாளிக்கலாம்.[54]

<u>7.திரிசங்கு சுவர்க்கம்</u>: பூமியின் கவர்ச்சி ஆற்றலும் அம்புலியின் கவர்ச்சி ஆற்றலும் இல்லாத பகுதியை (Neutral Region) திரிசங்கு சுவர்க்கம் என்று பெயரிட்டு வழங்குவர்.[55]

<u>8.மூன்று திட்டங்கள்</u>: அமெரிக்கர் அம்புலியை அடையத் திட்டங்கள் வகுத்து அவற்றை வெற்றியுடன் செயல்படத்திய திட்டங்கள் மூன்று.[56] அ) **<u>மெர்க்குரி திட்டம்</u>**: ஒரு கூண்டுக்குள் மனிதனை ஏற்றி அக்கூண்டினை விண்வெளிக்கு அனுப்பி அதனைப் பலமுறை பூமியைச் சுற்றி வரச் செய்து அதன் பின்னர் அதனைப் பூமிக்கு மீட்பதே இத்திடத்தின் நோக்கமாகும். நான்கு முறை இவ்வாறு விண்வெளி வீர்களை அனுப்பி அமெரிக்கா வெற்றி கண்டது. ஆ) **<u>ஜெமினித் திட்டம்</u>**: இத்திட்டதில் இரண்டு வீரர்கள் தங்குவதற்கேற்ப விண்கலம் அமைக்கப் பெற்றது. கூண்டில் இரண்டு வீரர்களை இருக்கச் செய்து அது ஓர் இராக்கெட்டு மூலம் விண்வெளிக்கு அனுப்பப் பெற்றது. இந்த விண்கலம் வாரக்கணக்காகப் பூமியைப் பன்முறை வலம் வந்தது. இத்திட்டமும் வெற்றியுடன் செயற்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பெற்ற பன்னிரண்டு விண்வெளிச் செலவுகளும் வெற்றியுடன் நிறைவேறின. அம்புலியில் இறங்குவதற்குத் தேவையான எல்லாத் துறை நுட்பச் சோதனைகளிலும் வெற்றி கண்டனர். விண்வெளியில் முன்னேற்பாட்டின்படி குறிப்பிட்ட இடத்தில்

விண்வெளிவீரர்கள் சந்தித்தல், இரண்டு விண்வெளிக்கலங்களை இணைத்தல், மனிதன் நீண்டகாலம் தொடர்ந்து விண்வெளியில் இருத்தல் - இவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பெற்ற விண்வெளி செலவுகளால் நிறைவேறின. மேலும், ஒரு சுற்றுவழியினின்றும் பிரிதொரு சுற்று வழிக்குச் செல்லல், விண்வெளிக் கலத்திற்கு வெளியில் ஒருவிதக் கட்டுப்பாட்டின்கீழ் விண்வெளியில் நடத்தல், சுற்றுவழியில் வேறொரு விண்கலத்தின் இருப்பிடத்தை அறிந்து அதனைத் தொடர்ந்து சென்று அதனுடன் இணைதல், அம்புலிக்குச் சென்று திரும்புவதற்கு வேண்டிய கால அளவில் இரண்டு மடங்கு கால அளவிற்கு நீண்டகாலம் தொடர்ந்து விண்வெளியில் தங்குதலைச் சமாளித்தல் ஆகியவை இச் செலவுகளால் தெளிவாயின. முதலிரண்டுச் செலவுகள் ஆளில்லாத விண்வெளிச் செலவுகளாகும். அடுத்து மேற்கொள்ளப்பட்டவை ஆளுள்ள பயணங்களாகும்.[57] இ) **அப்போலோ திட்டம்** : இத்திட்டத்தின் கீழ் பதினேழு முறை விண்கலங்கள் செலுத்தப் பெற்றன. அப்போலோ-1, அப்போலோ-2, அப்போலோ-3 இவை ஆளில்லாத கலங்கள். இவை விண்வெளிக்கு அனுப்பப்படுகின்றன. அடுத்து அனுப்பப்பெற்றவை ஆளுள்ள கலங்கள். அப்போலோ-4 ஆளுள்ள பயணம். இது எதிர்பாராத தீ விபத்தின் காரணமாக எரிந்து சாம்பலாயிற்று.[58] அப்போலோ-5 ஆளில்லாத பயணமே. 1969இல் அப்போலோ தாய்க்கலத்தினின்று இரண்டு விண்வெளி வீரர்கள் முதன் முதலாக அம்புலியில் இறங்கப்போகும் திட்டத்தின்படி மேற்கொள்ள இருக்கும் அம்புலி ஊர்தியில் செய்யப்பெற்ற முதல் சோதனை இப்பயணத்தில் செய்யப்பெற்றது. அப்போலோ-6-விண்வெளிப் பயணமும் ஆளில்லாத பயணமே. கட்டளைப் பகுதியும், பணிப் பகுதியும் கொண்ட இணைப்பு. 120 கி.மீ. உயரத்தில் அம்புலியினின்றும் திரும்புங்கால் எந்த வேகத்தில் வருமோ அதே வேகத்தில் காற்று மண்டலத்தில் நுழைந்தது தவிர, அந்த விண்வெளிக்கலம் ஏற்கனவே குறிப்பிடப் பெற்றிருந்த இலக்கினின்றும் 80 கி.மீ தொலைவில் இறங்கியது.

அப்போலோ-7 பயணம் அப்போலோ திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பெற்ற ஆளுள்ள பயணங்களில் முதல்முதலாக மேற்கொள்ளப்பெற்ற ஆளுள்ள பயணமாகும். இது கிட்டத்தட்ட பதினொரு நாட்கள் நீடித்தது. குறிப்பிட்ட இடத்தில் இறங்கியது. இப்பயணத்தில் முதன் முதலாக விண்வெளியில் கண்ட காட்சிகள் தொலைக்காட்சிப் படங்களாக அனுப்பப் பெற்றன. அப்போலோ-8 பயணத்தில் மனிதர்கள் அம்புலி அருகில் 112 கி.மீ. தொலைவில் சென்ற முதற் பயணம் ஆகும். பத்து முறை அம்புலியை வலம் வந்த பயணம் இது.[59] இதன் எடை 6200 டன். சந்திரனில் இறங்கும் சோதனைகள் யாவும்

காற்று மண்டலத்திலே செய்யப் பெற்றது.[60-] அப்போலோ-10-இன் நோக்கம் திங்களுக்கு 15.3 கி.மீ. தொலைவில் திங்களைச் சுற்றி இரண்டரை நாட்கள் வட்டமிட்டு பாதுகாப்பாக இறங்கும் இடத்தைக் கண்டறிவதாகும்.[61] அப்போலோ-11 பயணம் எட்டு நாள் பயணம். முதன் முதலாக மனிதன் சந்திரனில் இறங்கித் திரும்பிய பயணம். பேராசிரியர் இதனை அற்புதமாக வருணித்து விளக்கியுள்ளார். இதற்குப் பிறகு மேற்சொல்லப்பட்ட ஆறு பயணங்களில் பல செய்திகள் திரட்டப் பெற்றன.

9. அம்புலிப் பயணம் வெற்றியுடன் நிறைவேறிய பிறகு சூரிய குடும்பத்தில் உள்ள வேறு எட்டு கோள்களுக்கும் சென்று வரவேண்டும் என்ற அறிவுத் தினவு மனிதனுக்கு ஏற்பட்டது. இதுபற்றிய முயற்சிகள் விளக்கப் பெறுகின்றன.[62] விண்வெளியில் நிரந்தரமாகச் சுழலும் நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டான் மனிதன்.

10. விண்வெளியில் நேரிடக் கூடிய பேரிடர்கள் நன்கு விளக்கப்பெறுகின்றன. விண்வெளிப் பயணத்தில் இவை நினைவிலிருத்த வேண்டியவை.[63] விண்வெளி அநுபவங்கள், விண்வெளியில் உயிர்களின் நிலை முதலிய பல செய்திகள் விளக்கப் பெறுகின்றன.[64] விண்வெளி நிலையங்கள் அமைக்கும் திட்டம்பற்றிய சிந்தனைகள் முகிழ்த்தன. இவை பற்றிய நன்மைகள் எட்டு தலைப்பில் விளக்கப் பெறுகின்றன.[65]

இதழ்களின் பங்கு: அறிவியல் தமிழ் மேம்பாடு அடைவதில் தமிழ் இதழ்களின் பங்கு கணிசமான உளவில் உள்ளது. பல்லாண்டுகளாக ‘கலைக்கதிர்’’ என்ற திங்கள் இதழ் ஆற்றிவரும் திருப்பணி பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கது. சில ஆண்டுகள் வெளிவந்த ‘அணுக்கதிர்’’ பல்லாண்டுகட்கு முன்னரே நின்றது. இன்று தினமணி என்ற நாளேடு அறிவியல் கட்டுரைகளை வெளியிடுவதில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. இதைப்போலவே ‘ஓம் சக்தி’, ‘மஞ்சரி’, ‘விஞ்ஞானச் சுடர்’ போன்ற திங்கள் ஏடுகள் அறிவியல் தமிழை மிகுந்த அக்கறையுடன் பரப்பி வருகின்றன. வேளாண்மை குறித்து ‘உழவர் உலகம்’, ‘வளரும் வேளாண்மை’ என்ற தனி இதழ்களும் பொறியியல்பற்றிய தனி இதழ்கள் சிலவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சென்னை அண்ணா பல்கலைக் கழகம் வெளியிடும் ‘களஞ்சியம்’, தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ‘அறிவியல் உலகம்’ போன்றவை அறிவியல் சார்ந்து வெளிவரும் தமிழ் இதழ்கள் ஆகும். இவை தவிர, ஆங்காங்கே மக்கள் நடுவில்

அறிவியல் கருத்துகள் பரவ பல கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்களுக்கு அறிவியல் செய்திகள் சென்று சேரவும் அவர்களின் ஐயப்பாடுகள் நீங்கவும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளபெறுகின்றன. வானொலியின் பங்கு இம்முயற்சியில் குறிப்பிடப்பெற வேண்டிய ஒன்று. உரைச் சித்திரமாக, சிறப்புப் போட்டியாக, கலந்துரையாடல் நிகழ்வாக, வினா-விடை நிகழ்ச்சியாகப் பல அறிவியல் நிகழ்ச்சிகள் தமிழில் ஒளிபரப்பப் பெறுகின்றன. இதைப்போலவே தொலைக்காட்சியும் நல்ல பல நிகழ்ச்சிகளை உருவாக்கித் தருகின்றன.

சுவையூட்டி கருத்துகளை விளக்குந்திறன்: எடுத்துக்காட்டுகள், இலக்கிய நிகழ்ச்சிகள், புராணவரலாறுகள் முதலியவற்றின் துணைகொண்டு பேராசிரியர் ரெட்டியார் அறிவியல் கருத்துகளை விளக்குவதால் பாமரரும் அறிவியல் தமிழில் ஒரு தனிப்பட்ட சுவை கண்டு மகிழ்வர்.

(1)வானொலி,தொலைக்காட்சி பற்றியவை: வானொலி தொலைக்காட்சிச் சாதனங்களை நமக்கு அறிமுகம் செய்து வைக்கும்போது காவியப்போக்கில் எழுதப்பெற் ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’’ என்ற பாவேந்தரின் கவிதையை எடுத்துக்கொண்டு விளக்குவார். சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குப்பன், வள்ளி என்ற இரண்டு காதலர்கள் சந்திக்கின்றனர். இந்த மலையில் இரண்டு மூலிகைகள் இருப்பதாக கூறுகின்றனர். கவிஞர் அவற்றின் மகிமையைக் குப்பன்,

ஒன்றைத்தின் றால்இவ் வுலகமக்கள் பேசுவது
நன்றாகக் கேட்கும்மற் றொன்றைவா யில்போட்டால்
மண்ணுலகக் காட்சிஎலாம் மாற்றிங் கிருந்தபடி
கண்ணுக் கெதிரிலே காணலாம்[66]

என்று வள்ளிக்குக் கூறுகின்றான். ‘இந்தப் பகுதியைப் படிக்கும்போது நமக்கு வானொலியும் தொலைக்காட்சியும் நினைவிற்கு வருகின்றன. ஒரு மூலிகை வானொலியையும் மற்றொரு மூலிகை தொலைக்காட்சியையும் குறிப்பதாகக் கொள்ளலாம்’[67] என்கிறார்.

2. ‘வானொலியும் தொலைக்காட்சியும் மின்னியல் சகோதரிகள். அவர்களில் ஒருவரை ‘செவிமடுத்தியார்’ (Ms.Audible) என்றும் மற்றொருவரைக் ‘‘கண்ணம்மையார்’ (Ms. Visible) என்றும் வழங்குவோம். மானிடச் சகோதரிகளைப்போலவே அவர்களிடமும் பொதுவான பண்புக் கூறுகள் அமைந்துள்ளன. ஆனால், அவர்களது நடத்தையில்தான் பேரளவில் வேற்றுமை உள்ளது’’[68] என்று மேலும் விளக்குவர்.

3. ‘வானொலி நிலையத்திலுள்ள நமது உள்ளங்கை அகலமுலள்ள ஒலிவாங்கியின் வாய் மண்ணைத் தின்ற கண்ணன் வாய்போல் உலகனைத்தையும் உண்டு உமிழும் வாயாக அமைந்துள்ளது. அங்ஙனமே நமது கண்ணைவிட மிகச் சிறியதாகவுள்ள ஒளி-மின்சாரசக்கலம் என்னும் மாயக் கண் எல்லையற்ற இந்த அகிலம் முழுவதையும் ஊடுருவிப் பார்க்க வல்லதாக அமைந்துள்ளது’[69] என்று மேலும் விளக்குவார்.

4. உலகிலுள்ள பொருள்கள் யாவும் அணுக்களால் அமைந்திருக்கின்றன என்பதையும் அந்த அணுக்கள் எல்லாவற்றிலும் மின்னணுக்கள் பொருந்தியிருக்கின்றன என்பதையும் நாம் அறிவோம். தக்கமுறைகளைக் கையாண்டால் பொருள்களிலிருந்து சில மின்னணுக்களைப் பெயர்த்து எடுத்து விடலாம். தக்க பொருள்களைக் கொண்டு தக்கவாறு ஒன்றோடொன்று அழுத்தித் தேய்ப்பது ஒரு முறை. உரித்த மாதுளம்பழத்தின் உட்புறத்தை விரலால் அழுத்தித் தடவி விதைளை உரித்து எடுப்பது போலவே பொருள்களிலிருந்து தேய்ப்பினால் மின்னணுக்களைத் தேய்த்து எடுத்து விடலாம்.[70]

5. கம்பளித் துணியால் அரக்குக்கோளைத் தேய்க்கின்றோம். கம்பளியில் இருந்து சில மின்னணுக்கள் பெயர்ந்து அரக்குக் கோலில் வந்து படிகின்றன. ஆதலால் அரக்குக்கோல் எதிர்-மின்னூட்டத்தைப் பெறுகின்றது. கம்பளியும் அங்ஙனமே நேர்-மின்னூட்டத்தை அடைகிறது. அரக்குக் கோலின் அருகில் ஓர் அலுமினியத் தகடு பொதிந்த தக்கையைக் கொணர்ந்தால் அரக்குக் கோலிலிருந்து சில மின்னணுக்கள் தக்கையில் பாய்ந்து ஏறும். இப்பொழுது அரக்குக் கோலில் முன்னிருந்த அளவு எதிர் மின்னணுக்கள் இராமல் குறைந்து போகும். இக்கருத்தினை ஓர் அழகான அன்றாடம் நிகழும் எடுத்துக்காட்டால் விளக்குவர் பேராசிரியர்.

திருப்பதி இருப்பூர்தி நிலையத்தில் புரட்டாசியில் நடைபெறும் திருவிழாவுக்கு மக்கள் ஏராளமாக வந்து திரும்புகின்றனர். அவர்கள் இருப்பூர்தி நிலையத்தில் நிற்கும் ஊர்திப் பெட்டியில் சௌகர்யமாக இடம் கிடைக்காமல் அளவுக்கு மீறி ஏறி நெருக்கி உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். அதிகக் கட்டத்தைக் கண்ட இருப்பூர்தி அதிகாரிகள் காலிப்பெட்டி ஒன்றை வண்டித் தொடரோடு சேர்க்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். என்ன நேரிடும்? நெருக்கம் அதிகமாக இருந்த பெட்டிகளில் கதவோரங்களில் உட்கார்ந்திருக்கும் மக்கள் அவசர அவசரமாகக் கீழிறங்கி ஓடிப்போய் காலியாக இருக்கும் பெட்டியில் ஏறிக்கொள்வர். நெருக்கம் மிக்க பெட்டிகிளல் நெருக்கம்

குறையும். இப்பொழுது ஆளின்றிக் காலியாக இருந்த பெட்டியில் ஆட்கள் குறையும்.

மேற்கூறிய செயலைப்போலவே அரக்குக்கோலிலும் நடைபெறுகின்றது. அரக்குக்கோலில் மின்னணுக்கள் கூட்டமாகக் கூடியிருக்கின்றன. இதன் அருகில் கொண்டுவரப்பெற்ற தக்கையில் சமயம் கிடைத்ததென்று புதுப்பெட்டியில் மக்கள் பாய்ந்து ஏறுவதுபோல் மின்னணுக்கள் பாய்கின்றன. அரக்குக்கோலில் எதிர் மின்னோட்டம் குறைகின்றது. நடுநிலைமையுடனிருந்த தக்கை எதிர் மின்னூட்டம் உடையதாகின்றது.[71]

6. வானவெளியில் வானி (Ether) என்ற ஒரு பொருள் நிறைந்திருக்கின்றது என்று அறிவியலறிஞர்கள் கூறுவர். இதனை விளக்கும் பேராசிரியர் "பரம்பொருளாகிய ஆண்டவனை வருணிப்பது போலவே அறிவியலறிஞர்கள் வானியை வருணிக்கின்றனர். 'வானி எங்கும் இருப்பது.' எல்லா பொருள்களிலும் புகுந்து பரவி இருப்பது. இந்த அகிலம் முழுவதிலும் பரவி விரிந்து நிற்பது. மிகமிக நுண்ணிய அணுவின் அமைப்பிலுள்ள இடைவெளிகளையும் ஊடுருவி நிறைந்திருப்பது" என்று வானியின் தன்மையை அவர்கள் கூறுவர். ஆயினும், சில சமயம் அவர்கள் அதன் தன்மையை அறியாது மயங்கவும் செய்கின்றனர். முழுவதும் நிரம்பப் பெறாதவர்கள் ஆண்டவன் தன்மையை ஐயுறுவதைப் போல் அவர்களும் ஐயுற்றுத் திண்டாடுகின்றனர் என்று விளக்குவர்.[72]

7. 'மைக்ரோபோன் என்ற ஆங்கில பெயர்தான் மைக் என்று சுருங்கி வழங்குகின்றது. கிருஷ்ணமூர்த்தி என்ற பெயர் கிட்டு என்று வழங்குவது போல' என்று சுவையாக விளக்குவர்.[73]

8. ஞானிகள் உலகிலுள்ள அனைத்தையும் மறந்து ஆண்டவனைக் குறித்துச் சிந்தனை செய்து மனஉறுதியுடன் அவனோடு ஈடுபட்டிருப்பர். இங்ஙனமே 'நம்முடைய வானொலிப் பெட்டியும் அந்த ஞானியின் நிலையில் உள்ளது. நாம் குறிப்பிட்ட நிலையத்திலுள்ள நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டுமென்று விரும்பி பெட்டியின் கைப்பிடிக் குமிழ்களை இயக்கித் தக்கவாறு சுருதி செய்தால் (Tuning) நம்முடைய பெட்டி அந்த நிலையத்திலிருந்து வரும் அலைகளை மட்டிலுமே ஏற்கும். சுருதி செய்யப்பெற்ற கருவிபிற நிலையங்களிலிருந்து வரும் அலைகளை ஏற்காது. மனஊறுதியுடன் இருக்கும் ஞானிக்கு இறைவனுடன் அநுபவம் ஏற்படுவதுபோலப் பெட்டியும் ஒரு குறிப்பிட்ட நிலையத்தின் நிகழ்ச்சிகளை நமக்குத் தருகின்றன" என்று விளக்குவர்.

(2) அணுவியல்பற்றியவை

1. 'கதிரவனே ஆற்றலின் மூலம்' என்பது இன்றைய அறிவியல் உண்மை. ஆற்றல் முழுவதும் அணுவில் தேங்கிக் கிடக்கின்றது என்பது நவீன அறிவியல் மெய்ப்பித்த உண்மை. ஏராளமான ஒளி ஆற்றல் அல்லது கதிர்வீச்சு ஆற்றல் கதிரவனிடம் உற்பத்தியாகி விசும்பு வெளியை கடந்து நொடி ஒன்றுக்கு 1,86,000 மைல் வீதம் விரைந்து வந்து பூமியை அடைகின்றது. அது நம்மை வந்தடைய எட்டு மணித்துளிகள் ஆகின்றன. கதிரவனின் உட்புறத்திலுள்ள வெப்பம் 20,000,000 சுழியுள்ளது. அங்குள்ள அமுக்கமும் ஓர் அங்குலத்திற்கு 15,000,000 இராத்தல்களாக உள்ளது. இவ்வளவு வெப்பமும் அமுக்கமும் கதிரவனிடம் ஒன்றாகச் சேர்ந்து இருப்பதான்தான் கதிரவனிடமுள்ள கோள்விநலை எலக்டாரான்கள் முற்றிலும் உதிர்க்கப் பெறுகின்றன. . . ஒவ்வொரு நொடியிலும் கதிரவனிடமிருந்து ஒன்றரை கோடியே கோடி குதிரைத்திறன் அளவு கொண்ட ஆற்றலைப் பூமி பெறுகின்றதாக அறிவியல் அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். இதில் மூன்றில் ஒரு பகுதி ஏரி, கடல் முதலிய நீர்நிலைகளிலிருந்து நீரை ஆவியாக மாற்றுவதற்குப் பயன்படுகிறது. இவ்வாறு நீராவியாகச் செல்லும் நீர்தான் பின்னர் மலைகளின் உச்சியில் மேகமாக நின்று மழையாகப் பொழிகின்றது. மழை நீர் ஆறுகளாகப் பாய்வதால் அருவிகள் உண்டாகின்றன. உலகிலுள்ள எல்லா ஆறுகளிலும் ஓடுகின்ற நீரின் ஆற்றலைக்கொண்டு சுமார் 35 கோடி குதிரைத்திறன் அளவு ஆற்றலைப் பெறலாம் என்று மதிப்பிடுகின்றனர். கதிரவனின் வெப்பத்தையொட்டியே காற்றுகளும் வீசுகின்றன. பருவக் காற்றுகளால்தான் மழையும் பெய்கின்றது. உழவுத்தொழில் நடைபெறுவதற்குக் கதிரவனே முதற் காரணம் ஆவான்.[74]

2. தாவரங்கள் மட்டிலும்தான் கதிரவன் ஆற்றலை நேராகப் பெறமுடியும். இந்த ஆற்றல் கரியமிலவாவு, நீர் இவற்றின் துணைகொண்டு கர்போஹைட்ரேட்கள் போன்ற பொருள்களைச் சேமித்து வைக்கும் நிகழ்ச்சிதான் 'ஒளிச்சேர்க்கை'' என்பது. தாவரங்கள் விழுங்கிய கதிரவன் ஆற்றலைத்தான் உணவு மூலம் நாம் அடைகின்றோம். விலங்கு, பறவை உட்பட தாவரங்களை உட்கொண்டு கதிரவனின் ஆற்றலைப் பெறுகின்றன. புலி, சிங்கம் போன்ற புலால் உண்ணும் பிராணிகள் பயிருண்ணும் விலங்குகளைக் கொன்று தின்று ஆற்றலைப் பெறுகின்றன. இப்புவியிலுள்ள பிராணிகள் அனைத்தும் பகலவனிடமிருந்தே ஆற்றலைப் பெறுகின்றது என்பது வெள்ளிடைமலை.

3. கதிரவனிடமிருந்து இயற்றப்பெற்ற ஆற்றல் (அணுவாற்றல்) தாவரங்களின் மூலம் பாய்ந்து பல்வேறு பொருள்களைத் தோற்றுவிக்கின்றன. இப்பொருள்கள்யாவும் ஒன்று சேர்ந்து பொங்கல் வடிவில் காட்சியளிக்கின்றன. பொங்கலிலுள்ள பொருட்கள் யாவும் உழவன் தாவரங்களின் மூலம் பெற்றவை. நெய், தாவரங்களை உண்ட பசுவின் மூலம் உடைந்த பொருளாகும். ஆற்றலின் மூலமாக-ஆதிமூலமாக விளங்கும் கதிரவனே பொங்கல் விழாவின் கடவுளாக-உழவர்கள் உவந்து போற்றும் 'சூரிய நாராயணன்'' என்ற தலைவனாக விளங்குகின்றான். பொங்கல் நாளன்று பொங்கல் வடிவமாக உள்ள ஆற்றல், ஆற்றல் நாயகனாக விளங்கும் ஆண்டவனுக்குப் படைக்கப்பெறுகின்றது.[75]

4. அணுவின் நுட்பத்தினை விளக்கும் பேராசிரியர் அணு மிக நுண்ணிய துகள் என்று கூறி அரைக்கோடி அணுக்களை அணிவகுத்து நிறுத்தினாலும் அது நாம் எழுதும் முற்றுப்புள்ளிக்குள் அடங்கிவிடும் என்பார். ஒரு திராட்சைப் பழத்திலுள்ள ஒவ்வொரு அணுவும் ஓர் அங்குலவிட்டமுள்ள பந்துபோல் பெருக்கமடையச் செய்தால், அந்த திராட்சைப்பழம் பூமியளவு விம்மிப் பெருக்கமடைந்துவிடும் என்று விளக்குவார்.[76] இன்னும் சித்து விளையாட்டைக் கொண்டும் விளக்குவார். 'மகிமா'' என்பது எண்வகைச் சித்துகளுள் ஒன்று. அது விருப்பம்போல் ஓர் உருவத்தைப் பருக்கச் செய்யும் ஒருவகைப் பேராற்றல். அணுவின் அண்டமாகும் 'மகிமா'' சித்து விளையாடும் ஒருவரிடம் ஒரு நீரிய அணுவினையும் ஒரு பந்தினையும் கொடுத்து அவற்றை கைகளில் வைத்துக்கொண்டு சித்து விளையாடச் செய்தால் பந்து இவ்வுலக அளவு விம்மிப் பெருகினால் அணு பையன் விளையாடும் பந்துபோல் பெருகும்.[77]

5. இன்னொரு எடுத்துக்காட்டாலும் அணுவின் நுட்பத்தினை விளக்குவார் பேராசிரியர். ஓர் அங்குல நீளம், ஓர் அங்குல அகலம், ஓர் அங்குல உயரம் உள்ள இடத்தில் அடங்கிக் கிடக்கும் அத்திரள்கள் ஆறு லட்சம்கோடி கோடி. இதனை எண்ணால் எழுதினால் 6,0000,000,000,000,000,000 என்றாகின்றது. இப்பேரெண்ணை மனத்தில் பதித்துக்கொள்ள முடியாது. சுருக்கி எழுதினால் 6^{10} என்றாகும். இதை வினாடிக்கு ஓர் எண் வீதம் எண்ணினால் ஓராண்டில் ஒருவரால் எண்ணி முடியக் கூடியது மூன்று கோடியே பதினைந்து லட்சத்து முப்பத்து ஆறாயிரம். நாற்பதுகோடி மக்களும் அந்த அணுக்களை எண்ணுவதில் ஈடுபட்டால், எண்ணி முடிய ஏறக்குறைய 5000 ஆண்டுகள் ஆகும். அவர்கள் கலியுகம் பிறந்ததிலிருந்து இந்த நூற்றாண்டு வரைஅவற்றை எண்ணிக்கொண்டே இருக்க வேண்டும்.

இப்பொழுது அணுவின் நுட்பமும் எண்ணிக்கையின் பெருக்கமும் ஓரளவு நமக்குப் புலனாகும் என்பார்.[78]

6. அணுக்களுக்கு பெயரிடும் வழக்கத்தை வாழ்க்கையில் மக்களுக்குப் பெயரிடும் வழக்கத்தை வைத்து விளக்குவார். இதற்குச் செட்டிநாட்டு வழக்கம் இவருக்குக் கைகொடுத்து உதவுகின்றது. முத்தையனை ‘மு’ (மூனா) என்றும் தியாகராசனைத் ‘தி’’ (தீனா) என்றும், சொக்கலிங்கத்தை ‘சொ’’ (சோனா) என்றும் வழங்குவதைக் காணலாம். அதே முதல் எழுத்தில் இரண்டு மூன்று பெயர்கள் தொடங்கினால் அவற்றை வேறுபடுத்தி அறிவதற்கு முதல் இரண்டு எழுத்துக்களைச் சேர்த்து எழுதுவர். முருகப்பனை ‘‘முரு’’ (மூனா ரூனா) என்றும், திருநாவுக்கரசை ‘திரு’’ (தீனா ரூனா) என்றும் வழங்குகின்றனர். அழகப்பன், அருணாசலம், சிதம்பரம் ஆகிய பெயர்களை முறையே ‘அழ’’ (அனா ழனா) என்றும், ‘அரு’’ (அனா ரூனா) என்றும், ‘சித’’ (சினா தானா) என்றும் வழங்குவதைக் காணலாம்.[79] இம்முறையைக் கொண்டு அணுக்களுக்குப் பெயரிடும் வழக்கத்தை விளக்குவர் பேராசிரியர் ரெட்டியார். கரியை (Carbon) என்பதனை ‘C’ என்றும், பொட்டாசியம் ‘K’’ என்றும் (பொட்டாசியம் என்பதற்கு Kali என்ற ஜெர்மன் பெயராம்) எழுதுவர். பொன் என்பதன் இலத்தீன் பெயர் Aurum என்பது. வெள்ளி என்பதின் இலத்தீன் பெயர் Argentum என்பது. இரண்டும் ‘A’’ என்று தொடங்குவதால் ‘A’’ என்ற தலை எழுத்தை மட்டிலும் எழுதினால் போதாது, பொன்னை ‘Au’ என்றும் வெள்ளியை ‘Ag’ என்றும் இரண்டு எழுத்துக்களைக்கொண்டு குறிக்க வேண்டும்.

புரோட்டானின் எண்ணிக்கையைக்கொண்டே அணுக்களுக்கு 1,2,3,4, . . . என நெடுக 92 வரை சென்று பெயர் இடலாம். (92 தனிமங்கள்தாம் கண்டறியப்பெற்றுள்ளன) 92 என்றால் 92 புரோட்டான்களை கொண்ட அணு, அதாவது யுரேனியம்-88 என்றால் 88 புரோட்டான்களைக் கொண்ட ரேடியம். இதனை விளக்கும் பேராசிரியர் ‘பதினாயிரம் மக்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளிலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் கற்கும் கல்லூரிகளிலும், பல நோயாளிகள் தங்கியிருக்கும மருத்து நிலையங்களிலும், ஊர்க்காவலர்களைப் பெயரிடுவதிலும், நகரப் பேருந்துகளுக்குத் தடத்தையொட்டி பெயரிடுவதும் எண்களைக் கொண்டு வழங்குவது போன்ற முறையாகும் இது. எனினும், அந்த எண்களை வழங்குவதற்கும் அவற்றைக் கொண்ட மக்களின் பெயருக்கும் யாதொரு

பொருத்தமும் இல்லை. ஆனால் எண் முறைகொண்டு அணுக்களுக்குப் பெயரிடும் சடங்கில் உண்மையான தத்துவம் பொதிந்திருக்கிறது. குறிப்பிட்ட அணுவிற்கும் அந்த அணு கொண்டுள்ள எண்ணிற்கும் நேரான தொடர்பு உண்டு. உயிருக்கு உயிரான தொடர்பு இது. அந்த எண்தான் அந்த அணுவின் கருவில் உள்ள புரோட்டான்களின் எண்ணிக்கையையும் அந்த எண்ணே சுட்டுகின்றது. எனவே, அணு எண் (Atomic No.) என்ற இந்த எண்ணை அணுவின் உண்மையையெல்லாம் விளக்கி நிற்கும் ஒரு மத்திரமாகவே கொள்ள வேண்டும்.[80]

7. மின்னிகளின் எண்ணிக்கையை ஏற்றவும் குறைக்கவும் கூடுமானால் ஒருவகை அணுவை வேறொரு வகை அணுவாக்கலாம். இக் கருத்தை விளக்க வந்த பேராசிரியர் ‘செம்பையும் இரும்பையும் பொன்னாக்கலாம், இரசவாதம் செய்யலாம், இந்த எண்ணத்தை அணு-எண் நமக்குத் தருகின்றது. பண்டையோர் கருத்தில் அமைந்த இரசவாதமும் இந்த அடிப்படையில்தான் அமைந்திருக்க வேண்டும். இதனால் பொன்னும் மண்ணும் (Silicon) ஒன்றாகின்றன. இந்த உண்மையை நன்குணர்ந்த யோகியார் இரண்டையும் ஒன்றாகக் கருதும் உள்ளத்தினைப் பெற்றிருக்கின்றனர். இதனாலேயே,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

என்ற பெரிய புராணச் செய்யுளால் (பெரி.புரா.143) என்று சேக்கிகழர் பெருமான் குறிப்பிட்டிருப்பதை எண்ணி மகிழலாம்’ என்று விளக்குவர்.[81]

8. யுரேனிய அணுவின் அமைப்பில் உள்ள 92 எலக்ட்ரான்கள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதை (அ) ஓர் இருப்பூர்திப் பெட்டியில் முதல், இரண்டு, மூன்றாவது பெட்டிகளில் உட்காரும் இடம் அமைக்கப் பெற்றிருப்பது போலவும்,
(ஆ) திருக்கோவில்களின் கருவறையில் அமைந்திருக்கும் பெருந்தெய்வத்தைச் சுற்றிப் பல் சுற்றுகளில் (பிரகாரகங்களில்) சிறு தெய்வங்கள் அமைந்திருப்பது போலவும் அமைந்துள்ளன என்று விளக்குவார்.[82] துருக்கி நாட்டு வயோதிக மன்னன் தன்னுடைய தேவிமார்களுடன் நடனமாடியதை ஒத்தது[92] எலக்ட்ரான்கள் உட்கருவைச் சுற்றி வருவது என்ற கருத்தை, நம் நாட்டுப் புராண மரபையொட்டிக் கண்ணன் பிருந்தாவனத்தில் 92 கோபியர்களுடன் இராசக் கிரீடை என்ற நடனமாடியதையொக்கும் என்று விளக்குவார்

பேராசிரியர். இந்த விளக்கம் நம் நாட்டு மக்களின் மனதில் எளிதாகப் பதியும்.

9. அணுவின் அமைப்பினைத் தெளிவாக்கும் பொருட்டு அதன் அளவினைப் பெருக்கிக் காட்டி விளக்குவார். எலக்ட்ரானின் பொருண்மையைவிட புரோட்டானின் அல்லது நியூட்ரானின் பொருண்மை 1840 மடங்கு கணமுள்ளது. அணுவின் பொருண்மை முழுவதும் அதன் உட்கருவில் அடங்கிக் கிடக்கின்றது. ஒரு நீரிய அணுவினைப் பெரிதாக்கி அதன் பரப்பை இருபது மீட்டர் விட்டமுள்ள ஒரு வட்டத்தில் குறிப்பிட்டால், அப்பொழுது ஒரு மில்லி மீட்டரில் பத்தில் ஒரு பங்கு அளவுள்ள ஒரு மையப் புள்ளியே அதன் உட்கருவினைக் குறிக்கும். மகிமாச் சித்தர் ஒருவர் ஒரு துளி நீரை உலகம் அளவு பெரிதாகச் செய்ய முடியுமானால் அதிலுள்ள ஒவ்வொரு அணுவும் ஒரு மீட்டர் குறுக்களவுள்ளதாக இருக்கும். அப்பொழுது கருவின் குறுக்களவு ஒரு மில்லி மீட்டரில் நூறில் ஒரு பங்குதான் இருக்கும். அதே சித்தர் ஒரு நீரிய அணுவினை 600 மைல் குறுக்களவுள்ள (300 மைல் ஆரையுள்ள) கோளம் போல் விம்மி உப்பச் செய்தால் அதன் நடுவில் உள்ள புரோட்டான் ஒரு பட்டாணி அளவு இருக்கும். எலக்ட்ரானோ இதனினும் மிகப் பெரிதாக 30 அடி குறுக்களவுள்ள பெரிய உருண்டையாக, கோளத்தின் விளிம்பில் கிடக்கும். இக்கருத்தைப் படத்தாலும் விளக்குவார் பேராசிரியர்.[83]

10. இருநி, ஆல்ஃபா துணுக்குகளில் மறைந்துள்ள ஆற்றலை விளக்குவதற்கு சுவையான இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துகின்றார். அ) இரண்டு காகிதங்களை ஒட்டுவதற்குத் திரவமாகக் கரைந்த கோந்து பயன்படுகின்றது. அவற்றிலுள்ள ஈரம் உலர்ந்ததும் அவை வன்மையாக ஒட்டிக் கொள்கின்றன. அவற்றைப் பிரிக்க வேண்டுமானால், அவற்றை நனைப்பதற்கு வேண்டிய மிகக் குறைந்த அளவுள்ள நீரே அவ்விரண்டு காகிதங்களையும் ஒட்டுவதற்கு பயன்பட்ட ஆற்றல் ஆகும். இதே அளவு நீர்தான் கோந்து காகிதங்களை ஒட்டினபோது ஆவியாக மாறிற்று. ஆ) காசுக்கடை செட்டியார் ஒருவர் நகையை அடமானமாக வாங்கிக்கொண்டு கடனாகப் பணம் தருகின்றார். செட்டியாரையும் நகையையும் பிரிக்க வேண்டுமானால், கடனாக வாங்கிய தொகை முழுவதையும் அவருக்குத் திரும்பக் கொடுத்து விடவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அவர் கடன் வாங்கின தொகை-அதாவது அவர் கையை விட்டுச்சென்ற தொகை-பெரிதாகியிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்தம் கைக்குவந்த நகையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பார். இங்கே செட்டியாரையும் நகையையும் பிணைத்த ஆற்றல் பணம்.

அணுவைப் பிளப்பதற்கு அணுவின் பகுதிகளாகவுள்ள புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் அணுத் துகள்களையே எய்பொருளாக (அணுரவைகளாக) கொண்டு பிளக்கப் பெறுவது வயிரத்தைக்கொண்டு வயிரத்தை அறுப்பது போலாகும் என்பார். அணு ரவைகள் அணு என்ற இலக்கை நோக்கி எய்யப் பெறுவதை, கண்ணனிடமிருந்த அரக்கனை அவனுடைய வில்லில் வைத்து அருச்சுனனின் தலையை நோக்கி எய்யப்பெறுவது போலாகும் என்று விளக்குவார்.[84]

<u>11.தொடர்நிலை விளைவு</u>: தொடர்நிலை விளைவு உண்டாவதை ஒரு நகரில் வதந்தி பரவுவதனோடும், மூல பலத்தை வைப்பதற்கு இராமன் காண்டீபத்திலிருந்து வெளிப்படும் 'காந்தர்வாஸ்திரம்'' என்ன அம்போடும் வைத்து விளங்க வைப்பார்.[85] நடைமுறையில் தொடர்நிலை விளைவு நிகழ்வதில் பல தொல்லைகள் உள்ளன என்பதை மாம்பழ எடுத்துக்காட்டைக் கொண்டு விளக்குவது அற்புதம். மகிமா சித்தர் ஒருவர் ஒரு யுரேனியக் கருவினை மாம்பழம் அளவுக்குப் பெருக்கமடையச் செய்கின்றார் என்று கொள்வோம். அப்பொழுது இரண்டு உட்கருக்களுக்கிடையேயுள்ள தூரம் ஐந்து மைல் இருக்கும். ஐந்து மைல்களுக்கு நன்றாக உள்ள மாம்பழங்களுக்கிடையே ஒருவிதக் குறியுமின்றி நாம் ஒரு கல்லை விட்டெறிந்தால் அக்கல் மாம்பழங்களில் ஒன்றைத் தாக்க எவ்வளவு வாய்ப்பினைப் பெற்றுள்ளது என்பதைக் கூறவா வேண்டும்? அக்கல் பெற்றுள்ள குறைவாக வாய்ப்பினைத்தான் யுரேனியக் கருக்களிடையே வீசப் பெறும் நியூட்ரானும் பெற்றிருக்கும்.[86]

12. கரி-14 பண்டைகால வரலாற்றின் திறவுகோல்; ''அல்லாவுதீன் என்ற சிறுவன் கையில் கிடைத்த அற்புத விளக்கினைப் போன்றது. இவ்விளக்கின் ஒளி கொண்டு வரலாறு சரி பார்க்கப் பெறுகின்றது. சில சமயம் மாற்றியும் எழுதப் பெறுகின்றது. இந்த அற்புதத் திறவுகோல் அணுயுகத்தின் ஓர் அற்புதத் தோற்றம். பண்டைக் காலத்தையும், இக்காலத்தையும், வருங்காலத்துடன் பாங்குற இணைக்கும் ஒரு வியத்தகு கருவி'' என்று இதனை விளக்குவர் பேராசிரியர்.[87]

13. அணு இன்று அளவற்ற ஆற்றலின் தேக்கம் என்பதை அறிகிறோம். அது நவமணிகளின் பேழையாகவும் விளங்குகின்றது. . . . அது கடவுட்டன்மை வாய்ந்த ஒரு பெட்டி 'மூலபண்டாராம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' (திருவா-528) என்ற மணிவாசகப

பெருமான் பாடிய மூலபண்டாரம் வைத்து மூடியபெட்டி இதுதான் . . .'' என்று அணுவை இலக்கிய நயந்தோன்ற விளக்குவர் பேராசிரியர்.[88]

14. அழிவு வேலையில் பயன்பட்ட அணுவாற்றலை ஆக்க வேலையில் பயன்படுத்தலாம் என்பது மனிதன் கையில்தான் உள்ளது என்பதை விளக்க வந்த பேராசிரியர், 'தாருக வனத்து முனிவர்கள் அபிசார யாகத்திலிருந்து கிளப்பிவிட்ட கொல்களிறு, நஞ்சுகளைக் கக்கும் பாம்புகள் ஆகியவற்றையும் ஆலமுண்ட நீலகண்டன் தன்னலத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டதைப் போலவே, அறிவியலறிஞர்கள் சோதனைச் சாலையில் கண்டறிந்த அணுகுண்டின் ஆற்றலை மக்கள் நல்வாழ்வின் பொருட்டுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று கூறுவர்.[89]

(3) விண்வெளிச் செலவு பற்றியவை

1. சூரியன், பூமி, சந்திரன் இவை அமைந்திருப்பதை விளக்கும்பாங்கு தெளிவுடையது, சுவையானது. ''பூமியைத் தாய் என்று கொண்டால், சந்திரனை அதன் சேய் எனலாம். ஏதோ எடுத்துக்கொண்ட விரதத்தின் காரணமாக அன்னை ஒருத்தி நாள்தோறும் காலை நேரத்தில் அரசமரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் விநாயகப் பெருமானைச் சுற்றி வலம் வருகிறாள் என்று வைத்துக்கொள்வோம். தாயைவிட்டுப் பிரியாத மூன்றாண்டு கூட நிரம்பப் பெறாத குழந்தையும் தாயின் முந்தானையைப் பிடித்துக்கொண்டே விநாயகரின் சந்நிதியை அடைகின்றது. அன்னை அப்பெருமானை வழிபட்டு அவரை வலம் வருங்கால் குழந்தையும் அன்னையின் சேலையைப் பற்றிக்கொண்டு அன்னையைச் சுற்றுகின்றது. அன்னை பிள்ளையாரைச் சுற்றி வருங்கால் குழந்தையும் அப்பெருமானை அன்னையுடன் சுற்றி வலம் வருகின்றது. இச்செயலைப்போன்ற ஒரு செயலைத்தான் சந்திரனும் செய்கின்றது. அன்னையைச் சுற்றிவரும் குழந்தையைப்போலவே சந்திரனும் பூமியைச் சுற்றி வருகின்றது. விநாயகப் பெருமானைச் சுற்றிவரும் அன்னையைப் போல் பூமி சூரியனைச் சுற்றுகின்றது.[90]

பூமியின் கவர்ச்சியும் சந்திரனது கவர்ச்சியும் இல்லாத பகுதியை (Neutral region) 'திரிசங்கு சுவர்க்கம்'' என்று பெயரிட்டு திரிசங்குவின் வரலாற்றைக் கூறிவிளக்குவது அற்புதம்.[91]

'மூன்று விண்வெளி வீரர்கள் தரும் பூமியின் இழுவிசையினின்றும் விடுபட்டு அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கி வீட்டுலகம் செல்லும் ஆன்மாக்களைப்போல் எங்கும் பரந்து கிடக்கும் அகண்ட பெருவெளியில் பூமிக்கு அணித்தாகவுள்ள மற்றொரு துணைக்கோளின்

அருகே சென்ற முதல் மனிதர்களாவர் - இந்த விளக்கம் தத்துவ அடிப்படையில் அமைந்தது.[92]

மூன்று இராக்கெட்டுகள் ஒன்றன்மேல் ஒன்றாகச் செருகி வைக்கப்பெற்றிருப்பதை 'உணவு கொண்டு செல்லும் பாத்திரத்தில் அடுக்குகள் செங்குத்தாகச் செருகி நிறுத்தப் பெற்றிருப்பதுபோல் இருக்கும்' என்று விளக்குவார்.[93]

விண்வெளிப் பயணத்தின் பயனை விளக்கும் பாங்கு அண்டங்களைப் படைத்த ஆண்டவனை நினைக்கச் செய்கின்றது. 'வழி வழி வரும் வருங்காலச் சந்ததியினர் அறிவியலாரின் அறிவாற்றலையும் நினைந்து வியந்து போற்றுவர். மேலும்,

சாட்டிநிற்கும் கண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத்து
அண்ணலார்
(குற்.குற.107)

என்று கவிஞன் போற்றி புகழ்ந்துரைப்பது போலவே அவர்களும் இந்த அகிலத்தின் இயக்கத்துடன், அண்டம், பேரண்டம், எல்லையற்ற பிரம்மாவிடம் இவற்றின் இயக்கத்திற்கு அதிபதியாக விளங்கும் ஆண்டவனின் 'அலகிலா விளையாட்டுகளை' எண்ணி எண்ணி அடக்கமும் பெறுவர்.[94]

<u>2.ஞாயிற்றுக் குடும்பத்தை விளக்கும் திறன்</u>: ஞாயிற்றுக் குடும்பத்தில் பூமிக்கு மிக நெருங்கிய 'உறவினர்கள்' போல இருக்கும் கோள்கள் யாவை? கதிரவனுக்கு மிக அண்மையிலிருப்பது (படம் உண்டு) புதன்: இக்கோள் ஏனைய எல்லாவற்றையும் விட மிகச் சிறயது. அடுத்து (படம் காண்க) கதிரவனுக்கு அப்பால் நகர்ந்துகொண்டே செல்வோமாயின் வெள்ளி, நாம் வாழும் பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், (நிருதி), நெப்டியூன் (வருணன்) மற்றும் புளூட்டோ (குபேரன்) என்ற வரிசையில் இந்தக் கோள்களைக் காண்போம். செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் சுமார் ஐம்பதானாயிரம் கோள்கள் அடங்கிய சிறு 'கோளத்திரள்கள்' (Asterodis) சுற்றிவருகின்றன. ஒரு காலத்தில் இவ்விரு கோள்கட்கும் இடையிலிருந்த ஒரு பெருங்கோள் யாதோ ஒரு காரணத்தால் வெடித்துப் பன்னூறு துண்டுகளாகச் சிதறுண்டு இருக்கலாம் என்று வானநூலார் கருதுகின்றனர்.[95]

<u>3.மூன்று இனங்கள்</u>: ‘இக் கோள்களை மூன்று இனங்களாகப் பிரித்துள்ளனர் வான நூலார்: அ) உள்நிலைக் கோள்கள் முதல் வகுப்பிலுள்ளவை. இவ்வகுப்பில் புதன், வெற்றி, பூமி, செவ்வாய் என்ற நான்கு கோள்களும் அடங்கும். இவை யாவும் சந்திரனுக்கு மிக அண்மையிலிருப்பவை. இவை பூமியைப்போல் குளிர்ந்து கெட்டியாக இருத்தலின் நிலக்கோள்கள் என்றும் வழங்கப்பெறுகின்றன. ஆ) இடைநிலைக் கோள்களில் சிறு கோளத்திரள்கள் அடங்கும். இ) மூன்றாவது வகுப்பு வெளிநிலைக் கோள்கள். இதில் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் மற்றும் புளுட்டோ அடங்கும். இவை பூமியைவிட எடையிலும் பருமனிலும் மிகப் பெரியனவாக விளங்குகின்றன. பூமியைப்போல் கெட்டியாக இராமல் நீராகவும் வாயுவாகவும் நெகிழ்ந்துள்ளன. இவை வானக்கோள்கள் எனவும் வழங்கப்பெறும்.’[96]

4. ஞாயிற்றுக் குடும்ப நண்பர்கள் இருக்கும் தொலைவை விளக்கும் திறன் சுவையானது.[97]

<u>5.வட்டவழி இயக்கம்</u>: மையநோக்கு விசை, மையவிலகு விசையை விளக்கும் பாங்கும் சுவையானது. சிறுவன் ஒருவன் நீளமான கயிற்றின் ஒரு நுனியைப் பிடித்துக்கொண்டு அதன் மறுநுனியில் கட்டப்பெற்ற கன்றுக்குட்டியை மேய்ப்பதற்காகப் புல்வெளிக்கு ஓட்டிப் போகிறான். அது கயிற்றை இழுத்துக் கொண்டு நேரே ஓடப்பாரக்கின்றது. சிறுவன் காலை ஊன்றி நின்றுகொண்டு கயிற்றை விடாமல் பலமாக இழுத்துப் பிடிக்கின்றான். கன்றுக்குட்டியும் பலமாக இழுக்கின்றது. இவற்றின் விளைவாகக் கன்றுக்குட்டி சிறுவனைச் சுற்றிச் சுற்றி ஓடிவரவேண்டியதுதான். இதில் சிறுவன் கன்றுக்குட்டியை இழுக்கும் விசையே மையநோக்கு விசையாகும். கன்றுக்குட்டி சுற்றும் வேகம் அதிகமானால் தேவையான மையநோக்கு விசையும் அதிகமாக வேண்டும். இப்போது சிறுவன் மேலும் அதிகமான பலத்துடன் கயிற்றைப் பிடித்து இழுக்க வேண்டும். கயிறு அறுந்துவிட்டால் அது விட்டத்தைவிட்டு விலகி ஓடிவிடும். கன்றுக்குட்டி வட்டவழியில் சுற்றும்பொழுது அது சிறுவனை இழுப்பதாகத் தோன்றும். இவ்வாறு மையப்பொருளின் மீது வெளி நோக்கி ஏற்படும் விசையை மையவிலகு விசை என வழங்கப்பெறும். இதனைத் தெளிவாக அறிந்து கொண்டால் செயற்கைத் துணைக்கோள்கள் இயங்குவது பற்றிய கருத்து தெளிவாகும்.[98]

6. வைணவ தத்துவம் கூறும் தர்மபூதஞானத்தை வைத்துக்கொண்டு அறிவியல் கருத்து விளக்கம் பெறும் வெற்றி அற்புதமானது. ‘விபுவான (எங்கும் நிறைந்த) ஆண்டவன் ஞான சொரூபமுடையவன் என்றும், அங்ஙனமே அணுவளவான ஆன்மாவும் ஞான வடிவுடையது என்றும் வேதாந்த நூல்கள் விளம்புகின்றன. ஆண்டவன் வினைகட்கு அப்பாற்பட்டவன். ஆன்மாவோ வினையினால் கட்டப்பட்டு கிடப்பது. ஞானவடிவான ஆன்மாவிற்கும் ஒரு ஞானம் உண்டு; அது ‘தர்ம பூத ஞானம்’ எனப்படும். ஆண்டவன் அருள் இருப்பின் தியானத்தினால் மனம் ஒன்றித் தர்மபூதஞானம் மலர்ந்த ஆன்மா ஆண்டவனை காணும் ஆற்றலைப் பெறும். ஞானிகள் இந்த ஆற்றலலைப் பெற்றுள்ளனர். அவர்கள் கால எல்லையையும் கடந்து நடந்ததையும் நடக்கப் போவதையும் முற்கூறும் ஆற்றல் பெற்றவர்கள். அங்ஙனமே விஞ்ஞானிகள் மனம் ஒன்றி ஆய்வுகளால் இடத்தைக் space கடந்து பல உண்மைகளைக் காணவல்லவர்கள். அதனால்தான் தாம் போகாமலேயே மதிமண்டலம் செவ்வாய் மண்டலம் போன்ற இடங்களின் தன்மைகளை நன்கு அறிந்து அவர்களால் பயணங்களை மேற்கொள்ள முடிகின்றது. சில ஆண்டுகட்கு முன்னர் ஆளுள்ள பயணங்களை மேற்கொண்டு வெற்றி கண்டனர். செவ்வாய்க்கோளில் உயிர் உண்டா என்ற சோதனையையும் நடத்தி வருகின்றனர்.’[99]

7. விண்வெளி ஆராய்ச்சியில் மனிதன் பேரண்டம் முழுவதையும் தன் சித்தத்திற்கு உட்படுத்துவது குறித்துக் கணவுகாண்பதை அவனால் நிறுத்த முடியாது. அறிதோறும் அறியாமையைக் காணும் அவனது அறிவு வளர்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆனால் சூரியனை நோக்கிப் பயணம் மேற்கொள்வதற்குத் திட்டம் இட்டால் சம்பாதி-சடாயு பற்றிய புராணவரலாறு அவனது சிந்தனைக்குச் சுவையாக இருக்கும். ‘கதிரவனின் சாரதி அருணன். கருடனுக்கு மூத்தவன். அருணன் இடைக்குக் கீழ் உறுப்பில்லாதவன். சம்பாதியும், சடாயும் அருணனது பிள்ளைகள். இவர்கள் வானத்தில் உயர்ந்து பறக்கும் தன்மையுள்ள கழுகுகட்கு அரசர்கள். ஒருநாள் இவர்கட்கு உம்பர் உலகைக்காண வேண்டும் என்று எண்ணம் தோன்றியது. இவர்கள் வானத்தில் பறந்து கதிரவன் மண்டலத்தைக் குறுகிச் சூரியபகவானைக் காணும் நிலையிலிருக்கையில் மண்ணுலகத்தவராகிய இவர்கள் தன்னிடம் வந்ததினால் சூரியன் சினந்தான். அவன் சினந்து செலுத்திய வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் சடாயு தன் தமையனாகிய சம்பாதியைத் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். சம்பாதியும் தன் தம்பிக்கு மேலே பறந்து சென்று தன் சிறகின் நிழலில் வருமாறு

செய்தான். இந்த ஏற்பாட்டில் சடாயு தப்பினான். சம்பாதியின் இறகுகள் அவ்வெப்பத்தைத் தாங்க மாட்டாது தீய்ந்து கருகியது.'[100]

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. தமிழ்ப் புலமையுடன் பிற துறை அறிவு வாய்க்கப்பட்ட ஒரு பேராசிரியர் அரியவராகக் காணப்பெறுகின்றார்.
2. அறிவியலை இலக்கியத்துடனும் இலக்கியத்தை அறிவியலுடனும் இணைத்துச் சுவையூட்டி விளக்கம் தருவது இவர்தம் தனிச்சிறப்பு.
3. அறிவியலைத் தத்துவத்துடனும் தத்துவத்தை அறிவியலுடனும் ஒப்பிட்டுக்காட்டிச் சுவைபட விளக்கும் தனித்தன்மை இவர்தம் நூல்களில் காணப்பெறுகின்றது.
4. அறிவியல் தமிழ் வளர்ச்சியல் இவர் தரும் ஆக்கப்பூர்வமான நடை-நடைமுறைப்படுத்துவதில் எளிதாக இருக்கும் - பரிந்துரை எவரும் ஒப்புக்கொள்வதாக உள்ளது.
5. வளர்ந்து வரும் அறிவியல் செல்வத்தைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் எளிய தமிழில் ஓவிய விளக்கத்துடன் எழுதி வெளியிட்ட படைப்புகள் கற்போர் உள்ளத்தைக் கவர்வனவாக உள்ளன.
6. அறிவியல் தமிழை (இயற்பியல் பகுதிகள்) இலக்கிய மனம் கமழச் செய்யும் தனிப் பெருஞ்சிறப்பை இவர்தம் அறிவியல் படைப்புகளில் காணமுடிகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. பாரதியார் கவிதைகள் - தமிழ்த்தாய்-11
2. மேலது-3
3. அகத்திணைக் கொள்கைகள் - அணிந்துரை
4. 'காலமும் கவிஞர்களும்'' (1971) என்ற நூலில் பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவு (கட்டுரை-7) காண்க.
5. புறம்-117, 229, 388, 395. சிலம்பு-நாடுகான்-அடி (102-103)
6. தொலை உலகச் செலவு, ந.சுப்புரெட்டியர், பக்-4
7. அணுவின் ஆக்கம்-பக்.1,2
8. பேராசிரியர் ரெட்டியார் எழுதிய நூல்கள் பெரும்பாலனவற்றில் கலைச்சொற்கள், கலைச்சொல் விளக்கக் குறிப்புகள் பின்னிணைப்புகளாக அமைந்திருப்பதைக் காணலாம்.
9. டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம் : அறிவியல் தமிழ் - கலைமகள் - டிசம்பர் - 88 இதழ்
10. நமது உடல், அதிசய மின்னனு, இளைஞர் தொலைக்காட்சி, இராக்கெட்டுகள், இளைஞர் வானொலி-என்ற நூல்களில் பின்னிப்புகளாக இவை தரப்பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.
11. இளைஞர் வானொலி,
12. மேலது ப. 3

13. மேலது ப.31
14. மேலது பக். 7, 8
15. மேலது பக். 23, 24
16. மேலது பக். 36, 40
17. மேலது பக். 48, 49
18. இளைஞர் தொலைக்காட்சி, பக். 62, 63
19. மேலது பக். 93-101
20. ABC of Atoms.
21. அணுவின் ஆக்கம் ப. 21
22. மேலது ப. 35
23. மேலது பக். 38-54
24. மேலது பக். 58, 59
25. மேலது ப. 25 (படம் காண்க)
26. மேலது ப. 60
27. மேலது ப. 64
28. மேலது பக். 76, 128, 129
29. மேலது பக். 148, 149
30. மேலது ப. 142
31. மேலது பக். 174-204
32. மேலது ப. 212
33. மேலது ப. 212, 213
34. மேலது ப. 214
35. மேலது பக். 216, 219
36. மேலது பக். 231-234
37. மேலது பக். 240-244
38. மேலது பக். 245-247
39. மேலது பக். 248-250
40. மேலது ப. 251
41. மேலது பக். 253-254
42. மேலது பக். 265-267
43. மேலது பக். 272-275
44. அறிவியல் விருந்து-தொல்பொருட்களையில் புதிய ஆராய்ச்சி முறை (கட்டுரை - 8) காண்க
45. அணுவின் ஆக்கம் பக். 278-295
46. அறிவியல் விருந்து என்ற நூலில் 6வது, 5வது கட்டுரைகள்
47. அறிவியல் தமிழ் - என்ற நூலில் 7வது கட்டுரை
48. அம்புலிப் பயணம் ப. 5
49. மேலது ப. 10
50. இராக்கெட்டு பக். 19-25
51. மேலது ப. 35
52. மேலது ப. 38
53. மேலது பக். 42, 47
54. மேலது ப. 86
55. அம்புலிப் பயணம் பக். 15
56. மேலது ப. 39
57. மேலது பக். 33-34
58. மேலது பக். 410-41

59. மிக விரிவாக விளக்கம் பெறுகின்றது. அம்புலிப் பயணம் பக். 44 - 45 காண்க
60. அம்புலிப் பயணம் பக். 57-66
61. மேலது ப. 67
62. தொலை உலகச் செலவு பக். 78-86
63. மேலது பக். 86-92
64. மேலது பக். 94-114
65. மேலது பக். 161-164
66. பாரதிதாசன் கவிதைகள்-முதற்தொகுதி
67. இளைஞர் தொலைக்காட்சி ப. 1
68. மேலது ப. 6
69. மேலது பக். 101-102
70. மேலது ப. 52
71. இளைஞர் வானொலி பக். 53-54
72. மேலது பக். 2, 3
73. மேலது ப. 40
74. அறிவியல் விருந்து - பொங்கலும் அணுவும் (கட்டுரை -1) பக். 18-20
75. மேலது பக். 21-23
76. அணுவின் ஆக்கம் ப. 13
77. மேலது ப. 14
78. மேலது ப. 15
79. மேலது ப. 17
80. மேலது பக். 29, 30
81. மேலது ப. 30
82. மேலது பக். 30-31
83. மேலது ப. 27
84. மேலது ப. 58
85. மேலது பக். 64, 65, 66
86. மேலது பக். 65, 66
87. தொல்பொருட்களையில் புதிய ஆராய்ச்சி முறை (கட்டுரை - 8) அறிவியல் விருந்து ப. 151
88. அணுவின் ஆக்கம் பக். 294, 295
89. மேலது ப. 313
90. அம்புலிப் பயணம் ப. 12
91. மேலது ப. 15
92. மேலது ப. 43
93. மேலது ப. 25
94. மேலது பக். 98-99
95. தொலை உலகச்செலவு ப. 20
96. மேலது பக். 20, 21
97. மேலது ப. 22
98. மேலது ப. 22
99. தொலை உலகச்செலவு நூல்முகம் பக் (சா . எ)
100. கம்ப-கிட்கிந்ததை- சம்பாதிப்படலம் 53 - 55, இந்த வரலாற்றை ஒரு சமயம் பேராசிரியர் ரெட்டியார் எனக்கு எடுத்துக்காட்டி வியப்பில் ஆழ்த்தினார்.

****

அணுக் கரு பௌதிகம்
தமிழில்
ந. சுப்பு ரெட்டியார்
தமிழ்ப் புத்தகாலயம்
இராக்கெட்டுகள்
இளைஞர் வானொலி
அதிசய மின்னணு

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ III

இயல் - 4

அறிவியல் தமிழ்-2
(உயிரியல்)

பகுதி 3 :<>: இயல் – 4

அறிவியல் தமிழ் – 2 (உயிரியல்)

உயிருள்ள பொருள்களைப்பற்றி அறிவியல் ‘உயிரியல்’’ என்ற பெயரால் வழங்கப்படுகின்றது. இதில் இரண்டுக்கு மேற்பட்ட துறைப் பிரிவு இணைந்துள்ளது. உயிரியில் அறிஞர்கள் தாவரங்கள் உயிரினங்கள் ஆகியவற்றின் அமைப்பு முறை, அவை வாழும் முறை, அவற்றினுள் நடைபெறும் இயற்பியல், வேதியில் மாற்றங்களைப்பற்றி ஆராய்கின்றனர். உயிரியல் எல்லா வகை உயிர்களின் வாழ்வைப்பற்றி ஆராய்கின்றது. மனிதர்கள் முதல் நுண்ணுயிர்கள் (Microbes) வரையிலும், திமிங்கிலம், மரங்கள் முதல் பூச்சிகள் (Moulds) வரையிலும் உள்ள பொருள்களின் வாழ்க்கையை ஆராய்கின்றது. மக்களே மாக்களுள் அடங்குவதனாலும், அவர்கள் தாவரங்களும், வேறு உயிர்களும் சூழ்ந்துள்ள உலகில் வாழ்வதாலும் உயிரியல் மிகவும் முதன்மையான துறையாக அமைகின்றது. மருத்துவம், வேளாண்மை, பொறியியல் ஆகிய மூன்று முக்கிய துறைகளும் உயிரியல் ஆராய்ச்சியில் பெற்ற அறிவால் உடன் பயன் அடைகின்றன. உயிரியில் பற்றிய ஆராய்ச்சியால் மக்கள் இயற்கையைத் தம் வாழ்க்கைக்கு எவ்வாறு இசைவித்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்து கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டுகளாக உயர்ந்த வகைக் கால்நடைகள், உயர்ந்த வகைத் தாவரங்கள் இவற்றை எவ்வாறு உண்டாக்குவது, வேதியியல் உரங்களைப் பயன்படுத்திப் பயிர் வகைகளை எவ்வாறு மேம்பாடு அடையச் செய்வது என்பவற்றைக் கொள்ளலாம். உழவர், மருத்துவர், செவிலியர் (Nurses) மற்றும் பலர் உயிரியல் கண்டு பிடிப்புகளைத் தங்கள் நடைமுறைத் தேவைக்குப் பயன் படுத்திக் கொள்ளுகின்றனர்.[1]

உயிரியல் தமிழ் முன்னோடிகள்: இயற்பியல் துறையில் பொதுமக்கள் படிப்பதற்கெனப் பொது விருப்பார்வ நூல்கள் வெளிவந்திருப்பனபோல் இந்த ஆய்வாளர் அறிந்தவரையில் உயிரியல் துறையில் நூல்கள் அதிக எண்ணிக்கையில் வெளிவந்துள்ளனவாகத் தெரியவில்லை. தொடக்க காலத்தில் தோன்றிய அறிவியல் நூல்கள் பயனுறு அறிவியல் (Applied Science) பற்றியனவாகவே உள்ளன. 1825ல் ‘கால் நடையியல்’’ என்ற ஒரு மொழிபெயர்ப்பு நூலை வெ.ப.சுப்பிரமணிய முதலியார் வெளியிட்டார்.[2] 1832ல் இரேனியசு பாதிரியார் ‘பூமி சாஸ்திரம்’’ என்ற நூலை எழுதினார். பின்னர் டாக்டர் சாமுவேல் பிறகிரின் 1852லிருந்து 1875 வரை பல மருத்து நூல்களை

வெளியிட்டார். ‘பெண் நோயை விவரிக்கும் மருத்துவ வைத்தியம்’ என்ற குறிப்பிடத்தக்க மருத்து நூல் 1857ல் வெளிவந்தது.[3] 1865ல் ஜெகந்நாத நாயுடு என்பார் ‘சரீர வினா விடை’’ என்ற மருந்துவ நூலை வெளியிட்டார். 1888ல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சோதிடம், மருத்துவம், யோகம் முதலிய பல துறைகளமைந்த ‘நூற்றொகை விளக்கம்’ என்ற நூலை வெளியிட்டார்.[4] 1908ல் நரசிம்மலு நாயுடு என்பார் ‘திருஷசாஸ்திர சார சங்கிரகம்’ என்ற வேளாண்மை நூலையும் ‘மானிட மா்ம சாஸ்திரம் அல்லது சிசு உற்பத்தி சிந்தாமணி’ என்ற நூலையும் வெளியிட்டார்.[5] 1909ல் ‘இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்’’ என்ற தலைப்பில் அலோபதி மருத்துவம் பற்றிய பெரிய நூலொன்றின் சுருக்கம் வெளிவந்தது.[6] 1924ல் ‘புதிய ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும்’ என்ற மருத்து மொழி பெயர்ப்பு நூல் வெளிவந்தது.[7] தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியர் பெ. தூரன் ‘பாரம்பரியம்’ என்ற நூலை வெளியிட்டுள்ளார். தவிர அண்மைக் காலத்தில் மறைந்த சிறந்த புதின ஆசிரியரும் சிறுகதை ஆசிரியருமான டாக்டர் திரிபுர சுந்தரியின் (லட்சுமி) ‘பத்து மாதம்’, ‘தாய்மையும் குழந்தைவளர்ப்பும்’ என்னும் நூல்கள் குறிப்பிடத்தக்கவை. சிறந்த மருத்துவராகிய இவர் நல்ல தமிழறிவும் பெற்றிருந்தபடியால் இவருடைய நூல்களில் கருத்துத் தெளிவும் நுட்பமான கருத்துகளின் விளக்கமும் திகழ்வதைக் காணலாம். தவிர, ஆங்காங்கே தரப்பெற்றுள்ள விளக்கப் படங்களும், கருத்துத் தெளிவினை மிகுவிக்கின்றன.

<u>பேராசிரியர் ரெட்டியார்</u>: உயிரியல் துறையில் டாக்டர் ரெட்டியார் ‘நமது உடல்’ (1966), ‘இல்லற நெறி’ (1964), ‘வாழையடி வாழை’ (1984) என்ற மூன்று நூல்களை வெளியிட்டு உயிரியல் தமிழுக்கு உயர்வைத் தேடித் தந்துள்ளார். இவ்வாறு அறிவியல் நூல்களிலெல்லாம் விளக்கப் படங்கள் மிகுதியாக அமைந்துள்ளன. இடையிடையே பொருத்தமான இலக்கிய குறிப்புகளையும், தத்துவ உண்மைகளையும் குழைத்து அறிவியல் கருத்துகள் விளக்கப்பெறும்போது பாலோடு தேன் கலந்த சுவை நல்குகிறது.

<u>அண்மைக்காலக் கண்டு பிடிப்புகள்</u>: இந்தியத் தாயின் ஆசியால் 1983-ஆம் ஆண்டு திசம்பர் திங்களில் நாட்டின் தலைநகரில் கால்வழியியல்பற்றிய ஓர் அனைத்துலக மாநாடு பத்து நாட்கள் நடைபெற்றது. ஐம்பது நாடுகளிலிருந்து சுமார் 2500 கால்வழியியல் அறிஞர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டு தாம் கண்ட உண்மைகளையும் இனி தாம் காணவேண்டிய உண்மைகளைப்பற்றிய

கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்; கலந்து ஆய்ந்தனர். இந்த மாநாட்டில், நோபல் பரிசு பெற்ற மூன்று கால்வழியியல் அறிஞர்கள் கலந்து கொண்டது குறிப்படத் தக்கதாகும். மாநாட்டில் உலக அறிஞரின் கவனத்திற்கு வந்த ஒரு சில உண்மைகள் ஈண்டு காட்டப் பெறுகின்றன.[8]

<u>**1.புற்று நோய் விளைவிக்கும் ஜீன்**</u>: இந்தியாவில் பிறந்து கனடாவில் அறிவியல் ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ள டாக்டா சரண் ஏ. நாரங்க என்பவா 'துள்ளிக் குதிக்கும் ஜீனை' ஒரு சோதனைக் குழலில் செயற்கை முறையில தயாரித்தவா. இந்த ஜீன் புற்று நோய் விளைவிக்கும் ஜீன்கள் பற்றிய தெளிவான உண்மையைக் காண்பதில் கொண்டு செலுத்தும். இவா 'மானிட ஜீன்'' ஒன்றையும் செயற்கை முறையில் தயாரித்தவா.

<u>**2.இருவித மூட்டைப் பூச்சிகள் (Super Bugs)**</u>: ஆனந்த மோகன் சக்கரவா்த்தி என்ற கால்வழி ஆராய்ச்சி இளைஞா் தம்முடைய ஆய்வின் மூலம் கண்டறிந்தவை இருவித மூட்டைப் பூச்சிகள். இவை உயிரியல் பொறியில் வழியாகப் படைத்த நுண்மங்கள்(Bacteria) ஆகும். இவை ஏற்கனவே இருக்கும் நுண்மங்களில் சிறிது மாற்றமடைந்த உயிர்வகை என்கின்றார். இவை ஒரு வகை புதிய பொருளை உண்டாக்குகின்றது. இப்புதிய பொருள் திடநிலையிலுள்ள பண்படா (crude) எண்ணெய்க் குழம்பு நிலைக்கு மாற்றித் திரவ நிலைக்குக் கொணா்கின்றன. சில கைவிடப்பெற்ற எண்ணெய்க் கிணறுகளிலுள்ள எண்ணெய் பம்பு வழியாக அனுப்ப முடியாத தடித்த நிலையில் உள்ளது. இதை இம் மூட்டைப் பூச்சிகளைக் கொண்டு திரவநிலையாக்கப் பெறுகின்றது. இரண்டாவது வகை மூட்டைப் பூச்சிகள் இந்த எண்ணெய்க் குழாயில் உட்புறம் சுவா்களில் ஒட்டிக் கொள்வதைத் தடுத்து எண்ணெயின் பாகுநிலையைக் (viscosity) குறைத்து ஓட்டத்தை மிகுவிக்கின்றது.

<u>**3.மலட்டுப் பெண் செயற்கை முறையில் கருத்தரிப்பு**</u>: 'மலடி வயிற்றில் ஒரு மகன் போல' என்பது அருணகிரியாரின் வாக்கு சொல்லளவில் இருந்து வந்த செய்தியை இன்றைய அறிவியல் மெய்ப்பித்து விட்டது. அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தைச் சார்ந்த இரு பெண்கள் மலடிகள் என்று மெய்ப்பிக்கப் பெற்றவர்கள். இவர்கள் சூற்பைகளில் முட்டையணுக்கள் உண்டாவதில்லை. இந்த இரு பெண்களின் கணவன்மார்களின் விந்தணுக்கள் வேறு இரு பெண்களின் கருப்பைக்குள் செயற்கை முறையில் செலுத்தப்பெற்றன. இதனால்

அந்தப் பெண்கள் கருவுற்றனர். பின்னர் அந்தப் பெண்களின் கருப்பையில் வளர்ந்து வந்த கருக்கள் வெளியே எடுக்கப்பெற்று, இந்த மலட்டுப் பெண்களின் கருப்பைக்குள் பொருத்தப்பெற்றன. இவை இங்கு வளர்ந்து உரிய காலத்தில் மகப்பேற்றை விளைவித்தன.

4.கலப்பினத்தின் திருவிளையாடல்: அணுத்திரளை உயிரியலில் கண்ட பெரு வெற்றி இது. பல்லூழிக் காலமாக எத்தனையோ விதத் தாவர வகைகள் கால மாற்றத்தையும், காலமாற்றத்தின் புரட்சியையும், மழையின்மையையும், வெயிலின் கொடுமையையும், தாங்கிக் கொண்டு தப்பிப் பிழைத்துள்ளன. இங்ஙனம் தாக்குப்பிடித்து வந்த தாவர வகைகளின் இடத்தை அதிகப் பயன் விளையும் தாவர வகைகள் பிடித்துக் கொண்டன. பேராசிரியர் ஃபிராங்கெல் என்பார், இவ்வகைத் தாவர ஜீன்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்துள்ளார். கடந்த முப்பது நாற்பது ஆண்டுக் காலத்தில் கோதுமை, நெல், கரும்பு முதலியவற்றின் மேம்பாட்டில் மிகப் பெரிய வெற்றியைக் கண்டறிந்துள்ளனர்.

5.ஜெனிட்டின் பொறியியல்: இஃது அண்மையில் கண்டறியப்பெற்ற ஓர் அற்புதப் பொறியியல் நுணுக்கத் துறை; இதனால் பல்வேறு வகைப்பட்ட புதிய ஜீன்கள் படைக்கப் பெறுகின்றன. சாதாரண மக்கள் புரிந்து கொள்ள முடியாத பல நுணுக்கமான கருத்துகளை இத்துறை வெளியிட்டுள்ளது.

6.சில புதிய கண்டு பிடிப்புகள்: இந்த மாநாட்டில் பல புதிய கண்டுபிடிப்புகள் அறிவிக்கப்பெற்றன. அவை,

(அ)மலேரியா அம்மைப்பால் (Malaria Vaccine): உற்பத்தித் துறையில் ஒரு முக்கிய துறை நுணுக்கம் கண்டறியப் பெற்றுள்ளது. நியூயார்க் பல்கலைக்கழகம் கண்டறிந்த இந்த அம்மைப்பால் கண்டறியும் முறையை உரிமைப் பத்திரமாக்கிக் கொண்டது.

(ஆ)புதிய இனிப்புப் பொருள்: நுரைப் புளியத்தின் துணைகொண்டு உயர்ந்த ஒரு வகை சருக்கரைக் கதிர்மனித் தேம்பாகுவைத் (High structure corn syrup) தாம் தயாரிக்கும் ‘கோகா கோலா’, கோலா பெப்சி’ என்ற பானங்களின் தயாரிப்பாளர் தம் பானங்களில் பயன்படுத்தப்போகும் திட்டத்தை அறிவிப்பு செய்ததால் ஏற்பட்ட விளைவு இது. ‘தானு மேஷன்’ (Tanumation) என்ற தீவிர இனிப்புப் பொருள் முதலில் மேற்கு ஆப்பிரிக்க நாட்டின் ஒரு கானகக்

கனியினின்றும் எடுக்கப்பெற்றது. இப்போது இது அமெரிக்காவில் நுண்மங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பெறுகின்றது. இது சருக்கரையைப்போல் 2500 மடங்கு இனிப்புடையது (சாக்கரினும் இத்தகையதே என்பதும் நினைவு கூர்தற்குரியது). பல நாடுகள் சேர்ந்து அமைந்த நிறுவனம் ஒன்று ஜெனிட்டின் பொறியியல் முறைகளைக் கையாண்டு தென்னை, பனை காய்களினின்றும் இத்தகைய இனிப்புப்பொருளை உற்பத்தி செய்கின்றது.

(இ)முன்னேற்றமடைந்துள்ள உயிரியல்: பொறிநுட்ப வல்லுநர்கள் பயிர்கட்கு ஏற்படும் நோய்களைத் தடுத்து நிறுத்துதல், உப்புநீர், வறட்சி இவற்றைத் தாங்கும் தன்மைகள் முதலியவற்றை விளைவிக்க முடியும் என்று மெய்ப்பித்துள்ளனர். காலகத்தை (Nitrogen) நிலைநிறுத்தும் நுண்ணுயிரிகளை உண்டாக்கும் முறைகளில் நுண்பொறியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவற்றால் உழவர்கள் பெரும் பயன்அடைவர். உரத்திற்காகச் செலவிடும் தொகையும் இதனால் குறையும்.

(ஈ)செய்கைமுறை ஒளிச்சேர்க்கையில் பகலவனின் ஏராளமான செயலின் உதவிகொண்டு வெப்பநாடுகளிலும் குறைவெப்ப நாடுகளிலும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் முறை கண்டறியப்பட்டுள்ளது.

(உ) எலுமிச்சை பழத்தைவிட சற்றுப் பெரிய தேங்காய்வகை கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கொத்தில் 200 காய்கட்குமேல் அடங்கியிருக்கும். இது கலப்பினச் சேர்க்கையால் உற்பத்தி செய்யப்பெற்றது. இலட்சத் தீவில் இது உற்பத்தி செய்யப் பெறுகின்றது.

தமிழ் இலக்கியத்தில் உயிரியல் பற்றிய குறிப்புகள்: தமிழ் இலக்கியங்களில் பலவகைக் கலைக்கூறுகள் நிரம்பியுள்ளன. அக்கூறுகளுள் அறிவியல் நோக்கும் ஒன்று. அந்நோக்கின் அடிப்படையில் இற்பியல் கூறுகள் பற்றிய செய்திகள் பிறிதோரிடத்தில் சுட்டியுரைக்கப்பட்டன. உயிரியல் பற்றிய சிந்தனைகள் ஈண்டுச் சுட்டப்பெறுகின்றன. இன்று உயிரியல் துறையில் டார்வின் போன்ற அறிஞர்களால் குறிப்பிடப்பெறுவது கூர்தல் அறம் (Doctorine of Evolution) என்பது. இது பற்றி அறிவியல் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இத்தகைய கொள்கை போன்ற ஒரு கருத்தினை,

> **“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
> **பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**

கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"[9]

எனத் திருவாசகம் கணிக்கிறது உயிரியலோடு இணைந்து சென்றுதான் மருத்துவ இயலும், திருக்குறளில் நோய் பற்றியும் அதன் சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. 'மருந்து' என்னும் அதிகாரத்தில் நோய் வருவதன் காரணங்களையும் அது வராது தடுக்கும் முறைகளையும், வந்தால் தீர்க்கும் வழிமுறைகளையும் பற்றிய பல்வேறு செய்திகள் காணப் பெறுகின்றன.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதனிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"[10]

என்பது வள்ளுவம். நோய் வருவதன் காரணத்தையும் நோய் இன்னதென்பதையும் ஐயமறத் துணிந்து மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய மறைகளை மேற்கொண்டு அந்நோயைப் போக்க வேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும். இன்றைய மருத்துவமுறையும் இதுதானே.

கண் முதலிய நுட்பமான பகுதிகளில் இரும்புத்தூள் முதலியவை புகுந்து கொண்டால் காந்தத்தைக் கொண்டு இக்காலத்தில் சிகிச்சை செய்கின்றனர். பண்டையோரும் இம்முறையை அறிந்திருந்தனர் என்பதைக் கம்பன் காட்டுவான். இராவண வதம் முடிந்த பிறகு தயரதன் உம்பருலகிலிருந்து பூமிக்கு வந்து இராமனுடன் உரையாடும்போது தன் மகிழ்ச்சியை இவ்வாறு தெரிவிக்கின்றான்.

அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்
இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது, என்னைக்
கொன்று நீங்கலது, இப்பொழுது அகன்றது, உன் குலப் பூண்
மன்றல் ஆகம் ஆம் காந்த மா மணி இன்று வாங்க.[11]

என்று கைகேயி தன் இதயத்தில் பாய்ச்சி ரைவமெனும் அயில் வேல், இன்று இராமனைத் தழுவியதனால், அவன் மார்பரிகய காந்தம் அதனை வாங்கி விட்டது என்று கூறுவதில் நவீன சிகிச்சை முறையின் குறிப்பைக் காணலாம்.

கருவுயிர்த்த மங்கையர் குழந்தையை நீராட்டி மருந்தூட்டி வளர்க்கும் திறம் சிந்தாமணியில் காட்டப் பெறுகின்றது.

காபிய மாடித் தராய்சாலும்
கன்னல் மணியும் நறுநெய்யும்
கூடச் செம்பொன் கொளத் தேய்த்துக்
கொண்டு நாளும் வாயு நீ இல்
பாடற் கினிய பகுவாயும்
கண்ணும் பெருக உகிர்வறுத்தித்
தேடித் தீந்தேன் திப்பிலி தேய்த்து
அண்ணா உறிஞ்சி மூக்குயர்த்தார்[12]

இப்பாடலில் குறிப்பிட்பெறும் செய்திகள் பிறந்த குழந்தைக்குச் செய்யப்பெறும் பல செயல்களைத் தெரிவிக்கின்றன.

<u>கலைச் சொல்லாக்க முயற்சிகள்:</u> இலக்கியத் தமிழ் வேறு; அறிவியல் தமிழ் வேறு. இலக்கியத் தமிழுக்கு வேண்டுமானால் இலக்கண விதிகளைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறலாம். ஆனால் அறிவியல் தமிழுக்கு அப்படி அவற்றை வற்புறுத்தத் தேவையில்லை. மரபு இலக்கணங்களிலிருந்து நெகிழ்ச்சியுற்ற தமிழாகவே அறிவியல் தமிழ் இருக்க முடியும். அங்ஙனமிருப்பின் அ∴து ஏற்றுக் கொள்ளத் தக்கதே.

கலைச் சொல்லாக்கத்தில் பலமுறைகள் உள்ளன. இதில் இருவித போக்குகள் காணப்படுகின்றன. ஒன்று, தனித்தமிழ்ச் சொல்லாக்கப் போக்கு: இரண்டு, கருத்து வழிச் சொல்லாக்கப் போக்கு. கலைச் சொல்லாக்கம் தொடக்க நிலையிலிருப்பதால் அறிஞர்களிடையே பல்வேறுபட்ட சிந்தனைகள் எழுகின்றன. இவற்றை இயன்றவரை ஒரு வரையறைக்குள் கொணர்ந்து உருவாக்கப்பெற்ற சொற்களையும் தரப்படுத்தப் பெற்றால் கலைச்சொல் வளம் சிறக்கும். நடைமுறையிலும், நன்கு பயன்படும். உயிரியல் தமிழில் வரும் சில கலைச் சொற்களின் ஆக்கத்தை ஈண்டு காண்போம்.

பெரும்பான்மையான கலைச்சொற்களை உருவாக்கும் முயற்சிகளில் மூன்று பொதுவான கொள்கைகள் பயன்படுகின்றன. அவை: 1. மொழி பெயர்ப்பு, 2. புதுச் சொல் புனைவு, 3. ஒலி பெயர்ப்பு. இவையே கலைச் சொல்லாக்கத்தில் மிகுதியும் பயன்படுத்தப்படுகின்ற முறைகளாக அமைகின்றன. கலைச் சொற்களைத் தேர்வு செய்கின்றபோது சில விதிமுறைகளை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். இவண் குறிப்பிடும் விதிகள் ஓரளவு நமக்கு வழிகாட்டுவனவாக அமையும். 1. துறைச் சொற்களுக்கு ஏற்ற சொற்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் இருப்பின் அவற்றை அப்படியே

ஏற்று கொள்ளுதல். 2. ஒரு கலைச் சொல் ஒரு கருத்தை மட்டிலுமே குறிக்கின்ற வகையில் இடம்பெறச் செய்தல். 3. கலைச் சொற்கள் எளிமையாகவும் சுருக்கமாகவும் அமைதல் சிறப்பு. 4. பொருள் குழப்பமில்லாத சொற்களை உருவாக்குதல். பன்னாட்டுப் பயன் கருதி, சில குறிப்பிட்ட சில வகைகளை அப்படியே எடுத்துக்கொள்ளுதல், மக்கள் நடைமுறையில் உள்ள வழக்குச் சொற்களுக்கு முதன்மை தருதல்.

<u>**பழஞ் சொற்களைப் பயன்படுத்தல்**</u>: துறை சார்ந்த பொருளுக்கு ஏற்ற கலைச்சொல் தமிழிலக்கியத்தில் காணப்படுமாயின் அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம். இவை எழுத்து வழக்காகவோ, பேச்சு வழக்காகவோ இருப்பினும் ஏற்புடையனவே. (எ.டு) மருந்து (Medicine), பொறி (Machine), மீகாமன் (Pilot), தூம்பு (Duct), பாலமை (Childishness) இவை இலக்கிய வழக்கில் உள்ளவை. (எ.கா.) தக்கை (Cork), பீப்பாய் (Barrel), தலைமுறை (Generation), மணல்வாரி (Measles) இவை பேச்சு வழக்கிலுள்ளவை. (எ.கா.) எரிமலை (Volcano), ஏவுகணை (Rocket), வளர்ச்சி (youth), கால்வழி (Pedigree) இவை எழுத்து வழக்கிலும் பயன்படுத்தப் படுகின்றன.

<u>**மொழிபெய்ப்பு முறை**</u>: ஒரு மொழியில் காணப்படும் அறிவு நுட்பக் கருத்துகளைப் பிறிதொரு மொழிக்கு மாற்றுவதே மொழிபெயர்ப்பாகும். அறிவியல் மொழி பெயர்ப்பில்

1. உள்ளதை உள்ளவாறே கருதுதல் வேண்டும். சொல்லை நேருக்குநேர் மொழி பெயர்த்துக் கொள்வது ஒருவகை. (எ.கா.):

Amniotic Sac	-	பனிக்குடம்
Angenea, Pactoris	-	இதயவலி
Genetics	-	கால்வழியியல்
Menopause	-	சூதக ஓய்வு
Morbn	-	பேதை
Twins	-	இரட்டையர்
Imbeeile	-	மூடன், மடையன்

2. ஒரு பொருளின் பண்பு, அமைப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொள்வது மற்றொரு வகை. (எ.கா.):

Incisors	-	வெட்டு பற்கள்
Hereditary	-	மரபு வழி
Leprosy	-	குட்டம், தொழுநோய்
Mould	-	பூஞ்சக் காளான்
Quintupulets	-	ஐங்கோவைக் குழவிகள்

3. பிறமொழிச் சொற்களை மொழிபெயர்த்துக் கொள்ளல் பிறிதொரு வகை. (எ.கா.):

Photosynthesis	-	ஒளிச்சேர்க்கை
Seminal fluid	-	விந்துப்பாயமம்
Syphilis	-	மேகநோய்
Gonorrhoea	-	வெள்ளை
Lungs	-	நுரையீரல்

4. பொது வழக்கிலுள்ள பொருள்கள் மற்றும் பண்புப் பெயர்களை மொழி பெயர்த்தல் இன்னொரு வகை. (எ.கா.):

Sulphur	-	கந்தகம்
Copper	-	செம்பு
Midgets	-	குள்ளர்கள்
Night blindness	-	மாலைக்கண்
Schizophrenia	-	உணர்ச்சிவிண்ட நிலை

கலைச் சொல்லாக்கத்தில் இன்னும் பல முறைகள் உள்ளன. அவை இந்த ஆய்வுக்கு அப்பாற்பட்டவையாதலில் மேலும் தொடரவில்லை.

<u>**கலைச்சொல் விளக்கம்**</u>: கலைச்சொல் விளக்கம் என்ற ஒரு பின் இணைப்பையும் பேராசிரியர் ரெட்டியார் தம் நூல்களில் சேர்த்திருப்பதைக் காணலாம். இந்த விளக்கங்கள் அறிவியல் தமிழைப் புதிதாகக் கற்கோருக்குச் சிறந்த மையேடாக உதவும். சில எடுத்துகாட்டுகள்:

அகட்டுப்பாகு(Chime): இரைப்பையில் செரிமாம் ஆகிக் கூழ்நிலையிலுள்ள உணவு. இது சிறிது கரைசல் நிலையிலும் சிறிது கூழ்ப்பால் நிலையிலும் இருக்கும்.

உணவுப்பாதை (Alimentary Canal): வாயிலிருந்து தொடங்கி உணவுக்குழல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல் ஆகியவை உட்பட எருவாய் வரையில் உள்ள பகுதி.

ஊற்றறைகள் (Auricles): மெல்லிய சுவர்களையுடைய இதயத்தின் மேலறைகள். இவை வடிகுழல்களினின்றும் நுரையீரல்களினின்றும் குருதியைப் பெறுகின்றன.

ஏற்றறைகள் (Ventricles): இவை இதயத்தின் கீழறைகள், தடித்த சுவர்களைக் கொண்டவை. இவற்றின் மூலமாகத்தான் குருதி உடலெங்கும் பரவுகின்றது.

நரப்பம் (Neuron): நரம்பு அணுவின் பெயர். உயிரணுவின் எல்லாத் தன்மைகளும் இதற்கும் உண்டு. இதில் ஒரு நூறாயிரம் சேர்ந்ததுதான் நரம்பாகிறது.

பூத்தண்டு (Thalamus): மூளையின் அடிப்புறத்திலுள்ள திரண்ட சாம்பல் நிறப் பகுதி. உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் எல்லா நரம்புகளும் இதன் மூலமாகவே செல்லுகின்றன.

பைப்ரின் (Fibrin): குருதியுள்ள தகடு போன்ற பகுதிகள் உயிரியத்துடன் (Oxygen) சேருங்கால் விடுவிக்கப்படும் பொருள், நீர்க்குருதியுடன் சேர்ந்து உண்டாகும் பொருள் இது. இது குருதி உறைதலில் முக்கிய பங்கினைப் பெறுகின்றது.

மண்ணீரல் (Spleen): வயிற்றின் இடப்புறம் அமைந்துள்ள ஒரு தூம்பில்லாத (Ductless) சுரப்பி. இவ்வகைச் சுரப்பிகளில் இதுதான் மிகப் பெரிது. இது முதுசூல் பருவத்தில் தாயின் கருப்பத்தில் உள்ள குழந்தையின் குருதி உற்பத்தியில் பெரும்பங்கு கொள்ளுகின்றது.

விழிவெண்படலம் (Sclerotic Coat): கண் உருண்டையின் வெளிப்புறமாக அமைந்துள்ள நார் போன்ற சவ்வு. தீங்கு நேரிட்டால் தோலைப் போலவே இது விரைவில் சீர்படக் கூடியது. ஊடலியல் படிப்பில் விளக்கம் பெற விழைவாருக்கு இவ்விளக்கங்கள் பெருந்துணை புரியும்.

இடர்ப்பாடுகள்: சில நுண்ணிய வேறுபாடுகளை சொல்லாக்த்தில் கொண்டு வருங்கால் சில இடர்கள் நேருகின்றன. (Ground Nut) வேர்க்கடலை, அதனுடைய தாவரப் பெயர் 'Arachis Gypogea'. இதனை மொழிபெயர்ப்பது என்பது வீணான வேலை. 'Jack Fruit' பலாப்பழம். இதனுடைய தாவரப் பெயர் 'Arto Carpus Integrifolia'. இதனை தமிழ்ப்படுத்துவது வீணான வேலை. 'Acgemarmelos' என்பது வில்வத்தின் பெயர். இதை வில்வம் என்று மொழி பெயர்த்தால் அதனுடைய குடும்பத்தில் உள்ள பிறவற்றை அறிதல் கடினம். 'Acalypla indica'- குப்பைமேனி. இதனை இப்படியே வைத்துக்கொண்டால் இதனுடைய குடும்பத்தில் உள்ள பிறவகைகளை இனங்காணல் இயலாதது. 'Dysentery' - சீதபேதி என்று மொழிபெயர்க்கலாம். இது ஒரு வகை சீதபேதி. 'Ambibic Dysentery' என்பதை அமீபா சீதபேதி என்ற மொழி பெயர்த்தால் போதும். 'அமீபா'' என்பதற்கு தமிழ்சொல் காண்டல் வெறுவினை. B.C.G. என்பதை பி.சி.ஜி. என்று மொழி (ஒலி) பெயர்த்தால் போதுமானது. இம் மாதிரியே 'Aids' என்பதை அப்படியே வைத்துக் கொள்வது சரி. அங்கு தமிழ்ச் சொல் காண்பது வீணான வேலை. 'Crybtoszoite' இது மலேரிய கிருமியில் ஒரு நிலை. இதனை தமிழ்ச் சொல் ஆக்குவதைவிட ஆங்கிலச் சொல்லையே சொல் பெயர்த்து, 'கிரிப்டோ'' 'சோஇடு'' என்ற சொற் பெயர்த்து ஏற்றுக் கொள்வது சரி. இங்ஙனமே 'Gel' என்பதை 'ஜெல்' என்றும் 'Gene' என்பதை 'ஜீன்'' என்றும் சொற்பெயர்ப்பது பயன்தருவதாகும். தாவரவியல், விலங்கியல், உடலியல் போன்றவற்றை ஆங்கிலத்தில் படிக்கும்போது இலத்தின் கிரேக்கச் சொற்களை, மாற்றாமல் அப்படியே வைத்துக் கொள்கின்றோம் அல்லவா? இச் சொற்களை மொழிபெயர்ப்பதைவிட ஒலி பெயர்த்து பயன்படுத்துவது சிறந்தது. பிற்காலத்தில் உயர்மட்டத்தில் அறிவியல் நூல்களைப் பயிலும்போது எளிதாகிவிடுகின்றது. இத்தகைய நோக்கத்தைக் கொண்டவர் பேராசிரியர் ரெட்டியார். இலக்கியத்தில் உள்ள மொழித்தூய்மையை அறிவியல் தமிழில் எதிர்பார்க்க முடியாது என்பது அவர்தம் அதிராக்கொள்கை.

பேராசிரியர் நூல்களில் முக்கிய கருத்துகள்: வளரும் அறிவியல் தமிழில் (உயிரியல்) மக்கள் நினைவில் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டிய பல செய்திகள் உள்ளன. இவை பொதுமக்களின்

அறிவியல் அறிவு வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதவை. பேராசிரியர் அறிவியல் நூல்களிலிருந்து இந்த ஆய்வாளர் காட்டும் செய்திகள்.

நமது உடல்: உயிரணுக்கள் பல்வேறு வடிவங்களைக் கொண்டவை. சில பட்டை வடிவம் உள்ளவை. சில மழுங்கிய விளிம்புகளைக் கொண்ட செங்கல் வடிவம் கொண்டவை. மேலும் சில உயிரணுக்கள் நீளமான மயிர் போன்ற வடிவங்கள் உடையவை. சில தட்டுகள் போன்றும், சில உருளைகளைப் போன்றும், சில நாடாக்கள் போன்றும், சில திருகுசுருள்களாக அமைந்த கோல்கள் போன்றும், வடிவங்களைக் கொண்டவை. இவற்றைப் படங்களுடன் விளக்குவது பாராட்டத்தக்கது.[13] இவ்வாறே உயிர் அணுவின் அமைப்பில் படத்தின்மூலம் விளக்குவது மேலும் தெளிவும் பயப்பது.[14]

இழையம் அமைப்பு முறையை ‘எபத்தீலிய’ இழையத்தைப் படம் மூலம் எடுத்துக்காட்டும் போக்கில் விளக்குவது அற்புதம், உடல் முழுவதிலும் ‘எபித்தீலிய இழையம்’ நிரம்பி உள்ளது. எனினும், தட்டையான பல எபித்தீலிய இழைய அடுக்குகள் உடலின் மேற்புறத்தை கொண்டுள்ளன என்றும், இங்ஙனமே மூக்கு, தொண்டை, உணவுக்குழல், இறப்பை போன்ற உடலின் உள் உறுப்புக்கள் மேற் பகுதிகளும், இவ்வகை இழையத்தால் ஆனவை என்றும், இவ்வகை இழையத்தில் உள்ள உயிர் அணுக்கள், தசைநார்களால் இணைக்கப்பெறாமல் ஏடுகள்போல் தொகுதிகளாக அமைந்துள்ளன என்று விளக்குவது சிறப்புடையது.[15] இங்ஙனமே உள்உறுப்பு மண்டலம், சுரப்பிகள் போன்றவற்றை படத்துடன் விளக்குவது பொருத்தமானது.[16] உடல் பொறியைப் போன்றது என்றும், அது பொறியைவிட சிறந்தது என்றும், விளக்குவது சிறப்பானது. 206 எலும்புகள் உள்ளன என்று கணக்கிட்டுக் கொட்டுவது சாதாரண மக்களுக்கு ஒரு அரிய செய்தி. இங்ஙனமே, தசை மண்டலம், நரம்பு மண்டலம், புலன்கள், சுழிவு மண்டலம், மூச்சுறுப்பு மண்டலம், செறிமான மண்டலம், குருதியோட்ட மண்டலம் இவற்றை மிகச் சிறிய குறிப்புகளும் விடுபடாது விளக்குவது பேராசிரியரின் தனித்தன்மையாகும். குருதி வகைகள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதை விளக்கும் படம் மிக அற்புதமானது. இந்த நூலில் பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டிருக்கும் கலைச்சொல் விளக்கம் தமிழ் அறிவியல் நூல்களில் பெரும்பாலும் காணாத சிறப்பு.

<u>இல்லறநெறி: இந்த நூலிலிருந்து சில கருத்துகள்:</u>

1. ஆடவன் தக்க வயது வந்தாலும், பொருள் ஈட்டும் திறனை வளர்த்துக் கொண்ட பிறகுதான் திருமணம் புரிந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தைத் தொடக்கத்தில் கூறி களவு, கற்பு பொருள்வயிற் புரிதல் போன்ற இலக்கிய நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி விளக்குவர்.[17]

2. திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதியர் உடல்பொருத்தம், உடல் உறுப்புகளின் முதிர்ச்சி, உள்ளக் கிளர்ச்சிகளின் முதிர்ச்சி, கலவி புரியும் ஆற்றல் போன்ற கருத்துகளில் கவனம் செலுததத வேண்டும் என்று குறிப்பிடுவர்.[18]

3. உடல்நலப் பொருத்தத்தை விளக்கும் பாங்கில் 'Rh'' கூறு[19] நிறக்கோல்கள், இனநிறக் கோள்கள், ஜீன்கள், மரபு வழிப் பண்புகள் இறங்கும் முறை கருத்துக்களைத் தெளிவாக்குவர்.[20]

4. உறவினர்களிடையே திருமணம் புரிந்து கொள்வதனால் நேரிடும் நன்மை தீமைகளை எடுத்துக்காட்டுவது இளந் தம்பதியர்க்கு இன்றியமையாத செய்தியாகும்.[21]

5. ஆண் பிறப்புறுப்புகள், பெண் பிறப்புறுப்புகள் இவற்றின் தன்மைகளைப் படத்துடன் விளக்கி இனப்பெருக்கத்தில் அவை செயற்படும் முறைகளை தெளிவுறுத்துவது பயனுள்ள செய்தியாகும்.[22]

6. விந்துவின் அமைப்பையும் முட்டையணுவின் அமைப்பையும், அவை இணைந்து குழந்தையாக மாறுவதையும் விளக்குவது இளந்தம்பதியர்க்கு இன்றியமையாத கருத்துகளாகும். மானிடமுட்டை, கோழிமுட்டை இவற்றின் ஒற்றுமையை படத்துடன்[23] எடுத்துக்காட்டி முன்னதில் முட்டை வெளிப்பட்ட பிறகு குஞ்சுவளர்வதையும் மானிடமுட்டையில் தாயினுடைய கருப்பயிலேயே குழந்தையாக உருப்பெருவதையும் எடுத்துக்காட்டுவது மிகச் சிறந்த விளக்கமாகும்.[24]

7. பெண்ணுடைய வாழ்க்கையில் மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாய் மிகவும் கவனத்திற்கு உரியது. இந்நிகழ்ச்சி பெண் பிறப்புறுப்புகளின் பல்வேறு மாற்றங்களால் நிகழ்கின்றன என்பதை படங்களுடன் விளக்குவது பெண்ணினத்திற்கு மிகவும் பயனுள்ளது.

8. கரு உயிர்த்தலில் நேரிடும் பல்வேறு கோளாறுகளைப் படத்துடன் எடுத்துக்காட்டி விளக்குவது மணமக்களுக்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது செய்தியாகும்.[25]

9. ஒன்றிற்கு மேற்பட்ட குழவிகள் பிறப்பதைப்பற்றிப் பல்வேறு படங்களுடன் எடுத்துக்காட்டி விளக்குவது மிகவும் கவனத்திற்குரியது.[26]

10. குடும்ப கட்டுப்பாடுபற்றி விளக்கும் போக்கில் சந்த இயக்க முறை, கூடு பருவம், முட்டை பக்குவப்படும் காலம், கூடு பருவத்தை அறுதியடும் முறை முதலிய செய்திகளை அட்டவணைகளுடன் (Charts) விளக்கும் பாங்கு நடைமுறைக்குப் பயன்படத்தக்கது.[27]

11. திருமணக்கலை என்ற தலைப்பில் கூறப்படும் கருத்துகள் இனவிழைச்சில் இன்பம் காண்பதற்கு நல்ல விளக்கமாகும்.[28]

12. பல்வேறு புணர்ச்சி நிலைகளை வாதஸ்யாயனர் கூறும் கருத்துகளின் அடிப்படையில் விளக்குவது இளந் தம்பதியருக்குப் பயனுள்ள செய்தியாகும்.

13. பால்பொருத்தக் கேடுகள் என்ற தலைப்பில் விளக்கும் பாங்கு இளந்தம்பதியர் கருத்தில் நிறுத்தக்கூடிய பல செய்திகள் அடங்கிய பகுதியாகும்.

14. ‘திருமண வாழ்வில் உடல் நலம்’ என்ற பகுதியில் குழந்தைகளின் எண்ணிக்கை, கருத்தடையும் பால் பொருத்தமும், யோனிக் குழல் கசிவுகள், கலவி புரிதலில் கணக்கு, தம்பதியரின் பால் வேட்கை வேற்றுமையில் பால்விளைவில் தாள இயக்கம், மாதவிடாயின் பொழுது உறவு, சூதக ஓய்வு காலத்து உறவு போன்ற பல செய்திகளை ஆசிரியர் விளக்கும் பாங்கு இல்லறத்தில் பங்கு பெறுவோர் கவனத்திற்கு மிகவும் உகந்தனவாகும்.[30]

15. மகிழ்வுடைய இல்வாழ்க்கை என்ற பகுதியில் நாகரிக வாழ்வின் விளைவுகள், திருமண முரண்பாடுகள், முரண்பாட்டிற்குக்காரணங்கள், ஆளுமை கூறுகள், உள்ளக் கிளர்ச்சியின் முதிர்ச்சி நிலைகள், பண்பாட்டு பொறுத்தப்பாடு, பொருளாதாரக் கூறுகள், மாமியார், மாமனாரின் தொல்லைகளை போன்ற செய்திகளின் விளக்கம் மிகவும் பயனுடையது.[31]

வாழையடி வாழை என்ற நூலிலிருந்து சில பயன்படும் கருத்துகள்:

1. உயிரணுவின் சிறப்பியல்புகளைத் தெளிவாக விளக்கியுள்ளார். ஓர் ஆணிடமுள்ள விந்தணு, பெண்ணிடமுள்ள முட்டையுடன் சேர்ந்து குழந்தையாக உருப்பெறுகின்றது என்ற கருத்து தெளிவாக விளக்கப் பெருகின்றது.[32]

2. மரபுவழி இறங்காப் பண்புகள் சிலவற்றை எடுத்துக்காட்டி விளக்குவது மிகச்சிறப்பு. மதுபான பழக்கம் இல்லாத நிலையில் ஒருவருக்கு ஒரு குழந்தைபிறக்கின்றது. அது நன்கு வளர்ந்து நல்லவனாகத் திகழ்கிறது. மதுபான பழக்கம் வந்தபிறகு ஒரு குழந்தை பிறக்கிறது. அது வளர்கிறது. அது வளரும் சூழ்நிலை காரணமாக அக்குழந்தை குடிகாரனாக ஆகின்றது. இதனால் குடிப்பழக்கம் இல்லாத காலத்தில் தந்தை தாயிடம் இருந்த ஜீன்கள் குடிப்பழக்கம் இல்லை என்றும், குடிப்பழக்கம் வந்தபிறகு அவர்களிடம் உண்டாகும் ஜீன்களில் குடிப்பழக்கம் வந்தது என்று கருதுவது தவறு. ஒருவன் நல்லவனாகவும் தீயவனாகவும் மாறுவதற்குக் காரணம் சூழ்நிலையே அன்றி ஜீன்கள் அல்ல என்பதைத் தெளிவாக்குவர் பேராசிரியர்.[33]

3. வெவ்வேறு இனங்களின் சேர்க்கையால் இனப்பெருக்கம் உண்டாகாது. காரணம் ஜீன்கள் இணையா. ஆனால் கழுதையும் குதிரையும் இணைந்து கோவேறு கழுதை உண்டாகும். ஆனால் அதனிடம் இனப்பெருக்கம் செய்யும் ஆற்றல் இல்லை.[34]

4. ஆணாகவோ, பெண்ணாகவோ பிறப்பதற்கு ஆண் விந்தணுவில் உள்ள நிறக்கோலே காரணமென்று விளக்குவது எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டிய உண்மை. ஓர் உயிரியின் அணுவில் இருப்பவை எல்லாம் இணைநிறக் கோல்கள் என்றும், விந்தணுவிலோ முட்டையணுவிலோ உள்ள நிறக்கோல்கள் ஒற்றை நிறக்கோல் என்றும் விளக்குவது பயன் உள்ள விளக்கமாகும். குமரப்பருவத்தில் ஆணின் விரைகளில் தங்கும் உயிரணுக்களும் பெண்ணிடம் சூற்பைகளில் தங்கும் முட்டையணுக்களும் முதிர்ச்சி அடையும்பொழுது, குறைத்துப் பகுத்தல் (Reduction division) என்ற ஒருமுறையில் பிரிவுபடுவதை விளக்குவது பயனள்ள விளக்கமாகும்.[35]

5. அறிஞர், மெண்டல், பேராசிரியர் மார்கன் இவர்களுடைய இருபெரும் ஆராய்ச்சிகளைப் பாமரரும் அறியும்வண்ணம் ஓர் இயலில்

படங்களுடன் விளக்குவது அனைவரும் உளங்கொள்ளத்தக்க முக்கிய செய்தியாகும்.[36]

6. ஒரு குழந்தையின் முகத்தோற்றம், உடற்பருமன், வடிவம், இயக்கம் போன்ற செய்திகள் விளக்கம் பெறுவது எவரும் அறிந்துகொள்ளக்கூடிய விளக்கமாகும்.

7. இரட்டைப் பிறவிகள், ஒரு-கரு இரட்டையா், இரு-கரு இரட்டையா், இயல்பிகந்த இரட்டையர், இரண்டுக்கு மேற்பட்ட பிறவிகள் இவைபற்றிய விளக்கங்கள் எவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய செய்திகளாகும்.[37]

8. தீய ஜீன்கள், கொடிய நோய்கள் இவைபற்றிய செயல்களின் விளக்கம் எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய பயனுள்ள செய்தியாகும்.[38]

9. வல்லியளாா் யாா்? என்ற கருத்தை விளக்கும் பாங்கில் கருவில் இருந்து வளா்ந்து பெரியவனாகும் வரையிலும் ஏற்படும் விபத்துகளிலிருந்து அறுதியிட்டால் பெண்ணே வல்லியளார் என்பது தெரியவரும். இச்செய்தியைப் படங்களுடன் விளக்குவது சிறப்பாகும்.[39] இங்கு வழுக்கை ஏற்படும் பாங்கையும் தெளிவாக விளக்குவா்.

10. குறையுள்ள உடல் அமைப்பு பற்றிய பல செய்திகள், படங்களுடன் தெளிவாக விளக்குவது பேராசிரியரின் தனிச் சிறப்பாகும்.[40]

11. செயல் சாா்ந்த குறைபாடுகள் (இயல்-25) நோய் மனமுடையோா் (இயல்-26) மந்த மனமுடையோா் (இயல்-27) 'இரண்டுங்கெட்டான்கள்'' (இயல்-28) குருதி வகைகள் (இயல்-29) இவைபற்றிய செய்திகளை எல்லாம் பேராசிரியா் படங்களுடன் விளக்கும் பாங்கு பன்முறை படித்து அனுபவிக்கக் கூடியது.

12. நெடுநாள் வாழ்வுபற்றி அறிவியல் அடிப்படையில் விளக்கம் தருவது எல்லோரும் படித்து உளங்கொள்ளத்தக்க செய்தியாகும்.[41]

இதழ்களின் பங்கு: மனித இன வரலாற்றின் அடிப்படையாகத் திகழ்வது அறிவியல் என்பா். அறிவியல் தமிழ் வளர்ச்சியில் அறிவியல் இதழ்களின் பங்கு கணிசமானது என்று சொல்லலாம். 13

தமிழில் முதல் அறிவியல் இதழாக வெளிவந்தது ‘தமிழ்ப் பத்திரிகா’ (1832) என்பது. இதில் கிறித்துவ மதச்செய்திகளே அதிகமாக இடம் பெற்றிருந்தன. இவ்விதழுக்குப் பிறகு சற்றேறக்குறைய அறுபது ஆண்டுகள் வரையிலும் வேறு எந்த இதழ்களிலும் அறிவியல் கட்டுரைகள் வெளிவந்தவனவாகத் தெரியவில்லை.[43] 1890-க்குப் பிறகு பல இதழ்கள் அறிவியல் கருத்துகளை தமிழில் கூறுவதில் ஈடுபாடு காட்டின. 1897-ஆம் ஆண்டு ‘ஞானபோதினி’ என்ற இதழ் அறிவியல் அறிவை மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற போக்கில் வெளிவந்ததாகத் தெரிகின்றது.[44] பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல இதழ்கள் வெளிவந்திருப்பினும் அவையாவும் மருத்துவம்பற்றிய இதழ்களேயாகும்.

1916-இல் ‘தமிழ் சாஸ்திர பரிபாஷை சங்கத்தாரின் பத்திரிகை’ வெளிவந்தது. இது திங்கள் இதழ். 1917-இல் ‘தமிழ் நேசனும்’ (திங்கள் இதழ்)[45] அலோபதி மருத்துவம் பற்றித் ‘தன்வந்திரி’ (1923) திங்கள் இருமுறை இதழும் குழந்தைகளின் நலன்பற்றிய ஆரோக்கியமும் ‘சிசுவின் சுகவாழ்வும்’ என்ற இதழும் வெளிவந்தன. 1924-இல் நவீன விவசாயம் என்ற இதழ் வெளிவந்தது. 1928-இல் மருத்துவம், 1929-இல் விஞ்ஞான வைத்தியக் களஞ்சியம், 1930-இல் ஆரோக்கிய சிந்தாமணி என்ற இதழ்கள் வெளிவந்தன.[46] 1941-இல் தமிழ் மருத்துவப் பொழில் (திங்கள் இதழ்) மருத்துவக் கட்டுரைகளைத் தாங்கியும் 1953-இல் இந்திய விஞ்ஞானிகள் என்ற அறிவியல் இதழும் வெளிவந்தன.[47]

பொதுவாக இந்த அறிவியல் இதழ்களில் வெளிவரும் செய்திகள்: 1. அறிவியல் கட்டுரைகள், 2. அறிவியல் செய்திகள், 3. அறிவியல் துணுக்குகள் என்ற முறையில் அமைந்து அறிவியல் கருத்துகளைப் பரப்புவதில் பெரும்பங்கு கொள்கின்றன. இப்பணியில் கலைக்கதிர், களஞ்சியம், தமிழ்க்கலை, தினமணிச்சுடர், தொழில் நுட்பம் போன்ற இதழ்கள் பெரும் பங்கு கொள்கின்றன.

1.கட்டுரைகள்: இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாக காற்றமுத்த சமையல் பாத்திரம், இரத்த அழுத்த நோய், மருத்துவ விந்தைகள், ஆணா? பெண்ணா? சூரிய பம்பு - இவை கலைக்கதிரில் வெளிவந்தவை.

2.அறிவியல் செய்திகள்: பண்ணைச் செய்திகளில் (தொ.கா) பல்வேறு அதிசயக் கருத்துகளை அறிந்து கொள்ளலாம். வயிற்றில் புற்றுநோய்

ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய எளியமுறை ஒன்றை ஜப்பானின் கியோபா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். (ஆய்வாளர் விளக்கம் தரப்பெறவில்லை) தண்ணீரை வேகமாகப் பாய்ச்சுவதன் மூலம் உலோகத் தகடுகளை ரம்பம்போல் அறுத்துவிடலாம் என்று கனடாவில் தேசிய ஆராய்ச்சிக் கழகத்தில் பணிபுரிந்துவரும் இந்திய அறிவியல் அறிஞர் டாக்டர் மோகன் விஜய் சோதனை மூலம் காண்பித்துள்ளார். (ஆய்வாளர் விளக்கம் தரப் பெறவில்லை).

<u>3.அறிவியல் துணுக்குகள்</u>: இதழ்களில் வெளிவரும் துணுக்குச் செய்திகள் பொதுவாக நகைச்சுவை உடையனவாகவும் கேளிக்கை நிறைந்தனவாகவும் இருக்கும். ஆனால் அறிவியல் இதழ்களில் வெளிவரும் துணுக்குகள் அறிவியல் சிந்தனை உடையனவாகவும் புதிய செய்திகளாகவும் இருக்கும். (எ.கா.) 1. ஏ, பி, சி, டி, இ ஆகிய ஐந்து வைட்டமின்களும் உள்ள பழம் வாழை. 2. ஆசியா கண்டத்தில் முதன்முதலாக தொலைக்காட்சியை அறிமுகப்படுத்திய நாடு தாய்லாந்து. 3. இடிமுழக்கம் கேட்காத ஒரே இடம் கடல். 4. இன்று பலராலும் விரும்பி உண்ணப்படும் தக்காளி ஒருகாலத்தில் நஞ்சானது என ஒதுக்கி தள்ளப்பட்டதாகும்.

தினமணிச் சுடரில் '<u>சொல்லாக்க மேடை</u>' என வரும் பகுதி சிந்தனைக்கு விருந்தாக இருக்கும். (எ.கா.) 1. Mammal என்பதற்கு 'பாலுண்ணி'' என்ற கட்டுரையாளரின் சொல்லாட்சிக்கு வாசகரின் குரல் இது. 'கட்டுரையாளர் பாலுண்ணி என்று குறிப்பிடுவதில் வாசகர் கருத்து வேறுபாடு கொள்ளுகின்றார். மேலும் 'பாலூட்டி'' என்று வழங்கலாம் என்றும் தெரிவிக்கின்றார். 2. Venerial diseases என்பதற்கு 'பெண் நோய்கள்'' என்ற கட்டுரையாளரின் சொல்லாட்சிக்கு 'இரகசிய நோய்கள்'' என்ற மாற்றுச் சொல் வழங்குகின்றார் வாசகர்.

3. Bicycle என்பதற்கு 'துவிச் சக்கரவண்டி'', 'ஈருருளி'' என்ற சொற்களைக் கட்டுரையாளர்கள் வழங்குகின்றனர். ஒருவர் வழங்கிய வடசொல்லை மற்றொருவர் தமிழ் சொல்லாக்குகின்றார். இரண்டும் தவறு - இரண்டும் சக்கர வண்டிகள் வேறுபல இருப்பதால் 'மிதி வண்டி'' என்பதே சரியானது. மிதிப்பதானல் நகரும் வண்டி, இதைத் தவிர வேறு இல்லாமையால்.

<u>அறிவியலை பரப்புவதில் அரசின் பங்கு</u>: அறிவியல் பரப்பலில் இந்திய அரசு ‘தேசிய அறிவியல் தொழில் நுட்ப பரப்புக் குழு’ (The National Council for Sciences & Technology Communication) என்ற துறையையும், தமிழக அரசு தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பக் குழு (Tamilnadu State Council for Science & Technology) என்ற துறையையும் உருவாக்கி அறிவியலைப் பரப்பி வருகின்றன.

<u>சுவையூட்டி விளக்கும் முறை:</u> (இல்லற நெறி) 1. மாதவிடாய்க்குப் பின்னர், பஞ்சணைப்போல் தடித்து மிருதுவாக இருக்கும் என்டோமெட்டிரியத்தை ஒரு பெரிய அரசர் அல்லது முக்கிய விருந்தினர் ஒருவர் நம் வீட்டிற்கு வருங்கால், நாம் இரத்தினக் கம்பளம் விரித்து, அவரை வரவேற்க ஏற்பாடுகள் செய்வது போன்று கருப்பையின் உள்ளே ஏற்பாடுகள் இயற்கையாகவே நடைபெறுகின்றன என்பதை விளக்குவது சுவையான விளக்கமாகும்.[48]

2. தாயின் கருப்பையில் இருக்கும்பொழுது குழந்தை நஞ்சுக்கொடி (தாயையும் சேயையும் இணைக்கும் பகுதி) தாயின் குருதி ஓட்டத்தையும், சேயின் குருதி ஓட்டத்தையும், ஒன்றோடு ஒன்று கலக்காமல், இரண்டற சித்தாந்த தத்துவம்போல் மிகநெருங்கி உள்ளன. இந்த நஞ்சுக் கொடியின்மூலம்தான் குழந்தை தாயிடமிருந்து ஊட்டப்பொள்களைப் பெறுகின்றது. இதை விளக்கும் போக்கில் ‘கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுள் தேரைக்கும், விரும்புற்று அமுதளிக்கும் மெய்யன்” என்ற தனிப்பாட்டு அடிகளை எடுத்துக்காட்டி விளக்கும் திறன் இனிமை பயப்பதாகும்.[49] 3. ஒரு தாய் குழந்தைகளைப் பெறும் எண்ணிக்கையில் விளக்கும் பாங்கில் குசேலரின் கதையை எடுத்துக்காட்டி விளக்குவது இலக்கியச் சுவை கலந்த இன்சுவைப்பயப்பதாகும்.[50] 4. மணமக்களிடம் வேட்கை எழும் வேற்றுமை உணர்வுகளை விளக்கும்போக்கில் பெரும்பாலும் இனவிடைச்சினை ஆணின் பால் துடிப்புக்களே பெரிதும் துவங்கி வைக்கின்றன என்றும், பெண்ணின் பால் துடிப்புகள் உறங்கிய நிலையில் இருக்கின்றன என்றம் எடுத்துக்காட்டி, பாலைப் பாடிய பெருங்கடுங்கோவின் பாட்டினை வைத்து விளக்கும் திறன் (பாட்டு 21) போற்றுதற்குரியதாகும்.[51] 5. மாதவிடாயின்பொழுது மங்கையருடன் பால்உணர்வு கொள்ளலாமா? என்ற கருத்தினை ஆசாரக்கோவை, இலக்கணவிளக்கம், இறையார் களவியல், தொல்காப்பியம் முதலியவற்றில் காணப்படும் கருத்துகளை அறிவியலாரின் கருத்துகளுடன் இணைத்து விளக்கும் திறன் சுவைப்பயப்பதாகும்.[52] 6. வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த இரு பிராணிகள் இடையே

நிறக்கோல்கள் பொருந்தா நிலை ஏற்படுகிறது என்பது உயிரியல் காட்டும் உண்மை. ஆனால் மக்களிடையே நிறக்கோல்கள் பொருந்தா நிலை என்றும் ஏற்படுவது இல்லை. இதை விளக்கும் போக்கில் கபிலர் அகவலில் சில அடிகளைக் கொண்டு விளக்குவது சுவை பயப்பதாகும். 7.குடிவழிக் கூறுகள் எவ்வெவ்வாறு இறங்குகின்றன என்பதைப் படம் 17பி, 17சி, 18 என்பவற்றால் விளக்கும் திறம் தெளிவை நோக்கமாகக் கொண்ட விளக்கமாகும்.[54]

<u>சுவையாக உணர்த்தும் திறன்</u>: (வாழையடி வாழை): 1. ஆழகான தம்பதியருக்கு ‘எட்டேகால் இலட்சணம்’’ போல் ஒரு குழந்தை பிறப்பதும், கோடி வீட்டு குப்புசாமியும் அவன் துணைவியும் அழகற்றவர்களாக இருந்தும் திருமகள்போல் ஒரு அழகான குழந்தை பிறப்பதும், காங்கேயன் காளையின் ஒரு கம்பீரத்தோற்றமும், ஒட்டு மாம்பழத்தின இன்சுவையும் எழுத்துக்காட்டி இவை எல்லாம் இனச்சேர்க்கையின் திருவிளையாடல் என்று விளக்குவது சுவை பயப்பது.[55] 2. விந்தணுவில் இருப்பத்துமூன்று நிறக்கோல்களும் முட்டை அணுவில் இருபத்துமூன்று நிறக்கோல்களும் இணைந்து ஒரு குழந்தையாக உருவாகி நாற்பத்தாறு இணை நிறக்கோல்களாக உள்ள குழந்தை பிறப்பதை படத்துடன் விளக்கிக் காட்டுவது அற்புதம்.[56] 3.ஒரு ஏழைக் குடிசையில் பிறந்த குழந்தை கல்வி கற்று சிறந்த அறிஞனாக வளர்வதும் உயர்ந்த செல்வமுற்ற அரண்மனை போன்ற மாளிகையில் உள்ள குழந்தை பத்தாவது வகுப்புக் கூட தாண்டமுடியாத நிலையையும் நோக்கும்போது இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்விக் குறியை எழுப்புவது அறிஞர்களின் சிந்தனைக்குரியது.[57]

4. பூனையும் நாயும் கலவி புரிந்து கட்டிகளை ஈனமுடியாது என்றும், குதிரையும் கழுதையும் கலவி புரிந்து கோவேறு கழுதையை உண்டாக்கலாம் என்றும், ஆனால் கோவேறு கழுதையிடம் இனப்பெருக்கத்திற்குக் காரணமான பால் அணுக்கள் உண்டாவது இல்லை என்றும் எடுத்துக்காட்டி விளக்குவது நமது அறிவுக்கு நல்ல விருந்து.

> **‘பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே**
> **அவ்விரு சாதியில் ஆண்பெண் மாறிக்**
> **கலந்து கருப்பெறல் கண்டதுண்டோ?’’**[58]

என்ற கபிலரகவலின் அடிகளை எடுத்துக்காட்டி விளக்குவது ‘பாலொடு தேன் கலந்தற்றே’’ என்ற அனுபவம் ஏற்படுகின்றது. 5.

நிறக்கோல்களின் பொருந்தாநிலை மக்களிடையே என்றும் ஏற்படுவதில்லை என்ற கருத்தை

‘ஒருவகைச் சாதியாம் மக்கட்பிறப்பில் ஈர்
இருவகை யாகநீர் இயம்பிய குலத்து
ஆண்பெண் மாறி அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதுங் காண்கின் றிலிரோ?
எந்நிலத் தெந்தவித் திடப்படு கின்றதோ
அந்நிலத் தந்தவித் தங்குரித் திடுமால்
மாறி வேறாகும் வழக்கமொன்றிலையே’

என்ற கபிலரடிகளை எடுத்துக்காட்டி அறிவியல் கருத்துக்கு இலக்கியச் சுவையூட்டி மகிழ்விப்பது நம் உள்ளத்தைக் கவர்கின்றது.[59]

6. சூழ்நிலை மனிதனது வாழ்க்கைமுறையை மாற்றுகின்றது என்ற கருத்தை

“தென்திசை பார்ப்பான் வடதிசை ஏங்கில்
நடயது கோணி புலய னாவான்
வடதிசைப் புலையன் தென்திசை ஏங்கில்
பழுதற ஓதிப் பார்ப்பா னாவான்”

என்ற கபிலரடிகளின் அடிகள் இக்கருத்தை விளக்குகின்றன என்பதைப் பேராசிரியர் தமது நூலில் எடுத்துக்காட்டவில்லை. 7. பெண்ணின் முட்டை நிறக்கோலில் இருபத்துமூன்று X ஜீன்கள் உள்ளனவென்றும் விந்தணுவில் X ஜீன்களும் Y ஜீன்களும் கலந்த கலவை உள்ளதென்றும், இவற்றுள் Y ஜீனே குழந்தையின் பாலை அருதியிடுகின்றது என்றும் படத்துடன் விளக்குவது படிப்போர் மனத்தை அழ பதிவிக்கின்றது.[60] 8. ஜீன்களில் ஓங்கி நிற்கும் ஜீன்கள் பின்தங்கி நிற்கும் ஜீன்கள் என இருவகை உள்ளன. இவை, மாறி மாறி கலப்பதனால் பிறக்கும் குழந்தையிடன் தந்தையின் மூக்கைப் போன்றே மூக்கும், தாயின் உதட்டைப் போன்ற உதடும், இவ்வாறு பிற உறுப்புக்கள் மாறி மாறியும் வருவதை விளக்குவது நமக்கு ஓர் அறிவியல் விருந்து.[61] 9. இரட்டைப் பிறவிகளை விளக்கும் போக்கில் ஒரு-கரு இரட்டையர், இரு-கரு இரட்டையர், இயல்பிகந்த இரட்டையர், பல்வகை பிறவிகள், இவற்றை விளக்குவது சிறப்பாக அமைந்துள்ளது. குசேலருக்கு இருப்பத்தேழு பிள்ளைகள் பிறந்தன என்ற கருத்தை குசேலபாக்கியானத்தில் உள்ள ஆசிரியரின் கற்பனையை விளக்கும்போக்கில் சுசீலை அம்மையாருக்கு, இரண்டு மூன்று கரு உயிர்த்தலில் இருப்பத்தேழு குழந்தைகள் பிறந்தன என்று

விளக்குவது மிக மிக அற்புதம்.[62] 10. ஒரு பெண்ணின் கருப்பையில் வளரும் சிசுவை இன்னொரு மலட்டுப் பெண்ணின் கருப்பைக்கு மாற்றி கருஉயிர்க்கச் செய்யும் விந்தையை இக்கால அறிவியல் அறிஞர்கள் கண்டுள்ளனர். இதை புராணங்களிலிருந்து பலராமன் பிறப்பை எடுத்துக்காட்டாக விளக்குவது இலக்கிய நயம் கொண்டதாக அமைகின்றது.[63]

சுவையூட்டி விளக்கும் திறன் (நமது உடல்): 1. ஆண்டவன் படைப்பாகிய அகிலத்தில் உள்ள பல்வேறு உயிரினங்களிடையேயும் ஒற்றுமைக் கூறு அமைந்துள்ளது. உயிரினங்கள் யாவும் உயிரணுக்கள் எனப்படும் மிகச் சிறிய அலகுகளால் ஆனவை. பருத்த யானை பன்னூறு கோடி உயிரணுக்களாலானது. உடல் முழுவதும் ஒரே ஓர் அணுவிலான மிகச் சிறிய பிராணிகளும் உள்ளன.[64] 2. பொறியைவிட நமது உடல் சிறந்தது என்பதை விளக்கும் பாங்கில் பேராசிரியர் கூறுவது இன்று மனிதன், மனித மூளையை விட மிக விரைவாக-வினாடியின் ஒரு சிறுபகுதியில் - பெரிய கணக்குகட்கு விடை காணக்கூடிய பெரிய கணக்கிடும் பொறிகளை அமைத்துள்ளான். இவை மின்னணு (Electron) முறையில் இயங்குகின்றன. ஆயினும் இப்பெரிய பொறி கணக்கிடுதல் என்ற செயலை மட்டிலுந்தான் புரிதல் கூடும். ஆயின் எந்தக் கணக்குகளைக் கூட்ட வேண்டும் என்பதையோ, அன்றி எப்பொழுது அவற்றைக் கூட்ட வேண்டும் என்றோ அப்பொறியால் தீர்மானித்தல் இயலாது. ஆனால், பல திறன்களையுடைய நம்முடைய மூளை இதனை அறுதியிடுதல் கூடும். அன்றியும் குறைந்த திறனையுடைய கணக்கிடும் பொறி (Calculating Machine) மிகப் பெரியதாக உள்ளது. அஃது ஒரு பெரிய அறை முழுவதையும் அடைத்துக்கொள்ளும். ஆனால் அளவற்ற திறனையுடைய நம்முடைய மூளையோ மிகச்சிறிய மண்டையோட்டினுள் அடங்கிக்கடக்கின்றது.[65] 3. நம்முடைய குதிகாலுக்கு சற்று மேலே அழுத்திப் பார்த்தால் காணப்படும் ஒரு உறுதியனா தசை நாணை அக்கிலி தசை நான் (Achilles) என்பர். இதை விளக்குவதற்கு அக்கிலிசியைப் பற்றி புராண கதையை காட்டி விளக்குவார்[66] 4. மிதிவண்டி இயக்குவதில் பெரு மூளையும் சிறுமூளையும் எவ்வாறு இணைந்து செயற்பட்டு தானாக நிகழும் செயலாக மாறுவதை எடுத்துக்காட்டுவது சிறப்பு.[67] 5. மேசையின் மேல் உள்ள புத்தகம் கீழே விழுந்ததை எடுக்கும் செயலை, போர்த் தலைவன் ஒருவன், தன் வீரர்களுக்கு ஆணையிடும் செயல்களோடு ஒப்பிட்டுக் காட்டுவது நன்று.[68] இந்நிகழ்ச்சியை படம் கொண்டு விளக்குவார். 6. குருதி வகைகளை விளக்கும் போக்கில் எந்த வகை குருதி, எந்தவகை குருதியோடு சேரும் என்பதையும்,

எந்தவகை குருதி சேராது என்பதையும் படத்தின் மூலம் விளக்குவது மிகவும் அற்புதம்.[69] 7. ஒரு பொறிக்கும் ஒரு மனித உடலுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கும் பாங்கில் பரந்தாமனும் பார்த்தசாரதியும், திருமலைக்குச் சென்ற நிகழ்ச்சியை வைத்து விளக்கும் போக்கு மிகச் சிறப்புடையது. பொறியில் மானிடப் பண்பு இல்லை. உடலில் மானிடப் பண்பு உண்டு. இதனால் ஒருவன் வைத்திருந்த கட்டமுதை இன்னொருவனுக்குப் பகிர்ந்து தருகின்றான்.[70] 8. பற்கள் பழைய முறைக்கொண்டு தாக்கப் பெறுவதைப் பழம் பாடல்கள் இரண்டைக் கொண்டு விளக்குவது இலக்கிய சுவையைப் பயப்பதாகின்றது.[71]

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. உயிரியல் தமிழிற்குத் தொண்டாற்றிய பெரியோர்களை வரலாற்று முறையில் எடுத்துக் காட்டியுள்ளமை.
2. உயிரியல் தமிழில் அண்மைக்கால கண்டுபிடிப்புகளாகப் புற்றுநோய் விளைவிக்கும் ஜீன், இருவித மூட்டைப்பூச்சிகள், மலட்டுப்பெண் செயற்கை முறையில் கருத்தரிப்பு, கலப்பினத்தின் திருவிளையாடல், சில புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைத் தமிழ் உலகிற்கு எடுத்துக்காட்டியமை.
3. தமிழ் இலக்கியத்தில் உயிரியல் பற்றிய குறிப்புகளை இலக்கியச் சுவைஞர்க்கும், உயிரியல் வல்லுநர்க்கும் விருந்தாக எடுத்துக்காட்டி இருப்பது.
4. கலைச்சொல்லாக்க முயற்சிகளை இத்துறையில் பணியாற்றப் புகுவோரக்கு உதவியாக எடுத்துக்காட்டி இருப்பது.
5. கலைக்சொல்லாக்கத்தில் நேரிடும் சில இடர்பாடுகளை எடுத்துக்காட்டி இருப்பது.
6. பேராசிரியர் ரெட்டியாரின் அறிவியல் நூல்களில் கலைச்சொற்களே அன்றி, கலைச்சொல் விளக்கமும் தந்திருப்பது.
7. அறிவியல் செய்திகளைச் சுவையூட்டி விளக்கும் பேராசிரியரின் முறை ஆகியனவாகும்.

அடிக்குறிப்புகள்:

1 New Standard Encyclopedia-Vol-3 P.No.234
2 இராதா செல்லப்பன், டாக்டர், கலைக்சொல்லாக்கம், ப. 81
3 மேலது ப.79
4 மேலது ப.82
5 மேலது ப.82
6 மேலது ப.83

7 மேலது ப.85
8 வாழையடி வாழை பக். 269 - 277
9 திருவா. சிவபு. ஆடி 26- 31
10 குறள் - 948
11 கமப்ரா. யுத்த. மீட்சி ப. 117
12 சிந்தா. திருத். பூா. எண் 2703
13 நமது உடல் பக். 3-4
14 மேலது பக். 4 , 5
15 மேலது பக். 7 , 8
16 மேலது ப. 10
17 இல்லற நெறி-கடிதம் 1
18 மேலது கடிதம் 2
19 மேலது கடிதம் 3
20 மேலது கடிதம் 4
21 மேலது கடிதம் 6
22 மேலது கடிதம் 7 , 8
23 மேலது ப. 117
24 மேலது கடிதம் 11
25 மேலது கடிதம் 19
26 இல்லற நெறி கடிதம் 20
27 மேலது கடிதம் 22
28 மேலது இயல் -6
29 மேலது இயல் -7
30 மேலது இயல் -8
31 மேலது இயல் -9
32 வாழையடி வாழை இயல் 2 -3
33 மேலது இயல் 6-7
34 மேலது இயல் 6
35 மேலது ப. 69
36 மேலது இயல் 12-13
37 மேலது இயல் 19-20
38 மேலது இயல் 21-22
39 மேலது இயல் 21-22
40 மேலது இயல் 24
41 மேலது இயல் 31
42 ‘தமிழ்மொழி வளர்ச்சி - கலைக்கதிரின் பணி ஓர் ஆய்வு’ (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் , தமிழ்த்துறை எம்ஃபில் ஆய்வேடு (1987-88) ஆ. மணிவண்ணன் ஆய்ந்தது. பின்னிணைப்பு 1 காண்க; இவர் இதழ்களை வகைப்படுத்தி 70 ஆகக் காட்டுவார். இன்னோர் ஆய்வாளர் சி. சாந்தா என்பார் ‘தமிழ்மொழி வளர்ச்சி - இயற்பியல்-வேதியியல்’ என்ற தம் எம்ஃபில் ஆய்வேட்டில் (1987-88) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் , பின்னிணைப்பு 1-இல் 44 இதழ்களைக் காட்டுவார். மற்றோர் ஆய்வேட்டில் (1987-88) (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) பின்னிணைப்பு 3-இல் 105 இதழ்களை இதழ்களின் பெயர், தொடங்கப்-பெற்ற ஆண்டு, ஆசிரியர், வெளியிட்டாளர், பருவம், முதலிய விவரங்களுடன் காட்டுவார்.

43 இராதா செல்லப்பன் டாக்டர் கலைச் சொல்லாக்கம் ப. 82
44 மேலது ப. 82
45 சோமலெ் தமிழ் இதழ்கள் ப. 70
46 இராதா செல்லப்பன் டாக்டர், கலைச் சொல்லாக்கம் ப. 82
47 மேலது பக். 91-92
48 இல்லற நெறி ப.125
49 மேலது ப. 167
50 மேலது ப. 459
51 மேலது பக். 477-478
52 மேலது பக் 477-478
53 மேலது பக். 39-41
54 மேலது பக் 55-58
55 வாழையடி வாழை பக். 2 ,3
56 மேலது ப. 15
57 மேலது இயல் -6
58 மேலது ப. 41
59 மேலது ப. 41
60 மேலது ப. 71
61 மேலது இயல் -15
62 மேலது ப. 137
63 மேலது ப. 272
64 நமது உடல் பக். 1-2
65 மேலது ப. 12
66 மேலது ப. 45
67 மேலது பக். 51-52
68 மேலது பக். 140-141
69 மேலது ப. 120
70 மேலது பக். 140-141
71 மேலது ப. 151

****

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ IV

இயல் - 5

இலக்கியத் தமிழ்

பகுதி 4 :<>: இயல் – 5

இலக்கியத் தமிழ்

பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் அறிவியல் பட்டம் பெற்றவர். கணிதம், வேதியியல், இயற்பியல் என்பவை இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்கள். மாநிலத்தில் முதல் வகுப்பு மூன்றாவது நிலையிலும், கல்லூரியில் முதல் நிலையிலும் தேர்ந்தவர். அதனால் அறிவியலே இவரது உயிர்நாடியாக இருந்தது. இருபத்து இரண்டு அகவையில் இவரால் தொடங்கப்பெற்ற உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த காலத்தில் தமிழ் படித்தால்தான் கிராமச் சூழ்நிலையில் உள்ள மக்களிடம் தொடர்புகொள்ள முடியும் என்று கருதினார். அதனால் பள்ளி ஆண்டு விழாக்கள் சிறப்புக் கூட்டங்கள் இவை நடத்தி அறிஞர்களைக் கொண்டு பேசச்செய்தார். தாமும் தமிழின்மீது மிகுந்த பற்றுகொண்டு, பல இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதும் பணியில் ஈடுபட்டார். இக்காலத்தில் வித்துவான் தமிழ் எம்.ஏ., தேர்வுகள் எழுதி அவற்றில் வெற்றியும் பெற்றார். அறிவியல் ஆசிரியர் தமிழுக்கு வந்தது இ∴து ஒரு வரலாறு.

<u>1.**கவிஞன் உள்ளம்**</u>: தலைமையாசிரியராக பணிபுரிந்தபோது கோவையிலிருந்து திரு.பெ.தூரனை, ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த ‘கால சக்கரம்’ என்ற மாதமிருமுறை வெளிவந்த இதழில் பத்துக்கட்டுரைகள் வெளியிடப்பெற்றன. கையில் இருந்த வேறு பதினைந்து கட்டுரைகளையும் சேர்த்து இருபத்தைந்து கட்டுரைகள் அடங்கிய ‘கவிஞன் உள்ளம்’ என்ற நூலை முதன்முதல் வெளியிட்டார். இதற்கு அணிந்துரை வழங்கிய பி.ஸ்ரீ.ஆச்சாரியர் கூறுவது: ‘. . . . . . இந்நூலில் அடங்கியிருக்கும் சங்க நூற்கட்டுரைகளிலும் வேறு இலக்கியக் கட்டுரைகளிலும் ஆசிரியர் தாம் தமிழ்க் கடலில் மூழ்கி முத்துக் களித்து வந்து ‘இதோ பாருங்கள் சில ஆணித்தரமான முத்துகளை’ என்று காட்டுகின்றார். தரம் அறிந்து ‘முத்தும் முத்தமிழும்’’ போற்றிய தமிழ்நாட்டின் தற்கால மக்கள் இந்த ஆசிரியர் காட்டும் முத்துகளையும் தக்கமுறையில் மதித்துப் போற்றுவர் என்பது என் நம்பிக்கை’. இந்தக் கட்டுரைகள் சாதாரண மக்களுக்கும் சங்க இலக்கியங்கள், திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் போன்ற இலக்கியங்களை அறிமுகம் செய்வதாக அமைகின்றன. அவர்களும் இலக்கியத்தைப் படிக்க வேண்டும் என்று ஒரு தூண்டுகோலாகவும் அமைகின்றது.

இந்தநூல் வெளியிட்ட நல்லவேளையில் விண்ணப்பிக்காமலேயே புதிதாகத் தொடங்கப்பெற்ற காரைக்குடி அழகப்பா ஆசிரியர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அழைப்பு வந்தது. ஆகவே, இவருடைய தொழில் பணிக்கலன் கல்லூரியாக அமைந்தது. இக்காலத்தில் வார, பிறை, திங்கள் இதழ்களுக்கும், சிறப்பு மலர்களுக்கும் பல கட்டுரைகள் வழங்கிவந்தார். இவை எல்லாம் தொகுக்கப்பெற்று நூலாக வெளிவந்தன. பெரும்பாலான கட்டுரைகள் மதுரையிலிருந்து வெளிவந்த ‘தமிழ்நாடு’ என்னும் நாளிதழில் ஞாயிறு மலரில் வெளிவந்த கட்டுரைகள்.

<u>**2.காலமும் கவிஞர்களும்**</u>: இந்த நூல் பேராசிரியர் பல சந்தர்ப்பங்களில், பல இதழ்களில் வெளியிட்டனவும், வானொலியில் பேசியனவுமான பன்னிரு கட்டுரைகளைக் கொண்டது. ‘திருவள்ளுவர் கண்ட நாடு’, ‘தமிழுடன்ஆங்கில உறவு’, ‘சோழர் கால மானியம்’ இவை வானொலியில் ஆற்றிய உரைகள். ஏனையவை இதழ்களில்

வெளிவந்தவை. 'காலமும் கவிஞர்களும்' என்ற கட்டுரை நூலின் பெயராக அமைந்தது. மனிதனிடம் இயல்பாக அமைந்து கிடக்கும் ஆற்றல்களுள் படைப்பாற்றலும் ஒன்று, எல்லா மொழிகளிலும் பேரிலக்கியம் தோன்றுவதற்கு இவ்வாற்றலே முதற்காரணமாகும். ஏற்ற சூழ்நிலை இதற்கு துணைக்காரணமாக அமைதல் வேண்டும். சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், சிற்றிலக்கியங்கள் இவை தோன்றிய காலத்தையும் சூழ்நிலையையும் கவனித்தால் இந்த உண்மை தெளிவாகும். பாரதியார், பாரதிதாசன் படைப்புகளும் அவை தோன்றிய காலந்தொட்டு சிறந்தன. இத்தகைய கருத்துகள் முதல் கட்டுரையில் அமைந்துள்ளன. பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' என்ற ஒரு கட்டுரை (குமரிமலரில் வெளிவந்தது) பிற்காலத்தில் 'பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு' என்ற திறனாய்வு நூல் தோன்றுவதற்கு கருவாக அமைந்தது. 'புத்தர் காட்டிய நெறி' என்ற கட்டுரையில் புத்த மதத்தையும், பௌத்தர்கள் தமிழுக்குச் செய்த பணியும் விளக்கம் பெறுகின்றது. 'வளரும் பயிர்' என்ற கட்டுரை பள்ளி மாணவர்கள் நாற்றங்காலில் வளரும் பயிர்கள் எனவும், இந்தப் பயிர்கள் ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், அரசு என்ற மூன்று பக்கங்கள் அடங்கிய முக்கோண வடிவில் உள்ள நாற்றங்காலில் பராமரிக்கப்படுகின்றன என்பதை விளக்குகிறது. 'பாவை நோன்பு' என்ற கட்டுரை திருப்பாவை, திருவெம்பாவை ஆகிய பிரபந்தங்களை ஒப்புநோக்கிய ஆய்வாக அமைகின்றது.

<u>3.காதல் ஓவியங்கள்:</u> இந்நூல் பேராசிரியர் திருப்பதிக்குச் சென்ற பிறகு வெளிவந்தது. 'தமிழ்நாடு' என்ற நாளிதழ் ஞாயிறு மலரில் வெளிவந்த சங்க இலக்கியங்கள் பற்றிய இருபத்தைந்து கட்டுரைகள் அடங்கிய நூல். அகநானூறு, குறுந்தொகை, நற்றினை, கலித்தொகை, ஐங்குநூறு ஆகிய இலக்கியங்களிலிருந்து சில பாடல்களைப் பொதுமக்களுக்கு அறிவிப்பனவாக அமைந்துள்ளன. இவை கதைபோல இருப்பதனால் படிப்போரின மனத்தை கவருவனவாக அமைந்துள்ளன.

<u>4.அறிவுக்கு விருந்து</u>: இந்நூல் திருப்பதி பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்தபிறகு வெளிவந்தது. இதில் இலக்கியம், திறனாய்வு, இலக்கிய வரலாறு என்ற மூன்று பகுதிகளில் பகுதிக்கு மூன்றாகக் கட்டுரைகள் அமைந்துள்ளன. உளவியலார் மனத்தினை பல நிலைகளாகப் பிரித்து ஆய்ந்து பல உண்மைகளை வெளியிட்டுள்ளனர். ஒருவகையில் அவர்கள் அறிதல் நிலை (cognition), உணர்தல் நிலை (Affection), இயற்றி நிலை (Conation) என்று மனத்தை முந்நிலைகளாகப் பகுத்துப் பேசுவர். தனி ஒரு மனிதனுடைய ஆளுமை (Personality) சிறந்த முறையில் வளர்ச்சியும் துலக்கமும் (Development) அடைய வேண்டுமாயின் இம்மூன்று நிலைகளிலும் மனிதன் பயிற்சி பெறுதல் வேண்டும். இத்தகைய பயிற்சியனை கல்வி நிலையங்கள் நல்குகின்றன. பாடத்திட்டங்களும் பயிற்றும் முறைகளும் நிலைய நடவடிக்கைகளும் அவற்றிற்கேற்ப அமையப்பெறுகின்றன. 'அறிவுக்கு விருந்து' என்ற இச்சிறுநூல் ஓரளவு மனப்பயிற்சி வளர்ச்சிக்குத் துணை செய்யும் பாங்கில் அமைந்த ஒன்பது கட்டுரைகள்; யாவும் 'குமரிமலர்' (கட்டுரைகள் 6,7,8,9), 'தமிழ்நாடு ஞாயிறு மலர்' (கட்டுரை 3), 'தினமணி' (கட்டுரை 5), 'மணிமொழி' (கட்டுரை 2) போன்ற இதழ்களில் வெளிவந்தவை. ஏனையவை (கட்டுரை 1,4) இந்நூலுக்கு எழுதப்பெற்றவை.

5.பரணிப் பொழிவுகள்: இந்நூல் திருப்பதியில் பணியாற்றிய காலத்தில் விரிவுச் சொற்பொழிவு என்னும் திட்டத்தில் நடைபெற்ற செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியைப் பற்றிய ஆறு சொற்பொழிவுகள் ஆகும். 1. நூல் அறிமுகம், 2. கடைத்திறப்பு, 3. பேய்கள் உலகம், 4. வரலாற்றுக் குறிப்புகள், 5. பரணி காட்டும் அவைகள், 6. மும்மணிகள் (குலோத்துங்கன், கருணாகரத் தொண்டைமான், செயங்கொண்டான்) என்ற ஆறு தலைப்புகளில் அமைந்த சொற்பொழிவுகள் அடங்கும். இவற்றில் சுவைகள் பற்றிய சொற்பொழிவில் பேராசிரியர், இளம்பூரணர் அவர்களின் சுவைபற்றிய உரைகளை எடுத்துக்காட்டியுள்ளார். சுவைகளின் தோற்றத்தைத் தெளிவாக்கி உள்ளார். சுவை பற்றிய வடநூலார் கொள்கையை ‘ஸ்தாயி பாவம்’, ‘சஞ்சாரி பாவம்’, ‘ஆலம்பன விபாவம்’, ‘உத்தீபன விபாவம்’ என்ற வடநூற்கருத்துக்களைக்கொண்டு மிகத் தெளிவாக விளக்குவார். ‘பேய்கள் உலகம்’ என்ற தலைப்பில் பார்ப்பன பேய்கள், சமணப் பேய்கள், கருட்டுப் பேய்கள், செவிட்டுப் பேய்கள், சூற்பேய்கள், மூடப்பேய்கள், நோக்கப் பேய்கள், கூத்திப் பேய்கள், கணாத்திறம் உரைத்த பேய்கள், கணக்கப் பேய்கள் இவை கூழ் உண்ணும் காட்சியை இலக்கியச் சுவையாக அமைவதைப் பேராசிரியர் சிறப்பாகவும் நயமாகவும் எடுத்துக்கூறி விளக்குவார். இப்படி பல நயமான குறிப்புகள் இந்நூலில் விளக்கம் அடைகின்றன.

6.அறிவியல் தமிழ்: பேராசிரியர் பல்வேறு சந்தரப்பங்களில் மணிவிழா மலர்கள், முத்து விழா மலர், பவழவிழா மலர், தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர் போன்றவற்றில் எழுதப்பெற்ற பத்து ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. ‘இறைவனின் ஆன்ம வேட்கை’ என்ற கட்டுரை, திருவாய்மொழியில் சில பாசுரங்களை அடிப்படையாக்கொண்டு அமைந்தது. ஈசுவரன்-சேதநனை (உயிரை) விநியோகம் செய்து கொள்ளல் இரண்டு வகைப்படும். இவற்றுள் அவன் தலைவனாகவே இருந்து உயிரை அடிமையாக வைத்துப் பரிமாறுதல் ஒருவகை. சில சமயம் ஈசுவரன் உயிரை தலைமையாகக் கொண்டு தான் அடிமையாக இருந்து இழிதொழில் செய்து, உயிரை விநியோகம் கொள்ளுதல் மற்றொரு வகை. இரண்டாவது வகைக்கு எடுத்துக்காட்டாக குசேலர் வாழ்க்கையை காட்டுவது மிகச் சிறப்பு. இங்ஙனமே நம்மாழ்வாரை இறைவன் அநுபவிப்பதை ‘வாரிக் கொண்டு’ (திருவாய் 9.6:10) என்ற பாசுரத்தைக்கொண்டு விளக்குவது சிறப்பு. ஆழ்வாருக்கு இறைவன் ‘உண்ணுஞ்சோறு, பருகும் நீர் என்னலாம்படி இருந்தான்’; அங்ஙனமே இறைவனுக்கும் ஆழ்வார் ‘உண்ணுஞ் சோறு, பருகும் நீர’’ ஆகிவிட்டார்[1]. ‘அழுகையும் ஆன்மீக வாழ்வும்’ என்று கட்டுரையில் அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றையொன்று தழுவி கொஞ்சுவதைக் காணலாம். குழந்தை உயிர்வாழ அழுவதும், ஆன்மா வீடுபேற்றை நாடி அழுவதும் ஒப்பாய்வு முறையில் அருமையான விளக்கம் பெற்றுள்ளது.[2] ‘அறிவியல் தமிழ்’ என்ற கட்டுரை நூலின் தலைப்பாக அமைந்தது. இதில் தமிழில் அறிவியல் எழுந்ததை 1. தொடக்கநிலைத் தொண்டர்கள், 2. கலைச்சொல்லாக்க முயற்சிகள், 3. நூல்களை வெளியிடும் முயற்சிகள், 4. எதிர்கால திட்டங்கள் என்ற தலைப்புகளில் தமிழில் அறிவியல் வந்து வளர்ந்த வரலாறு தெளிவாகக் காட்டப்படுகிறது. இந்நிலைகளில் பேராசிரியரின் தொண்டும் பளிச்சிடுகிறது.

7.திருக்குறள் கருத்தரங்கு மலர்-1974 (பதிப்பு): இது 1974ல் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் திருக்குறள் பற்றிய நான்குநாள் கருத்தரங்கில் அறிஞர்களால் படிக்கப்பெற்ற ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழியில் அமைந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு. இதில் பேராசிரியரின் கல்விபற்றிய ஆங்கில

கட்டுரை ஒன்று அமைந்துள்ளது. இதில் வள்ளுவரின் கல்விபற்றிய கொள்கைகளை விரிவாக விளக்குவார்.

8.கம்பனில் மக்கள் குரல்: இது பேராசிரியர் கம்பராமாணம் பற்றிப் பல்வேறு மலர்களில், இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. கம்பன் காலத்தில் முடியாட்சி நீங்கி குடியாட்சிக்கு வித்திட்ட கருத்துகள் இலைமறை காய்கள்போல் அமைந்திருப்பதைக் காணலாம். ‘மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்’ என்ற புறநானூற்றுக் கருத்து, மன்னன் உலகிற்கு உயிர் போன்றவன் என்று முடியாட்சியைக் காட்டுவது. கம்பன் ‘உயிரெல்லாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்’ என்று தசரதனைக் காட்டுவான். இதில் மக்களாட்சிக் கூறு ஒளிர்வதைக் காணலாம், ‘கம்பனில் மக்கள் குரல்’ என்ற கட்டுரையில் மானிட அரசு (அயோத்தி), குரக்கின அரசு (கிட்கிந்தை), அரக்கரசு (இலங்கை) இவற்றில் அரசை மக்கள் விமர்சனம் செய்வதைப் பேராசிரியர் தெளிவாகக் காட்டுவார். ஏனைய கட்டுரைகள் கம்பனுடைய கருத்துகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு திறனாய்வு செய்து காட்டுவார்.

9.காந்தி அடிகள் நெஞ்சு விடு தூது (பதிப்பு): இது பூதூர் கி. வேங்கடசாமி ரெட்டியாரால் எழுதப் பெற்ற நூல். இதை உரைக்குறிப்பு, ஆராய்ச்சி முன்னுரை பேராசிரியர் ரெட்டியார் அவர்களால் எழுதப்பெற்ற ஆய்வுப் பதிப்பாக வெளிவந்தது.

10.திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் : இது பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில், ‘பேராசிரியர் ரா.பி. சேதுபிள்ளை அவர்களின் வெள்ளிவிழா சொற்பொழிவுகள்’ என்ற திட்டத்தின்கீழ் ஆற்றிய 1. சங்ககால வேங்கடம், 2. இக்கால வேங்கடம், 3. வேங்கடத்தின் மீதெழுந்த இலக்கியங்கள் என்ற மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பாகும் இந்நூல். இதில் வேங்கடம் பற்றிய ஆய்வு அறிவுக்கு விருந்தாக அமைகின்றது.

11.தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை: இந்நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ‘டாக்டர் (திருமதி) கிருஷ்ணா சஞ்சீவி - திருமதி கண்ணம்மாள் நடேசன் சொற்பொழிவு திட்டத்தில்’ (1986-87) ஆண்டில் நிகழ்த்திய 1. தமிழ் இலக்கியத்தில் அறம், 2.தமிழ் இலக்கியத்தில் நீதி, 3. தமிழ் இலக்கியத்தில் முறைமை என்ற மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பு. இதில் அறம் வேறு, நீதி வேறு என்பதில் அடங்கிய வேற்றுமை, முறைமை என்ற கருத்து காலந்தோறும் மாறிவரும் கருத்து போன்றவை சிறப்பாக எடுத்துக்காட்டி விளக்கப் பெறுகின்றன. ஊழின் முறைமையையும் எடுத்துக்காட்டி விளக்குவது சிறப்பு.

12.புதுவைக் கவிஞர் சுப்பிரமணியப் பாரதி, ஒரு கண்ணோட்டம்: இது பேராசிரியர் புதுவைப் பல்கலைக் கழகத்தில் திரு. ஆனந்தரங்க கிருஷ்ணசாமி பிள்ளை, திருமதி அரசம்மாள் அறக்கட்டளை (1989)ன் கீழ் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவு அடங்கிய சிறு நூல். இதில் 1.பாட்டுக்கொரு புலவர், 2. நாடு, மொழிப்பற்றாளர், 3. கல்விச் சிந்தனையாளர், 4. வைணவச் செல்வர், 5. சக்திதாசர், 6. சமரச நோக்கர், 7. புதுக் கவிதை நாயகர் என்று ஏழு கோணங்களில் பாரதியாரின் கவிதைகளை ஆய்ந்து விளக்குவது இந்நூலின் சிறப்பாகும்.

13.பாவேந்தன் பாரதிதாசன்-ஒரு கண்ணோட்டம்: இது பேராசிரியர் பாரதிதாசனின் நூற்றாண் விழா நினைவாக வெளியிட்ட முதல் நூல். (ஏனைய இரண்டு நூல்கள்

எழுதப்பெற்று வெளிவரும் நிலையில் உள்ளன). இந்த முதல் நூலில், 1. புரட்சிக் கவிஞர் ஓர் அறிமுகம், 2. பாரதியார் பற்றிப் பாவேந்தர், 3. கடவுள் சமயம் பற்றிய சிந்தனைகள், 4. மொழிவழிச் சிந்தனைகள், 5. சுந்தர மூர்த்தி வழியில், 6. சிறுவர் இளைஞர் இலக்கியம், 7. காதல் பற்றிய சிந்தனைகள், 8. சமூக நலம் பற்றிய சிந்தனைகள், 9. புதியதோர் உலகம் என்ற ஒன்பது கோணங்களில் பாரதிதாசனையும் அவர் நூல்களையும் ஆய்ந்து, புரட்சிக் கவிஞரை அறிமுகம் செய்கிறார் பேராசிரியர்.

<u>அடிக்குறிப்புகள்:</u>

1. அறிவியல் தமிழ் ப.143
2. மேலது, ப.125-134

****









ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ IV

இயல் - 6

திறனாய்வுத் தமிழ்



பகுதி 4 :<>: இயல் – 6

திறனாய்வுத் தமிழ்

பல்வேறு துறைகளில் தமிழ் நூல்கள் பல்கிப் பெருகி இருந்தபோதிலும் இலக்கியத் திறனாய்வுத் துறையில் அதிகமாகத் தமிழ் நூல்கள் தோன்றவில்லை. இதனால் தமிழ் மொழிக்குச் சிறப்பு குறைந்துவிட்டதாக நினைப்பது தவறு. தமிழ்ச் சங்கங்கள் நிலவிய காலத்தில் இலக்கிய பல்கி வளர்ந்தமைக் கண்கூடு. அக்காலத்தில் திறனாய்வுக் கழகம் ஒன்று இன்மையால் பிற்காலத்தில் இலக்கியம் மங்கி மடியக் காரணமாயிற்று. சங்கங்கள் நூலை மதிப்பிடுகையில் முடிவு முறைத் திறனாய்வு (Judicial Criticism) என்ற முறையையே மேற்கொண்டதனால் அது திறனாய்வு வளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. சங்கங்கள் ஏதாவது ஒன்றை நல்லது என்று மனத்துட் கொண்டு அதனோடு ஒத்து வராத அனைத்தையும் அல்லது என்று கூறிக்கொண்டே இருந்ததால், புதிய இலக்கியங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாது போயிற்று என்று கருதலாம். தொல்காப்பியத்தில் புதிய இலக்கியங்கட்கு ‘விருந்து’’ என்ற பெயர் சூட்டியிருந்தபோதிலும் அது திறனாய்வு இலக்கியம் வளர்வதற்குச் சிறிதும் துணை செய்யவில்லை.

ஓர் இனிப்புப் பண்டத்தைச் செய்யும் வகையை அறியாத ஒருவர் அதனைத் தின்று நுகர அறியார் என்று கூறுதல் தவறு. அதுபோல இலக்கியத்தைத் திறனாய்வு செய்ய நூல் எழுதாமையால் அதனை நுகரவும் தமிழர் அறியார் என்று கூறுதல் பொருத்தமற்றது. நல்ல இலக்கியங்களைத் தமிழர் நன்கு அநுபவித்த காரணத்தால்தான் இத்துணையளவு தமிழ் இலக்கியங்கள் பெருகின; காலப்போக்கில் வளர்ச்சியும் பெற்றன. ‘நீன் மாடக் கூடலால் புலனாற் பிறந்த சொல்புதிது உண்ணும் பொழுது’’[1] என்றும், ‘தொல்லாணை நல்லாசிரியர் புனர் கூட்டு உண்ட புகழ்கால் சிறப்பின் நிலந்தரு நெடியோன்’’[2] என்றும், ‘‘முதுமொழி நீரால் புலனாற் உழவர், புதுமொழி கூட்டுன்னும் புரிசை சூழ் புணல் ஊர[3] ’என்றும் வரும் மேற்கோள்கள் தமிழர்கள் எவ்வாறு புதிய இலக்கியங்களை நுகர்ந்து மகிழ்ந்தனர் என்பதை நமக்கு அறிவிக்கின்றன. இவற்றுள் முதல் மேற்கோளால், தமிழ்ப் புலவர்களேயன்றி, சாதாரண மக்களும்கூட இலக்கிய நுகர்வு பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு அநுபவித்தவர்கள் தமிழர்கள். இதற்குச் சில விதிகளையும் வரன்முறைகளையும் அமைத்திருக்காமல் நுகர முடியுமா என்பது ஒரு பெரிய கேள்வி. அவர்கள் அவ்வாறு வரைந்திருப்பின் அந்த விதிகளே இலக்கியத் திறனாய்வாக இருந்திருக்கும். ஆனால் இன்று அது நமக்குக் கிடைத்திலது. உரையாசிரியர்களிடமும் திறனாய்வுக் கூறுகள் அமைந்திருந்தன என்பதற்குச் சான்றுகள் இல்லாமல் இல்லை. எடுத்துக்காட்டாக திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகரிடம் இக்கூறு அமைந்திருந்தது என்பதற்கு குறள் 338, 355, 412, 501 என்பதன் உரையினால் தெளியலாம். உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியரின் சிந்தாமணி 2453 எண்ணுள்ள பாடல்களின் உரையால் இவரது திறனாய்வுக் கூறினைத் தெளியலாம்.

திறனாய்வு நூல்களின் வகை: இலக்கியத் திறனாய்வில் எழும் திறனாய்வு நூல்களின் வகையாக (அ) தனி இலக்கியங்கள் பற்றியவை (ஆ) பொதுவானவை. (இ) இலக்கணம் பற்றியவை என்று பிரிக்காலம். பேராசிரியர் ரெட்டியாரின் திறனாய்வுப் படைப்புகளாக 1. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, 2. அகத்திணைக் கொள்கைகள் 3.பாட்டுதிறன், 4. புதுக்கவிதை போக்கும் நோக்கும், 5. கண்ணன் பாட்டுத் திறன் 6. பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, 7. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு, 8. பாரதீயம்,

9. கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள், 10. பாவேந்தர் பாட்டுதினறன், 11. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு, 12. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி என்பவற்றைக் கருதலாம். வைணவ சமய இலக்கியங்களைத் திறனாய்வு நெறியில் நோக்கியவைகளாக 1. விட்டுசித்தன் விரித்த தமிழ், 2. ஆழ்வார்களின் ஆரா அமுது, 3. பரகாலன் பைந்தமிழ், 4. சடகோபன் செந்தமிழ் ஆகியவற்றைக் கருதலாம். சைவசமய இலக்கியங்களைத் திறனாய்வு நெறியில் நோக்கியவைகளாக 1. ஞானசம்பந்தர், 2. நாவுக்கரசர், 3. தம்பிரான் தோழர், 4. மாணிக்கவாசகர் ஆகியவற்றைக் கருதலாம். சமயநூல்களின் திறனாய்வுகளாக எடுத்துக்கொண்டால் 1. முத்திநெறி, 2. சைவசமயவிளக்கு ஆகியவற்றைக் கருதலாம்.

<u>தனி இலக்கியம் பற்றியவை:</u> பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தனி இலக்கியங்களில் சிலவற்றை ஆய்ந்து வெளியிட்டுள்ளார். அவற்றைத் தனித்தனியாக ஆய்வது என்பது இந்த ஆய்வுக்கு அப்பாற்பட்டதாகும். ஆகவே, அவற்றில் உள்ள சில முக்கியமான தனித் திறனாய்வுக் கூறுகளை மட்டிலும் எடுத்துக்காட்டுவது பொருத்தமாகும்.

<u>1.)கண்ணன் பாட்டுத்திறன்</u>: 1) இந்த நூலில் வழிவழிக் கண்ணன் என்ற முதல் இயலில் கண்ணன் வழிபாடு தொல்காப்பியர் காலம் முதல், பாரதியார் காலம் வரை நடைபெற்று வந்தமைக் குறிப்பிட்டிருப்பது ஒரு சிறந்த வரலாற்றுக் கண்ணில் கண்ட திறனாய்வுக் குறிப்பாகும்.

2.) வைணவ சமயத்தின் மந்திரமாகிய திருமந்திரம் பரமான்மாவுக்கும், சீவான்மாவுக்கும் உள்ள ஒன்பது வகை உறவுகளைக் காட்டுகின்றது. பிள்ளை உலகாசாரியாரின் 'நவவித சம்பந்தம்' என்ற கிரந்தம் இதைத் தெளிவாக விளக்குகின்றது. இவை தவிர, ஆழ்வார் பாசுரங்களில் இத்தகைய உறவுகள் பேசப்படுகின்றன. இந்த கருத்துகளே பாரதியாருக்குக் கண்ணன்பாட்டு எழுதுவதற்கு வழிகாட்டி இருக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறுவது மற்றோர் திறனாய்வுக் கருத்து.[4]

3.) கண்ணன் பாட்டில் சில பாடல்களில் அற்புதரசம், சிருங்காரம், பீபத்சம் போன்ற ரசங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பாடலை முழுமையாக அநுபவிக்க வேண்டுமென்றால், ரசங்களின் தத்துவத்தைப் படிப்போர் தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும். இவற்றை மனத்தில்கொண்டு பேராசிரியர் ரெட்டியார் ரசத்தைப்பற்றிய ஒரு விளக்கத்தை இந்நூலின் மூன்றாவது இயலாக அமைத்துள்ளார். இ∴து ஓர் திறனாய்வு நோக்கு. இதன் மற்றொரு சிறப்பு என்னவெனில் வடமொழி ரசத்திற்கு இணையான தமிழ் மெய்ப்பாடுகளை குறிப்பிட்டிருப்பதாகும்.

4.) 'கண்ணன் பிறப்பு' என்ற ஓர் இயலில் பாடல்களை விளக்கிக் கூறும் போக்கில் பெரியாழ்வாரின் கண்ணன் பற்றிய பாசுரங்களை எடுத்துக்கொண்டு பாரதியார் பாட்டுடன் ஒப்பு நோக்கிக் காட்டுவது மற்றொரு திறனாய்வுக் குறிப்பாகும்.[5]

5.) பாடல்களை விளக்கும்போது அற்புத ரசத்தைப் பொருத்திக்காட்டி விளக்குவது இந்த ஆசிரியரின் தனிச் சிறப்பாகும். எடுத்துக்காட்டு 'கண்ணன் - தோழன்' என்ற பாடலில் வரும் 'வாச்சல்யரசம்' விளக்கப்படுவதை இந்நூலில் காணலாம்.[6]

6.) 'கண்ணம்மா – என் தாய்' என்ற கட்டுரையில் குழந்தையின் வயது நிலைக்கு ஏற்ப உடலுக்கும் உள்ளத்திற்கும் விருந்து அளிப்பதை விரித்துக்காட்டுவது சிறந்த திறனாய்வுக் குறிப்பாகும்.[7]

7.)'கண்ணன் - என் தந்தை' என்ற கட்டுரையில் வருணாசிர தர்மம், அழகுணர்வு, தத்துவக் கருத்துகள், போலிச் சுவடிகள் என்ற கருத்துகளைத் திறனாய்வு செய்வதும், வியப்புச் சுவையை எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளக்குவதும் சிறந்த திறனாய்வு ஒளியைக் காட்டுகிறது.[8]

8.)'கண்ணன் - என் சேவகன்' என்ற கட்டுரையில் இறைவன் ஆன்மாவை அநுபவிக்கும்பாங்கு இதிகாசக் கண்ணனும், இக்காலத்து சேவகர்களும் எங்ஙனம் சேவை புரிகின்றனர் என்பதை விளக்கும் திறன் கண்ணின் சௌலப்பியத்தோடு ஒப்பிட்டுக்காட்டும் பாங்கு திறனாய்வு ஒளியைக் காட்டும்.[9]

9.)'கண்ணன் - என் குருவும் சீடனும்' என்ற கட்டுரையில் குருவுக்கும், சீடனுக்கும் இடையே நடைபெறும் வாக்குவாதங்கள், அவற்றிடையே தோன்றும் புதிய ஒளி, சீடன் திருந்துதல், குழந்தையை மையமாக வைத்து கல்வி நடைபெற வேண்டும் என்ற கருத்து, இக்காலத்தில் மதிப்பெண் வழங்குவதில் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்படும் தில்லுமுல்லுகள் ஆகியவைகளை எடுத்துக்காட்டி விளக்குவது சிறந்த திறனாய்வுப் போக்காகும்.[10]

10.)'கண்ணன் - என் குழந்தை' என்ற கட்டுரையில் கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற பாசுரங்களில் உள்ள குழந்தை இயல்பை எடுத்துக்காட்டியும், குலசேகராழ்வார் குழந்தைக் கண்ணனை ஒரு கவிதையில் படம் பிடித்துக்காட்டுவதையும் எடுத்துக்காட்டி, பாரதியார் இந்த பாடலின் தலைப்பில் பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டு என்ற குறிப்பையும் ஒப்பிட்டுக்காட்டி மகிழ்வது ஒரு திறனாய்வுக் குறிப்பு.[11]

11.)'கண்ணன் - என் காந்தன்' என்ற கட்டுரையில் 'காந்தன்' என்ற சொல் களவுக்காலத்தில் தலைவனுக்குப் பாரதியார் சூட்டிய பெயர் என்றும், களவு வாழ்க்கையில் காதலர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் வாய்ப்புகள் அரிதாக இருக்கும்போது, இருவர் மாட்டும் காதல் உணர்ச்சி காந்தசக்திபோல் உறைப்பாக இருக்குமாதலால் ஆண் மகனைக் 'காந்தன்' என்றும் பெண் மகளைக் 'காந்தம்' என்றும் விளக்குவதும், பாடலில் 'பங்கம் ஒன்றுமில்லாமல் முகம் பார்த்திருந்தால் போதும்' என்ற அடிகளுடன் 'கண்களவுகொள்ளும் சிறு நோக்கம் காமத்தில் செம்பாகமன்று பெரிது' (குறள்-1092) என்ற குறளுடன் வைத்து விளக்குவதும் திறனாய்வு அருமைப்பாட்டின் கொடுமுடி.[12] இன்னும் பல அரிய கருத்துகள் விரிவு அஞ்சி விடப்பெற்றன. சுருக்கமாகக் கூறினால் 'கண்ணன் பாட்டு, பல கோணங்களில் கண்ணனைப் படம் பிடித்த கேமரா''[13] என்ற வாலியின் புதுக்கவிதை ஒரு குறியீடாக அமைந்து படிப்போரை மகிழ்விக்கிறது.

2.பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு: பாரதியின் பாஞ்சாலி சபதம் யானைத் தந்தத்தில் செதுக்கப்பட்ட கண்ணன், முருகன், இவர்களின் உருவம்போல் அமைந்த ஓர் அழகிய சொல்லோவியம். இதைப்பேராசிரியர் பல கோணங்களில் ஆய்ந்து வெளியிட்ட நூலே இது. இதனைக் கதைக்கரு, காவியத்தின் ஒருமைப்பாடு, காவியத்தலைவி (திரௌபதி), காவியத்தின் எதிரன் (துரியோதனன்), பிறகாவிய மாந்தர்கள், தெய்வக்கூறுகள், காப்பிய நடை, காவியத்தின் படிமங்கள், காவியம் உணர்த்தும் உண்மை என்ற **ஒன்பது** தலைப்புகளில் ஆய்ந்து மேனாட்டு திறனாய்வுமுறையில்

காவியத்தை ஆய்வது போன்ற பணியை மேற்கொண்டார் பேராசிரியர். இவை தவிர 'காவியம் உணர்த்தும் உண்மைகள்' என்ற தலைப்பில் காவியத்தின் தலைமைப்பண்பு, காயவிப்பண்பு, பொறாமையின் கேடு, கவராடலின் கொடுமை, ஊழின் பெருவலி என்ற கோணங்களில் ஆய்ந்திருப்பது ஒரு சிறந்த திறனாய்வாகும்.

3.சடகோபன் செந்தமிழ்: இது நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களைப் பற்றிய திறனாய்வு நூல். திருப்புளியாழ்வாரின் திருவடியின்கீழ் இருந்துகொண்டு, முப்பத்தாறு திருப்பதிகளைப்பற்றிய பாசுரங்கள் அருளியுள்ளார் என்பது குருபரம்பரைச் செய்தி. இந்த முப்பத்தாறு திருப்பதிகளும் தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவை. அவற்றைப் பேராசிரியர் ரெட்டியார் சோழநாடு, பாண்டிய நாடு, மலைநாடு, வடநாடு என்று பிரித்துக்கொண்டு விளக்குவது ஒரு தனிச் சிறப்பு.

1.) ஆழ்வார் தாமான தன்மையில் கேசிய எழுபத்து மூன்று பதிகங்களையும் பிராட்டி நிலையில் தம்மை ஏறிட்டுக்கொண்டு பேசிய இருபத்தேழு பதிகங்களையும் தனித்தனியாக பிரித்து விளக்கியது மற்றொரு சிறப்பு.

2.) அகப்பொருள் பாசுரங்களைத் தோழிப் பாசுரம், தாய்ப்பாசுரம் என்று பிரித்துக்கொண்டு விளக்குவதற்கு முன்பு அகப்பொருள் தத்துவத்தை முன்னதாக் கூறி அதற்குபின் இவற்றை விளக்குவது இன்னொரு சிறப்பு.[14]

3.) தோழிப் பாசுரத்தின் தத்துவத்தை விளக்கும்போது 'அநந்யார்க சேஷத்துவம்' (எம் பெருமானுக்கே அன்றி பிறர்க்கு அடிமை அல்ல என்பது) என்ற தத்துவத்தை விளக்குவதும், தாயப்பாசுரத்தை படுததுக்கொண்டு ஈசுவர பாரதந்திரத்தையும், அவளே உபாயமாகின்றாள் என்ற கருத்தைத் தெரிவிப்பதும், மகள் பாசுரத்தை எடுத்துக்கொண்டு எம்பெருமானே உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கின்றான் என்ற சித்தோபாயத்தை விளக்குவதும் மற்றொரு தனிச்சிறப்பு.[15]

4.) மகள் பாசுரங்களில் தூது பற்றிய பாசுரங்களைத் தனியாகப் பிரித்துக்கொண்டு அவற்றின் தத்துவத்தைப் பறவைகள் ஆசாரியர்களுக்கு குறியீடு என்று விளக்குவது மேலும் சிறப்பாகும்.[16]

5.) தானான தன்மையிலும் பிராட்டியான ஆழ்வார் நாயகித் தன்மையிலும் அருளிய பாசுரங்களைக்கொண்டு, அவர்தம் இறையநுபவத்ததை விளக்குவது சிறப்பாகும்.[17] இங்கு ஈசுவர இலாபம் சேதநனுக்கா? சேதநலாபம் ஈசுவரனுக்கா? என்ற ஒரு கேள்விக்கு விடையாக எம்பெருமான் நம்மாழ்வாரை அவருடைய 'அவா அற' சூழ்ந்து கொண்டதைக்காட்டி, சேதநலாபம் ஈசுவரனுக்குத்தான் சிறந்தது என்பதை எடுத்துக்காட்டுவார்.

6.) இந்தத் திருவாய்மொழியை அர்த்த பஞ்சகம், துவயம் என்ற அடிப்படையில் விளக்குவது மிகச் சிறப்பாக அமைகின்றது.[18]

4.பரகாலன் பைந்தமிழ்: ஆழ்வார் பன்னிருவரில் புலமை மிக்க ஆழ்வார் திருமங்கையாழ்வார். அவருடைய பாசுரங்கள் சொல்நயம், பொருள்நயம், பக்திச் சுவை முதலியவை ததும்பி நிற்கும்; அவர் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். இப்பிரபந்தங்களை ஆய்ந்து சில அரிய கருத்துக்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது இந்த நூல்.

1.) இவர் வாழ்க்கை திருமந்திரத்தைச் சுற்றி இயங்குகின்றது. இந்த மந்திரத்தை மணக்கோலத்துடன் வந்த எம்பெருமானிடம் வாள்வலியால் பெறுகின்றார். ஆகவே பேராசிரியர் இந்த வரலாற்றை விளக்குகின்றார்.

2.) திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலம் இந்த திவ்விய தேசங்கள். இந்த திவ்விய தேச அநுபவத்தையே திருத்தலப் பயணமாக எடுத்துக்கொண்டார் ஆழ்வார் என்பதை விளக்குகின்றார் பேராசிரியர்.

3.) வடநாட்டுத் திருப்பதிகளாகிய திருப்பிரிதி, பதரிகாசிரமம், சாளக்கிராமம், நைமிசாரணியம், வடமதுரை, அயோத்தி, பிருந்தாவனம், ஆயர்பாடி, வன்துவாரபதி, சிங்கவேள் குன்றம், திருவேங்கடம் ஆகியவற்றைச் சேவித்து, பாசுரங்களால் மங்களாசாசனம் செய்கின்றார். திருப்பாற் கடலையும், பரமபதத்தையும், மானசீகமாகக் கண்டு அநுபவித்து மங்களாசாசனம் செய்து, வடநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தலைக்கட்டுகின்றார். பேராசிரியர் இத்திருத்தலங்களையெல்லாம் வாசகர்களுக்கு காட்டுவதோடு, பாசுரங்களின் தத்துவக் கருத்துகளையும் எடுத்துக்காட்டுகின்றார்.

4.) இங்ஙனமே, தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தில் திருஎவ்வுள்ளூர் தொடங்கி தொடர்ந்து, திருக்கடிகை, திருநின்றவூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கூடல் மல்லை, திருவிடஎந்தை இவற்றைச் சேவித்து மங்களாசாசனம் செய்துவிட்டு காஞ்சிக்கு வருகிறார். அங்கு அத்திகிரி, திருவெ.ஃகா, திருஅட்டபுயகரம், திருஊரகம், திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம், திருக்கல்வனூர், நிலாத்திங்கள் துண்டம், பரமேசுவர விண்ணகரம், பவளவண்ணம், திருதன்கா, திருப்பாடகம், திருப்புட்குழி ஆகிய திருத்தலங்களை சேவித்து தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கின்றார்.

5.) நடுநாட்டுத் திருப்பதிகளாகிய திருக்கோவலூர், திருவகீந்திபுரம் ஆகிய இரண்டையும் சேவித்து மங்களா சாசனம் செய்கின்றார்.

6.) சோழநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்) தொடங்கி, தொடர்ந்து காழிச்சராம விண்ணகரம், திருவாலி ஆகியவற்றைச் சேவித்தபின் திருநாங்கூர்த் திருப்பதிகளாகிய மணிமாடக்கோயில், வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம், திருத்தேவனார்த்தொகை, புருஷோத்தமம், செம்பொன்செய் கோயில், திருத்தேற்றியம்பலம், திருமணிக்கூடம், காவளம்பாடி, திருவெள்ளக்குளம் ஆகிய பதினோரு திருப்பதிகளைச் சேவித்து மங்களா சாசனம் செய்கின்றார்.

அடுத்து இந்தளூர், தலைச்செங்க நாண்மதியம், வெள்ளியங்குடி, புள்ளம்பூதங்குடி, திருக்கூடலூர், கரம்பனூர் (உத்தமர்கோயில்), திருவரங்கம், திருப்பேர்நகர் (அப்பக்குளத்தான் சந்நிதி), திருக்குடந்தை, தஞ்சை மாமணிக்கோயில், திருக்கண்டியூர், திருநறையூர், திருச்சேறை, திருவெழுந்தூர், சிறுபுலியூர் சலசயனம், திருக்கண்ண மங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகை ஆகிய தலங்களைச் சேவித்துச் சோழநாட்டுத் திருத்தலப் பயணத்தை முடிக்கிறார்.

7.) திருமெய்யம் தொடங்கி திருப்புல்லாணி, திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர், மதுரைக்கூடல் (தென்மதுரை), திருமோகூர், திருத்தன்கால், திருக்குறுங்குடி ஆகிய

திருத்தலங்களைச் சேவித்து பாண்டி நாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கிறார்.

8.) மலைநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தொடங்கி திருநாவாய், திருமூழிக்களம் ஆகிய இரண்டைச் சேவித்து மலைநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தலைக்கட்டுகிறார். இங்ஙனமாக இவர் 108 திவ்வியதேசங்களுள் 86 திருத்தலங்களைச் சேவிக்கிறார். இங்ஙனம் ஆழ்வாரின் திருத்தலப் பயணத்தை விரித்துக்காட்டிய பேராசிரியர், ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் உள்ள தத்துவத்தை எடுத்துக்காட்டி விளக்குவது ஒரு தனிச்சிறப்பு.

5.குயில்பாட்டு: 1) இந்த நூலில் பாட்டின் பின்னனி என்ற தலைப்பில் ஒரு கிருட்டிணசாமி செட்டியாருக்குச் சொந்தமான மாஞ்சோலைதான் கதையின் நிகழிடம் என்பது காட்டப்பெறுகின்றது. இந்தப்பாட்டை கவிமணியின் குயில்பாட்டு பற்றிய

‘குயில் பாட்டிலே-காதல்
கொப்புளிக்கு தடா
செயல்மறந் தேனடா-லாகிரி
சிரிசிற் கொண்டதடா’

என்ற பட்டிக்காட்டான் அநுபவத்தை எடுத்துக்காட்டி கவிதையநுபவம் இன்னது என்பதைச் சுட்டிக்காட்டுவது ஒரு சிறப்பு.

2.) ‘குயில்காதற்கதை’ என்ற தலைப்பில் ஒரு பெட்டைக்குயிலிடம் நான்கு நாள் அதன் கதையை கேட்கின்றார். அது புன்மைக் குரங்கினுடனும் பொதிமாட்டுடனும் தான் விளையாடிய காதல் விளையாட்டு தன்பிழை அல்லவென்றும், அது விதியின் சதி என்றும் கூறி, தான் பொதியமலையில் இருந்து முனிவர் உரைத்த தன் முன்னை பிறப்பின் வரலாற்றைச் செப்புகின்றது.

3.) மூன்றாவது இயலில் குயிலின் முற்பிறப்பின் வரலாறு, முனிவர் உரைத்த முறையில் கூறப்பெறுகின்றது. கவிஞர்மீது காதல்கொண்டு அது கவிஞரின் கையில் விழுகின்றது. அக் குயிலை இன்ப வெறிகொண்டு கவிஞர் முத்தமிடுகிறார். அதே தருணத்தில் குயில் மறைகின்றது. அழகிய பெண்ணுருவத்தைக் காண்கிறார். அதனைப் பெருங்களி கொண்டு நன்னித் தழுவி, நறுங்கள் இதழினையே முத்தமிட்டு முத்தமிட்டு, மோகப் பெருமயக்கில் சித்தம் மயங்கிச் சில போழ்து இருக்கின்றார். கவிஞரின் கனவு கலைகின்றது. விழித்துப் பார்க்கும்போது தான் வீட்டில் இருப்பதை அறிகின்றார். தாம் கண்டதெல்லாம் கனவு என்பது அவருக்கு வெட்ட வெளிச்சமாகின்றது.

4.) நான்காவது இயலில் பேராசிரியர் ரெட்டியார் குயில்பாட்டை, ஒரு காதல்பாட்டு என்று கருதி பண்டைய அக இலக்கிய கோணத்தில் ஆராய்கின்றார். இந்த அகத்தினை மரபுகளை இந்த பாடலில் கவிஞர் பெயரிட்டு காட்டாவிடினும், பல துறைகளை எடுத்துக்காட்டுவதுடன் அவற்றை கண்ணன் பாட்டுடனும், இறையனார் களவியலுடனும், அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள், தஞ்சை வாணன் கோவை முதலிய இலக்கியங்களுடனும் பொருத்திக்காட்டுவது மிகச் சிறப்பாகும்.

மேலும், சிந்தாமணியில் கோவிந்ததையார் இலம்பகத்தில் கோவிந்தன் தன் மகளின் மேனி அழகினைக் காட்டும் 'வெண்ணைபோல் மேல்லினியள்'' (சீவக சிந்தா.480) என்ற பாடலை எடுத்துக்காட்டி குயில் பெண்ணாக மாறிபின் அவள் அழகை,

. . . . கவிதைக் கனி பிழிந்த சாற்றினிலே, பண்கூத்தெனு
மிவற்றின் சாரமெல்லாம் ஏற்றி அதனோடே இன்னமுததைத் தான்
கலந்து காதல் வெயிலிலே காய வைத்த கட்டியினால் மாதவனின்
மேனி வகுத்தான் பிரமன் என்பேன்[19]

என்ற ரஸம் சொட்டுக் கவிதையின் எல்லையாக வருணிப்பதை எடுத்துக்காட்டுவது மற்றொரு தனிச்சிறப்பு. முத்தாய்ப்பாக வள்ளலார், நடராஜப்பெருமானை வருணிக்கும் பகுதியும், பாரதியார் காதல் நிலைக்கேற்றவாறு அமைத்துக்கொண்டதையும், ஒப்புக்காட்டுவது மிகச் சிறப்பு.

5.) ஐந்தாவது இயலில் குயில்பாட்டின் இயற்கை எழிலை எடுத்துக் காட்டும் போக்கில் பாரதியார் பாடிய ஞாயிறு, வெண்ணிலா, விண்மீன்கள், காற்று, மழை முதலிய பாடற்பகுதிகளை ஒப்பிட்டுக்காட்டுவது தனிச்சிறப்பு. பேராசிரியர் ரெட்டியார் தனது முழுக்கவனத்தையும் காட்டியுள்ளார். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்' என்ற இசைப்பாட்டின் கருத்து குயிற்பாட்டின் கருத்துடன் பொருத்திக் காட்டப்படும்போது மனித உணர்ச்சியோடு இயற்கையை இணைத்துக்காட்டும் பாங்கு பாரதியாரின் புதிய கலை நுணுக்கம் ஒளிவிட்டுத் திகழ்வதை நம்மால் அனுபவிக்க முடிகிறது.

6. பாட்டின் உள்ளுறையைப் பேராசிரியர் ரெட்டியார் ஊகித்துக் கூறுவது:

அ) குயில் சீவான்மா, கவிஞர் பரமான்மா, மாடு ஆவரண சக்தி, குரங்கு விட்சேபசக்தி, இவற்றின் தொடர்புகளைக் கைவல்ய நூல்கொண்டு விளக்குவார் ஆசிரியர். குயில் கவிஞரின் கையில் வீழ்தலை சரணாகதி தத்துவத்தைக் காட்டுகின்றது என்பார். 'இது மெய்க்காதல் வெற்றி பெறுவதை குறிப்பிடுகின்றது'' என்பதை விளக்குவார். குயில்பாட்டில் ஒருமுறை குரங்கின மீதும், ஒருமுறை மாட்டின்மீதும் தனது கைவாளை சுழற்றி எறிவது பொய்மையான மாயத்தை வெட்டி வீழ்த்துவதைக் குறிப்பது. வாளும் வேலும், ஞானத்தின் குறியீடுகள் (கந்தர் அலங்காரம் 25.70)

ஆ) குயில் சீவனைக் குறிக்கும் ஒரு குறியீடு. சின்னக்குயிலி 'தான்' என்ற மம்மதையாலும், 'புருஷன்' என்ற ஆன்மாவிடம் தனக்கு நேரிடக்கூடிய மெய்யானத் தத்துவத்தை மறக்கின்றாள். தன் மாமன் மகனான மாடனிடம், தான் என்ற அகந்தைக் கொண்ட குரங்கினிடம் போலி அன்பு காட்டுகின்றாள். இந்த வினைப்பயனால் அடுத்த பிறப்பில் தன் சொரூபத்தை மறந்து சடமாகிப் பண்டைப் பிரகிருதியின் பரிணாமமாகின்ற உடலின்மீது அன்பு வைக்கின்றாள். குயிலி பரம குருவின் உபதேசம்பெற்று, இருவகை மயக்கம் தெளிந்து, புருஷன் என்ற ஆன்மாவை உள்ளபடி அறிகின்றாள். அந்த ஆன்மாவிடம் மெய்யன்பு வைத்துத் தன் உண்மையான உருவத்தை அந்த ஆன்மாவிடம் ஒன்றாக்கிப் பரமானந்தம் அடைகின்றாள் என்பது இன்னொருவகை உள்ளுறை.

இ) குயிலி வீரமுருகன் என்ற வேடன் மகளாகப் பிறக்கின்றாள். அவள் சேர இளவரசன் மகனை மணக்கிறாள். இந்த இருவர் திருமணம் ஈறில்லா காலம்வரை

ஆன்மாவும் பரமான்மாவும் இணைந்த நிலையை நாம் ஏற்றுக் கொள்வதாக அமைந்துள்ளது.

ஈ) உபநிடத்தில் உள்ள ஒரு குறிப்பைக் குயிற் பாட்டோடு இணைத்து விளக்குவது ஆசிரியரின் தனிச்சிறப்பு. ஒரே வண்ணமுள்ள இரண்டு பறவைகள் ஒரு மரக்கிளையின்மீது அமரந்திருக்கும் ஒரு நிலையை உபநிடதம் காட்டுகின்றது. அவற்றுள் ஒரு பறவை அந்த மரத்தில் உள்ள கனியைத் தின்று தன்னை மறந்து விடுகின்றது. மற்றொன்று பொறுமையாகப் பறவை உண்பதைக் கண்டுகளிக்கின்றது. முன்னது ஆன்மாவையும் பின்னது இறைவனையும் உபநிடதம் குறிப்பிடுவதாகத் தத்துவ அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர். குயில் பாட்டில் மாடும் குரங்கும் நிலையற்ற உலக இன்பங்களைக் குறிக்கின்றன. ஆனால், குயில் ஞானவாளால் அவற்றை அழத்தொழிக்கக் காரணமாகின்றது. பின்னா் அது புலன்உணர்வுகளின் அடிமைத்தளைகளினின்று விடுபட்டு, அந்தமில் பேரின்பத்தை நல்கும். வீடுபேற்றை அடைகின்றது. கவிஞர் குயிலை நாடித் திரிவது, அடைய முடியாதவற்றை-அறிய முடியாதவற்றை-நோக்கி மேற்கொண்ட நெடும் பயணத்தை குறிப்பிடுவதாகக் கருதலாம். இந்த நெடும்பயணம் பாரதியாரின் அகத்துள்ளே நடைபெறும் பயணமாகும்.

உ) பாரதியார் இசைக்கலையைப்பற்றி பெரு மதிப்புக் கொண்டவா். கிழமாட்டின் வானத்திரிபோல் ‘மா’ என்று உருமுதலும், குரங்கின் பொருளற்ற ‘நெரு, நெரு’ என்று ஓயாமல் கடித்துக்கொள்ளுதலும், இசைபற்றிய அடிப்படையை அறியாத ஒரு சாதாரண இசை வாணனை நினைவுகூறச் செய்கின்றன. இவன் அங்க சேட்டைகளையும், முகச்சுளிப்புகளையும் இசை என்று தவறாகக் கருதுபவன். குயிலோ எல்லா முறையிலும் முழுமைபெற்ற குற்றங்குறைபாடுகள் எவையும் இல்லாத இசைவாணரை நினைக்கச்செய்கிறது.

ஊ) குரங்கின் சித்திரக் கவிபுனையும் வக்கனைப் புலவனுக்குக் குறியீடு. அங்ஙனமே மாடன் இலக்கணப் பொதி சுமக்கும் இலக்கணப் புலவா்க்குக் குறியீடு. இவா்கள் இருவரும் கவிஞருக்கும், கவிதைக்கும் இடையில் போட்டியிடும் போலிகள். இந்தப் போலிகள் குயிலிடம் போலி நாடகம் நடத்துக்கின்றனர். உண்மைக் கவிஞர் இதனைக் கண்டு நெஞ்சம் குமுறுகின்றார். சினம் பொங்கி எழுகின்றது. கவிதை மங்கை கவிஞனிடம் ஐக்கியமாகி விடுகின்றாள். ‘குயில்பாட்டு’ என்ற அற்புதக் கதைக் காவியம் பிறந்து விடுகின்றது. இந்தக் கருத்தை பாரதியாரின் கவிதைக் காதலி என்ற ஒரு பாட்டுடன் பொருத்திக் காட்டுவது பேராசிரியரின் திறனாய்வுத் திறனைக் காட்டும் கொடுமுடி.

7. குயில்பாட்டு-ஒரு மதிப்பீடு என்ற தலைப்பில் தொடக்கம், முடிவு, அளவான வருணனை, தொடர்பான நிகழ்ச்சிகள், நடை, யாப்பு, முறை, சொல்வளம், காதல் உணர்வு, கற்பனை என்ற தலைப்பில் கவிஞரின் உணர்வு, நகைச்சுவைக் கூறுகள், பட்டியலிட்டுக் காட்டும் கருத்துகள் யாவும் திறனாய்வுச் சுடர்களாகும். இந்த சிறந்த கவிதைப் படைப்பினால்,

‘பண்டி தர்கள்
கடத்திச் சென்ற
பைந்தமிழ்க்குழந்தையைக்
கண்டுபிடித்து
கொண்டு வந்த
காவல்நிலையம்’’

என்ற வாலியின் புதுக்கவிதையுடன் முத்தாய்ப்பாக முடிக்கின்றார் பேராசிரியர்.

6)பாரதீயம்: 1.) இந்நூல் பாரதியாருடைய படைப்புகள்பற்றித் திறனாய்ந்து எழுதப்பட்ட பத்துக்கட்டுரைகள் அடங்கிய ஒரு பெட்டகம். தொல்காப்பியத்துக்கு உரை எழுதி சிறந்த கருத்துகளை வெளிப்படுத்திய உரையாசிரியர்களின் தனித்தன்மையைப் பெற்ற கருத்துகள் அடங்கிய உரை இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பேராசிரியம் என்று பெயர்பெற்றதுபோல, விடுதலை வேட்கை, இறைப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பெண்ணுரிமை, போன்றவற்றில் தனித்தன்மைப் பெற்ற பாரதியாரின் கருத்துகள் அடங்கிய முதற்கட்டுரை 'பாரதீயம்'' என்பது.

2.) பாரதியாரின் இலக்கியக் கொள்கைகள் என்ற இரண்டாவது கட்டுரையில் முத்தாய்ப்பாகக் காணப்படுவது இது. நம்மாழ்வாரிடம் எல்லாவற்றையும் திருமாலாகவே கொள்ளும் ஒரு மரபுண்டு. ஒவ்வொருவரும் தம் இஷ்ட தெய்வங்களை வாழ்த்திப் பாடும் பாடல்கள் யாவும் திருமாலைச் சென்றடையும் (திருவாய் 3.9:6) என்பது ஆழ்வாரின் கொள்கை. இந்த மரபையொட்டியே, பாரதியாரும், எல்லா தெய்வங்களைப் பற்றிப்பாடினாலும் அவையாவும் தாம் வழிபடும் சக்தியில் அடங்கும் என்று கொள்வர். தன்னைச் சக்திதாசன் என்றும் சொல்லி மகிழ்வர்.[20]

3.) பாரதியாரின் சமயக் கொள்கைகளை அ) பண்டையோர் வணங்கும் தெய்வங்கள், ஆ) வேறு வழிபடு பொருட்கள், இ) இறைவனை அடையும் நெறிகள், ஈ) இவர் காட்டும் சமய சமரசம் போன்ற தலைப்புகளில் ஆராய்கின்றார். பாரதியாரின்

'பூமியிலே நீ கடவுள் இல்லையென்று
புகழ்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை
சாமி நீ அம்மாயை தன்னை நீக்கிச்
சதாகாலம் 'சிவாஹோ'' மென்று சாதிப்பாயே'

என்ற பாடலுடன்,

'வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே, நின் விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை, முடிவில், மோன
வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்றமமா'

என்ற தாயுமான அடிகளின் பாடலோடு ஒப்பிட்டுக்காட்டுவது தனிச்சிறப்பு.

4. 'இயற்கை எழில்'' என்ற கட்டுரையில் இயற்கை ஒரு பல்லுருவங்காட்டி என்று கூறிய பேராசிரியர் இயற்கை எழிலை ஞாயிறு, விடியற்புனைவு, காலைப்புனைவு, மாலைப்புனைவு, வான்மதி, காற்று, மழை, காடுபற்றிய புனைவு, நகர்ப்புனைவு, கருப்பொருள் மாட்சி என்கிற பல தலைப்புகளில் எடுத்துக்காட்டுவது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்தக்கட்டுரை இலக்கியத்தைச் சுவைக்க வகை அறியாமல், இலக்கிய இன்பத்தைப் புறக்கணிப்பவர் பற்றி, வடமொழிக் கவிஞன் ஒருவன் கூறியுள்ளதைக்காட்டி, இதனை நிறைவு செய்வது முத்தாய்ப்பு. 'ஓ இரத்தின மே' உன்னை ஒரு குரங்கு எடுத்தது; முகர்ந்து பார்த்தது. தன் வழக்கம்போல் முத்தமிட்டுப் பிறகு உன்னை நக்கியும் பார்த்தது. பாவம்! அதற்கொன்றும் விளங்கவில்லை. பிறகு உன்னை தூக்கி எறிந்துவிட்டது. நீ ஏன் வருந்த வேண்டும்? 'என் மதிப்பு

குரங்கிற்குத் தெரியவில்லையே!' என்று 'உள்ளே என்ன இருக்கிறது?' என்று கல்லில் வைத்துத் தட்டிப் பார்க்காமல் இருந்ததில் நீ உண்மையாகவே மகிழ வேண்டும்.[21]

5. 'சமுதாயப் பார்வை' என்ற கட்டுரையில், 1) தனிமனிதன் கடமை, 2) சமுதாயக் கேடுகள் என்ற இரு தலைப்பில் பாரதியாரின் சமுதாயம்பற்றிய கருத்துகளை தொகுத்துக் கூறுவது ஒரு சிறப்பு.

6. கல்விபற்றிய பாரதியாரின் சிந்தனைகளை அ) ஆங்கிலக் கல்வி, ஆ) அறிவியல் கல்வி, இ) தொழிற்கல்வி, ஈ) புதுமுறைக் கல்வி என்ற பல தலைப்புகளில் வடித்துத் தருவது ஒரு தனிச் சிறப்பு.

7. 'வசன கவிதைகள்' என்ற தலைப்பில் பாரதியாரின் வசன கவிதைகளை நன்கு ஆராய்ந்து அவர் வசன கவிதை அனைத்திலும் 'யாப்பு முறை' இல்லாவிட்டாலும், கவிதையைக் காணமுடியும் என்று வற்புறுத்துவார். உண்மையான கவிதை எது என்பதைச் சோதித்து அறியும் சுவைஞர்களுக்கு, கவிதைத் திறனாய்வாளர்களுக்குக் கவிதை வசனத்திலும் தட்டுப்படும் என்று குறிப்பிடுவார். இக்காலப் புதுக்கவிஞர் ஒருவர் 'புராணத்தில் வரும் மன்மதனை ஓவியத்தில் எழுதிக்காட்டுவதற்கு ஒப்பானதாகும். சிவனால் எரிக்கப்பட்ட மன்மதன் ரதிதேவியின் கண்களுக்கு மட்டிலுமே தென்படுவானாம். அதுபோல இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக்கவிதையின் உருவமும் உண்மையான இலக்கியவாதிகளுக்கே தென்படக்கூடும் என்று கூறிய கூற்று வசன கவிதைகட்கும் பொருந்தும்' என்ற சுற்றுடன் முடிப்பது சிறப்பு.[22]

முத்தாய்ப்பாகப் பேராசிரியர் 'இந்தக் கவிதைகளில் ஆழங்கால் பட வேண்டுமானால் பூர்வ வாசனை வேண்டும்; பூர்வ புண்ணியமும் வேண்டும்; இதை அறிந்து அநுபவிப்பதைவிட உணர்ந்து அநுபவிப்பதனாலேயே உண்மை புலனாகும். கருத்துக்களை அறிதல் வேறு; உணர்தல் வேறு. அவற்றோடு ஒன்றிப் போதல் வேறு என்று சுறுவது உண்மை; முக்காலும் உண்மை.

8. 'வாழ்க்கை உண்மைகள்'' என்ற கட்டுலையில் 1) நெஞ்சுக்குரைத்தல் என்ற தலைப்பில் தவிர்க்க வேண்டியவற்றை அச்சம், கவலை, பொறாமையின் கேடு, பொறுமையின் பெருமை, கவறாடலின் கொடுமை என்பவற்றை எடுத்துக்காட்டுவார். 2) குழந்தைகட்கு நீதிகள், படித்துப் பதவியில் இருப்பவர்களுக்கு கூறும் நீதிகள், ஊழிற் பெருவலி என்பன போன்ற கருத்துகளின் விளக்கம், பாரதியாரின் மனத்தெளிவை புலனாக்குகின்றன என்று கூறுவார்.

9. 'கவிதைகளில் காணும் சுவைகள்' என்ற கட்டுரையில், சுவைபற்றிய வடமொழிவானர்களின் கருத்தைத் தெளிவாக விளக்குவார். சுவை அநுபவத்தை இன்னதென சுட்டுவார். சிருங்காரம், கருணை, வீரம், ரௌதிரம், வாத்சல்யம், பயானகம், பீபத்சம், அற்புதம், சாந்தம் என்ற சுவைகளைத் தனித்தனியாக விளக்கி, அவற்றிகேற்ற பாரதியாரன் கவிதைகளைக் காட்டுவது பேராசிரியரின் சிறந்த திறனாய்வாகும். பெரும்பாலும் பாரதியார் கண்ணன் பாட்டில் சுவைகளின் வடமொழிப் பெயர்களையே காட்டியிருப்பதனால் அதேபெயர்களைக் கையாண்டு அவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருகின்றார்.

10. ‘பாடல்களின் படிமங்கள்’ என்ற தலைப்பில் படிமங்கள் இன்னதென்பதை நன்றாகத் தெளிவாக்கி, அப் படிமங்கள், 1) கட்புல படிமங்கள், 2) செவிப்புல படிமங்கள், 3) சுவைப்புல படிமங்கள், 4) நாற்றப்புல படிமங்கள், 5) நொப்புல படிமங்கள், 6) இயக்கநிலைப் படிமங்கள், 7) கலவை நில படிமங்கள் என்று வகைப்படுத்திக் காட்டி, அவற்றிற்கெல்லாம் பாரதியார் கவிதைகளிலிருந்தே எடுத்துக்காட்டுகள் தருவது படிமங்களைப் பயில்வார்க்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது. முத்தாய்ப்பாக மின்வெட்டுபோன்ற மணிமொழிப் படிமங்களைத் தொகுத்துக் காட்டுவது நமக்கு சூடமிட்டாய் சுவைப்பதை உணர்வதுபோன்ற உணர்ச்சி ஏற்படும்.

<u>7.விட்டுசித்தன் விரித்த தமிழ்</u>: இந்நூல் பெரியாழ்வாருடைய பாசுரங்களைப்பற்றிய திறனாய்வு நூலாக அமைகிறது. இதைப் பேராசிரியர் பதினான்கு கோணங்களில் நோக்குகிறார். என்றாலும் ஒரு சில கோணங்களில்தான் திறனாய்வுக் கருத்துகள் வெளிப்படுகின்றன.

1)‘பரத்துவ நிர்ணயம்’’ என்ற தலைப்பில் சாதாரண அறிவுடைய, ஆனால் பக்தி நிறைந்த, விட்டு சித்தர் திருமால் ஒருவனே பர தெய்வம் என்ற கருத்தினை நிலைநாட்டி வெற்றிக்கொண்டு, பொற்கிழியைப் பெறுகின்றார். இ∴து இறைவனுடைய திருவருள் என்ற வைணவ வரலாறு கூறுகின்றது. இதைப் பேராசிரியர் மிகச் சுவையாக எடுத்துகாட்டுகின்றார்.

2)கிழியறுத்த வரலாற்றைச் சிறப்பிக்கப் பாண்டியன் விழா ஒன்று எடுக்கின்றான். இதைக் கவனித்த விட்டுசித்தர், எம்பெருமானுடைய அழகில் மக்களுடைய கண்ணேறுபடாதிருக்கும் பொருட்டுப் பல்லாண்டு பாடி மகிழ்கின்றார். இந்தப் பாசுரத்தின் சொற்பொருள்நயத்தை பேராசிரியர் எடுத்துக்காட்டுவது புலவருக்குப் பெருவிருந்தாகும்.

3)தன் மகள் ஆண்டாளை அரங்கனுக்கு கண்ணிகாதானம் செய்து எம்பெருமானையே தன் மருமகனாகக் கொண்ட சிறப்புப்பெற்றதனால் இவர்க்குப் பெரியாழ்வார் என்ற பெயர் வந்ததாக மணவாள மாமுனிகளின் வாக்கால் பேராசிரியர் விளக்குவது ஒரு ஆய்வுக்குறிப்பு. மேலும்,

உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான்?
உண்டோ பெரியாழ்வார்க்(கு) ஒப்பஒருவர்?

என்ற உபதேச இரத்தினமாலையின் வாக்கையும் எடுத்துக்காட்டுவது இன்னொரு சிறப்பு.

4)‘திருப்பல்லாண்டு ஒரு தனிப்பிரபந்தமா?’ என்பதைப்பற்றிய ஆராய்ச்சி நாலாவது இயலில் நடைபெறுகிறது. தென்கலையார், திருப்பல்லாண்டைத் தனிப்பிரபந்தம் என்று வாதிடுகின்றனர். வடகலையார் இதை ‘அன்று’’ என மறுக்கின்றனர். பேராசிரியர் இருவருடையவாதங்களை எடுத்துக்காட்டியும், வேதாந்த தேசிகனின் பிரபந்தசாரத்தை கையாண்ட மரபுநெறிகளைப் பின்பற்றியும் திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தம் அன்று என்று முடிவு கட்டுவார்.

5)கண்ணன் விளைத்த சிறு குறும்புகளைப் பெரியாழ்வார் தம்முடைய பாசுரங்களில் அநுசந்தித்ததைப் பட்டியலிட்டுக் காட்டிப் பேராசிரியர் மகிழ்வது மற்றுமோர் தனிச்சிறப்பு.

6)வளர்ந்தவனான கண்ணனின் தீரச் செயல்களையும், வெற்றிச் செயல்களையும் ஆழ்வார்கள் பாசுரங்களில் அநுசந்தித்தமுறையில் எடுத்துக்காட்டி மகிழ்வது இன்னொரு தனிச்சிறப்பு.

7)கண்ணனின் பிருந்தாவனத்தின் வாழ்வு பத்து வயதில் முடிந்துவிடுவதாகத் தவத்திரு சித்பாவனந்த அடிகள் விளக்குவார்.[23] இதை அடிப்படையாகக்கொண்டு 'பிருந்தாவனத்தில் வேணுகோபாலன்' என்ற தலைப்பில் கண்ணன் கோபியர்களுடன் லீலை புரிந்த பல செய்திகளை எடுத்துக்காட்டி இவை யாவும் சீவான்மா-பரமான்மா உறவு முறையைக் காட்டுவதாக அமையுமேயன்றி, உடலுறவு முறைகளை விளக்குவது ஆகாது என்று எடுத்துக்காட்டுவது தனிச்சிறப்பு.

8)கண்ணனின் குழலோசையில் வசீகரத் தன்மையை நிலத்தினைகளும் இயங்குதினைகளும் பல்வேறுவிதமாக இயங்கி மகிழ்வதைப் படிப்போர் மனங்கவர்வதாக எடுத்துக்காட்டி மகிழ்ந்து, தாமும் மகிழ்ந்து, படிப்போரையும் மகிழச்செய்வது ஒரு திறனாய்வு நோக்கு.

9)பெரியாழ்வாரின் அச்சாவதார அநுபவத்தை 1) திருக்கோட்டியூர், 2)திருவெள்ளறை, 3) திருமாலிருஞ்சோலைமலை, 4) திருவரங்கம், 5) கண்டம்கடிநகர், 6) மதுரை, 7) சாளக்கிராமம், 8) வைகுந்தம், 9) துவாரகை, 10) அயோத்தி, 11) பதரி, 12) திருப்பேர்நகர், 13)குடந்தை, 14) வேங்கடம், 15) கோவர்த்தனம், 16) கண்ணபுரம், 17) ஆயர்பாடி, 18)திருப்பாற்கடல் என்ற திவ்விய தேசங்கள்பற்றிய பாசுரங்களில் ஆழ்வார் ஆழங்கால் பட்டதை எடுத்துக்காட்டித் தாமும் ஆழங்கால்பட்டுப் படிப்போரையும் ஆழங்கால்படச் செய்வது ஒரு தனிச்சிறப்பு.

10)பெரியாழ்வாரின் அந்தர்யாமித்துவ அநுபவத்தை அற்புதமாகக் காட்டுவர்.

> **'அரவத்து அமளியி னோடும் அழகிய பாற்கட லோடும்**
> **அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" (பெரியாழ்: திரு.5.2:10)**
>
> **'பனிக்கடலிற் பள்ளிக் கோளைப் பழகவிட்டு ஓடிவந்துஎன்ஜ**
> **மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பி" (பெரியாழ்: திரு.5.4:9)**

என்ற பாசுரப்பகுதிகளை எடுத்துக்காட்டுவது படிப்போர்க்கு மகிழ்வைத்தரும்.

11)பெரியாழ்வார் திருமொழியில் இரண்டு திருமொழிகள் அகப்பொருள் அடிப்படையில் அமைந்துள்ளன. அவை 1) நற்றாய் இரங்கல் என்ற துறைப் பற்றியது. 2) உடன்போக்கு பற்றியது. இந்த இரண்டு திருமொழிகளையும் அகப்பொருள் தத்துவத்தின் அடிப்படையில் விளக்கிக் காட்டுவது ஒரு சிறந்த திறனாய்வு முறையாகும்.

12)சமுதாயக் கண்ணோட்டத்தில் ஆழ்வார் பாசுரங்களை நோக்கும் பேராசிரியர் பிள்ளைகளுக்குப் பெயரிடும் ஒரு திருமொழியை எடுத்துக்காட்டி விளக்குவது மிகச்

சிறப்பு. எம்பெருமான் பெயரையே மக்களுக்குப் பெயரிட வேண்டும் என்று ஆழ்வார் வற்புறுத்துவதை எடுத்துக்காட்டுவார்.

13)'பாசுரத்தின் படிமங்கள்' என்ற தலைப்பில் பேராசிரியரின் திறனாய்வுப் பாங்கு மிக சிறப்புடையது. இந்த தலைப்பில் இதுகாறும் எவரும் ஆராய்ந்ததாக இந்த ஆய்வாளருக்குத் தெரிந்திலது. பேராசிரியர் ரெட்டியார் கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம், ஆழ்வார் பாடல்கள், பாரதி, பாரதிதாசன் பாடல்கள் போன்றவற்றிற்கு இந்த ஆய்வுக் கண்கொண்டு நோக்குவதை இவ்வாய்வாளர் நன்கறிவார். நம் இலக்கண புலவர்கள் உவமை, உருவகம், அன்மொழித்தொகை, உள்ளுறை, இறைச்சி போன்ற மரபுகளை எடுத்துக்கொண்டு நோக்கி மகிழ்வது போல, மேற்புல ஆய்வாளர்கள் கட்புலப் படிமங்கள், செவிப்புலப்படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப்புலப்படிமங்கள், நொப்புலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள், போன்றவற்றைப் பாசுரங்களில் எடுத்துக்காட்டி விளக்குவது புதுமுறையில் தோன்றும் திறனாய்வாகும்.

<u>**8.ஆழ்வார்கள் ஆரா அமுது**</u>: இந்நூலில் முதலாழ்வார்கள் மூவர், ஆண்டாள், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், குலசேகரப்பெருமாள் ஆக எண்மரின் பாசுரங்களை எடுத்துக்காட்டி விளக்குகின்றார். இந்நூலில் திறனாய்வுக் குறிப்புகளாக காணப்பெறுபவைகளுள் ஒரு சில ஈண்டு காட்டப்பெறுகின்றன.

1.இருடிகளையும் ஆழ்வார்களையும் ஒப்புநோக்கினால், இருடிகளின் பக்தி அணுவளவாகவும், ஆழ்வார்களின் பக்தி மலையளவாகவும் காணப்பெறும். இங்ஙனமே மற்றைய ஆழ்வார்களின் பக்தியையும் பெரியாழ்வார் பக்தியையும் ஒப்பிட்டு நோக்கினால், மற்றையோர் பக்தி அணுவளவாகவும் பெரியாழ்வாரின் பக்தி மலையளவாகவும் தோற்றம் அளிக்கும். பெரியாழ்வாரின் பக்தியையும், அவரது அருமை மகள் ஆண்டாள் பக்தியையும் சீர்தூக்கினால், பெரியாழ்வாரின் பக்தி அணுவளவாகவும் ஆண்டாள் பக்தி மலையளவாகவும் தோற்றா நிற்கும். மணிப்பிரவாள நடையிலுள்ள பெரியவாச்சான் பிள்ளையின் கருத்தைப் பேராசிரியர் எடுத்துக்காட்டி ஆண்டாளின் பக்தியை விளக்குவது மிகச் சிறப்பாகின்றது.

2.'அர்த்த பஞ்சகம்'' என்ற தத்துவத்தைத் திருப்பாவைப் பாசுரங்கள் கொண்டு விளக்குவது மிகச் சிறப்பாகும்.

3.திருப்பாணாழ்வார் படைத்த 'அமலநாதி பிரான்' என்ற திருமொழி பத்துப் பாசுரங்களைக் கொண்டது. இந்த பத்தும் எம்பெருமானுடைய திருவடிமுதல் திருமுடிவரையிலும் (பாதாதி கேசமாக) விளக்குவனவாகும். 'கமலபாதம் வந்து என் கண்ணனின் உள்ளென ஒக்கின்றதே' என்ற முதற் பாடலின் கருத்தை மும்மூட்சுபடியின் 'பிராட்டியும் அவளும் விடினும் திருவடிகள் விடாது தின் கழலாய் இருக்கும்' என்ற வாக்கியத்தைப் பொறுத்திக் காட்டி விளக்குவதும், இதற்கு நம்மாழ்வாரின் 'மன்புகழ் நாராணன் தின்தழல் சேரே'' (திருவாய்.1.2:10) என்பதை அரணாக அமைத்துக்கொண்டு விளக்குவதும் ஒரு சிறந்த திறனாய்வாகும்.

4.அமலநாதிபிரானின் இறுதிப் பாசுரத்தின்

**‘அண்டர்கோன் அணி அரங்கன் என்அமுதினைக்
கண்டகண்கள் மற்(று) ஒன்றினைக் காணாவே’**

என்ற பகுதியை எடுத்துக்காட்டி விளக்குவது முத்தாய்ப்பாகும். கூரத்தாழ்வான் சுந்தரபாகுஸ்தத்தில் பண்டு யசோதைப்பிராட்டி முத்தம் கொடுத்த சுவடு, இன்னும் அழகரின் திவ்விய கன்னங்களில் திகழாநிற்கும் என்று அநுபவித்தார்போல, இவரும் பண்டு கண்ணன் வெண்ணெய் உண்ட முடை நாற்றம் இன்னும் பெரிய பெருமாள் திருபவனத்தில் கமழா நிற்கும் என்பதாக அநுபவிக்கிறார் என்பது பேராசிரியரின் குறிப்பு.[24]

5.மூன்றாழ்வார்கள் பற்றிய கட்டுரையில் பூதத்தாழ்வார் ஓர் ஆண் யானை. இருகன் இளமூங்கில் வாங்கி அருகிருந்த தேன்கூட்டில் செருகி தன் மடப்பிடிக்கு ஊட்டுவதைக் காட்டுவதுபோன்ற பல காட்சிகளைக் காட்டுவார். இதே கருத்தைக் கம்பன் சித்திரகூடப் பருவத்தில் ஒரு யானையைக் கொண்டு காட்டும் காட்சியுடன் ஒப்பிடுவார்.

6.மூன்றாழ்வார்களின் பக்தி நிலைகளை எடுத்துக்காட்டுவது சிறப்பாகும். பொய்கையாழ்வார் பக்தியைப் பரபக்தி, பூதத்தாழ்வார் பக்தியைப் பரஞானம், பேயாழ்வாரின் பக்தியைப் பரமபக்தி என்று பாசுரங்களால் எடுத்துக்காட்டுவார்.

7.‘பக்திசாரர்’ என்ற கட்டுரையில் திருமழிசையாழ்வாரின் பக்தி நிலையை பல பாசுரங்களால் எடுத்துக்காட்டி விளக்குவார். அவர் பல மதத்தில் புகுந்து அவற்றை ஆராய்ந்து இறுதியில் வைணவ சமயத்தின் சிறப்பை அறிந்து அதனைத் தழுவி அதில் நிலைத்து நிற்றலையும் சுவையாக விளக்குவார்.

8.சொன்னவண்ணம் செய்த பெருமாள்பற்றிய நிகழ்ச்சியால் பரமன் பக்தனுக்குத் தொண்டு செய்வதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சியாக விளக்குவார். ஒரு பாசுரத்தில் (81) ஆழ்வாரின் தமிழ்ப்பற்று வெளிப்படுவதையும் எடுத்துக்காட்டுவார்.

9.‘தொண்டரடிப்பொடிகள்’ என்ற கட்டுரையில் இவர் அருளிய திருப்பள்ளி எழுச்சி, திருமாலை என்ற இரண்டு பிரபந்தங்களை நன்றாக ஆராய்ந்து பல நயங்களை எடுத்துக்காட்டுவார்.

10.தொண்டரடிப் பொடிகள் தேவதேவியின் வலையில் சிக்கிய வரலாற்றை ‘மெய்யெலாம் போகவிட்டு விரிகுழலாரில் பட்டு’ (திருமாலை 33) என்ற பாசுரத்தை எடுத்துக்காட்டி விளக்குவது சிறப்பாகும்.

11.தொண்டரடிப் பொடிகள் துழவத்தொண்டு புரிந்து வந்த செய்தியை ‘துழவத் தொண்டாய தொல்சீர் தொண்டரடிப் பொடிகள்’ (திருப்பள்ளி-10) என்ற பாசுரத்தால் விளக்குவது மிகச் சிறப்பு.

12.பக்தித் திறமும் ஞானமுமே சாதியைக் காட்டிலும் சிறந்ததென்பது இந்த ஆழ்வாரின் கொள்கையாக இருந்தது என்பதைப் பேராசிரியர் ‘பழுதிலா ஒழுகலாற்று பலசதுப் பேதிமார்கள்’ (திருமாலை-42) என்ற பாசுரத்தாலும், பிரிதொரு பாசுரத்தாலும் (திருமாலை-43) எடுத்துக்காட்டி விளக்குவது சிறப்பு.

13.‘குலசேகரப் பெருமாள்’ என்ற கட்டுரையில் இந்த ஆழ்வார் இராமாயணத்தில் அதிக ஈடுபாடு கொண்டதை இரண்டு நிகழ்ச்சிகளாலும், அச்சாவதாரத்தில் அதிகமாக ஈடுபட்டதை திருவித்துவக் கோடு, திருவரங்கம், திருவேங்கடம் என்று மூன்று திவ்விய தேசங்களைப்பற்றி உள்ளம் உருகும் முறையிலும் விளக்குவது சிறப்பு.

14.‘தேவகி புலம்பல்’ என்ற பதிகத்தில் உள்ள

‘நந்தன் பெற்றனன் நல்வினையில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே” தே.புலம்-3

‘திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வநங்கை யசோதை பெற்றாளே” தே.புலம்-5

‘இவை கண்ட அசோதை
தொல்லியின்பத் திறுதி கண்டாளே” தே.புலம்-8

என்ற பாசுரங்களில் காட்டப்பெறும் நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டித் தாமும் மகிழ்ந்து வாசகர்களையும் மகிழ்விப்பார்.

<u>9.கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்</u>: பேராசிரியர் ரெட்டியார் பொதுவாக துறையூரில் வாழந்தபோதும், சிறப்பாகக் காரைக்குடியில் வாழ்ந்தபோதும், கம்பராமாயணத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து அந்நூலைப் பலமுறை பயின்று அநுபவித்தவர். ‘காரைக்குடிக் கம்பனடிப் பொடி’ (சா.கணேசன்) நட்பும், சீர்திருத்தச் செம்மல் சோ. முருகப்பா அவர்கள் தொடர்பும், இந்த ஈடுபாட்டைப் பன்மடங்கு பெருக்கின. சுமார் இரண்டு ஆண்டுகள் அமராவதி புதூர் மகளிர் இல்லத்தில் வாரந்தோறும் விடுமுறை நாட்களில் சொ.முரு. கம்பன் பாடல்களைத் தொகுத்த முயற்சியில் பேராசிரியரும் ஈடுபட்டார். கம்பனுடைய பாத்திரப் படைப்பைப் பற்றிய சிறந்த ஆய்வுநூல் ஒன்றை எழுதத் திட்டமிட்டார். அது முற்றுப்பெறவில்லை. ஆனால் ‘கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்’ என்ற சிறு நூல் மட்டிலும் வெளியிட்டார். இது தாடகை, விசுவாமித்திரர், மந்தரை, சுமித்திரை, குகன், மாரீசன், சடாயு, தாரை, அங்கதன் என்ற சிறுபாத்திரங்களைப் பற்றிய திறனாய்வு நூலாகும். இந்த நூலில் காட்டப்பெறும் சில திறனாய்வுக் கருத்துகள் எடுத்துக்காட்டப் பெறுகின்றன. சிறு பாத்திரங்களைக் கவிஞன் படைப்பதில் மூன்று நோக்கங்களை எடுத்துக்காட்டுவார்.

1.சிறு பாத்திரங்கள் கதை வளரச்சிக்கு யாதானும் ஒரு முறையில் துணை செய்யும். காவியத்தில் திருப்புமையங்களாக அமைந்து கதையை விரைவாக நடத்திச் செல்லத் துணைபுரியும். இதற்கு எடுத்துக்காட்டாக தாடகை, விசுவாமித்திரர், மந்தரை, சூர்ப்பணகை, மாரீசன், சடாயு ஆகியோர்.

2.காவியத் தலைவனின் குணநலன்களைப் புலப்படுத்தி காவியத்தில் ஒன்பான் சுவைகளையும் ஒளிரும்படி செய்யும். இதற்கு எடுத்துக்காட்டாக குகன், மாரீசன் இவர்கள் ஆவர். இராமனது அருங்குணங்களை முதலாவதாக வெளிப்படுத்துபவன் குகன். ‘அன்புள்ள இனி நாமோர் ஐவர்கள் உளரானோம்’ என்ற இராமனுடைய உயர்ந்த சகோதரத்துவம் வெளிப்பட இக் குகன் அறியதோர் வாய்ப்பினை நல்குகின்றான். மாரீசன் இராமனது வீரத்தை நேரில் அநுபவித்து உணர்ந்தவன். சூடு

கண்ட பூனை சீதையைப் பெறுவதற்கு மாயமானாகச் செல்ல வேண்டும் என் இராவணன் கேட்க வந்தபோது

‘எமக்கும்மென் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லிதனக்கும் அயல்நிற்கும்
தம்பிக் கும்மென் ஆண்மை தவிர்ந்தேன்’’[25]

என்று தன் அநுபவத்தை எடுத்துக்காட்டுவதைப் பேராசிரியர் விளக்குவார்.

3.சிறு பாத்திரங்கள் துணை கொண்டுதான் கவிஞனும் காவியத்தில் வரும் சில நிகழ்ச்சிகளை அமைத்துக் காட்டுவான். இராவணன், அங்கதன் பேச்சுகள், அநுமனும் இராமனும் முதன்முறையாகச் சந்தித்தல், வில்லை முறித்த செய்தியை நீலமாலை சீதைக்கு உணர்த்துதல் போன்ற நிகழ்ச்சிகள் நாடகப் பாங்குடன் அமைந்திருப்பதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார்.

<u>பொதுவானவை</u>: திறனாய்வு நூல்களில் பொதுவாக உள்ளவையாக 1. புதுக்கவிதை போக்கும் நோக்கும், 2. பாட்டுத் திறன், 3. அகத்திணைக் கொள்கைகள் என்ற மூன்று நூல்களைக் கூறலாம். இவற்றைத் தனித்தனியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது இந்த ஆய்வுக்கு அப்பாற்பட்டதாகும். எனவே, இவற்றில் உள்ள சில திறனாய்வுக் கூறுகளை மட்டிலும் சுட்டிக்காட்டுவது போதும் என்பது இவ்வாய்வாளரின் கருத்து.

<u>1)புதுக்கவிதை போக்கும் நோக்கும்</u>: 1) தமிழில் புதுக்கவிதை மேனாட்டு இலக்கியப் புரட்சியினால் தோன்றியதுபோல் தமிழில் எழுந்ததாகும். புதுக்கவிதை மூலத்திற்கு பாரதியரை எடுத்துக்காட்டுவார். இவரே புதுக் கவிதையின் தந்தையும் ஆகின்றார் என்று கூறுவார். புதுக்கவிதையின் வளர்ச்சியை மூன்று நிலைகளாக எடுத்துக்காட்டுவது மிகச் சிறப்பாகும்.

2)புதுக்கவிதையின் சிறப்பியல்புகளை (அ)உருவம், (ஆ) உள்ளடக்கம், (இ) உத்திகள் என்ற தலைப்புகளில் ஆராய்வது சிறந்த திறனாய்வு உத்திகளாகும்.

3)பேராசிரியர் புதுக்கவிதை வெறுக்கப்படுவத்றகும், அவை போற்றப்படுவதற்கும் தென்காசி வழக்காக இப்படியும் அப்படியும் இல்லாமல் கூறுவதற்கும் காரணங்களை பட்டியலிட்டுக் காட்டுவது ஒரு சிறந்த திறனாய்வுக் குறிப்புகளின் தொகுதிகளாகும்.

4)‘சமுதாய அவலங்கள்’ என்ற தலைப்பில் பேராசிரியர் பத்துப் பகுதிகளாக வகைப்படுத்தி எடுத்துக்காட்டுகளால் விளக்குவது சீர்திருத்தக்காரர்களின் நெஞ்சுக் குமுறல்களுக்கு விதை இட்டு நீர்வார்த்தது போலாகும்.

5)பொதுவுடைமைப் போக்கில் சில புதுக்கவிதைகளை எடுத்துக் காட்டும் போக்கு, பொது உடமைக்காரர்களுக்குப் பெருவிருந்து. பொதுவுடைமை அபிமானிகளுக்கும் ஒரு சிற்றுண்டி விருந்து.

6)தனிமனிதத்துவப்போக்கில் படைக்கப்பெற்றுள்ள கவிதைகளை உளவியல் கருத்துகளின் அடிப்படையில் விளக்குவார். மனிதமனம், நனவு, நிலை, நனவடிநிலை, நனவிலிநிலை என்று மூன்று வகைப்படும் என்பதையும், அடக்கப்பெற்ற மனம் தாழ்வுச் சிக்கலாகவும், உயர்வுச் சிக்கலாகவும் தோன்றும் என்பதையும் ‘மாக்டுகால்’ என்ற

உளவியல் அறிஞர் மனிதனிடம் தோன்றும் உந்தலை (Drive) பதினான்கு வகைப்படும் என்று பாகுபடுத்திக் காட்டுவதையும், அவற்றுள் தன்னைக் காத்துக்கொள்ளும் உந்தலையும் (Self-preservation), தன் இனத்தைக் காத்துக் கொள்ளும் உந்தலையும் (Race-Presertavtion) முக்கியமானவை என்று விளக்குவார். உளவியலார் கூறும் சில 'நார்சிஸஸ் சிக்கல்'' போன்ற சில சிக்கல்களையும் விளக்குவார். பாலுணர்வுதாகக் காதல் என்ற உறவு டாக்டர் ஜெக்கில் ஆகவும், 'காமம்' என்ற உறவு மிஸ்டா ஹைடு ஆகவும் கோலம் கொள்ளுகிறது என்பதைச் சில கவிதைகளைக்கொண்டு விளக்குவார். (எ.கா.) 'இராப்பிச்சைக்காரன்' என்ற தலைப்பில் உள்ள கவிதை. இங்குக் கூறிய எல்லாவித உளவியல் கோட்பாடுகளுக்கும், கவிதைகளை எடுத்துக்காட்டி விளக்குவது ஒரு தனிச் சிறப்பு.

7)காதல் உணர்வையும், முருகுணர்வையும் பலர் மாசுபடச் செய்வதையும், சிலர் போற்றுவதையும் பல கவிதைகளால் எடுத்துக்காட்டுவார் பேராசிரியர். 'இடப் பெயர்ச்சி' என்ற தலைப்பில் காணப்பெறும்,

'கறுப்பு வளையல்
கையுடன் ஒருத்தி
குனிந்து
வளைந்து
பெருக்கிப் போனாள்
வாசல் சுத்தமாச்சு
மனம் குப்பையாச்சு'

என்ற கவிதையில் காதலின் வக்கிரத்தை ஓர் ஆண் வக்கிரமாக எடுத்துக் காட்டுவதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார்.

'முதலிரவு' என்ற தலைப்பில் உள்ள ஒரு கவிதையை எடுத்துக்காட்டி

'விரசப்படாமல்
காதல்காட்சியையும்
காதல் நாடகக் காட்சியையும்
களத்தினையும் கற்பனை செய்த நேர்த்தி'

படிப்போரையும் களிக்கச் செய்திறது. முதியோரையும் பின்னோக்கிப்பார்த்து அசைபோடச் செய்கிறது[26] என்று திறனாய்வு செய்வார். 'வாழை மரத்தின் சபதம்' என்ற கவிதை வாழை மரமே தன் சுயசரிதையைக் கூறுவதாக அமைக்கின்றார் கவிஞர். வாழைமரம் பேசுவதாக கூறப்படும் கவிதையில் வாழைமரத்தைப்பற்றிய பல எளிய கருத்துக்ள அற்புதமாக கவிதை வடிவம் பெறுகின்றன. இந்த அற்புதக் கவிதை

'நான்
தனிவாழை
அல்ல
வாழையடி
வாழை'

என்று முத்தாய்ப்பாக முடிகிறது. இதை எடுத்துக்காட்டும் பேராசிரியா் தானும் சுவைத்து நம்மையும் சுவைக்க வைக்கும் பாங்கில் முருகுணர்வு முத்தாய்ப்பாக அமைந்து விடுகிறது.

8)நகைச்சுவை, கிண்டல், எள்ளல், முதலியவை பற்றிய புதுக்கவிதைகளைப் பேராசிரியர் திறம்பட எடுத்து விளக்கித் தம்முடைய திறனாய்வு முத்திரையை குத்திவிடுகிறார். நகைச்சுவைக்கு ஒரு பாடல்:

‘பரிட்சை ஹாலுக்குள் நுழைந்து
கேள்வித்தாளை வாங்கியபின்தான்
ஞாபகம் வந்தது-நேற்று இரவு
முழுவதும் விழித்திருந்து எழுதிய
‘பிட்டுகளை’ மறந்து வந்து
விட்டேன் என்று’

இந்தக் கவிதையைப் பேராசிரியர் இவ்வாறு திறனாய்வார். ‘இராஜாஜி அவர்கள் தம் குறையைத் தாமே கூட்டத்திலேயே எடுத்துக்கூறி மகிழ்வதுண்டு.’ அந்த அடிச்சுவட்டில் மாணவரே மாணவர் உலகப்பிரதிநிதியாக இதழில் எழுதி மகிழ்கின்றார். இராஜாஜி தாம் செய்த தவற்றினை மீண்டும் செய்வதில்லை. மாணவர் உலகம் இப்படித் திருந்துமா என்பது பெரிய கேள்விக்குறி.[27] எள்ளல் சுவைக்கு ஒரு கவிதை:

‘‘மூன்று வயதில்
ஞானசம்பந்தர்
பாடினாராம்
தோடுடையசெவியன் என்று
இப்போதும்
அதே வயதுப்
பாலகர்கள்
பாடுவார்கள்
‘தோடுடைய செவிலியள்’ என்று
தப்பில்லாமல்’’

இதற்குப் பேராசிரியர் கூறும் திறனாய்வுக்குறிப்பு ‘இது பிஞ்சில் பழுக்கும் பாலகர்கள்பற்றி’[28] எள்ளி நகையாடும் கவிதையாகும்.

கிண்டலுக்கு ‘கர்ண பரம்பரை’’ என்ற தலைப்பில் ஒரு கவிதை:

‘கொடுத்துக் கொடுத்துச்
சிவந்தன
கர்ணனின் கரங்கள்.
வாங்கி வாங்கிச்
சிவந்தன
எங்களூர்க் கர்ணத்தின்
கரங்கள்’

இந்தக் கவிதையைப் பேராசிரியா் ‘கிண்டலும் கேலியும் நிறைந்த கவிதை, சிற்றூா்வாசிகளுக்கு இது கண்ணில் குருதியைச் சொரியச்செய்யும். ஏனெனில் அவா்கள் அநுபவசாலிகள்’[29] என்று திறனாய்வார். இங்ஙனம் பல எடுத்துக்காட்டுகள் நிறைந்த இயல் இது.

9.இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் என்ற இயலில் 1) படிமக் கோட்பாடு, 2) குறியீட்டியல், 3) இருப்பியல் கொள்கை, 4) இருண்மைவாதம், 5) புலப்பாட்டு பாங்கியல், 6) மிகைமெய்மையியல், 7) நனவோடை என்ற பல இலக்கியக் கொள்கைகைளப் புதுக்கவிதைக் கொண்டு எடுத்துக்காட்டுவது சிறந்த திறனாய்வாகும்.

<u>10.அகத்திணைக் கொள்கைகள்</u>: இந்த நூல் தொன்மை முதல் எழுந்த அகத்திணைக் கோட்பாட்டின் தொகைகளையும், உடன்பாடுகளேடு மறுப்புகளையும், மறுமறுப்புகளையும் ஒருங்கே பாற்கும் பாங்கில் எழுதப்பெற்றது. சங்க இலக்கியத்தோடு பின்வந்த இலக்கியங்கள் அகத்துறையில் உறவாடுவதையும், வழிமாறுவதையும் கற்கும்பாங்கில் அமைந்துள்ளது இந்நூல்.

ஆழ்வார் பிரபந்தங்களில் அகத்துறைகள் தெய்வச்சாயல் பெறுவதையும் காணலாம். ‘மத்தளம் கொட்டவரிச் சங்கம் நின்றூத’’ என்ற நாச்சியார் திருமொழி தமிழ் நாகரிகத்தின் கரணச் சான்றாதலையும் கற்கலாம். பிற்காலப் புலவர்கள் அகத்திணைத்துறைகள்பற்றி எழுதிய பாடல்களையும் கற்று மகிழலாம். சங்கத் தமிழ் பாடல்களின் தொகை 2381. அவற்றுள் அகத்திணை முதலியவை 1862, சங்கப் பாடல்களைப் பாடியோர் தொகை 483. அகம் பாடியவர் மட்டிலும் 378. அகப்பாடல்களின் மிகுதியான எண்ணிக்கையும் அப்பாடல்களைப் பாடியவரின் மிகுதியான தொகையும், அகத்திணையின் சிறப்பை ஒருவாறு புலப்படுத்தும். புறத்திணைப் பாடல் தொகையிலும், பாடினோர் தொகையிலும், அகத்திணைப்பாடல்களின் தொகையிலும் பாடினோர் தொகையிலும் இத்தொகை மும்மடங்கு மிக்கிருத்தலை உணரலாம். சங்கப்புலவா்கள் இதிலிருந்து அகம்பாடுவதையே சிறந்த புலமை என மதித்திருந்தனர் என்ற கருத்து வெளிப்படுகின்றது. இந்தத்துறை ஒன்றே விரிவாகப் பலவாறாகப் பாடுவதற்கு வளமிக்கதாக விளங்குகிறது. இத்தகைய ஒரு பெரு நூலை விரிவாக ஆராய்வது இவ்வாய்விற்கு அப்பாற்பட்டது. ஆகவே, சில திறனாய்வுக் கருத்துகள் மட்டிலும் சுட்டி உரைக்கப்பெறுகின்றன.

1)அகத்தினை நெறியில் உலகியல் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பயின்று வரும் பொருள்களை முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்று வரையறுத்துப் பேசப்பெறும். இவற்றுள் உரிப்பொருள் ஒன்றே மிக முக்கியமானது. ஏனைய முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளை சிறப்பிப்பதற்கு துணைபுரிபவை.

2)அகத்திணை, ஐந்தினை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) கைக்கிளை, பெருந்திணை என்று ஏழுபிரிவுகளாகப் பிரிக்கப்பெறும்.

3)திணை மயக்கம் என்ற ஒரு கருத்து இந்தப் பாடல்களில் ஊடாகின்றது. ஒரு திணையின் எல்லைக்குட்பட்ட சில கூறுகள் பிரிதொருதிணையில் கட்டுக் கோப்போடு கலந்து நிற்கவும், கூடும் என்பதே திணைமயக்கம். இது அகத்திணைக்கு ஒரு புறநடை.

4)ஐந்திணை, களவு, கற்பு என இருவகையாகப் பகுத்துப் பேசப்பெறும், களவியல் நெறி இரண்டு திங்களுக்குமேல் நடைபெறலாகாது. உடனே அது கற்பு நெறியாக மாற்றப்படவேண்டும். காரணம், காதலா்கள் மெய்யுறு புணா்ச்சியை மேற்கொண்டால்

கருத்தறித்தல் ஒருகால் வெளிப்படக்கூடும் என்று கருதியே இவ்வரையறையை வகுத்துள்ளனர் என்று கருத இடமுண்டு.

5)ஒருவனும், ஒருத்தியும், உள்ளம் ஒன்றி ஒன்றுபடுவது 'பாலது ஆணை' என்றே பண்டையோர் கொண்டனர். இஃது அகத்திணையின் உயிராய கருத்து.

6)ஒருவனும் ஒருத்தியும், கூடுவது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், தோழியர் கூட்டம் என நான்கு வகையாக நடைபெறலாம் என்பது பண்டையோர் கருத்து. இந்த நான்கும் பெரும் பிரிவுகள்: இவற்றுள், சிறு பிரிவுகள் உள. அவை 'துறை'' என்ற பெயரில் வழங்கும்.

7) ஒருத்தியும் ஒருவனும் கூடுதற்கு 'ஊழ்'' காரணமாக இருந்தாலும் அவர்களது திருமணம் சமூகம் அறியும் பாங்கில் 'கரணம்'' என்ற முறையில் நெறிப்படுத்தப்படும்.

8)தலைவன் தலைவியை விட்டுப்பிரிதல் ஓதற்பிரிவு, காதற்பிரிவு, வேந்தற்கு உற்றுழிப் பிரிவு, பொருட்பிணி பிரிவு, பரத்தையற்பிரிவு என்று பல பிரிவுகளாக பகுத்துப் பேசப்பெறும்.

9.ஐந்திணையில் பரத்தமைபற்றி இவர் ஆய்ந்து கூறும் கருத்து அகத்திணை ஆய்வாளர்களுக்கு ஒரு கருத்துச் செல்வமாகும்.[30]

10)கைக்கிளைப் பற்றி இந்நூலில் கூறப்பெறும் 'கைக்கிளை வாதத்திற்கு இடனாக அமைகின்றது. இது விரிவற்றது . . . இது ஒரு மனநிலையே, உள்ளத்தளவில் நிகழும் ஒருவித கிளர்ச்சியாகும் இது. இதனைக் காமம் விளைவித்த பெண்ணும் அறியாள். புறத்தாற்கும் இது புலனாகாது. இஃது இளைய ஆடவனகத்து பிறந்து நின்று மறைவது. இக்காதல் உணர்வு சிறுபொழுதாயினும் தூய்மையானது, அன்புடையது, குற்றமில்லாதது; இன்னதன்மையால் இது அகத்திணையாயிற்று'[31] என்ற கருத்துகள் அகத்திணை ஆய்வாளர்களின் கவனத்திறகு உரியவை.

11)பெருந்திணைப்பற்றி இந்நூலில் கூறப்பெறும் கருத்துகள் அகத்திணை ஆய்வாளர்களின் சிந்தனைக்குரியவை. 'ஐந்திணையின் ஒரு மிகுநிலையே பெருந்திணையாக வளர்கின்றது. இதன்கண் வளர்ந்த காமத்திற்கு இடமில்லை, அகத்திணைப் பண்பிற்கு ஒத்ததுவே இது . . . சங்கச் சான்றோர்கள் இத்திணையை ஐந்திணைக் காமமாகவே எண்ணிப் பாடியுள்ளனர். காதலர்களின் காமப்பாங்கு உள்ளத்தளவிலும், சொல்லளவிலும் காத்தோம்பி கொள்ளுங்கால் அவை ஐந்திணைக் கோலம் கொள்ளுகின்றன. அவை அங்ஙனம் காத்தோமபப் பெறாமல் மிகுநிலையை எய்துங்கால் பெருந்திணைப் பொருளாக வடிவம் கொள்ளுகின்றன.'[32]

<u>11.பாட்டுத்திறன்</u>: இந்நூல் கவிதைத் திறனாய்வுபற்றிய ஒரு விளக்கமான நூல். முதற்பகுதி உணர்ச்சியின் தத்துவம். இது அறிவியல் அடிப்படையில் ஆராயப்பெறுவது. இரண்டாம்பகுதி கவிதையின் தத்துவம். இது கற்பனை, சொல்வளம், ஒலிநயம், யாப்புமுறை, படிமங்கள், சுவைகள் முதலிய பல்வேறு கருத்துகளின் ஒளியில் ஆராயப்பெறுவது. மூன்றாவது பகுதி புதுக்கவிதைத்திறனை நுவல்வது. இப்பெரிய நூலில் ஒரு சில திறனாய்வுக் கருத்துகள் மட்டிலும் ஈண்டு எடுத்துக் காட்டப்பெறுகின்றன.

1)கவிதையைப் படித்துத் துய்ப்பது தூண்டல்-துலங்கல் (Stimulus-Response) தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ‘கவிதையைப் படித்து அதிலுள்ள செய்திகளைப் பெருமூளை அறிந்ததும், அங்குதோன்றும் எண்ணங்களும், எண்ணக் கோவைகளும் மேற்பூத்தண்டைத் (Hypo-thalamus) தூண்டி அதன்மூலம் தன்னாட்சி நரம்பு மண்டலத்தை இயக்குகின்றன. இம்மண்டலத்தின் இயக்கத்தால் சுரப்பிகள் தூண்டப்பெற்று அவற்றின் சாறுகள், குறிப்பாக மாங்காய்ச் சுரப்பிகளின் (Adrenal glands) சாறுகள், குருதியோட்டத்தில் கலந்து உடலெங்கும் உணர்ச்சி அலைகளை எழுப்புகின்றன. வாழ்க்கையநுபவத்தில் இவ்வுணர்ச்சிகள் ஏற்படுங்கால் இத்தகைய உடல்மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது உளவியல்காட்டும் உண்மை. வெகுளிச் சுவை, அவலச்சுவை, மருட்கைச்சுவை போன்ற சுவைகள் உள்ள கவிதைகளைப் படிக்கும்பொழுது அவற்றால் பெறும் செய்திகள் பெருமூளையில் பல்வேறு எண்ணக் கோவைகளை எழுப்பி மேற்குறிப்பிட்ட நிலைமைகளை உண்டாக்குகின்றன என்று ஊகம் செய்யலாம். இதனால்தான் கவிதையிலுள்ள கவிஞனின் உணர்ச்சிகள் நம்மிடம் எழுகின்றன. உண்மையான கவிதையநுபவமும் நம்மிடம் உண்டாகின்றது.’[33]

2)கவிதையநுபவத்தில் சொற்கள் விளைவிக்கும் சாயல்களும் பெரும்பங்கு கொள்கின்றன. ஒரு சொல்லுக்கு இரண்டு வித சாயல்கள் உள்ளன. ஒன்று கட்டுண்ட சாயல் (Tied images) என்றும், மற்றொன்றை விடுதலைச் சாயல் (Free images) என்றும் வழங்குவர். ஐ.ஏ. ரிச்சட்ஸ் என்ற திறனாய்வு வல்லுநர் இந்த நூலில் ‘குழைக்கின்ற கவரி இன்றி’ (நகர்நீங்கு படலம்-2) என்ற கம்ப இராமாயணப் பாடலை எடுத்துக்காட்டி மிகத் தெளிவாக விளக்கப்படுகிறது. பாட்டில் ஒருவரே வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், கவிதையில் மூவர் வருவதாகத் தெரிகின்றது. இராமனுக்கு முன்னால் செல்பவர் விதி, பின்னால் தொடர்பவர் தருமம். ‘செல்ல’, ‘ஏக’ இரண்டு சொற்களும் ஒரே பொருளை உணரத்துவனவாயினும் ‘விதிமுன் செல்ல’ என்ற தொடரில் உள்ள ‘செல்ல’ என்ற சொல் ‘விதி’ அதாவது அனைத்தையும் ஆட்டி வைக்கும் பேராற்றல் படைத்த ஊழ் பெருமிதத்துடன் நடந்துசெல்வதைக் காட்டுகின்றது. விதியின் உரிமையும் செல்வாக்கும் புலப்படுவதைக் காணலாம். ‘தருமம்பின் இரங்கி ஏக’ என்ற தொடரில் உள்ள ‘ஏக’ என்ற சொல் அறம் (பரிதாப நிலையில்) தள்ளாடி தள்ளாடி வந்து கொண்டிருப்தைக் காட்டுகின்றது. இதில் தருமத்தின் தோல்வியும், சோர்வும் புலப்படுவதாக அறிய முடிகின்றது. இவ்வாறு சொற்களின் சாயல்களை உணர்த்தும் குறியீடுகளைக் கொண்டு ஒரு கவிதையை அநுபவிக்க வேண்டும் என்ற திறனாய்வுக் கருத்தை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. இது ஒரு தனிச் சிறப்பு.[34]

3)ஒரு பாட்டின் அநுபவத்தை மிகுவிப்பது அதில் அமைந்துள்ள சுவை. வடமொழியாளர் சுவையைப்பற்றித் (ரசம்) தரும் விளக்கம் அற்புதமாக அமைந்துள்ளது. அதனை இந்த நூல் சகுந்தலை துஷ்யந்தன் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு விளக்குவது சிறப்பாக அமைகின்றது. உண்மையான துஷ்யந்தன் சகுந்தலை மனத்தில் ஏற்படும் சலனமோ, அவர்களை பாத்திரமாகக்கொண்டு நடிக்கும் நடிகர்களுடைய மனத்தில் எழும் சலனமோ சுவை அன்று. ஆனால் பார்வையாளர் மனநிலையில் எழும் சலனமே சுவை என்ற திறனாய்வுக் கருத்து வடமொழிவாணரின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு விளங்க வைப்பது ஒரு சிறந்த திறனாய்வுக் குறிப்பு. அன்றியும், வடமொழிவாணர்கள் கூறும் ஆலம்பன விபாவம்,

உத்தீபவனவிபாவம் என்பனவற்றைத் தமிழ் இலக்கணநூலார் கூறும் முதற்பொருள் கருப்பொருள் என்பவற்றுடன் இணைத்து விளக்குவது மேலும் சிறப்பாக அமைகின்றது.

4)இதுகாறும் படிமங்கள் (images) பாட்டு நுகர்வுக்கு முக்கியமானவை என்பதை எவரும் எடுத்துக்காட்டாத ஓர் உண்மையை (மேல்நாட்டு இலக்கியத் திறனாய்வாளர் காட்டிய உண்மையை) இந்தநூல் எடுத்துக்காட்டுகின்றது. நம் பண்டையோர் உவமை, உருவகம் முதலியவற்றை கருவியாகக்கொண்டு அதை அநுபவப்பொருளாக ஆக்குவிப்பதுபோல மேனாட்டுத் திறனாய்வாளர் படிமங்களை கட்புல படிமங்கள், செவிப்புல படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நொப்புலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள் எனப் படிமங்களை வகுத்துக்காட்டி இவை தனித்தனியாகவும் பல்வேறு வகையில் கலந்தும் வரும்போது உண்டாகும் உணர்வுகளை அநுபவிக்கும்போது கவிதைச்சுவை மிகுவிப்பது என்பதை எடுத்துக்காட்டுவது சிறந்ததோர் திறனாய்வு.

5)மூன்றாவது பகுதி புதுக்கவிதைத்திறன் பற்றியது. இதுபற்றிய சில கருத்துகள் முன்னரே எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.[35]

<u>12.இலக்கணம்பற்றியவை</u>: இதுபற்றிப் பேராசிரியர் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை எடுத்துக்கொள்கிறார். இந்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பிரிவுகள் உள்ளடக்கியது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பற்றி கலைகள் ஆசிரியர் அமரர் கி.வா.ஜ. அவர்கள் பொதுமக்களுக்கு விளங்கும் பாங்கில் இரண்டு நூல்களை எழுதி ஏற்கனவே வெளியிட்டுள்ளார். ஆகவே, பேராசிரியர் பொருளதிகாரத்தைப் பொதுமக்களுக்கு விளக்கும்பாங்கில் திறனாய்வு செய்யத் தொடங்கி 1953-54ல் அமுதசுரபி என்னும் திங்களிதழில் எழுதி வெளியிட்டார். வேறுபல அலுவல்களின் காரணமாக அந்த ஆய்வு அப்படியே நின்றது. திருப்பதிக்குச் சென்றபோது (ஆகஸ்ட் 1960) இந்த ஆய்வை மீண்டும் தொடங்கி 34 கட்டுரைகளை வடித்தெடுத்தார். இக்கட்டுரைகளே 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை'' என்று வெளிவந்தது. இந்த நூலை விரிவாக ஆராய்வது இந்த ஆய்விற்கு அப்பாற்பட்டதாகையால் இதில் உள்ள திறனாய்வுக் குறிப்புகளை மட்டும் எடுத்துக்காட்டுவது போதும் என்பது இவ்வாய்வாயளரின் கருத்து.

1)'அறிமுகம்' என்ற முதற்கட்டுரையில் பல தலைப்புகளில் தொல்காப்பியத்தைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

2)'பொருள் உலகம்' என்ற தலைப்பில் முதல், கரு, உரி என்ற மூன்றையும் விளக்கும் பாங்கில் முதற் பொருள் (இடம்-காலம்), இடம்-நானிலைப் பிரிவுகள், காலம்-பெரும்பொழுது, சிறுபொழுது அவற்றின் வகைகள்-இவற்றை விளக்குவதுடன் குறிக்கோள் பொருளை அறம், பொருள், இன்பம், வீடு, பதி, பசு, பாசம் என்பவற்றையும் விளக்குகின்றார். கருப்பொருளை விளக்கும்போது தெய்வத்தை முதலில் வைத்த தனிச்சிறப்பை விளக்கிக்காட்டுவார்.

3)'முப்பொருள் பாகுபாடு' என்னும் தலைப்பில் இடமும், காலமும் என்ற கருத்துப்பற்றி உரையாசிரியர்களின் கருத்தை திறனாய்கின்றார். அளவு கருவிக்கு எட்டாத 'காலத்தை' ஐன்ஸ்டின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு ஆராய்கின்றார். அகப்பொருளில் உரிப்பொருளே உயிராயது என்பதை வற்புறுத்திக் காட்டுகின்றார்.

4)கைக்கிளை, பெருந்திணை பற்றிய கருத்துகளைத் தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்துக்களோடு திறனாய்ந்து தம் கருத்து கூறுவது சிறப்பு.[36] இந்த இரு திணைகளையும் வாழ்க்கையில் பொருத்திக்காட்டியும், அந்த இரு திணைகட்கு உரியோர் இன்னார் இன்னார் என்று சுட்டிக்காட்டி உரைப்பதும் தனிச்சிறப்பு.

5)ஐந்திணை ஒழுக்கத்தில் பங்குபெறும் தலைவன் தலைவியர்கட்கு இயன்றவற்றைச் செய்து துணைபுரிபவர்கள் தோழி, நற்றாய், செவிலி, பாங்கன், பார்ப்பான், பாணன், விறலியர், அறிவர், பரத்தையர், கண்டோர், தேர்ப்பாகன் ஆகிய பதினான்குபேர். இவர்களில் ஒவ்வொருவரின் பங்கையும் தனித்தனியாக எடுத்துக்காட்டுவர் ஆசிரியர்.

6)இன்ப வாழ்வு களவு-கற்பு என்று இரு பிரிவில் அடங்கும் என்றும், ஒவ்வொரு பிரிவிலும் பங்கு பெறுபவர் இன்னார் இன்னார் என்றும் வகைப்படுத்திக் காட்டுவது அகத்திணை கற்பார்க்கு துணைபுரியுமாறு அமைகிறது.

7)இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், பாங்கியர் கூட்டம், இவை நான்கும் காதல் வாழ்க்கையின் பெரும் பகுதிகள் என்றாலும் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நிகழ வேண்டிய இன்றியமையாமை இல்லை என்றும் அதாவது ஒரு நிலையிலேயே காதலர்கள் குடும்பமாகி விடுவர் என்று விளக்குகிவார்.

8)அறத்தொடு நிலை என்பது ஒரு முக்கியமான கட்டம். இதில் நற்றாய், செவிலி, தோழி இவர்கள் தலைவியின் மறை ஒழுக்கத்தை பக்குவமாக வெளிப்படுத்தும் நிலைதான் இது. இவற்றுடன் வேறுபல அகத்தினை மரபுகளையும் விதந்தோதி விளக்கம் தருவது சிறப்பாகும்.

9)காதல் வாழ்வில் (களவு-கற்பு) நேரிடும் பல்வேறு வகைப் பிரிவுகளை விவரமாக விளக்கம் தருவது இந்நூலின் தனிச்சிறப்பு.

10)உள்ளுறை உவமம், இறைச்சி என்பதை மிக விளக்கமாக எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குவது இந்த நூலின் தனிச்சிறப்பு.

11)புறப்பொருளைப் பற்றிப் பாகுபடுத்திக் கூறி விளக்குவது இந்நூலின் மற்றொரு தனிச்சிறப்பு.

12)மெய்ப்பாடு பற்றி விளக்கும்போது வடமொழியாளர்கள் கூறும் ஸ்தாயி பாவம், சஞ்சாரி பாவம் என்ற கருத்துகளை மெய்ப்பாடுகளுடன் ஒப்பிட்டு உணர்த்தி விளக்குவது ஒரு தனிச்சிறப்பு.

13)செய்யுளியல் தொல்காப்பியம் கற்பார்க்கு மிகவும் மயக்கத்தைத் தரும் பகுதி என்பது பலரது அநுபவம். இந்த இயலைப் பேராசிரியர் ரெட்டியார் பல்வேறு கோணங்களில் இரண்டு இயல்களில் மிகத் திறம்பட விளக்குகின்றார்.

14)சொற்பொருள் மரபுகள், அறுவகை உயிர்பாகுபாடு என்ற தலைப்பில் விளக்கும் கருத்துகள் மரபியலைப் பற்றியனவாகும்.

15)இக்கருத்துகளை எல்லாம் தொகுத்து ‘தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை’ என்ற தலைப்பில் அமைந்த இறுதிக் கட்டுரை இந்த நூல் ஆய்வுக்கு மகுடமாக அமைந்திருப்பது மிகச் சிறப்பு.

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. பழங்காலத்திலேயே திறனாய்வுக் கூறுகள் தமிழ் இலக்கியத்தில் காணப்படுவது ஈண்டு எடுத்துக்காட்டப்பட்டது.

2. பேராசிரியர் ரெட்டியாரின் திறனாய்வுப் படைப்புகளாக பல்வேறு துறைகளில் வெளிவந்த திறனாய்வு நூல்கள் இன்னவையென எடுத்துக்காட்டப் பெற்றன.

3. இந்த நூல்கள் தனி இலக்கியம் பற்றியவை, பொதுவானவை, இலக்கணம் பற்றியவை என்று மூன்று நிலைகளில் வகைப்படுத்தி அவற்றின் திறனாய்வுக் கூறுகள் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

4. திறனாய்வாளர்கள் விருப்பு வெறுப்பற்று நூல்களைத் திறனாய வேண்டும் என்பது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

5. இலக்கியத்தில் காணப்படும் படிமங்களை வகைப்படுத்திக் காட்டி அவை சுவைஞர்கள் சுவை காண்பதற்கு உறுதுணையாக நிற்கின்றன என்பது பேராசிரியர் ரெட்டியாரின் திறனாய்வுப் புதுப்போக்கு.

6. பக்தி இலக்கியங்களில் மேற்கொள்ளப்பெற்ற கருத்துகள், தத்துவ கருத்துகளாக ஆழ்வார் பெருமக்கள் அமைத்த, பெருமையைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவது சுவைமிக்கது.

7. ஆழ்வார் பாசுரங்களில் தாய்ப்பாசுரங்கள், தோழிப்பாசுரங்கள், மகள்பாசுரங்கள் என்று பிரித்து ஒவ்வொன்றின் தத்துவமும் விளக்கப்பெற்றுள்ளது. இதனை வைணவ இலக்கியங்களில் மட்டிலும் காணப்பெறும் ஓர் உண்மையாகும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

8. பெரியாழ்வார் திருமொழியில் திருப்பல்லாண்டு ஒரு தனிப்பிரபந்தம் அன்று என்று காட்டப்பட்டுள்ளது.

9. திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் திருநெடுந்தாண்டகம் சரமப்பிரபந்தமா? பெரிய திருமடல் சமரப்பிரபந்தமா? என்ற ஆய்வில் ஈடுபட்டு பெரிய திருமடல்தான் ஆழ்வாரின் சரமப்பிரபந்தம், என்று முடிவு கட்டுவது ஈண்டு காட்டப்பெற்றுள்ளது.

10. இன்னும் சில விரிவு அஞ்சி ஈண்டு எடுத்துக் காட்டப்படவில்லை. இவை முடிவுரையில் காட்டப்பெறும்.

அடிக்குறிப்புகள்:

1. கலித்தொகை-35

2. மதுரைக்காஞ்சி-அடி 761-763
3. கலித்தொகை-63
4. கண்ணன் பாட்டுத்திறன், இயல்-2
5. மேலது, இயல்-4
6. மேலது, ப-47
7. மேலது, இயல்-6
8. மேலது, இயல்-7
9. மேலது, இயல்-8
10. மேலது, இயல்-10
11. மேலது, இயல்-11
12. மேலது, இயல்-14
13. கவிஞர் வாலி-பாரதி ஒரு பிள்ளையார் சுழி என்ற பாட்டு (பொய்க்கால் குதிரைகள்)
14. சடகோபன் செந்தமிழ், இயல்-7
15. மேலது, இயல்-8, 9, 10
16. மேலது, இயல்-11
17. மேலது, இயல்-12
18. மேலது, இயல்-12, 13, 14
19. குயில்பாட்டு அடி 241-245
20. பாரதீயம், ப.22
21. மேலது, ப.81-82
22. மேலது, ப.135
23. பகவத்கீதை முன்னுரை (சித்பவாநந்த அடிகள் பதிப்பு)
24. ஆழ்வார்களின் ஆராஅமுது, ப.73
25. கம்பரா. ஆரணிய. மாரீசன் வதை-6
26. புதுக்கவிதை-போக்கும் நோக்கும் பக்.300-301
27. மேலது, பக்.344-345
28. மேலது, பக்.345
29. மேலது, பக்.357-358
30. அகத்திணைக் கொள்கைகள், இயல்-19
31. மேலது, பக்.267
32. மேலது, பக்.252
33. பாட்டுத்திறன், ப.8
34. கவிதையநுபவம், பக்.124-126 'கவிதை அநுபவம்' என்ற முதற்பதிப்பு நூலே பாட்டுத்திறன் என்ற புதியவடிவம் பெறுகின்றது. இதில் பாட்டின் படிமங்கள் என்ற இயல் புதியதாகச் சேர்ந்துள்ளது. கற்பித்தலின் தத்துவம் என்ற பகுதி நீக்கப்பட்டு அந்த இடத்தில் புதுக்கவிதைத்திறம் என்ற பகுதி இடம்பெறுகிறது.
35. இக்கட்டுரை, பக்.156-160
36. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, கட்டுரை-5.

****

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ IV

இயல் - 7

ஆராய்வுத் தமிழ்

பகுதி 4 :<>: இயல் – 7

ஆராய்வுத் தமிழ்

பேராசிரியர் ரெட்டியார் நூல்கள் அனைத்துமே ஆய்வுத் தமிழ் வகையைச் சார்ந்தவை. ஆயினும் சில வசதிகளின் பொருட்டு ஆசிரியம், திறனாய்வு, சமயம், அறிவியல் என்றெல்லாம் பகுக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்த பகுதியில் 1.கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, 2. வைணவச் செல்வம், 3. வடவேங்கடமும் திருவேங்கடமும், 4.ஆங்கிலத்தில் அமைந்த "Religion and Philosophy of Nalayiram with special reference to Nammalvar", 5. "Studies in Arts and Science" (61st Birthday Commemoration Vol.1), 6."Collected Papers" என்பவற்றை அடக்கலாம். இவற்றுள் மூன்று ஆங்கிலத்தில் இருப்பினும் அவையும் ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

<u>1.கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி:</u> பேராசிரியர் ரெட்டியார் காரைக்குடியில் இருந்தபோது தினமணி சுடர் ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கலிங்கத்துப் பரணிபற்றி ஆறு கட்டுரைகள் தினமணி சுடருக்கு எழுதி வெளியிட்டார். அவை பின்னர் நூல் வடிவம் பெற்றன. இதில் உள்ள சில கருத்துகள்:

அ) ‘கடைத்திறப்பு’ என்பதில் குலோத்துங்கனின் வெற்றி விழாவைக் கொண்டாடுவதற்காக மகளிர் குழாம் ஒவ்வொரு வீட்டு மகளிரையும் துயில் எழுப்பி விழாவில் கலந்து கொள்ளுமாறு கூறுவதையும் திருப்பாவை, திருவெம்பாவை அடிப்படையில் அமைந்த பாவை விழாவில் கண்ணனிடம் சிறுபறைப் பெறுவதற்காக, மகளிர் குழாம் வீடுதோறும் சென்று எழுப்புதையும் ஆசிரியர் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது ஒரு சிறந்த ஆய்வுக் குறிப்பு.

ஆ) ‘வரலாற்றுக் குறிப்புகள்’ என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை ஒன்றில் ‘குருட்டுப் பேய்’, ‘செவிட்டுப் பேய்’, ‘மூடப் பேய்’, ‘நொண்டிப் பேய்’, ‘பார்ப்பன பேய்’, ‘நோக்கப் பேய்’ முதலிய பேய்களை வருணிக்கும்போது, போரின் குறிப்புகளையும் கூறுவது கவிஞரின் கற்பனைத் திறனை எடுத்துக்காட்டுவதற்கு பயன்பட்ட ஆய்வுக் குறிப்பு.

இ) தொல்காப்பியர் அடிப்படையில் சுவை பற்றி ஆசிரியர் தரும் விளக்கம் மிகச் சிறப்பு.

ஈ) பொருளணிகள், சொல்லணிகள் இந்நூலில் அமைந்திருக்கும் நயத்தை எடுத்துக்காட்டுவதுடன் செயங்கொண்டாரின் புலமையை எடுத்துக்காட்டுகிறது.

<u>2.வைணவச் செல்வம்</u>: தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் (காஞ்சி தத்துவ மையத்தில்) ஒன்றரை ஆண்டுக்காலம் சிறப்பு நிலைப் பேராசிரியர் பதவி ஏற்று வைணவத்தை ஆழமாக ஆய்ந்து அளிக்கப்பெற்ற ஓர் ஆய்வுப் பெருநூல் இது. பதினைந்து இயல்களாகப் பகுக்கப்பெற்று ஆய்வுக் கருத்துகள் வழங்கப்பெறுகின்றன.

அ) வழி வழி வைணவம் வளர்ந்த வரலாற்றை பல குறிப்புகளுடன் விளக்குகிறது.

ஆ) பண்டைத் தமிழ் இலக்கியங்களில் திருமால் வழிபாடுபற்றிய குறிப்புகள் அகழ்ந்து எடுக்கப்பெற்று சிறப்பாக வழங்கப்படுகின்றன.

இ) வைணவ தத்துவங்களாகிய தத்துவம், இதம், புருஷார்த்தம் என்பதை ஆழ்வார் பாசுரங்களின் அடிப்படைகளாகவும், வைணவ மந்திரங்களான திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்பதை பாசுரங்களின் அடிப்படையில் நோக்கப்பெறுகின்றன.

ஈ) பிள்ளை உலக ஆசிரியர், அவர் சோதரர் அழகிய மணவாள பெருமாள் நாயனார், வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் இவர்கள் வழங்கிய இரகசிய கிரந்தங்கள்பற்றிய குறிப்புகள் விரிவாகத் தரப்பெற்றுள்ளன.

உ) வைணவ இலக்கியங்கள்பற்றிய குறிப்புகள், நாலாயிரம் தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை பல்வேறு ஆசிரியர்கள் வழங்கிய வைணவ இலக்கியங்கள் பற்றிய குறிப்புகள் திரட்டப்பெற்று பாகுபடுத்தி வழங்கப் பெற்றுள்ளன.

ஊ) பகவத் விஷயம் என்ற தலைப்பில் ஆறாயிம்படி, ஒன்பதனாயிரம்படி, பன்னிரண்டாயிரப்படி (பதினெட்டாயிரப்படி உட்பட) இருபத்து நாலாயிரம்படி, முப்பத்து ஆறாயிரப்படி (நம்பிள்ளை ஈடு)

ஆகியவைபற்றிய குறிப்புகள் விரிவாகத் தரப்பெற்றுள்ளன. இப்பகுதிகளில் தோழிப் பாசுரம், தாய்ப்பாசுரம், மகள் பாசுரம் இவற்றின் தத்துவங்களும், தூது பற்றிய தத்துவக் குறிப்புகளும் தக்க விளக்கங்களுடன் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

எ) வைணவ சீலர்கள் என்ற தலைப்பில் 1. ஆழ்வார்கள், 2. ஆச்சாரியர்கள், 3.சிம்மாசனாதிபதிகள், 4. அஷ்டதிக்கஜங்கள் இவர்களைப்பற்றிய குறிப்புகளும், குரு பரம்பரை பற்றிய குறிப்புகளும், சிலமடத்து ஜீயர்களின் பரம்பரையும், அடியார்கள் பற்றிய குறிப்புகளும் விரிவாக எடுத்து விளக்கப் பெற்றுள்ளன.

ஏ) இருபது நாள் நடைபெறும் திவ்வியப் பிரபந்த பெருவிழா தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன் முதலாக எடுக்கப்பெற்ற பெருவிழா (பகற்பத்து இராப்பத்து) என்பதை வற்புறுத்தி இதில் பங்கு கொள்ளும் அரையர் பரம்பரை பற்றிய குறிப்புகளும் விரிவாக விளக்கப்படுகின்றன.

ஐ) வைணவ திருத்தலங்கள் 108 பற்றியும் ஆங்காங்கு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள்பற்றிய குறிப்பும், புராண இதிகாச வரலாறுகளுடன் எடுத்துக்காட்டப்பெற்று விளக்கப்படுகின்றன. இவற்றுடன் நாட்டில் பரவலாக இடம்பெற்று இருக்கும் அபிமான தலங்களும் சுட்டி உரைக்கப்பெறுகின்றன.

ஒ) ஒரு வைணவன் கடைப்பிடிக்க வேண்டிய அன்றாட கடைபிடிப்புகள், திருக்கோயில் வழிபாட்டு முறைகள், நடைமுறைச் சம்பிரதாயங்கள் (பஞ்ச சம்ஸ்காரம் உட்பட) பற்றிய குறிப்புகள் விரிவாக விளக்கப் படுகின்றன.

ஓ) பிற நெறிகளில் இராமானுச நெறியின் தாக்கம் என்ற தலைப்பில் இராமானந்தர், நிம்பார்க்கர், வல்லபர், கிருட்டிணசைத்தனியர், ஜெய தேவ முனிவர், ஏகநாதர், துக்காராம், இராமதாஸ், சீக்கிய சமயம், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பெசண்ட் அம்மையார், இராம கிருட்டிணர், காந்தி அடிகள், கிறிஸ்துவ சமயம், இஸ்லாம் போன்றவற்றில் இக்கருத்துகள் இலைமறை காய்போல் தென்படுவது எடுத்துக்காட்டி விளக்கப்படுகின்றது.

3.வடவேங்கடமும் திருவேங்கடமும்: பதினேழு ஆண்டுகள் திருப்பதியில் பணி ஆற்றிய பேராசிரியர் திருவேங்கடத்தை மையமாகக்கொண்டு எழுதிய பதினெட்டு கட்டுரைகள் அடங்கிய நூல் இது. இவற்றிலுள்ள முக்கிய கருத்துகள்:

(அ) தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் வடவேங்கடம் வேறு, இன்றைய திருவேங்கடம் வேறு என்பது பல்வேறு அசைக்கமுடியாத சான்றுகளுடன் விளக்கப்படுகின்றன.

(ஆ) ஏனைய பதினான்கு கட்டுரைகள் முதலாழ்வார்கள், திருமழிசை ஆழ்வார், ஆண்டாள், குலசேகரப் பெருமாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் போன்ற ஆழ்வார்கள் அநுபவமும், திவ்விய கவி எனப்படும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவேங்கடம்பற்றிய அநுபவமும், முத்தமிழ்கவி வீரராக முதலியார், கம்பநாடன், கம்பராமன், பதுமநாபன் இவர்களின் அநுபவங்களும் விரிவாக ஆராயப் பெறுகின்றன.

(இ) வேங்கடம் மாலவனுக்கா? வேலவனுக்கா? என்ற கட்டுரையில் பல்வேறு இலக்கியக் கருத்துகள் விரிவாக ஆராயப்பெற்று, வேங்கடம் மாலவனுக்கே என்று நிலைநாட்டப்பெறுகின்றது.

4. நாலாயிர பிரபந்தம்-நம்மாழ்வார் தத்துவம் (ஆங்கிலத்தில் அமைந்த பெருநூல் - 920 பக்கம்): இந்த ஆய்வு நூல் பேராசிரியரால் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெற்று பிஎச்.டி. பட்டம் பெற்ற நூல். இது ஆறு பகுதிகளாகவும் முப்பத்திரண்டு இயல்களாகவும் அமைந்துள்ளது. இதனை ‘வைணவத்தின் களஞ்சியம்’, ‘வைணவம் பற்றி சிறந்த மேற்கோள் நூல்’ என்றெல்லாம் கருதலாம். பகுதி (1)இல் ஆய்வு பற்றிய சில குறிப்புகள் தரப்பெறுகின்றன. பகுதி (2)இல் ஆழ்வார் காலத்திற்குமுன் அடியிற்கண்ட கருத்துகள் ஆய்ந்து தரப்பெறுகின்றன.

(அ) வேத காலத்தில் திருமாலின் நிலை, இந்திரனுக்கு ஒரு நண்பன் என்ற முறைதான் காணப்பெறுகின்றது.

(ஆ) இதிகாச புராண காலங்களில் பகவத்கீதை, ஆகமங்கள், சடங்குகளின் வழிபாட்டு முறை, நாரத சாண்டில்ய பக்தி சூத்திரங்கள் ஆகியவற்றில் திருமாலின் நிலை, படிப்படியாக வளர்ந்து ஒரு பரம்பொருள் நிலைக்கு எட்டி விடுகின்றது. பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் இவ்வாறு மாறி மாறி வளர்ந்துள்ளன என்பதே இதன் பொருள். இவை இயல் இரண்டு முதல் ஏழு முடிய விளக்கப் பெறுகின்றன.

(இ) பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருந்து திருமால்பற்றிய குறிப்புகள் விரிவாகக் காட்டப் பெறுகின்றன.

(ஈ) இவற்றிலிருந்து வைணவ தத்துவங்கள் பாகுபாடு செய்யப்பெற்று விளக்கம் பெறுகின்றன.

(3)இல் பருந்து நோக்கில் நாலாயிரம்: இதில்

அ) ஆழ்வார்கள் காலநிலை ஆழ்ந்து ஆராயாமல் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளது.

ஆ) நாலாயிரம் என்ற தொகுப்பு நூலில் அடங்கிய பாசுரங்களின் விபரம்:

முதலாயிரம்	947
பெரிய திருமொழி	1134
திருவாய்மொழி	1102
இயற்பா	593
	3776

நூலாயிரத்திற்குத் தேவையான பாசுரங்கள் 224 வேண்டும். இதை சரிபடுத்துவதற்காக வட கலையார் சிறிய திருமடலை ஏதோ ஒரு கணக்கில் நாற்பதாகவும், பெரிய திருமடலையும் இதே முறையில் எழுபத்து எட்டாகவும் கணக்கிட்டு இராமானுச நூற்றந்தாதி பாசுரங்கள் 108ஐம் சேர்த்து 817 என்று கணக்கிடுவர். விபரம்:

மடல்கள் நீங்கிய இயற்பா தொகுதி பாசுரங்கள்	591
சிறிய திரு மடல்	40
பெரிய திரு மடல்	78
இராமானுஜ நூற்றந்தாதி	108
	817

தென்கலையார் இராமானுச நூற்றந்தாதியை புறக்கணித்துவிட்டு, மடல்களில் பாசுரங்களை கண்ணிகளாகப் பிரித்துக் கணக்கிடுவர். இவர்களின் கணக்கு விபரம்:

மடல்கள் நீங்கிய இயற்பா பாசுரங்களின் தொகுதி	591
சிறிய திருமடல்-கண்ணிகள்	77½
பெரிய திரு மடல்-கண்ணிகள்	148½
	817

வடகலையார் கணக்கு:

முதலாயிரம்	947
பெரிய திருமொழி	1134
திருவாய்மொழி	1102
இயற்பா	817
	4000

தென்கலையார் கணக்கு:

முதலாயிரம்	947
பெரிய திருமொழி	1134
திருவாய்மொழி	1102
இயற்பா	817
	4000

தென்கலையார் இராமானுஜ நூற்றந்தாதியை 4000த்தில் சேர்ப்பதற்கு இணங்கினாலும் இதைக் கணக்கிடும்பொழுது புறக்கணிப்பது பேராசிரியர்க்கு உடன்பாடு இல்லை. வடகலையார் இராமானுச நூற்றந்தாதியை நாலாயிரத்தில் சேர்ந்திருப்பது இவர்க்கு உடன்பாடுதான். ஆனால், இரு கலையார்களும் மடல் பாசுரங்களை அவரவர் கருத்துப்படி கூறுபோட்டு அக்கூறுகளை பாசுரமாகக் கொள்வது, இலக்கண விதிகட்கு பொருந்தாததால் பேராசிரியர் இச்செயலுக்கு உடன்படவில்லை.

மேலும், பதினொரு பாசுரங்கள் இருந்தாலும் அதைப் பதிகம் என்று கூறுவதும், பாணாசுரனின் ஆயிரம் தோள்களில் நான்கைவிட்டு 996ஐ வெட்டினாலும் அதனை ‘ஆயிரம்தோள் துணித்த’ என்று கூறுவதனாலும், முதலாயிரத்தில் 947 பாசுரங்கள் இருந்தாலும் அதனை 1000 என்று வழங்குவதனாலும், 4000த்திற்கு 200க்கு மேற்பட்ட பாசுரங்கள் குறைவாக இருந்தாலும் அத் தொகையை 4000 என்று கூறுவது பொருந்தும் என்பது பேராசிரியரின் கருத்து.

(4) ஆழ்வார்கள் காலத்தில்:

இப்பகுதிதான் இந்த ஆய்வுக் கட்டுரையின் முக்கியமானதாகும். இது பதினான்கு இயல்களைக் கொண்டது. இவை பற்றிய சில கருத்துகள் மட்டிலும் எடுத்துக்காட்டுவது சிறப்பு எனக் கருதுவார் இவ்வாய்வாளர்.

(அ) இறைவனைப் பற்றிய பெருமையையோ, சிறப்பையோ எடுத்துக்கூறுவதில் இவ்வாழ்வார்களுக்கு அதிக அக்கறை இல்லை. இறைவனது சௌலப்பியம், சௌசீல்யம், காருண்யம், இந்தக் குணங்களையே எடுத்துக்காட்டுவதில் தம்மையே மறப்பர். இவர்கள் அதிகமாகக் கவனம் செலுத்துவது அர்ச்சைவடிவ எம்பெருமான்களையே.

(ஆ) முழு முதல் கடவுள் யார் என்பதை உறுதி செய்வதில் இவர்கள் அதிக கவனம் செலுத்துவர். நாராயணனைத் தவிர பிற கடவுள்ர்கள் முழு முதற் கடவுளர்கள் அல்லர் என்பதை உபநிடத புராண இதிகாசங்களைக்கொண்டு நிலைநாட்டுவர்.

(இ) இறைவனுடையத் திருக்குணங்கள் ஆழ்வார் பாசுரங்களில் எவ்வெவ்வாறு கூறுப்பட்டுள்ளன என்பதைப் பேராசிரியர் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் உறுதிசெய்வது சிறப்பு.

(ஈ) இறைவன் வைணவ தத்துவப்படி, பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் உள்ளான் என்பதையும், வியூகம் 12 கிளை வியூகங்களாக பிரியும் என்பதையும் விளக்குவது சாலப் பொருத்தமாகும். இதில் இறைவனுடைய வீரச் செயல்களையும், வெற்றிச் செயல்களையும் எடுத்துக்காட்டுவது மேலும் சிறப்பு.

(உ) இறைவன், ஆன்மா, உலகம் இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதைச் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று வைணவத்துவங்கள் எவ்வாறு ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன என்பதை பல பாசுரங்களை எடுத்துக்காட்டும் போக்கில் விளக்குவார்.

(ஊ) ஆழ்வார்களின் இறையநுபவத்தைக் காட்டுவது மிகச் சிறப்பாக அமைகின்றது.

‘உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்’’ -பெரியாழ்-திரு-5.4:5

என்று பெரியாழ்வார் அநுபவத்தையும்,

‘வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில்என்று
ஆர்வுஉற்ற என்னை ஒழிய, என்னில்முன்னம்
பாரித்துத் தான்என்னை முற்றப் பருகினான்’’ -திருவாய்-9.6:10

என்று நம்மாழ்வாரும் கூறியது போன்று பல இடங்களைச் சுட்டிக்காட்டி இறையநுபவத்தைப் புலப்படுத்துவர். பேராசிரியரின் இந்த ஆய்வுக் கட்டுரையில் இத்தகைய இறையனுபவக் கொடுமுடிகள் பலப்பல.

(எ) இயற்கையின் மறைமெய்யைப் பற்றிய (Nature mysticism) கருத்துகளை ஆழ்வார் பாசுரங்களைக் கொண்டு எடுத்துக்காட்டும் பாங்கில் ‘அசித்து’’ என்ற வைணவ தத்துவத்தைப் பளிங்குபோல் தெளிவாக்குவார்.

(ஏ) நாயகன்-நாயகி பாவனை என்பதை ஏனைய சமயங்கள் எடுத்து விளக்கினாலும், வைணவம்போல் அவை விளக்குவது இல்லை. ஆழ்வார் பாசுரங்களில் ‘நவவித சம்பந்தம்’’ இலைமறை காய்கள் போலிருப்பதை எடுத்துக்காட்டுவர். ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள சம்பந்தம் ‘ஓம் நமோ நாராயணாய’ என்ற எட்டெழுத்து மந்திரத்தில் அடங்கியுள்ளது. இதைத் தெளிவாக விளக்கி அவற்றுள் ஒன்றான நாயகன்-நாயகி உறவினை மிகத் தெளிவாக்குவர். ஆழ்வார்களின் அகத்துறைச் சார்ந்த பாசுரங்கள் தோழிப்பாசுரம், தாய்ப்பாசுரம், மகள் பாசுரம் என்று பிரிவுபட்டு நிற்கும். இவற்றின் தத்துவத்தை வைணவ சமயம் விளக்குவதுபோல் எந்தச் சமயமும் விளக்குவதில்லை. இத்தத்துவத்தைப் பேராசிரியர் ரெட்டியாரின் ஆய்வுக் கட்டுரை மிகத்தெளிவாக விளக்குகிறது.

(ஐ) நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களிலிருந்தும் மனத்தாலும், வாக்காலும், செயலாலும், செய்யக்கூடிய பூசனைமுறைகளை மிகத்தெளிவாக விளக்குவார் பேராசிரியர்.

(ஒ) வைணவ தத்துவத்தின் பாகவத வழிபாடு சிறந்ததோர் அம்சம். திருமங்கையாழ்வார் மூன்று பதிகத்தில் இதன் பெருமையை எடுத்தோதுகின்றார். தொண்டரடிப் பொடியாழ்வார் இந்த வழிபாடு சாதி,

சமய, மொழி, இன வேறுபாட்டையும் கடந்து வழிபட வேண்டியது என்று கூறவார்.

(ஓ) வைணவத்தின் குறிக்கோள் முத்தி அடைதலாகும். அந்த முத்தி நிலையில் இறைவனுக்குக் கைங்கரியம் செய்வதே அதன் உயிர் நாடியாகும்.

'தொண்டே செய்து என்றும் தொழுது வழியொழுக
பண்டே பரமன் பணித்த பணிவகையே" **(திருவாய்-10.4:9)**

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கை எடுத்துக்காட்டி இக்கருத்தை அரண் செய்வர்.

(ஔ) இந்த ஆய்வேட்டில் பன்னிரு ஆழ்வாழ்களின் பக்தி உணர்வை தெளிவாக எடுத்துக்காட்டுவர். ஆழ்வார்கள் யாவரும் இம் மண்ணுலகில் மற்றவரோடு இணைந்து வாழ்ந்தாலும் அவர்கள் நிலையற்ற வாழ்வை நன்குணரந்து இறைவனையே நாடும் போக்கினை உடையவர்களாகத் திகழ்ந்தனர். நாலாயிரத்தையே திராவிட வேதமாகக் கொள்ளும் ஒரு மரபும் வைணவத்தில் உண்டு.

5. ஆசாரியா்கள் காலத்தில்:

(அ) ஆழ்வார்கள் பாசுரங்கள் எல்லாம் அவர்கள் மறைந்த சில காலத்திற்குள் வழக்கற்றுப் போயின. வுட மொழியாளர்கள் சூழ்ச்சி செய்த இவற்றை அடங்கிய ஏடுகளைத் தாமிரபரணியின் ஆற்று வெள்ளத்தில் விட்டொழித்தனர் என்ற செவிவழிச் செய்தியும் ஒன்று உண்டு. தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவிலைச் சேர்ந்த நாத முனிகள் என்ற ஆசாரியார் ஆழ்வார் பிறந்த திருநகரிக்குச் சென்று அரும்பாடுபட்டு இப்பாசுரங்களைச் சேர்த்து வேதவியாசர் வேதங்களை நான்காக தொகுத்ததுபோல இவர் ஆழ்வார் பாசுரங்களை முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்று நான்கு தொகுதிகளாகப் பிரித்து அடைவுபடுத்தினார்.

(ஆ) நாத முனிகள் முதல் இராமானுசர்வரையிலும் இப்பாடல்கள் மக்களிடையே பரப்பப்பெற்று பயபக்தியுடன் ஓதப்பெற்று பெரும் புகழ் எய்தின. இக்காலத்தில்தான் பிரபந்தங்களுக்கு பலர்மூலம் 'தணியன்கள்' தோன்றின.

(இ) இராமானுசர் காலத்திலும், அதற்குப் பின்னரும் உரைகள் எழுந்தன. பெரிய வாச்சான் பிள்ளை என்பவர் நாலாயிரம் முழுமைக்கும் உரை எழுதினார். பிரபந்தங்களில் முக்கியத்துவம் பெற்ற திருவாய்மொழிக்கு மட்டிலும், ஆறாயிரம்படி, ஒன்பதனாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரம்படி, முப்பத்து ஆறாயிரப்படி என்ற **ஐந்து** உரைகள் எழுந்தன. அவற்றின் தொகுப்பு 'பகவத் விஷயம்' என்ற பெயரால் வழங்குகிறது. இவற்றுள் முப்பத்து ஆராயிரப்படி நம்பிள்ளை அவர்களால் அருளப்பெற்று வடக்குத் திருவீதிபிள்ளைஅவர்களால் தொகுக்கப்பெற்று 'ஈடு'' என்ற திருப்பெயரால் வழங்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் அமைந்த இந்த ஆய்வுக் கட்டுரைப்போல் தமிழ் உலகத்தில் மற்றொரு ஆய்வுக் கட்டுரை காண்டல் அரிது. வடமொழிப் பேராசிரியர் இராவகன் அவர்கள் தம் பிஎச்.டி. ஆய்வுக்கு வழங்கிய 'The Theory of Rasas'' என்ற ஆங்கில மொழியில் அமைந்த ஆய்வுக் கட்டுரை இத்தரத்தில் அமைந்துள்ளது என்று பல ஆய்வாளர்கள் பேசியதைக் கேட்டதுண்டு.

(5)பேராசிரியரின் மணிவிழா வெளியீடு: எண்பத்தைந்து ஆய்வுக் கட்டுரை அடங்கிய நூல் இது. தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் உள்ள பெரும் பேராசிரியர்களால் எழுதப்பெற்ற பெருங்கட்டுரைத் தொகுப்பில் பேராசிரியர் ரெட்டியாரின் 'The concept of One India in Asian Tamil Literature' என்ற ஆங்கிலக் கட்டுரையும் அடங்கியுள்ளது. 'தேசிய ஒருமைப்பாடு', 'உணர்வுகளின் ஒருமைப்பாடு', என்றெல்லாம் பேசிவரும் இக்காலத்திற்கு பல அகச்சான்றுகளுடன் அமைந்த இந்தக் கட்டுரை ஒரு பேரொளி காட்டுவதாக அமைந்துள்ளது. இந்தக் கட்டுரையை பல நாடுகளில் உள்ள பதினெட்டு தூதரகங்கள் கேட்டுவாங்கியதும் உண்டு. அலகாபாத்தில் இந்திராகாந்தியின் நினைவாக வெளியிட்ட ஆண்டு மலர் ஒன்றில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது. இதன் சுருக்கும் 'Hindu'விலும் தலையங்கத்துக்கு அருகில் நடுப்பக்கத்திலும் இடம்பெற்று பெரும்புகழ் பெற்றுள்ளது. இதில் தமிழகத்தில் பேராசிரியர் தவிர வேறு எவரும் கட்டுரை வழங்கிற்றிலர்.

(6)Collected Papers: இவை பேராசிரியர் இந்திய நாட்டில் பல பகுதிகளில் தேசியமட்டத்தில் நடைபெற்ற பல கருத்தரங்குகளில் படிக்கப்பெற்ற ஆங்கிலத்தில் அமைந்த ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு.

முதல் பகுதியில்: இதில் பத்துக்கட்டுரைகள் அடங்கியுள்ளன. இதில் அடங்கியுள்ள கட்டுரைகளில் பண்டையத் தமிழ் இலக்கியங்களில் வைணவ சமயம் பற்றிய குறிப்புகள், வைணவ சம்பிரதாயங்கள், ஆழ்வார்கள் பார்வையில் வீடு பேறுபற்றிய கருத்துகள், இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பு, நாலாயிரம் திராவிட வேதம், ஆழ்வார் பாசுரங்களில் அகப்பொருள் தத்துவம், ஆன்மீக வாழ்வில் அழுகையின் பயன், தமிழ் மூலங்களில் வைணவ சமயம், வாழ்க்கையின் தத்துவம் பற்றிய கருத்து, தென் இந்தியாவில் வைணவ சமயம் ஆகிய கருத்துக்கள் விரிவாக விளக்கத்துடன் ஆராயப்பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியில்: இதிலும் பத்துக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. தென் இந்திய மொழிகளின் வளர்ச்சி, தற்கால வாழ்வில் திருக்குறளின் பங்கு, சங்க இலக்கியங்களில் வேதம் பற்றிய குறிப்புகள், முத்தொள்ளாயிரம் பற்றிய ஆய்வு, கலிங்கத்துப் பரணியின் திறனாய்வு, ஆழ்வார் பாசுரங்களில் இயற்கையின் தத்துவம், நாலாயிரமும் திருமுறையும் ஓர் ஒப்பாய்வு, நாலாயிரத்தின் தொகுப்பு அமைந்த முறை, கம்பராமாயணத்தில் சிறு பாத்திரங்கள், தமிழ் இலக்கியங்களில் மருத்துவம்பற்றிய குறிப்புகள் ஆகியவை விளக்கத்துடன் ஆராயப்பெற்றுள்ளன.

மூன்றாம் பகுதியில்: இதில் அடங்கிய கட்டுரைகள் ஏழு. பண்டைய தமிழகத்தில் பொதுவிருப்பார்வப் பண்பாடு, பண்டையத் தமிழ் இலக்கியத்தில் இந்திய ஒருமைப்பாடு பற்றிய கருத்து, பல்கலைக்கழக கல்வியின் தராதரம், சங்க இலக்கியத்தில் அறிவியல் கல்வி, திராவிடப் பண்பாட்டில் நகரத்தாரின் பங்கு, பண்டைய காலத்தில் திராவிட நாடுகளில் தமிழ்ப்பண்பாட்டின் பங்கு, கல்வி பற்றிய கொள்கை இவை விளக்கத்துடன் ஆராயப்பெற்றுள்ளன.

****



ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ IV

இயல் - 8

மொழிபெயர்ப்புத் தமிழ்

பகுதி 4 :<>: இயல் – 8

மொழிபெயர்ப்புத் தமிழ்

‘மொழிபெயர்ப்பு’ ஒரு கலை. இலக்கியப் படைப்புகளில் மொழியெர்ப்பு நூலும் ஒரு வகை. வழி நூல்களின் வகைகளை விளக்கப் புகுந்த தொல்காப்பியர்,

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே[1]

என்ற நூற்பாவால் காட்டுவர். மொழிபெயர்ப்பினைத் தொல்காப்பியர் ‘அதர்ப்பட யாத்தல்’ என்று கூறுவதை இந்நூற்பாவால் அறிய முடிகின்றது. மொழிபெயர்ப்பு நூலைப் படிப்போருக்கு ‘இது ஒரு மொழிபெயர்ப்பு’ என்று தோன்றாவண்ணம் முழுநூல் போலவே சரளமான தீந்தமழ் நடையில் மொழிபெயர்ப்பு அமைதல் வேண்டும். பல புதிய கருத்துகள் தமிழ்மொழியை அமைவதற்கு ‘மொழிபெயர்ப்பு’ ஒரு வழியாகும்.

இன்று குசராத்தி, இந்தி, மராத்தி, வங்காள மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளிவரும் சிறுகதை இலக்கியங்கள், புதினங்கள், தமிழ்மொழிக்குக் கருத்துவளத்தைப் பெருக்குகின்றன. ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளிலிருந்து அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் மொழிபெயர்க்கப்பெற்று வெளிவரும் தமிழாக்க நூல்கள் வீட்டுச் செல்வத்தைப் பெருக்கி வருகின்றன. சிறந்த நூல்கள் எம் மொழிகளிலிருப்பினும் அவற்றை மொழிபெயர்த்துக்கொள்ளும் உயரிய நெறி தமிழர்களிடமிருந்தது என்பதற்கு இது போதிய சான்றாகும். இடைக்காலத்தில் வடமொழியிலிருந்து தமிழுக்குப் பல நூல்கள் வந்தன. இன்று மேல்நாட்டு மொழிகளிலிருந்து பெயர்க்கப்பட்டு வெளிவந்து கொண்டுள்ளன. இன்னும் இம் மனப்பான்மை நம்மிடம் விரிய வேண்டும். மொழிப்பற்றுடைய பல மொழியினரும் தங்கள் இலக்கியங்களை வளர்ப்பதற்கு ‘மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்’ முறையை பின்பற்றுதல் வேண்டும். உலக மக்களுள் ஒற்றுமையும், பண்பாட்டுத் தொடர்பும் வளர வேண்டுமாயின் ஒவ்வொரு மொழியிலும் தோன்றும் சிறந்த இலக்கியங்கள் யாவும் ஏனைய மொழிகளிலும் பரவுதல் வேண்டும். தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழரின் பண்பு இற்றைத் தமிழுக்கும் முற்றிலும் பொருந்தும். பல துறைகளிலும் ஓர் எழுச்சியை ஏற்படுத்திய பாரதியார்,

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்[2]

என்று கூறி, கலைத்துறையிலும் அறைகூவி அழைப்பதைக் காணலாம். அவர்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்[3]

என்றும் வழிகாட்டுவார். பாவேந்தர் பாரதிதாசனும்,

உலகியலின் அடங்களுக்கும் துறைதோறும் நூல்கள்
ஒருவர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலவென எவ்விடத்தும் பாய்ச்சி விட வேண்டும்[4]

என்று இத்துறையில் ஆக்கத்திற்கு செவியறி உறுத்துவர்.

மொழிபெயர்ப்பில் இரு வகை உண்டு. ஒன்று அயல் மொழியிலிருந்து தாய்மொழியில் பெயர்ப்பது. மற்றொன்று தாய் மொழியிலிருந்து அயல் மொழியில் பெயர்ப்பது. முன்னதற்குத் தாய் மொழியறிவு அதிகமும், பின்னதற்கு அயல் மொழி அறிவு அதிகமும் இருத்தல் வேண்டும். முன்னதால் பிற மொழிச் செல்வங்கள் தமிழுக்கு வரும். பின்னதால் தாய்மொழியிலுள்ள திருக்குறள், திருவாசம், திருவாய்மொழி போன்ற கலைச் செல்வங்கள் வெளிநாடுகளில் பரவும் வாய்ப்புகள் ஏற்படும். ஈண்டு நாம் கவனிக்க இருப்பது முன்னதைப்பற்றியே.

<u>**பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் மொழிபெயர்ப்பு நூல்கள்:**</u>

பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் ஆறு நூல்களை மொழிபெயர்த்துள்ளார். அவற்றுள், 1. வேமனர், 2.சி.ஆர்.ரெட்டி, 3. குரஜாட என்ற மூன்றும் இலக்கியம் பற்றியவை. தெலுங்கு மொழியிலுள்ள இவற்றின் பொருள் ஆங்கிலத்திற்கு இறங்கி, ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு இறங்கியுள்ளது. இவற்றுள் வேமனரும், குரஜாடவும், வி.ஆர். நார்லா என்ற தெலுங்கு அறிஞராலும் சி.ஆர்.ரெட்டி, டி. ஆஞ்சனேயலு என்ற மற்றொரு தெலுங்கு அறிஞராலும் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றவை. பேராசிரியர் ரெட்டியார் இவற்றை தமிழில் மொழிபெயரத்துள்ளார். 4. யுனெஸ்கோ, அறிவியல் மூலமுதல் நூல் என்பது ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பபெற்றது.

கல்வி-ஆசிரியம் என்ற துறைக்கு உரியது. 5. <u>அணுக்கரு பௌதிகம்</u> என்ற நூல் ஹெய்சன்பெர்க் என்பவரால் எழுதப்பொற்றது; அணுவியலைச் சார்ந்தது. 6. '<u>மானிட உடல்</u>' என்ற நூல் எடித்ஸ்ப்ரௌல் என்ற பெருமாட்டியால் எழுதப்பெற்றது. உடலியலைச் சார்ந்தது. இந்த ஆறு நூல்களும் பேராசிரியர் ரெட்டியார் தமிழ் மொழிக்குத் தந்த மொழிபெயர்ப்புச் செல்வங்களாகும்.

<u>**மொழிபெயர்ப்பதில் சில விதிகள்**</u>: மொழிபெயர்ப்பாளர்கள் ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைப் பேராசிரியர் ரெட்டியாரின் படைப்புகளால் தெளிவாக அறியமுடிகின்றது.

1. மூலத்திற்கு உண்மையாக (Faithful) இருக்கவேண்டும் மொழிபெயர்ப்பு. மூலத்தின் தழுவலாகவோ-கலப்படமாகவோ மாறிவிடக்கூடாது. மிக்க சிரமத்துடன் மூலத்தின் உள்ளுணர்வதைத் தமிழில் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற 'பேரவா' மொழிபெயர்ப்பாளரிடம் இருத்தல் வேண்டும். மூலத்தின் 'அந்தராத்மாவை' எப்படியும் காட்டிவிட வேண்டும் என்பது இவர்தம் நோக்கமாக இருத்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்குப் புறம்பான எந்தக் கருத்தையும் புறக்கணிக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமை.

இலக்கியத்தை மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளர் சில சுதந்திரங்களை அநுபவிக்கலாம. மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும் மொழிபெயர்ப்பாளரின் சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காக அமைந்து விடக்கூடாது. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும்போது மூலத்திலுள்ள உயிர்த்தத்துவம் செத்து, சுவையுள்ளது சுவையற்றுப் போகலாம். அதே சமயத்தில் மூலத்திலுள்ள சாரத்தை இறக்குவதாக நொண்டிச் சாக்கைச் சொல்லிக்கொண்டு மொழிபெயர்ப்பாளர் வரம்பு மீறிச் செல்லவும் கூடாது.

இவ்விடத்தில் ஜஸ்டிஸ் டாக்டர் எஸ். முகராசன் கூறுவது மொழிபெயர்ப்பாளருக்குத் துணையாக அமையலாம். அவர் கூறுவார்:

> **"மூலத்திற்கு உண்மையோடியிருக்க வேண்டும் என்று நினைக்கும்போது மொழிபெயர்ப்பு அலங்கோலமாகவும் காதுக்கு இங்கிதமில்லாமலும் போய்விடும். காதுக்கு இங்கிதமாகவும், மிடுக்கு நடையிலும் இருக்க வேண்டும் என்று நினைத்தால் மொழிபெயர்ப்பு மூலத்திற்குத் துரோகம் செய்ததாக முடிந்துவிடும். பெண்ணைத்**

தேர்நதெடுக்க வேண்டிய மாப்பிள்ளையிடத்திலே 'உனக்கு அழகுள்ள பெண் வேண்டுமா? அல்லது உண்மையுள்ள பெண் வேண்டுமா? அழகிருந்தால் உண்மை இருக்காது. உண்மை இருந்தால் அழகிருக்காது'' என்று சொன்னால் மாப்பிளள்ளை எவ்வளவு திகைப்படைவாரோ, அவ்வளவு திகைப்படைகின்றார் மொழிபெயர்ப்பாளரும். உண்மையில்லாத அழகு, அழகில்லாத உண்மையைப்போல, வேதனை தருகின்ற ஒன்று தூங்காத கவனத்தோடும் தன்னெச்சரிக்கையோடும் தன்னுடைய மொழிபெயர்ப்பைச் சோதித்துக் கொண்டேயிருக்கும் மொழிபெயர்ப்பாளர் அழகோடும் உண்மையோடும் மொழிபெயர்க்கும் வல்லமையயைப் பெறலாம்''[5].

2.அடுத்தபடியாக நாட்டின் தட்பவெப்ப நிலைக்குத் தக்கபடி மொழிபெயர்ப்பைப் பக்குவப்படுத்த வேண்டும். மேனாட்டார் உணர்ச்சிகளையும் கருத்துகளையும், சொல் திருப்பங்களையும் தமிழ்நாட்டின் சிந்தனை மரபுகளுக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டியுள்ளது. வையகத்திலுள்ள நாடுகள் தட்ப வெப்பங்களில் வேறுபட்டிருப்பதால் தன்மை, வெம்மை என்ற சொல்கள் நாட்டிற்கேற்ப வெவ்வேறு பொருள்கள் கொள்கின்றன. ஆண்டின் கூறுகளாகிய பொரும்பொழுதுகளை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று வெப்ப நாட்டில் உள்ள நாம் பிரித்துள்ளோம். குளிர் நாட்டிலுள்ளவர்கள் இதனை இளவேனில், முதுவேனில், இலையுதிர்பொழுது, கூதிர் (Spring, Summer, Autumn, Winter) என்று வகுத்துக்ளனர். இந்த முறைகளை நாம் கூர்ந்து நோக்கினால் நாம் முதுவேனிலைக் கருதுகின்றபடி அவர்கள் கூதிரைக் கருதுகின்றனர் என்பது தெளிவு. காரணம் வெப்ப நாடுகளில் நாம் தன்மையை விரும்புகின்றோம். தட்ப நாடுகளில் உள்ளவர்கள வெம்மையை விரும்புகின்றனர்.

நெஞ்சில் ஈரமுள்ளவன் என்று ஒருவனை நாம் சொன்னால், அவனுக்கு் இரக்கம், ஈகை முதலிய தன்மைகள் உண்டென்பது கருத்து. இதே பொருளை ஆங்கிலத்தில் வெளியிட வேண்டுமாயின் 'வெப்ப நெஞ்சுடையவன்' என்றுதான் சொல்ல வேண்டும். 'He has a warm heart' என்பதை நோக்குக. கதிரவன் ஒளியில் காய்தல் (To be in the sunshine) என்ற சொற்றொடர் இடுக்கண் இல்லாமையையும் வளமையையும் மேனாட்டாருக்கு உணர்த்தும். அதே கருத்தை நாம் 'நிழலிலிருத்தல்'' (To be in the shade) என்ற சொற்களால் வெளியிடுகின்றோம். இதனால் சம்சார வெப்பத்தைத் தாங்கமுடியாதவர்கள் முக்தியடைதலை 'இறைவனது திருவடி நிழல்'

எனக் குறித்தனர் நம்நாட்டார். 'ஈசன் எந்தை இணையடி நிழலே' (5.90 : 1) என்பது அப்பர் வாக்கு.

என்பிதனை வெயில் போலக் காயுமே
அன்பில தனை அறம் (குறள் 77)

என்ற குறள் வெப்ப நாட்டிற்குத் தகுமேயன்றி ஏனைய நாடுகளுக்குப் பொருந்தாது. ஆங்கிலத்தில் 'A Cold Face'' என்றால் அது வெறுப்புக்கு அறிகுறியாகும். முகில் எழுந்து விண்ணிற் கூடுவது நமக்கு உவப்பைத் தரும். ஐரோப்பியர்களுக்கு அது இனியதாகாது. ஆதலின் 'Clouds'' என்ற சொல்லை ஆங்கிலேயர் 'துன்பம்' என்ற பொருளில் வழங்குகின்றனர். இவற்றால் குளிர்ந்த பார்வை, மழைக்கண், தண்ணருள் ஆகியவை தமிழர் பெரிதும் போற்றுவதற்காயின. 'ஆறுதல்' என்பது நாம் மிகுதியும் நாடுபவற்றுள் ஒன்று. 'ஆறுதல்'' என்றால் வெப்பத்தை இழத்தல். 'சோற்றை ஆற்று' என்று நாம் சொல்வதால் அது தெளிவாகும். பசி ஆற்றல், இளைப்பாற்றல் என்பவற்றையும் ஒப்பிடலாம். இக்கூறிய கருத்துகள் மொழிபெயர்ப்பாளருக்கு வழிகாட்டும்.

3.பண்பாட்டுக்கேற்றவாறு எடுத்துச் சொல்லும் முறையிலும் மொழிபெயர்ப்பாளர் எடுத்துச் சொல்லும் முறையிலும் அயல் மொழிச்சொற்களை இன்னொருவிதத்தில் வாசிக்கவும் வேண்டியுள்ளது. மேனாட்டு நூல்களில் காணப்பெறும் புராணக் கடவுள்களைப்பற்றிய குறிப்புகளுக்கேற்ப நம் நாட்டில் உள்ள புராணக் கடவுளர்களைப் பயன்படுத்துவது நலம் பயக்கும். மேனாட்டுக் புராணங்களில் வரும் நெப்டியூனை (Neptune) வருணன் என்றும், க்யூப்பிடை (Cupid) அனங்கவேள் என்றும், 'Mercury'ஐ 'புதன்' என்றும் மொழிபெயர்க்கலாம். சமயப் பண்பாடு சம்பந்தமான சொற்களை மொழிபெயர்ப்பதில் தொல்லைகள் அதிகம் என்பதை அநுபவத்தில் உணரலாம்.

4.வாக்கிய அமைப்புமுறையில், ஆங்கிலமும் தமிழும் வேறுபட்டவை. நிகழ்ச்சிகள் நடந்த காலவரிசையைக் குறிக்கும்போது ஆங்கிலம் இயல்புக்கு விரோதமாகப் பேசும். (எ.கா.) 'This morning I met the man who came from Singapore yesterday' நேற்று அந்த மனிதன் சிங்கப்பூரிலிருந்து வந்த நிகழ்ச்சி நான் இன்று காலை அவனைச் சந்தித்த நிகழ்ச்சியைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. ஆங்கில வாக்கியத்தில் காலத்தால் முற்பட்டதைப் பின்னாலும், பிற்பட்டதை

முன்னாலும் கூறுகின்றது. தமிழ் மொழியோ காலவரிசையில் நிகழ்ச்சிகள் நிகழ்ந்த முறைப்படியே வாக்கியத்திலும் அவற்றை அமைத்து விடும். (எ.கா.) 'நேற்று சிங்கப்பூரிலிருந்து வந்தவரை இன்று நான் சந்தித்தேன்'' இதில் நிகழ்ச்சிகள் கால இயல்பு கெடாது அமைந்திருப்பதைக் காண்க. ஆகவே ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும்போது வாக்கிய அமைப்புமுறையை நேர்மாறாக மாற்ற வேண்டும்.

5.சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் அமையும்போது மொழி மரபுகள் கெடாது பார்த்துக் கொள்ளல் வேண்டும். அடியிற்கண்ட எடுத்துக்காட்டுகள் மொழிபெயர்ப்பாளருக்கு வழிகாட்டும்.

அ) அடைகளுடன் வரும்போது வினைச்சொற்கள் பொருளில் மாறுபடும். இது மொழிபெயர்ப்பாளர் கருத்தில் இருத்தல் வேண்டும்.

(எ.கா.) Call away - கவனத்தை மாற்று, வேறு வழியில் திருப்பு
Call for - கூப்பிட்டனுப்பு, கேள்
Call off - திருப்பி அழை, திரும்பப்பெறு
Call out - அழை, கூப்பிடு
Call up - (ஆள்) - கூப்பிடு, அழை

இன்னும் சில

Put away - அப்பால் வை
Put back - பின் தள்ளு, திரும்பவும் முன் இருந்த இடத்தில் வை
Put by - மீதப்படுத்தி வை
Put down - அடக்கு, முன்னேற விடாதே
Put forward - கூறு, தெரிவி
Put in - இடைமறித்துக் கூறு
Put off - தள்ளிப்போடு
Put out - அணை, கோபப்படு
Put to - உட்படுத்து
Put up with - சகித்துக்கொள்

ஆ) இங்ஙனமே மரபுச் சொற்களும், தொடர்களும் இடத்திற்கேற்பப் பொருளில் மாறுபடுவதைக் கவனத்தில் இருத்தல் வேண்டும். (எ.கா.)

Above all	-	எல்லாவற்றையும் விட மேலாக, முதன்மையாக
Again and again	-	திரும்பத்திரும்ப
All at once	-	உடனே, ஒரே தடவையில்
All together	-	எல்லோரும் (அ) எல்லோரும் சேர்ந்து
All alone	-	தன்னந்தணியாக
All along	-	இவ்வளவு நேரம்

மேலும் சில

Catch an illness	-	நோய்வாய்படு
Catch on fire	-	தீப்பிடி
Catch hold of	-	பற்று, பிடி
Catch sight of	-	காண், பார்
Catch the eyesight of	-	தோன்று, பார்வையில்படு

இங்ஙனம் in, on, of, up, out என்பன போன்ற இடைச்சொற்கள் வினையுடன் இணைந்து செயற்படும்போது அவை வினைக்குப் பொருள் மாற்றத்தைத் தருவதுடன் அதற்கு ஒருவித வேகத்தையும் தருகின்றன. மொழிபெயர்ப்பாளர் இதனைக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

இ) பின்வருவனவும் மொழிபெயர்ப்பாளரின் கவனத்திற்குரியவை:

Turn the back	-	புறமுதுகு காட்டு (அ) வெந்நிடு
Take the seat	-	அமர்க
Breathed his last	-	ஆவிபிரிந்தது
Arms in arms	-	தோளோடு தோள்
Odds and ends	-	மிச்சம் மீதிவிட்டது தொட்டது, துண்டு துணுக்குகள்
Set on foot	-	தொடங்கு
Hard and fast rules	-	கெடுபிடியான விதிகள்

ஈ) இங்குக் கூறப் பெறுபவையும் மொழிபெயர்ப்பாளரின் கவனத்திற்குரியவை. Nose-cut என்பதை அவமானம் அடைதல் என்று மொழிபெயர்த்தலே சரி. 'Cycle' என்பதை முதலில் துவிச்சக்கரவண்டி என்றனர். பின்னர் வடமொழியை நீக்கி 'ஈருருளி'' என்றனர். இதுவும் சரியன்று. இரு சக்கரம் உள்ள வேறு வண்டிகளும் உள்ளன. 'மிதிவண்டி'' என்றலே சரி. 'Book-Post' என்பதை புத்தக அஞ்சல், நூல் அஞ்சல் என மொழிபெயர்த்தனர். திருமண இதழ், கையெழுத்துப்படி முதலியவை அனுப்பப்பெறும்போது இப் பொருள் பொருந்துவதில்லை. ஆகையால் 'திறந்த அஞ்சல்', 'திறப்பு அஞ்சல்' என்று பெயர்த்தலே பொருத்தமானது.

உ) சில சமயம் ஆங்கிலப் பகுதியில் பிரஞ்சு முதலிய நவீன மொழியின் தொடர்கள் வருவதும் உண்டு. அவற்றையும் பொருளறிந்து மொழிபெயர்க்க வேண்டும். அவற்றுள் சில:

Adiew-good-bye	-	போய் வருகிறேன், வணக்கம்
Amends-Penalty	-	தெண்டம், அபராதம்
Bon Voyage	-	நலமாய் போய் வா - a good journey to you
Conp de grace	-	கடைசியில் கொடுக்கும் அடி - A finishing stroke
Lingua franca	-	பொதுமொழி – Common language
Raison d'etre	-	ஒரு பொருளின் இருப்புக் காரணம் – The reason for a things existence
Sansa Ceremonie	-	ஆடம்பரமின்றி, சடங்குகளின்றி – Without ceremony
Vis-a-vis	-	எதிரான், எதிர்முகமாயுள்ள – Facing or opposite

இன்னும் சில சொற்றொடர்கள்:

Ad hoc	-	இந்தக் காரணத்திற்காக for this special object
Ad museam	-	வெறுப்புண்டாக்குமளவு So far as to disgust or Nauseate
Ad valorem	-	மதிப்புப்படி – According to value

Alma mater - வளர்த்த தாய், கல்விகற்ற கல்லூரி
bounteous mother

a postariori - பின்வருவதிலிருந்து
From what follows

a priori - முன்சொன்னதிலிருந்து,
முன்நிகழ்ச்சியினின்று
From what goes before

இங்ஙனம் எண்ணற்ற தொடர்கள் ஆங்கிலப் பகுதியில் காணப்பெறும். இவற்றை மொழிபெயர்ப்பதில் அதிகக் கவனம் வேண்டும்.

பழமொழிகள்: ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்த்துவதற்கு அந்நாட்டு மொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுகின்றன. பழமொழகள் அந்நாட்டு மக்கள்பால் அடிபட்டு வரும் மன இயல்புகளை எடுத்துக்காட்டுவனவாகும். உலக வழக்காகிய இப்பழமொழிகளின் மேன்மையைக் கருதி இவற்றைக் கையாண்டு பொருள் சிறக்கச் செய்தலே கற்றோர்க்கும், மற்றோருக்கும் இயல்பாகின்றது. எல்லா மொழிகளிலும் பழமொழிகள் உரைநடையில் அதிகமாகவும் செய்யுளில் குறைவாகவும் கையாளப்பெற்றுள்ளன. ஆங்கில மொழியிலிருந்து தமிழ்மொழிக்கு உவமைகள், பழமொழிகள் இவற்றை மொழிபெயர்த்துக் கூறும்பொழுது, அந்நாட்டின் பழக்க வழக்கம், நடையுடை-பாவனை, எண்ணம், உணர்ச்சி, சூழ்நிலை, மொழித் தொடரமைப்பு முதலியவற்றை நம்மவற்றுடன் ஒப்பிட்டு மொழிபெயர்த்தல் வேண்டும். (எ.கா.) ‘Face is the Index of the mind’ என்பதை ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ என்று மொழிபெயர்க்கலாம்.

மேற்கூறியவாறு எல்லாப் பழமொழிகளையும் இங்ஙனம் மொழி பெயர்த்தல் இயலாது. (எ.கா.) ‘Money makes many things’ என்ற ஆங்கிலத் தொடரை ‘ஈட்டி எட்டின மட்டிலும் பாயும் பணம் பாதாள மட்டும் செல்லும்’ என்றே மொழிபெயர்க்கலாம். ‘As clear as crystal’ என்பதை ‘உள்ளங்கை நெல்லிக்கனி போல’ என்ற தமிழ் மரபை ஒட்டி மொழிபெயர்த்தல் வேண்டும். தாயுமான அடிகள் பளிங்கையே (crystal) கையாண்டு ‘பந்தமறும் பளிங்கனைய சித்து’ (ஆகாரபுவனம்-18) என்று ஆன்மாவை சித்தாக உருவகப்படுத்திக் காட்டுவர். ஆங்கிலம்-தமிழ் இரண்டிலும் ஒத்த பழமொழிகளை ஈண்டுக் காட்டுதல் பொருத்தமுடைத்தாகும்.

Birds of the same feather flock together	இனம் இனத்தோட சேரும்
Man proposes, God disposes	நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
Misfortunes never come single	பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்
No Rains, No gains	மாரியல்லது காரியமில்லை
Distance lends enhancement to the view	இக்கரைக்கு அக்கரை பச்சை
A bird in the hand is worth two in the bush	கிடைக்கப் போகும் பலாக்காயினும் கிடைக்கும் களாக்காய் மேல்
Make hay while sun shines	காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
Coming events cast their shadows before	ஆனைவரும் முன்னே, மணியோசை வரும் பின்னே (அ) கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே.

1.'<u>வேமனர்</u>' என்ற மொழிபெயர்ப்பு நூல் தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றியது. 'ஆட்ட வெலதி'' (நாட்டியமாடும் ஆடலணங்கு) என்ற யாப்பில் எழுதப்பெற்று நான்கு அடிகளிலுள்ள கவிதைகளில் மூன்றாவது அடிகளில் தாம் உயர்த்த வேண்டிய கருத்தினை வினா வடிவில் தருகின்றார். மொழிபெயர்ப்பில் (தெலுங்கிலிருந்து ஆங்கிலத்திற்கு வரும்) கவிதைகள் அழகும் வேகமும் இழந்தாலும் ஆங்கில ஆசிரியர் (தெலுங்கு மொழியின் மரபை உணர்ந்தவர்) தரும் ஆங்கில மொழிபெயர்பிற்குப்[6] பேராசிரியர் ரெட்டியார் தரும் இதன் தமிழ் வடிவம் வருமாறு:

> **'விளக்கினை ஏற்றாத வரையில் இருட்டினை எங்ஙனம் ஓட்ட முடியும்? ஒரு நாயின் வாலில் தொங்கிக்கொண்டு கோதாவரி ஆற்றினைக் கடக்க முடியுமா? ஏரிகள் வற்றிவிடின் கொக்குகள் அதனைத் துறந்துவிடவா? சிறுவர் தாங்கினதால் தீவட்டி சிறிதாவது குறைந்த ஒளியுடன் பிரகாசிக்குமா? ஓநாயின் சாவுக்கு ஆடு ஏன் பரிந்து புலம்ப வேண்டும்? நாய்வாலை நிமிர்த்த முடியுமா? பொம்மைக்கு நீதி புகட்ட**

> **முடியுமா? நறுமணப் பொருள்களின் சுமையைத் தாங்கி வருவதனால் கழுதை சற்று உயர்ந்ததாகுமா? மேலிருந்து கீழ்நோக்கி சுவர் எழுப்ப முடியுமா? எவ்வளவு உயரத்திற்கு வேண்டுமானாலும் ஒரு பஞ்சைத் தூக்கி எறிந்தால் அது அங்கேயே தங்கி விடுமா? தங்கம் வெண்கலத்தைப்போல் ஒலிக்க முடியுமா? ஒரு பெரிய மலையும் உருக்காட்டும் ஆடியில் சிறிதாகத் தோன்றவில்லையா? கோதாவரி நதியில் மூழ்கி நாய் சிங்கமாக முடியுமா? சேற்றில் புரண்டு களிக்கும் பன்றி பன்னீரின் பெருமையை உணரமுடியுமா? எருமைக்கடா எவ்வளவு பெரிதாக இருப்பினும் யானைக்குச் சமமாக முடியுமா? உணவைப் பரிமாறும் கரண்டி உணவின் சுவையை எங்ஙனம் அறிய முடியும்? ஆலமரம் பெரிதாக இருந்தபோதிலும் அதன் விதை மிகச்சிறியதாக இருக்க வில்லையா? தலைகள் வழுவழுப்பாக சிரைக்கப் பெற்றிருந்தாலும் சிந்தனைகள் தூய்மையானவையாக முடியுமா?"**

இங்ஙனம் வேமனரின் பாடல்களில் மூன்றாவது அடியில் அமையும் இவையும், இவை போன்ற பலவும், தெலுங்கில் பெருவழக்காகத் திகழும் பழமொழிகளாகும். ஆனால் தெலுங்கிலிலுந்து இருமொழி பெயர்ப்பில் கவிதைகள் வெளிவரும்போது மூலத்தின் விருவிருப்பும் வேகமும் குறையத்தானே செய்யும்? மாம்பழத்தை உண்ணும்போது பெறும் சுகாநுபவம் அதன் சாற்றினைப் பருகும்போது பெறமுடியாதல்லவா? வேமனரைப்போலவே அருளாசிரியர்கள் பலரும் தமது கவிதை நூல்களில் பழமொழிகளைப் பெய்து தம் பாடல்களை ஆக்கியுள்ளனர். மணிவாசகப்பெருமான் தமது திருவாசகத்திலே நாற்பதிற்கும் மேற்பட்ட பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார்.[8] நாலுகவிப்பெருமாள் எனப் போற்றப்பெறும் திருமங்கையாழ்வார் 'பழமொழியால் பணித்து உரைத்தயிட்டு'' என்றே ஒரு திருமொழியை அருளியுள்ளார்.[9]

<u>கவிதைகள்</u>: ஒரு மொழியிலுள்ள கவிதைகளைப் பிறிதொரு மொழியில் பெயரத்தல் எளிதான செயல் அன்று. வேமனருடைய கவிதைகளை இ.கோவர் என்பார் தெலுங்கிலிருந்து ஆங்கிலக் கவிதைகளாகவும், சி.பி.பிரெளன் உரைநடையிலும் மொழிபெயரத்துள்ளனர். அங்ஙனமே டி.ஆஞ்சனேயலு என்பார் சி.ஆர். ரெட்டியின் கவிதைகளில் சிலவற்றைத் தெலுங்கிலிருந்து ஆங்கிலத்தில் கவிதை வடிவிலும் சிலவற்றை உரைநடையிலும் மொழிபெயர்த்துள்ளார். அங்ஙனமே, குரஜாடனின் கவிதைகளை வி.ஆர். நார்வா ஆங்கிலத்தில் உரைநடையில் மொழிபெயர்த்துள்ளார். இக்கவிதைகளைப் பேராசிரியர் ரெட்டியார் தமிழ்க்கவிதை வடிவில் தருகின்றார். சிலகவிதைகள் ஈண்டு தரப்பெறுகின்றன.

எக்கவிதையாயினும் மொழிபெயர்ப்பில் அது குறையுடையதாகின்றது. மொழிபெயர்ப்பில் மிக்க நல்லதொன்றிலும் சொல் இசையையும் அதன் பிற நுண்ணிய எழில்களையும் எடுத்துக்காட்ட இயலாது. ‘வேமனர்’ என்ற நூலின் இறுதியில் காணப்பெறும் சில கவிதைகளின் தமிழாக்கம்:

உருவ வணக்கம் பற்றியது:

‘மலையினிற் கல்லைப் பெயர்த்தெடுக் கின்றவர்
மற்றதைக் கால்களாற் கைகளால் தட்டியாய்ந்
திலகுநல் உளியினால் அழகுற வடித்தபின்
இறைவனே! இறைவனே! எனத்துதித் தாடுவார்.’

சாதி பற்றியது:

‘பறையனின் குருதியும் சதையும்நம் உடலெனப்
பாங்குடன் பொலிவதைக் கண்டும்நீர் இகழ்வதேன்?
நிறைவுறும் உலகத்தில் எங்கணும் மேவிடும்
நின்மலப் பொருள்எந்தச் சாதிநீர் கூறுவீர்’

மரணம் பற்றியது:

உலக வாழ்க்கை முடிவுறும் போதினில்
உற்ற சுற்றம் உதவிட வல்லதோ?
நிலைநி றுத்திட யாருளர்? சாவினில்
நீணிலத்தில் உதவோ ரில்லையே

நல்ல மனைவியர் பற்றியது:

ஈட்டுகின்ற பெருஞ்செல்வம் செல்வம் அல்ல;
இணையற்ற நன்மகவே செல்வம்; தோன்றி
வாட்டுகின்ற முதுமைவரை நேர்மை யாக
வாழ்வதுவே செல்வத்துள் சிறந்த செல்வம்
கரும்புற்ற நறுஞ்சாறும், சருக்கரையும் தேனும்
கமழ்கின்ற பலாக்கனியிற் பொலிகின்ற சுவையும்
விரும்புறுகொய் யாக்கனியும் நமைவிரும்பும் நண்பர்
விருப்பினொடு பகர்மொழிகட் கிணையாகும் கொல்லோ?

தீய மனைவியர் பற்றியவை:

கடலினிற் செல்லும் கப்பலின் வழிபோல்
காற்றிற்செல் பறவையின் வழிபோல்
புடவையில் மடவார் நடையினை யாரும்
புந்தியிற் காணுவ தரிதே

இருபிறப்பாளர் பற்றியவை:

சண்டாள இதயத்தை நன்றாகப் பெற்றோர்
தாழ்வுற்ற பாபத்தை மேல்மேல் வளர்ப்போர்
கொண்டாடும் நல்லெண்ணம் இல்லா திருப்போர்
குற்றமில் இருபிறப் புற்றவர் ஆவரோ

காதலுறு மனையாளை வீட்டை நீத்துக்
கரும்பொன்னை இடையினிலே சுற்றிக் கொண்டு
வேதனைசெய் கைப்பான மதுவை உண்டு
மிருகம்போல் வாழ்வதனால் இன்பம் உண்டோ?
(இது பைராகிகளை இகழ்ந்தது)

அறிஞரும் அல்லாதாரும் பற்றியவை:

தண்ணீரில் மிதக்கின்ற நாவாய்கள் நிலத்தில்
சாண்கூட ஓடாது; கூர்மதிபெற் றவனும்
நண்ணாத இடத்தினிலே அகப்பட்டுக் கொண்டால்
நலிவுறுவன், எளியவர்கள் வென்றிடுவர் அம்மா!

வற்றாத புனற்கங்கை அமைதியுடன் மெல்ல
மாண்போங்க நெளிந்தோடும் கார்காலத் துயிர்கொள்
சிற்றாறு கல்லென்று குதித்தோடும், தாழ்ந்தோர்
திறஞ்சான்ற சான்றோர்போல் அடங்கிநடப் பாரோ?

இந்தப் பாடல்கள் யாவும் தெலுங்கிலிருந்து சார்ஸ் இ. கோவர் என்பாரால் மொழிபெயர்க்கப் பெற்றவை. தெலுங்கு மொழியில் இவற்றைப் படிக்கும்போது நார்லா அவர்கள் கூறுவதுபோல், ‘பிறப்பிலேயே அவர் கவிஞராதலால் தம்முடைய இதயத்தில் உண்மையாகவும் ஆழமாகவும் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளைக் கவிதைச் சொற்களாகத் தராமல் இருக்க முடியாது. இதன் காரணமாக, அவருடைய கவிதை சிலவேளையில் மிகப்பெரிய வெள்ளமாகவும் சிலவேளையில் வெடித்துக் கிளம்பும் எரிமலையாகவும் சில வேளையில் கடல்களைத் தாக்கும் சூறாவளிக் காற்றாகவும் உள்ளது. இந்த அளவுகோலின் அடுத்த கோடியில் அது விரைவான மாற்றங்களை ஏற்றுக் கோடைக்குப் பிறகு தோன்றும் முதல் மாரியாகவும், குளிர்ந்து வீசும் தென்றலாகவும், அதிகாலையில் கேட்கப்பெறும் பறவைகளின் பாட்டாகவும் அமைந்துவிடுகின்றது[10] என்று காணமுடிகிறது.

வேமனருக்கே உரிய கிண்டலும் எள்ளலும், வஞ்சப் புகழ்ச்சியும் நகைச்சுவையும், மொழிபெயர்ப்பில் காணமுடியவில்லை. வெண்சூட்டில் எழுதப்பெற்ற வெப்பத்தையும் காணமுடிவதில்லை. மேலும், ‘வேமனர்’ இலக்கியத்தை விட வாழ்க்கையைப்பற்றியே கவலை கொண்டவராக இருந்தார். ஒரு கலைஞரைப் போலன்றி ஒரு வீரனைப் போலவே சொற்களைக் கையாளுகின்றார். வாதத்தில் விருப்புற்றிருக்கும் நிலையில் அவர் அறம் உரைக்கும் பண்பாளராகின்றார். வேமனர் இவ்வுலகிற்கு ஒரு நீலமணியை மட்டும் அல்ல, நூற்றுக்கணக்கான விலை மதிப்பிடமுடியாத நீலமணிகளை வழங்கி விட்டார்[11] என்று கூறுவார் நார்லா.

சார்லஸ் பிலிப் பிரெளன் என்பார் (இவர் ஆந்திரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பல்லாண்டுகள் பணியாற்றி, தெலுங்கு மொழியைப்பற்றி ஆய்வுகள் நடத்தியவர்) வேமனரின் பல கவிதைகளை ஆங்கில உரைநடையில் தந்துள்ளார்.

<u>மனிதனும் இறைவனும்</u>:

**‘வண்ணமுறும் அண்டமாய் ஆனவனுந் தன்னுள்
மாசற்ற பெருஞ்சோதி யிருப்பதிறந் தவனும்
உண்ணிறைந்த பரம்பொருளைப் புற்பொருளோ டிணைக்க
உயர்ந்தவனும் புவியகத்து நிறைந்தவனா யினனால்
மும்மூர்த்தி தமைநாணம் உறச்செய்த குற்றம்
முரணற்ற வேமன்னன் தலைசுமக்கும் என்று
செம்மையுடன் பகர்ந்திடுக; ஒரேகடவுள் மட்டும்
செகத்தினிலே முறையான பெருமையினைப் பெறுக’**

**‘உருகுந்தோயை அறிந்தவனே
ஒப்பில் இறையை உணர்ந்தவனாம்;
மருவும் மண்ணை அறிந்தவனே
மாண்பார் விண்ணை உணர்ந்தவனாம்
பொருவில் மண்ணைத் தனிவிண்ணைப்
புத்தி ஐயம் எய்தாமல்
துருவித் துருவி அறிந்தவனே
தூய தன்னை உணர்ந்தவனாம்’**

**‘சிறந்ததுகொல் லாமையெனப் பகர்ந்திடுமந் தணர்கள்
தீமகத்தில் பலியிட்டுத் தாமுகந்துண் கின்றார்
இறந்தபினர் விலங்குகளைக் கரந்துணுஞ்சண் டாளர்
இவர்களினும் மிகப்பெரிய குலமுடையோர் அன்றோ?’**

**'தொலைவினில் உள்ளதத் தெய்வமென் றோதிடில்
தூரத்து மேவுவான்; அருகிலுள் ளானெனில்
மலையிலெல்லாம் ஓட்டியிவ் அடலினைக் கோவிலாய்
மகிழ்வுடன் எண்ணியிங் குவகையோ டொன்றுவான்
தலைமைசால் அன்னவன் ஊர்தியில் வாழ்வினைச்
சஞ்சலம் இல்லாமல் அன்பிற் பிணித்திடில்
உலகினில் அப்பொருளைச் சோதிபோல அழிவிலா(து)
ஊழிகள் தேயினும் மாறாது வாழுவார்'**

நம் தமிழ்மொழியிலுள்ள சங்க இலக்கியங்கள், கம்பராமாணம், திருவாய்மொழி, திருவாசகம் (ஜி.யு. போப், திருவாசகமணி பாலசுப்பிரமணியம், டாக்டர் சீநிவாசன் செய்துள்ளவை), திருக்குறள், நாலடியார், குமரகுருபரர், நீதிநெறி விளக்கம் இவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன. இரு மொழிகளையும் அறிந்த நாம் தமிழ்நடையின் சிறப்பு, தமிழ் யாப்பின் அருமை முதலியவற்றை ஆங்கில மொழிபெயரப்பில் அநுபவிக்க முடிவதில்லை. தமிழறியாது ஆங்கிலம் மட்டும் அறிந்தவர்கள் இவற்றை ஓரளவு அநுபவித்து மகிழ முடியும். தமிழ் இலக்கியத்திலுள்ள கருத்துகள் ஆங்கிலத்தில் வந்துள்ளன என்ற மனநிறைவைக் கொள்ளலாமேயன்றி தமிழின் நீர்மையையும் செம்மையையும் அநுபவித்து மகிழ முடியாது. இதுபோலவே வேமனரின் கவிதையிலுள்ள கருத்துகள் தமிழுக்கு வந்துள்ளன என்று மகிழ்வதுடன் நம் மனம் நிறைவு பெறுகின்றது. எல்லாக் காலங்களிலும் மாம்பழத்தை உண்டு மகிழமுடியாதவர்கள் இக்காலத்தில் எங்கும் கிடைக்கும் மாம்பழச் சாற்றைப் பருகி மகிழ முடியவில்லையா? அதுபோலவே வேமனரைத் தமிழில் அநுபவிக்கின்றோம். ஆனால், வேமனரின் வரலாற்றுடன் இவற்றை அநுபவிக்குகொது நம் மகிழ்ச்சி பன்மடங்கு பெருகுகின்றது. இதனால் பேராசிரியர் ரெட்டியாரின் தமிழ்த் தொண்டையும் அறிந்து பாராட்ட முடிகின்றது.

2.<u>'டாக்டர் சி.ஆர். ரெட்டி'</u> என்ற மொழிபெயர்ப்பு நூல் டாக்டர் சி.ஆர். ரெட்டியைப்பற்றி டி.ஆஞ்சனேயலு எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. சென்னை கிறித்தவக் கல்லூரியில் மாணாக்கனாக இருந்த காலத்திலேயே (வயது பத்தொன்பது) 'முசலம்ம மரணமு'' (1899) என்ற கவிதை நூலை இயற்றினார் சி.ஆர். ரெட்டி. இது நூற்றுக்கு மேற்பட்ட செய்யுட்களைக்கொண்டு திகழும் கதைவடிவிலுள்ள ஒரு நீண்ட கவிதையாகும். அனந்தபூர் நகருக்கு அருகிலுள்ள புக்கராயசமுத்திரம் என்ற சிற்றூர் ஏரியின் கரைஉடைப்பினால் உண்டாகும் வெள்ளத்தால் ஏற்படும் பெரிய அளவு

அழிவினைத் தடுப்பதற்குப் ‘போனேரம்மா’ என்ற தலைமைத் தெய்வத்துக்கு ‘முசலம்மா’ என்ற இளம் பெண்மணியை நரபலியாகத் தந்தால் மட்டிலுமே இந்த தேவதையின் சினத்தைத் தணிக்க முடியும் என்பது அறியப்பெறுகின்றது. ஊரின் நன்மை கருதித் தன்னையே இந்தப் பெண்மணி அர்ப்பணிக்கின்றாள்.

சிற்றூரின் குளம் மாபெரும் ஏரிபோலவும், மூர்க்கமான அலைகள் நிரம்பிய கடலாகவும் வருணிக்கப் பெறுகின்றது. ஓசை நயம் பெற்ற தெலுங்குக் கவிதையின் சுருக்கம் ஆங்கில உரைநடையில் காணப்பெறும் வடிவத்தைப் பேராசிரியர் ரெட்டியார் தரும் தமிழ்க் கவிதை வடிவம் இது:

‘வீறார்ந்த பேரேரி மிக்குயர்ந்து பொங்கி
வெருவுறத்தம் முடன்மோதிப் பொருதரங்கத் திரளால்
மாறாது கரைகளிலே செயாமல் என்றும்
மகிழ்வுடனே நடம்செய்து திகழ்தரங்கத் திரளால்
பேராது புனல்நடுவண் மேவுமுயர் பாறைப்
பெருமிதத்தைச் சாருதற்கு முயல்தரங் கத்திரளால்
பாரார்ந்த எண்திசையை அணுவணுவாயத் தகர்க்கப்
படர்வதற்குத் தயாராக இருப்பதுபோல் தோன்றும்’

தமிழ் வடிவம் நன்றாகத்தான் உள்ளது. ஆனால் தெலுங்கு மொழியிலுள்ள கம்பீரமான எடுப்பு, அம்மொழிக்கே உள்ள ஓசை நயம் ஆகியவற்றை தமிழில் தரமுடிவதில்லை.

முசலம்மா வெளியேறுவதற்காகப் படைக்கப்பெற்ற காட்சியில் பண்டைய படிமஉத்தியகைக் (Imagery) கையாண்டிருந்தபோதிலும் அக்காட்சி இங்குப் பொருத்தமாகவும் உள்ளத்தை உருக்கும் முறையிலும் அமைந்துள்ளது. இதன் கவிதை வடிவத்தின் சாரத்தை ஆங்கிலத்தில் விளக்குவார் ஆஞ்சனேயலு[12].

பேராசிரியர் தரும் தமிழ்க் கவிதை வடிவம் இது:

‘மகிழ்வுறப் புனைந்த மஞ்சள் சேலை
கதிர்மறை அந்திக் கங்குலின் இடையே
மங்கிப் பொலிந்தது; மகிழ்வு நிரம்பிப்
பொங்கும் அவள்முகம் செஞ்சுட ரவன்போல்
ஒளியுடன் திகழ்ந்தது; நலிவுறு கூட்டம்
பறவைக் குலமெனத் துயருடன் அழதது;
அனைவரின் மதிப்பில் உயர்வுறும் அவளோ
ஏரியை நோக்கிச் சீருறச் சென்றனள்’

அவள் குளத்தை நோக்கிச் சென்ற காட்சியைப்பற்றித் தெலுங்கில் கவிஞர் கூறுவதன் ஆங்கில வடிவத்தைத் தமிழ்க் கவிதை வடிவில் நன்கு விளக்குவார் பேராசிரியர்.[13]

சேய்மையில் பாயும் செழுநதி கண்டு
நடனமிட்டு நடக்கும் குதிரைச்
சேவகன் ஈர்ப்பச் செல் பெண்குதிரை போல்
நளினமும் அழகும் நனிநிறை நடையுடன்
காந்தமும் அழகும் ததும்ப
நங்கை மெல்ல நடந்து சென்றனளே[14]

தெலுங்குக் கவிதையில் இது சாதாரணமாகக் காணப்பெறும் உவமை அன்று. படிப்பவர்களுள் சிலருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய உவமையும் அன்று. ஆயினும் ஹோமரின் <u>இலியாத்</u> திற்குத் தாம் கடமைப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு நன்றி தெரிவித்துள்ளார் டாக்டர் சி.ஆர். ரெட்டி.

நீரினுள் கதைத் தலைவியின் உண்மையான மறைவினை விரித்துரைக்கும் ஆசிரியர் தம்முடைய பண்டைய இலக்கியப் புலமை, கவிதைக் கற்பனை இவற்றின் மூலவளத்தின்றும் அதிகமாகவே எடுத்துக்கொள்கின்றார். தெலுங்குக் கவிதையின் ஆங்கில வடிவத்தைப் பேராசிரியர் ரெட்டியார் தமிழ்க் கவிதை வடிவில் பின்வருமாறு தருகின்றார்.

காலையினங் கதிரொளியால் விழுங்கப் பெற்றுக்
கலைகுறைந்து பொலிவிழந்த திங்க ளைப்போல்
சீலமுறு முறுவலுடன் கனலின் நாக்குத்
திரளின்கண் புகுகின்ற சீதை யைப்போல
கோலமுற மலர்ந்திட்ட பங்க யத்துக்
கூட்டத்தே நுழைகின்ற அன்னத் தைபோல்
காலமெனும் பொற்கொல்லன் தீயில் இட்ட
கனகம்போல் தண்புனலில் இறங்கி னாளால்[15]

இந்த மொழிபெயர்ப்புகளில் கருத்து மட்டிலுமே அவதாரம் எடுக்கின்றது. தெலுங்குக் கவிதையின் சந்த மிடுக்கு, ஓசைநயம், உவமை உருவக நுட்பங்கள், தமிழ்க் கவிதையில் இடம் பெறவில்லை. சாதாரணமாக ஒரு மொழியிலுள்ள கவிதை பிறிதொரு மொழியில் பெயர்க்கப்பெறும்பொழுது முன்னதன் சிறப்பியல்கள் யாவும் பின்னதில் இறங்கா; இறங்கவும் முடியாது என்பது உளங் கொள்ளத்தக்கது என்பார் பேராசிரியர் ரெட்டியார்[16].

3.குரஜாட: கவிஞர் குரஜாட வேங்கட அப்பாராவ் (1862-1915) என்ற தெலுங்குக் கவிஞரின் வரலாற்றைக் குரஜாட என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதியவர் வீ.ஆர். நார்லா என்பார். குரஜாடாவின் படைப்புகள் மிக்குறைவாக இருப்பினும் அவர் கவிதை, சிறுகதை என்ற இலக்கிய வகைகளில் புதிய வழிகளை ஏற்படுத்தியவர் நார்லா. தம்முடைய நூலின் ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் ஓர் ஆங்கிலக் கவிதையின் பகுதியால் தொடங்குகிறார். பேராசிரியர் ரெட்டியார் இக் கவிதைகளுக்குத் தமிழ்க்கவிதை வடிவம் தர முயன்றுள்ளார். அவற்றுள் சில:

இயல் 1: ‘Death is Life’s gate’ - P.J. Bailey.

இதன் தமிழ்வடிவம்: பற்றும் மரணமே பாங்காய வாழ்விற்கு
உற்ற நுழைவாயில் உணர். (பி.ஜே. பெய்லி)

இயல் 2: ‘Hail to face, blithe spirit’ - Shelley.

இதன் தமிழ்வடிவம்: ‘பூத்த மனமகிழ்ச்சி பொங்கும்
மனோநிலையே வாழ்த்துரைப்பன் நின்றனுக்கு மன்’’ (ஷெல்லி)
(மண் - அசை; நிரம்ப என்னும பொரள் கொள்ளலாம்)

இயல் 3: ‘Even the incandescent flame may burn brightly, if true, Soul is naturally combustible – George Santayana

இதன் தமிழ்வடிவம்: பொலிவார் ஆன்மா கனலாகப்
பொங்கி ஒளிரும் நிலைபெற்றால்
நலிவார் உலையின் அனற்பிழம்பும்
நன்றாய் எரியும் குன்றாமோ
(ஜார்ஜ் சண்டாயான)

இயல் 5: Behold I do not give lecgtures or a little charity when I give, I give myself – Walt Whitman

இதன் தமிழ்வடிவம்: நான்
வண்ணமுது சொற்பொழிவு செய்வதில்லை
வளமான நல்லறங்கள் செய்வதில்லை
எண்ணமுறு மாந்தர்தமக் கன்புடனே தருங்கால்

என்னையே கரவின்றி வழங்கு கின்றேன்.
(வாலட் விட்மன்)

இயல் 7: I stood in Venice, on the Bridge of sighs
A place and a prison on each side – Byron

இதன் தமிழ்வடிவம்: வளமார் வெனிசின் பாலத்தில்
மருவாயிருந்து நோக்கு கின்றேன்,
உளமார் அரசு மனை ஒருபால்
உணங்கும் சிறைச்சாலைகள் ஒருபால்
(பைரன்)
(உணங்கும் - வாடும்)

இயல் 9: It is as large as life. And twice as natural
- Lewis Carroll

இதன் தமிழ்வடிவம்: இஃது
உரிய வாழ்க்கைபோல் விரிவு பெற்றதாய்
இருமடங் கியற்கையாய் மருவி யுள்ளதே
(லிவிஸ் காரோல்)

இயல் 11: I have often thought that a store-teller is born,
as well as a poet. - Sri Richard Steel.

இதன் தமிழ்வடிவம்: சிறப்புற கவிதை இயற்றும் கவிஞர்போல்
திறற்கதை பகரும் சிறப்புறும் அறிஞரும்
பிறக்கின் றனர்என நினைப்பன் என்றும் -
(சர் ரிச்சர்டு ஸடீல்)

இங்கு ஆங்கிலக் கவிதைகளில் பல்வேறு சந்தங்கள் காணப்பெறுவன போல், தமிழ்ச் செய்யுட்களில் சந்தநயமும் யாப்புமுறையும் காணப்பெறுகின்றன. சில இடங்களில் மூலபாடலின் அசலை விட மொழிபெயர்ப்பின் நகல் சிறந்தோங்கியிருப்பதையும் காண முடிகின்றது. இங்கு, பேராசிரியரின் மொழிப்புலமையும் மொழிபெயர்ப்புத் திறமும் ஒரே காலத்தில் சிறப்புடன் ஒளிர்வதையும் காண்கிறோம்.

<u>இயல் தலைப்புகள்:</u> குரஜாடாவில் இயல்களின் தலைப்புகள் கவனத்தைக் கவரும் முறையில் சொற்செறிவும் பொருட்செறிவும் திகழும் பாங்கில் நார்லாவால் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் பேராசிரியர் அதே பாங்கில் தர முயன்றுள்ளார். சில எடுத்துக்காட்டுகள்.

<u>இயல் : 1</u> Life's Gate - வாழ்வின் நுழைவாயில்

<u>இயல் : 2</u>	Blithe spirit	-	மகிழ்ச்சி தரும் மனநிலை
<u>இயல் : 3</u>	Incandescent	-	அனலுடைய அனற்பிழம்பு
<u>இயல் : 6</u>	New Comer	-	புதியவர்
<u>இயல் : 7</u>	In the Bridge of sighs	-	பெருமூச்சின் சேது
<u>இயல் : 8</u>	All the world, His parish	-	உலகம் யாவும் அவரது ஊரே
<u>இயல் : 9</u>	Large as life	-	வாழ்வின் மகத்துவம்
<u>இயல் : 10</u>	High failures	-	பெருந்தோல்விகள்
<u>இயல் : 11</u>	'A story-teller is born'	-	கருவிலே கதை கூறும் பாங்கு
<u>இயல் : 12</u>	'Fair pearls, tobether strung	-	ஆணி முத்துகளின் அழகிய சரம்
<u>இயல் : 13</u>	'All slang is Poetry"	-	கொச்சை மொழியும் கொஞ்சும் கவிதையும்
<u>இயல் : 14</u>	'Realms of Gold	-	பொன்னான பகுதிகள்.
<u>இயல் : 15</u>	'A shaft of light-		மின்னல் ஒளி

ஆங்கிலப் புலமை மிக்க நார்லா 'வேமனர்' என்ற தமது மற்றொரு நூலிலும் இயல் தலைப்புகளை அமைப்பதில் எழில் கொழிக்கும் இதே முறையைக் கையாளுகின்றார். சில எடுத்துக் காட்டுகள்:

<u>இயல் : 2</u>	In the lap of legends	-	கட்டுக் கதைகளின் மடியில்
<u>இயல் : 5</u>	Double night of darkness	-	இருட்படலத்தின் இரட்டை இரவு
<u>இயல் : 8</u>	True and rare genius	-	உண்மையில் அரிய மேதை

இவற்றை ஆழ்ந்து நோக்கும்போது, மூல ஆசிரியர் நார்லா ஆங்கிலத்தில இயல்களை அமைக்கும் அரிய போக்கினையே, பேராசிரியர் ரெட்டியாரும் எழில் கொழிக்கும் பாங்கில் இயற்றமிழில் அமைப்பதிலும் காணமுடிகின்றது.

<u>சில கவிதை மொழிபெயர்ப்புகள்</u>: நார்லா, 'வேமனர்' என்ற தமது நூலில் வேமனரின் தெலுங்குக் கவிதைகளை ஆங்கிலத்தில் கவிதை வடிவில் அழகான உரைநடையில் காட்டுவார். ஆயினும் கோவர், பிரௌன் இவர்களின் கவிதை வடிவான மொழிபெயர்ப்பினைத் தந்துள்ளார். 'குரஜாட'' என்ற நூலிலும் அங்ஙனமே தெலுங்குக் கவிதையின் சாரத்தை அழகான ஆங்கில உரைநடையில் (சில சமயம் கவிதை பாணியில்) தருகின்றார். இத்தகைய இடங்களில் பேராசிரியர் இயன்றவரையில் தெலுங்குக் கவிதைகளைத் தமிழ்க்கவிதை வடிவில் தர முன்றுள்ளார். சில காட்டுகள்:

ஆனந்த கணபதி என்ற அரசன் இறந்ததும் நீதிமன்றத்தில் 'பெருவழக்கு' ஒன்று தொடங்கியது. இதனைச் சுற்றி பல சில வழக்குகளும் தொடர்ந்தன. இதற்காக குரஜாட ஏராளமான பதிவேடுகளை (Records)ப் படிக்க நேர்ந்தது. பல்வேறு மக்களைச் சந்தித்துப் பேச வேண்டிய நிலையும் உருவாயிற்று. இதனை நார்லா ஆங்கிலத்தில் காட்டுவதைப்[17] பேராசிரியர் ரெட்டியார், அவர்

கற்றதோ மிகுதி, கண்டதோ அதிகம்
மற்றவர் பயின்றது வாழ்க்கையில் இருந்ததே;
உற்றுப் படித்தது மக்கள் இனத்தையே

என்று தமிழ்க் கவிதை வடிவத்தில் அமைப்பார். இலக்குமி நாராயண சாஸ்திரி என்பாரின் 'சிரீராமவிஜயம்' என்று நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் இலங்கையில் சில குன்றுகள் அநுமனின் திருவிளையாடல்களால் ஏற்பட்டதாகக் குறிப்பிடுவதைக் குரஜாட கருத்தில் கொள்வார்.

சில ஆண்டுகள் கழிந்த பின்னர்ப்பாடும் கவிஞரிடம் முதிரா நிலையிலுள்ள கருத்தை நார்லா தரும் ஆங்கில வடிவத்தைப்[18] பேராசிரியர் ரெட்டியார்.

சென்ற வாழ்வை நின்று நோக்கின்
நன்மை சிறிது, தீமை பெரிதே;

ஆதலின் கடந்ததில் பார்வை செலுத்தேல்;
பீடை தருசோம் பேறிரு காதே;
முற்புறம் நோக்கிக் தப்படி எடுத்துவை;
ஒப்பறு வாழ்வில் பிற்பட விழுந்தால்
என்றும் பின்னே தங்குவை ஐயா.

என்று கவிதை வடிவத்தில் தருவார்.

கவிதை யுலகில் குரஜாட செய்த பெரும்பணி கவிதையைக் கல்விச் செருக்குடைய ஒரு சிறு குழுவினின்றும் பொதுமக்களிடம் எடுத்துச்சென்றதாகும். தற்செயலாகக் கேட்ட நாட்டுப்பாடல் ஒன்று அவரிடன் அகத்தெழுச்சியை உண்டாக்கியது. அதன் அழகான இசையினால் கவரப்பெற்று குரஜாட உறுதியாகச் சொன்னதை நார்லா தரும் ஆங்கில வடிவத்திற்கு[19] பேராசிரியர் தரும் தமிழ் வடிவம் இது.

‘பழமையினில் புதுமையினில் ஆய்ந்துணர்ந்து
நல்ல வற்றைப் பகிர்ந்து சேர்ந்து
விழுமியநற் பளிங்குச்சொல் கொண்டுழுது
மாலை ஒன்று வியப்பச் சேர்ப்பேன்’

இந்த உறுமொழியினால் கவிதையின் ஒரு புதிய யாப்பு முறையும் கவிதையின் ஒரு புதிய இயக்கமும் தோன்றிவிட்டதாகக் கருதலாம். இந்தப் புதிய யாப்பு முறைக்குக் குரஜாட ‘முத்யால சராலு’’ (முத்துச் சரம்) என்று திருநாமம் சூட்டுகின்றார். தம்முடைய துணிவான புதிய அமைப்பு பழைய மரபுக் காவல்களின் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க நேரிடும் என்பதை முன்னதாகவே அறிகின்றார் குரஜாட. ஆகவே, இவர் அதன் முகத்தில் ஒரு தடையை வீசுகின்றார். தெலுங்குக் கவிதை வடிவில் உள்ள இந்த் தடையை நார்லா, ஆங்கிலக் கவிதை வடிவில் காட்டுவார்.[20] இதற்குப் பேராசிரியர் ரெட்டியார்,

ஓங்குறு நீவிர் யான்புனை பாவை
உவப்பின்றி இகழலாம, அதற்கா
ஏங்கிடேன் சிறிதும், கட்டையி னாலே
இற்றுரு வங்களை வணங்கும்
பாங்கினைப் பெற்ற செவ்விய நயனம்
பாரினில் வாழும் மங்கையரின்
ஓங்கறும் எழிலை மகஅரி தாக
உணர்ந்ததைக் காண்கின்ற தன்றோ?
(உணர்ந்ததை - உணர்ந்து அதை)

என்று தமிழ்ச் செய்யுள் வடிவம் தருகின்றார்.

உண்மையான அகத்தெழுச்சியூட்டப்பெற்ற கவிஞர் குரஜாட எதில் காலத்தை ஆழ்ந்து உற்று நோக்கித் தெலுங்குக் கவிதை வடிவில் கூறுவதை நார்லா, ஆங்கில வடிவத்தில் தருவார்.[21] பேராசிரியர் தரும் தமிழ் வடிவம் இது.

இனிவரும் ஆண்டில் முனிவிரர் மறைமொழி
உலகினில் யாண்டும் நிலவுறல் காண்பீர்
ஒருவகுப் பினரைப் பிறர்தம் வகுப்பினின்
நருவுருப் புறப்பிரித் திடுதளை ஒழியும்;
போலி மனிதர்கள் ஞாலம் தாக்கிய
வேலிகட் கிங்கினி வேலையே இல்லை

நாடுகள் யாவும் ஓர் நல்இல் லத்தில்
கூடி யன்பில் குலாவி மகிழும்
வரையிலா அன்பு மானிலத் தெவர்க்கும்
குறைவிலா மகிழ்வைக் கொணர்ந்து வழங்கும்
இனி,
சாதியும் இல்லை சமயப் பிரிவினை
அறிவுச் சுடர்இனி தடையற் றொளிரும்
இ்..து
பாரகத் தெங்கும் சீரிய தெய்விகப்
பேரின் பத்தைப் பெட்பொடு கொணரும்

குரஜாட எதிர்நோக்கும் வருங்காலம் இப்படி இருத்தல் வேண்டும்.

நலம்நிரம்பி ஓங்குசகோ தரத்து வத்தில்
நம்புநிறை கரம்இணைந்து நடைபோட வேண்டும்
அழகற்ற சமயங்கள் நெறிமரபு பயிற்சி
அத்தனையும் அழியாமல் வாழவிட வேண்டும்
கலகமின்றி ஒன்றையொன்று நேசிக்க வேண்டும்
களிப்போங்க எப்போதும் சிரித்திருக்க வேண்டும்
புலமுற்ற நம்பிக்கை வேறுபட்டால் என்ன
பொன்மனங்கள் ஒன்றுபட்டால் யாவரும் ஒன்றாகுவார்.

இந்தப் பகுதிகளில் ஆங்கிலக் கவிதை வடிவங்கள் அற்புதமான தமிழ்க்கவிதை வடிவங்கள் பெறுவதை அறியலாம். கவிதைகள் ஒரு மொழிக்குக் கவிதை வடிவில் இறங்கும்போது ஏற்படும் சங்கடங்களை மனத்தில் கொண்டு இவற்றை நோக்குதல் வேண்டும் என்பார் பேராசிரியர் ரெட்டியார்.

4.கல்வி ஆசிரியம்: யுனெஸ்கோ அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்:

இது யுனெஸ்கோவின் அமைப்பில் அறிவியல் ஆசிரியரின் குழுவினரால் தயாரிக்கப்பெற்ற நூல். இதன் நோக்கம்:- அறிவியலைப் பயன்பெறக் கற்றுக்கொள்ள வேண்டுமாயின் அது நேரடியாக அநுபவமாக வேண்டும் என்ற குறிக்கோளை ஒட்டி எழுதப்பெற்ற நூல். இதில் தாவரவியல, விலங்கியல், புவியியல், வானியல், இயற்பியல், வேதியியல், மானிடயியல் போன்ற பல்வேறு துறைகள் எங்ஙனம் கற்பிக்கப்பெறவேண்டும் என்பதை நடைமுறைக்கேற்ப சிறு சிறு குறிப்புகளுடன் விளக்குவது. நூற்றுக்கணக்கான விளக்கப்படங்களைக் கொண்டது. பேராசிரியர் ரெட்டியார் இந்தப் படங்களை அப்படியே அச்சுக்கட்டைகளாக்கி தம்முடைய மொழிபெயர்ப்பு நூலில் புகுத்தியுள்ளார். அறிவியல் துறைகள், கல்வியல், உளவியல் பற்றிய கலைச்சொற்களை பயன்மிக்க முறையில் கையாண்டு, இந்நூலைத் திறம்பட அமைத்துள்ளார். நூலின் பின்னிணைப்பாக உள்ளவற்றையும் மிகத் திறம்பட மொழிபெயர்த்து இந்நூலில் சேர்த்துள்ளார். இந்த நூலினைக் கவனம் செலுத்திப் பார்ப்போருக்குமட்டும்தான் பேராசிரியரின் திறனை உணரமுடியும்.

5.அறிவியல்: மானிடஉடல்: ‘எதத் - இ.பெரளவல் இ எம்.டி.’ என்ற பெண் மருத்துவரால் எழுதப்பெற்ற ‘The Human Boby’ என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமே இந்நூல். 92 விளக்கப் படங்களும், 32 ஒளிவண்ணப் படங்களும் (Photographic Plots) அவற்றை அப்படியே தம்முடைய மொழிபெயர்ப்பு நூலில் ஒன்றுவிடாமல் இணைத்துள்ளார். இந்நூலில் இறுதியில் கலைச்சொற்கள் பட்டியலிட்டுக் காட்டப்படுவதில்லாமல் சில கலைச் சொற்கள் அகரவரிசைப்படி தெளிவாக விளக்கியுள்ளமை ஆசிரியரின் தனித்தனிமையைக் காட்டுகிறது. கலைச்சொல்லின் விளக்கம் மூலநூலில் காணப்படாதது. அறிவியல் பயிலாதவர்க்கு இது ஒரு வகையில் விளக்கமாக அமையும். எடுத்துக்காட்டாக சில கலைச்சொல் விளக்கங்கள் வருமாறு:

கலைச்சொற்கள்:

Anua - மலவாய்

Armpit - அக்குள்

Bile - பித்தநீர்

Blood - குருதி

Ceaum - பெருங்குடல் முதற்பகுதி

Cervix - கருப்பையின்வாய்

Cornia - விழிவெண்படலம்

Colon - பெருங்குடல்

<u>கலைச்சொல் விளக்கம்:</u>

Sinus - உடலில் உள்ள எலும்பு அல்லது இழையத்தில் உள்ள குழிவான பகுதி.

Endocardium - இதயத்தின் உட்புறத்தில் உள்ள அணைச்சவ்வு

Foetus - கருக்குழந்தை. கருப்பையில் வளரும்குழந்தை, எட்டாவது வாரத்திற்கு மேற்பட்ட நிலையில் இருப்பது

Saccule - சக்கியூல் - உட்காதில் உள்ள இரண்டு நுட்பமான அமைப்புகளில் ஒன்று. மற்றொன்று உட்ரிகல். இவை உட்காதின் நடுப்பகுதியில் உள்ளன.

Enzyme - நுரைப்புளியம்- உடலில் உள்ள உயிருள்ளஇழைகளில் உண்டாகும் ஒருவகைப் பொருள். இது தாவரம் அல்லதுஇ விலங்குப் பொருள்களில் கிரியா ஊக்கியாக இருந்துகொண்டு வேதியியல் மாற்றங்களைத் துரிதப்படுத்தும்.

இந்த கலைச்சொல் விளக்கப் பகுதி வாசகர்கள் விளக்கம் அடைதற்பொருட்டு பேராசிரியரால் மிக்க சிரமத்துடன் தயாரிக்கப்பட்ட பகுதியாகும்.

<u>6.அறிவியல் அணுக்கருபௌதிகம்</u>: இது டபிள்யூ. ஹெய்சன்பர்க் என்பவரால் எழுதப்பெற்ற ‘ The nuclear Physics’ என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். பொறியியல் பயிலும் மாணவர்க்காக ஹெய்சன்பர்க் ஆற்றிய எட்டு சொற்பொழிவுகளைக் கொண்டது

இந்நூல். இதனுடைய ஆங்கில நடை தத்துவநூல் நடைபோல் மிகக்கடுமையானது. இதை தமிழில் மொழிபெயர்ப்பது என்பது இரும்புக் கடலையை வேகவைப்பது போன்றது. இதை மிக இலகுவாக செய்து, கற்போர் கரங்களில் கவினுறச் செய்த பேராசிரியர் அவர்களின் தொண்டு பெரியது மிகப்பெரியது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பின்னிணைப்புகள் அனைத்தையும் தமிழாக்கம் செய்து இணைத்துள்ளார். இதைத் தவிர இந்நூலில் பயன்படுத்தப்பெற்ற கலைச்சொற்களுக்குச் சரியான தமிழ் வடிவம் தந்து, நூலின் பின்னிணைப்பாக அமைத்தது நூல் எழுதுவோர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. மேலும் இதில் பொருட்குறிப்பு அடைவு என்ற பகுதியும் சேர்க்கப்பெற்றுள்ளது. இவ்வாறு இவருடைய எல்லா நூல்களிலும் பொருட்குறிப்பு அடைவ என்பது சிறந்த அம்சமாக சேர்க்கப்பெற்றிருப்பது இவர் நூலின் தனித்தன்மையாகும்.

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. மொழிபெயர்ப்புத் தமிழ் தொல்காப்பியக் காலந்தொட்டு பிற மொழிகளில் இருந்து தமிழுக்கு வரும் வடிவம் என்பது காட்டப்பெற்றுள்ளது.
2. வேமனர், சி.ஆர்.ரெட்டி, குரஜாட ஆகிய மூன்று ஆங்கில நூல்களையும் பேராசிரியர் தமிழில் வடித்துத்தந்தது தமிழின் வளத்தை மிகுவிப்பதாக அமைகின்றது.
3. இந்த மூன்று நூல்களில் ஆங்காங்கு காணப்பட்ட கவிதை வடிவங்களைத் தமிழ்க் கவிதை வடிவமாக மாற்றி இருப்பது சுட்டப்பெற்றது.
4. கல்வி பற்றிய மூலநூல் வடிவத்திலிருந்து (படங்கள் உட்பட) சிறிதும் மாறுபடாது தமிழ் வடிவமாக தந்தது சிறப்புக்குரியது.
5. அணுக்கரு பௌதீகம், மானிடஉடல் ஆகிய இரண்டு நூல்களையும் சிறந்த தமிழ் வடிவங்களாகச் செய்த பேராசிரியரின் தொண்டு அளவிடற்கரியது.

அடிக்குறிப்புகள்:

1. தொல். பொருள். மரபியல்-நூ. 99
2. பா.கவி. தமிழ்த்தாய்-11
3. மேலது. தமிழ்-3
4. மேலது. தமிழ்வளர்ச்சி -2

5. Studies in Arts and Science – A felicitation volume to Dr. Reddiar in Commemoration of his 61st birth day.
   -மொழிபெயர்ப்பது எப்படி – 13-வது கட்டுரை.
6. Vemana – pp 50-51
7. வேமனர் - பக். 59-60
8. மாணிக்கவாசகர் - பின்னிணைப்பு - 3 காண்க
9. பெரி.திரு.10.9
10. வேமனர் - பக். 55-56
11. மேலது ப. 65
12. C.R.Reddi, p.27
13. சி.ஆர்.ரெட்டி ப.33
14. மேலது ப. 33
15. மேலது ப. 34
16. மேலது ப. 34
17. குரஜாடா ப.46
18. மேலது ப. 48
19. Gurajada – p-63
20. ibid – p.64
21. ibid – p.64
22. ibid – p.65-ல் உள்ள ஆங்கிலக் கவிதை தரப்பெறவில்லை.

<u>குறிப்பு:</u>
வேமனர், சி.ஆர்.ரெட்டி, குரஜாட என்ற இம்மூன்று நூட்களும் சாகித்திய அகாடமிக்காக மொழிபெயர்க்கப்பெற்று, பின்பு முறையே 1978, 1981 மற்றும் 1982 ஆண்டுகளில் வெளியிடப்பெற்றன.

****

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ V

இயல் - 9

தெய்வத் தமிழ் (வைணவம்)



பகுதி 5 :<>: இயல் – 9

தெய்வத் தமிழ் ~ வைணவம்

இவ்வுலகம் தோன்றிய நாள்தொட்டு மக்களிடையே, ஏதோ ஒரு முறையில் சமய வளர்ச்சி நிலவி வருகின்றது. காலப்போக்கில் மக்களின் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப இச்சமய வளர்ச்சியும் வளர்ந்து பல்வேறு கொள்கைகளுடன் கூடிய பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்தன. இங்ஙனம் வளர்ந்த சமயம் ஏதோ ஒரு முறையில் மக்களின் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்கின்றது. சூரியனையும் அதன் கதிர்களையும் தனித்தனியாகப் பிரித்தற்கு இயலாது. மக்கள் அன்றாட வாழ்க்கை, ஒழுங்கு பெற நடத்துவதற்கு அமைத்துக்கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என்று வழங்கப்பட்டதாகக் கொள்ளலாம். பல பிரிவுகளாகப் பிரிந்த சமயங்களில் ஒன்று வைணவ சமயம். இது திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பல உயரிய கொள்கைகள் அடங்கிய ஒரு பரந்த சமயமாகும். தொன்றுதொட்டு வரும் இச்சமயத்தின் கருத்துக்ள பழுத்த திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங்காங்கு பொதிந்து கிடக்கின்றன.

வரலாற்று முறையில் நோக்கினால் வைணவம் வேதத்திலிருந்து தோன்றியதாகக் கருத இடமுண்டு. இதனால் இது வைதீக சமயத்தின் பாற்படும் வேதங்கள், உபநிடதங்கள், கல்வெட்டுக்ள, இதிகாசங்கள் (இராமாயணம், மகாபாரதம்), புராணங்கள் (விஷ்ணுபுராணம், பாகவதபுராணம்), ஆகமங்கள் (பாஞ்சராத்திரம், வைகாநகம்) போன்ற இலக்கியங்களை நோக்கினால் இதன் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவாக அறியலாம். விவரங்கள் ‘வைணவசெல்வம்’’ என்ற பெருநூலில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன.[1]

<u>மும்மூட்சு நிலை</u>: எல்லா சமயங்களின் முடிந்த முடிவு வீடுபேற்றை எய்துதல் ஆகும். இதற்கு இறைவனை அடைவது என்பது பொருள். இறைவனை அடைவதில் இச்சை உடையரான சேதநர்கள் மும்மூட்சுகள் என வழங்கப்படுவர்.[2] ‘மும்மூட்சு’’ என்றால் மோட்சத்தில் விருப்பம் உடையவன் என்று பொருள். மோட்சத்தில் விருப்பம் உடையவர்கள் தத்துவம், இதம் (ஹிதம்), புருஷார்த்தம் என்ற மூன்றினைப்பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். தத்துவங்கள் மூன்று: அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்பன. சித்து என்பது, உயிர்கள் அல்லது சீவான்மாக்களின் தொகுதி. அசித்து என்பது மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு, உலகில் உள்ள ஏனைய பொருள்கள் இவற்றிற்கு காரணமான பிரகிருதி (மூலப் பகுதி) ஆகும்.

ஈசுவரன், இறைவன் இவை மூன்றும் தத்துவத்திரயம் (திரயம்-மூன்று) என்ற பெயரால் வழங்கி வருகின்றன.[3]

<u>ஆன்மநிலை</u>: ஆன்மாக்களை 'சித்து' என்ற தத்துவமாகக் கூறுவர் மெய்விளக்கியலார். 'ஆன்மா'' ஞானத்திற்கு இடமானது. இதனால் இது 'சேதநன்' எனவும் வழங்கப்பெறும். இந்தச் சீவான்மா அன்னமயம், பிராணமயம், மனோமயங்கட்கு அப்பாலாய் இருக்கும். இது தேசம், இந்திரயங்கள், மனம், பிராணன், ஞானம் இவற்றிற்கு வேறுபட்டது. அறிகின்ற தலைவனும் அறிவும், அறியப்பெரும் பொருளும் ஒன்றாக இருப்பது. அணுவின் அளவினை உடையது. ஆனந்த வடிவத்தைக் கொண்டது; என்றும் நிலைபெற்றிருப்பது.

இது இதயத்தில் குடிகொண்டிருப்பதாகச் சொல்லப்படும். கண் முதலிய இந்திரியங்கட்குத் தோற்றாது. மனத்தாலும் இதை எண்ணிப்பார்க்க முடியாது. இதைப் பகுதிகளாகப் பிரிக்கவும் முடியாது. அவயவமும் இதற்கில்லை. வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய வேறுபாடுகள் இதற்கில்லை. கத்தியால் அறுத்தல், தீயால் எரித்தல், நீரால் நனைத்தல், காற்று வெயில் முதலியவற்றால் உலர்த்தல் போன்ற செய்கைகட்கு இலக்காகா. அறிவு மயக்கமாக இருக்கும் இந்த 'ஆன்மா' அறிவுக்கும் இருப்பிடமானது. இந்த அறிவு ''தர்மபூதஞானம்' எனப்படும்.

'ஆன்மா' இறைவன் ஏவியபடி நடக்கும் தன்மையது. ஆனால் தரிக்கப்பெற்று அவனுக்கு அடிமையாக இருப்பது. 'ஆன்மா' தனக்குத்தானே விளங்கும் தன்மையது. அங்ஙனம் ஞானமயமாகி இருப்பினும் தனக்குத் தர்மமான ஞானத்திற்கும் தான் ஆதாரமாக இருப்பது. ஆன்மாவிற்கு இன்ப துன்பங்கள் உடம்பின் தொடர்பால் ஏற்படுகின்றன. 'ஆன்மா' பரமான்மாவை விட்டு தனித்து நிலைபெற்றிருப்பதில்லை. இந்த முறையில் ஒவ்வோர் ஆன்மாவும் ஈசுவரனின் உடலாக இருக்கும். இதையே வைணவம் <u>சரீர-சரீரி பாவனை</u> (உடல்-உயிர்-உறவு) என வழங்கப்படும். இதன் தத்துவத்தைப் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் ஒரு பாடலில் விளக்குவார்.[4] 'ஆன்மா'வின் விளக்கத்தைப் பிள்ளை உலக ஆசிரியரின் 'தத்துவத் திரயம்' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.[5]

<u>சீவான்மா வகைகள்</u>: ஆன்மாக்கள் எண்ணற்றவர். அவர்கள் பத்தர் (தளைப்பட்டவர்), முத்தர், நித்தியர் என மூன்று வகைப்படுவர். இவர்களுள் **<u>பத்தர்</u>** என்பவர் 'மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர்

மும்மைத்தாய்' பகவானின் மாயையால் மறைக்கப்பெற்ற சொரூபத்தை உடையவர். அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவமாகிய வினைகளால் சூழப்பெற்றவர். அவரவர் வினைக்குத் தக்கபடி மாறி மாறித் தேவர், மனிதர், விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்று துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் சம்சாரிகளாவர். இவர்களை 'பண்டிதப்பெரும்பதியை ஆக்கி, பழிபாவம் கொண்டிங்கு வாழ்வார்' (இரண்.திருவந்.14) என்று குறிப்பிடுவார் பூதத்தாழ்வார். <u>முத்தர்</u> என்பவர், இவ்வுலகத் தளைகள் களையப்பெற்று பரமபதத்தில் பகவதநுபவ கைங்கரிய போகரானவர்கள் ஆவர். பத்தி, பிரபத்தி இவற்றுள் ஒன்றை அநுட்பித்து வீடுபேற்றை அடைந்தவர்கள் இவர்கள். **<u>'நித்தியர்'</u>** என்பார், ஒருநாளும் சம்சாரபந்த உணர்வு இல்லாத அனந்தன், கருடன், சேனைமுதலியார் தொடக்கமானவர்கள். இவர்களை வேதாந்த தேசிகர், கர்மங்களால் கட்டுபட்டவர், பத்தர் பரமபதத்ததை அடைந்தவர்கள், முத்தர், அநாதியான கர்மசம்பந்தம் இல்லாத நித்தியஆரிகள் என்பர்.[6] இந்த இடத்தில் 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' (திருவாய் 8.2) என்ற திருவாய்மொழித் தொடருக்கு உடல் எது, ஆன்மா எது, என்பவற்றைப் பேராசிரியர் தெளிவாக விளக்குவது நுண்மான் நுழைப்புலத்தைச் சார்ந்ததாகும்.[7]

<u>வினைவகைகள்:</u> பண்டைய மெய்ப்பொருளியலார் வினையை 'அனாதி' என்றனர். விதை முந்தியதா? மரம் முந்தியதா? என்பதற்கு எப்படி விளக்கம் தர இயலாதோ, அப்படியே இதற்கும் விளக்கம் தரமுடியாது என்பர். எனினும் நம் முன்னோர் ஒருவருடைய நல்வினை, தீவினை ஆகிய வினைத்தொகுதியை மூன்றுவகையாகப் பகுத்துப் பேசுவர். இப்பிறப்பிற்கு முன்னய பிறப்புகளில் செய்த வினைகளுள் இப்பிறப்பில் அநுபவித்தற்கென்று அளந்து கொள்ளப்பெற்ற வினைத்தொகுதியை 'பிரார்த்தம்'' (நுகர்வினை) என்று பெயரிட்டு வழங்கினர். எஞ்சிய வினைத்தொகுதியை 'சஞ்சிதம்'' (பழவினை) என்று பெயரிட்டனர். இப்பிறப்பில் செய்யப்பெறும் வினைத்தொகுதி 'ஆகாமியம்' (எதிர்வினை) என்று வழங்கப்பெற்றது. இவற்றுள் நுகர்வினை அநுபவித்தே ஒழித்தற்பாலது (திருவாய் 9.10:5). தவம் செய்து மனத்தூய்மை அடைந்து 'யான்', 'எனது' என்று இருவகைப்பற்று அற்று மெய்யுணர்வு பெற்ற பெரியோர்களை சஞ்சிதம் அடையாது, தீயினுள் தூசாக அழிந்து ஒழியும். அங்ஙனம் மெய்யுணர்வு பெற்ற பெரியோர்கள் தெரிந்து தமக்கென எவ்வினையும் செய்யாராதலின் அவர்கட்கு 'ஆகாமிய வினை' ஒன்றுமிராது. அவர்கள் அறியாமல் அது இப்பிறப்பில் நிகழுமாயின் அதற்குப் பலன் இல்லை; தாமரை இலைத்

தண்ணீர்போல் பற்று அவர்களைச் சாராது. ஆகவே, மெய்யுணர்வு பெற்ற பெரியோர்கட்கு, சஞ்சிதம், ஆகாமியம் என்ற இருவகை வினைகளும் இலவாகும் என்பது நூற்கொள்கை. அவற்றை இறைவன் போக்கிவிடுகிறான் என்பது சமய மரபு (திருப்.-5).

<u>இயற்கைநிலை:</u> இதனை வைணவ தத்துவம் ‘அசித்து’ என்று குறிப்பிடும். ‘அசித்து’ என்பது அறிவில்லாத பொருள். அது ‘அசேதநம்’ என்ற பெயராலும் வழங்கப்பெறும். ‘அசேதநம்’ விகாரத்திற்கு இடமானது. அதாவது ஒரு பொருள், ஒரு நிலையின்று பிறிதொரு நிலையை அடைவதுதான் விகாரம் என்பது. ‘அசேதநத்தில் ஞானத்தற்கு சிறிதும் இடமில்லை. இந்த அசேதநம், ‘சுத்த சத்துவம்’, ‘மிச்ரதத்துவம்’ மற்றும் ‘சத்துவசூன்மம்’’ என்று மூன்று வகையாகப் பிரித்துப் பேசப்படும்.

<u>சுத்த சத்துவம்</u>: வேறு ஒரு குணம் கலவாத சத்துவ குணத்தை உடையதாக இருப்பது இது. இது ஆதல் அழிதல் இல்லாதது; என்றும் நிலைப்பெற்று இருப்பது. இது ஞானத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும் இயல்புடையது. இது நித்திய விபூதியில் (பரமபதத்தில்) விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிகை முதலிய வடிவுடன் தோற்றம் கொள்ளும். தீ, கதிரவன் முதலிய ஒளியுள்ள பொருள்களும் மின்மினிக்கு ஒப்பாகும்படி அளவிறந்த ஒளிவடிவம் கொண்டது. இது, வைகுந்தத்தில் இருப்பது.

<u>மிச்ரதத்துவம்</u>: இதுதான் ‘மூலப்பிரகிருதி’. இது சாத்துவிகம், இராசசம், தாமசம், ‘திரிகுணம்’ என்ற பெயராலும் வழங்கும். இவற்றுள் சத்துவகுணமானது ஞானத்தையும், சுகத்தையும் நல்கி அந்த ஞான சுகங்களாகிய அந்த இரண்டிலும் ஆசையை உண்டாக்கும். இராசச குணம் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் கொள்ளும் ஆசையையும், ஐம்புலன்களால் உண்டாகும் இன்பங்களின் ஆசையினையும், உழவு, வாணிகம் முதலிய தொழில்களில் ஆசையினையும் உண்டாக்கும். தமோகுணம் விவரீத ஞானத்தையும், சோம்பலையும், உறக்கத்தையும் உண்டாக்கும். இந்த முக்குணங்கள் சமமான நிலையில் உள்ளபோது ‘பிரகிருதியன்’ விகாரங்கள் நாம, ரூப, விசேடங்கள் இல்லாமல், பிரமாணங்களால் காணக்கூடாதபடி அதி சூட்சுமங்களாக இருக்கும் (இதுவே மகாப்பிரளய நிலை). இந்தக்குணங்கள் ஏற்றத் தாழ்வை அடையுங்கால் இந்தப் பிரகிருதி, பலவித தத்துவங்களாக மாறி நாம, ரூப, விசேடத்தை உடையனவாகும். இவை பிரமாணங்களால் காணக்கூடியவை. இந்த

‘அசித்து’ விசித்திரமான படைப்பை உண்டாக்குவதால் இது ‘மாயை’ என்ற பெயராலும் வழங்கப்படும். இதனை மிக விரிவாக விளக்குவார் பேராசிரியர் ரெட்டியார்.[8]

சத்துவசூனியம்: இதுவே காலதத்துவம். காலம் என்பது எங்கும் பரந்து நிற்கும் ஒரே திரவியம். இதில் சத்துவம், இராசசம், தாமசம் ஆகிய முக்குணங்கள் இல்லை. எதிர், நிகழ், கழிவு என்ற காலநிலைகட்கு இதுவே காரணமாகும். விநாடி, நாழிகை முதல் பரார்த்தம் வரையிலுள்ள பகுதிகள் இந்தக் காலத்தினுடையனவே ஆகும். இதனை மேலும் பலவிதமாக விளக்குவர் பேராசிரியர் ரெட்டியார்.[9] எம்பெருமான் திருமேனியில் அடங்கி இருக்கும் இந்த நிலையை வேதாந்த தேசிகர் அழகாகப் பாசுரம் இட்டுக் காட்டுவர்.[10]

இறைநிலை: இது வைணவ தத்துவத்தின் மூன்றாவது தத்துவமாகிய ஈசுவரன். அவன் அனந்த கல்யாண குணங்களை உடையவன். இவற்றுள் ‘ஞானம்’, ‘சத்தி’, ‘பலம்’, ‘தேஜஸ்’, ‘ஐசுவரியம்’, ‘வீரியம்’ என்ற ஆறும் தனித்தனியாக விளக்கப்படும். இவை தவிர எண்ணற்ற கல்யாண குணங்கள் உள்ளன. அவை ‘சத்தியகாமகுணம்’, ‘மாதுரியகுணம்’ முதலிய எண்ணற்றவை. இவன் சகல செகத்துக்கும் காரணபூதன்.[11] அதாவது இவனே முழுமுதற் கடவுள். இவனே படைப்பிற்கு மூலகாரணமாவான். உலகத்தைத் தான் படைத்தல் ‘சமஷ்டி சிருஷ்டி’ என்றும், நான்முகன் முதலானவர்களைக் கொண்டு படைத்தல் ‘வியஷ்டி சிருஷ்டி’ என்றும் கூறுவர். இந்த இருவகை சிருஷ்டிகளுக்கும் நாராயணனாகிய எம் பெருமானே காரணபூதனாகின்றனான். படைத்தலின் பரிமாணங்களை நாலாயிரம், அஷ்டப் பிரபந்தம் போன்ற பாசுரங்களை வைத்துக்கொண்டு பேராசிரியர் விளக்குவர்.[12]

இறைவனின் திருமேனி-விளக்கம்: இறைவனுடைய திருமேனி பரத்துவம், வியூகம், விபவம் (அவதாரம்), அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகையோடு கூடி இருக்கும். இவற்றின் விவரங்களை எல்லாம் பேராசிரியர் ரெட்டியார் பலவாறு விளக்கிக் காட்டுவார். இதனைத் தெளிவாக விளக்குவதற்குப் பிள்ளை உலக ஆசிரியரின் ஸ்ரீவசனபூஷணத்திலிருந்து ஒரு சூத்திரத்தை (4.2) எடுத்துக்கொண்டு விரிவாக விளக்குவார். சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களும், இந்தப் படைப்பில் இயைந்திருப்பதையும் ஒரு கடிதத்தில் தெளிவாக்குவார்.[13]

வீடுபேற்றிற்குரிய வழிகள்: வைணவ தெய்வத்தமிழில் வீடு பேற்றிற்குரிய வழிகளும் விளக்கம் அடைகின்றன. இந்த வழிகளைச் சித்தோபாயம், சாத்யோபாயம், என இருவகைப்படுத்தி பேசுவர் மெய்விளக்க நூலார். சாத்யோபாயம் என்பது முன்பே உள்ள நெறி; இறைவன். சித்தோபாயம் என்பது பக்திநெறி, பிரபத்திநெறி (சரணாகதி) என்று இருவகைப்படும். இந்த நெறிகளைக் கடைப்பிடிப்பவர்கள் மும்மூட்சுகள் எனப்படுவர். மும்மூட்சுகள் என்பபோர் மோட்சத்தில் விருப்பம் உள்ளவர்கள்.[14] பக்திநெறி இயமம் முதலாக எட்டு வகைப்படும். பக்தி நெறியை கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்று வகைப்படுத்தி பேசுவதும் உண்டு. இந்த வழிமுறைகள் மூன்று வருணத்தார்க்கே உரியன என்றும், நான்காம் வருணத்தார்க்கும், பெண்களுக்கும் இவை உரியவை அல்ல என்றும் கூறுவர். ஆகவே, நான்காம் வருணத்தில் பிறந்த நம்மாழ்வார் ஒரு வழியைக் கண்டறிந்தார். இந்த வழி, எல்லா வருணத்தார்களுக்கும் உரிய பிரபத்திநெறி (சரணாகதி) ஆகும். இதனால் நம்மாழ்வார் 'பிரபந்த ஜனகூடஸ்தர்' என்ற திருநாமம் பெறுகின்றார். இந்த வழியைக் கடைப்பிடிப்பவர்கள் யாவரும் 'பிரபந்தர்கள்' என வழங்கப்படுகின்றனர். இந்த மூன்று யோகங்களும், பக்தி யோகத்தின் படிகளே என்றும் விளக்குகின்றது. வைணவம் பக்தி யோகத்தில் 'ஆன்மா' தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகின்றது. இது ஞான நிலையின் இறுதிப்படியும், பக்தி நிலையின் முதற்படியும் ஆகும். ஞானமே பக்தி நிலையாக முதிர்கின்றது. இதுவே, 'ஞானம் கனிந்த நலம்' ஆகும்.[15] இந்த பக்திநெறி பரபக்தி, பரஞானம், பரமபக்தி என மூன்று பிரிவுகளாக வேறுபடுத்தி காட்டும் மரபும் உண்டு. இந்த நிலைகளை ஆழ்வார் பாசுரங்களில் ஆங்காங்குக் காணலாம். இந்த மூன்று நிலைகளும் நம்போலியர்க்குப் பரமபதத்தில் காணப்படும் நிலையாகும். ஆனால் இந்த உலகிலேயே இந்த மூன்று நிலைகட்கும் முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார் பெருமக்களின் அநுபவங்களாக எடுத்துக்காட்டுவர் வைணவச் சான்றோர்.[16]

வீடுபேறு: வைணவ சமயத்தினர் வீடு பேற்றை ஆன்மா அடையும் இடமாகக் கருதுவர். இதுவே வைகுந்தம் அல்லது பரமபதம். இதனை நம்மாழ்வார், 'நலம் அந்தமில்லதோர் நாடு'[17] என்பர். பரிமேலழகர் அந்தமில் இன்பத்து அழிவில் வீடு[18] என எழுதிச்செல்வர். ஆழ்வார்கள் பொதுவாக இந்த வீட்டை, 'பொன் உலகு', 'இலங்குவான்' என்றெல்லாம் குறிப்பிட்டுச் செல்வர். இந்த வீட்டைப்பற்றி

திருமங்கையாழ்வார்[19], திருமழிசையாழ்வார்[20], பெரியாழ்வார்[21] ஆகியோர் தம் தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். இந்த உடலை விட்டுப்பிரியும் ''ஆன்மா' கதிரவன் மண்டலத்தை பிளந்து கொண்டு அவ்வழியே சென்று 'பரமபதம்' என்னும் நாட்டை அடைவதாகவும் அங்கு ஆரா இன்பத்தை அநுபவிப்பதாகவும் அவ்விடத்தை விட்டு ஒருநாளும் திரும்பிவருவது இல்லையாகவும் அதுவே 'வைகுந்தம்' என்பதாகவும் குறிப்பிடுவர். பரமபதத்திற்குச் செல்லும் வழியை 'அர்ச்சிராதி கதி'[22] என்று வழங்குவர் வைணவ பெருமக்கள். வேதாந்த தேசிகர் இந்த வழியை 'பரமபதசோபானம்'[23] என்ற கவிதையில் விரிவாக விளக்குவர்.

<u>வீட்டுலகம்:</u> 'ஆன்மா' அடையும் இந்த உலகம் ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாக இருக்கும். இங்கு திவ்விய கற்பகச் சோலைகள், நானாவித மலர்கள் நிறைந்த பூங்காக்கள், திவ்விய இளமரக்காக்கள், திவ்விய செய்குன்றங்கள், நீராடும் திவ்விய தடாகங்கள், பற்பல போகநிலங்கள் முதலியவை நிறைந்திருக்கும். இங்கு மிகவும் இடமகன்ற நிரதிசைய ஆனந்த மயமான திருமாமணி மண்டபம் ஒன்று உண்டு. இது உபயவியூதியிலுள்ளவர்களும் ஒரு மூலையில் அடங்கும்படியான மிக விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும், சுத்த சத்துவத்தால் ஆனவை. இங்கு காலம் நடையாடாது. காலை-மாலை, பகல்-இரவு, நேற்று-இன்று, என்ற நிலைகள் இங்கு இல்லை. முன்-பின் என்ற நிலை இங்கு உண்டு. வீடுபேறு அடைவதற்கு ஏற்ற உபாயங்களை அநுஷ்டித்து அவன் திருவருளைப் பெற்ற மும்மூட்சுகள்தாம் இந்த 'நீள்விசும்பினை' அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுலகிற்குத் திரும்பி வருதல் இல்லை. இதனால் இது 'மீளா உலகு' என்ற பெயரையும் பெற்றுள்ளது. பிரளயகாலத்திலும் இங்குள்ள முத்தர், நித்திய சூரிகளுக்கு அழிவில்லை; இறைவன் திருவுளப்படி இவர்கள் எந்த வடிவத்தையும் மேற்கொள்வர். பரமபதநாதன் வீற்றிருக்கும் இடம் இந்தத் திருமாமணி மண்டபம் ஆகும். இவன் வீற்றிருக்கும் சீரிய சிங்காதனம் அற்புதமான கோப்புடையது; பன்னிரண்டு இதழ்களையுடைய சாகா சக்திமயமான திவ்விய பொற்றாமரைப் பூவின் மீது விசித்திரமான கட்டிலைக் கொண்டது. இந்தக் கட்டிலின்மீது பல்லாயிரம் சந்திரர்களை உருக்கி வார்த்தாற்போல குளிர்ந்த தன்மையுடைத்தான திருமேனியுடையவனாய் கல்யாண குணங்கட்கு அந்தமில்லாமையினால் 'அனந்தன்' என்ற திருநாமமுடையனாய், எல்லாவித அடிமைத் தொழில் புரிபவர்கட்கெல்லாம் உபமான நிலமாயிருத்தலால் 'சேஷன்' என்னும்

திருநாமமுடையவனாகிய திருஅனந்தாழ்வானாகிய படுக்கையில் வெற்றிமலையின் உச்சியில் பல்லாயிரம் பகலவன் உதித்தாற்போல் இருக்கும் ஆயிரம் பனாமுடி மண்டலமாகிய சோதி மண்டலத்தின் நடுவில்தான் பரமபதநாதன் வீட்டிருப்பான். அருள்தேவியான பெரியபிராட்டியார் வலப்பக்கத்திலும், பொறை தேவியான பூமிபிராட்டியாரும், ஆனந்ததேவியான நீலாபிராட்டியாரும் இடப்பக்கத்திலும் இருப்பர். இவன் அனந்தன், கருடன், சேனைமுதலியார் முதலான நித்திய சூரிகளும் இவ்வுலகத்தளைகளினின்றும் விடுபட்ட முத்தரும் அநுபவித்தற்கு உரியனாய் இருப்பான்.

இந்த எம்பெருமான் சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும், காலத்தாலும் அளவிடப்பெறாதவன். எங்கும் நிறைந்திருப்பவன். மூன்று வித சேதந, அசேதந, பரிணாமரூபமான வேறுபாட்டின் குறைகள் (விகாரதோஷங்கள்) தட்டாதவன். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப்பட்ட பலன்களையும் உயிர்களுக்கு நல்கி, அவற்றின் புகலிடமாக இருப்பவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் (தேசு), முதலிய மங்களகுண கூட்டங்களால் அணி செய்யப்பெற்றவன்; இவனிடம் இக்குணம் ஆதல், அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும். இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌலப்பியம், சௌசீல்யம் முதலிய எண்ணற்ற குணங்களைக் கொண்டவன். இவ்வுலகினைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரணபூதன். இவற்றை இவன் விளையாட்டாகவே செய்விப்பன். வைகுண்டநாதனுக்கு உருவம் உண்டு. அது திவ்விய மங்கள விக்கிரகம் எனப்படும். இது ‘கண்கள் சிவந்த’ (திருவாய் 8.8:1) என்று தொடங்கும் திருவாய்மொழியில் காட்டப் பெறுகின்றது. வேதாந்த தேசிகரின் ‘தயாசதகத்தில்’ இந்த எம்பெருமானின் திருக்கோலம் நன்கு காட்டப்பெறுகின்றது.

முத்தி நிலையில் சீவான்மாவுக்குப் பசி, நீர் வேட்கை முதலியன இல்லை. பாவம், முதுமை, துன்பம், இறப்பு முதலியவை அவனை நெருங்கா. வைகுந்தத்தில் ஆன்மா எம்பெருமானுடன் கலந்து அவனுக்கு அடிமை செய்து அனந்தத்தை அநுபவிக்கின்றது.

வைணவ மந்திரங்கள்: வைணவ மந்திரங்கள் மூன்று: அவை, திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்பவை.

திருமந்திரம்: இது 'ஓம் நமோ நாராயணாய' என்பது. இது ஓம் நமோ நாராயணாய என்ற மூன்று பதங்களையும் எட்டெழுத்துகளையும் கொண்டது. இந்தப் பதங்களுக்கும், எழுத்துகளுக்கும் தனித்தனி சிறப்புப் பொருள் உண்டு. 'பதரி காசிரமத்தில்' நரனுக்கு நாராயணன் உபதேசித்தது இந்த மந்திரம்.[24] இந்த மந்திரம் அந்தணனாக வந்த நாராயணனிடம் திருமங்கையாழ்வார் உபதேசிக்கப் பெற்றார். இந்த மந்திரத்தின் சிறப்பைப் பேராசிரியர் விளக்குவர்.[25] பதப்பொருளும் எழுத்துக்களின் பிறபொருளும், மிக்க விவரங்களுடன் பல கடிதங்களிலும், நூல்களிலும்[26] பேராசிரியர் விளக்குவார்.

'பிரணவம்' (ஓம்) என்ற பதம் அ, உ, ம என்ற எழுத்துகாளகப் பிரியும். இங்ஙனம் பிரிந்த நிலையில் மூன்று பொருள்களைத் தெளிவாக்கும். சேர்ந்திருக்கும் நிலையில் ஒரே பதமாய், ஒரே பொருளைத் தெரிவிக்கும். இந்த எட்டெழுத்து மந்திரம் எம்பொருமானுக்கும், நமக்கும் உள்ள உறவினை ஒன்பது வகையாக உணர்த்தும் என்பதனை நம்முன்னோர்கள் உரைத்துப் போயினர். இந்த உறவு பின்வருமாறு விளக்கப்பெறும்.

1. அகாரத்தினால் தந்தை-தனயன் என்ற உறவும் இரட்சிக்கப்படுவன்-இரட்சிப்பவன் என்ற உறவும் அறியக் கிடக்கின்றன.

2. 'ஆய' என்ற மறைந்து கிடக்கும் (தொக்கி நிற்கும்) நான்காம் வேற்றுமை உருபால் (லுப்த சதுத்தியால்) அடிமை-அடிமை கொள்பவன் (சேஷ-சேஷி பாவனை) என்ற உறவு சொல்லப்பெறுகின்றது.

3. உகாரத்தினால் நாயக-நாயகி (தலைவன்-தலைவி உறவு) நவிலப் பெறுகின்றது.

4. மகாரத்தினால் அறிபவன்-அறியப்படும் பொருள் (ஞாத்ரு-நேய சம்பந்தம்) என்ற உறவு உரைக்கப் பெறுகின்றது.

5. நமஸ்ஸாவே ஸ்வஸ்வாமி (சொத்து-சொத்துக்குரியவன்) என்ற சம்பந்தம் (ஸ்வம்-சொத்து, ஸ்வாமி-சொத்துக்குரியவன்) சொல்லப் பெறுகின்றது.

6. நாரபதத்தாலே சரீர-சரீரி (உடல்-உடலையுடையவன்) என்ற உறவு கூறப்பெறுகின்றது.

7. அயந பதத்தாலே ஆதார-ஆதேய (தாங்குகிறவன்-தாங்கப்படும் பொருள்) தொடர்பு காட்டப்பெறுகின்றது.

8. ஆய பதத்தால் போகத்தை அநுபவிப்பவன்-போக்கியப் பொருள் (போக்த்ரு-போக்கிய உறவு) என்ற சம்பந்தம் சாற்றப்படுகின்றது. ஆக இம்மந்திரம் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள எட்டு வகை உறவுகளைச் சொல்லித் தலைக்கட்டுகிறது.[27]

உகாரத்தினால் சொல்லப்பெறும் 'நாயக-நாயகி' உறவினைத் திருமந்திரத்தின் மூன்று பதங்கள் விளக்குகின்றன. 'ஓம்' என்ற பிரணவ பதம் சேஷித்துவத்தையும் (பிறர்க்கு அடிமையாய் இருத்தலையும்), 'நமஸ்ஸு' பாரதந்திரத்தையும் (பரன் அல்லது பகவானுக்கு வசப்பட்டிருத்தைலையும்), 'நாராயணாய' என்ற பதம் சேதநன் ஈசுவரனுக்குப் புரிய வேண்டிய கைங்கரியத்தையும் தெரிவிக்கின்றன. பிரணவத்தில் உள்ள ஆகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை சேஷத்துவத்தையும், உகாரம் அந்த சேஷத்துவத்தின் அநந்யாகத்துவத்தையும் (வேறு ஒருவர்க்கும் அல்லாமல் ஈசுவரன் ஒருவனுக்கு உரித்தாய் இருத்தல்), மதாரம் ஞானமாகிய சீவனையும் தெரிவிக்கின்றன. ஆழ்வார் பாசுரங்கள், தோழிப் பாசுரங்கள், தாய்ப் பாசுரங்கள், மகள் பாசுரங்கள் என்று மூவகைப்பட்டிருக்கும். தோழிப் பாசுரங்களால் ஆன்மாக்கள் யாவும் பிற தெய்வங்களுக்கு அடிமைப்பட்டன அன்று எனவும், அவை தமக்குத் தாமே அடிமை எனவும் ஆகிய அநந்யாகத்துவத்தைத் தெரிவிக்கின்றது. தாய்ப்பாசுரங்கள் ஈசுவர பாரதந்திரியத்தைத் (அவனே உபாயம் ஆகின்றான் என்பதை) தெரிவிக்கின்றன. இரண்டாவது பதமாகிய 'நம' என்பது, இந்த நிலையைக் குறிக்கின்றது. இச்சொல்லை ந + ம என்று இரண்டாகப் பிரிக்கலாம். இவ்விரண்டு எழுத்துக்களும் தனித்தனி பொருளைத் தருதலின் பதங்களாயின. இவற்றுள் ஆறாம் வேற்றுமையுடன் கூடிய 'ம' என்னும் பதம் 'சேதநன் ஈசுவரனுக்கே உரியவன்' என இயம்பும். நான்காம் வேற்றுமையின் பொருளுக்கு மாறாய்த் 'தனக்குத்தான் உரியவன்' என்னும் பொருளைக் கொடுக்கின்றது. ஆனால் 'ந' என்னும் பதமோ அதற்கு எதிர்மறைப் பொருளால் அதைத்தடுத்து நிறுத்தித் 'தனக்குத்தான் உரியனல்லன்' என்பதை அறிவிக்கின்றது. இதனால் 'நான்' பிறனுக்கு (ஈசுவரனுக்கு) உரியவன் என்பது பெறப்படுகிறது. மகள் பாசுரங்கள் இறைவனை அடைந்தே தீரவேண்டும் என்ற பதற்றத்தை உடையவள் மகள் என்பதைக் காட்டுகின்றன. பிரணவத்தினாலும், நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனாய்), சரண்யனாய் அறுதியடப்பெற்றவன் எம்பெருமான். எல்லோருக்கும் புகலிடமாக இருப்பவனும் இவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை

உணரப்பெற்ற பின்பு நாராயணாய என்ற சொல்லினால் கூறப்பெற்றுள்ள சொரூபம் (Essential Nature) உருவம், குணம், விபூதி, முதலியவற்றின் சேர்க்கையால் உள்ள பெருமையை நினைந்து மகிழ்பவள் இவள். எம்பெருமான் சாத்தியோபாயமாக இருந்தால், தான் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகின்ற பேறு கிடைக்கக்கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் சித்தோபாயாமாக இருப்பவன்; அதனால் அவனை தாமதித்து அநுபவிக்கக் காரணமில்லை. அவனே உபாயம் என்ற கோட்பாட்டையும் மீறி தான் நினைத்த பேற்றினை உடனே பெறவேண்டும் என்ற பதற்றத்தை உடையவள் இவள். இந்த மனநிலைதான் ‘மகள்’ என்று குறிப்பிடப்பெறுகின்றது. மகள் பாசுரங்கள் அனைத்தும் இந்த நிலையைத்தான் விளக்குகின்றன.[28]

<u>பகவத் விஷய காமம்</u>: வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி, ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கின்றது. இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம், பகவத்விஷய காமம் என்று வழங்கப்பெறும்.[29] இங்ஙனம் இவா்கள்கொள்ளும் காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும், இந்த பகவத்விஷய காமத்திற்கும் பொருத்தமாக கூறப்பெறும். நலம் பாராட்டுதல், கழற்றெதிர் மறுத்தல், அறத்தொடுநிலை, வெறிவிலக்கு, மடலேறுதல், உடன்போக்கு, நகர்காட்டல், ஊடல் என்ற துறைகளை ஆழ்வார் பாசுரங்களைக் கொண்டு பேராசிரியர் விளக்கி உள்ளார்.[30] தூதுபற்றிய துறைகளும் விளக்கப்பெற்றுள்ளன.

சிற்றின்ப அநுபவத்திற்கு கொங்கை முதலியன சாதனமாய் இருப்பதுபோல, பகவத் விஷய காமத்திற்கு பரபக்தி, பரஞானம், பரம பக்தி என்பவை இன்றியமையாதனவாய் இருப்பதால் , அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று சமயச் சான்றோா் கொள்வர்.[32] காதல் சுவையின் தொடர்பு சிறிதும் இன்றியே, பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவருக்கு வெல்லத்தை வெளியில் பூசிக்கொடுத்து, உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகளுக்கு சருக்கரைப்பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் திண்பிப்பது போலவும், சிற்றின்பம் கூறும்வகையில் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் எனப் பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத்தினை உடையவருக்குக் காட்டப்பெறும். உத்திமுறையாக,

இறையனார் களவியலிலும் கூறப்பெற்றிருப்பது ஈண்டு ஒப்புநோக்கி உணர்தல் தகும்.[33]

ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கு ஏற்ற ஓர் இலக்கிய மரபே இது என்று கொள்ளினும் இழுக்கு இல்லை. திருமந்திரம் நவவிதசம்பந்தத்தை எடுத்துக்காட்டுவதாக மேலே குறிப்பிட்டோம். அதன் அடிப்படையில்தான் வழிபடு கடவுளை பல்வேறு வகைகளில் வழிபடலாம் என்று நம்நாட்டு பக்திப்பனுவல்கள் கூறுகின்றன. ஆழ்வார் பாசுரங்களிலும் எம்பெருமானைத் தாய், தந்தை, குரு, தெய்வம் என்று பேசப் பெற்றிருப்பதையும் காணலாம். பாரதியாரும் இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டுதான் ‘கண்ணன்பாட்டு’ என்னும் ஈடற்ற கவிதையில் கண்ணனைத் தந்தையாகவும், காதலனாகவும், சற்குருவாகவும், தெய்வமாகவும் பாடியுள்ளார் என்று பேராசிரியர் திறம்பட எடுத்துக்காட்டி விளக்குகின்றார். 34

துவயம் : இந்த மந்திரத்தைப் பரமபதநாதன் பெரிய பிராட்டியாருக்கு உபதேசித்ததாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள்.

ஸ்ரீமத் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம்

என்பது துவயமந்திரம். இக்து இரண்டு வாக்கியங்களாய் அமைந்து தலைசிறந்த பொருள்களை அறிவிக்கின்றமையின் துவயம் எனப் பெயர் பெற்றது.[35] (துவயம் - இரண்டு). எல்லா சாத்திரங்களும் ஒருவனுக்கு தேகத்தாலே பேறுகிடைக்கும் என்று ஒருமுகமாகப் பேசுகின்றன. திருமந்திரம் ‘ஆன்மா’வால்தான் அப்பேறு கிட்டும் என்று கூறுகின்றது. ‘சரமசுலோகம்’ ஈசுவரனாலே அப்பேறு கிடைக்கும் என்று அறுதியிடுகிறது. ஆனால் துவயமந்திரமோ, ஒருவனுக்குப் பேறு கிடைப்பது என்று பெரியபிராட்டியராலே என இயம்புகிறது. ஈசுவரனே உபாயமாக இருக்கும்பொழுது பிராட்டியாரைப் பற்றுவது எற்றுக்கு? சேதநனைக்குறித்துப் பிராட்டியார் புருஷகாரம் செய்தால் (ஒழிய - தகவுரை கூறினால்) ஒழிய - ஈசுவரன் சேதநனைக் காத்தலாகிய செயலை நின்றவேற்றான் எனபது குறிப்பு. இதனால்தான் பிராட்டியாரின் பேறு என்று துவயம் குறிப்பிடுகின்றது. இப்புருஷகார வைபவம் ஸ்ரீவசன பூஷணத்தில் விரிவாகச் சொல்லப் பெற்றுள்ளது. [37]

துவயத்தின் இரண்டு வாக்கியங்களுள் முதல் வாக்கியத்தில் ஸ்ரீ + மந் + நாராயண + சரணௌ + சரணம் பிரபத்தியே என்ற ஆறு

பதங்களும், பதினைந்து எழுத்துகளும், இரண்டாம் வாக்கியத்தில் ஸ்ரீமதே + நாராயண + ஆய + நம என்னும் நான்கு பதங்களும் பத்து எழுத்துகளும் உள்ளன என்று இந்த துவய மந்திரத்தை பகுத்துக்காட்டி இவற்றின் பொருள்களைத் தெளிவாக விளக்குவர் பேராசிரியர். [38]

எம்பெருமானுடைய திருவருளைப் பெற வேண்டிய துவய அதிகாரி ஆகிஞ்சன்னியமும் அநன்னிய கதித்துவமும் உடையவனாக இருத்தல் வேண்டும். ஆகிஞ்சன்னியம் என்பது, கன்மஞான பக்திகளாகின்ற மற்ற உபாயங்களில் தொடர்பற்று இருத்தலாகும். அநன்னிய கதித்துவம் என்பது ஆன்ம இரட்சணத்திற்கு எம்பெருமானைத் தவிர வேறோர் இரட்சகப் பொருள் அற்றிருத்தலாகும். ‘ புகலொன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ அமர்ந்து புகுந்தேனே’ (திருவாய் 6.10.10) என்ற பாசுரத்தில் அநன்னியகதித்துவத்தைத் தெரிவிப்பதைக் காணலாம். திருமங்கையாழ்வாரும் ‘நலம்தான் ஒன்றுமிலேன் நல்லதோர் அறஞ் செய்து மீள்வேன்’ (பெரி . திரு . 1.9.4.) என்று இதே கருத்தை தெரிவிப்பதைக் காணலாம். ஆகவே, சேதநன் இருவர் சேர்த்தியிலே இரக்க வேண்டிய நிலையில் இருக்கின்றான். இதற்கு எம்பெருமானார் நம்மனோர் புரிந்த கொடிய குற்றங்களைப் பொறுக்குமாறு சீரங்கநாச்சியாரும், அழகிய மணவாளப் பெருமாளும், ஒரே சேர்த்தியில் எழுந்தருளியிருக்கும் காலத்தை நோக்கிக்கொண்டு இருந்து பங்குனி உத்திரத்தில் பிராத்திப்பதுவே தக்க சானறாகும் என்று பேராசிரியர் எடுத்துக்காட்வது ஈண்டு நினைவு கூறத்தக்கது. [39]

<u>**புருஷகாரம்:**</u> துவயத்தின் முன் வாக்கியத்தில் ‘பெரிய பிராட்டியாரோடு கூடிய எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன்’ என்னும் பொருள் கிடைக்கின்றது. இதனை உற்றுநோக்கில் ஸ்ரீ-விசிஷ்ட (பிராட்டியாரோடும் கூடிய) நாராயணனுக்கு துவயத்தின் பின் வாக்கியத்தில் செல்லப்பெறும் பெரிய பிராட்டியாரும் பெருமானுமாகிய சேர்த்தியில் என்றும் கைங்கரியத்தைப் புரிவோனாக என்னும் பதத்தைக் குறித்து உபாயத் தன்மை உண்டு என்பது புலப்படுகின்றது. இந்த இரண்டையும் கருத்தில் கொண்ட பிள்ளை உலக ஆசிரியர் ‘இங்கு இவரைச் சொல்லுவது புருஷகாரமாக’’ என்று கூறுகின்றார்.

சேதநன் எம்பெருமானுக்கு ‘சேஷபூதன்’ (அடிமை)யாகவும், எம்பெருமான் தனக்குச் சேஷி (தலைவன்) ஆகவும், இருக்கும் தொடர்பை நாம் அறிவோம், ஆயினும் பெரிய பிராட்டியார் புருஷகாரமாக இருப்பதற்கு

மணவாளமாமுனிவர் கூறும் காரணம்: 'இவன் தாயாம் தன்மையால் வந்த வாத்சல்யத்தை மிகுதியாக உடையவன்; தந்தையாகிய எம்பெருமானைப்போல் வன்மையும் மென்மையும் கலந்திராமல், மென்மையே வடிவு கொண்டவன்; பிறர் கண்குழிவு காண மாட்டாத தன்மையள்; தீய மனமுடையவர்களையும் மருவித் தொழும் மனமுடையவர்களாக்குகைக்குத் தக்க செயல் புரிபவள்; குற்றமுடையவர்களும் கூசாமல் வந்து காலிலே விழலாம்படி இருப்பவள். ஆண்மையால் வந்த வன்மையோடே தந்தையாம் தன்மையால் வந்த நலம் செய்யும் தன்மையுடையவளாயும் குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டுக் கொடிய தண்டனைகளை விதிக்கும் செய்கையாலே, குற்றமுடையவர்கள் முன் செல்லக் குடல் கரிக்கும்படி இருக்கும் சர்வேசுவரனைத் தக்க வழிகளாலே குற்றங்கள் அனைத்தையும் மறப்பித்துச் சேர்ப்பிக்கும் தன்மையள். இத்தகையவள் பாவமே செய்து பாவிகளான மக்கள் சர்வேசுவரனைப் பற்றுங்கால் புருஷகாரமாக வேண்டும்' என்பது[40] இந்தப் புருஷகாரத்தில் அவள் செயல்வடுத்துவதை,

> **'சேதநனை அருளாலே திருத்தும்**
> **ஈசுவரைனை அழகாலே திருத்தும்''[41]**

என்று பிள்ளை உலக ஆசிரியர் விளக்குவர்.

<u>நாராயணாயபதம்:</u> முதல் வாக்கியத்தில் உள்ள 'நாராயணாய' என்ற பதத்தினால் ஈசுவரனிடம் தலையெடுக்கப் பெறாமல் மறைந்திருந்தனவும், புருஷகாரத்தினால் ஓங்கி நிற்பனவுமான வாத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌலப்பியம், ஞானம், சக்தி என்ற அறுகுணங்களும் சேதநன் எம்பெருமானைப் பற்றுவதற்குத் துணை செய்கின்றன என்பதை விளக்குகின்றது.

<u>திருவடிகளின் பெருமை</u>: 'சரணௌ' என்ற பதம் இனைத் தாமரை அடிகள் என்ற இரண்டு திருவடிகளைக் குறிக்கின்றது. பெருமானும், பிராட்டியும் அவனும் விடினும் திருவடிகள் விடாமல் தன்கழலாயிருக்கும், நம்மாழ்வாரும்,

> **'வண்புகழ் நாரணன்**
> **தின்கழல் சேரே'[43]**

என்று கூறியதையும் நினைவு கூறலாம்.

பிரபத்தி: இது ‘சரணாகதி’ எனப்படும் வாக்கினால் ‘என்னைக் காத்தல் வேண்டும்’ எனப் பிரார்த்தித்தல். கையினால் பகவானை அஞ்சலி செய்து இரட்சகனாகிய அவன் இருக்கும் இடத்திற்குச் செல்லுதல் ஆகிய இவ்விருவகையினால்பற்றினும், பலம் கைகூடுவதற்குக் குறை இல்லை. ஆயினும், ஞானத்தாலே வீடுபேறு எனக் கூறப்படுகின்றமையின் மனத்தினால் பற்றுதலே இங்கு வேண்டறபகாலதாகும்.[44]

மதுப்பின் பொருள்: இது துவயத்தின் இரண்டாவது வாக்கியத்தில் உள்ள ‘ஸ்ரீமத்’ என்பது. இந்தப் பதம் ‘பெரிய பிராட்டியாரோடு கூடி இருப்பவனுக்கு’ என்ற பொருளைத் தருகின்றது. ஆகவே, சேதநன் பிராட்டியும் பெருமாளும் சேர்ந்திருக்கும் நிலையில் ‘சரணம்’ அடைய வேண்டும் என்ற நிலையைக் குறிக்கின்றது. அதாவது இருவருக்கும் தொண்டு செய்தல் (கைங்கரியம் செய்தல்) என்பது குறிப்பு.

சரம சுலோகம்: சர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அகம் த்வா சர்வ பாப்வேவ்யோ மோட்சயிஷ்யாமி மாசுச:

என்பது சரம சுலோகம். பாரதப்போரில் பார்த்தனுக்குச் சாரதியாகிய பரந்தாமன் உபதேசித்தது இது. இதனை அப்படியே வைணவர்கள் மூன்றாவது மந்திரமாக எடுத்துக்கொண்டு விட்டனர். ‘தர்மங்களை எல்லாம் அறவே புறக்கணித்துவிட்டு என்னையே சரண் அடைக. பாவங்கள் அனைத்தின்றும் உன்னை நான் விடுவிப்பேன், வருந்தாதே’ என்பது இதன் பொருள். இந்த மந்திரத்தின் முதல் வாக்கியத்தில் சர்வ + தர்மாநீ + பரித்யஜ்ய + மாம் + ஏகம் + சரணம் + வ்ரஜ என்ற ஆறு பதங்களும், இரண்டாம் வாக்கியத்தில் அஹம் + த்வா + ஸர்வபாபேய்ப + மோட்ச + யிஷ்யாமி + மாசுச: என்ற ஐந்து பதங்களும் முப்பத்து இரண்டு எடுத்துகளும் உள்ளன. இந்தச் சரமசுலோகத்தில் ஒவ்வொரு பதத்தின் பொருளையும் பேராசிரியர் ரெட்டியார் ஆழ்வார் பாசுரங்களில் பொருத்திக்காட்டித் தெளிவாக விளக்குவர்.[46] இன்னும் இம்மந்திரம் சீவான்மா முத்திபெறத் துடிக்கச் செய்யும் பாங்கை எடுத்தோதும் வேதாந்த தேசிகரின்,

‘அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்
அம்புயத்தாள் உடன் அந்நாள் அவதரித்த
குறையாதும் இல்லாத கோவிந் தா!நின்
குரைகழற்கள் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய்
வெறியாகும் மலர்மகளும் நீயும் விண்ணில்
விண்ணவர்கள் அடிசூட இருக்கும் மேன்மை
குறையா வினையகற்றி அடிமை கொள்ளக்

குறகவொரு நந்நாள் நீகுறித்தி டாயே[47]

என்ற பாசுரத்ததை எடுத்துக்காட்டித் தெளிவாக்குவர்.

<u>பேராசிரியர் ரெட்டியாரின் வைணவ இலக்கியப் படைப்புகள்:</u> வைணவர்களின் சிறந்த பக்தி இலக்கியமாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், அஷ்டப்பிரபந்தம் ஆகிய பத்திப்பனுவல்களின் சாரத்தை 'விட்டு சித்தன் விரித்த தமிழ்', 'ஆழ்வார்களின் ஆராஅமுது', 'சடகோபன் செந்தமிழ்', 'கலியன் குரல்', 'பரகாலன் பைந்தமிழ்' என்ற ஆய்வு நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார். இவற்றில் ஆழ்வார்களின் உள்ளக்கிடக்கையையும், திவ்வியகவி பிள்ளைபெருமாள் அய்யங்காரின் உள்ளத்தையும் பளிங்கென மிகத் தெளிவாக விளக்குவார். அவற்றை ஈண்டு விளக்குதல் மற்றொன்று விரித்தலாக முடியும். இவை தவிர 'கண்ணன் பாட்டுத்திறன்' என்ற நூலில் பாரதிகாணும் கண்ணனை அவனுக்கும் சீவான்மாவுக்கும் 'நவவித சம்பந்தம்' போல் உள்ள பல்வேறு உறவுகளை எடுத்துக்காட்டி விளக்குவார். இதில் திருமந்திரத்தில் உள்ள நவவித சம்பந்தமும், ஆழ்வார் பாசுரங்களில் உள்ள வேறுவித சம்பந்தங்களும், பாரதியின் உள்ளத்தில் எழும் சில புதிய சம்பந்தங்களையும் எடுத்துக்காட்டி வைணவத் தத்துவங்களை எளியோரும் விளங்கிக் கொள்ளுமாறு விளக்குவார்.

<u>வைணவ சம்பிரதாயங்கள்</u>: சம்பிரதாயமாக உள்ள சிலவற்றை, பேராசிரியர் எடுத்துக்காட்டுவார்.

<u>வைணவ அதிகாரிகள்:</u> இவர்கள் அத்வேஷிகள், அனுகூலர்கள், திருநாமதாரிகள், சக்கராங்கணபரர்கள், மந்திரப்பாடிகள், வைணவர்கள், ஸ்ரீவைணவர்கள், பிரபந்நர்கள், ஏகாந்திகள், பரமைகாந்திகள் என்று பத்துவிதமாக பகுத்துக் காட்டப்பெறுவர். இவற்றின் விவரங்கள் எடுத்துக்காட்டப் பெறுகின்றன.[48]

<u>வைணவ இலட்சணங்கள்:</u> பராசரபட்டர் தம் திருவடிசம்பந்தம் பெற்ற ஒரு ஸ்ரீவைணவர்க்கு அனந்தாழ்வான் மூலமாக அருளிச் செய்தவை. 1) ஸ்ரீவைணவன் கொக்குபோல் இருப்பான், 2) கோழியைப்போல் இருப்பான், 3) உம்பைப்போல் இருப்பான் 4) உம்மைப்போல் இருப்பான் என்ற நான்கு வாக்கியங்கள்.[49]

<u>பஞ்சகம்ஸ்காரம்:</u> வைணவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன: அகத்தூய்மை, புறத்தூய்மை; அகத்தூய்மையாவது மனத்தில் உள்ள

காமம், குரோதம், மதம், இராகம், துவேஷம் முதலிய தீய குணங்களாகிய அழுக்கு நீங்கி எம்பெருமானிடத்தில் அன்புற்றிருத்தல். புறத்தூய்மையாவது, சங்கு, சக்கரம் முதலிய இலட்சணங்களைப் பெறுதல். இவை பஞ்சசமஸ்காரம் என்பதில் அடங்கும். சம்ஸ்காரம் என்றால் பதிவு என்பது பொருள். அதாவது அசுத்தத்தைப் போக்கி சுத்தத்தை மேற்கொள்ளுதல். இவை தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், யாகம், என்பன.[50]

அபசாரங்கள்: *1) பகவத அபசாரம்:* எம்பெருமானையும் பிற தெய்வங்களையும் ஒப்பக் கருதுதல், இறைவனுடைய திருமேனி இன்ன பொருள்களால் ஆகியவை எனக் கருதுதல், சுதந்திர நினைவு கொள்ளுதல், ஊர்திகள், காலணிகள் இவற்றுடன் திருக்கோவில்களில் நுழைதல், தண்டனிட்டு வணங்காது இருத்தல், ஒருகையால் அஞ்சலி செய்தல், அசுத்தம் செய்தல், வீண் சொல்லாடுதல், மகளிரோடு பரிகசித்தல், உரத்து நகைத்தல், திருமண்காப்பு, நடுவில் பஸ்மம் (விபூதி) முதலியவை இடுதல் ஆகியவை தீய எண்ணங்களும் பகவத அபச்சாரத்தை விளைவிப்பவை.

2) பாகவத அபச்சாரம்: இவை பன்னிரண்டு வகைப் பட்டிருக்கும். சென்ம நிரூபணம், சரீரநிரூபணம், பாகநிரூபணம், ஆச்ரம நிரூபணம், அவையனநிரூபணம், ஆலசிய நிரூபணம், வாசநிரூபணம், பந்து நிரூபணம், பிரகாச நிரூபணம், தோஷ நிரூபணம் ஆகிய பன்னிரண்டும் இவை விளக்கங்களுடன் தரப்பெற்றுள்ளன.[51]

திருமண் காப்பின் பெருமை: திருமண்காப்பு, நெற்றி, வயிறு, மார்பு, கண்டம், வலப்புறவயிறு, வலப்புயம், வலப்புறக் கழுத்து, இடப்புறவயிறு, இடப்புயம், இடப்புறக்கழுத்து, முதுகடி, பிடரி ஆகிய பன்னிரண்டு இடங்களில் இடம்பெறும் புண்ட்ரங்களாகும். இவற்றின் விவரங்கள் தெளிவாக விளக்கப்பெற்றுள்ளன.[52]

கோவில் வழிபாட்டு முறைகள்: இவை வைணவத் திருக்கோயில்களில் பாஞ்சராத்தினம், வைகானசம் என்ற இரண்டு வைணவ ஆகம அடிப்படையில் அமைந்தவை. வைகானசம், மரபு வழியாக வருபவை. பாஞ்சராத்தினம் ஆகம பயிற்சி உள்ளவர்கள் யாரும் செய்யலாம்.

முடிவு: இங்ஙனம் தெய்வத் தமிழில் (வைணவத்தில்) ஆன்மநிலை, இயற்கை நிலை, இறை நிலை, வீடு பேற்றை அடைய வழிகள், வீடுபேறு, மந்திரங்கள், சில சம்பிரதாயங்கள், இவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்த இயலில் கண்ட முடிவுகள்:

1. ஆன்மா எனப்படும் சித்து தெளிவாக விளக்கப்பட்டது. ஆன்மாக்களில் பத்தர், முத்தர், நித்தியர் என்று மூன்று வகைப்படுவர் என்பது தெரிவிக்கப்பெற்றது.

2. அசித்து (இயற்கை) எனப்படும் அசேதநம் என்ற தத்துவம் தெளிவாக்கப் பெற்றது. அது சுத்த சத்துவம், மிச்ரதத்துவம், சத்துவ சூனியம் என மூன்று வகைப்படும் என்று விளக்கப்பெற்றது.

3. வைணவத்தின் இறைநிலை தெளிவாக்கப்பெற்றது.

4. முழுமுதற் கடவுள் நாராயணனே என்று அறுதியட்டுக் காட்டப்பெற்றது.

5. சூக்குமமாக இருக்கும் சித்தும் அசித்தும் பருப்பொருளாக மாறுவதே படைப்பு எனவும், பருப்பொருளாக இருப்பது மீண்டும் நுண்பொருளாக மாறுவதே அழித்தல் என்றும் விளக்கப்பெற்றது.

6. சூக்குமநிலை காரணநிலை என்றும், பருப்பொருளாக உள்ள நிலை காரியநிலை என்றும் சுட்டப்பெற்றன. இவை சிலந்தியின் செயலால் எடுத்துக் காட்டப்பெற்றது.

7. இறைவனின் திருமேனி பரத்துவம் (பரமபதத்தில் இருப்பு), வியூகம் (திருப்பாற்கடலில் இருக்கும் இருப்பு), விபவம் (அவதார நிலைகள்), அந்தர்யாமித்துவம் (உள்ளத்தில் இருக்கும் இருப்பு), அர்ச்சை (திருமேனிகளில் இருக்கும் இருப்பு) என்று ஐந்து வகைப்படும் என காட்டப்பெற்றுள்ளது.

8. வீடுபேற்றிற்குரிய வழிகளாக சித்தேபாயம், சாத்தியோபாயம் என்ற இருவழிகள் உள்ளன என்பது தெரிவிக்கப்பட்டது. சித்தோபாயம் என்பது இறைவன் என்றும், சாத்தோபாயம் என்பது பக்தி நெறி, பிரபக்திநெறி என இருவகைப்படும் என்றும் எடுத்துக் காட்டப்பெற்றன. வீடுபேற்றினை விளக்கும் போக்கில் வீடு தனி உலகம் என்றும், அங்கு செல்லும் வீடுபேற்றில் சீவன் நிலை இன்னது என்றும் தெளிவாக்கப்பெற்றன.

9. வைணவ மந்திரங்களாக திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்று மூன்றும் சுட்டப்பெற்று விளக்கப்பெற்றன.

10. சம்பிரதாயங்களைச் சுட்டும் வகையில் வைணவ இலட்சணங்கள், பஞ்ச சம்ஸ்காரம், அபசாரங்கள், திருமண்காப்பு, கோவில் வழிபாட்டு முறைகள் (பாஞ்சராத்திரம், வைகாநசம்) ஆகியவை விளக்கப்பெற்றன.

அடிக்குறிப்புகள்:

1. வைணவசெல்வம்-முதல் இயல் - (தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு)
2. உலகவாழ்வில் ஆழங்கால் பட்டு ‘உலோகாயத்தில் உழல்பவர்கள்’’ புபுட்சுகள் என்று வழங்கப்படுவர்.
3. ‘மும்மூட்சுபடி’’ காண்க.
4. திருவரங்கக் கலம்பகம்: பாடல் 63
5. ‘தத்துவத்திரயம்’’ என்ற நூலில் உள்ள ஆன்மாவைப்பற்றிய கருத்துக்கள் கீதை இயல்: 2லும் காணப்படுகின்றன. (இயல்-2 சாங்கிய யோகம்)
6. தே.பி. பாசுரம்-26
7. முத்திநெறி: கடிதம்-4
8. மேலது கடிதம் - 5
9. மேலது, பக்.45-47
10. தே.பி. பாசுரம்-80
11. தத்துவத்திரயம் ஈசுவரப் பிரகரணம்-12
12. முத்திநெறி-கடிதம்-7: பக்.56-64
13. மேலது கடிதம்-9
14. உலகநெறியில் ஆழங்கால்பட்டிருப்பவர்கள் புபுட்சுக்கள் எனப்படுவர்.
15. இராமா நுற்.66
16. முத்திநெறி, பக்.100-104
17. திருவாய் 2 : 8 : 4
18. அறத்துப்பால்: உரையாயிரம்: திருக்குறள் உரை: பரிமேலழகர்
19. சிறியதிருமடல்: கண்ணி 7.8
20. பெரிய திருமடல்: கண்ணி 16.17
21. பெரியாழ்.திரு. 4.9:3
22. அர்ச்சில் என்பது அங்கியங்கடவுள்; நெருப்புக்கு இறை; ஆன்மா இவ்வுடலைவிட்டு வெறியேறி ஆக்கும் உடலுடன் செல்லுங்கால் அக்கின் தேவதை, சுக்கிலபட்ச தேவதை, உத்திராயண தேவதை, வர்ஷதேவதை, வாயுதேவதை, கதிரவன், திங்கள், மின்னல் தேவதை, வருணன், இந்திரன், பிரஜாபதி ஆகிய ஆதிமூலர்கள் வழிகாட்டிச் செல்வர். வைணவச் செல்வம்: பக்.102
23. தே.பி. 133-151
24. முத்திநெறி: 149-151
25. மேலது, கடிதம்-19
26. மேலது, கடிதம்-20இ 29
27. சடகோபன் செந்தமிழ், பக்.182-183
28. மேலது, பக்.187-191

29. 'விஷயகாமம்'' - மனிதர்கள் மங்கையர் மீது கொள்ளும் காமம் விஷயகாமம். அவர்கள் மாதவன் மீது கொள்ளப் பெறும் காமம் பகவத் விஷயகாமம்.
30. சிலநோக்கில் நாலாயிரம், பக்.211-250
31. மேலது, பக்.251-257
32. பரபக்தி - எம்பொருமானை நேரில் காணவேண்டும் என்ற ஆவல். பரஞானம் - எம்பெருமானை நேரில் காணல். பரமபக்தி - எம்பெருமானை மேன்மேலும் இடையராது அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல். அன்றியும் எம்பெருமானோடு கூடினபோது சுகிக்கும்படியாகவும், பிரிந்தபோது துக்கிக்கும்படியாகவும் இருப்பது பரபக்தி. பகவானுடைய முழுமையான நேர்காட்சி அவனுடைய அனுபவம் பெறாவிடில் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல மூச்சு அடங்கும்படி இருத்தல் பரமபக்தி. இவ்வாறு பண்டைய ஆசிரியர்கள் நிலைப்படுத்துவர்.
33. இறையனால் களவியல்-நூற்பா ஒன்றன் உரை
34. கண்ணன் பாட்டுத்திறன்: இறைவனுடன் நமது உறவுகள், ப.15
35. முத்திநெறி, கடிதம்-30
36. மும்மூட்சுபடி,-118
37. ஸ்ரீவச, பூஷணம் - முதற்பிரகரணம் காண்க
38. முத்திநெறி-கடிதம்-31
39. மேலது, ப.254
40. மும்மூட்சுபடி,-127
41. ஸ்ரீவச, பூஷணம்-14
42. மும்மூட்சுபடி,-145
43. திருவாய், 1 : 2 : 10
44. மும்மூட்சுபடி,-144
45. கீதை-18-66
46. முத்திநெறி-கடிதம்-40-46
47. தே.பி.-108
48. முத்திநெறி-பக்.367-369
49. இவற்றின் விளக்கங்களை முத்திநெறி, பக்.369-371ல் காண்க
50. வைணவச்செல்வம்-பக்.962-971 மேலும் முத்திநெறி ப.366 காண்க
51. மேலது, பக்.382-391
52. முத்திநெறி-பக்.383-385

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ V

இயல் - 10

தெய்வத் தமிழ் (சைவம்)



பகுதி 5 :<>: இயல் – 10

தெய்வத் தமிழ் ~ சைவம்

சைவம் வேதங்களையும் தன் அடிப்படை நூல்களாக கொண்டுள்ளது என்பர். வேதங்களும் விசாகமங்களும் சிவபெருமானால் அருளப்பட்டவை என்னும் நம்பிக்கையே இதற்குக் காரணம். பரமசிவனால் செய்யப்பட்டமைப்பற்றியே வேதங்கட்குப் பிரமாண உண்மை துணியப்படும்; அம்முறையால் சிவாகமங்களும் பிரமாணமாதல் துணியப்படும் என்பர் சிவஞான முனிவர்.[1] வேதாகமங்கள் சிவபெருமானால் அருளப்பட்டவை என்பதைச் சைவசமயத் தலைவர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

தொகுத்தவன் அருமறை அங்கம்; ஆகமம்
வகுத்தவன் வளர்கொளில் கூகமேகினான்[2]

என்பது சம்பந்தர் தேவாரம். ‘வேதமொரு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல’[3] என்பது திருமந்திரம். சிவஞான சித்தியாரும் இதே கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது.[4] இதனோடு வேதங்களைச் சிவபிரானின் மூச்சுகாற்றுகளாகவும் பெரியோர் கூறுவர். இங்கு வேதங்கள் என்று கூறப்படுவன வியாசர் தொகுத்ததாகக் கூறப்படும் இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என்பனவே. திருமுறைகள் இவற்றை விதந்து கூறுதலும் உண்டு. ‘இருக்கொடு தோத்திரம் இயம்வினர் ஒருபால்’ (திருவா.369) என்பது திருவாசகம். ‘சாந்தோக சாமம் ஓதும் வாயானை’[5] என்பது அப்பர் பெருமானின் திருவாக்கு.

‘மறைநான்கும் விழித்துகந்தீர்’ என்று தம்பிரான் தோழர் ‘சுருங்கா மறைநான்கினையும் ஓதியன், உம்பர்தங்கோன்’ என்றும் பாடுவர்.[6] மணிவாசகப் பெருமானும் ‘வேதமொழியர்’, ‘வெண்ணீற்றர்’, ‘செம்மேனியர’’ என்று பேசுவர்.[7]

திருமூலரும்,

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தில்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள
. . . . வேதத்தை
ஓதியே வீடு பெற்றார்களே[8]

என்று மொழிவர். வேதத்தின் ஞானபாதமாகப் பேசப்படும் உபநிடதங்களிலும், ‘சுவேதாசுவதர’ உபநிடத்திலும் சிவபரத்துவத்தைப் பேசும் சைவ உபநிடதமாகக் குறிப்பிடப்பெற்றிருப்பதைக் காணலாம்.[9]

பிற்காலத்தில் சைவ உபநிடதங்கள் பல தோன்றியுள்ளமையும் சைவர்கள் வேதகால வழியே தங்கள் சிந்தனையை விளக்க முயன்றதையும் காட்டும். வேதங்கள் சிவபரதத்துவத்தை பேசுவன எனக்கூறியதோடு அமையாது வேதமந்திரங்களைச் சிவவழிபாட்டிற்குரிய மந்திரங்களாகவும் கொண்டனர். யசூர் வேதத்தில் உள்ள திரு உருத்திரத்தை வழிபட்டு உய்யும் மந்தரப்பகுதியாகக் கொள்ளப்பட்டமையினை இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம். இக்கருத்தினை சேக்கிழார் பெருமான் உருத்திரபசுபதி நாயனாரைக் குறிப்பிடும்போது எடுத்துக்காட்டுவர்.[10] இவ்வழிபாட்டினை சிவபெருமான் விரும்பி ஏற்றுக் கொண்டார் என்பதையும் அப்பெருமான் பிறிதொரு பாடலால் விளக்குவார்.[11] வேத மந்திரத்தால் சிவபெருமானை வழிபட்ட செய்தியினைத் திருமுறைகள் பலவற்றிலும் காண முடிகின்றது. மேலும் வேதங்களே சிவபிரானைத் தொழுதவாறு உள்ளன என்ற கருத்தில்

‘வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லைக் கண்டேனே’’[12]

என்ற திருவாசகப் பகுதி அமைந்துள்ளது. மேலும் திருத்தொண்டர்கள் தாங்கள் மேற்கொண்டுள்ள சிவநெறியினை வேதசாரமாகவே கொண்டமையினைச் சேக்கிழார் பெருமான் திருநீல நக்கரைக் கறிப்பிடுவதன்வழி அறியலாம்.[13]

<u>ஆகமங்கள்:</u> சில ஆகமங்கள் சிவபெருமானால் அருளப்பெற்றவை என்பர். ‘அண்டர் தமக்கு ஆகமநூல் மொழயும்எம் ஆதியை’[14] ‘மன்னுமாம் மலை மகேந்திரமதனில் சொன்னவாகமம் தோற்றுவித்தருளியும’[15] என்ற திருமுறைத்தொடர்களும் இந்த உண்மையினை உணர்த்தும். இவ்வாகமங்கள் சிவபெருமான் உமாதேவிக்கு கூறியவை என்பதை,

‘இணையி லாஇடை மாமரு தில்எழு
புணையி லாகமம் சொல்லும்தன் பங்கிக்கே’’[16]

என்னும் அப்பர் தேவாரமும் உணர்த்தும்.

சிவபெருமானே ஆகமவடிவாக விளங்குகின்றான் என்ற கருத்தில் ‘ஆகமம் ஆகிநின்று அன்னிப்பான் தாள்வாழ்க’[17] என்பர் மணிவாசகப்பெருமான். ஆகமங்களின் எண்ணிக்கையை இருபத்தெட்டு என்பர். சிவபெருமானை வேதத்தோடு சேர்த்தும், வழிபாட்டினை ஆகமத்தோடு சேர்த்தும், இரண்டனையும் இணைத்தும் கூறலே

சைவத்தின் பொதுவான போக்கு எனக் கொள்ளல் வேண்டும். வேத மந்திரத்தால் வழிபாடு நிகழ்த்துவதைக் குறிப்பிட்டாலும், ’ஆகமலாதிவழி’ பூசையினை வற்புறுத்தலே சிறப்பான கூறாக உள்ளது.

புராண இதிகாசங்கள்: வேதாகமங்களே அன்றிச் சிவபரத்துவத்தைப் பேசும் புராண இதிகாசங்களும் சைவத்திற்குப் பிரமாண நூல்களே. இந்து சமயத்தினர் பொதுவாக பதிணென் புராணங்கள் என்று கூறினாலும் சிவபரத்துவத்தைப் பேசுவனபற்றியே சைவர்கள் தங்கள் பிரமாண நூல்களாகக் கொள்வர். சைவ புராணம், விஷ்ணு புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்க புராணம், கந்தபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மச்சபுராணம், பிரம்மாண்டபுராணம் என்னும் பத்தையும் சிவபுராணங்களாக் கொள்வர். சைவ புராணங்களே சத்துவ குணப்புலப்பாடாகக் கொண்டு இன்பத்திற்கும் ஞானத்திற்கும் இடமாக உள்ளவை என்பர். இப்புராணங்கள் வியாசரால் இயற்றப்பட்டனவாகக் கொள்ளப்படினும் ‘ஆதரே’ உலகிற்கு உதவியதாகக் கூறுவர். சிவபுராணங்களைக் கேட்பதால் உயிர்கள் சிவகதி அடையும் என்ற நம்பிக்கையையும் சைவர்கள் கொண்டுள்ளனர் என்பதைக் ‘காசிஇரகசியம்’ போன்ற நூல்களால் அறியப்படும். பொதுமக்களிடம் சிறந்த பக்தி உணர்வை எழுப்புவதில் சிவபுராணம் பேராற்றலோடு விளங்குகின்றது. திருமுறை ஆசிரியர்கள் பலரும் சிவபுராணங்களைக் கொண்டே சிவபரத்துவத்தை வற்புறுத்துவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. சூதமுனிவரின் பணியினை ஞானசம்பந்த பெருமானும் குறிப்பிடுவர்.[18]

சிவபுராணங்களேயன்றி இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களும், இராமனுடைய சிவபக்தியினையும் (இராமாயணம்), கண்ணன், அருச்சுனன் இவர்களுடைய சிவபக்தியினையும் விளக்கும் என்பர். இதிகாச மாந்தர்கள் பலர் சிவன்கோயிலை வழிபட்டு உய்ந்ததாகக்கொண்டு எழுந்த தல புராணங்களும் இதிகாசங்களில் சைவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டும். இன்றும் சில இடங்களில் சிவன் கோயில்களில் பாரதம் படிக்கச்செய்யப்படும் ஏற்பாடுகளும் ஈண்டுக் குறிப்பிடத்தகவை.

திருமுறைகள்: சித்தாந்த நூல்கள்: வேதாகமங்களை அடுத்து தமிழைத் தாய்மொழியாகவுடைய சைவமரபினர் திருமுறைகளிலும் சித்தாந்தக் கோட்பாட்டிலும் பிடிப்புடையவர்கள். அவற்றோடு மெய்கண்ட நூல்களையும் பிரமாணநூல்களாகக் கொள்வர். அவ்வாறு கொள்வதற்குக் காரணம் அவை இரண்டும் வேதாகமங்களின் வழித்

தோன்றியவை என நம்புவதாலேயாகும். வேதாகமங்களின் வழிநூல், சார்புநூல்களாகவே திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் இவற்றைக் கொள்வது மரபு.

வேதத்தின் வழிநூல் திருமுறை: ‘தேவாரம் வேதச்சாரம், திருவாசகம் உபநிடதச்சாரம்’ என்றும் சிலர் கருதும் சிந்தனைகளும் ஏற்கத் தக்கவை. ஆகமத்தின் வழிநூல் மெய்கண்ட சாத்திரம் என்றும் கூறலாம். சாத்திரங்கள் இதனை வெளிப்படையாகவே கூறும்.[19] திருமுறைகள் சைவர்கள் அனைவருக்கும் பொது. ‘சித்தாந்த நூல்கள் ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டினர்க்கே உரியவை’ எனலாம். இந்த நூல்கள் அனைத்தும் சிவபிரானால் அருளப்பட்டவை எனக் கொள்ளப்படாவிட்டாலும், சிவனைக்கண்டு சிவாநுபவத்தில் திளைத்த சிவஞானியர்களால் அருளப்பெற்றவை என்பது சைவர்களின் நம்பிக்கை. இவற்றுள் திருமுறைகளை தோத்திரங்கள் என்றும், சித்தாந்த நூல்களைச் சாத்திரங்கள் என்றும் கூறும் மரபும் உண்டு. தோத்திரம், சாத்திரம் என்பன சிவாநுபவத்தை இருவேறு நிலைகளில் விளக்குவன எனலாம். தோத்திரம் இறைவனைப் புகழ்ந்து பாடி தெய்வாநுபவத்தை உணர்வு நிலையில் வெளிப்படுத்துகின்றன. சாத்திரங்களோ தெளித்துக் கூறி அறிவுநிலையில் விளக்க முற்படுகின்றன. தோத்திரங்கள் (திருமுறைகள்) பன்னிரண்டு என்பதைப் பேராசிரியர் ரெட்டியார் எடுத்துக்காட்டுவார்.[20] சாத்திரங்கள் பதினான்கு என்பதையும் இவர் தெளிவாக்குவார்.[21]

மேற்கூறிய கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு பேராசிரியர் ரெட்டியார் ஐந்து நூல்களை எழுதியுள்ளார். அவை 1) சைவ சமயவிளக்கு, 2) தம்பிரான் தோழர், 3) நாவுக்கரசர், 4)ஞானசம்பந்தர், 5) மாணிக்கவாசகர். இந்த நூல்களை எடுத்துக்கொண்டு சைவசமய இலக்கியங்களின் விரிந்த பார்வையை ஆழ்ந்த நோக்கைப் பேராசிரியர் எவ்வாறு மேற்கொள்கின்றார் என்பதைக் காணலே இவ்வாய்வாளரின் நோக்கமாகும்.

தத்துவங்கள்: பேராசிரியர் எழுதி வெளியிட்டுள்ள நூல்களில் சைவ சமய தத்துவங்கள் பற்றி ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளமை ஈண்டு எடுத்துக்காட்டப்பெறுகின்றது. சைவ சித்தாந்தத்தில் முடிந்த முடிவாகக் கொள்ளப்படும் தத்துவங்கள் (உண்மைப் பொருள்கள்) மூன்று. அவை பதி, பசு, பாசம் என்று வழங்கப்பெறும். இவற்றுள் பதி என்பது இறைவன்; கடவுள். ‘பரமான்மா’ எனப்படுவதும் இதுவேயாகும். பசு என்பது ஆன்மா. சீவான்மா எனப்படுவதும் இதுவே.

பாசம் என்பது தளை; அதாவது உயிரைப் பிணித்துள்ள கட்டு. தமிழில் இவை முறையே இறை, உயிர், தளை என்று சொல்லப்படும். சைவசித்தாந்தப்படி இவை மூன்றும் தனித்தனிப் பொருள்களாகும். இவை எந்தப் பொருள்களின் காரியமும் அன்று. இந்த மூன்று பொருள்களுக்கும் எந்நாளிலும் தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை. தோற்றமும் முடிவும் அற்றப் பொருள் 'அநாதி' ஆகும். அதாவது, ஆதி இல்லாதது. ஆதி இல்லையாதலின் அந்தமும் இல்லை. இதனை,

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி'[22]

என்று தெளிவுபடுத்துவர் திருமூலர்.

இவற்றுள் பதிப்பொருள் ஒன்றேயாகும். இரண்டாவது இல்லை. பசுக்கள் எண்ணில. பாசம் மூன்று. இவை ஆணவம், கண்மம், மாயை என்பன. இவை உயிரைக்கட்டுப்படுத்துதல் பற்றிப் 'பாசம்' எனப்படுதல் போல, உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்றலாலும் பின்னர் அகற்றப்படுதலாலும் 'மலம்' எனவும் வழங்கப்பெறும். மலம்-அழுக்கு, மும்மலங்கள் என்ற வழக்கும் ஈண்டு அறியப்படும். இந்த மூன்று பொருள்களும் 'தோற்றமும் அழிவும்' இல்லாது என்றும் 'உள்ள பொருள்கள்' என்ற உண்மை 'சற்காரியவாதம்' என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. இது பின்னர் விளக்கப்படும். இந்த மூன்று பொருள்களும் உள்ளன என்பதால், இந்த மூன்றையும் சமமாகக் கருதுதல் கூடாது. இதனைப் பேராசிரியர் மிகத் தெளிவாக விளக்குவர். 'ஒரு நாட்டில் அரசன் என்று உள்ளானோ அன்றேகுடிகளும் உள்ளனர் என்று கொள்ளும்போது, அரசனும் குடிகளும் சமம்' என்று கொள்ளுவது பொருந்தாது. அங்ஙனமே 'உலகில் மக்கள் என்று உள்ளனரோ அன்றே விலங்கு முதலியனவும் உள்ளன' என்று கொள்ளும்போது மக்களும் விலங்கு முதலியனவும் சமம் என்று கொள்ளுதல் பொருந்தாது அன்றோ? இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளிலும், பொருத்தமின்மையைக் காண்பது போலவே, 'பதி உண்டு; அன்றே பசுவும் பாசங்களும் உள்ளன' என்பதனால் முப்பொருள்களும் சமம் ஆமாறு இல்லை என்பது வெள்ளிடைமலை. ஆகவே, 'முப்பொருளும்' அநாதி, நித்தியம் என்பதனால் இறைவனை 'முதற்பொருள்' என்று கொள்ளற்குத் தட்டில்லை என்பது தெள்ளிதின் உணரப்படும்.[23] இந்த மூன்று பொருள்களும் 'அநாதி' நித்திய

பொருள்கள் என்ற உண்மையைப் பேராசிரியர் ‘சற்காரியவாத’ முறைப்படியும் விளக்குவார்.[24]

1.இறைநிலை: இறைவனைப்பற்றிய பல்வேறு கருத்துகள் பேராசிரியர் ரெட்டியார் நூலில் பின்வருமாறு விளக்கப்படுகின்றன. 1. கடவுள் என்ற தனித்தமிழ்ச் சொல்லின் பொருளிலேயே சைவ சித்தாந்தக் கருத்து பெரிதும் அடங்கியுள்ளது என்று காட்டுவரா். இந்தச் சொல்லுக்கு மூன்றுவிதமான பொருள் கூறலாம் என்று எடுத்துக்காட்டுவார். (அ) கடவுதல் என்றால் இயக்குதல்; எனவே, கடவுள் என்பதற்கு உலகை இயக்குபவர் என்பது கருத்து. (ஆ) கடவுள் என்பதற்கு உள்ளத்தைக் கடந்தவர் என்றும் பொருள் கொள்ளலாம். (இ) கடவுள் உலகைக் கடந்தவர்; அதே சமயம் உலகுள்ளும் உள்ளவர் என்றும் கொள்ளலாம். உலகை இயக்குபவன் இறைவன். அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன்; அதே சமயம் அவன் உலகினையும் கடந்து நிற்பவனும் ஆவான் என்ற கருத்துகள் சித்தாந்தக் கருத்துகள் ஆகும். 2.ஒரு பொருள் உண்டு என்பதை மெய்ப்பிக்க மூன்று வழிகள் உண்டு. தத்துவ மொழியில் அவை பிராமணங்கள் எனப்படும். தமிழில் அவைகளை அளவை எனலாம். பிரத்தியட்சம் (காட்சி), அநுமானம் (கருதுதல் அல்லது முடிவுக்கு வருதல்), ஆப்தவாக்கியம் (பெரியோரது பெருமொழிகள்) ஆகிய மூன்றுமே பிரமாணங்கள். சைவசித்தாந்தம் சிறப்பாக ஆகமப்பிரமாணத்தையே முக்கியமாகக் கொள்ளுகின்றது.

சற்காரியவாதம் என்று கருத்து இவர்களுக்குக் கைகொடுத்து உதவுகிறது. காணப்பட்ட உலகம் முன் ஒடுங்கிய நிலையில் காணப்படாத நுண் (சூக்கும) நிலையில் இருந்தது. பின்னர் காணப்படும் தூல நிலையை அடைந்துள்ளது. இனி, முன்போலவே ஒடுங்கிய நுண்ணிலையை அடையும், ஆகவே, ‘உலகம் யாதேனும் ஒருநிலையில் உள்ளதே அன்றி இல்லாத ஒழிவது இல்லை’ என்பது புலனாகும். சற்காரியவாதத்தின் அடிப்படையில் சற்காரியவாதத்தைச் சாரந்து ‘உள்ளது என்றும் அழிவது இல்லை’ என்றும் சொல்லப்படும். உள்ளது எக்காலத்தும் உள்ளதே; அது என்றும் இல்லாதல் இல்லை. ஆகவே, ‘தோற்றம்’ என்பதும் ‘அழிவு’ என்பதும் அவற்றையுடைய பொருள்களின் நிலைமாற்றங்களேயன்றி வேறல்ல என்பது தெளிவு. உலகம் என்பது ‘காரணப் பிரபஞ்சம்’, ‘காரிய பிரபஞ்சம்’ என இருவகைப்படும். இறைவன் காரிய பிரபஞ்சத்தை காரணப் பிரபஞ்சத்திலிருந்து தோற்றுவித்துப் பின்னர் அதிலேயே ஒடுக்குவதன்றி

காரணப் பிரபஞ்சத்தை தோற்றுவித்தல் இல்லை. எனவே காரணப் பிரபஞ்சம் 'அநாதிநித்தியம'. இதனால் உலகம் உள்பொருள் என்பது தெளிவு. 3. உலகத்திற்கு கருத்தா ஒருவன் உண்டு என்பதும் ஈண்டு கருதத்தகும். 'இல்லது தோன்றாது' என்பது போல 'உள்ளது அதனை தோற்றுவிக்கின்றன'. 'முதல்வன் ஒருவன் இல்லாமல் தோன்றாது' என்பதும் ஒரு பேருண்மை. இதனால் (அ) காரியப் பொருள்களுக்குக் கருத்தா இன்றியமையாமை என்பது தெளிவு. சற்காரியவாதம் அறிவும் அறிவில்லாததும் வேறே என்று கூறுகிறது. உள்ளது தோன்றுமே அன்றி இல்லது தோன்றாமையின் அழிவில்லாத பொருளில் அழிவு என்றும் தோன்றுவதில்லை என்று தெரிகிறது. உயிர்கள் அறிவுடையனவாயினும் அவ்வறிவு உடம்போடு கூடியபின்னரே விளங்கப்படும் தன்மை உடையது. இதனால் உடம்பில்லாத உயிர்கள் உடம்பையோ மற்றொன்றையோ தோற்றுவித்தல் இயலாதது. ஆகவே (ஆ) பேரறிவுப் பொருளாகிய இறைவனே உலகத்திற்கு கருத்தா ஆவான். (இ) உலகம் முத்தொழில்களையுடையது என்பது பிறிதோர் உண்மை. அதாவது தோன்றல், நிற்றல், அழிதல் என்பவை அவை. இதனை விளக்க மெங்கண்டார் மூன்று ஏதுக்களை கூறுவார். அவை, அவயவப்பகுப்புடமை, சடமாயும்பலவாயும் இருத்தல், சுட்டி அறியப்படுதல் என்பவையாகும். இந்த மூன்றையும் பேராசிரியர் தன் நூலில் விளக்குவார்.[25] இவற்றால் உலகம் முத்தோழில் உடைமையால் உள்பொருளே என்பதும், உளதாய் தொழிற்படும் உலகத்தை அவ்வாறாகத் தொழிற் படுத்தும் கருத்தா ஒருவன் உளன் என்பதும் ஐயமின்றிப் பெறப்படுகிறது. (ஈ)ஆகவே, உலகிற்கு முதல்வன் ஒருவனே அன்றி பலர் இலர். 4) மெய்கண்ட தேவநாயனார் சங்காரகாரணாயுள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்று கூறுவார்.[26] இன்னும் 'சங்காரகாரகன்' என்னும் திருப்பெயர் மூவரிலும் மேம்பட்டவனாய சிவபெருமானையே குறிக்கும் என்றும் சொல்லுவர். இதனை மெய்கண்டார் ஒரு வெண்பாவில் விளங்கக் கூறுவார்.[27] இக்கருத்தை சமரச நோக்குடைய கம்பனும்,

> **'தீபொய்த்த அனைய செங்கண் அரக்கரை முழுதும் சிந்தி,**
> **பூமொய்த்த கரந்தர் ஆகி விண்ணவர் போற்ற நின்றான்;**
> **பேய்மொய்த்து, நரிகள் ஈண்டி, பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்**
> **ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற்று இறைவன் ஒத்தான்'**[28]

என்று விளக்குவான். எனவே, உலகத்தைப் படைத்துக்காத்து அழிக்கும் முதற்கடவுள் ஒருவன் உளன் என்பதையும், அக்கடவுள் சிவபெருமானே என்பதையும், அயன் அரி அரண் என்னும் மூவரும்

அவன் ஆணைவழி ஒவ்வொரு தொழிலைச்செய்யும் அதிகாரமூரத்திகள் என்பதையும் சித்தாந்தம் வலியுறுத்தி நிலைநாட்டும்.

<u>பதியின் இரண்டு நிலைகள்:</u> பதி, பேராற்றல் வாய்ந்தது. சுதந்திரம் உடையது. எந்தப்பொருள் சார்பினாலும் மாறுபடாமல் ஒரேபெற்றியதாய் இருப்பது, பதியின் நிலைகளைச் 'சொரூப இலக்கணம்' என்றும் 'தடத்த இலக்கணம்' என்றும் வழங்குவர் சித்தாந்திகள்.[29] பதி பிறிதொன்றை நோக்காது, தன்னையே தான் நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகளே பதியின் சொரூப இலக்கணமாகும். பதி உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகள் தடத்த இலக்கணமாகும். உயிர்களும் 'உலகம்' என்பதனுள் அடங்கும்.

<u>சொரூப இலக்கணம்</u>: பதியின் சொரூபநிலை, குணம் குறிகளைக் கடந்த நிலை. பதி ஒன்றே, அதாவது அது ஏகமாய் இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலானது. அது காணப்படும் உருவமற்றது. காலம் இடம் இவற்றால் அளவுபடுத்தப் படாதது; ஆன்மாக்களுக்கு அஅறிவாய் நிற்பது; சலிப்பற்றது. அளவுபடாததால் போக்குவரவாகிய அசைவு இல்லாதது; காட்சிக்கும் கருத்திற்கும் அப்பாற்பட்டது.[30] தாயுமான அடிகள் 'சிவன் எனத் தகுவோன்' என்று கூறும்பாடலில்[31] பதியின் இலக்கணம் அமைந்திருப்பதைக் காட்டுவர் பேராசிரியர். சைவாகமங்கள் அளவை முறையில் எடுத்துக்காட்டும் சிறப்பியல்புகள் எண்குணங்களாகும்.[32] இந்த சிறப்பியல்புகள் சொல்லப்படும் இடத்தில் சிவன், 'பரசிவம்' என வழங்கப்படும். தாயுமான அடிகளின் 'பரசிவ' வணக்கம் கூறும் முதற்பாடலில் சிவத்தின் 'சொரூப இயல்பு' நுவலப்பெற்று இருப்பதாக எடுத்துக்காட்டுவர் பேராசிரியர்.

<u>தடத்த இலக்கணம்:</u> இது குறிகுணங்களோடு கூடிய நிலை. தன்னையே நோக்கி நிற்கும். 'பரசிவம்' அந்நிலையின்று நீங்கி உலகத்தை நோக்குங்கால், தன் சிறப்பியல்புகளில் ஒன்றாகிய பெருங்கருணை காரணமாக உயிர்களின்பொருட்டுத் தானே தனது விருப்பத்தால், தனது ஆற்றலைக் (சக்தியை) கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாக இருக்கும். இந்த நிலைகளே பதியின் தடத்த இலக்கணம். பதியின் தடத்தநிலைகள் யாவும் அதன் சக்தியால் ஆவனவாகும். இதனால் சொரூபநிலையில் பதி 'சிவம்' என்றும், தடத்தநிலையில் 'சக்தி' என்றும் பேசப்படும். சொரூபநிலையில் சக்தி செயற்படாது அடங்கியிருத்தலால் பதி, 'சிவம்'

என ஒன்றேயாய் இருக்கும். சக்தி செயற்படும் தடத்தநிலையில் சிவம் அதனோடு அச்செயலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் 'சிவமும் சக்தியும்' இரண்டாய்-அம்மை அப்பனாய்-மாதொரு பாகனாய்-தையல்பாகனாய்-இரண்டாய்த் தோற்றம் அளிக்கும். இந்த நிலைகள் ஆளுடைய பிள்ளையால் பாடலிலும், புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலிலும் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.[33]

தடத்த நிலையில் பதி, சக்தியினால் பலநிலைகளையுடையது. இந்த நிலையில் அதற்கு உருவம் உண்டு. தொழில் உண்டு.[34] பதி உலகத்தை நோக்குங்கால், பராசக்தி மேற்கொள்ளும் பல்வேறு சக்தி நிலைகள் ஆதி சக்தி, திரோதான சக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்று இவை 'பஞ்சசக்திகள்'' என தொகைநிலைப்பெற்றுத் திகழ்வதையும், பேராசிரியர் மிக அழகாக விளக்குவார்.[35] பாரதியாரின் சக்திபற்றிய பாடல்களையும் இதே ஒளியில் காட்டுவார்.[36] இந்த சக்திநிலையில் அவை பெறும் பெயர்களை சிவம், சக்தி, சதாசிவம், மகேசுவரன், வித்யேசுவரன் என்ற பெயர்களைப்பெற்றுத் திகழும்[37] என்பர் பேராசிரியர்.

<u>**முத்தொழில்கள்:**</u> இறைவனது முத்தொழில்களை சித்தாந்தம், படைத்தல், காத்தல், அழித்தல் என விளக்கும். கம்பன் போன்ற கவிஞர்கள் இறைவனின் இந்தச் செய்கையை 'அலகிலா விளையாட்டு'[38] என்கின்றனர். மணிவாசகர் பெருமானும் 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'[39] என்ற அருள்மொழியாலும் விளக்குவார். 'விளையாட்டு' என்பது சிறிதும் வருத்தமின்றி மிக எளிதில் செய்வது என்ற பொருளில் வாதவூரரின் திருமொழியும் இதற்கு அரண் செய்யும்.[40] இறைவன் புரியும் தொழில்கள் யாவும் ஆருயிர்களின் நலத்தின் பொருட்டே என்பது தெளிவு, உலகம் சடம், அறிவில்லாதது; உயிர், சித்து, அறிவுடையது. இந்த இரண்டு பொருள்களையும் ஒன்றுபடப்பிணைத்து வைப்பதே படைத்தல். மாயையாகிய சடப்பொருளிலிருந்து தோற்றுவிக்கப்படும் உலகம், தனு, கரணம், புவனம், போகம்[41] என நான்கு வகைப்படும். வினையின் காரணமாகத்தான் பொருள்களை நுகரும் விருப்பம் எழுகிறது. விருப்பத்திற்கு ஏற்பட படைத்தலால் வினை நீங்குதற்கு உரிய வழியை அடைவிப்பது படைத்தலின் பயனாகின்றது. இறைவன் அருளிய 'தன கரண புவன போகங்களை' 'அழியாமல் நிறுத்திப் பயன்படச் செய்வதே' காத்தல் ஆகும். ஆகவே உயிர்கள் தம் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குரிய வழியில் நின்று, அதனை அங்ஙனமே

நிறைவித்துக்கொள்ளத் துணைபுரிவதே ‘காத்தல்’ என்பது தெளிவு. வினை நீக்கத்திற்கு உரித்தாகிய வழியில் நின்று வினை நீங்கப் பெறுதலே காத்தலின் பயனாகின்றது. இங்ஙனம் இம்மை, மறுமை உலகங்களில் இன்பங்களை நுகருதற்குரிய உடம்புகளை எடுத்துப்பிறந்து, பின் இறந்துழலும் நிலையின்றும் நீங்கிச் செயலற்று இருக்குமாறு தனு, கரண, புவன, போகங்களைப் பிரித்துவிடுதலே ‘அழித்தல்’ ஆகும். ஆகவே, பிறப்பு இறப்புகளில் உழன்ற இளைப்பு நீங்குதலே அழித்தலின் பயனாகின்றது. உயிர்களின் அறிவை மறைப்பது ஆணவ மலம்.[42] இதன் மறைக்கும் ஆற்றலைத் தூண்டி, மாயை கண்மங்களால் உலக இன்பத்தைத் தோற்றுவித்து, இறைவன் உயிர்க்கு தன்னைக் காட்டாமல் உலகத்தையே நோக்கி இருக்கச்செய்தல் ‘மறைத்தல்’ ஆகும். இச் செயலால் ஆணவ மலத்தின் ஆற்றல் நாளடைவில் குறைந்து ஒடுங்கிவிடும். இதுவே மறைத்தலின் பயனாகின்றது. ஆணவ மலத்தின் ஆற்றல் ஒடுங்கியவுடன் உயிரகட்கு இறைவனை நாடும் விருப்பம் நிகழும். அப்பொழுது இறைவன் தன்னைக்காட்டி, உயிர்களை மலங்களினின்றும் நீக்கித் தன்னை அடைவித்தலே ‘அருளல்’ ஆகம். ஆகவே, இறைவன் திருவடி இன்பமாகிய பேரின்பத்தைப் பெறுதலே அருளல் தொழிலின் பயனாகின்றது. இவற்றால் இறைவனது ஐந்தொழில்களும் ஆருயிர்களின் பொருட்டுச் செய்யும் அருட்டொழில்களே என்பது தெளிவு.

<u>அத்துவிதம்:</u> இறைவனுக்கு உலகத்தோடுள்ள தொடர்பு ‘அத்துவிதம்’ என்று பேசப்படும் (மெய்கண்டார்). ‘இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும், உயிர்க்கும் உயிராதல் தன்மையால் உடனாயும் நின்று உலகத்தைச் செயற்படுத்துவான்’ என்பது சித்தாந்தம் தரும் விளக்கம். இதனை பேதம், அபேதம், பேதாபேதம் என்றும் விளக்குவர். இந்த அத்துவித நிலையை மெய்கண்டார் ‘அவை தானேயாய’’[43] என சிறு தொடரால் விளக்குவார். இதனை மெய்கண்டாரின் மாணாக்கர்கள் விரித்து எடுத்துக்காட்டுகளால் விளக்கியுள்ளமையைப் பேராசிரியர் ரெட்டியார் மிக விரிவாகத் தம் நூலில் விளக்குவார்.[44] ‘அத்துவிதமாய்’ இருக்கும் இறைவன் உலகத்தைச் செயற்படுத்தும் முறையைப் பேராசிரியர் ரெட்டியார் பல எடுத்துக் காட்டுகளுடன் தெளிவாக விளக்குவார்.[45]

<u>இறைவனுடைய திருமேனிகள்:</u> இறைவனுக்கு உருவம் உண்டு. இந்த வடிவம் ஆருயிர் பொருட்டே அவன் கொள்கின்றான். இந்த வடிவங்கள் மூவகைப்படும். அவை உருவநிலை, அருவநிலை,

அருவுருவநிலை என்பதாம். மகேசுவரன், உருத்திரன், மால், அயன் இவை நான்கும் உருவத் திருமேனிகள். ‘சிவன், சக்தி, நாதம், விந்து இவை நான்கும் அருவத் திருமேனிகள். சதாசிவம் என்பது மட்டிலும் அருஉருவத்திருமேனி. உருவம் கண்ணுக்குப் புலனாவது; அதாவது நம்பினோர் கண்ணுக்குப் புலனாகாவிடினும் தவத்தோர் கண்ணுக்குப் புலனாகும். அருவம் அங்ஙனம் புலனாகாதது; எனினும் வரம்புபட்டு நிற்பது. கண்ணுக்குப் புலனாயினும் ஒளிப்பிழம்பாய் அருவுருவம் நிற்பதன்றிக் கைகால் முதலியன இல்லாதது. இலிங்க வடிவமே அருவுருவத் திருமேனிக்கு எடுத்துக்காட்டாகும்.[46] இறைவனுடைய உருவத் திருமேனியை போக வடிவம், யோகவடிவம், வேக வடிவம் என்று மூன்று வகையாகப் பகுத்துப் பேசப்படும் மரபும் உண்டு. ‘யோகவடிவம்’ உலக இன்பத்தைத் தருதற்பொருட்டு, மணக்கோலம் கொள்ளுதல் போன்றது. ‘யோகவடிவம்’ ஞானத்தைத் தகுதற்பொருட்டுக் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருத்தல் போன்றது. ‘வேகவடிவம்’ உலகத்தார்க்கு உண்டாகும் துன்பத்தைப் போக்கப் ‘போர்க்கோலம்’ கொள்ளுதல் போன்றவையாகும் என்று விளக்குவர் பேராசிரியர்.[47] மேலும், அவர் இறைவன் போக வடிவம் கொண்டால் அன்றி உயிருக்குப் போகம் அமையாது என்றும், யோக வடிவம் கொண்டால் அன்றி உயிருக்கு ஞானம் உதியாது என்றும், வேகவடிவம் கொண்டால் அன்றி உலகிற்கு வரும் துன்பம் நீங்காது என்றும் விளக்குவர். இறைவன் ‘சனகாதி’ முனிவர் பொருட்டு யோகியாய் இருந்த காலத்து உயிர்கட்குப் போகம் முதலியவை அமையாதிருந்தமையைப் புராணங்கள் விரித்துப் பேசுவதைச் சான்றாகக் காட்டுவர். மேலும், இறைவன் திருப்பெருந்துறையில் ‘மணிவாசரை ஆட்கொண்ட அருமைப்பாட்டினை’ ‘கோகழியாண்ட குருமணி’[48] ‘ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைபெருமான்’[49] ‘குருந்தின்கீழ் அன்றிருந்த கொள்கையும்’[50] என்ற திருவாசகத் தொடர்களையும், இறைவன் குருவாய் வந்தமையைப் ‘புத்துயிர்த பேகமும்’[51] என்ற பாடலாலும் குரு உபதேசம் செய்ததை ‘வந்தேன் உடம்பொருள் ஆவி’[52] என்ற தாயுமானவர் பாடலாலும் விளக்குவர்.

<u>சம்புபட்சம், அணுபட்சம்:</u> இறைவனது நிலைகள் சம்புபட்சம் (சம்பு-சிவன், இறைவன்) என்றும், இப்பெயர்களுடைய தலைவர்களின் நிலைகள் ‘அணுபட்சம்’’ (அணு-உயிர்கள், பட்சம்-பகுதி) என்றும் வழங்கப்பெறும். திருமுறை இலக்கியங்களில் உருத்திரர், மால், அயன் முதலான பெயர்கள் வருமிடத்து, இவை சம்பு பட்சமாகிய சிவபிரானது

நிலையையும், அணுபட்சமாகிய பிற தேவர்களின் நிலையையும் குறிக்கின்றன என்பதைப் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவார்.[53]

சிவம்-சக்தி-விளக்கம்: சிவம் இன்றேல் சக்தி இல்லை. சக்தி இன்றேல் சிவமும் இல்லை. சிவமே சக்தி, சக்தியே சிவம் என்பது இறைவனைப் பற்றிய மற்றொரு சித்தாந்த கருத்து. இதனை ஐன்ஸ்டைன் என்ற அறிவியல் அறிஞர் காட்டும் தத்துவத்தின் அடிப்படையில் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்குவார். $E=mc^2$ என்பது அம்மந்திரம். (E ஆற்றல், m பொருண்மை, c ஒளிவேகம்). இந்த வாய்பாடு அம்மையப்பர் நிலையிலுள்ள இரகசியத்தை விளக்குகிறது. ‘சடமே-சக்தி’’ என்பது அம்மந்திரத்தின் உட்பொருள். பொருண்மையே ஆற்றலாக மாறுகிறது என்பது ஐன்ஸ்டைன் உணரத்திய உண்மை. சக்தியும் சிவனும் கூடியநிலை இம்மந்திரத்தை ஒத்துள்ளது என்று எடுத்துக்காட்டுவார். பாசஞானம், பசுஞானம், பதிஞானம், என்று ஞானநிலைகள் மூன்றாகப் பாகுபடும் என்பதை விளக்கி, பதிஞானம் ஒன்றால்தான் இறைவன் அறியப்படுவான் என்பதை நன்கு விளக்குவர்.[54] ‘அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்’ என்ற அப்பர் தேவாரத் தொடரை (6.97 :10) எடுத்துக்காட்டி இங்ஙனம் காணுதல்தான் பதிஞானம் என்பதனை தெளிவாக்குவர். மேலும் பல அருட்செல்வர்களின் வாக்குகளையும் அரணாக அமைத்துக்கொண்டு மேலும் தெளிவாக்குவார்.[55]

சத்து-சித்து-ஆனந்தம்: இறைவனை சத்து-சித்து-ஆனந்தம் என்ற தொடராலும், உபநிடதங்கள் கூறுவதைப் பேராசிரியர் விளக்குவார். இத் தொடரில் சத்து என்பது ‘என்றும் ஒரு படித்தாய் இருத்தல்’ அல்லது ‘நிலைபேறு’ என்பது பொருள். சித்து-என்பது அறிவு. அ.்.தாவது எல்லாவற்றையும் எப்பொழுதும் தானே அறியும் அறிவு. இதுவே ‘பேரறிவு’. ஆனந்தம் என்பது இன்பம். இதுவே ‘பேரின்பம்’ என்றும் ‘நிரதிசயானந்தம்’ என்றும் பேசப்பெறும். இதனை, ‘மெய்யறிவின்பம்’ என்றும் கூறலாம். ஆகவே சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் நிற்றலே பதியின் உண்மை இயல்பாகின்றது. வேறுபல கூறப்படினும் அவையெல்லாம் இவற்றுள் அடங்குவனவாகும். இந்த மூன்று சொற்களும் ஒன்றாகச் சேரும்பொழுது ‘சச்சிதானந்தம்’ ஆகின்றது. இதனால் இறைவனும் ‘சச்சிதானந்தன்’ என்று வழங்கப்பெறுகின்றான்.

<u>இறைவனின் அருட்குணங்கள்:</u> இறைவனது அருட்குணங்கள் தன்வயம், தூய உடம்பு, இயற்கை உணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசமின்மை பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் என்று எட்டுவிதமாகப் பேசப்படும். இவற்றை விரிவாக விளக்குவர் பேராசிரியர்.[56] 'கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்' (குறள்-9) என்ற குறட்பாவின் சொற்றொடரில் 'எண்குணத்தான்' என்ற சொல் இந்த 'எட்டு''க் குணங்களைக் கூறுவதாக எடுத்துக் காட்டுவார் பரிமேலழகர்.

<u>2.ஆன்மநிலை</u>: இறைவன் உள்ளானா, இல்லானா என்பன போன்ற இறைபற்றிய ஐயம் ஒருவரிடையேயும் எழுவதில்லை. ஆனால் உயிர்பற்றி நம்மிடையே பல ஐயப்பாடுகள் எழுகின்றன. என்றாலும் உயிர் உண்மையை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். இன்னதுதான் உயிர் என்பதில் ஆராய்ந்து வரையறுப்பதில்தான் பல்வேறு கருத்துகள் அடங்கியுள்ளன.

<u>அறிவுடைப்பொருள்:</u> மெய்கண்டார் கூறுவது இது. உயிர் அறிவித்தால் அறியக்கூடியது. அறியுமிடத்தும் ஒவ்வொன்றாகவே அறிவது. அறிவதையும் விட்டு விட்டே அறிவது. அங்ஙனம் அறியுங்கால் அறியப்பட்ட பொருளில் அழுந்தி அதுவேயாய் நின்று அறிவது ஆகிய இயல்பினை உடையது. அறிவுப்பொருளே உயிர் அல்லது ஆன்மாவாகும்.[57] இவற்றால் உயிர் பதியும் அன்று, பாசமும் அன்று. அறிவித்தால் அறியும் அறிவுடைய ஓர் இடைநிலைப்பொருள் என்பது தெளிவு. 'அறிவே வடிவாகிய பதிப்பொருள் 'சித்து' என்றும், அறிவே இல்லாத சடப்பொருள்களாகிய பாசங்கள், 'அசித்து' எனவும் வழங்கப்படுவதை நாம் அறிவோம். இவை இரண்டிற்கும் இடைப்பட்டதாகிய பசு, 'சிதசித்து' என்று மொழியப்படும். சித்தாகிய பதி-சத்து என்றும், அசித்தாகிய பாசங்கள் அசித்து என்றும் சொல்லப்படுதலால், இடைப்பட்ட பொருளாகிய பசு 'சித-சித்து'' என்றும் சொல்லப்படும். இதை விளக்குவதற்கு பேராசிரியர் தாயுமானவர்[58] பாடல் ஒன்றினை அரணாக அமைத்துக்காட்டுவார். சித்தாயும்-சத்தாயும் நிற்கும் பதிக்கும், அசித்தாயும்-அசத்தாயும் நிற்கும் பாசத்திற்கும் சிறந்த தொடர்பு உண்டாவதில்லை. இதனால் இவற்றுள் ஒன்றால் மற்றொன்றிற்கு வருவது ஒன்றும் இல்லை. இடையில் நிற்கும் பசுவே இரண்டனோடும் சிறந்தவகையில் தொடர்புள்ளதாய் உள்ளது. இதனால் இரண்டாலும் வரும் நன்மை தீமைகளை எய்துகிறது. 'இருதிறன்

அறிவுள்ளது இரண்டலா ஆன்மா’[59] என்ற ஓர் அரிய தொடரால் விளக்குவர் மெய்கண்டார்.

ஆன்மாவின் மூவகை நிலைகள்: உயிர்-தூல சித்து. ஆதலால் அது இயல்பாகவே பாசத்துடன் கட்டுண்டு கிடக்கும். ஒரு காலத்தில் இது நீங்குவதாகும். உயிர் ஆணவ மலத்தோடு மட்டும் இருப்பது. பின்னர் மாயை கன்மங்களோடு கூடிஇருப்பது, பின்னர் மும்மலங்களும் நீங்கப்பெற்று இறைவனோடு கலப்பது என்ற மூன்று நிலைகளை உடையது. இந்நிலைகளை ‘அவத்தை’ (அவஸ்த்தை) என்று கூறுவர் வடமொழியாளர்.

அ)கேவலாவத்தை: உயிர் ஆணவ மலத்தோடு மட்டும் இருக்கும் நிலை ‘கேவலம்’ எனப்படும். ‘கேவலம்’ என்ற சொல் ‘தனிமை’ என்று பொருள்படும். இந்த நிலையில் ஆன்மாவிற்கு அறிவு இல்லை. இச்சை இல்லை. செயல் இல்லை. உடம்பும் இல்லை. உட்கருவி செயல்களாகிய மனம் முதலியனவும் இல்லை. அதனால் வினைகளை ஈட்டுவதும் இல்லை. அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களை நுகர்வதும் இல்லை. உடல்பொறி, கரணம் முதலிய எதுவும் இல்லாமல் அறியாமையே வடிவமாய் கிடக்கும் இந்நிலையை ‘இருள்நிலை’ என்று வழங்கலாம். ‘உயிர்’ என்பது ஒன்று இல்லை என்று சொல்லாமல் ‘உள்ளது’ என்பது மட்டும் கூறிநிற்பதால் இது ‘தன்உண்மை’ என்றும் கூறப்படும்.

ஆ)சகலாவத்தை: இருள்நிலையாகிய கேவலத்தில் மூழ்கிக் கிடக்கும் கொடுமையைக் கண்டு கண்ணுதலான் பேரிரக்கங்கொண்டு ஆணவமலத்தைப்போக்குதற் பொருட்டு, மாயை, கன்மம் என்று இரண்டு மலங்களைக் கட்டுகிறான். அவற்றால் ஆணவமலம் சிறிது நீங்கப்பெற்ற உயிர், உடல், பொறி கரணங்களைப் பெற்று விண், மண், பாதலம் என்று மூன்று மூவுலகங்களிலும் ‘புல்லாய்ப் பூண்டாய் . . . . கல்லாய் மனிதராய் . . . முனிவராய் தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து’, உழலும் நிலைதான் சகலம் எனப்படும். சகலம்- தலையோடு கூடுதல் எனப் பொருள்படும். இந்நிலையில் உயிர் பெரிய பொருளை அறியமாட்டாது, சிறிய பொருளையே பெரிதாக மயங்கி அவற்றை அடைய விரும்பி முயலும் சிற்றறிவு, சிற்றிச்சை, சிறுதொழில் இவற்றை உடையாதாகும். இந்நிலையை ‘மருள்நிலை’ என வழங்கலாம்.

இ)சுத்தாவத்தை: மேற்குறிப்பிட்ட விண், மண், பாதலம் என்னும் மூவுலகங்களிலும், மாறி மாறிப் பிறந்து இன்ப துன்பங்களைப் புசிக்கும் உயிர் அவற்றிற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து அறிகின்றது. அவ்வழிகளில் முன்று 'எண்ணிய பயன் எண்ணியவாறே கிட்டுமாயின்' இன்பத்தை அடைகின்றது. கைகூடாதாயின் துன்பத்தை நுகர்கின்றது. விருப்பு வெறுப்புகளையும் அடைகின்றது. இந்த சுழற்சியால் ஆணவமலத்தின் ஆற்றல் வெளிவந்து, சிறுசிறு பொருள்களின்மீதுள்ள நாட்டம் மாறிப் பெரும் பொருளை அடையும் நோக்கம் முகிழ்கின்றது. அப்பொழுது இறைவன் குருவாகிவந்து மெய்யுணர்வைத் தருகின்றான்.[60] இந்த மெய்யுணர்வால் உயிரைப் பிணித்துள்ள மலங்கள் நீங்குகின்றன. இதனால் நின்மலனாகிய இறைவனை அடைந்து இன்புற்று இருக்கும் நிலையை ஆன்மா எய்துகிறது. இந்த நிலையை 'சுத்தம்' என்பர். மாசாகிய மலங்களின்னின்றும் முற்றிலும் நீங்க உயிர் தூய்மைபெற்றதால் 'சுத்தாவத்தை' என்ற பெயரைப் பெறுகின்றது. இந்நிலையில் உயிர் இறைவனது அருளையே பற்றுக்கோடாக கொண்டிருப்பதால், இந்நிலையை 'அருள்நிலை' யாகக் கொள்ளலாம். இம்மூன்று நிலைகளும் சிவஞான சித்தியாரில் விளக்கமடைகின்றன.[61]

காரணகாரிய அவத்தைகள்: மேற்குறிப்பிட்ட மூன்று நிலைகளும் காரண அவத்தை என்று வழங்கப்பெறும். உயிர்கள் உடம்மை எடுத்து வாழும் நிலையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலை வேறுபாடுகளை உடையனவாக இருக்கும். இந்நிலைகளே காரிய அவத்தை என வழங்கப்படும். இதனைப் பேராசிரியர் அருந்தமிழில் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கள் என்று வழங்குவர். இந்த ஐந்து அவத்தைகளும் கீழாலவத்தை, மேலாலவத்தை, மத்தியாலவத்தை என மூன்று வகையாக நிகழும் என்பதை மேலும் விளக்குவர்.[63]

மூவகை உயிர்கள்: உயிர்கள் எண்ணிறைந்தவை என்பது சித்தாந்தக்கருத்து. இவையாவும் பாசப் பிணைப்பு பற்றி மூவகைப்படும். ஆணவம் என்ற ஒரு மலம் உடைய உயிர்கள் 'விஞ்ஞானகலர்' என்று வழங்கப்பெறுவர். ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களை உடைய உயிர்கள், 'பிரளாய கலர்' என்று பேசப்பெறுவர். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களை உடைய உயிர்கள் 'சகலர்' என்ற பெயரைப் பெறுவர். இவற்றைத் திருமூலர், உமாபதி தேவநாயனார், அருணந்தி சிவாச்சாரியார்,

உமாபதிசிவாச்சாரியார் ஆகிய ஞானச் செல்வர்கள் விளக்குவதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.[63]

3.பாசநிலை: பசுக்களைப் பிணித்துள்ள பாசங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவற்றுள் மாயை எவராலும் எளிதில் உணரப்படுவது. கன்மமோ, எளிதாக காட்சியில் உணரமுடியாதது. சிறிது நுனித்து நோக்கினால் உணரக்கூடியது. இதற்குமேல் உள்ள ஆணவம் உணர்தல் மிகவும் அரிது. இவற்றுள் மாயை பருப்பொருள்; ஆணவம் நுண்பொருள்; குன்மம் இரண்டிற்கும் இடைப்பட்ட பொருள். இந்த மூன்றும் 'மும்மலங்கள்' என்று பெயர் பெறும். மலம் என்பது அழுக்கு. உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்றலால் இப்பெயர் பெற்றது.[64]

(i)ஆணவமலம்: அறிவுடையப் பொருளாகிய உயிரை அறியாமை உடையதாகச் செய்வதே இதன் இயல்பு. சைவசித்தாந்திகள் இதனை நெல்லிற்கு உமி போலவும், செம்பிற்கு களிம்பு போலவும், அநாதியே உயிர்கட்கு[65] இயற்கைச் சுற்றமாய் அமைந்துள்ளது என்று விளக்குவர். ஆணவமலம் ஒன்றேயன்றி பல இல்லை ஆயினும் எண்ணிறந்த சக்திகளை உடையது. அதனால் எண்ணிறந்த ஆன்மாக்களை மறைத்து நிற்றல் அதற்குக் கூடுவதாகின்றது.[66] இந்த ஆணவ மலம், கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று நிலைகளிலும் எவ்வாறு செயற்படும் என்பதைப் பேராசிரியர் தெளிவாக விளக்குவார்.[67] மும்மலங்களும் 'பெத்த' நிலையில் ஆன்மாக்களைப் பற்றுகின்றனவேயன்றி, 'முத்தி' நிலையில் பற்றுவது இல்லை. 'ஆணவமலம்' ஏனைய 'மலங்களுக்கு' மூலமாதலின் இதனை மூலமலம் என்றும், இயற்கைக் குற்றமாதலின் 'சகசமலம்' என்றும் அறியாமையே வடிவமாய் நிற்றலின் 'இருள்மலம்' என்றும் வழங்கப்பெறும். 'ஆணவமலம்' இருளைவிட மிகவும் கொடியது என்பதைப்பேராசிரியர் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவார்.[68]

(ii)கன்மபலம்: 'கன்மம்' என்பதும் 'கருமம்' என்பதும் ஒன்று. நாம் வினை என்று சொல்வதும் கன்மம் ஆகும். ஆனால் தத்துவ உலகில் 'கன்மம்' என்பது நாம் செய்யும் செயலும், அதன் பயனை அனுபவித்தலும் அடங்கும். இந்த கன்மத்தின் பயனை, உலகியல் நிலைகளை ஒட்டி, ஒரு கடிதத்தில் விளக்குவர் பேராசிரியர்.[69] இதனை அருணந்திசிவாச்சாரியாரின் திரு வாக்கையும் அரணாக அமைத்துக் காட்டுவர்.[70] ஆணவமலத்தோடு ஒப்ப அநாதியாகச் செயல்படும் 'கன்மம்' 'மூலகன்மம்' ஆகும். இந்த மூல கன்மத்தைப் பேராசிரியர்

ரெட்டியார் ஒரு கடிதத்தில் மிகத் தெளிவாக விளக்குவர். ஆணவ பந்தத்திற்கு ஏற்பவே மூலகன்ம பந்தமும், மாயாபந்தமும், உயிர்களுக்கு உள்ளன. இப்பந்தங்களுக்கு ஏற்ப இறைவன் தனது சக்தியால் மாயையினின்றும், சூக்கும உடம்மைப் படைத்துத் தருவான், சூக்கும உடலை அடைந்த உயிர்கள் 'ஆணவ' பந்தம் சிறிது நீங்கப் பெற்று, தம் 'மூலகன்பம்' பந்தத்திற்கு ஏற்ப 'அறிவு', 'இச்சை', 'செயல்'கள் விளங்கப்பெறும். அங்ஙனம் விளக்கப் பெற்ற வழி அவற்றிற்கு உண்டாகும் விருப்பு வெறுப்பு இவற்றிற்கு ஏற்ப நல்வினை தீவினையுமாக அமையும். அவ்வினைக்கு ஏற்ப, இறைவன் உயிர்கட்குத் தூல உடம்பைப் படைத்துத் தருகின்றான்.

<u>மூவிதகன்மங்கள்</u>: மேற்குறிப்பிட்ட நல் வினை தீவினைகள் மூன்றுவிதமாக நடைபெறும் என்றும், மனத்தால் நடைபெறுவன 'மானத கன்மம்' என்றும், வாயினால் சொல்லும் சொற்களால் தோன்றுவன 'வாசிக கன்மம்' என்றும், உடலால் செய்யும் செயல்களால் 'காயிக கன்மம்' என்றும் சொல்லப்படும். இம் மூவகை கன்மங்களைப் பற்றியும் வள்ளுவர் குறிப்பிட்டு இருப்பதை பேராசிரியர் எடுத்துக்காட்டுவார்.[71]

வினை பயன் தரும் முறையிலும் கன்மம் மூவகையாக நடப்பதை எடுத்துக்காட்டுவார் பேராசிரியர். வினைகள் செயற்படுவதற்கு முன்னும் பின்னும் அவை ஆகாமியம் (எதிர்வினை), பிரார்த்தம் (நுகர்வினை), சஞ்சிதம் (பழவினை) என்று மூன்று வகையாக பிரித்துப் பேசப்படும். ஆகாமிய வினை, பிரார்த்தமாகப் பக்குவப்படும்வரை சஞ்சிதமாய்க் கிடக்கும். இவற்றுள் பக்குவப்பட்டவை பிரார்த்தமாய்வரும். வினை தன் பயனை தருவதற்குரிய எல்லா சூழ்நிலைகளும் வாய்க்கப்பெறுவதே பக்குவப்படுதல் என்பதாகும். பிரார்த்தம் பயன்தருங்கால், 'ஆதி ஆன்மீகம்', 'ஆதி பௌதிகம்', 'ஆதிதைவிகம்' என்று சித்தாந்த வித்தகர்களால் மூன்றாகப் பேசப்படுவதைப் பேராசிரியா் வாழ்க்கை நிகழ்ச்சிகளினின்றும் மிகத் தெளிவாக விளக்குவார்.[72] வினை சூழ்நிலைகளைப்பெற்றுத் தரும் பயன் சாதி, ஆயு, போகம் என மூன்றாக நடைபெறும் என்பதையும் பேராசிரியர் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவர்.

<u>(iii)மாயை</u>: பானைக்கு மண்போல உலகத்திற்கு முதற்காரணம், 'மாயை' என்பது சித்தாந்த உண்மை. எனவே, உலகில் காணப்பெறும் பொருள்கள் யாவும் இதன்காரியமேயாகும். இக்

காரியங்கள் பலவற்றையும் சைவ சித்தாந்தம் தனு, கரணம், புவனம், போகம் என நான்காக வகுத்துப் பேசும். தனு என்பது பருஉடம்பு; கரணம் என்பது அந்தக்கரணம், மனம் முதலிய உடகருவிகள்; புவனம் என்பது உடம்புகள் இயங்குவதற்குறிய இடம்; போகம் என்பது உயிர்கள் தம் தனு கரணங்களைக் கொண்டு இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப் பொருட்கள். இவற்றை பேராசிரியர் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவர்.[73] இந்த மாயையை மேலும் விளக்கும் பேராசிரியர் காரணங்களினின்றும் காரியங்கள் தோன்றும் முறையை பல்வேறு எடுத்துக்காட்டுகள் கொண்டு எளிமையாக விளக்குவார்.[74]

<u>ஆன்மதத்துவம்</u>: ஆன்ம தத்துவங்கள் அனைத்திற்கும் மூலகாரணமாய் இருப்பது ‘மூலப் பிரகிருதி’ என்பது. ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு. அவை ‘அந்தக்கரணம் (மனம், சித்தம், புத்தி, அகங்காரம்) நான்கு; ஞானேந்திரயங்கள் ஐந்து; கன்மேந்திரியங்கள் ஐந்து; தநமாத்திரைகள் ஐந்து; பூதங்கள் ஐந்து. இவை அனைத்திற்கும் மூரகாரணமாகிய ‘மூலப்பிரகிருதி’, ‘காத்துவிகம்’, ‘இராசதம்’’, ‘தாமதம்’’ என்னும் முக்குணங்களையும் உள்ளடக்கி அவற்றிற்கு வித்தாய் நிற்பது. முக்குணங்களும் வெளிப்படாது சூக்குமமாய் நிற்பதே ‘மூலப்பிரகிருதி’ என்பது. இவற்றை மிக விளக்கமாக பேராசிரியர் பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவர்.[75]

<u>அண்டவகைகள்</u>: தத்துவங்களின் காரியமானவற்றை ‘தாத்துவிகங்கள்’ என வழங்குவர். இவற்றுள் புவனம் உலகங்கள் பலவற்றை அடக்கிய அண்டங்களாய் நிற்கும். அதாவது ஆன்ம தத்துவங்கள் ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த அண்டங்கள் அவ்வவ்தத்துவத்தின் இயல்பிற்கேற்ற பரப்புடையனவாய் உள்ளன. அவ்வண்டங்களுள் ஒவ்வொன்றையும் காத்தற்கு ‘உருத்திரா’’ பலர் உளா். அவர்கள் பெயரால் அமைந்த பல புவனங்களாக அவ்வண்டகளின் உள்ளும் புறம்புமாய் இடங்கள் பகுத்து கூறப்படும். எல்லாவற்றுக்கும் கீழ் உள்ளவை ‘பிருதிவி தத்துவ அண்டங்கள்’. இவை ஆயிரம்கோடி என்றும், இவற்றுள் ஓர் அண்டத்தில் நாம் வாழ்கின்றோம் என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன. இவ்வண்டங்களுக்குப், ‘பிரம்மாண்டம்’ என்பது பெயர். நாம் வாழும் பிரம்மாண்டம் நூறு கோடி யாசனை உள்ளது. நடுப்பகுதியே பூமியன் பரப்பாகும். இதுவே பூலோகம் எனப்படுவது. இதன் கீழ் அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம் என்கின்ற ஏழு உலகங்கள் உள்ளன.

இவற்றின் கீழே பாவிகள் சென்றடையும் இருப்பத்து எட்டு கோடி நரகங்கள் உள்ளன.

பூலோகத்தின் மேல் புலலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என ஆறு உலகங்கள் உள்ளன. தத்துவங்கள் புவனங்கள் என்பவற்றுடன் வேறு உள்ள மாயாகாரியங்களைக் கூட்டி அனைத்தும் ‘அத்துவாக்கள்’[76] என வழங்கப்படும்.

<u>4.ஆன்மா பகுதியினை அடையும் சாதனங்கள்:</u> ஆன்மா பதியினை அடைவதற்குச் சிவாகமத்தின் வழி அமைந்த நெறிகள் நான்கு நுவலப்பெறுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என வழங்கப்பெறும். இந்த நான்கு நெறிகளையும் நால்வரின் வாழ்க்கை நெறிகளைக்கொண்டு விளக்குவர் சித்தாந்த வித்தகர்கள். இது பின்னர் விளக்கப்படும்.

<u>சரியை</u>: இறைவன் ‘ஆண்டான்’ என்பதும், உயிர்கள் அவனுக்கு ‘அடிமை’ என்பதும், இந்த ஆண்டான் அடிமை நிலை எக்காலத்திலும் பெத்தம், முத்தி என்ற இருநிலையிலும் இருக்கும் என்பதும் சைவசமயக்கொள்கை. திருக்கோயிலில் இலிங்கமூர்த்தி முதலிய அனைத்து மூர்த்திகளையும் வழிபடும் முறைகள் சரியையியல் அடங்கும். திருக்கோயில்களில் மூர்த்திகளை அகலநின்று வழிபடுதல் அங்கு நிகழும் வழிபாட்டிற்கு ஆகுமாறு நந்தவனம் வைத்தல், பூ கொய்து கொடுத்தல், பூமாலை, பூச்சரம் இவற்றைத் தொடுத்துத் தருதல், திருவலகிடுதல் (திலகவதியார் செய்த தொண்டு போல) உழவாரப்பணி செய்தல் (அப்பர் பெருமான் திருத்தொண்டு போல) பழங்கோயிலை வேண்டிய அளவிற்குப் புதுக்கி திருப்பணி செய்தல்,[77] நிந்திய நைமித்திக வழிபாடுகளை செய்வித்தல், அவற்றிற்குத் தேவைப்படும் குடம், கவசம், தீபக்கால்கள், விசிறி, கண்ணாடி முதலியன ஆக்கித்தருதல், சிவபுராணங்களையும் அடியார் வரலாறுகளையும் கேட்டல், திருத்தலப் பயணத்தை மேற்கொள்ளல் முதலிய செயல்கள் பலவும் சரியைச் சார்ந்த திருத்தொண்டுகள். இதனை சிவஞான சித்தியார் ஒரு பாசுரத்தால் விளக்கும்.[78] அப்பர் பெருமான் திருத்தொண்டு இம்முறைக்கு எடுத்துக்காட்டாகும். இந்த நெறி அடிமை நெறி (தாதமார்க்கம்) என்று வழங்கப்படும்.

<u>கிரியை:</u> சிவபெருமானின் அருத் திருமேணியாகிய ‘இலிங்கமூர்த்தி’யை அணுகி இருந்து அதன்கண் அப்பெருமானை

‘மந்திரம’, ‘கிரியை’, ‘பாவனை’ என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகை உபசாரங்களை முறைப்படி செய்து வழிபடுதலே கிரியை என்பது. திருமுழுக்கு (அபிடேகம்) ஆடை, அணிகலன், சந்தனம், மலர் முதலியவற்றல் செய்யும் ஒப்பனை (அலங்காரம்) படையல் (நிவேதனம்) புகை, ஒளி (தூபம், தீபம்), குடை, கொடி, கண்ணாடி, கவரி முதலிய மங்கலப் பொருள்கள் இவற்றை ஏற்பித்து வலம் வருதல், அடிபணிதல், புகழ்ச்சி போன்றவற்றைச் செய்து வேண்டிநிற்றல் இவ்வகை அணுக்கத் தொண்டுகள் கிரியையுள் அடங்கும். இதனை அருணந்தி தேவநாயனார் ஒரு பாசுரத்தில் விளக்குவர்.[79] ஞானசம்பந்தரை இம்முறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்வர் சைவப் பெருமக்கள். இவரது நெறி, ‘சற்புத்திரமார்க்கம்’ (மகன்மை நெறி) என்று வழங்கப் பெறும்.

<u>**யோகம்:**</u> ‘யோகம்’ என்ற வடசொல் ‘கூடுதல்’, ‘ஒன்றுதல்’ என்று பொருள்படும். ‘ஆன்மா’ இறைவனோடு அறிவால் ஒன்றுபடுதல் என்பது இதன் பொருள். ஆயினும், மனம் முதலிய அந்தக்கரணங்கள், கை, கால், முதலிய புறக்கரணங்கள்போல் ஆன்மாவிற்குப் பெரிதும் தொலைவாகாது, அவனோடு ஒன்றித்து நிற்றலின் அது ‘யோகம்’ என்று உபசரித்துக் கூறப்பெறும். புறத்தே பரந்துசென்று திரிந்து உலகப்பொருள்களோடு ஒன்றியே பழகிவிட்ட இம்மனம் முதலிய அந்தக்கரணங்களை அவற்றின்மேல் செல்லாதவாறு அடக்கி அகத்தே நிறுத்தி இறைவனோடு ஒன்றச்செய்தல் என்பது எளிதான செயல் அன்று. இவ்வாறு செய்ததற்கு யோகத்தில் உள்ள எட்டு உறுப்புக்கள்,[80] பெரிதும் துணை செய்யும். யோக மார்க்கத்தில் பக்தன் தன்னைக் கடவுளின் பிரிய நண்பனாகக் கருதுகின்றான். இதற்கு சுந்தரமூர்த்தியின் வாழ்க்கையை எடுத்துக்காட்டாய் கொள்வர். இவர் மேற்கொண்ட நெறி சகமார்க்கம் (தோழமை நெறி) என்று வழங்கப்பெறும்.

<u>**ஞானம்**</u>: தத்துவ ஆராய்ச்சி வழியாக இறைவனை அறியும் அறிவே ‘ஞானம்’ என்று சிறப்பித்துக்கூறும் சித்தியார்,[81] எல்லா வேதங்களும், பண்டைய சாத்திரங்களும் ஞானத்தையே முக்திக்கு நேரான வழியாகக் கருதுகின்றன என்பதையும், சித்தியார் மேலும் வலியுறுத்திப் பேசும்[82] முக்தியை அடைய உதவும் அறிவு ஞானம் எனப்படும். பதிஞானம் என்பது, சிவஞானமே ஆகும். பதிஞானத்தால் இறைவனை அறிவதையே சைவ சமயாச்சாரியர்கள் ‘அருட்கண்ணால் காணுதல்’ என்று கூறுவர்.[83] இவ்விடத்தில் பாரதியார் கோவிந்தன் பாட்டில்,

‘என் கண்ணை மறந்துன்இரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக்கொண்டு
நின்கண்ணாற் புவியெல்லாம் நீயெனவே
நான்கண்டு நிறைவுகொண்டு’[84]

என்ற பாடற்பகுதி இக்கருத்தையே வலியுறுத்துகின்றது என்பதை நினைவு கூறலாம்.

மலபரி பாகம் முதலியவை: உயிர்களின் அறிவைப்பிணித்து வைத்திருக்கும் ஆணவமலத்தின் ஆற்றல் மெலிவடைந்து பிணிக்கும் நிலையினின்று நீங்குவதே மலபரி பாகம் என்று வழங்கப்படும். ஆணவமலம் இங்ஙனம் பரிபாகமாதல் பொருட்டே இறைவன் உயிர்க்கு கன்மம், மாயை என்பவற்றைக் கூட்டுகின்றான். இதனால் உயிர்கள் பிறப்பு இறப்புகளில் சென்று கன்மங்களை ஈட்டி அவற்றின் பயனாக இன்ப துன்பங்களை நுகர்கின்றன. இதனால் மறைக்கும் தன்மையுடைய ஆணவமலத்தின் ஆற்றல் சிறிதுசிறிதாகத் தேய்ந்து உயிர்களின் ஆற்றல் சிறிது சிறிதாக விளக்கம் பெற்றுவரும். ஆணவமலத்தின் ஆற்றல் மெலிவடைதலாகிய மலபரிபாகம் வந்தால் ‘இருவினை ஒப்பு’ தோன்றும், ‘இருவினைஒப்பு’ என்பது இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் கொள்ளாது, இரண்டையும் சமமாக நுகரும் நிலையே இது. இந்த நிலையைப் பேராசிரியர், சேக்கிழார் பெருமான், தாயுமான அடிகள் இவர்கள் வாக்காலும் தெளிவாக்குவார்.[85] இந்த இருவினையொப்பு வாய்த்தபிறகு ‘சத்திநிபாதம்’ உண்டாகும். திரோதானமாய் நின்று மறைப்பைச் செய்துவந்த இறைவனது சக்தி மலபரிபாகம் உற்ற நிலையில் அருட்சக்தியாக மாறி ஆன்மாவிடத்தில் பதிதலே ‘சத்திநிபாதம்’ என்பது. நிபாதம்-வீழ்ச்சி. சத்தி-பதிதல், உலகியலில் உயிர்கள் தீயனசெய்யாது, நல்லனை செய்யக் கருதுதல் ‘சத்திநிபாதம்’ வழி நிகழ்வதே ஆகும்.

பசு, பதி, புண்ணியங்கள்: சிவன் ஒருவனே பதி, ஏனைய யாவரும் பசுக்கள். அதனால் சிவபெருமானை நோக்கிச் செய்யும் நற்செயல்கள் ‘பதிபுண்ணியங்கள்’; இவை ‘சிவபுண்ணியங்கள்’ எனவும் வழங்கப்பெறும். சிவபெருமானைத் தவிர பிற கடவுளரை நோக்கிச் செய்யும் புண்ணியங்கள் ‘பசு புண்ணியங்கள்’ என வழங்கப்பெறும். சிவபுண்ணியங்கள் மட்டுமே அழிவின்றி நின்று நிலைத்து முக்தியைத் தரும். பசு புண்ணியங்கள் அவ்வாறன்றி தமக்குரிய பயன்களைத் தந்து அழிந்துபடும். அவை அழியவே, அவற்றின் பயன்களும்

அழிந்துவிடும், இக்கருத்துக்களைப் பேராசிரியர் ரெட்டியார் தேவார ஆசிரியர்கள், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், தாயுமானவர் போன்ற பெரியார்களின் அருளிச் செயல்கள்மூலம் தெளிவாக விளக்குவார்.[86] 'சிவ புண்ணியங்களை'ச் சரியை, கிரியை, யோகம் என்று வகைப்படுத்தியும், ஒருமுறையிலும் அபுத்தி பூர்வ சிவ புண்ணியம், புத்திபூர்வ சிவபுண்ணியம் என்று பிரிதோர் முறையில் வகைப்படுத்தியும் தெளிவாக விளக்கிக் காட்டுவார்.[87]

தீக்கை வகைகள்: குரு மூர்த்திகளாய் இருப்பவர்கள் தம் வீடர்களுக்குத் தவத்தையும், ஞானத்தையும் அளிக்கும் முறையைச் சைவ சித்தாந்தம் 'தீக்கை' என வழங்கும். தீக்கை என்பது , அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தைத் தருவது என்று பொருள்படும். 'தீட்சா' என்பது வடசொல். இதில் 'சா' நீக்குதல், 'தீ'' தருதல் என்று பொருள்படும். இந்தத் தீக்கை (அ) சமய தீக்கை, (ஆ) விசேடதீக்கை, (இ) நிருவாண தீக்கை என்று மூவகைப்படும். சமய தீக்கையால் சரியையும், விசேடதீக்கையால் கிரியையும் யோகமும், நிருவாணதீக்கையால் ஞானமும் கிடைக்கும் என்பதைத் தெளிவாக விளக்குவர் பேராசிரியர்.[88]

முத்தி நிலைகள்: சிவனடியார்கள் சாதனங்களால் அடையும் பயன்கள் இரண்டு. ஒன்று, பாசநீக்கம். மற்றொன்று சிவப்பேறு. சிவப்பேறு என்பது, சித்தாந்த சைவமுத்தியை அடைதல். இதை நன்கு உணர்ந்த தாயுமான அடிகள் இறைவனையே 'சித்தாந்த முத்திமுதலே'[89] என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறுவர். வாழ்வின் மேலான நோக்கம் வீடுபேறு அடைவது. இதுவே சிவலோகத்தை அடைதல் என்பர் குருஞானசம்பந்தர்.[90] முத்திநிலையில் ஆன்மா, ஆண்டவன் உறவை அடைதல் அத்துவிதக்கலப்பு என்பர். இந்த அத்துவித கலப்பிற்குத் தமிழில் தாள், தலை என்ற இரு சொற்களின் புணர்ச்சியை எடுத்துக்காட்டாகக் கொள்வது மரபு. தலை ஆன்மாவையும், தாள் இறைவனையும் குறிக்கும். அதாவது, இறைவனது திருவடிகளில் ஆன்மாவின் தலை பொருந்துகின்றது. தாளும் தலையும், தமிழ் இலக்கண விதிப்படிப் புணரும்போது 'தாடலை' ஆகும். தாள் என்பதில் உள்ள 'ள' மறை, தலையிலுள்ள 'த' 'ட' ஆக மாறித் தாடலை ஆகிறது. இதனை இரு சொற்கள் எனக் கொள்ளவும் முடியாது, ஒரு சொல் என கொள்ளவும் முடியாது. ஒரு விதத்தில் இது ஒரு சொல். இன்னொரு விதத்தில் இருசொல்.

இதைப்போன்றதே இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படும் விதமும் என்பதே சித்தாந்தத்தின் முடிவாகும். இவ்வாறு பேராசிரியர் விளக்கி,

'தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடநீ யோகமெனக் கொள்'' (திருவருட்பயன் 8 : 4)

என்று உமாபதி சிவத்தின் அருள்வாக்கை முத்தாய்ப்பாக அமைத்துக்காட்டுவர். இதன் விளக்கத்தை மேலும் மெய்கண்டார் நூல்களின் கருத்துகளை அரணாக அமைத்துக்காட்டுவர்.[91] இதனை விளக்கும்போக்கில் பரமுத்தி, அபரமுத்தி, பதமுத்தி, சீவன்முத்தி என்பனவற்றையும் எடுத்துக்காட்டி முத்திநிலைகள் நான்குவகைப்படும் எனத் தெளிவாக்குவர். மேலும் இந்த முத்தி நிலைகளைச் சாலோகம், சாமீபம், சாயுச்சயம் என்ற நிலைகளாகவும் பிரித்து விளக்குவர் பேராசிரியர்.[92] இறுதியாகத் தத்துவங்கள், தாத்துவிகங்கள், அவத்தைகள், அணைந்தோர் தன்மை, குரு-லிங்கம்-சங்கம் ஆகிய கருத்துக்களையும் தெளிவாக விளக்கி எளிதாக கிட்டச் செய்வர்.

<u>திருத்தலப் பயணங்கள்</u>: திருத்தலப் பயணத்தைப்பற்றி தாயுமான அடிகள்

'மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''[93]

என்று அருளியுள்ளார். இதனால் சமய அடியார்கள் திருத்தலப் பயணத்தை முக்கியமாக கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் ஞானசம்பந்தர்[94], திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் என்ற சைவ அடியார்களைப் பற்றியும், அவர்தம் அருளிச் செயல்கள்பற்றியும் விளக்கும்போக்கில் ஆய்வு நூல்கள் என்று சொல்லும் தரத்தில் நான்கு நூல்கள் எழுதியுள்ளார். இவை நான்கும் அந்தந்த ஆசிரியரிகளின் அருளிச் செயல்களை விளக்கும்போக்கில் சித்தாந்த கருத்துகளைத் தெளிவாக விளக்கும் நோக்கில் வரையப்பெற்றுள்ளன. இந்த நூல்களின் ஒரு தனித்தன்மை என்னவென்றால் அந்தந்த அடிகளார் திருத்தலப் பயணங்களை மேற்கொண்டு அந்தந்த திருக்கோயில்களில் அருளிச் செய்த திருப்பாடல்களை எடுத்துக்காட்டும் முறையில் நூல்கள் அமைந்துள்ளன. இந்த நூல்களைப் பயிலும்போது வாசகர்களும் அந்த அடியார்களுடன், திருத்தலப்பயணம் செல்லும் உணர்வு ஏற்படும். இது தவிர அந்த நூல்கள்நுவலும் சிவனறிக் கொள்கைகளும் ஆங்காங்கே

எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இக்கருத்துகளை திரும்பவும் எடுத்துக்காட்டுவது மிகை என்று இந்த ஆய்வாளர் கருதுவார். எனினும் இக்கருத்துகளை இந்த இயலில் பொருத்தமான இடங்களில் அடிக்குறிப்புகளாக எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. மேலும் ஒரு சில கருத்துக்கள் ஈண்டு சுருக்கமாகக் காட்டப்பெறுகின்றன.[95]

ஐந்தெழுத்து மந்திரம்: ஐந்தெழுத்து என்பது சைவ சித்தாந்தச் செல்வர்கள் நாளும் கணித்துவரும் பொருள் மறையாகும். பொருள்மறை மெய்ப்பொருள் உண்மையை விளக்குவது. 'சிவயநம' என்பது ஐந்தெழுத்து மந்திரம். 'அந்தியும் நண்பகலும் ஐந்துபதம் சொல்லி'[96] என்பது ஆளுடையநம்பியின் திருவாக்கு. எனவே, ஐந்தெழுத்து என்பது ஐந்து சொற்களின் தனித்தனி முதலெழுத்துகள் ஆகும். இவற்றை திருமுறைகளும், மெய்க்கண்டநூல்களும் விரித்து விளக்குகின்றன. இது, உலகிடையே காணும் ஏனைய மந்திரங்கள் எல்லாம் தோன்றுவதற்கு தாயாக உள்ளது என்றும், தோன்றிய மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் முதன்மைவாயந்தது என்றும், வடமொழி மறையின் மயக்கை ஒழிப்பது சீகாழி அந்தணர்கட்கு அருளிச்செய்த திருமொழிகளால் விளங்குவன என்று சேக்கிழார் பெருமான் எடுத்துக்காட்டுவார்.[97] ஐந்தெழுத்தின் சிறப்பை பலதிருப்பாடல்களில் வெளிப்படையாகவே கூறியுள்ளார் நாவுக்கரசர். 'சொற்றுனை வேதியன்' (4 : 11) என்னும் பதிகத்தில் ஐந்தெழுத்தின் பெருமையும், திருக்குறுந்தொகை பதிகம் ஒன்றில் (5 : 90) ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பையும் விளக்குவதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவர்.[98]

'நல்லக விளக்கு நமச்சிவாய மந்திரம்' என்பது இப்பெருமான் காட்டும் மணிவிளக்கு. சிவகதி காட்டும் விளக்கும் இதுதான் என்பது இப்பெருமானின் கோட்பாடு.[99] ஆளுடைய நம்பியும் திருப்பாண்டிக்கொடுமுடி என்ற திருக்கோயிலின் 'மற்றுபற்றென' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் 'நற்றவா உனை நான் மறக்கினும், சொல்லுநா நமச்சிவாயமே' (7.48 : 1) என்ற திருப்பாடலின் பகுதியை எடுத்துக்காட்டுவர். மேலும், இந்த மந்திரத்தின் சிறப்பினைப் பேராசிரியர் விளக்குவது சைவ அன்பர்களுக்கு பக்தி விருந்தாகும்.[100] மேலும், தேவாரப் பதிகங்களில் ஐந்தெழுத்து அமைந்த திருப்பதிகங்கள் நான்கு என்பதை எடுத்துக்காட்டுவது தனிச் சிறப்பு.

மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகத்தை ‘நமச்சியவா வாழ்க’ என்றே தொடங்குவது ஒரு தனிப்பெருஞ்சிறப்பு. தொடர்ந்து இந்த மந்திரத்தை

‘நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநமஎனப்பெற்றேன்” **- திருவேச.ந. 10**

எனவும் திருவைந்தெழுத்துபதேசத்தின் சிறப்பினை வற்புறுத்துதலைத் தெளியலாம்.[101]

‘அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின்றேனே’ **- (திருச்சத 27)**

எனவும் வரும் திருவாசகப் பாடற்பகுதிகள் திருவைந்தெழுத்துபதேசத்தின் சிறப்பினை வற்புறுத்தலை எடுத்துக்காட்டுவர் பேராசிரியர்.[102] ஆளுடை பிள்ளையாரும் ஐந்தெழுத்தின் சிறப்பை ‘துஞ்சலும் துஞ்சலிலாத போழ்திலும்’ (3.49) என்ற திருப்பதிகத்திலும், ‘காதலாகி கசிந்து’ (3.22) என்ற திருப்பதிகத்திலும் போற்றி இருப்பதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார். இந்த இரண்டு பதிகங்களையும் நாம் அடிக்கடி பாடி அனுபவித்தால் ‘பந்த பாசங்களை அறுத்து எறியலாம்’ என்பது பேராசிரியரின் நம்பிக்கை.[103]

<u>தேவாரம்-மறைமொழிகள்</u>: மூவர் அருளிய தேவராப் பாடல்கள் யாவும் சிவபெருமான் அருளிச்செய்த மறைமொழிகளாகவே போற்றத்தக்கவை. ஆளுடைய பிள்ளையாரின் ‘எனதுரை தனதுரை’யாக ‘நீறணிந்தேறு கற்றேறிய நிமலன்’ (1.76:1) என்ற திருவாக்கினாலேயே திருப்பாடல்கள் யாவும் இறைவன் தன்னவையாகக்கொண்ட குறியைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார். ஆழ்வார் பாடல்களில் தோய்ந்த பேராசிரியர் அவர்கள் திருப்பாசுரங்களும் இறைவன் திருவாக்குகளே என்று நம்மாழ்வாரின்,

‘என்சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன்” **(திருவாய் மொழி 7.9 : 2)**

என்று ஒப்பிட்டுக் காட்டி மகிழ்வார்.

<u>சிவமாதல்</u>: எம்பெருமான் அருளால் உயிர்கள் மாயை, கன்மங்களின்

துணையால் அறியாமை தேய்ந்து அறிவு விளக்கம் பெறுகின்றன. பின்னர் அவை தமக்குத் தோன்றாத் துணையாக நின்று அருள்புரியும் சிவபரம்பொருளை அடைந்து அம்முதல்வன் அருளில் இரண்டறக் கலந்து ஒன்றாதலிலே தமது நாட்டத்தைச் செலுத்துகின்றன. மேலும் அவை உலகியற்பொருள்களிலும் தம்மைச் சூழ்ந்துள்ள உற்றார், உறவினர் முதலியோர் இடத்திலும் தம் உடம்பிலும், உளராகித் தமதிலும் செல்லும் உணர்வைத் திருப்பித் தம் உயிர் உணர்விற்கு உணர்வாய் விளங்கும் சிவப்பரம்பொருளில் படியச் செய்கின்றன. இந்நிலையில் தாம் ஒருபொருள் உண்டென்பதை மறந்து சிவமாகவே அமர்ந்து விடுகின்றன. இந்நிலையை மணிவாசகப் பெருமான் ‘சிவமாதல்’ என்று குறிப்பிடுவர். இக்கருத்தினை

‘சித்தமலம் அறுவித்துச்
சிமாக்கி எனைஆண்ட, அத்தன்’ (648-அச்சோ-1)

என்று அச்சோ பதிகப் பாடற்பகுதியாலும்,

‘சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்’ (473 - கண்ட-1)

என்ற கண்டப்பத்துப் பாடற்பகுதியாலும் அறியலாம். ‘இக்கருத்தினைச் ‘சிவமாதல்’ என்றது ஆன்மா தற்போதமாய் நிற்பது செய்யாமல் தான் என்கின்ற முனைப்பு கெடுவதும் செய்யாமல் தற்போதும் கெட்டு, அந்த சிவத்தோடு கூடி இரண்டற நின்று அநுபவித்தது என அறிக’ என்ற மதுரைச் சிவப்பிரகாசரின் உரையை அரணாகக் காட்டுவர்.

ஆன்மா தன்பொருட்டன்மை அழிந்து சிவம் ஒன்றையே ஒழியாமலும் சிவத்தின் வேறாய்தான் ‘தனித்து நில்லாமலும், பாலோடு அளாவிய நீர் தன் உண்மை கெடாமல் பாலின் தன்மையதாய் அதனுடன் பிரிவறக் கலந்து ஒன்றாதல் இருக்குமா போல, மலம் நீங்கித் தூயதாகி, தன் உண்மை கெடாமல் சிவத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றாதலயே ‘சிவமாதல்’ என சித்தாந்த நூல்கள் கூறும். இந்த ‘சிவமாதல்’ என்ற கருத்து திருமூலர் காலந்தொட்டு வழங்கிவரும் சித்தாந்த வழக்காகும்.[104]

<u>திருநீற்றின் பெருமை</u>: பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயைச் சமணர்களால் எம்முறைகொண்டும் தீர்க்கமுடியவில்லை. ஆனால் ஞானசம்பந்தர் பெருமான் ‘மந்திரமாவது நீறு’ (2.66) என்ற திருப்பதிகம்

எழுதி தென்னவன் மேனியில் திருவளர் திருநீறுகொண்டு பூசுகின்றார். இந்நிலையில் வெம்மை நீங்குகின்றது. சைவர்களுக்கு திருநீறு, திருஅக்கமணி ஆகிய இரண்டும் சிறந்த சமயச்சின்னங்களாகப் பயன்படுகின்றன. பேராசிரியர் ரெட்டியார் மஞ்சட்காமாலை நோயால் தாக்கப்பெற்று 40 நாட்கள் பல்வேறு நாட்டுமுறை சிகிச்சைகளை மேற்கொண்டும் பயன்படவில்லை என்றும், ஆனால் அவர்க்குத் தோன்றிய ஒரே வழியாகிய 'மந்திரமாவது நிறு' என்ற வெண்ணீற்றுப் பதிகத்தை பத்துமுறை படித்து நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் வெண்ணீறு அணிந்து கொண்டதால் மூன்று நாட்களில் நோய் குறைந்து முழுகுணம் அடைந்ததைக் குறிப்பிடுகின்றார். வெண்ணீற்றின் மகிமையை அநுபவத்தில் உணர்ந்ததற்கு இது ஒரு சான்று.[105]

அற்புதநிகழ்ச்சிகள்: அடியார்கள் வாழ்க்கையில் நடைபெற்ற அற்புத நிகழச்சிகளைப் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தம் ஆய்வு நூல்களில் எடுத்துக்காட்டுவதில் தவறுவதில்லை.

ஞானசம்பந்தர் வாழ்வில்: (1) எழும்பைப் பெண்ணாக்குதல்: மைலாப்பூரைச் சார்ந்த வணிகர் தம் மகள், பூபாவையினுடைய எலும்பைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றார். ஞானசம்பந்தர் கபாலிசுவரத்து இறைவனை வழிபடவந்தபோது என்பு நிறைந்த குடத்தின உலகறிய கோயிலின் புறவாயிலில் வைக்க்ச செய்து 'பட்டிட்ட புன்னையங்கானல்' (2.47) என்ற முதற்குறிப்புடைய பதிகத்தைப் பாடுகின்றார். பத்தாம் பாடலைப் பாடிய அளவில் செந்தாமரை மலர் விரிய அதனுள்ளே இருந்து எழும் திருமகளைப்போன்று கூப்பிய செங்கையுடன் அழகனுக்கு அணியாய் நிற்கின்றாள் பூம்பாவை.

(2) பால் அமுதுஊட்டுதல்: பிள்ளையார் ஞானப்பால் உண்டது மற்றொரு நிகழ்ச்சி. தந்தையார் திருக்குளத்தில் மூழ்கியபோது கரையில் இருந்த குழந்தை அழுகின்றது. உலகநாயகியாகிய உமையம்மை ஊட்டிய பால் அமுதம் வாய்வழியே ஒழுகியது கண்டு நீராட்டத்தை முடித்துக்கொண்டு வந்த தந்தை 'பிள்ளாய், யார் அளித்த பால்அடிசினை நீ உண்டனை. எச்சில் கலக்கும்படி உனக்கு இட்டாரைக் காட்டுக' என அக்குழந்தையை ஒருக்கத் தொடங்க பிள்ளையார் தம் உச்சிமேல் குவிந்த கைவிரல் ஒன்றினால் தோணிப்புரத்து இறைவனைச் சுட்டிக்காட்டி 'தோடுடைய செவியன்' (1.1 :1) என்ற திருப்படாடலை முதலாக உடைய பதிகத்தைப்பாடி

தனக்குப்பால்அடிசில் அளித்த பிரானைத் தந்தையாருக்கு அடையாங்களுடன் குறிப்பிடுகின்றார்.

(3) பாண்டியன் வெப்புநோய் தீர்த்தல்: சோழ நாட்டில் சீகாழிப்பதியில் பிறந்த ஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வெல்வதற்காக மதுரை மாநகர் நோக்கிச் செல்கின்றார். அங்குப் பாண்டிய மன்னன் சமண மதத்தைச் சார்ந்தவன் என்பதனால் சம்பந்தருக்கு முறையான வரவேற்பினை அளிக்காமல் சமணர்களுடன் சேர்ந்துகொண்டு சம்பந்தருக்கு இன்னல்கள் இழைக்கின்றான். இதை அறிந்த சம்பந்தர் 'செய்வனே திருவாலவாய்' (3.5 : 1) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி மன்னனுக்குக் வெப்புநோய் உண்டாகும்படி செய்கின்றார். இறுதியில் வந்திருப்பவர் சிவன் அருள்பெற்ற தொண்டர் என்பதனைப் பாண்டிய மன்னன் உணர்கின்றான். செய்த தவறு உணர்ந்து ஞானசம்பந்தரிடம் மன்னிப்பு கேட்க, ஞானசம்பந்தர் 'மந்திரமாவது நீறு' (2.66) என்ற திருப்பதிகம் பாடித் தென்னவனின் நோய் தீர்க்கச் செய்கின்றார்.

(4) அனல்வாதம், புனல்வாதம்: மதுரை மாநகரில் நடந்த அற்புத நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தகது இது. பாண்டியன் வெப்பு நோயை பதிகம்பாடி ஞானசம்பந்தர் தீர்த்துவிட்டதால் வெறுப்பு கொண்ட சமணர்கள் சமயப் போட்டியை 'வாதம்' என்ற உபாயத்தைக்கொண்டு செயல்படுத்த ஞானசம்பந்தரை அழைத்தனர். இதற்கிணங்க ஞானசம்பந்தர் சிவனின் அருள்கொண்டு எழுதப்பெற்ற திருமுறைகளையும், சமணர்களின் திருவாக்கும் அடங்கிய சுவடிகள் தீக்குண்டம் அமைக்கப்பெற்று அதில்போட, இறுதியில் எச் சமயத்தைப் பற்றிய சுவடிகள் எஞ்சி நிற்கின்றனவோ அச் சமயமே மெய்ச் சமயம் என்கின்றனர்.[106]

ஞானசம்பந்தர் சிவபெருமானே முதற்பொருள் எனத் தொழுது அத்திருமுறையினைச் சென்னிமேல் வைத்துப்போற்றி 'இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தழியாது நிலை பெறுக' எனச் சொல்லி, 'தளரிளவளரொளி'' (3.87) என்ற இன்னொரு திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தைப் பாடி யாவரும் காணத் தீயில் இடுகின்றார். சிவனின் அருளால் அந்த ஆகம ஏடுகள் காப்பாற்றப்படுகின்றன. தீயில் இட்ட ஏடுகள் வேகாது, பச்சையாய் இருந்ததனால் இப்பதிகங்கள் பச்சைப் பதிகம் என்றே வழங்கப்பட்டன.[107]

அனல் வாதத்தில் ஞானசம்பந்தர் வெற்றி அடைந்து விட்டதால் சமணர்கள் புனல் வாதத்திற்கு அழைத்தனர். சமய உண்மையை ஏட்டில் வரைந்து ஆற்று வெள்ளத்தில் இட்டு உண்மை காண்போம் என சமணர்கள் கூற, அதற்கிணங்கிய சம்பந்தர் ‘வாழ்க அந்தணர்’ (3.54) என்ற பதிகத்தை ஏட்டில் எழுதித் தமது அற்புதத் திருக்கரத்தால் வைகையாற்றில் இடுகின்றார். வைகையாற்றில் எதிரேறிச் சென்ற ஏடு திருவேடகத் திருக்கோயிலின் பாங்கே ஒதுங்கிய காட்சி, ஞானசமபந்தர் வாழ்வில் அற்புதமாக உருவாகி, மதுரை மக்கள் தொழுகின்ற வகையில் வரலாறு ஆகியது.[108]

<u>நாவுக்கரசர் வாழ்வில்:</u> <u>(1) நீற்றறையில் பிழைத்தது:</u> சமண மதத்தில் இருந்து சைவ மதத்தைச் சார்ந்து நாவுக்கரசர் வந்ததால், சமணர்கள் தீங்கு செய்யத் துணிகின்றனர். திருநாவுக்கரசர் சமயம் மாறிய செய்தியினைச் சமணர்கள் பல்லவ வேந்தனிடம் கூற, மதிகெட்ட மன்னன் ‘இக்கொடியவனை நீற்றறையிலிடுங்கள்’ எனப் பணிக்கின்றான். அவர்களும் நாவுக்கரசரை வெம்மைமிக்க நீற்றறையினுள் தள்ள, நாவுக்கரசர் ‘ஈண்டு வரும் துயருளவோ ஈசன் அடியார்க்கு’ என்று சிவபெருமானைத் தம்மனத்திலிருத்தித் தியானித்து வழிபட்டு, நீற்றறையினுள்ளே இறைவன் திருவடி நிழலென இன்புற்றமரந்திருந்தபொழுது, ‘மாசில் வீணையும் மாலைமதியமும்’ (5.10:1) என்று தொடங்கும் திருக்குறுந்தொகைப் பதிகத்தைப் பாடி உய்ந்தார்.[109]

<u>(2) விடந்தீர்த்தல்:</u> நீற்றறையில் உயிர் தப்பிய நாவுக்கரசருக்கு மேலும் சமணர்கள் துன்பம் தரக்கருதி நஞ்சு கலந்த உணவைக்கொடுத்து உண்ண வேண்டும் எனப் பணிக்க, இறைவனது ஐந்தெழுத்து மந்திரத்தை இரவும் பகலும் மறவாது ஓதும் மாண்புடைய நாவுக்கரசர் சமணர்களின் வஞ்சனையைத் தெரிந்து கொண்ட ‘நாதன் அடியார்க்கு நஞ்சும் அமுதாம்’ என்று கூறி, ‘துஞ்சிருள் காலை மாலை’ (4.70) என்ற திருநேரிசைப் பதிகத்தைப் பாடி உய்ந்தார்.[110]

<u>(3) கல்லினைத் தெப்பமாக மாற்றுதல்:</u> சமணர்களின் வன்மைக்கு இணங்காத நாவுக்கரசர் ‘கல்லொடு சேர்த்துக் கயிற்றினால் பிணித்துக் கடலில்’ தள்ளப்படுகிறார். கொலைத் தொழிலாளர்கள் சென்றபின், மெய்த்தொண்டராகிய திருநாவுக்கரசர் ‘எப்பரிசாயினும் ஆக ஓதுவன் எந்தையை’ என்று கூறி ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுகின்றார்.

‘சொற்றுணைவேதியன்’ எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் (4.11) பாடிப் போற்றுகின்றார். திருப்பதிகம் முடிந்ததும் கல் தெப்பமாக மாறிக் கடலில் மிதந்த நாவுக்கரசரை கரையேற்றியது.[111]

__மாணிக்கவாசகர் வாழ்வில்:__ __(1) நரி பரியாதல்__: சிவனின் ஆணைப்படி மாணிக்கவாசகர் திரு ஆலவாய்க்கு வருகின்றார். அப்பொழுது மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் அமைச்சராய் இருந்த மாணிக்கவாசகரைப் பாாத்து, ‘புரவிகள் வாங்குவதற்கு பொருள் கொடுத்தோம் அல்லவா? புரவிகள் எங்கே?’’ என வினவுகிறான். மாணிக்கவாசகர் ஆலவாய் அப்பனை வேண்டி, சிவபெருமான் உண்மைபக்தனான மாணிக்கவாசகரைக் காப்பாற்ற வேண்டி அந்த ஊரின் காடுகளில் திரியும் நரிகளைப் பரிகளாக்கி பாண்டியன் முன் கொணர்கின்றான். இக்காட்சியைக் கண்ட மாணிக்கவாசகர் சிவனை நினைந்து ‘நரிகளெல்லாம பெருங்குதிரையாக்கிய நன்றேயுன் பேரருளே’ என வியந்து நின்று துதிக்கின்றார்.[112]

__(2) பிட்டு வாணிச்சி:__ மாணிக்கவாசகர் பக்தியைப் புரிந்து கொள்ளாத மன்னன் மேலும் பல இன்னல்கள் செய்விக்கின்றான். இதனை நினைந்து மாணிக்கவாசகர் சிவனை வேண்டி சிவன் வைகையாற்றில் பெருவெள்ளம் உண்டாக்குமாறு செய்து, பிட்டுக்கு மண் சுமந்து, பிட்டுவாணிச்சியன் பக்தியினைப் பாண்டியனுக்கு உணர்த்துகின்றார்.[113]

__(3) ஊமைப்பெண் பேசுதல்__: புத்தர்களை வாதில்வெல்வதற்காகத் தில்லை என்னும் சிதம்பரத்தில் தங்குகின்றார் மாணிக்கவாசகர். அப்பொழுது ஈழவேந்தன் வாதவூரடிகளை வணங்கி நின்று ‘அடிகள் பெருமானே, நும் முன்னிலலையில் பேசவல்ல புத்தர்கள் ஊமைகளாயினர். பிறவி ஊமையாகிய என் மகளைப் பேசும்படி செய்தருள்வீராயின் யான் நுமக்கு அடியனாவேன்’ என்கின்றான். அடிகள் அம்மன்னன் மகளை அழைத்து வரச்செய்து, அவளை நோக்கி முன்பு தன்பால் புத்தகுருவிடுத்த வினாக்களுக்கெல்லாம் விடை கூறும்படி பணித்தருள்கின்றார். அவளும் அவ்வினாக்களுக்கெல்லாம் தக்கவாறு விடைபகர்ந்து அனைவரையும் வியப்புக் கடலில் ஆழ்த்துகின்றாள். இவ்வியப்பினை மாணிக்கவாசகர், ‘திருச்சாழல்’ பாடல்களாகப் பாடியருள்கின்றார்.

தம்பிரான் தோழர்வாழ்வில்: திருமுனைப்பாடி நாட்டு இளவரசராய்த் திகழ்ந்த நம்பியாரூரருக்கு மணப்பருவம் எய்துகின்றது. இந்த நிலையில் ஆலால சுந்தரரைத் தடுத்து ஆட்கொள்வதற்காகத் திருக்கயிலாயத்தில் முன்பு உறுதி கூறிய சிவபெருமான் மணக்கோலத்தில் நிற்கும் சுந்தரரை ஆட்கொள்ள வேதியர் வடிவில் வருகிறார். இறுதியில் வேதியராய் வந்தவர் சிவன் எனச் சுந்தரர் உணர்ந்து கொள்கிறார். இறைவனை நோக்கிப் பணிவன்புடன் உளங்கசிந்து வினவி நிற்கின்றார். ஆரூரரை நோக்கி அந்தணர் 'அன்பனே, யான் ஓலைகாட்டி நின்னை ஆட்கொண்ட பொழுது நீ என்னைப் 'பித்தன்' என்று மொழிந்தாயல்லவா? ஆதனால் என் பெயர் 'பித்தன்' என்றே பாடுவாயாக!' என்று அருளிச் செய்கின்றார். இறைவனின் பெருங்கருணைத் திறத்தை நினைந்துருகிய ஆரூரர் 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா' (7.1) என வரும் செந்தமிழ்ப் பதிகத்தினை இன்னிசையுடன் பாடிப் போற்றுகின்றார்.[114] இவ்வாறாகச் சுந்தரர் வாழ்வில் நடந்த பலவிதமான அற்புதங்களை ரெட்டியார் சுவைபட விளக்குவார்.[115]

5.அருளிச் செயல்களால் அறிபவை: நால்வகை நெறிகள்: சிவபெருமானை நோக்கி செய்யப்பெறும் செயல்கள் யாவும் சிவபுண்ணியங்கள் எனப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படுபவையாகும்.[116] இந்த நால்வகை நெறிகள் யாவும்

'விரும்பும் சரியை முதல்மெயஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே'[117]

என்ற தாயுமானவர் பாடலில் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக்காட்டுவர் பேராசிரியர். இந்த சரியை முதலிய மூன்றும் ஞானத்தின் வளர்ச்சிநிலைகளே என்பது தாயுமானவரின் கருத்தாகும். இவைபற்றிய குறிப்புகள் நால்வர் அருளிச்செயலிலும் காணப்படுவதை ஈண்டு எடுத்துக்காட்டுவது பொருத்தமாகும்.

(1) சரியை: ஆகமங்களில் விதித்தவாறு திருக்கொயிலில் அமைந்துள்ள இறைவனது உருவத் திருமேனியைச் செம்பொருள் என்று உணர்ந்து திருக்கோயிலில் அலகிடல், மெழுகல், பூக்கொய்து, நறுமலர்மாலை தொடுத்தல், புகழ்ந்து பாடுதல் முதலிய உடம்பின் செயல்களாக நிகழ்த்துவது; இதனைத் தாதமார்க்கம் (தொண்டுநெறி)

எனவும் வழங்குவர். இதனால் அடையும் பலன் 'சாலோகம்' அதாவது இறைவனின் உலகை அடைதல். இது 'பதமுத்த'[118] எனப்படும்.

(2) கிரியை: திருக்கோயிலில் எழுந்தருளிய சிவலிங்கத் திருஉருவாகிய அருஉருவத்திருமேனியைப் பொருள் என்று உணர்ந்து புறத்தேயும் அகத்தேயும் பூசனைப் புரிந்து வழிபடுதல். இதனை நம்பிஆரூரர் 'அழகர்த் திருப்பத்தூா் பதிகத்திலும்' (7.39) கூறியுள்ளதைப் பேராசிரியர் நினைவூட்டுவார். இதனை 'சாற்புத்திரமார்க்கம்' (மகன்மைநெறி) என வழங்குவர். இதனால் அடையும் பலன் 'சாமீபம்' என்பது. இ∴து இறைவனின் அருகிலிருத்தலாகும்.

(3) யோகம்: யோகமாவது இறைவனுடைய உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுள் மிக நுண்ணிய அருவருவத் திருமேனியே பொருள் எனவும், உருவமும், அருவமும் என்பர். இத்திருமேனியை வழிபடுவதற்கு முதலும் முடிவுமாய் அமைந்த திருமேனிகள் எனவும் உணர்ந்து, இறைவனை வழிபடுவது. இதனை நம்பி ஆரூரர் 'திருவாமுத்தூர்'' பதிகத்தில் (7.45) கூறுவதைக் காணலாம். இந்நெறியைச் 'சகமார்க்கம்' (தோழமை நெறி) என்று வழங்குவர். இதனால் அடையும் பலன் 'சாரூபம்' என்பது. 'சாரூபம்' என்பது, இறைவன் உருவினைப்பெறுதல்.

(4) ஞானம்: இதில் உடம்பின் தொழில் மனத்தின் தொழில் இரண்டையும் கைவிட்டு கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைக் கூடுதல் ஆகிய அறிவுத் தொழில்மாத்திரையால் இறைவனை வழிபடுதல். இதனை நம்பிஆரூரர் முறையே 'திருகேதிச்சுரத்து பதிகத்திலும்' (7.80), 'திருக் கழுக்குன்ற பதிகத்திலும்'' (7.81) கூறியுள்ளதைக் காணலாம். இந்த நெறியைச் 'சன்மார்க்கம்' (நன்னெறி) என்று வழங்குவர். இதனால் அடையும் பலன் 'சாயுச்சயம்' என்பது. 'சாயுச்சயம்' இறைவனை அடைந்து அவனோடு ஒன்றாதலாகும். இந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த ஆசிரியரின் சைவ சமயவிளக்கு சித்தாந்த முறைகொண்டு விளக்கும்.

தம்பிரான் தோழர் வாழ்வில்: (1) புலவர்க்கு அறிவுரை: நம்பியாரூரர் காலத்தில் பணக்காரர்களையும் பதவியிலுள்ளவர்களையும் அற்ப சலுகைகளைப் பெறுவதற்குப் புகழும் வழக்கம் இருந்தது. இன்றைய

நிலையும் அதுதானே? புலவர்கள் தம் புலமைத்திறத்தை சிறு சலுகைகட்கெல்லாம் அடகுவைக்கும் பழக்கத்தை வெறுத்தார் நம்பியாரூரர். இப்பழக்கத்தை அடியோடு ஒழித்துவிட்டு எல்லாம் தரவல்ல இறைவனைப் பாடித்துதித்து வேண்டுவன பெறுமாறு புகலூர்ப் பதிகமொன்றில் (7.34) இக்கருத்தை வெளியிடுகின்றார்.[119]

(2) அடியார்களைப் போற்றுதல்: இறைவன் துணையால் 'அடியார்க்கு அடியனாகின்ற' இறைவனே இவருக்கு அடியார்களது திருத்தொண்டின் திறத்தையும் சால்பினையும் உணரத்துகின்றார். திருத்தொண்டர்களைப் பாடுவதற்கு

'தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்" (7.39)

என்று அடியும் எடுத்து தருகின்றார். இதனால் தென்றமிழ்ப் பயனாய் வந்த 'திருத்தொண்டத் தொகை' என்ற அற்புதத் திருப்பதிகம் நமக்குக் கிடைக்கின்றது. சேக்கிழார்க்கும் 'திருத்தொண்டர் புராணம்' பாடுவதற்கு விதையாக அமைகின்றது.[120]

மாணிக்கவாசகர் வாழ்வில்: பாண்டியனிடம் விடைபெற்றுக் குதிரை வாங்க பொருள் எடுத்துக்கொண்டு வாதவூரைவிட்டுத் திருப்பெருந்துறை வருகிறார் மாணிக்கவாசகர். அங்கே திருப்பெருந்துறை இறைவனை துதிசெய்து அமைச்சர் வாழ்வைத் துறந்து, அடியார்களுடன் கூடி, அரசன் கொடுத்த பொருளை எல்லாம் ஆண்டவன் திருப்பணிக்காகச் செலவுசெய்கிறார்.[121] கருணைவடிவமான சிவனை 'திருத்தெள்ளேணம்' பதிகம்பாடி மகிழ்கிறார்.

நாவுக்கரசர் வாழ்வில்: நாவுக்கரசர் தொண்டு செய்வதில் சிறந்த உழவராகத் திகழ்ந்தார். உழவாரப்படையைத் தாங்கிக்கொண்டிருப்பவர் சிவகதியாகிய நற்பயிர் விளைவதற்கு உலக மக்கள் கடைபிடிக்க வேண்டிய முறைகளை 'மெய்மையாம் உழவைச் செய்து' (4.72) என வரும் திரு நேரிசையில் உருவகமாக விரித்துக்கூறிய முறை நம் உள்ளத்தை ஈர்ப்பதாகும்.[122]

ஞானசம்பந்தர் வாழ்வில்: திருத்தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய அன்னையார் பிறந்தஊர். பாணருடைய வேண்டுகோட்கிணங்கி இத்தலத்துக்கு ஞானசம்பந்தர் எழுந்தருளுகின்றார். யாழ்ப்பாணருடைய சுற்றத்தார்கள் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு போற்றுகின்றனர். பெரும்பாணரும்

ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும் பேறுபெற்றமையைத் தம் சுற்றத்தாருக்கு எடுத்துரைக்கின்றார். தம் உறவினர்கள் தாம்பெற்ற பேற்றினைக் கண்டு மகிழ்வார்கள் என்றுதான் தெரிவித்தார். இதனைக் கேட்ட பாணரின் சுற்றத்தார்கள் ‘நீவிர் திருப்பதிகத்தை யாழிட்டுத் தக்கமுறையில் வாசிப்பதனால், அதன் இசை யாண்டும் பரவுவதாயிற்று’ எனப் பாணரை நோக்கி முகமன் உரைக்கின்றனர்.

தம் உறவினர்கள் கூறியதைக் கேட்ட பெரும்பாணர் அதிர்ச்சியடைகின்றார். இறையருளால் பெறற்கரிய இசைஞானத்தைப் பெற்ற பிள்ளையாரின் பாடல்கள், கேவலம் தம் யாழின்மூலம் பெருமையடைந்தன என்ற சொற்களை உண்மைத் தொண்டராகிய அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஞானசம்பந்தரைப் பணிந்து திருப்பதிகத்தின் இசை அளவிலடங்காத் தன்மையதென்பதனைத் தம் சுற்றத்தாரும் பிறரும் அறிந்துகொள்ளும்படி பாடியருளுமாறு வேண்டுகின்றார். அவரது வேண்டுகோட்கிணங்க திருப்பதிகத்தின் இசை உலகர் கண்டத்திலும் கருவியிலும் அடங்காத வண்ணம் ‘மாதர் மடப்பிடியும்’ (1.136) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடித் திருத்தருமபுரத்து இறைவனைப் போற்றுகின்றார். இந்தப் பதிகப்பாடல்களில் மடக்கி மடக்கி வரும் சொற்கோவைப் பலவித தாளங்களில், பற்பல காலப் பிரமாணங்களில் பாடி முடிக்கின்றார். அதன்பின்னர் பெரும்பாணர் அந்தப் பதிகத்தைத் தமது யாழில் அமைத்துப்பாட முயல்கின்றார். அவரது முயற்சிகள் யாவும் பலிக்கவில்லை. இதைக் காணும் பாணரின் சுற்றத்தாருக்கு அப்போதுதான் பிள்ளைபிரானின் இசைஞானம் புரிகின்றது. பெரும்பாணர் ஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ‘இந்த யாழைத்தொட்டு வாசித்ததனால்தானே இந்த அவமானம் எனக்கு வந்தது? என்று சொல்லித் தம் கையிலுள்ள யாழை நிலத்தில் அறைந்து உடைக்க ஓங்குகின்றார். ஞானசம்பந்தர் அதைவாங்கி ‘சிவபெருமானின் திருவடிப்பெருமையெல்லாம் இக்கருவியில் அடக்க முடியுமா? ஆகவே நீவிர் இந்த யாழினைக்கொண்டே இறைவனின் திருப்பதிக இசையினை வந்தவாறு பாடி வாசிப்பீராக’ என்று கூறித் தம் கையிலுள்ள யாழினைப் பாணர் கையில் திரும்பக் கொடுத்தருளுகின்றார். இந்தப் பதிகம் ‘வியாழக் குறிஞ்சி’ என்ற பண்ணிலுள்ளது. ஆனால் இதுவே ஒரு யாழை முரிக்கக் காரணமாயிருந்தமையால் ‘யாழிமுரி’ என்ற பெயரைப் பெறுகின்றது.

திருத்தருமபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனும் ‘யாழ் முரி நாதர்’ என்ற பெயரைப் பெறுகின்றார். இவ்வரலாற்றுச் செய்தியினை தமக்கே உரிய முறையில் விளக்குவர் பேராசிரியர்.[123]

<u>6.கோயில் வழிபாடுகள்</u>: பண்டைக் காலத்தில், வேதகாலம், சங்ககாலம் உட்பட கோயில்கள் இருந்ததில்லை. இயற்கைச் சூழ்நிலையே வழிபாட்டிற்குரிய இடங்களாயின. வேள்வித் தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது. நதிக்கரைகளிலும் மரச்சோலைகளிலும் தெய்வவழிபாடு நிகழ்ந்து வந்தது. பண்டைய இலக்கியமாகிய பரிபாடலில்,

> **‘ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவக்**
> **கால்வழிக் கூறுநிலைக் குன்றமும்பிறவும்**
> **அவ்வவை மேல வேறுவேறுபெயரோய்**
> **எவ்வயினோயும் நீயே’**[124]

என்பதில் திருமால் ஆலம், கடம்பு, ஆற்றிடைக்குறை முதலிய இடங்களில் வேறு வேறு பெயர் உடையவனாக எழுந்தருளியிருப்பதாக கூறப்பெற்றிருத்தலைக் காணலாம். நாளடைவில் இத்தகைய விருட்சங்களே தலவிருட்சங்களாயின என்பது ஈண்டு அறியத்தக்கது. நாளடைவில் ஆகமத்தின் அடிப்படையில் திருக்கோயில்கள் கட்டுவிக்கப்பட்டன. இப்படி அமைந்த ஆலயங்கள் மானிட சரீரம் என்னும் ஆலயத்தின் புறச்சின்னங்களாகும். அண்டமெங்கும் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் குடிகொண்டிருக்கும் தெய்வம் மானிட உடலில் சிறப்பாக வீட்டிருக்கின்றது என்பது ஆன்றோர்கள் வகுத்த கோட்பாடு. திருமூலர் திருவாக்கு இதற்கும் சான்றாக அமைகிறது.

திருக்கோயிலின் அமைப்பைப்பற்றி பேராசிரியர் ரெட்டியார் வியத்தகு முறையில் விளக்கி உள்ளார்.[126] திருக்கோயில்களில் தெய்வத்திற்கு நடைபெறும் பூசைமுறைகளும் நன்கு விளக்கமடைகின்றன. திருமுழுக்கு, நைவேதியம், அலங்காரம், முதலியவற்றை நன்கு விளக்குவதுடன் அங்கு நடைபெறும் கிரியைகளுக்கும் தத்துவ விளக்கம் உண்டென்றும் காட்டுவார் பேராசிரியர். அந்தக் கடவுள் ஆராதனையில் ஐம்பொறிகள் இடம் பெறுகின்றன. இதை விளக்குவது வாழ்க்கையை ஒட்டி அமைந்துள்ளது. இந்த விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாக, தில்லை நடராசர் ஆலயத்தின் நடைமுறை அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுவர்[127] பூசையின் பொருளை நன்கு விளக்கிய[128] ஆசிரியர் மானசபூசை, பாகிய பூசை என இருவகையாக

எடுத்து விளக்குவது சிறப்பாக அமைகின்றது. மானச பூசையே சிறந்ததென்பது ஆன்றோர் கொள்கை.

பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் கோயிலின் இன்றியமையாமையை விளக்கும்போது ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்ற ஔவைபாட்டியின்[129] வாக்கையும், ‘திருக்கோயில் இல்லாததிருவில் ஊரும்’[130] என்ற அப்பர் தேவாரத்தையும் எடுத்துக்காட்டி விளக்குவர். சைவசமயத்தில் ஆசிரியர்களால் போற்றப்பட்ட திருத்தலங்கள் பாடற்பெற்ற தலமெனவும் வைப்புத் தலமெனவும் இருவகையாகப் பிரித்து பேசப்படும். சைவசமய குரவர் ஒருவரின் தனி திருப்பதிகத்தினைப் பெற்ற தலங்கள் முதல்வகையைச் சேர்ந்தவை. இப்பொழுது நமக்கு கிடைத்துள்ள தேவாரப்பதிகங்களில் தனிப்பதிகம் பெற்றுள்ள பாடல்தலங்கள் 274 ஆகின்றன. இவற்றுள் சோழநாட்டுத் திருத்தலங்கள் 190; ஈழநாட்டுத் தலங்கள் 2; பாண்டிநாட்டுத் தலங்கள் 14; மலைநாட்டுத் தலம் சேரநாட்டுத் தலம் 1; கொங்குநாட்டுத் தலங்கள் 7; துளுநாட்டுத் தலங்கள் 22; தொண்டைநாட்டுத் தலங்கள் 5; ஆகப் பாடல் பெற்றவை 274 ஆகின்றன.[131] வைப்புத்தலங்கள் 237 என கணக்கிட்டுள்ளனர். இவற்றுள் பலவற்றின் நாடு முதலியன நன்கு தரப்படவில்லை. தெரிந்தவற்றுக்குரிய குறிப்புகளுடன் ஆய்வாளர் வெளியிட்டுள்ளார்.[132]

திருத்தலப்பெயர்கள் வழங்கும் முறை: தேவராத்திருப்பதிகங்களில் குறிக்கப் பெற்றுள்ள தலங்களின் பெயர்கள் ஒருவித அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ளமை சிந்தைக்கு நல்விருந்து. அவை நானிலம் பற்றிய பெயர்கள், மாறிவரும் பெயர்கள், பிற பெயர்கள், அடைமொழியால் பெயர்பெற்றவை முதலியவை மிக அற்புதமாக பாகுபடுத்தப்பெற்று விளக்கம் பெற்றுள்ளன.[133]

சிற்றுடலின் மூலம் நமது சிற்றுயிர் ஒளிர்கின்றது. பேருடலாகிய இயற்கை முழுவதன் மூலம் இறைவன் ஒளிர்கின்றான். இன்னும் இயற்கைக்கு அப்பாலும் அவன் உள்ளான். ஆதிஅந்தம் காட்டாதமுதலாய் நிற்கின்றான். இயற்கையின் வாயிலாக அவனது ஒரு சிறு கூறு மட்டும் மிளிர்கின்றது.

‘அண்டத்தைப் போலவே பிண்டமும்’ என்பது வழிவழியாக வழங்கிவரும் ஒரு முதுமொழி. இறைவனை அறிவதற்கு இயற்கை அல்லது பிரகிருதியே ஓர் உபாயம் ஆகின்றது. எல்லையில்

அடங்காது ‘பேர் அண்டமாய்’ இருக்கும் பிரகிருதியின் அணுபோன்ற ஒரு சிறு பகுதியே நமது உடல். பிரம்மாண்டத்தின் பெருமை முழுவதும் சிறு பிண்டமாகிய நமது உடலில் உள்ளது. நமது உடலையும் அதனுள் ஒளிர்பவனையும் உள்ளபடி தெரிந்துகொண்டால் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனையும் தெரிந்துகொள்ளக்கூடும். ‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’.[134]

திருக்கோயிலின் அமைப்பும் நம்முடைய உடலின் அமைப்பும் ஒன்றுபோல் உள்ளன. உலகிலும் உடலிலும் உள்ள தத்துவங்களை விளக்குவதற்கு ஆலயங்கள் வந்துள்ளன. ஆகமங்களில் விதித்துள்ளபடியே அவை அமைதல்வேண்டும் என்பது கோட்பாடு. ஆலயங்கள் அனைத்திலும் சாலச்சிறந்ததாக இருப்பது நம் உடல். ‘உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்’ என்பது ஒரு பெரியாரின் திருவாக்கு. எல்லாப் பெரியார்களுமே மானிட சரிரமே தேவாலயங்களுள் சிறந்தது என்று வற்புறுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக

‘நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர்; பூசை கொள்ளவாராய் பராபரமே” [135]

என்பது தாயுமான அடிகளின் திருவாக்கு. இங்ஙனமே அப்பர் பெருமான், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் என்ற ஞானச்செல்வர்களும் அருளியுள்ளனர்.[136] உயிருக்கு இருப்பிடம் உடல். உடலைக்கொண்டு அல்லாது உயிரை அறியமுடியாது. இருப்பிடத்தின்மூலம் உயிரின் உயர்வு வெளியாகின்றது. உயிர் அனைத்திற்கும் பொதுவாகவும் ஆதாரமாகவும் இருப்பது எதுவோ அதுவே கடவுள்-பதி. ஆதலின் அது உயிருக்கு உயிர் என்று சொல்லப்படுகிறது. பேரறிவிற்கும், அன்புக்கும், ஆற்றலுக்கும் உறைவிடம் அதுவே. பார்க்கும் இடம் எங்கும் அது நீக்கமற நிறைந்துள்ளது. அதன் முழுமையான காட்சி வரும்போது வாழ்க்கையின் இரகசியமெல்லாம் நமக்குத் தெளிவாகி விடும். அக்காட்சியைப் பெறுதற்கும் வழி ஒன்று உண்டு.

ஆலயம் ஒன்று உடலென்னும் ஆலயத்தில் புறச்சின்னம் ஆகும். மூலஅமைப்பாகிய உடலில் உள்ள தத்துவங்களுக்கு அது ஒத்திருத்தல் வேண்டும். தேசப்படத்தின் துணைக்கொண்டு நமக்கு இயல்பாக அமைந்துள்ள உடலென்னும் ஆலயத்தின் தத்துவங்களை நாம் அறிந்துகொள்ளமுடியும் என்று திருக்கோயிலின் அமைப்பை விளக்குவார் பேராசிரியர்.

திருக்கோயிலுக்குச் செல்லும் பக்தனின் மனம், மொழி, மெய் ஆகியவை முக்கரண சுத்தியுடன் இருத்தல் வேண்டும் என்பது கோட்பாடு. திருக்கோயிலுக்குள் நுழையும்போதே உலக விவகாரங்களை ஒதுக்கிவிடுதல் வேண்டும். 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வத்தின் மீது' மனம் குடிகொள்ளச் செய்தல் வேண்டும். பதைபதைப்புக்கோ வேகம் நிறைந்த நடமாட்டத்திற்கோ ஆங்கு இடம் இல்லை. அமைதியும் சாந்தமும் வடிவெடுத்தவனாக வழிபடுவோனே உண்மையான பக்தன். திருககோயிலுக்குள் கூச்சலிட்டுப் பேசுவோர் திருக்கோயிலின் புனிதத்தன்மையை ஒருவகையில் பாழ்படுத்துவர் ஆவர். ஒருவரோடு ஒருவர் உரையாடாது வழிபாடுசெய்வது சாலச் சிறந்தது. வழிபாட்டை முடித்தான பிறகு ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்திருந்து தியானம் செய்வது முற்றிலும் அவசியம். பல பெரியவர்கள் ஆழ்ந்து எண்ணிய உயர்ந்த எண்ணங்கள் இவன் மனத்தில் பிரதிபலிக்கும். இதுவே ஆலயவழிபாட்டின் பெரும்பேறு.

<u>பூசைமுறைகள்</u>: பூசையில் ஆண்டவன் திருமேனிக்கு திருமுழுக்காட்டுதல், அணிசெய்தல், ஆராதனம் என்ற மூன்று நிலைகள் உள்ளன. இந்த செயல்கள் யாவும் ஆன்மா பக்குவப்படுவதற்குக் குறியீடுகளாகும்.[138] இதனைப் பேராசிரியர் நன்கு விளக்குவர். திருக்கோயிலைப்பற்றிய விரிவான தத்துவதம் தில்லையில் திருநடனம் புரியும் நடராசர் ஆலயத்தில் அமைந்துள்ளதை தெளிவாக விளக்குவர்.[139] பூசையின் தத்துவப்பொருளையும் தெளிவாக விளக்குவர்.[140] பேராசிரியர் பூசையை இருவகைப்படுத்திக்காட்டுவர். அவை 1) மானச பூசை, 2. பாகியபூசை, இவற்றின் விளக்கத்தையும் அவர்தம் நூலில் காணலாம். இந்த இரு பூசைகளிலும் மானச பூசையே சிறந்ததாகும் என எடுத்துக்காட்டுவார்.

<u>இந்த இயலில கண்ட முடிவுகள்</u>

1. சைவசமயம், வைதிக சமயம், வேதங்கள் முதலிய பண்டைய நூல்கள்தாம் அதற்கு மூலம் என்றும் காட்டப்பெற்றது.
2. சைவசமய தத்துவம்-பதி பசு பாசம் என்ற மூன்றில் அடங்கியுள்ளமை காட்டப்பெற்றது.
3. 'சங்காரகாரகனே' முழுமுதற்கடவுள் என்பது சைவசமயக் கொள்கை என சுட்டி விளக்கப்பெற்றது.
4. சைவசமய உண்மைகள், 'சற்காரியவாதம்' என்ற தத்துவத்தின அடிப்படையில் தெளிவாக விளக்கப்பெற்றன.
5. இறைவனது ஐந்தொழில்கள் இன்னவை என விளக்கப்பெற்றன.

6. பாசஞானம், பதிஞானம் என்பவற்றை விளக்கி, பதிஞானத்தால் சத்து-சித்து-ஆனந்தம் என்ற கோட்பாடுகள் தெளிவுறுத்தப் பெற்றன.

7. ‘ஆன்மா’’ என்பது நிலைத்த பொருள் என்றும், ஆன்மாக்கள் சகல கலர், விஞ்ஞான கலர், பிரளயா கலர் என்ற மூன்று வகையாகப் பேசப்பெறும் என்பது விளக்கப்பெற்றுள்ளன.

8. ‘ஆன்மா’ உய்வதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்குமுறைகள் அனுட்டிக்கப்பெற வேண்டும் என்பது விளக்கப்பெற்றுள்ளது.

9. பாசம் இன்னது என்பதும், சைவ சமயத்தில் ஆணவ மலமே சிறப்புக்குரிய கோட்பாடு என்பதும் விளக்கப் பெற்றுள்ளது.

10. ஆணவ மலம், நெல்லிற்கு உமி, செம்பிற்கு களிம்பு என்ற எடுத்துக்காட்டுகள் கொண்டு தெளிவாக்கப்பெற்றுள்ளன.

11. ஆணவ மலத்தை நீக்குவதற்கு கன்மம், மாயை என்பவை இவற்றால் கட்டப்பெறுகின்றமை விளக்கப்பெற்றுள்ளது.

12. பிரார்த்தம் (நுகர்வினை), ஆகாமியம் (எதிர்வினை), சஞ்சிதம் (பழவினை) ஆகியவை தெளிவாக விளக்கி வாழ்க்கையுடன் பொருத்தியும் காட்டப்பெற்றுள்ளன.

13. ‘தீக்கை வகைகள்’ இன்னவை என்பதும் அவற்றின் தாற்பாரியம் இன்னது என்றும் தெளிவாகக் காட்டப்பெற்றறுளள.

14. முத்தி ‘பரமுத்தி’, ‘அபரமுத்தி, ‘பதமுத்தி’ என்று வழங்கப்படுத்தப்பெற்று அவற்றால் இறைவனை அடையும் நிலைகளான சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சயம், விளக்கப் பெற்றுள்ளன.

15. சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாதமார்க்கம் என்ற நால்வகை நெறிகளில் இறைவனை அடையலாம் என்பதும் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாக சைவ சமயக் குரவர் நால்வரும் அமைவர் என்பதும் விளக்கப்பெற்றுள்ளது.

16. திருக்கோயில்கள் வகைகளும், அவற்றின் வழிபாட்டு முறைகளும் விளக்கப் பெற்றுள்ளன.

<u>அடிக்குறிப்புகள்:</u>

1. சிவஞானபாடியம் - ப. 18
2. சம். தேவா. 3: 23: 6
3. திரு மந். 8-ம் தந்திரம், 6ஆம் அந்தம்- பாட்டு – 28
4. சித்தியார் - 8: 2 : 15
5. தேவா. 6: 50 :4
6. சுந்த. தேவா. 7: 97: 1
7. திருவா. அன்னைப்பத்து, பாடல் 1
8. திருமந். வேதசிறப்பு – பாடல் 1
9. சிவஞானபாடியம்- பக். 86, 87
10. பெரியபு. உருத்திரபசு. புரா. பாடல் - 4
11. மேலது – பாடல் - 8
12. திருவா. கண்டபத்து. பாடல். 10

13. பெரிய. திருநீலநக். புரா. பாடல் - 5
14. சுந்த. தேவா – 7ஆம் திருமுறை 84வது பதிகம்.
15. திருவா- கீர்த்திரு அக-அடி 9 -10
16. அப். தேவா – 5ஆம் திருமுறை 15ஆம் பதிகம், பாடல் 4
17. திருவா, சிவபு – அடி – 4
18. ஞான. தேவா: 3: 54 : 8
19. உண்மை. நெறி. விளக்கம் - காப்பு
20. சை. ச. வி. கடிதம் - 5
21. மேலது – கடிதம் - 4
22. திருமந் - முதல்தந் - உபதேசம் - 3
23. சை. ச. வி – பாயி – ப. 5
24. மேலது – பக் - 36-41 ‘சற்காரியவாதம் - பாரியங்கள் பலவும் தோற்றத்திற்கு முன்னும் தத்தம் காரணங்களில் உள்ளனவே என்பது சத்-உள்ளது, சற்காரியம் - உள்ளதாகிய காரியம்’ – ‘இல்லதுதோன்றும் என்பவர் அசற்காரியவாதிகள் ஆவர்’.
25. சை. ச. வி. பக். 45 -46
26. சி-ஞா, போ- சூத் - 1 (வார்த்திகம் - 7)
27. மேலது - சூத்திரம் - 1 (வார்த்திகம் - 7)
28. கம்பரா. யுத்த - மூலபலம், பாடல் - 231
29. சொரூபம்-தன்இயல்பு, தடத்தம்-அயலிலுள்ள பொருட்கள் இருப்பது.
30. சமயங்கள் பதிக்கு கூறும் ‘சத்துசித்து ஆனந்தம்’ என்ற இயல்புகள் ஒருவகையில் பதியின் பொதுஇயல்புகள் ஆகின்றன.
31. தா, பா-ஆசையென்னும் - பாடல் - 30
32. குறள் - 9ல் ‘எண் குணங்கள்’ இவை என்பதை எடுத்துக்காட்டுவர் பரிமேலழகர்.
33. சுந், தேவா. 1. 128 அடி 1-2, புறம் - 1
34. ‘உடையாள் ஒன்றன் நடுவிருக்கும்’ என்ற மணிவாசப் பெருமானின் திருப்பாடலை எடுத்துக்கொண்டு சொரூபநிலை, தடத்தநிலைகளை எடுத்துவியக்கம் பேராசிரியரின் திறம் வியக்கத்தக்கது. மணிவா. பக் 364 – 366 திருவா. 376ஆம் பாடல்.
35. சை. ச. வி. பக் 57 -58
36. பா. பா. மகாசக்தி வாழ்த்து – 3
37. சை. ச. வி. ப. ப.58
38. கம்பரா. காப்பு – 1
39. திருவா – திருவெம் - 12 (அடி – 4)
40. திருவா – திருவெம் - 11 (அடி – 5)
41. தனு-உடம்பு,கரணம்-மனம் முதலிய உட்கருவிகள்,(அந்தக் கரணங்கள்) புவனம்-உலாவிடம், போகம்-நுகர்ச்சிப்பொருள்.
42. இது பின்னர் விளக்கப்படும்.
43. சி. ஞா. போ. சூத்திரம் - 2.
44. சை. ச. விள – பக் 62–72
45. மேலது, கடிதம் - 10
46. மேலது, பக் 82
47. மேலது, பக் 88, 90.

48. திருவா – சிவபு- அடி – 3, கோகழி – திரும்பெருந்துறை
49. மேலது, அடி 74
50. மேலது – கீர்த்தி திரு அகவல் - அடி – 61
51. தா. பா. தேசோமயானந்தம் பாடல் - 11
52. மேலது – ஆகாரபுவனம் - பாடல் - 18
53. சை. ச. வி- பக் 94, 95
54. மேலது – கடிதம் - 15
55. மேலது – பக் 117-119
56. மேலது- கடிதம் - 17
57. சி.ஞா. போ. 3, அதிகரணம் - 6
58. தா. பா- உடல் பொய்யுறவு – 22
59. சிவஞானபோதம் - சூத். 7
60. மணிவாசகப் பெருமானைத் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் குருவாகிவந்து ஆட்கொண்டதும் இறைவன் மௌன குருவாகிவந்து தாயுமானவரை ஆட்கொண்டதும் நல்ல எடுத்துக்காட்டுகள்.
61. சித்தியார் - 4 – 37
62. சை. ச. வி. பக். 164 – 168
63. மேலது – பக். 169-170 வைணவத்தில் ஆன்மாக்கள் மூவகைப்படும். பக்தர்கள் (தளைப்பட்டிருப்பவர்கள்), முத்தர்கள், நித்தியசூரிகள் என்று இவர்கள் வகைப்படுத்த பெறுவர். இதனைப் பேராசிரியர் ரெட்டியாரின் ‘முத்திநெறி’ என்ற நூலில் பக்-27ல் கண்டு தெளியலாம்.
64. மலங்களின் செயல்களைப் பேராசிரியர் மாணிக்கவாசகர் என்ற நூலிலும் பொருத்திக்காட்டி விளக்குவர். மாணிக்கவாசகர் - பக். 354 – 356.
65. சி. ஞா. போ- சூத்திரம் - 2, அதிகரணம் - 2, வெண்பா – 8
66. சிவப்பிரகாசம் - 20, சித்தியார் 2:80
67. சை. ச. வி- பக் 176-178. ஆணவமலத்தின் இயல்பை மாணிக்கவாசகர் என்ற இந்த ஆசிரியரின் நூலில் திருவாசகத்திலுள்ள சில கூற்றுகளை அகச்சான்றுகளாகக்கொண்டு தெளிவாக விளக்குவர்.
68. மேலது: பக். 179-180. மேலும் பேராசிரியர் எழுதிய நினைவுக் குமிழிகள் பகுதி-4 என்பதிலும் இந்த ஆணவமலத்தின் செயற்பாட்டைப்பற்றி நேரில் கண்ட நிகழ்ச்சிகளால் விளக்குவது படிப்போரை மயிர்சிலிக்க வைக்கின்றது.
69. மேலது – கடிதம் - 2. 5
70. மேலது, பக். 192
71. மேலது, பக்- 197-198 ‘மானத கன்மம்’ குறள் - 282 ‘வாசிக தன்மம்’ குறள் - 194, ‘காயிக கன்மம்’ குறள் - 310
72. மேலது, பக். 207 – 208
73. மேலது, பக். 215 – 220
74. மேலது, கடிதம் - 30 – 31
75. மேலது- பக். 238 - 256

76. அத்துவா என்பதற்கு ‘படிவழி’ என்பது பொருள்.
77. நாட்டுக்கோட்டை தனவணிகர்கள் இப்பணியில் முன்னணியில் நிற்கின்றனர் என்பது நாடறிந்த உண்மை.
78. சித்தியார் - 8: 19
79. மேலது – 20
80. எட்டு உறுப்புக்களாவன: இயம், நியமம், ஆசனம், சிராணயாமம், பிரத்தியாகரம், தாரணை, தியானம், சமாதி என்பவையாகும். இவை அட்டாங்கயோகத்தின் படிகளாகும்.
81. சித்தியார் - 22
82. மேலது, 27
83. அப். தேவா - 6: 97 :10
84. பா. க. கோவிந்தன் பாட்டு – 3.
85. பெரியபு. திருகட்டச் சிறப்பு – 8 , பராபரம் - 16
86. சை. ச. வி. – பக். 288 – 292
87. மேலது, கடிதம்-38
88. மேலது, பக். 310, 313.
89. தா. பா. பராபரம் 157
90. முத்திநிச்சயம் - பாடல் - 25
91. சை. ச. வி- பக். 331-339
92. மேலது – பக் 343 – 346
93. தா. பா: பராபரக்கண்ணி
94. தாழ்த்தபட்ட குலத்தவராகிய திருநீலகண்டயாழ்பாணருக்குச் செய்த பாராட்டும், சிறப்பும், மரியாதையும் திருநீலநக்கர் இல்லத்தில் பாணர்க்கு மிக உயரிய நிலை அளிக்கச் செய்தும், மறைமுகமாக சமூகப்புரட்சி செய்ததும் இவர் வாழ்க்கையின் சிறப்புகள். – பக். 315
95. இந்த இயலில் யாண்டும் எடுத்துக்காட்டப்பொறாமையால் ஈண்டு எடுத்துக்காட்டப் பெறுகிறது.
96. சுந்த. தேவா. 7: 83: 9
97. பெரியபு. திருஞானசம். புரா. 266
98. நாவுக்கரசர் - பக். 295 – 296
99. அப். தேவா – 5. 90. 2
100. தம்பிரான் தோழர் - பக். 168 – 171
101. மாணிக்கவாசகர் - பக். 326
102. ஞானசம்பந்தர் - பக். 312
103. மேலது–பக். 326, மேலும் சிவபுரா.ஆடி1; அச்சோ – 7 காண்க
104. மாணிக்கவாசகர் - பக் - 333 – 334
105. ஞானசம்பந்தர் - பக் - 215 – 216 அடிக்குறிப்பு – 8
106. மேலது, பக். 222. 223
107. மேலது, பக். 11
108. மேலது, பக் 223. 224
109. நாவுக்கரசர் - பக். 30,31
110. மேலது, பக். 32 – 33
111. மேலது, பக். 36 – 37

112. மாணிக்கவாசகர் - பக் . 125 – 127
113. மேலது – 128 – 130
114. தம்பிரான் தோழர் - பக். 16-17
115. மேலது, 25-36
116. சை. ச. வி – கடிதம் 38–40
117. தா. பா. பராபரம் 757
118. பதமுத்தி–என்பதை சைவசமய விளக்கில் கண்டு தெளியலாம்
119. தம்பிரான்தோழர் - பக். 209
120. மேலது, பக். 211 – 213
121. மாணிக்கவாசகர் - பக். 23 – 33
122. நாவுக்கரசர் - பக். 302 – 303
123. ஞானசம்பந்தர் - பக். 140 – 142
124. பரிபா. 4 : அடி 67 – 70
125. திருமந் - மூன்றாந்தந்திரம் காயசித்தி உபாயம் - 2.
126. சை. ச. வி – வழிபாட்டியால் பக். 381 – 389. ஒப்பிடுக: தா,பா.பராபரம்-5 அப்.தேவா.4.7:6, பூதத்தாழ்வார்-இரண்ட. திருவந்-1 திருவாய் - (4:3:2)
127. மேலது, வழிபாட்டியல் ப. 394
128. மேலது, பக் 401 – 402
129. ஔவைப்பாட்டி – உலகநீதி
130. அப், தேவா. 6 :95 : 2 :5
131. தம்பிரான்தோழர் - ப. 272
132. பன்னிருதிருமுறை வரலாறு பகுதி-1,பிற்சேர்க்கை பக் 694-721
133. தம்பிரான்தோழர்-பக். 223-232
134. சை. ச. வி. – வழிபாட்டியல் - பக். 396 – 397
135. தா. பா. பராபரம் - 15
136. அப். தேவா. 4.75.4, 4.76.4, இரண்.திருவந்-1, திருவாய் 4.3.:2
137. சை. ச. னி-பக் 381-387
138. மேலது, கடிதம்- 50, பக். 390-394
139. மேலது, பக். 394-395
140. மேலது, பக். 399 – 402.





ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ VI

இயல் - 11

பயண இலக்கியத் தமிழ்

பகுதி 6 :<>: இயல் – 11

பயண இலக்கியத் தமிழ்

**‘மூர்த்திதலம் தீரத்ததம் முறையால் தொடங்கினார்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே’ (பராபரமே-156)**

பயண இலக்கியத்தமிழ் தமிழுக்குப் புதிதல்ல; ‘செங்கோன்றரைச் செலவு’ என்ற ஒரு பயண நூலைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கேள்விப்படுகின்றோம். அண்மையில் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்கள் ‘என் இலங்கைச் செலவு’ என்ற ஓர் கட்டுரையை எழுதினார். இன்றும் பலர் வெளிநாட்டுக்குச் சுற்றுலா சென்று வருகின்றனர். அவர்களிலும் எழுத்துப் பழக்கம் உடையவர்களில் சிலர் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இவை எல்லாம் ‘உலகாய்த’ நோக்கைக் குறிக்கோளாகக் கொண்டு வெளியிடப்படுபவை.

பக்தி இயக்கக் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும், ஊர் ஊராகச் சென்று திருத்தலங்களையும் ஆங்கு எழுந்தருளியிருக்கும் கடவுளர்களையும் மனங்கரைந்து பாடிய பாடல்கள் தோன்றிய அன்றே பயண இலக்கியம் புனிதம் அடைந்து திருத்தலப் பயண இலக்கியமாக முகிழ்த்து விட்டது. பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் அவர்கள் வைணவத் திருத்தலங்கள் 108ல் 102 திருத்தலங்களை நேரில் பார்த்து அநுபவித்து அந்த அநுபவத்தை ஆறு திருத்தலப் பயண நூலாக வெளியிட்டுள்ளார். இங்ஙனமே சைவத் திருத்தலங்கள் 274ல் ஒரு சிலவற்றை நேரில் பார்க்க வாய்ப்பு இல்லாது போயினும், சமய சைவர்களாகிய அப்பர், ஞானசம்பந்தர், சுந்தர மூர்த்திகள், மாணிக்கவாசகப் பெருமான் ஆகியோர் பயணம் செய்து ஆங்காங்குள்ள திருத்தலங்களையும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளையும் நேரில் கண்டு அநுபவித்த அநுபவத்தைப் பேராசிரியர் ரெட்டியார் கற்பனைக் கலந்த பக்தியாக அநுபவித்து அவர்கள் சென்ற பயணத்தை நான்கு நூல்களாக வடித்துத் தந்துள்ளார்கள். ஆக, இவருடைய திருத்தலப் பயணநூல்கள் மொத்தம் பத்தாகின்றன. இவற்றை இந்த இயலில் ஆய்வாளர் விளக்குகின்றார்.

<u>வைணவத் திருத்தலங்கள்:</u> வைணவத் திருத்தலங்களை திவ்விய கவிப்பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

ஈரிருபதாம் சோழம் ஈரொன்பதாம் பாண்டி

**ஓர்பதின்மூன் றாம்மலைநாடு ஓரிரண்டாம்-சீரநடுநாடு
ஆறோடுஊரிட்டுத் தொண்டை அவ்வடநாடு ஆறிரண்டு
கூறுதிரு நாடொன்றாக் கொள்**[1]

என்ற வெண்பாவில் வகைப்படுத்திக் காட்டுவார். இவற்றின் விவரம் பிறிதோர் இடத்தில் விளக்கப்பெற்றுள்ளது.[2] இந்த 108 திருப்பதிகளின் பெயர்கள் ஆழ்வார்களின் பாசுரங்களில் பெயரளவில் இடம் பெற்றாலும் அவற்றை வைணவப் பெருமக்கள் 'ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருப்பதிகள்' என்று கொள்வர்.

<u>சைவத் திருத்தலங்கள்:</u> சைவ குரவர்கள் நேரில் சென்று பதிகங்களாகவும் சிலர் தனிப்பாடல்களாகவும் பாடி அநுபவித்த தலங்களைப் பாடல்பெற்ற தலங்கள் என்று வழங்குவர். இவற்றின் தொகை 274. நேரில் செல்லாமல் அவர்கள் திருப்பாடல்களில் இடம்பெற்ற தலங்களை 'வைப்புத் தலங்கள்' என்று வேறுபடுத்திக் காட்டுவர். இவற்றின் தொகை 237 ஆகக் கணக்கிட்டுள்ளனர். இவைபற்றிய விவரங்கள் பிறிதோர் இடத்தில் விளக்கப்பெற்றுள்ளது.

<u>பேராசிரியர் ரெட்டியாரின் திருத்தலப் பயணம்</u>: 25 ஆண்டுகளாக விடாது முயன்று பிஎச்.டி. பட்ட ஆய்வுக்குப் பதிவுபெற்றார். இந்த முயற்சி துறையூர், காரைக்குடி, திருப்பதி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்றது. வைணவத் தலமாகிய திருப்பதியில் பதிவிற்கு இசைவுபெற்றதால், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் என்ற வைணவ நூலை (நம்மாழ்வார் தத்துவம்) ஆய்வுக்கு எடுத்துக்கொண்டார். பதிவுபெற்ற துறையும் வடமொழித் துறை. அங்குள்ள இணைப் பேராசிரியர் ஒரு வைணவர். இவர் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஓரளவு பயிற்சி பெற்றவர். ஆகவே, இவரை வழிகாட்டியாகக்கொண்டு ஆய்வு தொடங்கினார். இந்த ஆய்வு 'புண்ணியமும் புருஷார்த்தமுமாக' அமைந்தது. ஆகவே, ஆய்வை ஒட்டி 108 வைணவத் திருத்தலங்களை நேரில் பார்த்து அநுபவிக்க வேண்டும் என்று திட்டத்தை தாமாக வலிந்து ஏற்படுத்திக்கொண்டார். அதனால் ஆய்வுசெய்யும் காலத்திலேயே விடுமுறை நாடகளில் 1964-1971 முடிய திருத்தலங்களைப் பகுதி பகுதியாக 30 ஆயிரம் ரூபாய் செலவில் பார்த்து மகிழ்ந்தவர். இந்தப் பயண அநுபவங்களில் திருத்தலங்களின் இருப்பு, அவை அமைந்திருக்கும் சூழ்நிலை, அங்கு செல்லும் வழிகள், தங்கும் வசதிகள் போன்றவற்றை தம்முடைய பயணநூல்களில் ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளார். இவற்றிற்கெல்லாம் மேலாக ஆழ்வார்களின் பக்தி உணர்ச்சியின் கொடுமுடிகளைக் காட்டுகின்றார்.

அவர்தம் பாசுரங்களின் சொல்வளத்தையும், வைணவ ஆசாரியார்களின் உரை நயத்தையும் எடுத்துக்காட்டி மகிழ்கின்றனர். அகப்பொருள் துறைகள் அமைந்துள்ள பாசுரங்களின் சிறப்பைக் கண்டு தாம் சுவைப்பதுமில்லாமல் படிப்போரையும் சுவைக்க வைக்கின்றார். சில இடங்களில் 'இரகசிய சித்தாந்தங்களின்' அறிய குறிப்புகளையும் சுட்டத் தவறுவதில்லை. இந்த நூல்களைப் படிப்போரிடையே வைணவ இலக்கியத்தின்பால் அவாவினையும், விரும்புவர்களிடம் பக்தி உணரச்சியினையும் எழுப்பிவிட்டால் அதுவே தமது முயற்சிக்குக் கிடைக்கும் பரிசாகக் கருதி மகிழ்வடைகின்றார்.[3]

<u>பயணம் துவங்கும் முன் சிந்தனை:</u> பேராசிரியர் ரெட்டியார் ஒவ்வொரு திருத்தலத்திற்கும் புறப்படும் முன் அருளாளர்கள் தினசரி தியானம் செய்து தம்முடைய பணியைத் துவங்குவதுபோல, சில வைணவ தத்துவத் கருத்துக்களைச் சிந்தித்து அதனை அசை போட்டுக்கொண்டு அத் திருத்தலத்திற்கு ஏகுவதை இவருடைய ஆறு வைணத்திருத் தலங்களைப் பற்றிய நூல்களில் காணலாம்.

1.திருவண்பாரிசாரத்திற்குச் செல்லும்முன் 'அடியோமோடும் நின்னொடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு' என்ற பெரியாழ்வாரின் திருவாக்கினை நினைத்துப் புறப்படுகின்றார். இதனை அசைபோட்டுக்கொண்டே செல்கின்றார்.[4]

2. திருவாட்டாறு என்ற திருத்தலத்தைச் சேவிக்கப் புறப்படும்முன் இறைவனுடைய ஐந்து நிலைகளாகிய பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அச்சாவதாரம் என்ற ஐந்து நிலைகளைச் சிந்தித்துக்கொண்டும், இவற்றுள் அச்சாவதாரமே எல்லா குணங்களும் நிறைந்திருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்த வண்ணமும் புறப்படுகின்றார்.[5]

3.திருவல்லவாழ் என்ற திவ்விய தேசத்துக்குப் புறப்படும்முன் பரம் பொருளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள ஒன்பது உறவு முறைகளை நினைவில் நிறுத்தி அவற்றுள் நாயக-நாயகி பாவனையே சிறந்தது என்று எண்ணிக்கொண்டு ஆசாரிய ஹிருதயத்தின்,

'ஞானத்தில் தம்பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு'

என்ற வாக்கியத்தை சிந்தித்த நிலையில் புறப்படுகின்றார்.[6]

4.திருகாட்கறை என்ற திருத்தலத்திற்குப் புறப்படும் முன் இறைவனை அநுபவிக்கும் முறைகளைச் சிந்தனையில் தேக்கிக்கொண்டு அவற்றை நினைத்த நிலையில் ‘எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே’ என்ற ஆழ்வார் வாக்கியத்தை நினைத்துப் புறப்படுகின்றார்.[7]

5.காஞ்சி என்ற தொண்டை நாட்டுத் திருப்பதிக்குச் செல்லுவதற்கு முன்பு முத்திதரும் ஏழு நகரங்களும் ‘அருளாளர் காட்சிக்கு ஒவ்வாது’ என்ற தேசிகரின் வாக்கினை நினைத்துக்கொண்டு புறப்படுகின்றார். புறப்பட்டுபோகும்போது மாதவச்சிவஞான போகியாரின் காஞ்சி புராணத்து ‘கச்சிமா நகர்வோர் தட்டும்’ என்ற திருநகரப் படலச் செய்யுளை அசைப்போட்டுக்கொண்டே செல்கின்றார்.[8]

6.காஞ்சி வைகுண்ட பெருமாள் சந்நிதிக்குப் புறப்படுவதற்கு முன்பு பிராட்டியாரின் புருஷகாரதத்துவத்தை நினைந்தநிலையில் புறப்படுகின்றார். புறப்படும்போது,

‘(ஈசுவரன்) ரட்சிக்கும்போது பிராட்டி சந்நிதி வேண்டுகையாலே
இதிலே ஸ்ரீசம்பந்தமும் அநுசந்தேயம்”

என்று மூட்சுபடி வாக்கியத்தை (40) நினைந்து செல்கின்றார்.[9]

7. திருஎவ்வுள் என்ற திருத்தலத்திற்குப் புறப்படும்முன் திருவதரி ஆசிரமத்தில் வாழ்ந்த சாலிஹோத்திரர் என்ற மாமுனிவர் ஒருவர் வீட்சாரண்யம் என்ற பெயர் கொண்ட திருத்தலத்திற்கு வந்து தவம் செய்த வரலாற்றை நினைவில்கொண்டு புறப்படுகின்றார்.[10]

8.பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருக்கோட்டியூர் என்ற திருத்தலத்திற்கு புறப்படுமுன் இராமாநுசருடைய பரந்தமனப்பான்மையை நினைக்கச் செய்யும்,

‘காரேய் கருணை இராமாநுசா ! இக்கட லிடத்தில்
ஆரே அறியவர் நின்அருளின் தன்மை’ (25)

என்ற திருவரங்கத்து அமுதனாரின் இராமநுச நூற்றந்தாதி திருப்பாசுரத்தை நினைத்த நிலையில் செல்கின்றார்.[11]

9.திருக்கோவலூர் என்ற திவ்வியதேசத்திற்குப் புறப்படும்முன் நம்மாழ்வார் திருவாய்மொழியின்,

'அடியார் அடியார் அடியார் அடியார்தமக்கு
அடியார் அடியார்தம் அடியார் அடியார்களே" (திருவாய்.3.7 : 10)

என்ற பாகவதசேஷத்துவாதிசயத்தை (அடியார்க்கும்அடியன்) பேசுவது பகவத்சேஷத்துவத்தின் உறைப்பையே பேசினபடியாகும் என்று சிந்தித்துப் புறப்படுகிறார்.

10.வடநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான சிங்கவேள் குன்றம் என்ற திருத்தலத்திற்குச் சென்றபோது,

'சரணம் ஆகும்தன தாள்அடைந் தார்க்குஎலாம்
மரணம் ஆனால்வை குந்தம் கொடுக்கும்பிரான்" (திருவாய் 9.10 : 5)

என்று நம்மாழ்வார் திருவாக்கைச் சிந்தித்த நிலையில் புறப்படுகின்றார். இது பிராத்தகர்மத்தை (நுகர்வினையை) விளக்கும் பாசுரம்.[13]

11.நேபாளத்திலுள்ள சாளக்கிராமத்திற்கு திருத்தலப்பயணம் மேற்கொள்வதற்கு முன்பு பகவத் விஷயத்திலுள்ள (தொகுதி 6.8 : 10லிருந்து) ஒரு இதிகாசத்தை நினைவு கூர்கிறார். வெற்றிலைப் பெட்டியிலுள்ள சாளக் கிராமத்தின் சுவையான வரலாறு இது. இதனை ஒரு வீர வைணவர் வாங்கிச் சென்று சாத்திர மரியாதைகள் சிறிதும் குறையாது வழிபாடு நடத்தியதையும் எம்பெருமாள் அதைப் பொறுக்காது அவர் கனவில் தோன்றி முன்பு இருந்த இடத்திற்கே கொண்டுபோய்விடும்படி கூறியதையும் சுவையாக விளக்கும் கதை இது.[14]

12.திருவெள்ளறை என்ற திருத்தலத்திற்குப் புறப்படும் முன்னர் சரீர – சரீரி பாவனையைக் காட்டும் நம்மாழ்வாரின் 'உடல்மிசி உயிர் எனக் கரந்துளன்' (திவாய் 1,1:2) என்ற வாக்கினைச் சிந்திக்கின்றார். சிந்திப்பதுடன் ஈட்டாசிரியர் குறிப்பிடும் ஒரு அருமையான இதிகாசத்தையும் நினைவுகூர்கிறார். சிறையில் இருக்கும் அரசனும் குற்றவாளியும் முறையே எம்பெருமானுக்கும், ஆன்மாவுக்கும் ஒப்புமைக்காட்டி விளக்குகின்றார்.

13.திருநிறையூர் என்ற திருத்தலத்திற்குப் பயணம் துவங்கும்முன் 'மேதாவி' என்ற திருநாமம் கொண்ட முனிவர் ஒருவர்

அத்திருத்தலத்தில் தவம் செய்த வரலாற்றை நினைவுகூர்கிறார். திருமகளே தமக்குத் திருமகளாக அவதரிக்க வேண்டும் என்பது அம்முனிவரின் விருப்பம். அவரது தவச்சாலையின் அருகில் ஒரு சிறு பெண் குழவியாக அவதரிக்கின்றாள் பெரிய பிராட்டியார். முனிவர் அக் குழவியை எடுத்து வஞ்சுளாவல்லி என்ற திருநாமமிட்டு அதை எடுத்து வளர்த்து திருமாலுக்கே திருமணம் செய்து வைக்கின்றார் என்பது போன்ற பல நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய வரலாறு இது.[16]

14.ஸ்ரீ என்று பெரிய பிராட்டியார்க்கு திருநாமம் (மூமுட்சுபடி 123) என்ற வாக்கியத்தை நினைவுகூர்ந்து திருநாங்கூர் (திருத்தெற்றியம்பலத்தின்) பயணத்தை மேற்கொள்கிறார். ஈசுவரனுக்கு எங்ஙனம் 'அ' என்பது ஒரு சிறந்த நாமமோ அங்ஙனம் பெரிய பிராட்டியாருக்கு ஸ்ரீ என்னும் திருநாமம் சிறந்தது. 'அ' என்பது இரட்சிக-இரட்சியத்தைத் தெரிவிப்பது. 'ஸ்ரீ' என்பது புருஷகாரத்தை நினைவு கூர்வது.[17]

15.சோழ நாட்டு திருக்கடலூர் என்ற திருத்தலத்திற்குப் பயணம் துவங்கும் முன்னர் திருவாய்மொழி அர்த்த பஞ்சகஞானத்தை நல்குகின்றது என்ற கருத்தை நினைவுகூர்கிறார். அர்த்த பஞ்சம் என்பது இறைநிலை, உயிர்நிலை, நெறிஇயல், தடையியல், வீட்டியல் என்ற ஐந்து பொருள்களைக் கூறுவது.[18]

திருத்தலத்தின் இருப்பு சூழ்நிலை: இவற்றையும் அடுத்து விளக்குவார். சில எடுத்துக்காட்டுகள்:

1.சிங்கவேள் குன்றம்: இது ஆந்திர மாநிலத்தில் சென்னை-பம்பாய் இருப்பூர்திவழியில் உள்ள கடப்பையிலிருந்து அர்லகட்டா வழியாகப் பேருந்தில் சென்று இவ்வூரை அடைய வேண்டும். இந்தத் திருத்தலத்தின் சூழ்நிலை அச்சத்தை விளைவிக்கும் அடைவியாகும். சிங்கம், புலி, கரடி போன்ற கொடியவிலங்குகள் வாழும் இடம்போல் காட்சியளிக்கின்றது மலையிலுள்ள அடவி. இந்தத் திருத்தலத்தில் ஒன்பது நரசம்மர்கள் எழுந்தருளியுள்ளனர். இத்திருத்தலத்திற்கு 'அகோபிலம்' என்ற திருநாமமும் உண்டு.[19]

2.அயோத்தி: இத்திருத்தலம் வாரணாசிக்கும் லக்னோவிற்கும் இடையில் கிழக்கு இருப்பூர்திப்பாதையில் உள்ளது. இதுவும் ஓர் இருப்பூர்தி நிலையம். நிலையத்திலிருந்து ஊர்க்குச் செல்வதற்கு தோங்காக்கள் (ஒருவகை குதிரைவண்டிகள்) உண்டு. பேராசிரியர் ரெட்டியார் நகரத்தார் விடுதியில் தங்கினார்.[20]

3.திருவாறன்விளை: இத்திருத்தலம் கேரள மாநிலத்தில் எர்ணாகுளம்-கொல்லம் தென்னிந்திய இருப்புப்பாதையில் உள்ள செங்கன்னூர் நிலையைத்தில் இறங்கி ஏழு கல் பேருந்தில் சென்று ஊரை அடைதல் வேண்டும். எந்த வசதிகளும் இல்லாத ஊர். திருக்கோயில் தரிசனம் செய்தபிறகு செங்கன்னூர்க்குச் சென்றுவிடவேண்டியதுதான்.[21]

4.திருமூழிக்களம்: எர்ணாகுளத்தில் தங்கி ஆல்வே நிலையம் வரை இருப்பூர்தியில் சென்று இவ்வூரை அடைதல் வேண்டும். ¼ பர்லாங் நடந்து சென்று திருக்கோயிலை அடைதல் வேண்டும்.[22]

5.திருக்கடிகை: திருத்தணியிலிருந்து பேருந்து வழியாக 1½ மணி நேரம் பயணம் செய்து இவ்வூரை அடையலாம். திருக்கோயில் மலைமீது அமைந்துள்ளது. பெரியமலையில் அமர்ந்திருப்பவர் ஆஞ்சநேயர். இந்த ஊருக்கு மற்றொரு பெயர் சோழிங்கபுரம் என்பது. பொதுமக்கள் வாக்கில் சோளிங்கர் என வழங்கப் பெறுகிறது.[23].

6.திருவிடஎந்தை: இத்திருத்தலம் திருமல்லையிலிருந்து சற்றேறக்குறைய ஐந்து கல் தொலைவில் உள்ளது. மாமல்லபுரத்திலிருந்து சென்னை செல்லும் பேருந்தில் ஏறிச் சென்று, இவ்வூர் அருகில் இறங்கி ஒரு பர்லாங் தொலைவு நடந்து சென்றால் திருக் கோயிலை அடையலாம். மிகச் சிறிய ஊர், அழகான சூழ்நிலையில் அமைந்துள்ளது.[24]

7.திருவிண்ணநகர்: இதனை ஒப்பிலி அப்பன் சந்நிதி என்று வழங்குவர். இது கும்பகோணத்திலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்து அடிக்கடி நகரப் பேருந்து வசதியுண்டு. தொலைவில் உள்ள இடங்களுக்குச் செல்லும் சில பேருந்துகளும் இச்சந்நிதி வழியாகச் செல்லும். எந்த வசதிகளும் இல்லாத ஊர். கும்பகோணத்தில் தங்கி இத்திருத்தலத்தைச் சேவிப்பது வசதியானது.[25]

8.திருவெள்ளியம்குடி: இந்த திவ்விய தேசம் திருவிடைமருதூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து அணைக்கட்டுக்குச் செல்லும் பேருந்தில் சென்று ‘சேங்கனூர்’ என்ற ஊரில் இறங்கி தென் திசையில் மூன்று கி.மீ. தொலைவிலுள்ள திருவெள்ளியங்குடியை அடையலாம். சுக்கிரன்

தவம் புரிந்து சிறப்பு பெற்ற தலமாதல்பற்றி ‘இது வெள்ளியங்குடி’ என்ற பெயர் பெற்றது.[26] இயற்கை வளம் நிறைந்த ஊராதலால் கண்ணுக்கு இயற்கைக் காட்சிகள் நல்விருந்து நல்கும்தலம்.

9.திருக்கண்ணபுரம்: சிறந்த திருத்தலம். திருவாரூரையும் மயிலாடுதுறையையும் இணைக்கும் இருப்பூர்தி வழியில் நன்னிலம் நிலையத்தில் இறங்கி சுமார் 9 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்தில் செல்வதே சிறந்தது. அப்படிச் செல்லும்போது திருப்புகலூரில் (அப்பர் வீடு பெற்ற தலம்)லிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கண்ணபுரத்தை குதிரைவண்டியில் சென்றடைதல் வேண்டும்.[27]

10.திருப்புல்லாணி: இராமநாதபுரத்திற்குத் தெற்கே கீழக்கரை என்ற ஊருக்குச் செல்லும் வழியில் ஏழுகல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூர். திருச்சி இராமேசுவரம் இருப்பூர்தி வழியில் இராமநாதபுரம் என்ற நிலையத்தில் இறங்கி இந்த ஊருக்குச் செல்ல வேண்டும். கடற்கரையைச் சார்ந்த சிற்றூராதலின் மணற்குன்றுகள் எம்மருங்கும் மலிந்து காணப்படும். என்றாலும் திருக்கோயிலின் வாயிலில் செல்லும்வரை நல்ல சாலை வசதிகள் உண்டு.[28]

11.திருமாலிருஞ்சோலைமலை: ‘அழகர் கோயில்’ என வழங்கும் இத் திருத்தலம் மதுரைக்கு வடக்கே 12 கல் தொலைவில் உள்ளது. இத் திருத்தலத்திற்கு மதுரையிலிருந்து மகிழ்உந்தில் செல்லலாம். பேருந்தில் செல்லலாம். குதிரை வண்டியிலும் செல்லலாம். இத் திருக்கோயிலுக்குச் செல்வோர் திருக்கோயிலுக்கு முன்னதாக உள்ள ஒரு பெரிய சோலையைக் காண்பர். புறச்சூழ்நிலையும், மனநிலையும் ஒரு சேரப்பெற்ற நிலையில் ஆழ்வார் பாசுரங்கள் படலம் படலமாக தம் சிந்தையில் எழுதலை உணரலாம். ஆழ்வார்கள் காலத்திலிருந்த சூழ்நிலை இன்றும் நின்று நிலவுவதைக் கண்டு அதிசயிக்க முடிகிறது. இந்த சோலைக்கு வடக்கிலும் மேற்கிலும் நீண்டு உயர்ந்த மலைச்சிகரங்கள் இருப்பதையும், சோலையும் மரங்கள் அடர்ந்த இருண்டு இருப்பதையும் காணலாம்.[29]

இறைவனுடைய இருப்பு சூழ்நிலை: 1. இயற்கை எழில் எங்கு அமைந்திருக்கிறதோ அங்கெல்லாம் இறைவன் எழுந்தருளியிருப்பான் என்பது ஒரு தத்துவம். ஆதலால் ஆழ்வார் பெருமக்கள் ஒரு திவ்விய தேசத்தைத் தம்முடைய பாசுரங்களால் வருணிக்கும்பொழுது முதல் இரண்டடிகளில் திவ்விய தேசத்தில் எம்பெருமானின் சிறப்பும், பின்

இரண்டு அடிகளில் திவ்விய தேசத்தின் சிறப்பும் கூறப்பெறுவதை விளக்குவார். எடுத்துக்காட்டாக திருவயிந்திரபுரத்தை விளக்கும்போது அத்திருத்தலம் சோலைகள் சூழ்ந்த இடமென்றும், அச்சோலைகளில் வண்டுகள் திரள்திரளாகப் புகுந்து மதுவைப் பருகிக் களித்து அக்களிப்புக்குப் போக்கு வீடாக இன்னிசைகளைப் பாடிக்கொண்டு உலவுகின்றன என்றும், அங்ஙனம் உலவுங்கால் செறியப்பூத்த சுரபுன்னை மரங்கள் எதிர்படுகின்றன என்றும், அவற்றிலும் மதுவைப் பருகச் செல்கின்ற அவ் வண்டின் குழாங்கள் என்றும், திருமங்கையாழ்வார் கூறுவதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவர். இப்படியே எல்லாப் பாசுரங்களும் வெவ்வேறுவிதமாக அமைகின்றன. இத்தகைய சூழ்நிலையில் அமைந்த திருக்கோயிலின் கருவறையில் கிழக்கு நோக்கி திருமுக மண்டலம் கொண்டு, நின்ற திருக்கோலத்தில் வைகுண்டவல்லி தாயாருடன் சேவைச்சாதிக்கும் அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வநாயகன் எழுந்தருளியுள்ளான் என்று காட்டுவர்.[30]

2.திருக்கோவிலூர்: இது ஓர் அழகான திருப்பதி. நீர்வளமும் நிலவளமும் மிக்கது. தோப்புகளும் சோலைகளும் சூழ்ந்த அழகான பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. தென்னந்தோப்புகள், கமுகத் தோட்டங்கள், மாஞ்சோலைகள் முதலியவை எம்மருங்கும் சூழ்ந்துள்ளன. கமுக மரத்தின் நிறமோ கறுப்பு. அவற்றில் பாளைகளின் நிறமோ பச்சை, அவை வெடித்து வெளிப்படுத்தும் பாக்குப் பிஞ்சுகள் வெண்ணிற முத்துகளை ஒத்துள்ளன. முற்றின பச்சை நிறப்பாக்குகள் மரகதம்போல் பொலிவுற்றுத் திகழ்கின்றன. பழுத்த செந்நிறப் பாக்குப் பழங்களோ பவழங்களைப் போல காட்சித் தருகின்றன. பாக்கு மரங்களூடே வளர்ந்துள்ள சுரபுண்ணையின் மொட்டுகள் மலர்ந்து சோலையினைப் பொலிவுறச் செய்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அமைந்த கோயிலின் கருவறையில் 'வியந்தர் வெறுக்கொள விசும்பின் ஓங்கிய' உலகளந்த திருவிக்கிரமன் கிழக்கே திருமுகம் கொண்டு, நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான்.[31]

3.திருநறையூரின் இயற்கைச் சூழ்நிலை அற்புதமானது. 'நறவார் பொழில் சோலை' (7.1:1) என்றும், 'நறைசேர் பொழில்' (6.4:10) என்னும் ஆழ்வார் சோலையைக் காட்டுவார். சோலைகளில் உள்ள மரபொந்துகளில் வாழும் குட்டிக்காக இரைதேடும் பறவைகள் நத்தைகளைத் திரட்டிக்கொண்டு செல்லும். மீன்களை மிகுதியாகப் பிடித்துண்ணும் கொக்குகள் தம் பேடைகளுடன் ஓடிச்சென்று தாமரைப் பூவினுள் தேனைப் பருகாநிற்கும். இன்னும் இச்சோலையில் வண்டுகள் அப்போதலர்ந்த செண்பக மலர்களின் நறுமணமிக்கத் தேனை உண்டு

மகிழம்பூவின்மீது தங்கி இருக்கும். இதுபோன்ற பல கருப்பொருள் அமைந்த சூழ்நிலையில் 'சுகந்தசிரி' எனப்பெயர்பெற்ற ஓர் உயரமான இடத்தில் நறையர் நம்பி அழகுமிக்க ஆபரணங்கள் அணிந்த நிலையில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்கொண்டு நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். இந்த எம்பெருமான் அருகில் வஞ்சுளவல்லித் தாயார் மரகதக் குன்றினருகில் ஓர் இளவஞ்சிக்கொடி நிற்பதுபோல் நிற்கின்றார்.[32]

4.திருக்கண்ணபுரம்: இந்த திருப்பதியின் சூழ்நிலை மிகவும் வசீகரமானது. குளங்கள் நிறைந்த ஊர். களைபறிக்கும் மகளிர் களைக்கொட்டுகளைக் கொண்டு களைப்பறிக்குங்கால் சிறு தூருகளினின்றும் புறப்படும் முயல்கள் அவர்கள் முகத்தில் துள்ளும். செழிப்பான கழனிகளில் கயல்மீன்கள் துள்ளும். சோலைகள் எங்கும் நறுமணமுள்ள மலர்களை கோதி மதுவைப் பருகி அக்களிப்பினால் வண்டுகள் இசையெழுப்பும். இத்தகைய சூழ்நிலையில் அமைந்திருக்கும் திருக்கோயிலில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் சௌரிராஜப்பெருமாள் சேவை சாதிக்கின்றார். 'அபயம் அளிக்கும் திருக்கைக்குப் பதிலாக வரம் அளிக்கும் திருக்கையுடன்' காட்சி தருகின்றார். திரு அரங்கநாதனிடம் காணப்பெறுவதைப் போலவே இவர் கைகளிலும் 'பிரயோகச் சக்கரம்' காணப்படுகிறது.[33]

5.திருமோகூர்: திருமால் மோகனவதாரம் எடுத்த ஊர் திருமோகூர். இந்த திவ்விய தேசம் பாண்டி நாட்டைச் சார்ந்தது. மருதநிலப்பகுதியைச் சார்ந்த இவ்வூர் நீர்வளம், நிலவளம் மிக்கதாகத் திகழ்கின்றது. எடுத்த எடுப்பில் முதல் பாசுரமே 'தாளதாமரை தடமணி வயல்திரு மோகூர்' (திருவாய் 10.1) என்று தொடங்குகிறது. இத்திருப்பதியின் தடாகம் தாள தாமரைத்தடம் என்று ஆழ்வார் திருவாக்கால் பெயர்பெறுகிறது. இங்குள்ள பெருமான் 'காளமேகப் பெருமான்' எனத் திருநாமம் பெறுகின்றார். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு நின்ற திருக்கோலத்தில் பெரிய பிராட்டியார், பூமி பிராட்டியார் என்ற இருவருடன் சேவைசாதிக்கின்றார். ஆழ்வார் 'சுடர்கள் சோதி' (திருவாய் 10 1:4) என்று ஆழ்வார் திருநாமம் வழங்கி அருளிய மூர்த்தி கண்டாரைப் பிச்சேற்றும்.[34]

6.திருக்கோளூர்: இது தண்பொருநையாற்றுத் தென்கரையில் உள்ளது. இயற்கை வளம் செறிந்தது. இது ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே இரண்டுகல் தொலைவிலும், தென்திருப்பேரைக்கு மேற்கே

இரண்டுகல் தொலைவிலும் உள்ளது. இத் திருக்கோயில் எம்பெருமான் ‘வைத்தமாநிதி’ என்ற திருப்பெயர் கொண்டவர். இவர் கிடந்த திருக்கோலத்தில் புயங்கசயனம்கொண்டு கிழக்கு நோக்கிய திருமக மண்டலத்துடன் சேவைச்சாதிக்கின்றார். தாயாரின் திருநாமம் கோரூர் வல்லி நாச்சியார். இவ்விடத்தில் நிதிபற்றிப் பேராசிரியர் காட்டும் ஈட்டுரை உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பாங்கில் அமைகிறது.[35]

7.திருவனந்தபுரம்:மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. குறிஞ்சி நில இயற்கைச் சூழலால் அமைந்துள்ளது. இங்கு எம்மருங்கும் அடர்ந்த தோப்புகள், ஓங்கி உயர்ந்த மலைக்குன்றுகள், பாங்குடன் திகழும் மணல்மேடுகள், பூங்கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்குமாக வரைப் பின்னல்போல் பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய்கள் போன்ற சூழ்நிலையில் அமைந்தது இத்திருத்தலம். இங்குள்ள திருக்கோயிலில் ஒற்றைக்கல் மண்டபத்தில் இருந்துகொண்டு மூன்று திருவாயில்கள் மூலமாகவும் தெற்குநோக்கிச் சாய்ந்த திரு அபிடேகமும் வடக்கு நோக்கி நீட்டிய திருவடிகளையும் கொண்டு கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு அநந்தன்மீது பள்ளி கொண்டு சேவைச் சாதிக்கின்றான் அனந்தபத்மநாபன். இங்கு அடியார்கள் இறைவனைப் பாதாதிகேசமாக சேவிப்பதை ஒரு மரபாகக் கொண்டுள்ளனர்.[36]

8.திருப்புலியூர்: இது குட்டநாட்டுத் திருப்புலியூர் என்ற பெயரால் வழங்குகின்றது. இயற்கைச் சூழலில் அழகுற அமைந்த திருத்தலம். குறிஞ்சி நிலத்தில் அமைந்த இத் திருத்தலத்தில் மருதநிலச் சூழல்கள் தட்டுகிறன்றன. ‘செழுநீர் வயல் குட்டநாட்டுத் திருப்புலியூர்’ (திருவாய் 8.9:1) ‘புன்னை அம்பொழில் சூழ்திருப் புலியூர்’ (திருவாய் 8.9:2) என்பன நம்மாழ்வாரின் திருவாக்குகள். இத்திருக்கோயிலில் எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். எம்பெருமானின் திருநாமம் மாயப்பிரான், தாயாரின் திருநாமம் பொற்கொடி நாய்ச்சியார்.[37]

9.வதரி:வதரி என்பது இலந்தை மரம். வடமொழியில் இலந்தை மரத்திற்குப் பெயர். அம்மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடத்திற்கு வதரி என்று பெயர். வதரிநாதன் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுதும் வதரியாகும். அவன் எழுந்தருளியிருக்கும் இடம் வதரிஆசிரமம் ஆகும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருஉகப்புக்குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தைமரம் உள்ளதென்றும் கலியுகத்தில் அது மக்கட் கண்களுக்குப் புலனாகாது என்றும் சொல்வர். இந்த மரத்தின்

அடியில்தான் வதரி நாராயணன் சடைமுடி கொண்ட தவசி கோலத்தில் இரு திருகைகளில் திருவாழி, திருச்சங்கு தாங்கிய நிலையிலும், மற்றைய இரு கைகளில் அபயமுத்திரையுடனும் பதுமாசனத்தில் இருந்த திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு சேவைசாதிக்கின்றார். தாயாரின் திருநாமம் அரவிந்த வல்லி நாச்சியார். எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் வடக்கே திருமுக மண்டலம் கொண்டு சேவைசாதிக்கின்றார்[38]

10.சாளக்கிராமம்: இமய மலையின் மீதுள்ள ஒரு திருத்தலம். குறிஞ்சி நிலச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. இத்தலத்து எம்பெருமானை

1. **உலவு திரைக் குலவரையும் ஊழிமுதலா எண்திக்கும்**
2. **நிலவும் சுடரும் இருளும்ஆய் நின்றான்; வென்றிவிறலாழி**
3. **வலவன் (பெரி.திரு 1.5:3)**

என்று காட்டுவார் திருமங்கை மன்னன். இத்தலத்து எம்பெருமானின் திருநாமம் ஸ்ரீமூர்த்திப் பெருமாள் என்பது; தாயார் ஸ்ரீதேவி நாச்சியார். எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் வடக்கே திருமுகமண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றார்.[39]

வரலாற்றுக்குறிப்புகள்: பேராசிரியருடைய திருத்தலபயண இலக்கியத்தில் இயன்ற இடங்களிலெல்லாம் வரலாற்றுக்குறிப்புகள் இருப்பின் அவற்றை எடுத்துக் காட்டுவதில் தவறுவதில்லை.

1.திருமோகூர்: கிரேக்கநாட்டு வாநூல் அறிஞரான தாலமி, திருமோகூரைப் புவிஇயல் படத்தில் குறித்துள்ளார். திருக்கோயிலில் இடைக்கால கல்வெட்டுகள் நிறைய உள்ளன. இத்திருத்தலத்தில் பழையன் என்ற குறுநில மன்னனின் பலத்த கோட்டையும் இருந்ததாகச் சான்றுகள் உள்ளன. திருமோகூர் தென் பரம்பு நாட்டின் ஒரு பகுதியாகத் திகழ்ந்திருந்ததையும் அறிகின்றோம். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாயக்கர் மன்னனின் ஆட்சியில் இத் திருக்கோயில் கோட்டையாகப் பயன்படுத்திய செய்தியும் அறியப்படுகின்றது.[40]

2.திருநறை ஊர்: கோச்செங்கணான் கட்டிய மணிமாடக் கோயிலைப் பின்னர் வந்தவர் விரிவடையச் செய்துள்ளனர். காடவர்மன் சுந்தரபாண்டியன் நறை ஊர் நம்பிக்கு உரு தலத்தையே சாசனம் செய்துள்ளான். தஞ்சை இரகுநாத நாயக்கன் நாச்சியாருக்கு ஒரு மண்டபம் கட்டியுள்ளான்.[41]

3.அன்பில்: இத்திருக்கோயில் சுவரில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. இவையெல்லாம் படி எடுக்கப்பெற்று விளக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளன என்பதைப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[42]

4.தில்லை திருச்சித்திரக்கூடம்: கோவிந்த ராஜன் அரிதுயில் கொண்டுள்ள திருக்கோயிலை எட்டாம் நூற்றாண்டில் காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலை நிறுவிய நந்திவர்மப் பல்லவன் எழுப்பித்தான். பன்னிரண்டாம் நூற்றாண்டில் அனபாய சோழன் என்ற இரண்டாம் குலோத்துங்கன் சிற்றம்பலத்தைப் பெருக்கி அமைத்தற்பொருட்டு கோவிந்த ராஜப் பெருமாளை எடுத்து கடலில் எறிந்து விட்டான் என்றும், இராமாநுசர் திருமேனியைக் கைப்பற்றி, திருப்பதியில் பிரதிட்டித்தார் என்றும் கிருஷ்ண தேவராயர் தம்பி அட்சுதராயர் ஆட்சியில் (கி.பி.1539ல்) மீண்டும் இவர் இவருடைய பழமைத் தானத்தில் பிரதிட்டிக்கப் பெற்று வைகாசை முறைப்படி வைணவ பட்டாச்சிரியர்களால், வழிபாடு செய்து வர நிபந்தங்கள் விடப்பெற்றுள்ளன என்றும், கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றன. செட்டிநாட்டு அரசர் வள்ளல் அண்ணாமலைச் செட்டியார் திருக்கோயிலின் முன்னணியாக உள்ள நாற்பதுகால் மண்டபத்தை அமைத்தார். இப்போதுள்ள திருச்சித்திரக் கூடத்தின் அமைப்பு 1934ல் செட்டிநாட்டரசரின் திருமகனார் முத்தையவேள் தமது மேற்பார்வையில் சுமார் மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் அழகுற அமைத்தார். இன்னும் பல செய்திகள் இவண் கூறப்பெற்றுள்ளன.[43]

5.அத்தி கிரி: அத்திகிரி அண்ணலை நினைக்கும்பொழுது அவருடைய திருவருளுக்கு பாத்திரமானவர்கள் எண்ணற்றவர்கள் என்று கூறி இராமாநுசர், வேதாந்த தேசிகர், திருக்கச்சி நம்பி, கூரத்தாழ்வான் போன்ற பல சாதுக்களின் வரலாறுகளை நினைக்கச் செய்கின்றார் பேராசிரியர்.[44]

இலக்கியக் குறிப்புகள்: பேராசிரியருடைய திருத்தலப் பயண இலக்கியத்தில் இலக்கியக் குறிப்புகளுக்கும் இடமுண்டு. திருத்தலப்பயணத்தில் அவற்றைச் சுட்டிக்காட்டவும் அவர் தவறுவதில்லை.

1.திருக்கண்ணபுரம்: புரத்து அம்மான் மீது, திருக்கண்ணபுர கலம்பகம் என்ற ஒரு நூலை இன்று சதாஅபிஷேகம் கண்டு நம்மிடையே வாழும் திருவல்லிக்கேணியில் வாழும் டிஎஸ்.ராஜகோபாலன் என்பார் அருளியுள்ளர். இவர்

திருக்கண்ணபுரத்தைச் சார்ந்தவர். இதில் உள்ள பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்துள்ளன என்பதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டித் தாம் மகிழ்வதுடன் படிப்போரையும் மகிழ்விக்கின்றார்.[45]

2.தேரழுந்தூர்: இராமகாதை இயற்றிய கம்பன் பிறந்த ஊர். இந்த ஊருக்குச் செல்லும்பொழுது கம்பனை நினைக்கின்றோம். கம்பன் பாடிய இராமகாதையின் அருமை பெருமைகளை எல்லாம் நம் மனத்திரையில் படலம் படலமாக எழுவதைப் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.[46]

3.திருக்கோட்டியூர்: சிவகங்கை மன்னர்கள் இத் திருக்கோயிலின் வழி வழி வரும் அறங்காப்பாளர்கள். சங்க நூலாகிய நற்றிணையில் இருபத்தோராம் பாடலைப் பாடிய புலவர் கோட்டியூர் நல்லாந்தையார் இவ்வூரைச் சார்ந்தவராகக் கருதப்படுகின்றார். கவிஞர் சுப்பராயர் என்ற மாத்துவ அந்தணர் ‘திருகோட்டியூர் பிள்ளைத் தமிழ்’ என்ற நூலையும், பெருங்கருணை சதாஅவதானம் முத்தழக அய்யங்கார் என்ற புலவர் ‘திருக்கோட்டியூர் கலம்பகம்’ என்ற நூலையும் இயற்றி உள்ளதாக அறியக் கிடக்கின்றது. பராசபட்டர் ஆண்டாள்மீது இயற்றியுள்ள ‘நீளாதுங்க’ என்ற வழமொழி தனியன் இந்த ஊரில் இயற்றப்பட்டது. இதே அறிஞர் சௌமிய நாராயணன்மீது ‘கோஷ்டித்தஸ்வம்’ என்ற வடமொழி நூலையும் இயற்றியுள்ளார்.[47]

4.தென்திருப்பேரெயில்: தென்பாண்டி நாட்டை ஆண்ட வடமலை அயப்ப பிள்ளையன் புலவர்களைப் போற்றும் வள்ளண்மை மிக்கவர். இவர் காலத்தில் வாழ்ந்த நாராயண தீட்சிதர் என்பார் அரசிறை கட்டத் தவறியதால் சிறைச்சாலையில் இருக்க நேர்ந்தது. இவர் இயற்றிய நூல் ‘குழைக்காதர் பாமாலை’ இன்னும் பாராயண நூலாகப் பயன்பட்டு வருகிறது. இக்குறிப்பைத் தென்திருப்பேரெயில் ஆசு கவி காளமேகம் அனந்த கிருஷ்ண அய்யங்கார் அவர்களிடமிருந்து உ.வே.சா. அவர்கள் பெற்று கலைமகளில் 1939ல் வெளியிட்டும், பின்னர் அவர் திருக்குமாரர் 1947ல் இந்தப் பாமாலையை சிறுநூல் வடிவில் வெளியிட்டும் வழங்கின குறிப்பைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார்.[48]

5. திருக்கண்ணமங்கை: இத்திருத்தலத்தின் மீது முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் ‘திருக்கண்ணமங்கை மாலை’ என்ற ஒரு அருமையான நூலைப் பாடியுள்ளார். திருமகள் தோத்திரமாக தேவி வழிபாட்டிற்கு உரியதாக அமைந்துள்ள இந்நூலின் பாடல்கள் சொல்நயமும், பொருள்நயமும், பக்திச் சுவையும் செறிந்தவையாகத்

திகழ்கின்றன. பாராயணத்திற்கு மிகவும் ஏற்ற நூல். திருமகள் தோத்திரமாக வேறு தமிழ்நூல் கிடைப்பது அரிது.[49]

<u>புராணக் குறிப்புகள்:</u> பேராசிரியர் ரெட்டியார் தம் பயண இலக்கியங்களில் ஆங்காங்கு இயலும் இடங்களிலெல்லாம் புராண வரலாறுகளையும் சுட்டி செல்லுவதில் தவறுவதில்லை.

<u>1.திருக்கோட்டியூர்:</u> இந்த ஊரின் பேரைக் குறிப்பிடும் போக்கில் ஒரு புராணக் குறிப்பைத் தருகின்றார். இவ்வூரின் அருகில் உள்ள மணி முத்தாற்றங்கரையில் உள்ள இந்தத் திருப்பதி முற்காலத்தில் கதம்பமுனிவரின் ஆசிரமமாக இருந்தது. இரணியன் மூவுலகங்களையும் ஆட்சி செய்து தேவர்களை நைகின்றான். அவனை எப்படி ஒழிப்பதென்று தெரியாமல் திகைக்கின்றனர் தேவர்கள். கதம்ப முனிவர் உறையிலும் இத் திருத்தலத்தில் அரக்கன் எவனும் புகமுடியாது என்ற சாபம் இருந்ததால் மும்மூர்த்திகளும் தேவர்களும் சூழ்ந்து ஆழ்ந்து யோசிக்க இவ்விடத்தைத் தேர்ந்தெடுத்து ஒன்று கூடுகின்றனர். திருமால் நரசிங்க அவதாரம் எடுத்து தனது வாளுகிரிபினால் இரணியனை வதைப்பது என்று முடிவு செய்கின்றனர். தேவர்கள் யாவரும் கோஷ்டியாக (கூட்டமாக) சேர்ந்து ஆலோசனை செய்த இடமாதலில் இதனைக் 'கோட்டியூர்'' என்று வழங்குகின்றனர். இன்னொரு புராண வரலாறும் உண்டு. புரூரவன் என்னும் அரசன் கங்கை நீராடத் தேரின் மீது செல்லுங்கால் கதம்ப முனிவரின் ஆசிரமத்தருகில் அவன் இவர்ந்து வந்த தேர் மேல் செல்ல இயலாதபடி தடுத்து நிறுத்தப் பெற்றது. அரசன் தேரினின்றும் இறங்கிக் கதம்ப முனிவரை வணங்கினான். பின் அவர் விருப்பப்படி கங்கைக்கரையிலிருந்து 1500 பாகவதர்களை அழைத்துக்கொண்டு வந்து குடியேற்றினான்.[50]

<u>2.உத்தமர் கோவில்:</u> கரம்பனூர் என்றும் இத்திருத்தலத்திற்கு மற்றொரு பெயர். கதம்பமுனிவர் பரப்பிரமத்தைக் காண இங்கு நெடுங்காலம் தவம் புரிந்தார். சிவபெருமானும், நாராயணனும் முனிவருக்கு விஸ்வருப தரிசனம் அருளினார். ஆகவே இத்திருத்தலம் 'கதம்பவனம்'' என்ற பெயர் பெற்றது. இம் முனிவரைத் தவிர மார்கண்டேயர், சனகர், சதானந்தர், சனத்குமாரர், திக்குப் பாலகர்கள், கருடன் ஆகியோரும் தவம் புரிந்த இடமாகும் இத்திருத்தலம். இத் திருக்கோயிலில் 'அரியும் அரனும் ஒன்று' என்ற பொதுமக்களின் வாக்கிற்கு ஏற்ப, சிவனும், திருமாலும் குடிகொண்டுள்ளனர்.[51]

3.திருநறை ஊர்: மேதாவி என்ற திருநாமம் கொண்ட முனிவர் ஒருவர் திருநறை ஊர் என்ற திருத்தலத்தில் தவம் செய்து வருகின்றார். திருமகள் தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று பேரவாக் கொள்கின்றார் அம்முனிவர். அவர் விருப்பப்படியே முனிவரது தவச்சாலையின் அருகில் மஞ்சுள மரத்தடியில் ஒரு சிறு பெண் குழந்தையாக அவதரிக்கின்றார் பெரிய பிராட்டியார். முனிவர் அக்குழந்தையை எடுத்து 'வஞ்சுள வல்லி'' என்று திருநாமம் இட்டு வளர்க்கின்றார். மங்கைப் பருவம் வந்தவுடன் எம்பெருமான் அவளைத் தேடிக்கொண்டு வருகின்றார். தனியாக வரவில்லை. சங்கர்ஷனன், பிரத்துமனன், அணிருத்தன், புருஷோத்தமன், வாசுதேவன் என்ற ஐந்து உருவம் தாங்கி வருகின்றான். ஐவரும் முனிவரின் விருந்தாளர்கள் ஆகின்றனர். ஐவரில் வாசுதேவனுடையக் கண்கள் வஞ்சுளவல்லியின் கண்களைச் சந்திக்கின்றன. விருந்துண்டு கைகழுவச் செல்லும்போது வாசுதேவன் வஞ்சுள வல்லியின் கையைப் பற்றுகின்றான். வஞ்சுளவல்லி கூக்குரல் இடுகின்றாள். இதைக் கேட்ட முனிவர் ஓடிவரவே வாசுதேவன் கையும் களவுமாக பிடிபடுகின்றான். அவனது அடாத செயல்களைக் கண்டு சீற்றம் கொள்கின்றார் முனிவர். சாபம் கொடுக்க முனையும்போது வாசுதேவன் திருவாழி, திருச்சங்கு ஏந்திய வண்ணம் தன் உண்மைத் திருக்கோலத்தைக் காட்டி நிற்கின்றான். வஞ்சுளவல்லி வாசுதேவன் திருமணம் நடக்கின்றது. நறையூரில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் வஞ்சுளவல்லிக்கே முதன்மை இடம் என்பது முனிவரின் வேண்டுகோள். இன்றுவரை எல்லா விழாக்களிலும் வஞ்சுளவல்லிக்கே முதன்மை இடம். மதுரையில் மீனாட்சிக்கு முதலிடம் இருப்பது போல நறையூர் என்ற திருப்பெயரும் 'நாச்சியார் கோவில்'' என்ற புதுப்பெயர் பெற்றுத்திகழ்கின்றது. நரையூர் நம்பியும் மணாட்டிற்கு அடங்கிய மணாளனாகவே (Henbecked) இத்திருத்தலத்தில் தங்கி விடுகின்றான்.[52]

4.திருத்தேவனார் தொகை: பாற்கடல் கடைந்தபோது வெளிவந்த திருமகளை இத் திருத்தலத்தில் தான் எம்பெருமான் திருமணம் புரிந்து கொண்டதாகவும், அத்திருமணகோலத்தில் இங்கு எழுந்தருளி உள்ளதாகவும் புராண வரலாறு. இத் திருமணத்திற்கு தேவர்கள் திரண்டு வந்தனர். இங்ஙனம் இவர்கள் திரண்ட இடம் இத் திருத்தலமாதலால் இதற்குத் திருத் தேவனார் தொகை என்ற திருநாமம் ஏற்பட்டது.[53]

எம்பெருமானின் திருக்குணங்கள்: ஆசாரிய ஹிருதயம் என்ற நூலில் பல திருத்தலங்களில் அச்சாவதாராமாக எழுந்தருளியுள்ள

எம்பெருமான்களின் திருக்குணம்பற்றி அந்நூலாசிரியர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் தம் நூலில் வெளியிட்டுள்ளார் சூத்திர வடிவில். இந்த சூத்திரங்கள் ஆழ்வார் திருப்பாசுரங்களின் அடிப்படையாக அமைந்தவை. பேராசிரியர் ரெட்டியார் இத் திருக்குணங்களைத் தம்முடைய பயண நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

1.திருக்கோரூர்: எம்பெருமானுடைய திருக்குணத்தை,

> **‘கைம்முதல் இழந்தார் உண்ணும்**
> **நிதியின் ஆபத்ச கத்வம் புகும் ஊரிலே**
> **சம்ருத்தம்’**

(ஆபத்சகத்வம்-ஆபத்துக்குதவுகிற பெருங்குணம. சம்ருத்தம்-நினைவு)

என்று ஆசார்ய ஹிருதயத்தில் சூத்திரத்தின் மூலம் எடுத்துக்காட்டுவார்.[54] திருக்கோரூர் இறைவனுக்கு வைத்தமாநிதி என்பது திருப்பெயராதலாலும், நிதி ஆபத்துக்குதவுவதாலும், திருவாய்மொழியின் ஒரு திருப்பதிகத்தில் (6.6) இழந்தமைக் கூறி[55] என்று கூறி ‘உண்ணும் சோறு’ (6.7) என்று கூறி இத்திருத்தலத்தின் திருப்பதிகம் தொடங்குவதாலும் இத்திவ்விய தேசத்தில் ஆபத்சகத்துவம் (ஆபத்துக்குதவுகிற பெருங்குணம்) விளங்கும் என்கிறார். பதிகத்தில் தொடங்கும் முதற் பாசுரம் உண்ணும் சோறு என்பதாகையாலே ‘உண்ணும் நிதி’ என்கின்றார். ‘இளமான் புகுமூர் திருக்கோளூரே’ (6.7:1) என்றும் திருப்பாசுரத்தைத் திருஉள்ளம் பற்றி புகுமூர் என்கின்றார். ‘செல்வம் மல்கியவன் கிடந்த திருக்கோரூர்’ (6.7:4) என்ற திருப்பாசுர பகுதியைத் திருஉள்ளம் பற்றி ‘சம்ருத்தம்’ என்கின்றார்.[56]

2.திருவனந்தபுரம்: இத் திவ்விய தேசத்தின் திருக்குணத்தை ‘ஸ்ஸைன்ய புத்ர சிஷ்ய ஸாத்ய சித்த பூசிர அர்ச்சனத்துக்கு’, முகநாபி பாதங்களைத் துவாரயத்தாலே காட்டும் ஸாம்யம் அந்தந்த சயனத்திலே வியக்தம்[57] என்று கூறும் ஆச்சார்ய ஹிருதயம். இத் திருக்குணம் ‘சாமியம’ என்பதாகும். சாம்யம்-வேறுபாடு கருதாது ஒரே தன்மையாகப் பார்க்கும் குணம். இச் சூத்திரத்தில் திருமுகம், திருநாபி, என்றும் இவற்றை மூன்று திருவாசல்களாகவே சேவிக்க வேண்டும் என்பது தெளிவுபடுத்துப்பட்டுள்ளது.[58] இங்ஙனம் பேராசிரியர் ரெட்டியார் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்த திருத்தலங்களின் திருக்குணங்களை அந்தந்த திருத்தலங்களை விளக்கும்போது ஆசார்ய

ஹிருதயம் குறிப்பிடும் திருக்குணங்களை எடுத்துக்காட்டி மகிழ்வார் - தம்முடைய திருத்தலப் பயண நூல்களில்.

<u>**திவ்விய கவியின் பாசுரங்கள்:**</u> திவ்விய கவி. பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் ‘108 திருப்பதி அந்தாதி’ என்ற நூலில் 108 வைணவ திருத்தலங்களையும், ஒவ்வொரு வெண்பாவால் அந்தாதித் தொடையில் அமைத்துக் கூறி மகிழ்வர். பேராசிரியர் ரெட்டியார் தம்முடைய திருத்தலப் பயண நூல்களில் திருத்தலம்பற்றிய கட்டுரையின் இறுதியில் இந்த வெண்பாவை நினைவுகூர்ந்து தம்முடைய கட்டுரைகளைத் தலைக்கட்டுவார். எடுத்துக்காட்டாக இரண்டை ஆய்வாளர் இங்கே குறிப்பிடுவார்.

<u>**1.திருவண்வண்டூர்: (மலைநாடு)**</u> இத்திருத்தலத்தை நினைவுகூரும் பாங்கில் திவ்விய கவி இத்திருத்தலம்பற்றிய திருவாய் மொழியைக் கற்பார். எம்பெருமானுக்கும் அவன் அடியார்க்கும் விரும்பத்தக்கவர் ஆவர் என்பதும் நம் நினைவுக்கு வர அந்த நினைவுடன்

‘தேவும் உலகும் உயிரும் திரிந்து நிற்கும்
யாவும் படைத்த இறைகண்டீர் - பூவில்
திருவண்வண் டூர்உறையும் தேவாதி தேவன்
மருவண்வண் டூர்துளவ மால்”[59]

என்ற அய்யங்காரின் பாசுரத்தையும் ஓதி உளங்கரையும்போது, திருமாலே சேதநம், அசேதநம் ஆகிய எல்லா பொருள்களுக்கும் ஆதிகாரணன் என்று அய்யங்கார் உணர்த்துவதையும் சிந்திக்கின்றோம்.

<u>**2.திருத்தண்காலூர் அப்பன்:**</u> திருத்தண்காலூர் என்ற திருத்தலத்தைச் சேவித்து முடித்த பேராசிரியர் திவ்வியகவியின்

‘மாறுபட வாடைஎனும் வன்கால்வந் தென்முலைமேல்
ஊறுபட ஊர்ந்த உளைவெல்லாம் - மாறத்
திருத்தண்கால் ஊரான் திருத்தன் துளாயின்
மருத்தண்கால் ஊராதோ வாய்ந்து’

என்ற பாடலை நினைவுகூர்கின்றார். இது தலைவனைப் பிரிந்த தலைவி விடைக்கு இரங்கி வருந்தக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைவனுடன் கூடிப்பிரிந்த தலைமகளின்மீது காமத்தை மிகுதிப்படுத்துவதான வாடைக்காற்று வீசி அவனை வருத்துகின்றது. அதனை ஆற்றமுடியாத தலைவி, ‘தலைவனுடன் சம்பந்தம் பெற்ற, பொருளின் தொடர்பினாலாவது, ஒருவாறு இந்நோய் தனியப்பெறுலாம்

என்று கருதுகின்றாள்'. தலைவன் அணிந்த திருத்துழாயின்மீது பட்டு, அந் நறுமணத்துடன் வருகின்ற காற்றாவது, தன்மீது வீசப்பெறுமா என்று ஏங்கி கூறிச் செல்லுவதாக அமைந்துள்ளது. இப்பாசுரம், நாமும் தலைவியின் நிலையை எய்தியதாக பாவனை செய்துகொண்டு இதனை ஓதுகின்றோம். அந்நிலை ஏற்படவே பரமபக்தி நிலை வரவேண்டும்.[60]

இவ்வாறு பேராசிரியர் ரெட்டியார் தம்முடைய திருத்தலப் பயணக் கட்டுரைகளில் 108 திருப்பதிகளைப்பற்றி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் காட்டும் 108 திருப்பதி அந்தாதி பாசுரங்களை நினைவுகூர்ந்து தம் கட்டுரைகளை நிறைவு செய்து தாமும் மனநிறைவு செய்து கொள்கிறார்.

<u>**சைவத்திருத்தலங்கள்:**</u> பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நால்வர்பற்றிய ஆய்வு நூல்களையும் பயண இலக்கியமாக மாற்றியுள்ளார். இந்த இலக்கியத்திலும் ஒவ்வொரு தலங்களைப்பற்றிய வரலாறுகளையும், இறைவனின் இருப்பு நிலை, இயற்கை எழில், வரலாற்றுக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள் இவற்றை எல்லாம் இயன்றவரை பெரிய புராணத்தைத் துணைகொண்டு விளக்குவார். அவற்றை ஈண்டு எடுத்துக்காட்டுவது இந்த ஆய்விற்குப் பொருத்தமாகும்.

<u>**புராண வரலாறுகள்(ஞானசம்பந்தர்)**</u>: இந்த நூலிலுள்ள நான்கு காட்டப் பெறுகின்றது.

<u>1.கோலக்கா</u>:இத்திருத்தலத்தில் சம்பந்தப் பெருமான் தாளம்போட்டுப் பாடும்போது இத்தலத்து எம்பெருமான் ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற்றாலங்கள் இரண்டை அவருக்குத் தந்தான். அம்பிகை தாளங்கட்கு ஓசை ஊட்டினாள் என்பது வரலாறு.[61]

<u>2.சாய்க்காடு</u>:இது ஒரு மாடக் கோயில். சோழவேந்தன் கோச்செங்கணான் எழுபது மாடக் கோயில்களைக் கட்டினதாக வரலாறு. இந்த சாயாவனத்தில்தான் இயற்பகை நாயனா தமது மனைவியை அடியார் ஒருவருக்குக் கொடுத்து திரும்பியதாக ஐதிகம்.[62]

<u>3.கோணியில்:</u>குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவாரூர்க்கு எடுத்துச் செல்ல ஆள் வேண்டி பதிகம்பாடி சுந்தரர் பூதகணங்களால் ஆரூர்க்கு கொண்டு சேர்த்த அற்புதம் நிகழ்ந்த தலம்.[63]

<u>4.கானப்பேர்</u>:இத் திருத்தலம் காளையார் கோவில் என்ற திருப்பெயராலும் வழங்கப்பெறும். சுந்தரர் கனவில் காளையாகத் தோன்றி தாம் இருப்பது கானப்பேர் கோவில் என்பது தலப்

பெயராயிற்று. ஐராவதம் பூசித்து சாப விமோசனம் பெற்றதாக ஒரு புராண வரலாறு.[64]

<u>புராணவரலாறுகள் (தம்பிரான் தோழர்)</u>: இந்த நூலிலிருந்தும் நான்கு காட்டப் பெறுகின்றன.

<u>1.அம்மர்மாகாளம்</u>: இத்திருத்தலம் <u>சோமாசிமார நாயனார்</u> என்ற அந்தணர் வாழ்ந்த திருத்தலம். வைகாசி ஆயில்யத்து அன்று சோமாசியாக உத்சவம் சிறப்பாக நடைபெறும். துருவாச முனிவர் ஆசியால் மதலோலா என்ற தேவ கன்னிகைக்குப் பிறந்த அம்பரன், அம்பன் என்ற அசுர அம்சமுடையவர்கள் வாழ்ந்த இடம். திருமால் காளியைத் துணைகொண்டு இருவரையும் கொன்று விடுகிறார்.[65]

<u>2.குற்றாலம்</u>: அகத்தியமுனிவர் திருமால் உருவை குறுகச் செய்து சிவலிங்கமாக்கியதால் குற்றாலமெனவும், பலாமரம் தலவிருச்சமாதல்பற்றி குறும்பலா எனவும் தலப்பெயர்கள் ஏற்பட்டன. நடராசர் தன் ஐந்து சபைகளில் இங்குள்ளது கல்லால் ஆகிய சித்தரசபை.[66]

<u>3.நள்ளாறு</u>: இது சப்த விடகங்களுள் ஒன்று. இங்கு இருப்பது நக விடகன், உன்மத்த நடனம், மதுரையில் சம்பந்தர் அனல்வாதம் செய்தபோது தமது தேவார ஏடுகளில் ஒன்றை எடுத்து அனலில் இடும்போது இத்தலப்பதிகம் பச்சென்று இருந்தபடியால் இப்பதிகம் ‘பச்சைப் பதிகம்’ எனப் பெயர்பெற்றது. இரண்டரை ஆண்டுக்கு ஒரு முறை வரும் சனிப் பெயர்ச்சி உச்சவம் புகழ்பெற்றது. சனிபகவான் தங்க காக்கை வாகனத்தில் எழுந்தருள்வான்.[67]

<u>4.திருமறைக்காடு</u>: சப்த விடங்களுள் ஒன்று. வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளைப்பாடி அப்பர் திறக்கவும், சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம். தமிழ்மொழியிலுள்ள தேவாரம் வடமொழி வேதத்திற்கு தாழ்ந்ததல்ல, என்பதைக் கட்புலனாக உலகிற்கு அறிவித்தது தான் இந்த அற்புதம்.[68]

<u>புராணவரலாறுகள் (மாணிக்கவாசகர்):</u> இந்த நூலிலிருந்தும் இரண்டு காட்டப் பெறுகின்றன.

<u>1.திருவிழடமருதூர்:</u> இங்கு வரகுண பாண்டியனுக்கு நேரிட்ட பிரமகத்தி தோசம் நீங்கலாகப் புராண வரலாறு.[69]

2.திருவாசகம் என்னும் நூலில் உள்ள புராணக் குறிப்புகளை எல்லாம் தொகுத்து பின்னிணைப்பு 3ஆக பேராசிரியர் காட்டி இருப்பது ஆய்வாளர்களுக்கு பயனுள்ள குறிப்பாகும்.[70]

புராணவரலாறுகள் (நாவுக்கரசர்): இந்த நூலிலிருந்தும் நான்கு காட்டப் பெறுகின்றன.

1.சிராப்பள்ளி: இது திரிசரன் என்ற அரக்கன் வழிபட்டதாலும், ஆதி சேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஏற்பட்ட சச்சரவில் வாயுவின் வன்மையினால் திருக்கயிலாயத்திலிருந்து பிளந்தெறியப் பெற்ற மூன்று துண்டுகளுள் ஒரு துண்டு இங்கு மலையானமையாலும் தலப்பெயர் ஏற்பட்டதென்பது புராண வரலாறு. காளத்தி, சிராப்பள்ளி, திருகோணமலை ஆகிய மூன்றும் இதுபற்றித் தென்கயிலை எனப்படும். இரத்தினாவதி என்ற வணிகப் பெண்ணின் பிரசவகாலத்தில் இறைவன் தாய்போல் வந்து உதவியதால் இறைவன் தாயுமானவன் என்ற பெயரால் வழங்கப்படுகின்றான்.[71]

2.மாற்பேறு (திருமால்பூர்): திருமால் சக்கராயுதம் வேண்டி சிவனை வழிபட்டதாகப் புராண வரலாறு உண்டு. (அப்பர் தேவாரம் 5.59:1).[72]

3.கழுக்குன்றம்: கோயிலுக்கு வடபுரம் ஒரு கற்பாறையின்மீது உச்சி வேளையில் நெய்யும் சர்க்கரைப் பொங்கலும் 'பட்சிப் பண்டாரம்' என்பவரால் நாடோறும் அளிக்கப்பெறுகின்றது. இராமாயண காலத்தில் இருந்த சம்பாதி, சடாயு என்ற இரு கழுகுகள் கழுக்குன்றத்து உச்சியானை வழிபட்டன என்றும், இக்கழுகுகளின் வழித்தோன்றலே இப்போது வருவன என்றும் ஒரு புராணவரலாறு உண்டு.[73]

4.குடமூக்கு (கும்பகோணம்): பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை நடைபெறும் மகாமகத்தில் (மாமாங்கம் - உலக வழக்கு) கும்பேசுவரர் வெள்ளி இடப வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளோடு எழுந்தருளி வந்து மகாமகக் குளக்கரையில் தீர்த்தம் கொடுப்பார். அப்போது பல இலட்சக்கணக்கான மக்கள் குளத்துள் முழுவதும் நின்று மூழ்கித் தரிசனம் செய்வார்கள். இந்தியாவில் உள்ள கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணை, பெண்ணை, தந்பொருநை முதலிய எல்லா தீர்த்தங்களிலும், முழுக்கும் பலன் கிடைக்கும் என்பது புராண வரலாறு.[74]

வரலாற்றுக்குறிப்புகள் (ஞானசம்பந்தர்): இந்த நூலிலிருந்தும் நான்கு காட்டப் பெறுகின்றன.

1.காவிரிப்பூம்பட்டினம்: சங்க காலத்தில் கரிகால் பெருவளத்தான் அரசு புரிந்த தலைநகரம், புகார் என்பது. சிலம்பு கூறும் 'பிறவாயாக்கை பெரியோன் கோயில்தான்' பல்லவரீச்சுரம் எனக் கருத இடமுண்டு. இயற்பகை நாயனாரும் பட்டினத்தடிகளும் வாழ்ந்த திருத்தலம்.[75]

2.எருக்கத் தம்புலியூர்: திருநீலகண்டயாழ்பாணர், திரு அவதரித்த திருத்தலம். இதன் இன்றைய பெயர் இராஜேந்திரப் பட்டணம் என்பது.[76]

3.முதுகுன்றம்: இத் திருத்தலத்தில் முதுகுன்றத்து எம்பெருமான் வழங்கிய பன்னிரண்டாயிரம் பொற்காசுகளை மணிமுத்தாற்றில் இட்டு, திருவாரூர் குளத்தில் எடுத்த வரலாறு சிறப்புடையது.[77] துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய பெரியோர்கள் இத்தலத்தில் மிகவும் ஈடுபட்டவர்கள். காசியிலும் வீசம் பெரியதான இத் திருத்தலம், விருத்தகாசி என கூறப்படுவதுண்டு.[78]

4.திருப்பணந்தாள்: தாடகை என்னும் அசுரப்பெண் வழிபடும்போது அவள் உடை சிறிது நெகிழ அவள் அதை கையால் சேர்த்தணைத்துக்கொண்டு வழிபாட்டை விடாது செய்ய மூலத்தான மூர்த்தி சாய்ந்து வழிபாட்டை ஏற்றனர். இதை நிமிர்த்துவதற்காக மன்னன் யானைகளால் கயிறு சாத்தி இழுத்து முயன்றான். பயன் இல்லை. ஆனால் குங்கிலியக் கலியநாயனார் தம் கழுத்தில் கயிறு சாத்தி இழுக்க அன்புக்குச்சாய்ந்த பரமன் நிமிர்ந்தான் என்பது வரலாறு. குமரகுருபர அடிகள் நிறுவிய காசிமடத்தின் தலைமைத்தலம் இது.[79]

வரலாற்றுக் குறிப்புகள் (தம்பிரான் தோழர்): இங்கும் நான்கு காட்டப் பெறுகின்றன.

1.திருநாவலூர்: நம்பி ஆரூர் பிறந்து நரசிங்கமுனையர் என்னும் சிற்றரசரால் வளர்க்கப் பெற்ற தலம். பல்லாண்டுகளாக திருநாமநல்லூர் என்று வழங்கி வந்த ஊர். திரு.வி.க. இந்த ஊரின் மீது அபிமானம் கொண்டு பிரச்சாரம் செய்தபின் பழைய பெயராகிய திருநாவலூர் என்ற பெயர் நிலைத்து வழக்கில் வந்துவிட்டது.[80]

2.நாட்டியத்தான்குடி: இது கோட்புலி நாயனார் திருத்தொண்டு புரிந்த தலம். ‘சிங்கடி வனப்பகை’ என்னும் தம் புதல்வியரை சுந்தரருக்கு அளித்து அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிய கோட்புலியாருக்கு அவர்களைத் தம்மக்களாக ஏற்று அருள் புரிகின்றார் தம்பிரான் தோழர்.[81]

3.திருபுறம்பயம்: சங்க காலத்தில் இங்கு சோழனுக்கும் பாண்டியனுக்கும் போர் நடந்தது. கோச்செங்க சோழன் வெற்றி பெற்று தென்னவராய் உலகாண்டான். திருமறுகல் வரலாற்றைப்போல் இங்கும் ஒரு வணிகப் பெண்ணின் திருமணத்தை மெய்ப்பிக்க இறைவன் சான்று பகர்கின்றான். இதனால் அவருக்குச் சாட்சிநதேஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது. [82]

4.அவினாசி: முதலை உண்ட பாலனை உயிர்ப்பித்துக் கொடுத்த அற்புதம் நிகழந்த தலம். முதலை இருந்த மடு இப்போது தாமரைக்குளம் எனப்படுகிறது.[83]

வரலாற்றுக் குறிப்புகள் (மாணிக்கவாசகர்): இந்நூலிலிருந்தும் இரண்டு காட்டப் பெறுகின்றன்.

1. திருவாரூர்: சோழமன்னர்கள் முடிசூட்டு விழா கொண்டாடிய ஐந்து நகரங்களுள் ஒன்று. ஏயர்கோன் கலிக்காமர், காடவர் கோன் கழற்சிங்கர், செருந்துணையார், தண்டியடிகள், திருநீலகண்டயாழ்பாணர், ஓமிநந்தியடிகள் முதலிய நாயன்மார்கள் வாழ்க்கைத் தொடர்புடைய தலம்.[84]

2. வெண்ணெய்நல்லூர்: சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து அவரை ஆட்கொண்ட தலம். சுந்தரரின் வழக்கை வென்ற இடம். ‘வழக்குவென்ற அம்பலம்’ என்று கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. இத்திருத்தலம் உமா தேவியார் வழிப்பட்டமையால் , அருட்டுறை என்ற திருநாமம் பெற்றது.[85]

வரலாற்றுக் குறிப்புகள் (நாவுக்கரசர்): இந்த நூலிலிருந்தும் மூன்று தரப்பெறுகின்றன

1. கோலக்கா: சம்பந்தர் ‘தோடுடைய செவியன்’ என்ற பாடலைப்பாடி கையினால் தாளம்போடும்போது இத்தலத்து ஈசன் ஐந்தெழுத்து வரையப்பெற்ற பொற்றாளம் இரண்டை அவருக்குத் தந்தான் என்றும், அம்பிகை தாளங்கட்கு ஓசை தந்தாள் என்றும் ஒரு வரலாறு உண்டு. [86]

2. <u>கச்சித்திருமேற்றளி:</u> திருக்கோயிலில் இரண்டு சிவபெருமான் சந்நிதிகள் உள்ளன. ஒன்று திருமால் உருவம். சம்பந்தன் பதிகம் ஒத உருகி சிவலிங்கமாகிய ஒத உருகேசர் சந்நிதி என்பது ஒரு வரலாறு.[87]

3. <u>செங்காட்டக்குடி:</u> சிறுத்தொண்ட நாயனார் சிவபெருமானுக்கு பிள்ளைக்கறி அளித்த அற்புதத் தலம். சிறுத்தொண்டர் வாதாபி போர்வென்று கொணர்ந்த கணபதியை பூசித்ததால் கோயிற்பெயர் கணபதீச்சுவரம் ஆயிற்று.[88]

<u>**இலக்கியக் குறிப்புகள் (தம்பிரான் தோழர்):**</u> இந்நூலிலிருந்து மூன்று தரப் பெறுகின்றன.

1. <u>திருநாகேச்சரம்:</u> சேக்கிழார் அடிகள் பெரிதும் ஈடுபட்ட தலம். தாம் குன்றதூரில் கட்டிய திருக்கோயிலுக்கும் திருநாகேஸ்வரம் என்று பெயரிட்டார்.[89]
2. <u>திருவிடைமருதூர்:</u> பட்டினத்தடிகள் வழிபெற்ற தலம். அவர் அருளிய ‘‘மும்மணிக் கோவை’ பெற்றது இத்தலம்.[90]
3. <u>இராமேசுவரம்:</u> நிரம்பி அழகிய தேசிகர் இயற்றிய ‘சேதுப்புராணம்’ முதலியன இத்தலத்துக்கு உண்டு. திருத்தலத்து அம்பிகை மலைவளர்காதலி (பர்வதர்தனி) யின் சிறப்பைத் தாயுமான அடிகளின் திருப்பாடல் நன்கு விளக்கும். [91]

<u>**இலக்கியக் குறிப்புகள் (ஞானசம்பந்தர்):**</u> இந்நூலிலிருந்து மூன்று தரப்பெறுகின்றன.

1. <u>திருவழுந்தூர்:</u> கவிச்சக்கரவர்த்தி கம்பன் வசித்த இடம்.[92]
2. <u>திருப்பரங்குன்றம்:</u> நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படை விண்ணப்பித்த தலம்.[93]
3. <u>விற்கோலம்:</u> துறைமங்களம் சிவப்பிரகாசர் இயற்றிய தலபுராணம் அருமையானது.[94]

<u>**இலக்கியக் குறிப்புகள் (மாணிக்கவாசகர்):**</u> இந்நூலிலிருந்து மூன்று தரப் பெறுகின்றன.

1. <u>திருவிடைமருதூர்:</u> இது பட்டினத்தடிகள் வழிபட்ட தலம். அவர் அருளிய ‘திருவிடைமருதூர் மும்மணிக் கோவை’ சிறந்த இலக்கியமாக வழங்கி வருகின்றது. [95]

2. திருவாவடுதுறை: திருமூலர் திருமந்திரம் அருளிய தலம். திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர் தொடர்பு இத்தலத்திற்கு உண்டு.[96]

3. திருவண்ணமாலை: அருணகிரிநாதர் வாழ்ந்து முக்தி பெற்ற தலம். திருவெம்பாவை, திருவம்மானை ஆகியவற்றை மாணிக்கவாசகர் இங்கு இயற்றினார். 'அருணகிரி அந்தாதி', 'அண்ணாமலை வெண்பா', 'சோணசைலமாலை', 'அருணைக்கலம்பகம்' ஆகியவை இத்தலத்தைப் பற்றியவை.[97]

இலக்கியக் குறிப்புகள் (நாவுக்கரசர்): இந்நூலிலிருந்து மூன்று தரப் பெறுகின்றன.

1. அண்ணாமலை: அருணகிரிநாதர் வாழ்ந்து முக்திபெற்ற தலம். 'திருவெம்பாவையை' மாணிக்கவாசகர் பாடியது இத்தலத்தில். 'அருணகிரிஅந்தாதி','அண்ணாமலைவெண்பா', 'சோணசைலமாலை', 'அருணைக்கலம்பகம்' ஆகிய நூல்கள் இத்தலத்தைப் பற்றியவை.[98]

2. சிராப்பள்ளி: தாயுமான அடிகள் அவதரித்த தலம். மௌனகுருவினிடம் உபதேசம் பெற்று உருக்கமான பல பாடல்களை அருளிய தலம். எல்லப்ப நாவலர் இயற்றிய 'செவ்வந்திப் புராணம்' இத்தலத்திற்குரிய புராணம்.[99]

3. இடைமருதூர்: வரகுணபாண்டியனின் பெரும்புகழ் தொடர்புடையது. பட்டினத்தார் வழிபட்ட தலம். அவர் அருளிய 'மும்மணிக்கோவை' பெற்றது இத்தலம்.[100]

முடிவு: இங்ஙனமாக சைவ, வைணத் தலங்களைச் சேவித்து முடித்த பேராசிரியார் தம்முடைய அநுபவங்களை பயணத்தமிழ் இலக்கியமாகத் தருவது ஒரு தனிச்சிறப்பு.

இந்த இயலில் கண்ட முடிவுகள்

1. திருத்தலப் பயணத்தில் தாம் பெற்ற இறையநுபவத்தைச் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றார்.

2. வைணத் திருத்தலங்கள் 108 என்றும், சைவத் திருத்தலங்கள் 275 என்றும், வைப்புத் தலங்கள் என்றும் குறிப்பிட்டுக் காட்டுவது ஒரு தனிச்சிறப்பு.
3. திருத்தலத்திற்கு பயணம்மாகும்போது இவர் கூறும் சமய, வைணச் சிந்தனைகள் திருத்தலப் பயணிகட்கு, மகிழ்ச்சித்தரும் ஒரு நற்பயனாகும்.
4. ஓவ்வொரு தலத்திலும், தலத்தின் இருப்பு சூழ்நிலை, போகும்வழி இவற்றைத் தெளிவாக விளக்கும் போக்கு திருத்தலப் பயணிகட்கு பயன்பெறத்தக்க திருக்குறிப்பாகும்.
5. சைவ, வைணவ திருத்தலங்களை விளக்கியப்பிறகு அத்தலத்தின் வரலாற்றுக் குறிப்புகள், இலக்கியக் குறிப்புகள், புராணக் குறிப்புகள், ஏதாவது இருப்பின் அவற்றை எடுத்துக்காட்டுவது ஆய்வாளர்களுக்கு நல்லவிருந்து.
6. வைணவத் திருத்தலக் கட்டுரையை முடிக்கும்போது பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் 108 திருவந்தாதியின் பாசுரங்களைக் கொண்டு முடிப்பது வைணவ சமயத்தினர்க்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகும்.
7. வைணவத் திருத்தலங்களை எடுத்துரைக்கும்போது அத்திருத்தலத்தில் ஆழ்வார் பெருமக்களின் அருளிச் செயல்களை எடுத்துத்தத்துவப்பாங்கில் விளக்குவது சயம அறிஞர்களுக்கு சுவை ஊட்டுவதாகும்.
8. சில திருத்தலங்களில் இயற்கை வருணனையை விளக்கும்போது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற முறையில் நானில வருணனைகளைக் காட்டுவது இலக்கியச் சுவைஞர்களுக்கு ஒரு சிறந்தவிருந்து.
9. சைவத் திருத்தலங்களை விளக்கும்பாங்கில், திருத்தலம்பற்றிய பதிகங்களில் சுவையான பாடல் ஒன்றினை எடுத்துக்காட்டுவது சைவ அன்பர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகும். அவர் பக்தியையும் கிளர்ந்தெழச் செய்வதாகும்.
10. வைணத்திருத்தலத்தின் இயற்கைச் சூழ்நிலையை எடுத்துரைக்கும்போது வைணவத் தத்துவங்களாகிய சித்து (ஆழ்வார்), அசித்து (இயற்கைச் சூழ்நிலை), இறைவன் (திருத்தல எம்பெருமான்) இவற்றை விளக்குவது வைணவ அன்பர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதாகும்.

<u>அடிக்குறிப்புகள்</u>:

1. நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி - பாடல், 6
2. தெய்வத்தமிழ் வைணவம் - இவ்வாய்வேடு - இயல்-9
3. ம.நா.தி. நூல்முகம் - ப
4. மேலது. ப 1
5. மேலது. ப 14
6. மேலது. ப 104
7. மேலது. ப 159
8. தொ.நா.தி. பக் 1,2

9. மேலது. ப 70
10. மேலது. ப 127
11. பா.நா.தி. ப 1
12. மேலது. ப 163
13. வ.நா.தி. ப 22
14. மேலது. ப 55
15. சோ.நா.தி. (1) ப 51
16. மேலது. ப 128
17. மேலது. தொகுதி - 2 ப 148
18. மேலது. ப 209
19. வ.நா.தி. ப 22
20. மேலது. ப 37
21. ம.நா.தி. ப 52
22. மேலது. ப 177
23. தொ.தி. ப 110
24. சோ.நா.தி. (பகுதி-1) ப 196
25. சோ.நா.தி (பகுதி-1) ப 109
26. இவ்விடத்தில் பேராசிரியர் ரெட்டியார் ஒன்பது கோள்களும் பேறுபெற்ற தலங்களை நினைவு கூர்வது மிகச் சிறப்பாகும்.
27. சோ.நா.தி. பகுதி-2 ப 64
28. ம.நா.தி. பக்.36-37
29. மேலது. ப 95
30. தொ.நா.தி. ப 242-250
31. மேலது. ப 269
32. சோ.நா.தி. பகுதி-1 பக் 132-141
33. மேலது. பகுதி-2 ப.64-89
34. பா.நா.தி. ப.70-90
35. மேலது. ப 163-178
36. ம.நா.தி. பக் 33 - 52
37. மேலது. ப 138-158
38. வ.நா.தி. ப.66-78
39. மேலது. ப 55-65
40. பா.நா.தி. ப.89-90
41. சோ.நா.தி. பகுதி-2 பக்.-144
42. மேலது. பகுதி-1 ப.63
43. மேலது. பகுதி-1ப.16
44. தொ.நா.தி. ப. 13-16
45. சோ.நா.தி. பகுதி-2 ப.85-89
46. மேலது. ப 105
47. பா.நா.தி. ப.15
48. மேலது. பு. 197-200
49. சோ.நா.தி. பகுதி-2 ப.214-217
50. ம.நா.தி. ப.2,3,5
51. சோ.நா.தி. ப.49
52. மேலது. ப 128-129
53. பா.நா.தி. ப.175
54. ஆ.உறி. 169
55. ‘இழந்தது சங்கே’ (6.6:1) என்பது போன்றவை

56. பா.நா.தி. ப.175-176
57. ஆசார்யஹிருதயம் - சூத்திரம் 183 துவாரத்தயம் - மூன்று திருவாயில்கள் புத்திரன்-பிரம்மன், சிஷ்யர் ஆழ்வாருடைய சீடர்கள் பூசுரர் - நிரத்தேவர், வியக்கம் - தெளிவு.
58. ம.நா.தி. ப.44-45
59. நூற் - திருப். அந்.67
60. பா.நா.தி. ப.139
61. ஞானசம்பந்தர் ப-11
62. மேலது. ப 22
63. மேலது. ப 162
64. மேலது. ப 233
65 தம்பிரான் தோழர் ப.49
66. மேலது. ப 133
67. மேலது. ப 142
68. மேலது. ப 162
69. மாணிக்கவாசகர் ப.165
70. மேலது. ப 377-380
71. நாவுக்கரசர் ப.208
72. மேலது. ப 220
73. மேலது. ப 229
74. மேலது. ப 125-126
75. ஞானசம்பந்தர் ப.20
76. மேலது. ப 36
77. மேலது. ப 36
78. மேலது. ப 36
79. மேலது. ப 46
80. தம்பிரான் தோழர் ப.18-19
81. மேலது. ப 39
82. மேலது. ப 66
83. மேலது. ப 175
84. மாணிக்கவாசகர் ப.168
85. மேலது. ப 176
86. நாவுக்கரசர் ப.75
87. மேலது. ப 220
88. மேலது. ப 140
89. தம்பிரான் தோழர் ப.57
90. மேலது. ப 56
91. மேலது. ப 134
92. ஞானசம்பந்தர் ப.137
93. மேலது. ப 230
94. மேலது. ப 277
95. மாணிக்கவாசகர் ப.165
96. மேலது. ப 167
97. மேலது. ப 184
98. நாவுக்கரசர் ப.214
99. மேலது. ப 208
100. மேலது. ப 100

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ VI

இயல் - 12

வாழ்வியல் தமிழ்



பகுதி 6 :<>: இயல் – 12

வாழ்வியல் தமிழ்

தமிழில் தன்-வரலாறு பற்றிய இலக்கியங்கள் அத்தி பூத்ததுபோல் மிக அரியனவே. இக்காலத்தில் காந்தி அடிகள் எழுதிய ‘சத்தியசோதனை’ (My Experiment with Truth), நேருவின் ‘சுயசரிதை’’ (An Autobiography of Pandit Nehru) குறிப்பிடத்தக்கவை. இவை இரண்டும் ஆங்கில மூலத்தில் இருந்து தமிழுக்கு வந்தவை. தமிழ்ப் பெரியார் திரு.வி.கவின் வாழ்க்கைக் குறிப்புகள், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் ‘என் சரித்திரம்’, நாமக்கல் கவிஞரின் ‘என் கதை’ ‘தாமரைச் செல்வர்’ நெ.து. சுந்தர வடிவேலு அவர்களின் ‘நினைவு அலைகள்’ (மூன்று பகுதிகள்) ஆகியவை இந்த வாழ்வியல் தமிழுக்கு வந்த செல்வங்கள். முன்னோர் காட்டிய வழிப்படி பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் அவர்கள் ‘நினைவுக்குமிழிகள்’ என்ற தலைப்பில் (4 பகுதிகள்) ஆற்றொழுக்கான வேகமான நடையில் தமிழுக்குத் தந்த கொடை என்று சொல்லலாம்.

அதில் அவர் கூறுவது, பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளும், தன்வரலாறுகளும், வரலாற்றில் தனிப்பட்டோரின் வாழ்க்கை வரலாறுகளும் அமையும். ‘தகுதியுடைய வாழ்க்கையாக இருந்தால், அது நுணுக்கமாகவும், உண்மையாகவும், எழுதப்பெறும் தகுதியைப் பெறுகின்றது’ என்பது ‘லாங்க.்.பெலோ’ என்பாரின் கருத்து. ‘தம்முடைய விடா முயற்சியால் பயனுள்ள முறையில் பெரும் புகழ் எய்திய நல்லவர்கள் வல்லவர்களின் வரலாறு-தன்-வரலாறுகள்-படிப்போரிடம் அகத்தெழுச்சியை எழுப்பவல்லவை. அவை அவசியம் படிக்க வேண்டியவை’ என்றார் மற்றோர் அறிஞர். இவை உலகளாவிய முறையில் பயனுள்ள மகிழ்வூட்டத்தக்க படிப்பாக அமைகின்றன; படிப்பினையாகவும் அமைகின்றன. ‘இந்த எளியோரின் வாழ்க்கை படிப்போருக்கு ஏதாவது பயன் நல்குமானால் அவர்களிடம் அகத்தெழுச்சியை எழுப்பக் கூடுமானால், அது நான் பெற்ற பேறு. இறைவனின் திருவுள்ளக் குறிப்புமாகும்’,[1] என்கின்றார் பேராசிரியர். இந்நூலைப் படிப்போர் அவருடைய நினைவின் ஆற்றலை நன்கு உணரலாம். சிறிய சிறிய நிகழ்ச்சிகள் நினைவுக்கு கொணரப்பெற்று வியப்பூட்டுவதாக அமைகின்றன.

திருச்சி மாவட்டத்தில் இலால்குடி வட்டத்தில் பிரகம்பி என்ற சிற்றூரில் பிறந்தவர் பேராசிரியர் ரெட்டியார். மூன்றாவது பருவத்திலேயே தந்தையை இழந்தவர். தாய் மாமன் அரவணைப்பில் வாழ்ந்தவர். அவர் தம் அம்மானின் இரண்டாம் திருமணத்திற்குப் பிறகு அவரால் கைவிடப்பெற்று தம் சொந்த ஊராகிய கோட்டத்தூர் என்ற ஊருக்குத் திரும்பியவர். தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர். பிரகம்பியில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சில ஆண்டுகளும், கோட்டத்தூரில் தொடக்கநிலைப் பள்ளிக்கூடத்தில் சில ஆண்டுகளும் பயின்றவர். ஓராண்டு துறையூர் சமீந்தார் உயர்நிலைத் தொடக்க பள்ளியிலும், மூன்றாண்டுகள் முசிரி உயர்நிலைப் பள்ளியிலும், ஐந்தாண்டுகள் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியிலும், ஓராண்டு சைதை ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும் பயின்று வாழ்க்கையில் கால் வைத்தவர். இந்தப் படிப்புக் காலத்தில் அவர்பட்ட துன்பங்கள், தொல்லைகள் முதலியவற்றை நோக்கும்போது படிப்போரின் கண்களில் குருதி நீர் ஒழுகும். ‘தந்தையாடு கல்வி போம்’ என்ற பழமொழி இருந்தாலும், அறிவுக்கூர்மை உள்ள அன்னை தந்தையாகவும், தாயாகவும், வழிகாட்டியாகவும் இருந்து பல்வேறு வகைகளில் உதவி புரிந்தார்.

<u>கல்விகற்றநிலை:</u> நன்னூலில் நன்மாணாக்கர்கள் பற்றியும், நல்லாசிரியர் பற்றியும் இரண்டு நூற்பாக்கள் உள்ளன. இவற்றுள் மாணாக்கர்பற்றிய நூற்பாவில் கூறிள்ள நிலைக்குப பேராசிரியர் ரெட்டியார் வருகிறார். இவருக்கு இயல்பாக அமைந்த எல்லா நிலையிலும் ஆசிரியர்கள் பலரும், இரண்டாவது ஆசிரியர்பற்றிய நூற்பாவிற்கு பொருந்தியவர்களாக அமைந்தது இறைவனின் திருவுள்ளக் குறிப்பாகும். சிறுவயதில் கற்பித்த ஆசிரியர்கள் நீதி நூல்களையே அதிமாக கற்பிப்பர். அதனால் இவரின் தொடக்கக் கால வாழ்க்கை வரலாற்றில் ஏராளமான நீதி நூல் பாடல் குறிப்புகள் அதிகமாகத் தலைகாட்டுகின்றன. திண்ணைப் பள்ளிக்கூட நிகழ்ச்சிகளாக குறிப்பிடப்படும் பல நிகழ்ச்சிகள் சுவையூட்டுபவை. விநாயகர் சதுர்த்தி, சரசுவதி பூசை, நவராத்திரி விழா போன்ற விழாக்களை மிகத் திறமையுடன் வருணிப்பார். அழுதலின் தத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டு வாசகர்களுக்கு பெரிய தத்துவத்தையே விளக்குவார்.[2] சிற்றூர் விழாக்களாகக் கண்ணன் பிறப்பு, காமன் பண்டிகை இவற்றைக் குறிப்பிடுவார். கண்ணன் பிறப்பு பற்றிக் குறிப்பிடும்பொழுது பெரியாழ்வாரின் திருமொழியில் ஒன்றிரண்டு பாசுரங்கள் இவர் எழுத்தில் தலை காட்டும். படிப்போர்க்கு பக்திச் சுவையை ஊட்டும்.

அம்மான் வீட்டில் இருந்து தன் சொந்த வீட்டுக்கு விரட்டப்படும் காட்சி அற்புதமாகச் சித்தரிக்கப்படுகின்றது. 'ஏழ் இரண்டு ஆண்டில் வா' என்ற கைகேயின் சொல்லும், 'அன்றலரந்த செந்தாமரைபோல்' என்ற கம்பனின் அடிகளும் நினைவு கூர்ந்து அவற்றைச் சுவைக்க முடியாத இளவயதின் நிலையை இன்று நினைவு கூர்ந்து அகமகிழ்ந்து படிப்போர்க்கு இலக்கியச்சுவையூட்டும். அன்று 'தீராத விளையாட்டுப் பிள்ளையாக' சொந்த ஊர் திரும்பிய நிகழ்ச்சி, இன்று இராமாயண நிகழ்ச்சியையே நம் முன் கொண்டுவந்து நிறுத்துகிறது. ஓராசிரியப் பள்ளியின் ஆசிரியராகிய வேலூர் வாத்தியாருக்கு, இரண்டாவது ஆசிரியராக வந்த சுப்பராய உடையார் பிரவேசம் சில அதிர்ச்சியைத் தந்தது. இதனால் இருவரிடையே ஏற்படும் மோதல்களைச் சுவையாகத் தருவார் பேராசிரியர்.[3] மாணாக்கர்களுக்கு அறிவுரை புகட்டும் ஆசிரியர்களே இந்த மோதல்களை மேற்கொண்டதால் மாணாக்கர்களிடையே ஏற்படும் மோதல்களை எப்படி அகற்றமுடியும்? என்பது பேராசிரியரின் வினா. வேலூர் வாத்தியார் கற்பித்த முறை அற்புதமாக இருந்தது என்பதை பல எடுத்துக்காட்டுகளால் விளக்குவார் பேராசிரியர்.[4] இதே சமயத்தில் பழைய முறைக் கல்வியையும், புதுமுறைக் கல்வியையும் திறனாய்வு செய்ய பேராசிரியரின் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியின் அறிவு கைகொடுத்துதவுகின்றது. இவர் கற்ற அரிச்சந்திர புராணத்தில் இருந்து நெஞ்சு நெகிழச் செய்யும் சில பாடல்களை எடுத்துக்காட்டுவது, அந்த புராணத்தை பயிலாதவர் நெஞ்சையும் நெகிழச் செய்யும். இவருடைய கல்வி வாழ்க்கையில் எழு ஞாயிறாகத் திகழ்ந்தவர் வி.கே.அரங்கநாதய்யர். இவரே நன்கு கற்பித்து ஒன்றிரண்டு ஆண்டுகளில் முசிறி உயர்நிலைப்பள்ளியில் எட்டாவது வகுப்பில் (மூன்றாம் படிவம்) சேர்த்ததை இன்றும் நன்றியுடன் நினைவு கூர்வார்.[5] இவர் கற்பித்தலில் பல புதிய முறைகள் மேற் கொண்டதை நினைத்துப் போற்றுவார்.

<u>நல்லாசிரியாகள்</u>: தொடக்கநிலைப் பள்ளிகளில் அமைந்த வேலூர் வாத்தியார், வி.கே.அரங்கநாதய்யர் இவர்களைப்போல் உயர்நிலைப் பள்ளியிலும் செல்லய்யா என்ற அரங்கசாமி ஐயங்கார் (தலைமை ஆசிரியர்), கே. இராமசந்திரஐய்யர் (கணித ஆசிரியர்), இராமநாதப்பிள்ளை (அறிவியல் ஆசிரியர்), குமாரவேலு அய்யர், ஜம்புலிங்கக் குருக்கள் (தமிழ் ஆசிரியர்கள்), கல்லூாயில் ஜெரோன் டி.சௌசா (முதல்வர்), கோவிந்தராவ், ஏ.சி.ஜோசப் (வேதியியல்), கே. சீனிவாசன் (கணிதப் பேராசிரியர்), லாரன்ஸ் சுந்தரம் (ஆங்கிலப் பேராசிரியர்), மு. நடேச முதலியார் (தமிழ்ப் பேராசிரியர்) இவர்களை

நன்றியுடன் குறிப்பிடுவார். சைதையில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் நல்ல பேராசிரியர்களையும் பொறாமைப்படும் கயவர்களையும் குறிப்பிடத் தயங்கிற்றிலர்.

<u>உளவியல் குறிப்புகள்</u>: சைதை கல்லூரியில் படித்த காலத்தில் பேராசிரியர் குருசாமி உளவியலை அற்புதமாகக் கற்பித்தமையால் பேராசிரியர் ரெட்டியாருக்கு உளவியல்பால் தனி ஆர்வம் ஏற்பட்டது. அதனால் உளவியலை நன்கு பயின்று ‘கல்வி உளவியல் கோட்பாடுகள்’ என்ற நூலைப் படைத்துத் தம் அருமைப் பேராசிரியர் குருசாமி ரெட்டியாருக்கு அன்புப் படையலாக்கி மகிழ்கின்றார். இதனால் வாழ்க்கையில் குறுக்கிடும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உளவியல் நோக்கில் திறனாய்வு செய்வது இவர்தம் வழக்கமாக இருந்து வருகிறது.

1. தம் மைத்துனர் ஜோதிட நம்பிக்கையில் வெறி கொண்டவர். அவருக்கு இரண்டாந்தாரமாக பெண் கொடுத்த மாமனார் தம் மருமகனின் மனநிலையை அறிந்து பல நிகழ்ச்சிகளைப் பக்குவமாகப் பெருக்கிக் காட்டுவார். இவை ஓமியோபதி குளிகைகள்போல் தம் மருமகனுக்கு மிகவும் இனிக்கும். அவை சிறந்த கருத்தேற்றங்களாக (Suggestions) அமைந்து மனத்தை சிந்திக்கச் செய்யும். இது ஓர் உளவியல் உண்மை என்பார் பேராசிரியர்.[6] தம் மனைவிக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சீதனத்தொகைகளை ஆயுதப் பிரசவம்போல் வாங்க நேரிட்டது என்கின்றார்.

2) பேராசிரியர் ரெட்டியாரின் மைத்துனர் வழக்குகளையும் சுவைப்பட அநுபவிப்பவர். தம் மாமனார் பத்திரங்கள், ஆவணங்கள் எழுதும் தொழில் உடையவர். ஆதலால் தாம் கேட்ட வழக்குகளையும், நேரில் கண்ட வழக்குகளையும் கதைகள் போல் சோடித்து வழங்குவார். அவற்றில் தம் கைங்கரியம் ஏதாவது இருந்தால் அவற்றைப் பெருக்கிக் காட்டுவார். நாளடைவில் வயது முதிர்ந்து மனம் தடுமாறி சிந்தனையே செயற்படாத நிலையில் இருந்த தம் மருமகனின் பாட்டியை ஏமாற்றி இரண்டு விருப்ப ஆவணங்களையும் பதிவு செய்யத் தயார் செய்தார். இந்தப் புதிய ஆவணங்கள் தம் மருமகனின் பெருஞ்செல்வம் அழியவும், அவர்தம் இறுதி நாட்களை வறுமையிலும், துக்கத்திலும் நடத்தி வாழவும் நேரிட்டது. இவற்றை எல்லாம் இலக்கியச் சுவையுடன் எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.[7]

3) ∴பிராய்லின் கருத்துப்படி மனம், நனவு நிலை (Conscious level), நனவிலி நிலை (Unconscious level), நனவடிநிலை (Sub-conscious level) என்று மூன்று பகுதிகளாக செயல்படுகிறது. நனவு உள்ளம் முழு உள்ளத்தின் கோடியில் ஒரு பங்கேயாகும். நனவிலி உளமே பெரும்பகுதியாகும். நாம் பேசும் பேச்சும் செய்யும் செயலும் வேறு பிறவும் நாம் அறியாமல் நனவிலி உளத்தில் மறைந்தோடிப் பின்னர் நனவு உள்ளத்தில் புகுந்து எழுந்து தோன்றுவனவாகும் என்பார். இதை சர் வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியல் பேரறிஞரின் விளக்கத்தைப் பல இடங்களில் எடுத்துக்காட்டுவார். இக்கருத்தைத் திருப்பதி பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர். டி.ஜெகந்நாத ரெட்டியாரின் பல அறிவுக்கு ஒவ்வாத செயல்களை எடுத்துக்காட்டும் போதும்,[8] பாவேந்தன் பாரதிதாசன் கடவுள் மறுப்புக்[9] கொள்கையைப் பேசும்போதும் எடுத்துக்காட்டுகளாக காட்டுவார்.

4. உளவியலார் குழந்தையின் வளர்ச்சிப் பருவங்களைக் குழவிப்பருவம் (2½ அல்லது 3 வயது), முன்-பிள்ளைப் பருவம் (3½ அல்லது 7 வயது - மனவளர்ச்சிக்குரியது), நிலைமாறு பருவம் (6 அல்லது 7, 8 வயது - உடல் வளர்ச்சிக்குரியது), பின்-பிள்ளைப் பருவம் (8,12 வயது மன வளர்ச்சிக்குரியது), முன்-குமரப் பருவம் (12-14 வயது - உடல் வளர்ச்சிக்குரியது) என்று பகுத்துக்காட்டப்பெறும். இவற்றுள் சிலசமயம் நிலைமாறு பருவத்தை நடுப்பிள்ளைப் பருவம் என்று குறிப்பிடுவது உண்டு. கல்வித்துறையில் பணியாற்றுவோர்க்கு இப்பருவ வளர்ச்சி பற்றிய குறிப்புகள் பெருந்துணையாக இருக்கும்.[10] எல்லா நிலை ஆசிரியர்களும் கல்வி உளவியல்பற்றிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பதைப் பேராசிரியர் பல இடங்களில் வற்புறுத்துவர்.

<u>கணிதக்குறிப்புகள்:</u> ஹெர்பார்ட்டின் ஐந்து படிகளில் மனத்தைத் தயாரித்தல் முக்கியமானது. சில வினாக்களைக் கொண்டு மாணாக்கர்களின் முன் அறிவு திறனையைத் (Appreceptive mass) தெரிந்துகொண்டு, கே.இராமச்சந்திர அய்யர் கற்பித்தார் என்பதைப் பேராசிரியர் நினைவு கூர்கிறார்.

1.வரலாற்று ஆசிரியர் கதை சொல்வது போல் ஆரம்ப கணிதத்தில் உள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். இலாபம், நட்டம், கூட்டுவாணிகம், வட்டிக் கணக்கு இவற்றைக் கற்பிப்பது அற்புதமாக இருக்கும். வகுப்பறையில் இருப்பதை மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கி

விடுவார். கற்பிக்கும் செய்திகள் அன்றாட வாழ்க்கையில் இணைந்து விடுவதால் கணக்கு பற்றிய கருத்துகள் மனத்தில் ஆழப்பதிந்து விடுகின்றன.

2. அக்காலத்தில் பெரும்பாலான மாணவர்கள் கிராமத்திலிருந்து வந்தபடியால் பேராசிரியர் உட்பட இருப்பூர்திகளை பார்த்தறியாதவர்கள். ‘காலமும் தூரமும்’ என்ற பகுதியை மிகுந்த உற்சாகத்துடன் கற்பித்தமையை எடுத்துக் கூறுகின்றார். காலை உணவு முடிந்து சிற்றுண்டி எடுத்துக் கொண்டு தம் வகுப்பு மாணவர்களை இட்டுக் கொண்டு முசிறியிலிருந்து படகுமூலம் காவிரியைக் கடந்து குளித்தலையில் இருப்பூர்தி நிலையத்தில் மாணவர்களுடன் தவம் கிடப்பார். இன்று இருப்பதுபோல் அக்காலத்தில் அதிக வண்டித் தொடர்கள் இல்லை. ஆகவே (அ) ஒரே திசையில் செல்லும் வண்டிகள் ஒன்றை ஒன்று தாண்டிச் செல்வது, (ஆ)எதிர் திசை வண்டிகள் ஒன்றை மற்றொன்று தாண்டிச் செல்வது, (இ) வண்டிமேடையை வண்டிகள் தாண்டிச் செல்வது போன்ற காட்சிகளை நேரில் காண்பதற்காகப் பலமணி நேரம் காத்துக் கிடக்க வேண்டும். இக் காட்சிகளை நேரில் கண்டபிறகு செய்திகளைத் தெளிவாக விளக்குவார். அடுத்தநாள் வகுப்பில் கணக்குகள் செய்யும் போது, நிகழ்ச்சிகள், விதிகள் முதலியவை மனத்திற்குப் பளிங்கெனத் தட்டுப்படும். வண்டிக்காக காத்திருக்கும் நேரத்தில் காலத்தைக் கொன்னே கழிக்காமல், கணக்குபற்றி பல்வேறு குறிப்புகளைத் தந்த நிலையில் இருப்பார்.[11]

3.இயற்கணிதத்தில் வாய்பாடுகளையும் வடிவ கணிதத்தில் கடாத் தீர்வு (Rider) கணக்கு போடுவதிலும் மாணாக்கர்கள் ஒவ்வொரு படிகளிலும் சிந்திக்க வாய்ப்புகள் தருவார். இவற்றைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார்.[12]

<u>அறிவியல் குறிப்புகள்:</u> அறிவியல் கற்பித்தலில் டி.கே. இராமநாதபிள்ளை, ஏ.நாராணசாமிஅய்யர், திரு.வின்செண்ட் ஆகியோரைக் குறிப்பிடுவார்.[13]

1. திரு. இராமநாதபிள்ளை சோதனைகளைக் காட்டி விளக்குவதில் சிறந்தவராகத் திகழ்ந்தாலும், ஏட்டுப்படிப்பாக (Theory) வாய்பாடுகளை விளக்குவதில் சிறந்தோராகத் திகழவில்லை. எடுத்துக்காட்டாக ‘சார்லஸ்-பாயில்-விதியை’ விளக்கும் $\frac{PV}{T} = \frac{P_1V_1}{T_1}$ என்ற

வாய்பாட்டை இவர்க்குச் சரியாக விளக்கத் தெரியவில்லை. சொல்வதையே சொல்லும் கிளிப்பிள்ளை போல் பேசினால் எப்படி விளக்கம் அடையும்? இதன் விளக்கத்தைப் பேராசிரியர் ரெட்டியார் கல்லூரி இடைநிலை வகுப்பில், பேராசிரியர் 'சவரிமுத்து' அவர்களிடம் விளக்கப் பெற்றதை மகிழ்வுடன் நினைவு கூர்கின்றார்.[14]

2. வின்செண்ட் என்பார் புதிதாக பட்டம் பெற்ற ஆசிரியர். இவர் தமிழும் ஆங்கிலமும் கலந்த மணிப்பிரவாள நடையில் கற்பிப்பார். அக்கறையாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும் கற்பிப்பதனால் கருத்துகள் மொழியின் எல்லையைக் கடந்து விளக்கம் ஒன்றே குறிக்கோளாக அமைந்து, மாணவர் மனத்தில் ஆழப்பதிந்தது.

3.ஏ. நாராயணசாமி அய்யர் 'ஊமையன்' என்று மாணாக்கர்களால் சாட்டுப் பெயர் இட்டு வழங்கப்படுவர். கற்பித்தலில் அவரது மெதுவாக பேசும் தன்மை 'கிசுகிசுப்பது' போல் இருக்கும். மாணாக்கர்கள் காதில் காற்றொலி கேட்குமே அன்றி மொழிஒலி கேட்கப்படாததனால் எந்தவித தாக்கமும் மாணாக்கர் மனதில் ஏற்படுவதில்லை. விளக்கமும் 'சிதம்பர இரகசியம்' போல் இருக்கும்.

<u>தமிழ் கற்பித்தல் பற்றிய குறிப்புகள்:</u>

1. குமார வீரய்யர் (பெரிய தமிழ் அய்யா) அவர்கள் இலக்கியம் கற்பிப்பதிலும், இலக்கணம் கற்பிப்பதிலும் அவர்க்கு நிகர் அவரே. இலக்கணம் கற்பிப்பதில் ஐந்தாம் படிவத்தில் நான்காம் வேற்றுமைப் பொருள் கற்பித்ததையும் ஆறாம் படிவத்தில் இலக்கியம் கற்பித்தலில் 'கண்ணுற்ற' (வாலிவதை-75), 'வாய்மையும் மரபு காத்து' (வாலிவதை-76), 'கோவியல் தருமம் உங்கள்' (வாலிவதை-18), 'கூட்டொருவரையும் வேண்டா' (வாலிவதை-81) என்ற பாடல்களை அற்புதமாக விளக்குவதை நினைவு கூர்கிறார்.[15]

2.ஜம்புலிங்க குருக்கள் (சின்ன தமிழ் அய்யா) இசையுடன் பாடுவார். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வல்லோசையும் மெல்லோசையும் கலந்து பாடுவார். சில முக்கியமான கருத்துகளை விளக்கும் அடிகளை மாணாக்கர்களைப் பார்த்து கை நீட்டியும், கை உயர்த்தியும் பாடும் பாங்கு கற்கண்டு உமிழ் நீரில் கரைந்து சுவை தருவது போல் பாடல்கள் மாணாக்கர்கள் மனத்தில் பொருள் விளக்கத்துடன் சுவையுடன் ஆழப்பதியும். இடச்சுருக்கம் கருதி, வரலாற்று ஆசிரியர்,

புவியியல் ஆசிரியர், கல்லூரி ஆசிரியர்கள் இவர்கள் பற்றிய எடுத்துக்காட்டுகள் தரப் பெறவில்லை.

நற்பழக்கங்கள்: சிற்றூரில் பிறந்து வளர்ந்த பேராசிரியர் நகர்ப்புறத்திற்கு வந்தபோது பல நற்பழக்கங்கள் அவரிடம் தோன்றி நிலைபெறத் தொடங்கின.

1.அதிகாலையில் எழுந்து நீராடி உணவு கொள்வதற்கு முன்னும், உணவு கொண்டதற்குப் பின்னும் ஒரு சிலமணி நேரம் பாடங்களில் ஆழங்கால் படுதல்.

2.தொட்டெழுதும் பேனாவை பயன்படுத்தி வந்த முறை மாறி மையூற்றுப் பேனாவைப் பயன்படுத்தும் முறை இவருக்கு எட்டாம் வகுப்பில் இருந்து ஏற்பட்டது.

3.சிற்றூரில், தேர்வு முறை இன்னதென்று அறியாத இவர், எட்டாம் வகுப்பிற்கு வந்த பிறகுதான் இம்முறைபற்றிய பழக்கவழக்கங்கள் நன்கு அமைந்தன.

4.பக்தியுடன் கலைமகளை அணுகும் பழக்கம் அன்றிருந்து இன்றுவரை ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்’ என்ற முதுமொழிக்கு இணங்க இவரிடம் நேரில் காண முடிகின்றது. ஆசிரியப் பணியில் சேர்ந்த பிறகும் கூட மாணாக்கர்போல் இன்றும் அப்பழக்கம் தொடர்ந்து நிகழ்வதைக் காணலாம்.

சான்றோர் இணக்கம்: ‘மலரும் நினைவுகள்’ என்ற நூலில் இவர் வாழ்க்கையில் நன்கு பழகிய சான்றோர்பற்றிய நிகழ்ச்சிகள் பதிவாகியுள்ளன. இவை தவிர நினைவுக் குமிழிகள் நான்கு பகுதிகளிலும் பல பெரியோர்கள் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவை நான்கிலும் பேராசிரியர் தன் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொல்லுவதைவிட பெரியோர்களின் பெருமையே அதிகமாக எடுத்துரைக்கின்றார்.

1.இவர் இளம் வயதில் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியபோது (B.Sc., L.T.) பட்டங்களை மற்றிலும் பெற்றவர். தமிழ் எம்.ஏ., தேர்வு எழுதுவதற்காக இசைவு பெற முயன்றார். பல்கலைக்கழகம் இசைவு தர மறுத்துவிட்டது. பி.எஸ்சி. பட்டம் பெற்றவர் எம். ஏ. போக முடியாது. பிறகு பி.ஏ. தேர்வு எழுத

விண்ணப்பித்தார். அதுவும் மறுக்கப்பட்டது. விதிகளை வைத்துக் கொண்டு வக்கீல்போல் வாதாடினார். விதிக்குப் பொருந்துமாயின் மரபு (Convention) இல்லை என்று பல்கலைக்கழகம் கைவிரித்துவிட்டது. இதற்குத் தாம் கல்லூரி வாழ்க்கையின்போது மிக நெருக்கமாகப் பழகிய அருட்தந்தை ஜெரோன் டி. சௌசா (அப்போது லயோலா கல்லூரி முதல்வர்) அவர்களையும், சட்டக்கல்லூரித் துணை முதல்வர் திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களையும், நீதிபதி பஷீர் அகமது அவர்களையும் துணை கொண்டு (இவர்கள் மூவரும் செல்வாக்குள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்கள்) பல்கலைக்கழக விதிகளை மாற்றி (இதற்கு நான்கு ஆண்டுகளாயின) பி.ஏ. தேர்வு எழுதி பட்டம் பெற்றார். இரண்டாண்டுகள் இடைவெளியிட்டு எம்.ஏ. தேர்வு எழுதி பட்டம் பெற்றார். அதன்பிறகு பி.எச்.டிக்கு பதிவு பெற முயன்றது மிகப் பெருங்கதை. இருபத்தைந்து ஆண்டுகள் முயன்ற கதை.

<u>பி.எச்.டி. பட்ட ஆய்வு</u>: துணைவேந்தர் கோவிந்த ராஜுலு நாயுடு மறுத்துவிட்ட பின் சென்னையில் இந்தியன் நெடுங்கணக்கே தெரியாத பேராசிரியர் ரா.பி. சேதுபிள்ளை இந்தி விரிவுரையாளராகப் பணி ஆற்றிய எஸ். சங்கரராஜுலு நாயுடுவிற்கு 'கம்பன்-துளசிதாசன் ஒப்பாய்வு' என்ற தலைப்பில் ஆய்வு செய்ய வழிகாட்டியாக இருந்தமையை எடுத்துக்காட்டினார். திருப்பதியில் வடமொழித் துறையில் இணைப்பேராசிரியராய் இருந்த டாக்டர் வரதாச்சாரி, (வைணவர்-நாலாயிரப் பிரபந்தத்தை நன்கு பயின்றவர்) அவரை வழிகாட்டியாகக் கொண்டு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தை ஆய்வு செய்து பி.எச்.டி. பட்டம் பெற இசைவு கோரி விண்ணப்பித்தார். விண்ணப்பிக்கும்போது சேதுபிள்ளையுடைய சான்றைக்காட்டி விளக்கினார். அதற்கு 'துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம் ஏராளமான பாலை உற்பத்தி செய்துள்ளது. அதில் சிறிது தண்ணீர் விட்டால் பாலின் தன்மை மாறுவது தெரியாது. ஆனால் வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பாலே உற்பத்தி செய்யவில்லை. அந்நிலையில் நீங்கள் தண்ணீர் விடச்சொல்லுகிறீர்கள் அது எப்படி' என்று சொல்லி நகைத்து இசைவினை மறுத்தார். உடனே பேராசிரியர் 'இனி கும்பகோணம் வழியைக் கையாள்வது தவிர வேறு வழி இல்லை' என்று சொல்ல, அதற்குத் துணைவேந்தர் 'கும்பகோணம் வழி என்றால் என்ன?' என்று வினவ, அதற்குப் பேராசிரியர் 'தாங்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். அதுவும் சென்னையில் இருந்தவர்கள். ஆதலால் கும்பகோணம் வழியை நன்கு அறிவீர்கள். ஒருகால்

அறியாவிடில் ஆறு திங்களில் தெரிவிப்பேன்' என்று கூறி நகைத்துக்கொண்டே விடுதலைப் பெற்றார். உடனே கும்பகோணத்தில் உள்ள ஓமியோபதி ஆய்வு நிறுவனத்திற்கு ரூ.100ஐ கட்டணமாக அனுப்பி ஓமியோபதி பயில இசைவு பெற்று, தேர்வு எழுதி டாக்டர் பட்டம் பெற்றார். மேற்படி பட்டயத்தை எடுத்துக்கொண்டு துணை வேந்தரிடம் சென்று 'ஐயா, நான் டாக்டர் பட்டம் பெற்றுவிட்டேன். இனி இந்தப் பல்கலையில் அந்தப் பட்டம் பெற விரும்பவில்லை' என்று சொல்லி தாம் வாங்கிய பட்டயத்தை அவர் முன் வைத்தார் பேராசிரியர். இதைக்கண்ட துணைவேந்தர் நன்கு வியந்து 'பேராசிரியர் ரெட்டியார், உங்கள் ஆழ்மனதில் அடங்கிக் கிடந்த கவலையை நன்கு அறிந்தேன். இப்பொழுது பட்டம் பெற விண்ணப்பம் அனுப்புங்கள்' என்ற கூற அங்ஙனமே பேராசிரியர் ரெட்டியாரும் ஒரு வாரத்தில் இசைவு பெற்று ஆய்வு தொடங்கினார்.[16] ஐந்து ஆண்டுகள் ஆய்ந்து பி.எச்.டி. பட்டம் பெற்றார். மேலே கூறிய மூன்று சான்றோர்கள் இல்லை எனில் அதிகார இயந்திரத்தினால் ஒரு பயனும் விளையாது.

2.இவர் துறையூரில் பணியாற்றியபோது இலக்கிய விழாக்களையும், ஆண்டு விழாக்களையும் சிறப்புடன் நடத்திய காலத்தில் திரு. பு.ரா. புருடோத்தம நாயுடு, பன்மொழிப் புலவர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியார், டாக்டர் மு. வரதராசனார், வீ. உலக ஊழியனார் இவர்கள் தொடர்பும் நட்பும் ஏற்பட்டது. திரு. நாயுடு அவர்களின் தொடர்பு வைணவத் தத்துவத்தின்மீது ஆர்வம் ஏற்பட காரணமாயிற்று. திரு. வேங்கட ராஜுலு ரெட்டியார் அவர்களின் தொடர்பால் இலக்கண அறிவு, குறிப்பாக ரசம் பற்றிய (சுவை) அறிவில் தெளிவு ஏற்பட காரணமாயிற்று. டாக்டர் மு.வ. அவர்களின் தொடர்பு பல குறிக்கோள் பொருள்கள் மனத்தில் பதிய காரணமாயிற்று. இந்த மூன்று சான்றோர்களின் உறவு அவர்கள் மீளா உலகம் அடையும்வரை தொடர்ந்தது. இன்று பேராசிரியர் ரெட்டியார் சிறப்புடன திகழ்வதற்கு இவர்கள் மூவரே முதற் காரணம் என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

3. திரு. வேங்கட ராஜுலு ரெட்டியார் அவர்களின் தொடர்பு வேறு பல சான்றோர்களின் தொடர்புகள் ஏற்படக் காரணமாயிற்று. எடுத்துக்காட்டாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பூவராகம் பிள்ளை (இலக்கணம், வைணவம்), முத்து சு. மாணிக்கவாசக முதலியார் (சங்க இலக்கியம், சைவசித்தாந்தம்), ஐயா நாயக்கர் (ஆரணி உயர்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர்) இவர்கள் தொடர்பு அவர்கள்

திருநாடு அலங்கரிக்கும்வரை இருந்தது. முத்து சு.மாணிக்கவாசக முதலியார் அகநானூறு கற்பித்தார் (பத்துநாட்கள்). திரு. வீ. உலக ஊழியனார் பொருநராற்றுப் படையை அற்புதமாகக் கற்பித்தார் (மூன்று நாட்கள்), திரு. புருடோத்தம நாயுடு அவர்கள் சேனாவரையத்தில் தெளிவு ஏற்படுத்தினார். (ஓர் ஆண்டு).

4.காரைக்குடி சென்ற பிறகு பழம்பெரும் தேசத் தொண்டர்களான சா.கணேசன், இராய சொக்கலிங்கம், சொ. முருகப்பன் இவர்கள தொடர்வு ஏற்பட்டு பல நற்பழக்கங்களும், இலக்கிய ஆர்வமும், நேர்மையான ஒழுங்குமுறையும், பாடல்களின் சுவை அனுபவிப்பதும் போன்ற பல நற்பழக்கங்கள் இவரிடம் படியலாயின.[17]

5.சித்பவானந்த அடிகள், தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், இரசிகமணி டி.கே.சி., நீதிபதி எஸ். மகராசன், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ, பூதூர் மகாவித்வான் கி.வேங்கடசாமி ரெட்டியார், எம் அனந்த சயனம் அய்யங்கார், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் இவர்கள் தொடர்பும் தொடர்ந்து இருந்து வந்ததனால் அவர்கள் குறிக்கோள் பொருள்களாகக் கொண்டவை யாவும் ரெட்டியார் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. இவற்றை இவர் கடைபிடிப்பத்றகும் காரணமாயின.

<u>திருத்தலப் பயணங்கள்:</u> 1) பேராசிரியர் ரெட்டியார் அவர்களுக்குத் திருமணம் ஆகி பன்னிரெண்டு ஆண்டுகள் மக்கட்பேறு ஏற்படவில்லை. இவருடைய அன்னையார் வற்புறுத்தலின் பேரில் இராமேஸ்வரம் சென்று பல சடங்கு முறைகளை மேற்கொண்டார். இதன் காரணமாக இரண்டுமாத காலம் பல திருத் தலங்களுக்குச் செல்லும் பயணங்களையும் சேர்த்துக் கொண்டார்.[18] இதனால் இவருடைய அன்னையின் செல்வாக்கால் இளமையில் ஏற்பட்டு மறைந்த நிலையில் கிடந்த பக்தி மேலும் கிளர்ந்தெழக் காரணமாயிற்று.

2.இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட காலத்தில் 108 திவ்விய தேசங்களைச் சேவிக்க வேண்டும் என்ற பேரவா கிளர்ந்தெழுந்து குடும்பத்துடன் 102 திவ்விய தேசங்களை சேவித்துப் பயன் பெற்றார். இதன் காரணமாக ஆறு திருத்தலப் பயண நூல்கள் வெளிவந்தன. இவற்றில் தாம் ஆய்வின்போது பாசுரங்களை அநுபவித்த பாங்கை, இப்பொழுது பாசுரங்கள் எழுந்த திவ்விய தேசங்களிலேயே அனுபவிக்கும் பேறு

பெற்றதைக் காண முடிகின்றது. இந்த அநுபவம் பிறிதோர் இடத்தில் விரிவாகச் சொல்லப்படுகிறது.[19]

<u>**எழுத்துப் பழக்கம்**</u>: <u>கட்டுரைகள்</u>: உயர்நிலைப் பள்ளியிலேயே (1931-34) கையெழுத்துப் போட்டி, கட்டுரைப்போட்டி முதலியவற்றில் பங்கு கொண்டு பல பரிசுகள் பெற்றார் என்பதை அறிய முடிகின்றது. இந்த எழுத்துப் பழக்கம்தான் சிறிது சிறிதாக வளர்ந்து பெரிய எழுத்தாளர் நிலைக்கு கொண்டு வந்ததையும் நினைக்க முடிகிறது. கல்லூரி வாழ்க்கையில் (1934-1939) பேராசிரியர் மு.நடேச முதலியார் கட்டுரை எழுதும் திறனை மிக நன்றாகச் செப்பம் செய்து உதவினார் என்பதை பேராசிரியர் ரெட்டியார் இன்றும் நினைந்து நினைந்து மகிழ்வதுடன் தம்முடைய நினைவுக் குமிழிகளிலும் பதிவு செய்து விடுகின்றார். கல்லூரி வாழ்க்கையில் இவர் அறிவியல் (வேதியியல், இயற்பியல்) பயின்றவர். ஒரு சமயம் அறிவியல் துறையில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் இவர் கலந்துகொண்டு ‘சருக்கரை உற்பத்தி’ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதி பரிசு பெற்றார். பரிசு பெற்றதையும் நினைவு கூர்கிறார். ஆசிரியப் பயிற்சி கல்லூரியில் பயின்ற போது ‘அறிவியல் கழகங்கள்’ (Scince Clubs) என்ற கட்டுரை எழுதியதை நினைவு கூர்கிறார்.

காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியபோது தமிழ்நாடு (ஞாயிறு மலர்), தினமணிச்சுடர், தினமணிக்கதிர், கலைமகள், கலைக் கதிர் முதலிய இதழ்களுக்கு கட்டுரை எழுதும் பழக்கத்தை மேற்கொண்டார். திருப்பதியில் பணி ஆற்றியபோது பலப் பெரியோர்களின் மணிவிழா மலர்கள், பல திருக்கோயில்களின் குடமுழுக்கு விழா மலர்கள் இவற்றிற்குக் கட்டுரை வழங்குமாறு அழைப்புகள் வந்தன. அந்த சமயத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆய்வு மேற்கொண்டமையால் (டாக்டர் பட்ட ஆய்வு) அந்த பொருள் பற்றியே மலர்களுக்குக் கட்டுரை வழங்கினார். இவையாவும் தொகுக்கப்பெற்று ‘சில நோக்கில் நாலாயிரம்’ என்ற நூல் வெளிவந்தது. இதனை வைணவர் நெறியில் இவரை ஈடுபடுத்திய பேராசிரியர் பு.ரா.புருடோத்தம நாயுடு அவர்களுக்கு அன்புப் படையலாக்கி மகிழ்கிறார்.

<u>**எழுத்துப்பழக்கம்**</u>: <u>நூல்கள்:</u> காரைக்குடி வாழ்க்கையில் ஆறு ஆண்டுகள் பி.டி. மாணவர்களுக்கு கற்பித்த அநுபவத்தைக் கொண்டும், பல ஆங்கில நூல்களைப் பயின்று வகுப்புப் பயனுக்காக எழுதி

வைக்கப்பெற்ற குறிப்புகள் கொண்டும், ‘தமிழ்பயிற்று முறை’ (இவர் அன்னைக்கு அன்புபடையல்), ‘அறிவியல் பயிற்றுமுறை’ (வள்ளல் அழகப்பனார்க்கு அன்புப்படையல்), கவிதை பயிற்றுமுறை (நற்றமிழாசிரியர்களுக்கு அன்புப் படையல்) ஆகியவற்றை வெளியிட்டார். ‘கல்வி உளவியல்’ என்ற நூலை (கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியத்துக்கு அன்புப் படையல்) வெளியிட்டார். இந்தச் சமயத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் பல பரிசுப் போட்டிகளுக்கு விளம்பரம் செய்தது. 1. ஹைசன்பர்க் எழுதிய அணுக்கரு பௌதிகம் (Nuclear Physics) என்ற நூலை மொழிபெயர்க்க வேண்டியது. 2.முதல் நூலாக எழுதப்பெற வேண்டியது ‘அணுவின் ஆக்கம்’ (Atom for Peace) இதில் பங்கேற்பதற்கு முன்பு ஏற்கனவே அறிவியலில் பயிற்சி பெற்றவர் ஆதலால், அணுபற்றிய பல நூல்களை ஆழ்ந்து பயின்றார். அழகப்பர் கலைக் கல்லூரியில் பணியாற்றிய பல அறிவியல் ஆசிரியர்களிடம் தம்மிடம் எழும் ஐயங்களை அகற்றிக் கொண்டார். ‘அணுக்கரு பௌதிகம்’ என்ற நூல் பல்கலைக்கழகப் பரிசு பெற்றது. ஆனால் இது பல்கலைக்கழக வெளியீடாக வருவதற்கு பல தடைகள் எழுந்தன. இவை பல்கலைக்கழக நிர்வாகத்தில் பல கசப்பான உண்மைகளை வெளிக்கொணர்ந்தன.[21]

3. திருப்பதிக்குச் சென்ற பிறகு நான்காண்டுகள் அதிக வேலை இல்லாமல் இருந்த நிலை. அப்பொழுது ‘தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை’, ‘முத்தொள்ளாயிர விளக்கம்’ (பல்கலைக்கழக வெளியீடு) போன்ற இலக்கண, இலக்கிய நூல்களும், சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பயன்படுமாறு, ‘இளைஞர் வானொலி’ (1962), ‘இராக்கெட்டுகள்’ (1963), ‘இளைஞர் தொலைக்காட்சி’ (1966), ‘அதிசய மின்னணு’ (1966), ‘நமது உடல்’ (1966) இந்நூல்களை அதிகமான பட விளக்கங்களுடன் வெளியிட்டார். அச்சமயம் 1961ல் அமெரிக்க குடியரசு தலைவர் ‘ஜான் கென்னடி’ அமெரிக்கா இன்னும் பத்தாண்டுகளில் அம்புலியில் கால்வைக்கும் என்று அறிவித்தார். அன்றுமுதல் பேராசிரியர் சென்னை அமெரிக்க நூலகத்தில் உறுப்பினராகி பல விண்வெளிச் செலவு நூல்களை மிக ஆழ்ந்து பயின்றார். இதன் விளைவாக ‘அம்புலி பயணம்’ (1973), ‘தொலை உலகச் செலவு’ (1976) போன்ற நூல்களை வெளியிட்டு தமிழில் அறிவியல் செல்வங்களைப் பெருக்கினார். இக்காலத்தில்தான் ‘இல்லற நெறி’ (1964) என்ற அறிவியல் நூலும் வெளிவந்தது.

நாலாயிர ஆய்வு நடைபெற்றபோதும், முடிந்தபிறகும் 108 வைணவ திவ்விய தேசங்களைப் பார்க்க வேண்டும் என்ற அவா எழ, சுமார் ஆறாண்டுகள் மனைவியுடனும் மக்களுடனும் பல திருத்தலங்கசைச் சேவித்தார். மன அமைதிக்குத் திருத்தலப் பயணம் போன்ற ஒரு சிறந்தமுறை இல்லை என்பது பேராசிரியர் கருத்து. இப்பயணத்திற்கு பிறகு திருத்தலப் பயண நூல்களாக ‘மலைடநாட்டுத் திருப்பதிகள்’ (1971), ‘தொண்டை நாட்டுத் திருப்பதிகள்’ (1973), ‘பாண்டிநாட்டுத் திருப்பதிகள்’ (1977), ‘சோழநாட்டுத் திருப்பதிகள் பகுதி-1, பகுதி-2’ (1978), ‘வடநாட்டுத் திருப்பதிகள்’’ (1979) என்ற ஆறு நூல்களை வெளியிட்டு வைணவ செல்வத்தையும், தமிழ் செல்வத்தையும், பக்தி செல்வத்தையும் பெருக்கினார்.

பள்ளியின் பன்முக வளர்ச்சி: ஒன்றுமே இல்லாத இடத்தில் ஒரு புதிய பொருளைப் படைத்து வைப்பதுபோல் துறையூரில் புதிய பள்ளியைத் துவங்குவதற்கு கல்வி இயக்குநர்க்கு விண்ணப்பம் அனுப்பியது முதல் அதன் முழுவளர்ச்சி அடையும்வரை செய்ய வேண்டிய எல்லா வழிமுறைகளைச் செய்ததையும் இதில் அநுபவித்த தொல்லைகள் அனைத்தைதயும் நினைவுக் குமிழிகள் (பகுதி-2) விளக்குகிறது. இப்பள்ளிக்கு உரிமையாளராகிய ஜமீன் சகோதரர்கள் இருவரும் மேற்கொண்ட முயற்சிகள் பயன்தராமல் போனதால் மிக இளம் வயதினரான (26 வயது) பேராசிரியர் ரெட்டியார் விண்ணப்பித்து, கோவை, சென்னை முதலிய இடங்களுக்குச் சென்று உரிய அதிகாரிகளைப் பார்த்து இசைவு பெற்றமை பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கது.

பள்ளி உரிமையாளர்களை பல தடவைச் சந்தித்து அறக்கட்டளை நிறுவச் செய்தல், நிலம் வாங்கச் செய்தல், தக்க ஆசிரியர்கள் போடச்செய்தல், (ஆசிரியர் கிடைக்காத காலம்) முதலான அனைத்தையும் நிறைவேற்றி ‘ஆலமர் வித்தின் அருங்குறளாக’ இருந்த பள்ளியை அடையாறு ஆலமரம் போல் வளர்த்த பெருமை பேராசிரியர்க்கு உரியது. இதனால் அவர் புகழ் திருச்சி மாவட்டம் முழுவதும் பரவியது. இதனால் புதிதாகப் பள்ளித் துவக்குவோர் பேராசிரியரின் உதவியை நாடினர். ‘பணியே பரமன் வழபாடு’ (Work is Worship) என்ற குறிக்கோளினையுடைய பேராசிரியர் ரெட்டியார் திருச்சி மாவட்டத்தில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளையும், ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியையும் தேவைப்படும்போதெல்லாம் அங்கு சென்றும் உதவிய பெருமை பேராசிரியர் ரெட்டியாருக்கு உண்டு.[22]

திறமை உள்ள மாணவர்கள் ஏழை மாணவர்களுக்கு உதவும் முறைகள்: அக்காலத்தில் (1941-1950) துறையூர் மிகச் சிறிய ஊர். மின்சாரம் எல்லா வீட்டிற்கும் வரவில்லை. ஏழையின் வீட்டில் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு கூட பணம் இல்லை. இப்படி இருக்கும் நிலையில் ஏழை மாணவர்கள் எப்படிப் படிக்க முடியும்? பள்ளிக்கும் ஊருக்கும் சுமாார் ஆறு படைசால் தூரம் இருக்கும். ஊரில் இருக்கும் மக்கள் எல்லோரும் நீராடவும், காலைக்கடன் கழிக்கவும், பள்ளிப் பக்கத்திற்குதான் வரவேண்டும். இதை நன்கு உணர்ந்த பேராசிரியர், பள்ளியில் வகுப்புகள் உள்ள கீற்றுக் கொட்டகையில் தற்காலிக மின்சார விளக்கிற்கு வசதி செய்தார். யார் வேண்டுமானாலும் இங்கு வந்து படிக்கலாம் என்ற வசதி செய்தார். இரவு 7.30 மணிக்கு முப்பது மாணவர்களுக்குக் குறையாமல் அங்கு வந்து படித்தனர். அதிகாலையிலும் எழுந்து படிப்பர். பேராசிரியர் ரெட்டியார் மக்கட்பேறு இல்லாதிருந்தார். குடும்பச் சுமையும் இல்லை. ஆதலால் இரவிலும் அதிகாலையிலும் மாணவர்களுக்கு எழும் ஐயங்களை விளக்குவார். இன்னும் இயன்றவாறெல்லாம் உதவுவார். இப்பணியில் பேராசிரியர் பெருமகிழ்ச்சி அடைவார்.

வேங்கடசாமி, ராமசாமி, முத்து என்ற மூன்று ஏழை மாணவர்களையும் கரையேற்றியதை இவருடைய நினைவுக் குமிழி (பகுதி-2ல்) குறிப்பிட்டுள்ளார். இவர்களில் முத்து என்ற மாணவனை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்த்து எம்.ஏ. படிப்பு முடியும் வரை பொருளுதவி செய்து உதவியதையும் நினைவுக்கூர்கின்றார். சென்னை கல்வி விதி 92ன் படி பிற்போக்கு மாணவர்களுக்கும், திருக்குலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் (Harijan) பள்ளிக் கட்டண சலுகை இருந்தது. முற்போக்குச்சாதி மாணவர்கள் ஏழையாக இருந்தாலும், அவர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை. மானிய விதி 32ன்படி பள்ளிக்கட்டண வருவாயில் இருந்து 10 விழுக்காடு மாணவர்களுக்கு உதவி செய்யலாம், போட்டித் தேர்வு எழுதி இவற்றை அடைவதற்கு மாணவர் தகுதி உடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வகுப்புகளும், பிரிவுக்கும், முழுக் கட்டணம் பெறுவதற்கு ஒருவர், அரைக்கட்டணம் பெறுவதற்கு இருவர் வீதம் தரலாம் என்று தேர்வு வைத்தார். பள்ளி நிர்வாகம் 5 விழுக்காடு கட்டணத்திற்குதான் ஒத்துக்கொண்டது. இதனால் முதன் முதலாக முற்போக்கு சாதி ஏழை மாணவர்களில் 42பேர் சலுகை பெற்றனர். இச்சலுகை மாணாக்கர் பள்ளிப் படிப்பு முடியும்வரை தொடர்ந்து அளிக்கப்பெற்றது.

மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்த்தல்: துறையூரில் பணி ஆற்றியபொழுது பல பேரறிஞர்களை வரவழைத்து பல சொற்பொழிவுகளை ஏற்படுத்தி மாணாக்கர்களிடம் தமிழ்ப்பற்றை மிகுவித்தார். பேச்சுபோட்டி, கட்டுரைப்போட்டி முதலியவற்றை அமைத்து பரிசுகள் வழுங்கச் செய்தார். ஓராண்டு 'இளைஞர் அறிவுச் சுடர்' (1947-48) என்ற கையெழுத்து இதழை வெளியிடச்செய்தார். இதில் மாணவர்களுடைய எழுத்தோவியங்கள் அணி செய்தன. அடுத்த ஆண்டுகளில் (48-49), (49-50) அச்சு இதழ்கள் கொண்டுவரப் பெற்றன. இதில் மாணாக்கர்கள் வரையும் சில அழகான ஓவியங்கள், கேலி ஓவியங்கள் (கார்ட்டூன்ஸ்), உரையாடல்கள், கற்பனைக் கட்டுரைகள், சில எளிய கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் இவை இதழ்களை அழகு செய்தன. ஆனால் பேராசிரியர் பள்ளியைத் துறந்த பிறகு இந்த மரபு அடியோடு நின்றது. மூலவிசை (Main spring) சரியாக இல்லாவிட்டால் பொறி எப்படிச் சரியாக இயங்க முடியும்?

'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே;
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே;
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே;
உருகு வித்தால் ஆரொருவர் உருகாதாரே;
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே;
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே;
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே;
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காரே."

என்று அப்பர் பெருமானின் பாடல் ஒன்றுடன் இதனை விளங்க வைப்பார்.[23]

மொட்டை மனுக்களால் தொல்லை: பேராசிரியர் துறையூரில் பணி ஏற்றுக்கொண்ட பிறகு, பள்ளி முன்னேற்றத்திலும் மாணவர் முன்னேற்றத்திலும் தம் நேரத்தை எல்லாம் (1941-47) வெள்ளையர் ஆட்சி, (47-50 குடியாட்சி)யிலும் செலவிட்டார். இக்காலத்திலும் ஏதோ ஓரிருமுறை தன்மான இயக்கம் இந்தி எதிர்ப்பை நாடெங்கும் பிரகடனம் செய்தது. துறையூரில் உள்ள மக்களில் பெரும்பாலோர் தன்மான இயக்கத்தில் பற்றுள்ளவர்கள். ஆனால் மாணாக்கர்கள் இந்தி எதிர்ப்பில் பங்குகொண்டு பள்ளிக்கு முன்னால் இரண்டு வரிசையாக நின்றுகொண்டு 'இந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று குரல் எழுப்பி வேலை நிறுத்தம் செய்தனர். பள்ளியில் இந்தி கற்பிக்க பெறவில்லை. இந்தி ஆசிரியரும் இல்லை. இதனால் மாணாக்கர்களைக் கடிந்து அவர்களுடைய வேலை நிறுத்தத்தில் பேராசிரியர் தலையிடவில்லை.

இதைப் பேராசிரியரே மாணவர்களைத் தூண்டி அவர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபடச் செய்தார் என்று மொட்டை மனுக்கள் மேல் இடங்களுக்கு பறந்தன.

2. அக்காலத்தில் பேரறிஞர் அண்ணாத்துரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றோரம்' என்ற தலைப்பில் பேருரை ஆற்றித் தமிழ்மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். 'திராவிட நாடு' என்ற வார இதழில் அந்த முழுப்பேச்சும் வெளியிடப்பெற்றது. அண்ணாத்துரை துறையூருக்கு வருகைதந்தபோது பேராசிரியர் ரெட்டியார் அதே தலைப்பில் ஒன்றரை மணி நேரம் தம் பள்ளியில் பேசச் செய்தார். சுமார் 1000க்கும் மேற்பட்ட ஊர்மக்கள் திரண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர். மொட்டை மனுக்காரர்களுக்கு இதுவும் வெறும் வாயை மெல்லுவோருக்கு அவல் கிடைத்தது போலாயிற்று.

3.தந்தை பெரியார் அடிக்கடி துறையூருக்கு வருகை புரிவதுண்டு. வரும்போதெல்லாம் சேடத் தெருவில் உள்ள திரு. கிருஷ்ணன் செட்டியார் இல்லத்தில் விருந்தினராக இருப்பார். சேடப் பெருமக்கள் பேராசிரியர் ரெட்டியாரை உயிர்க்குயிராக நேசிப்பவர்கள். பள்ளி விழாக்களுக்குத் தவறாது வருபவர்கள். தந்தை பெரியாரிடம் சேடத்தெருமக்கள் பேராசிரியர்பற்றி பலப்படப் புகழ்ந்து உரைத்திருக்கலாம். அதனால் தந்தை பெரியார் பேராசிரியரைப் பார்ப்பதற்கு விருப்பப்படுவதாக கிருஷ்ணன் செட்டியார் தகவல் அனுப்பினார். ஏற்கனவே தந்தை பெரியாரின் பேச்சை 1934-39 திருச்சியில் பயின்ற காலத்தில் திருச்சி நகரமண்டலத்தில் பலமுறை கேட்டதாலும் 'விடுதலை', 'குடியரசு', 'குமரன்' போன்ற இதழ்களைப் படித்ததாலும், பெரியார் கொள்கையில் (இறை மறுப்பு கொள்கை தவிர) பேராசிரியருக்குப் பிடிப்பு இருந்தது. அதனால் பெரியாரைச் சென்று பார்த்து அளவளாவினார். முதல் சந்திப்பிற்கு பிறகு அவரை அடிக்கடி பார்ப்பது வழக்கம். இந்தப் பழக்கம் பேராசிரியர் காரைக்குடிக்குச் சென்ற பிறகும் தொடர்ந்தது. 1960ல் திருப்பதி சென்ற பிறகு பார்க்கும் பழக்கம் நின்றது. பெரியாரை அடிக்கடிப் பார்க்கும் காரணமும் மொட்டை மனுக்காரர்களுக்கு பசிக்கு உணவு கிடைத்தமாதிரி ஆயிற்று.

<u>கல்லூரியில் நுழைய முயற்சிகள்</u>: பேராசிரியர் நினைவுக் குமிழிகளை ஊன்றிப் பயிலும்போது 'திக்கற்றவர்க்கு தெய்வமே துணை' என்ற நிலை அவர்க்கு அமைந்திருப்பதை நாம் உணரலாம். பெரியவர்கள் தொடர்பும், அரசியல் தொடர்பும் பேராசிரியர்க்கு இல்லை. ஆனால்

அவர் வாழ்க்கையில் புகுந்த பிறகு பெரியவர்களின் தொல்லையும், அதிகாரிகளின் தொல்லையும் இருந்தன. துறையூரில் மிக இளமையில் தலைமை ஆசிரியராக வந்ததை ஒரு சில அதிகாரிகள் விரும்பாமல் அநுபவம் உள்ளவரைத் தலைமை ஆசிரியராக்க நிர்வாகத்திற்கு வாய்மொழியாக பரிந்துரை செய்தனர். நிர்வாகம் 'தொடை நடுங்கும் நிர்வாகம்' இதனால் சற்று நிலை கலங்கியது. பேராசிரியர் ரெட்டியார் வேறு சில அதிகாரிகளை நிர்வாகத்திற்கு அனுப்பி அந்த தளர்ச்சியை மாற்றினார். அந்தச் சமயம் பேராசிரியரின் மனநிலை ஒரு சில திங்கள் குழப்பநிலையில் இருந்தது.[24]

பரிந்துரைப்போர் இல்லாமையால் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் அனுப்பவில்லை. அக்காலத்தில் கல்லூரிகளும் அரியனவாகவே இருந்தன. ஆனால் 1950ல் இறை அருளால் தேசபக்தர் சா. கணேசன் மூலம் அழகப்பா ஆசிரியர் கல்லூரியில் நுழைய வாய்ப்பு கிடைத்தது.[25] மூன்று திங்கள் ஊதியம் ரூ.540/-க்கு வங்கிக் கட்டளை அனுப்பி தம்மை விடுவித்துக்கொண்டார். அங்குப் பணி ஆற்றிய பத்தாண்டு காலத்தில் மிகக் கடினமாக உழைத்து பல நூல்களை எழுதி பெரும்புகழ் பெற்றார். பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு தம்மைத் தகுதி ஆக்கிக்கொண்டார்.

1960ல் திருப்பதி வேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவிக்கு விளம்பரம் வந்தது. அதற்கு விண்ணப்பித்து வேங்கடவன் அருளால் பணி ஆற்ற வாய்ப்பு பெற்றார். காரைக்குடி கல்லூரிக்கு ஒப்பந்தப்படி ரூ.1050க்கு (மூன்று மாத ஊதியம்) வரைவோலை அனுப்பி விடுதலைப்பெற்று திருப்பதி போய்ச் சேர்ந்தார். தமிழக அரசு மானியத்தைக்கொண்டு தமிழ் வளர்க்கலாம், துறையை விரிவுபடுத்தலாம் என்ற 'கனவினால்' பேராசிரியர் பதவியைத் துறந்து விரிவுரையாளர் பதவியை ஏற்றார் பேராசிரியர் ரெட்டியார்.

<u>திருப்பதியில் தமிழ் வளர்ச்சி</u>: டாக்டர் ரெட்டியார் பேராசிரியர் பதவியைத் துறந்து, திருப்பதியில் விரிவுரையாளர் பதவி பெற்றது ஒரு சோகமான கதை. மூன்று முறை சென்னைப் பல்கலைக் கழகத்தில் முயன்று குழு பட்டியிலில் (Panel) இடம்பெற்றும் கிடைக்காமல் போனது தம்முடைய 'தம் ஊழ்' என்று தம் மனதைச் சரிசெய்து கொண்டார். (தனிமையில் உசாவியதில் இவருக்குக் கிடைக்காமல் போனதற்கு தெலுங்கர் என்ற காரணம் காட்டப்பட்டதாக அறிந்தார்). திருப்பதிக்கு விண்ணப்பம் செய்தபோது பதினெட்டுபேர் போட்டியில்

கலந்துகொண்டனர். இவர் ஒருவர்தான் நாற்பது அகவையைத் தாண்டியவர். ஏனையோர் 25 வயதுக்குக் கீழாக இருந்தனர். ஆகவே அநுபவம் மிக்க இவருக்கு அப்பணி கிடைத்தது.

தமிழக அரசு தமிழ் நடையாடாத பகுதிகளில் தமிழ் வளரச்சிக்காக மானியம் வழங்குவதை ஒரு கொள்கையாகக் கொண்டிருந்தது. அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து திருப்பதி பல்கலைக் கழகத்தில் தமிழை எம்.ஏ., பி.எச்டி. பட்டம் பெறும் வரையிலும் வளர்க்கலாம் என்ற ‘பகற்கனவு’ கொண்டே அங்குச் சென்றார். ஆனால் இது நனவாகுவதற்கு பத்தாண்டுகள் தமிழக அரசுக்குக் காவடி எடுக்க வேண்டி இருந்தது. திராவிட அரசுவந்த பிறகுதான் இம் முயற்சி பழமாயிற்று. ஆண்டுக்கு ரூ.10,000/- தமிழக அரசின் நிதி கிடைத்தது. இதனால் முதுகலை தொடங்கப் பெற்றது. பேராசிரியர் அவர்களின் தனிப்பட்ட முயற்சியினால் துறை ‘ஆல்போல் தழைத்து விரிந்து அருகுபோல் வேர் ஊன்றி’, இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைகளில் சிறந்த ஒன்றாகத் திகழ்கின்றது. ஆனால், இதே காலத்தில் 1968ல் பேராசிரியர் குறிப்புப்படி மதுரைப் பல்கலைக் கழகம் தெலுங்கு வளர்ச்சிக்காக முயன்று ஆண்டொன்றுக்கு ரூ.25,000/- மாணியம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்த இடத்தில் இரண்டு அரசின் மொழி உணர்வுகளும் ஒப்புநோக்கத் தக்கது.

<u>2.கருத்தரங்குகள்:</u> பேராசிரியர் துறையில் முதுகலைப் பட்டம் வாங்கிய பிறகு சுமார் ஏழு ஆண்டுகளில் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் நிதி உதவி பெற்று ஏழு கருத்தரங்குகள் நடத்தினார். ஆண்டொன்றுக்கு சுமார் 30 பேரறிஞர்களில் பெரும்பாலோர் தமிழகத்திலிருந்தும், சிறும்பான்மையினர் கேரளம், ஆந்திரம், கர்நாடகத்திலிருந்தும் வந்து கருத்தரங்கைச் சிறப்புச் செய்தனர். தொடக்கவிழா மட்டிலும் ஆங்கிலத்திலும், ஏனைய அமர்வுகள் தமிழிலும் நடைபெற்றன. முதல் கருத்தரங்கு திருவள்ளுவரைப்பற்றியது. முதன் முதலாக திருவள்ளுவர் படம் பேரவை மண்டபத்தில் வைக்கப்பெற்றது. சில ஆண்டுகள் கழித்து இதற்கு நேர் வரிசையில் ‘வேமணர்’’ படம் முதலாக இடம் பெற்றது.

<u>3.வெளியீடுகள்:</u> அ) முதல் வெளியீடாக ‘முத்தொள்ளாயிர விளக்கம்’ என்ற நூல் (1965) ஒரு விரிவான நீண்ட ஆங்கில முகவுரையுடன் பேராசிரியர் வெளியிட்டார். ஆ) திருவள்ளுவர் கருத்தரங்கு மலர்-1974 (கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு)

நிதியே இல்லாமல் யுக்தி முறையில் (இரத்தல் முறையில்) நிதிபெற்று வெளியிட்டார். இதனைத் தமிழகத்திலிருந்து பல்வேறு நிலைகளில் பிழைப்புக்காகச் சென்ற தமிழ் மக்களுக்குப் புகலிடம் தந்து காத்துவரும் ஆந்திர பெருமக்களுக்கு இதை அன்புப் படையலாக்கி மகிழ்ந்தார். இ) பேராசிரியர் ரெட்டியார் துறையில் இருக்கும்பொழுது சித்தூர், புத்தூர், நகரி, பாக்காலா, குண்டக்கல் முதலிய இடங்களில் (இவையெல்லாம் தமிழர்கள் வாழும் இடங்கள்) விரிவுச் சொற்பொழிவுகள் நடத்தி அந்தச் சொற்பொழிவுகளைப் 'பரணிப் பொழிவுகள்' என்ற தலைப்பில் துறை வெளியீடாக வெளியிட்டு ஆந்திர எல்லைகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் இலக்கிய உணர்வூட்டினார். இந்த பரணிப் பொழிவை பிழைப்பின் நிமித்தம் பல்வேறு நிலைகளில் உலகமெங்கும் சென்று வாழ்ந்து தமிழ் மொழியை மறவாத தமிழர்களுக்கு அன்புப் படையல் ஆக்கியது அவருடைய 'பெருமையைக்' காட்டுதலாகும். ஈ) இவருடைய பிஎச். டி. ஆய்வுக் கட்டுரை ('Religion and Philosophy of Nalayira Fivya Prabandham with Specila Refernce to Nammalvar") துறை வெளியீடாக வெளியிட்டார். இதற்கு நிதிகண்டுபிடித்ததும் ஒரு சிறந்த யுக்தி முறையாகும்.[26]

<u>**தெலுங்கு மாநிலத்தில் தமிழ்ச்சங்கங்கள்:**</u> 1. திருப்பதிக்கு அண்மையில் உள்ள 'பாக்காலா' என்ற இருப்பூர்திச் சந்திப்பில் தொழிலாளர் சங்கத்தில் ஒரு சொற்பொழிவுக்காகப் பேராசிரியரை அழைத்தார்கள். சொற்பொழிவு முடிந்தபின்னர் அன்பர் ஒருவர் இல்லத்தில் இரவு உணவு உண்டபின் இவ்வூரில் ஒரு தமிழ்ச்சங்கம் இருக்கலாம் என்று சொல்ல, அந்த யோசனையை அன்பர்கள் அங்கீகரித்தனர். ஒரு பத்து நாட்களில் சங்கம் தோன்றியது. பதிவும் செய்யப்பட்டது. ஓராண்டில் அந்த சங்கத்திற்கென ஒரு தனிக் கட்டிடமும் உருவாயிற்று. இந்தச் சங்கத்தைப் பேராசிரியர் ஒரு இலக்கிய மேடையாக பயன்படுத்திக் கொண்டார். பல விரிவு சொற்பொழிவுகளை நடத்தினார். இந்த சங்கத்திற்கு தவத்திரு குன்றக்குடி அடிகள், தொழில் அதிபர் கோவை ஜீ.டி.நாயுடு, திருச்சி வழக்கறிஞர் திரு. ப.அரங்கசாமி ரெட்டியார் போன்றவர்களை வரவழைத்து, விழாக்களும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற வாய்ப்புகளை உண்டாக்கினார்.

2.இங்ஙனமே, சித்தூருக்குச் சென்று அவ்வூரில் வசிக்கும் செல்வர்கள், நகரில் உள்ள செல்வர்கள் இவர்களை ஒன்றுசேர்த்துச் சித்தூரில் ஒரு தமிழ்ச் சங்கம் உருவாக்கி அதையும் பதிவுபெறச்

செய்தார். இதனாலும் பல விழாக்களுக்கும் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்தார். ஒரு சமயம் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எம்.எம்.இஸ்மாயில் அவர்களை வரவழைத்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடு செய்தார்.

3.குண்டக்கல் இருப்பூர்தி சந்திப்பில் பல ஆண்டுகளாக ஒரு தமிழ்ச் சங்கம் இருந்து வந்தது. பேரறிஞர் அண்ணா, தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்ற பெரியார்கள் எல்லாம் சொற்பொழிவு ஆற்றிய இடம் அது. இவ்விடத்தையும் பேராசிரியர் ஒரு இலக்கிய மேடையாகப் பயன்படுத்திக்கொண்டு பல விழாக்களையும் சொற்பொழிவுகளையும் நடத்த ஏற்பாடு செய்தார். இந்த மூன்று சங்கங்களும் ஆந்திர மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்கு அடிக்கடி தமிழ்விருந்து அளித்துவர ஏற்பாடு செய்தார். இவை தவிர திருப்பதி சென்ற பிறகு ஒரு பத்தாண்டுகள் ஆயின. இந்நிலையில் மூன்று சங்கங்களிலும் நிர்வாகச் சபையைக் கூட்டி 1) திரு வேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுகலைவகுப்பு, ஆய்வு வகுப்புகள் தொடங்கப்பெற வேண்டும், 2)தமிழக அரசு பிற மாநிலங்களின் தமிழ் வளர்ச்சிக்கு நிதி வழங்க வேண்டும், 3) ஆந்திர அரசு திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் உதவுவதற்கு அங்கீகாரம் தந்து அங்கு தமிழ் முதுகலை தொடங்குவதற்கு எல்லா உதவிகளையும் செய்யவேண்டும் என்பன போன்ற பல தீர்மானங்களை ஆங்கிலத்தில் எழுதி இந்த நிறுவனங்களுக்கெல்லாம் அனுப்பச் செய்தார். இந்தப் போக்கில் இந்த மூன்று சங்கங்களிலும் ஆற்றிய பணி பாராட்டத்தகது. மேலும் திருப்பதியில் உள்ள இந்து, தினமணி, எக்ஸ்பிரஸ், தினத்தந்தி முதலிய நிருபர்களைச் சந்தித்து இந்த தீர்மானங்களை நாளிதழ்களில் இடம் பெறச் செய்தார். இன்னும் அறிஞர் அண்ணா மறைந்த செய்தியைக் கேள்வியுற்று திருப்பதியில் உள்ள தமிழ்நாட்டு வணிகா்களையும் ஏனைய வணிகர்களையும் சில பொதுமக்களையும் ஒன்று சேர்த்து ஓர் இரங்கல் மௌன ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்ததையும் நினைவு குமிழிகளில் பதிவு செய்துள்ளார்.

இவ்விடத்தில் ஒரு முக்கியமான செய்தி குறிப்பிடத்தக்கது. மதுரை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் தெ.போ.மீ அப்பல்கலைக் கழகத் தெலுங்கு வளர்ச்சிக்கான மானியம் வழங்க வேண்டும் என்று ஆந்திர அரசுக்கு விண்ணப்பம் செய்தார். பத்தாண்டுகள் முயன்ற பேராசிரியர் முயற்சிக்கு தமிழக அரசு செவிசாய்க்காதிருக்க, தெ.பொ.மீ. எடுத்த முயற்சிக்கு மூன்று திங்களில் ஆன்டொன்றுக்கு 25ஆயிரம் ரூபாய் நிதி வழங்கியது ஆந்திர மாநில அரசு. அதற்குப் பின்னர்

தமிழக அரசு திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு முதன்முதலாக ஆண்டொன்றுக்கு ரூ.10ஆயிரம் வழங்கியது.

<u>தத்துவக் கருத்துகள்:</u> பேராசிரியர் நினைவுக் குமிழிகளில் பல இடங்களில் தத்துவக்கருத்துகள் ஆங்காங்கே மிளிர்கின்றன. ஞானியார் பரம்பரை[27] என்று ஒரு பரம்பரையில் தோன்றியவர். ஆதலால் சமயமும் தத்துவமும் இவர் எழுத்தில் ஆங்காங்குக் குமிழிகள் இடுகின்றன. ‘கரு அரங்கத்துள் இருந்து கை தொழுதேன், கண்டேன், திரு அரங்க மேயான்திசை’ (முதல்-திருவந்.6) என்ற பொய்கையாழ்வார் வாக்குப்படி இவருடைய தத்துவக் கருத்துகள் படிக்கும்போது இவரின் புலமை வெளிப்படுகிறது. கருவிலேயே திருவுடையவராக ஆனாரோ என்று கூட எண்ணத்தோன்றுகிறது. தம்முடைய பிறப்பையே ‘என் பிரார்த்த கருமத்தால் (நுகர்வினையால்) நான் பெரகம்பியில் என் அன்னையார் பிறந்த இல்லத்தில் பிறந்தேன்.

‘கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே
பற்றா வந்து அடியேன் பிறந்தேன்’

என்ற திருமங்கையாழ்வாரின் திருமொழியை அப்போது சிந்தித்து அறியஅகவை இல்லையாயினும் இப்போது (77 அகவையில்) நினைந்து அசைபோட முடிகின்றது’[28] என்கிறார். இவ்வாறாக பல இடங்களில் இக்குறிப்புகள் வருவதால் சில இடங்கள் மட்டும் ஈண்டு காட்டப் பெறுகின்றன.

1.நகை வணிகர்களின் தொடர்பைப் பற்றிக் கூறும்போது பிள்ளை உலக ஆசிரியரின் ஸ்ரீவசன பூஷணத்திலிருந்து ஒரு நூற்பாவைக் காட்டுகிறார் (நூற்பா-16). அதில் உள்ள ஒரு பகுதி ‘பொன் வணிகன் பொன்னை உரை கல்லிலே உரைத்து மெழுகாலே எடுத்துக் கால் கழஞ்சு என்று திரட்டுமாப் போலவே ஜன்ம பரம்பரைகள்தோறும், யாத்ருசிகம், பிராசங்கிதம், அநுஷங்கிதம் என்கின்ற சுக்கிருத விசேஷசங்களைக் கற்பித்துக்கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போகும்’. இந்நூற்பாவின் பொருள் நகைக்கடை அநுபவத்தினால் தெளிவாயிற்று, என்று விளக்குவார்.[29]

2.காரைக்குடியில் இந்துமதாவிமான சங்கத்தில் திரு.ராய.சொ. அவர்களின் வில்லிபாரத விளக்கங்களைக் கேட்ட பேராசிரியர் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றார். அதில் ஒன்று

அறக்கடவுளுக்கும், தருமனுக்கும் நடந்த உரையாடலைத் தத்துவக் கருத்துகள் கொண்டு நினைவுகூர்ந்து எழுதுகிறார்.

3. பதவி உயர்வுக்காக நடைபெற்ற பேட்டி ஒன்றில் பேராசிரியர் தெ.போ.மீ. அவர்களும், திருப்பதி பல்கலைக் கழகம் துணைவேந்தரும் ஒன்று சேர்ந்து முறையற்றமுறையில் நடந்து கொண்டதை தத்துவநோக்கில் சிந்தித்து, உணர்ந்து, ‘காரைக்குடியில் இருந்து என்னிடம் மிக அன்பாகப் பழகி வந்த இப் பெருமகனாரிடம் (தெ.போ.மீ.) எந்தவித உதவியையும் பெற முடியாமல் போனது எனது தீயூழே என்பதை நினைந்து நினைந்து வருந்துகின்றேன். தெ.போ.மீ.யின் ஆணவ மலத்தின் செயற்பாடே இவ்வளவுக்கும் காரணம் என்று கூட என் மனம் எண்ணத் தொடங்குகின்றது. என் வாழ்வில் எந்தப் பெரியவரின் உதவியையும் பெற முடியாமல் செய்பவன் இறைவனே என்பதைச் சிந்திக்கின்றேன்’[31] என்று குறிப்பிடுகின்றார். பிறிதோர் இடத்தில் ‘இவ்வாறு நான் பல்வேறு தொல்லைகட்கு ஆட்பட்டதற்கு என்னுடைய தீயூழ்தான் காரணம் என்று கருதுகின்றேன். மன அமைதியும் கொள்ளுகின்றேன். எய்தவன் இருக்க அம்பை நோவதால் பயன் என்ன’[32] என்கின்றார். இன்னும் பல தத்துவக்கருத்துகள் இடச்சுருக்கம் கருதி விடப் பெற்றன. ‘தீதும் நன்றும் பிறர் தரவாரா’ (புறம்-245) என்ற புறநானூற்றுப் புலவரின் பொன்மொழியில் அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதை அறிய முடிகின்றது.

<u>இலக்கியக் குறிப்புகள்:</u> தமிழ் இலக்கியங்களை மிகவும் ஆழ்ந்து கற்றவர் பேராசிரியர். ஆதலால் இவரது நினைவுக் குமிழிகளில் இலக்கியம் பற்றிய கருத்துகள், மேற்கோள்கள் முதலியவை ஆங்காங்கு கலந்து எழுகின்றன: சில எடுத்துக்காட்டுகள்: 1) தொடக்க நிலைப்பள்ளியில் பயின்றபோது வேலூர் வாத்தியார் அரிச்சந்திர புராணம் கற்பித்ததை நினைத்து நினைத்து அப்புராணத்தில் உள்ள இனிய சுவையான பாடல்கள் ஆங்காங்கு வெளிவருகின்றன.[33]

2.துறையூர் உயர்நிலை தொடக்கப்பள்ளியில் ஏ.இராமசாமி அய்யர் என்பார் கற்பித்த முறையை எடுத்து விளக்கும்போது திருவாசகத்தில் உள்ள சில பாடல்கள் தாமாக வெளிவருகின்றன.[34] இக்காலத்தில் துறையூர் சின்ன மடத்தில் தங்கியிருந்தபோது அருகில் உள்ள வேணுகோபால் என்ற ‘படிக்காத நல்லவர்’ இவருடன் தொடர்வு ஏற்பட்டபோது அவரிடம் சில இலக்கியக் கருத்துகளைப் பகிர்ந்து

கொள்வார். ‘விவேக சிந்தாமணி’ என்ற நூலிலுள்ள ‘கருதியநூல் கல்லாதான்’ (விவேக சிந்தாமணி-20), ‘திருப்பதி மிதியா பாதம்’ (மேற்படி-28), ‘ஆரம்பூண்டமணி மார்பா’ (மேற்பா-94) ஆகிய பாடல்களை நினைவு கூர்ந்து மகிழ்கின்றார்.[35]

3.உயர்நிலைப்பள்ளி பயின்றபோது தமிழாசிரியர்கள் குமார வீரய்யர், ஐம்புலிங்க குருக்கள் இவர்கள் கற்பித்த சில கம்பராமாணப் பாடல்களையும் சில வில்லி பாரதப் பாடல்களையும் நினைவுகூர்ந்து குமிழிகளில் பதிவு செய்து மகிழ்வார்.[36]

4. நினைவுக் குமிழிகள் பகுதி மூன்று, பகுதி நான்கு இவற்றில் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றமையால் இவருக்கு இலக்கிய ஆர்வம் மிகுந்திருப்பதைக் கண்டு மகிழ முடிகின்றது.

இக்கால அரசியல் குறிப்புகள்: பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நம் குருதியில் கூட சாதிக் குறிப்பு இல்லை என்று அடிக்கடி சொல்வதுண்டு. இந்தச் சாதிபற்றிய குறிப்பை ஒரு குமிழியில் பதிவு செய்கின்றார். ‘சங்கங்கள் வைத்துக் கிளர்ச்சி செய்வது கலியுக தர்மமாக இருந்து வருகிறது. ஓவ்வொரு வகுப்பினரும் சங்கங்கள் வைத்துக்கொண்டு கிளர்ச்சி செய்து தம் வகுப்பைப பிற்போக்கு வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்கின்றனர். இவ்விடத்தில் ‘சாதிக்கு வீதிதோறும் சங்கம் வைத்தோம், சங்க காலம் ஒரு வகையில் தோற்றுவித்தோம்’ என்ற கவிஞர் தா.ரா.பாரதியின் கவிதையினை எடுத்துக்காட்டிக் கிண்டல் செய்கின்றார். இச்சமயத்தில் முற்போக்கு வகுப்பினர் பட்டியலில் இடம்பெற்றவர்கள் இச் சலுகையை பெற முடியாமல் போகின்றது என்றும் தேர்ந்தெடுக்கும் குழுவின் தில்லுமுல்லுகளும், அரசியல் குறுக்கீடுகளும், எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றி விடுகின்ற நிலையை ஏற்படுத்திவிடுகின்றன என்றும் எடுத்துக்கூறி வருந்துவார்.

இந்நிலையில் சனநாயகம், பணநாயகமாக மாறித் தேர்வு நடத்தும் அலுவலகங்களிலேயே ‘மதிப்பெண் மாற்றும் சதி’ நடைபெறுவதையும் இந்த பயங்கரமான போக்கிற்கு கேரளம் இமயச் சான்றாக திகழ்கின்றது என்றும், மன வேதனையுடன் குறிப்பிடுவார்.[35]

2.இந்த அரசியல் சாணக்கியம் கல்வித் துறையிலும் புகுந்து பல அப்பாவி மக்களைப் பெருந்தொல்லைகளுக்கு உட்படுத்திய

நிகழ்ச்சிகளை, பல்வேறு இடங்களில் குறிப்பிட்டு, குருதிக் கண்ணீர் வடிப்பார். திருப்பதியில் இவர் பட்ட பாட்டை இவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.[38]

முடிவு:தன் - வரலாற்றுத் தமிழில் - வாழ்வியல் தமிழில் - எழுதுவோரின் வாழ்க்கைபற்றியே எழுத வேண்டும் என்ற நியதி எக்காலத்திலும் எந்த நாட்டிலும் இருந்ததில்லை. பல தன்-வரலாற்று நூல்களை எடுத்துப் பயிலும்போது, இந்த உண்மையைக் காணலாம். காந்தி அடிகளின் சத்திய சோதனையில், அரசியலில் உண்மை (Truth) என்ற தத்துவத்தை நிலைநாட்டுவதற்கு அவர்பட்ட துன்பங்களைக் காணலாம். நேருவின் வாழ்வியல் நூலில் இந்திய அரசியல் வரலாறு, காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சி நிலைகள், ஆற்றிய தொண்டுகள், தாம் படித்து முன்னேறிய குறிப்புகள் போன்றவற்றைக் காண முடிகின்றது. உ.வே.சா. அவர்களின், வாழ்கையில் ஓலைச் சுவடிகளை அலைந்து திரிந்து தேடிய வரலாற்றுக் குறிப்புகள், ஓலைச்சுவடியிலிருந்து நூல்களைப் பதிப்பிப்பதில் ஏற்பட்ட இடர்பாடுகள், அலைந்து திரிந்தபோது ஏற்பட்ட சுவையான நிகழ்ச்சிகள், பதிப்பிப்பதில் நேரிட்ட பணத்தட்டுப்பாடுகள், வள்ளல்களை நாடிய முறைகள் போன்ற குறிப்புகளைக் காணலாம். 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்களின் வாழ்க்கைகுறிப்புகளில் தாம் ஆசிரியராக இருந்த காலத்தில் சில நிகழ்ச்சிகள், பல மாநாடுகளில் பேசிய குறிப்புகள், செய்தித்தாள்கள் நடத்தியதில் ஏற்பட்ட தொல்லைகள், தொழிலாளர் இயக்கத்தில் தமக்கு நேரிட்ட அநுபவங்கள் இவற்றை அறியலாம். நாமக்கல் கவிஞரின் 'என் கதையில்' சில இலக்கிய நிகழ்ச்சிகளும், அரசியல் குறிப்புகளும் கண்டு மகிழலாம். 'தாமரைச் செல்வர்' நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் நினைவு அலைகளில் (மூன்று பகுதிகள்) அவர் சிறுவனாக இருந்தபோது ஏற்பட்ட அநுபவங்கள், கல்வித் துறையில் இயக்குநராக இருந்தபோது நேரிட்ட பல நிகழ்ச்சிகள், பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தபோது தாம் செய்த பல நற்பணிகளில், பல்வேறு அரசியல் நிகழ்ச்சிகள் போன்ற பல குறிப்புகளைக் கண்டு மகிழலாம். கலைஞர் கருணாநிதியின் தன்-வரலாற்று நூலில் தமிழக அரசியல், சாதி பற்றிய கொள்கைகள், தாம் முட்டி முயன்று முன்னேற்றமடைந்த பல நிகழ்ச்சிகள் ஆகியவை பதிவு பெற்றிருப்பதைக் காணலாம். இங்ஙனமே பேராசிரியர் ரெட்டியார் அவர்களது நினைவுக் குமிழிகளில் அவர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றிய விதம், அவர் காலத்தில் இருந்த தொடக்க நிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி பற்றிய நிலைகள், பல்வேறு நிலைகளில் தமக்கு

நேரிட்ட தொல்லைகள், இடர்பாடுகள் முதலியவற்றைக் குறிப்பிட்டிருப்பதைத் தவிர, மக்களுக்கு எக்காலத்திற்கும் வேண்டிய அறிவியல், உளவியல், தத்துவ இயல், சமயம், திறனாய்வு, மொழிபெயர்ப்பு போன்றவற்றில் பல்வேறு குறிப்புகளையும் இடத்திற்கேற்ப பயனுள்ள வகையில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு மகிழலாம். இவருடைய வாழ்வியல் தமிழ் மிகவும் புதுப்போக்குடைய ஒரு பதிவேடு; இளைஞர்களுக்கு, குறிப்பாக ஏழை மாணவர்களுக்கு அகத்தெழுச்சியை எழுப்பி முன்னேற்றத்திற்குப் பல வழிகளை காட்டுவதாகும்.

இந்த இயலில் கண்ட முடிவுகள்:

1. 1920-30 ஆண்டுகளில் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்விமுறை இக்கால டால்டன் முறையைக்கூட கூட விஞ்சுவதாக இருந்தது. இது வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் இருந்த நடைமுறை.

2. சிறுவயதிலேயே 'முறைவைப்பு' என்ற முறையில் வாய்ப்பாடு, உலக நீதி, வெற்றி வேற்கை முதலிய பாடல்களை ஒருவர் சொல்ல மற்றையோர் பின்பற்றிச்சொல்ல வேண்டும். இஃது அதிகாலை முதல் 6.30 மணி வரை நடைபெறல் வேண்டும். இப்பழக்கம் மணவளர்ச்சி, நினைவாற்றல் ஆகியவைகளை வளர்ப்பதாக இருந்தது.

3. தொடக்கநிலைப் பள்ளியில் தமிழ், கணிதம் மட்டும்தான் கற்பிக்கப் பெற்றன. நாளடைவில் சிவிக்ஸ், புவியியல், வரலாறு, அறிவியல் இவை சிறிது சிறிதாக இடம்பெற்றன. இவையெல்லாம் கற்பிக்கப் பெறாமைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமையே காரணம் என்று கருதலாம்.

4. உயர்நிலைப்பள்ளியில் எல்லா பாடங்களும் முறையாக கற்பிக்கப்பெற்றன. 1929 முதல் 'ஏ ' பிரிவு பாடங்களும் 'சி' பிரிவு பாடங்களும் வரலாறு, புவியியல் போன்ற பாடங்களும் தமிழ் வாயிலாக கற்பிக்கப்பெற்றன. ஏனைய பாடல்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பெற்றன.

5. கல்லூரிகள் அக்காலத்தில் அதிகமாக இல்லை. இருந்த சிலவற்றிலும் எல்லாப் பிரிவு பாடங்களும் கற்பிக்கப்பெறவில்லை. காரணம் உயர்தரக் கல்வியில் அரசுக்கே அதிகமாக அக்கறை இருந்ததில்லை. ஏதோ பட்டதாரிகளை உற்பத்தி செய்து நிர்வாகத்திற்கு எழுத்தர்கள் கிடைத்தால் போதும் என்ற மனநிறைவுடன் அரசு கவனம் இருந்து வந்தது.

6. நாடு முற்றிலும் வறுமையில் உழன்று கொண்டிருந்தமையால் சிற்றூர்களில் இருந்தவர்கட்குக் கல்லூரிக் கல்வி எட்டா பழமாகவே இருந்து வந்தது. இந்நிலையில் பேராசிரியர் ஒருவரே, அக்காலத்தில் ஒரு சிற்றூரில் இன்பமும் துன்பமும் கலந்த நிலையில் பி.எஸ்சி., எல்.டி. வரையிலும் கல்வி பெற்றமை வாஸ்கோடகாமா இந்தியாவைக் கண்டுபிடித்தது போல் இருந்தது அந்த ஊர் மக்களுக்கு. 1930 முதல் 65 வரையில் அந்த ஊர் மக்களில் எவரும் கல்லூரியை எட்டிப் பார்த்தது இல்லை. இதனால் அக்காலக் கல்வி நிலை ஓரளவு தெளிவாகத் தெரிகிறது.

7. அக்காலத்தில் பார்ப்பனர்களைத் தவிர தமிழ்மக்களில் ஆசிரியர்கள் அதிகம் இல்லாமையால் சில பார்ப்பன ஆசிரியர்களிடம் சாதி உயர்வும், ஆணவமும் தலை தூக்கி நின்றதை இலைமறைகாய்போல் ஆங்காங்கு குறிப்பிடுவது இக்காலத்தவர்க்கு ஒரு புதிய செய்தியாகத் தோன்றும்.

8. கல்வி கற்பித்தலில் பழைய முறைகளும், புதிய முறைகளும் நடைமுறையில் இருந்தவற்றை எடுத்துக்காட்டுகளால் அறிய முடிகின்றது.

9. பேராசிரியர் பலதுறை அறிவினராதலால் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் போக்கில் இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல் கருத்துகள் இவற்றைப் பொருத்தமாக அமைத்திருப்பது படிப்போர்க்கு நல்ல விருந்து.

10. இவர் தன் வாழ்க்கையில் பெற்ற நற்பழக்கங்கள், எழுத்துப்பழக்கம், கற்றலில் இவர்க்கு இருந்த ஆர்வம், அக்கறை முதலியவை இக்கால இளைஞர்களுக்கு அகத்தெழுச்சியை எழுப்புவனவாக இருக்கும்.

11. உயர்நிலைப்பள்ளியே இல்லாத ஊரில் தாமே முன்னின்று ஒரு பள்ளியை உருவாக்கியதுடன் சுற்றுப்புற ஊர்களில் நாலைந்து உயர்நிலைப்பள்ளிகளைத் தோற்றுவித்து அவற்றின் வளர்ச்சியிலும் பங்கு கொண்டமையால் இவர்தம் செயல் பிற ஆசிரியர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகிறது.

12. கல்வி உலகில் கால்வைத்த நாள்தொட்டு பல சான்றோர்களின் தொடர்பு அவருக்குக் குறிக்கோள் பாதையில் கொண்டு செலுத்துவதாக அமைந்தது.

13. திறமையுள்ள முற்போக்கு வகுப்பு (Forward) ஏழை மாணவர்களுக்குச் சம்பளச் சலுகை கொடுப்பதற்கு இவர் மேற்கொண்ட முயற்சி எவரையும் புல்லரிக்க வைக்கும்.

14. ஏழை மாணவர்கள் படிப்பதற்கு மின் விளக்குகள் இல்லாத அக்காலத்தில் பள்ளி வகுப்பறைகளில் தற்காலிக மின் விளக்குகள் ஏற்படுத்திப் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்தது பெரிய சமூகத் தொண்டாகும்.

15. படைப்பாற்றலை வளர்ப்பதற்கு ‘இளைஞர் அறிவுச் சுடர்’ என்ற கையெழுத்து இதழ், அடுத்த இரண்டாண்டுகள் அவை அச்சு வடிவம் பெறுவதற்கு செய்த ஏற்பாடுகள் மாணவர்களிடம் படைப்பாற்றல் வளர்வதற்கு பெருந்துணையாக அமைந்தன. 1950 முதல் அப்பள்ளியிலிருந்து பேராசிரியர் விலகிய பிறகு இதழும் நின்றது.

16. அக்காலத்தில் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாக்கள், திருக்கோயில் பிரம்மோற்சவம் (பெருவிழா) போல் நடைபெற்றதை இன்னும் அந்த ஊர் மக்கள் பேசிக்கொள்வதை நேரில் கண்டறியலாம். இவர் பள்ளியை விட்ட பிறகு எந்தச் சிறப்பு விழாக்களும் அப்பள்ளியில் நடைபெறுவது இல்லை.

17. கல்லூரியில் இவர் படித்த காலத்தில் நடைமுறையில் மேற்கொண்ட பழக்கங்கள் இக்கால இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

18. கல்லூரிகள் அதிகமில்லாத காலத்தில் பரிந்துரைப்பதற்குத் தக்க பெரியார் ஒருவரும் இல்லாமையால் அத் திசையில் இவர் முயற்சி செய்யவில்லை. மின்னாமல் இடித்ததுபோல் இவர் புகழ் எங்கும் பரவினமையால் புதிதாக தொடங்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அழைப்பு வந்தது. ‘திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை’ என்ற பொன்மொழியின் பொருள் புலப்படுவதாக அமைந்தது.

19. திருப்பதிக்குச் சென்றது பிழைப்புக்காக அல்ல. தமிழ் வளர்ப்பதற்காக, அங்கு தமிழ்த்துறையில் எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி. இவை வளர்ப்பதற்காக. தமிழக அரசு மானியம் பெறுவதற்குப் பத்தாண்டுகள் சென்னைக்கு காவடி அரசு எடுத்த நிலை படிப்போர்க்கு மன உருக்கத்தை விளைவிக்கும்.

20. தமிழகத்திலிருந்து சில பெரியோர்கள் தேர்வுக் குழுவில் அமைந்து இவர் முன்னேற முடியாமல் வேறு தகுதியற்ற சிலரை

நுழைப்பதற்கு முயன்றது படிப்போர் கண்களில் குருதி உகுக்க நேரிடும்.

21. எம்.ஏ. வில் முதல் வகுப்பில் தேர்ந்தவர்களுக்கு ஒரு தங்கப் பதக்கமும், இலக்கியத் திறனாய்வில் முதலாவதாக தேர்ந்தவர்க்கு ஒரு தங்கப் பதக்கமும், முதன் முதலாக எம்.ஏ. தேர்விற்கு செல்லும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க ஏற்பாடு பொன் எழுத்துகளால் வேண்டியது.

22. தமிழ் நடையாடாத ஆந்திர மாநிலத்தில் பேச்சுத் தமிழ் வழங்கும் சில பகுதிகளில் மூன்று தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்திப் பதிவு செய்து அவற்றை இலக்கிய மேடைகளாகச் செய்த பெருமை பேராசிரியர்க்கு உண்டு. அவற்றை விரிவச் சொற்பொழிவுகள் நடைபெறுவதற்கும் மேடையாக ஆக்கிக் கொண்டது பெருமைக்குரியது.

<u>அடிக்குறிப்புகள்:</u>

1. நினைவுக் குமிழிகள் - தொகுதி1, குமிழி – 1
2. மேலது - ப. க 39 - 43 (கல்வி வாழ்வில்)
3. மேலது - பக். 83 - 86
4. மேலது பக். 88 - 89
5. மேலது பக். 112 - 123, பக். 129 - 135
6. நினைவுக் குமிழிகள் - பகுதி - 2, ப. 100
7. மேலது ப. 101, ப. 128
8. நினைவுக் குமிழிகள் - பகுதி - 4, ப. 537
9. பாவேந்தர் பாரதிதாசன், ஒரு கண்ணோட்டம் ப. 58
10. நினைவுக் குமிழிகள் - பகுதி - 1, குமிழி-26, ப. 151
11. மேலது - பக். 205 - 207
12. மேலது பக். 208 - 212
13. மேலது பக். 293 - 294
14. மேலது பக். 294 - 295
15. மேலது - பக். 229 -241
16. நினைவுக்குமிழிகள் - பகுதி 4 - குமிழி - 21
17. ‘மலரும் நினைவுகள்’ என்ற நூலில் பல விவரங்களை தெளிவுபடக் காணலாம்.
18. நினைவுக் குமிழிகள் - பகுதி 2 பக். 293 - 362
19. இவ்வாய்மேடு - இயல் - 11, பகுதி - 6
20. நினைவுக் குமிழிகள் - பகுதி 1, பக். 374 - 377
21. மேலது, பகுதி 4, ப. 261, குமிழி-35
22. மேலது, பகுதி 1, குமிழிகள், 3, 4, 5, 6, 7, 15, 23, 33 காண்க
23. மேலது - பகுதி 2, குமிழி -40
24. மேலது குமிழி - 8
25. மேலது - குமிழி - 43
26. மேலது - பகுதி 1, குமிழி - 72
27. மேலது - பகுதி - 1, ப. 8, குமிழி - 1

28. மேலது - ப. 8
29. மேலது - பகுதி - 3, குமிழி - 1
30. மேலது - குமிழி - 32
31. ‘மலரும் நினைவுகள்’ ப. 459
32. நினைவுக் குமிழிகள் - பகுதி - 4
33. நினைவுக் குமிழிகள் பகுதி - 1, பகுதி - 14, 15, 53
34. மேலது - குமிழி - 23
35. மேலது - குமிழி - 22
36. மேலது - குமிழி - 29
37. மேலது - குமிழி - 25
38. மேலது பகுதி - 4 பக். 189- 191
39. மேலது - குமிழி - 1, பக் 21 – 31

****



ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ VII

இயல் - 13

பேராசிரியரின் தமிழ்ப் பணி



பகுதி 7 :<>: இயல் – 13

தமிழ்வள மேம்பாட்டில் பேராசிரியரின் பணி

நம் நாட்டில் பலர் தமிழ்மொழி வளத்திற்கு அரும்பாடு பட்டிருப்பதை தமிழ் வரலாறு காட்டும். இந்த ஆய்வேட்டில் பலரது தமிழ்த் தொண்டு பல இடங்களில் சுட்டப் பெற்றுள்ளது. ஆனால் இன்று வாசகர்களுக்குச் சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றில் அக்கறை இருப்பதுபோல், பிறதுறை அறிவைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் இல்லை. சாதாரணமாக ஒரு வரலாற்றுப் பேராசிரியர், ஒரு பொருளியல் பேராசிரியர், ஒரு மொழியியல் பேராசிரியர் ஆகியோர்க்குப் பல துறை அறிவியல் அறிவு பெற வேண்டும் என்ற நாட்டம் இல்லாதிருத்தலைக் காண முடிகின்றது. அங்ஙனமே பலதுறை அறிவியல் பேராசிரியர்கள், கணிதப் பேராசிரியர்கள் இவர்களுக்கும் வரலாற்று அறிவு, பொருளியல் அறிவு, இலக்கிய அறிவு போன்றவற்றைப் பெற வேண்டும் என்ற நாட்டம் இல்லாதிருத்தலையும் காண முடிகின்றது. இவர்கள் எல்லாம் மன எழுச்சி கொண்டு இத்துறையில் பணி ஆற்றினால் தமிழ்வளம் கடல்வளம் போல் பெருகும். பேராசிரியர் ரெட்டியார், இந்நிலையில் பல துறைகளில் படைப்புகளை வெளியிட்டிருப்பது தமிழின் பேறு என்றே கருதலாம்.

(அ) கடித உத்தி

பொதுவாக இக்கால நூலாசிரியர்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டுத் தம் படைப்புகளைப் படைக்கின்றனர். அரிய கருத்துகளை எளிய முறையில் படிப்போர் மனதில் பதிப்பதற்குப் பெரும்பாலோர் கையாள்வது ஒன்று வினா-விடை உத்தி; மற்றொன்று கடித உத்தி. முன்னதைவிட பின்னது ஆசிரியருக்கும் படிப்போர்க்கும் மிக நெருங்கிய தொடர்பை விளைவிப்பதால் கடித உத்தியை பேராசிரியர் கையாண்டார். இம்முறையில் கையாண்டு படைக்கப்பெற்ற நூல்கள் 1. ‘இல்லற நெறி’ (வேலனுக்கு வேங்கடத்தானின் கடிதங்கள்), 2. ‘முத்தி நெறி’ (வேங்கடவனுக்கு வேலப்பன் கடிதங்கள்), 3. ‘சைவ சமய விளக்கு’ (கண்ணுதலப்பனுக்குக் கார்த்திகேயன் கடிதங்கள்). பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகள் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்ததாலும், பயிற்சிக் கல்லூரியில் பத்தாண்டுகள் பணி ஆற்றியதனாலும் ஆசிரியர் தகுதியை அநுபவத்தால் நன்கு அறிந்தவர்.

> **... தெய்வம் வாழ்த்திக்**
> **கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்**
> **கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்**[1]

அதே கருத்தை நன்னூலாரும்

> **…… உரைக்கப்படும்பொருள் உள்ளத்தமைத்து**
> **விரையான் வெகுளான் அறிந்து அவன் உளங்கொளக்**
> **கோட்டமில் மனத்தின் நூல்கொடுத்தல் என்ப**[2]

ஆசிரியர் மாணாக்கர்க்கு உணர்த்தும் முறையை ‘ஈதல் இயல்பு’ என்பர் நன்னூலார். மேற்காட்டிய நூற்பாக்களிலும் உணர்வகை, கொள்வகை என்பது அவர்கள் மனம் ஏற்கும் திறனாகும். இவ்விரண்டு முறைகளும் குருவித் தலையில் பனங்காயைக் கட்டுதல் போன்ற முறையை மேற்கொள்ளலாகாது என்ற கருத்தை உளவியல் பாங்கினை நன்கறிந்த பேராசிரியர் விளக்குவனவாகும்.

1.இல்லற நெறி: இல்லற நெறி என்பது, திருமணம், மக்கட்பேறு முதலிய கருத்துகள் அடங்கிய ஒரு சமூக நெறி. திருமணம் என்பது தனிப்பட்டோரின் உடல் பற்றியதும், உளம் பற்றியதும், உள்ளக்கிளர்ச்சி பற்றியதும் (Emotion), ஆன்மீக உறவு பற்றியதுமான முதிர்ச்சி நிலையைக் காட்டும் ஒரு சமூக உறவு முறை. அ∴து ஒரு குறிப்பிட்ட தருணத்தில் ஒரு இளைஞனை கணவன்-தந்தையாகவும், யுவதியை மனைவி-தாயாகவும் மாற்றுகிறது. இந்நிலையில் அது அவர்கட்கு சமூகத்தில ஓர் உயரிய நிலையையும், கடமைகளையும், உரிமைகளையும், பொறுப்புகளையும் நல்குகிறது. பெரும்பான்மையான ஆடவர்-மகளிர் வாழ்க்கையில் திருமணம் உயிர்நாடிபோல் அமைந்து, உடல், உள, ஆன்மீக ஒருமைப்பாட்டினை விளைவித்து விடுகிறது. ‘யான்’, ‘எனது’, என்ற தன்மை நிலைகள் மறைந்து ‘நாம்’, ‘நமது’ என்ற பொதுநல நிலைகள் தோன்றுகின்றன. ஒரு நல்ல திருமணத்தில் கணவன், மனைவியரின் தனிப்பட்ட முனைப்புகள் ஒன்றிக் கலக்கின்றன. ஒருவருடைய சுகதுக்கங்கள் மற்றவரின் சுகதுக்கங்களாக அமைகின்றன.

‘இல்லற நெறி’ என்ற இந்நூலை அமைத்த பேராசிரியர் திருமண வாழ்வில் நுழையும் நம்பி-நங்கையர் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள் அனைத்தையும் ஐம்பது கடிதங்களில் அமைத்து விளக்குகின்றார். இச்செய்திகள் மனப்பொருத்தம், அறிவியல் அடிப்டையில் திருமணம், இனப்பெருக்கம், குடும்பக்கட்டுப்பாடு, மக்கட்பேறு, திருமணக்கலை, பால் பொருத்தக் கேடுகள், திருமண வாழ்வில் உடல்நலம், மகிழ்வுடைய இல்வாழ்க்கை என்ற பத்து இயல்களில் பாங்குடன் பாகுபாடு செய்து விளக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் அவ்வியலின் திரண்டகருத்து சுருக்கமாக தரப்பெற்றுள்ளது. ‘உடலியல், உளவியல் முறையில்’

அமைந்த இந்நூலைப் படிக்கப் புகுவோர்க்கு கடிதஉத்தி ஆர்வம் எழுப்பக் கூடியதாக இருக்கும். பொருள் விளக்கத்திற்கு இந்நூலில் அமைந்த 55 படங்கள் மிகவும் துணைசெய்கின்றன.

'பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்ற நின்றனள் ஆருயி ருள்ளே'[3]

என்ற மாமுனிவரின் திருவுள்ளத்தை நன்கறிந்து இந்நூலை மிக்க பக்தியுடன் படைத்துள்ளார் பேராசிரியர். கடிதங்கள் தொடங்கும் முறைக்கு சில எடுத்துக்காட்டுகள் தருவது பொருத்தமாகும்.

1)வீட்டில் நின் பெற்றோர்கள் திருமணப்பேச்சு தொடங்கியுள்ளனர் என்று எழுதியிருந்தாய். நீ திருமணம் செய்து கொள்வதற்குமுன் என் யோசனைகளையும் கேட்டிருந்தாய்.... என்று ஒரு கடிதத்தைத் தொடங்கி தன் கருத்துக்களை கூறுவார்.

2)'சென்ற கடிதத்தில்' பெற்றோர்களிடமிருந்து தம் குழவிகட்கு மரபுவழியாக இறங்கும் பண்புகளைக் குறிப்பிட்டேனல்லவா? அவை பற்றிய சில கருத்துக்களை இன்று விளக்குவேன்... என்று தொடங்கி மரபு வழியின் பொறி நுட்பத்தைத் தெளிவாக்குவார்.

3)'சென்ற கடிதத்தில்' உயிரியல் அடிப்படையில் திருமணத்தைப்பற்றி சில கருத்துக்களை தெளிவாகத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? 'மானிட இனப்பெருக்க மண்டலத்தைப்பற்றிய கருத்துகளே இவ்வாராய்ச்சியாகும் என்று கூறி இனப் பெருக்கத்தில் ஆணின் பங்கு (ஆண் பிறப்புறுப்புகளின் அமைப்பு), இனப் பெருக்கத்தில் பெண்ணின் பங்கு (பெண் பிறப்புறுப்புகளின் அமைப்பு) இவற்றை விளக்குவார். தொடர்ந்து விந்துப்பாய்மம் கருப்பையில் பீச்சப்படுவதையும் தெளிவாக்குவார்.

4)'இதுகாறும் எழுதிய மூன்று கடிதங்களில் பெண்களிடம் காணப்பெறும் பால் பொருத்தமின்மைகளையும், அவற்றை நீக்கும் முறைகளையும் ஓரளவு விளக்கினேன்'. இத்தகைய நிலைகள் ஆண்களிடம் காணப்பெறவில்லையா என்று வினவி இருந்தாய்; கூறுவேன் ... என்று கருத்துகளை விளக்குவார்.

5)சென்ற கடிதத்தின் இறுதியில் திருமண வாழ்க்கையில் எழும் காரணங்களை மூன்று பகுதியில் தொகுத்துக் கூறினேன் அல்லவா?

அவற்றை ஈண்டு விளக்கமாக ஆராய்வேன்... என்று கருத்துகளை விளக்குவார்.

6)மணமக்கள் மகிழ்ச்சியான வாழ்வு பெறுவதற்குத் துணையாக இருக்கக்கூடிய குறிப்புகளைத் தருமாறு எழுதியிருந்தாய்... என்று கூறி அவற்றை விளக்கத் தொடங்குவார்.

<u>2.முத்திநெறி:</u> இவ்வுலகம் தோன்றிய நாள்தொட்டு மக்களிடையே ஏதோ ஒரு முறையில் சமய வளர்ச்சி நிலவி வருகிறது. காலப்போக்கில் மக்களின் அறிவு முதிர்ச்சிக்கேற்ப இச்சமய வளர்ச்சியும் வளர்ந்து பல்வேறு கொள்கைகளுடன் கூடிய பல்வேறு பிரிவுகளாக வளர்ந்தன. இப்பிரிவுகளுள் ஒன்று வைணவ சமயம். இதனைப் 'பாயிர இயல்', 'தத்துவ இயல்', 'சாதன இயல்', 'புருஷார்த்த இயல்', 'மந்திர இயல்', 'சம்பிரதாய இயல்' என்று ஆறு இயல்களாகவும், 52 கடிதங்களாகவும் தொகுத்தும், வகுத்தும் விளக்குவார்.

விசிட்டாத்துவைதம் என்பது, பழங்காலம் முதல் இறைவனையும் இறைவனைப்பற்றியுமான கருத்துகள் இலக்கியங்களிலும் பேச்சுகளிலும் சிதறிக் கிடந்தவற்றை எம்பெருமானார் என்று போற்றப்படும் இராமாநுசர் பாகுபடுத்தி வைணவ நெறியாக – விசிட்டாத்துவயம் தத்துவமாக – முறைப்படுத்தி நமக்கு வழங்கினார்.

இந்த நெறியையும் தத்துவத்தையும் பேராசிரியர் 'முத்திநெறி' என்ற தலைப்பில் ஐம்பது கடிதங்களில் ஆறு இயல்களில் வகுத்தும், தொகுத்தும் வெளியிட்டுள்ளார். சாதாரணமாக வைணவ தத்துவங்கள் மணிப்பிரவாள நடையில் விளக்கப்பெற்று மரபுவழியாக வந்துள்ளன. ஆனால் பேராசிரியர் அவர்கள் இயன்ற வரையில் இக்கருத்துகளை நல்ல தமிழிலில் நீரோட்டமான நடையில் விளக்கியுள்ளார்.

பல காலமாக வைணவர்கள் இடையே இருந்த இந்த மணிப்பிரவாள நடையில் சிக்கித் தவிக்கும் இக்கருத்துகளை நல்ல தமிழில் விடுதலை செய்து வெளிப்படுத்தின திறம் சமய அறிவை நாடும் தமிழ் மக்களுக்குச் செய்த ஒரு சிறந்த தொண்டாகும். இந்த நூலில் தொடங்கப்பெற்ற கடிதங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருவது பொருத்தமாகும்.

1) என் கடிதத்தில் 'முத்திநெறி அறியாத மூர்க்கர்' (திருவா.648) என்ற மாணிக்கவாசகரின் சொற்றொடர் உன் உள்ளத்தைத் தொட்டதாகவும், அந்த முத்திநெறியை அறிந்துகொள்ள பேரவாக் கொண்டுள்ளதாகவும்

அதனைத் தெரிவிக்குமாறும் கேட்டிருந்தாய் ... என்று தொடங்கி சில தத்துவங்களைக் கூறுவர்.

2)உன் கடிதம் வந்தது. அதில் 'சித்து' என்ற தத்துவத்தை விளக்குமாறு கேட்டிருந்தாய். அதனை இக்கடிதத்தில் விளக்குவேன்... என்று கூறி சித்தினைத் தத்துவ ரீதியிலும் ஆழ்வார் பாசுரங்களை எடுத்துக்காட்டாக கொண்டும் விளக்குவார்.

3)உன் கடிதம் வந்தது. 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' (திருவாய் 8.8:2) என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி சொற்றொடரையும், அவற்றில் அடங்கியுள்ள தத்துவக் கருத்துகளையும் விளக்குமாறு கேட்டிருந்தாய். அவற்றை ஈண்டு விளக்குவேன்... என்று கருத்துகளை விளக்குவார்.

4)சில சமயம் 'இக்கடிதம் தொடங்கி மூன்றாவது தத்துவமாகிய 'ஈசுவரனை' விளக்குவேன். முதலில் அவன் திருக்குணங்களைப் பகர்வேன் ... என்று கூறி திருக்குணங்களை விளக்கத் துவங்குவார்.

5)சில சமயம் 'சென்ற கடிதத்தில் குறிப்பிட்டபடி இறைவனுடைய திவ்விய மங்களா விக்கிரகத்தைப்பற்றி விளக்குவேன்'... என்று கூறி, கடவுளின் ஐந்து நிலைகளை விளக்குவார்.

6)இன்னும் சில சமயம் இக்கடிதத்தில் 'பக்திநெறி' இன்னது என்று விளக்குவேன் எனக் கடிதத்தில் நேராக இறங்கி விடுவார்.

7)பெரிய பிராட்டியார் புருஷகார பூதியாக (தகவுரை கூறுபவளாக) செயற்படுவதையும், சேதநரின் உய்விற்கு புருஷகாரத்தின் இன்றியமையாமையையும் இக்கடிதத்தில் விளக்குவேன்... என்று நேராக விளக்கத்தில் புகுந்து விடுவார்.

<u>3.சைவசமய விளக்கு</u>: மக்களுக்கு மன அமைதியை நல்கி வருவது இறை அநுபவத்தோடு கூடிய சமய வாழ்க்கையாகும் என்பது அநுபவ உண்மை. எல்லாச் சமயங்கட்டும் இது பொருந்தும். பொதுவான உண்மையாகும். மூன்று மாணவர்களை பிஎச்.டி. ஆய்வுக்கு நெறிப்படுத்தும் வாய்ப்பினைப் பெற்றபோது ஒருவர் 'தாயுமானவர்' பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டதால், தாயுமானவர் கூறும் சுத்தாத்துவத்தில் (தாயுமானவர் பாடல் 253) தெளிவு ஏற்படுவதற்காக சைவ நூல்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் பயிலத் தொடங்கினார். இந்த 'வாய்ப்பே சைவ சமயத்தில் ஆழங்கால்படுவதற்கு

சந்தர்ப்பம் கிட்டியது.’[4] ஓய்வு பெற்று சென்னைக்கு வந்தபிறகு (1978 ஜனவரி) சில ஆண்டுகள் கழித்து சைவ சமயத்தில் நாட்டம்கொண்டு பதினான்கு சாத்திரங்கள் பயிலத் தொடங்கினார். இந்த அநுபவமே சைவசமய விளக்காக மலர்ந்தது.

இந்த நூலையும் கடித உத்தியைக்கொண்டே அமைத்தார். இதனைப் பாயிர இயல், பதி இயல், பசு இயல், பாச இயல், சாதன இயல், பயன் இயல், வழிபாட்டு இயல் என்ற ஏழு இயல்களாகவும், ஐம்பத்திரண்டு கடிதங்களாகவும் பிரித்துக் கொண்டு விளக்குவார். இந்த உத்தி முறையை விளக்க சில எடுத்துக்காட்டுகள்.

1) உன் கடிதம் கண்டுமகிழ்ந்தேன். சைவசமய தத்துவங்களின்மீது உன் நாட்டம் செல்வதாகவும், அவற்றைத் தெளிவாக விளக்குமாறும் கேட்டிருந்தாய். உன் நல்லெண்ணத்தைப் பாராட்டுகின்றேன். முன்னைய நல்வினைப்பயன் காராணமாக உன் மனம் சமய தத்துவங்களில் ஈடுபட விரும்புகிறது என்பது என் கருத்து… என விளக்குவார்.

2)சைவசித்தாந்தக் கருத்தினைப்பற்றி அநுபவத்தோடு அறிவதற்கு திருமுறைப்பயிற்சி மிகவும் இன்றியமையாதது. திருமுறைகள் பன்னிரண்டு… என்று கூறி திருமுறைகள் பன்னிரண்டையும் அறிமுகம் செய்து வைப்பார்.

3)பாயிரஇயல் கடிதம் ஒன்றில் பதி, பசு, பாசம் என்று குறிப்பிட்டேன் அல்லவா? அவற்றுள் பதியைப்பற்றிய சித்தாந்தக் கருத்துகளை இந்த இயலில் விளக்குவேன்… என்று கூறி விளக்கத்தில் இறங்குவார்.

4)இக்கடிதத்தில் ‘உயிர்பற்றிய மெய்கண்டாரின் கொள்கையை விளக்குவேன்’ என்று நேராகக் கடிதத்தை துவங்கி பசுவின் இயல்புபற்றி விளக்கத் தொடங்குவார்.

5)இக்கடிதத்தில் கன்ப மலத்தைப்பற்றிச் சித்தாந்த அடிப்படையில் விளக்குவேன்… என்று கூறி மும்மலங்களில் ஒன்றான கன்ம மலத்தைப்பற்றி விளக்கத் துவங்குவார்.

6)ஆருயிர்கள் பாசத்தினின்றும் நீங்கிப் பதியினை அடைதற்குரிய சாதனத்தின் (வழியின்) இயல்பை விளக்குமாறு கேட்டிருந்தாய். அதுபற்றிய கருத்துகளை இக்கடிதத்திலும், இதனைத் தொடர்ந்து எழுதும் கடிதங்களிலும் விளக்குவேன்… என்று கூறிக் கருத்துகளை விளக்கத் துவங்குவார்.

7)சென்ற கடிதத்தில் சித்தாந்தத்தில் சொல்லப்படும் ‘பரமுத்தி முடிந்தமுத்தி’ என்று சொன்னேன் அல்லவா? இதற்கு முன்னரும் சில முத்திகள் உளவோ? என்ற ஐயம் நின்பால் எழுந்திருக்கும்.. என்று கடிதத்தைத் தொடங்கி ஐயத்தை நீக்கும் வழியை விளக்குவார்.

8)இக்கடிதத்தில் ஆலய வழிபாட்டைப்பற்றி சில கருத்துகளை விளக்குவேன் .. என்று தொடங்கி அவற்றை விளக்குவார்.

9)இக்கடிதத்தில் ‘ஆலயத்திற்குள் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கு நடைபெறும் பூசை முறையை விளக்குவேன்’… என்று தொடங்கி இறை வழிபாட்டின் முறைகளை விளக்குவார்.

(ஆ) சொற்பொழிவு உத்தி

பேராசிரியர் ரெட்டியார் திருப்பதியில் பணிபுரிந்தபோது தாம் மேற்கொண்ட பணிக்கு அப்பாற்பட்டு பொதுத்தொண்டாக ‘பாக்காலாவில் பாக்காலா தமிழ்ச்சங்கம் என்ற ஒன்றை, அந்தந்த ஊர் சான்றோர்கள் துணைக்கொண்டு தாம் முன்னின்று நிறுவினார். தமிழ் நடையாடாத பகுதியாதலாலும் இச்சங்கத்தைத் தமக்கு ஒரு பேச்சு மேடையாகவும், அரசுகளில் தொடர்புகொள்ள நிறுவனங்களாகவும் பயன்படுத்திக்கொண்டார். இதை உத்தி என்று சொல்வதைவிட நடைமுறையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஆதலால் ‘சொற்பொழிவுகளின் தொகுப்பு’ என்று கூறுவது பொருத்தமாகும். இந்த முறையில் வெளிவந்த நூல்கள்: (1) திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும், (2) கலியன் குரல், (3) தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை, (4) ஆழ்வார்களின் ஆரா அமுது, (5) பரணிப் பொழிவுகள், (6) புதுமைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதி – ஒரு கண்ணோட்டம், (7) தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும் என்பவையாகும். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் இந்த ஆய்வாளர் சுருக்கமாக எடுத்துக்கூறுவார்.

1) திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்: இந்நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரா.பி.சேதுப்பிள்ளை வெள்ளிவிழா நினைவுச் சொற்பொழிவுத் திட்டத்தின் கீழ் (1973-74) நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளின் தொகுப்பு. முதற்சொற்பொழிவு ‘சங்க கால வேங்கடம்’: இதில்,

(i)இன்றையோர் கருதும் வேங்கடம் வேறு, தொல்காப்பிய பாயிரம் அருளிய பணம் பாரனார் கூறிய வேங்கடம் வேறு என்பதை

அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம், புறநானூறு, கலித்தொகை, நற்றிணை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, கல்வெட்டுகள், அமலநாதிபிரான் என்ற நூல்களில் உள்ள சான்றுகளைக்கொண்டு விளக்கி உள்ளார்.

(ii)‘வேங்கடத்தை ஆண்ட அரசர்கள்’ என்ற தலைப்பில் குறிப்பிடப்பெறும் அரசர்கள் திருவேங்கடத்தில் இருந்துகொண்டு அரசாளவில்லை என்று வற்புறுத்திக் கூறுவர்.

இரண்டாம் சொற்பொழிவு ‘இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம்’ என்பது. இத்தலைப்பில் இடைக்கால இலக்கியங்களான நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், வில்லிபுத்தூரார் பாரதம், கம்பராமாயணம் ஆகியவற்றில் வரும் வேங்கடம்பற்றிய குறிப்புகள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. சில எடுத்துக்காட்டுகள்:

(i)‘அசித்து’ எம்பெருமானுடைய படைப்பாதலால், மலையின் இயற்கைக் காட்சிகளை இதில் அடக்கி மூன்றாழ்வார்களின் பாசுரங்களில் வரும் இயற்கைக் காட்சிகளை விளக்குவார்.

(ii)குலசேகராழ்வார் திருவேங்கடத்தின்மீது கொண்டுள்ள கழிபெருங்காதல் அற்புதமானது. திருமலையில் உள்ள கேனேரியில் வாழும் குருகு, மீன், திருக்கோயிலில் உள்ள பொன்வட்டில், மலையிலுள்ள சண்பகமரம், தம்மகம், மலைநெறி, கருவறையில் உள்ள வாயிற்படி இவற்றில் யாதேனும் ஒன்றாக இருக்கும் வாய்ப்புப்பெற வேண்டுகிறார். ஒவ்வொன்றுக்கும் உள்ள குறைகளை நினைத்து அவற்றைத் தவிர்த்து, ‘எம்பெருமான் பொன் மலையில் ஏதேனும் ஆவேனே’ என்று கூறுகின்றார்.

(iii)இங்ஙனமே திருமழிசையாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்களின் அநுபவங்களை நயமாக எடுத்துக்கூறுவார்.

(iv)நம்மாழ்வாரின் திருவேங்கடம்பற்றிய பாசுரம் வைணவ தத்துவமாகிய பிரபத்திய நெறியை விளக்குவதாக எடுத்துக்காட்டுவார்.

(v)ஆழ்வார் பெருமக்கள் அகப்பொருள் தத்துவத்தைக் குழைத்துக்காட்டும் அருமைப்பாட்டைத் தெளிவாக்குவார்

‘ஞானத்தில் தம் பேச்சு
பிரேமத்தில் பெண் பேச்சு’

என்ற ஆசார்ய ஹிருதயத்தின் சூத்திரத்தை எடுத்துக்காட்டி வியக்குவார்.

(vi)கம்பராமாயணத்தில் வேங்கடத்தைப்பற்றிய ஒரு குறிப்பு வருகிறது. சுக்கிரீவன் தென் திசைக்கு ஏகும் வானர வீரர்களை நோக்கி ‘மலைக்கு எழுந்தருள வேண்டா; காரணம், அது முக்தியை அளித்து விடும். இதனால் இராமகாரியம் கெட்டுவிடும்’ என்று கூறுவான். இதனால் மலையினுடைய பெருமை காட்டப்படுகிறது.

(vii)வில்லிபாரதத்தில் அருச்சுனன் தீர்த்த யாத்திரை சருக்கத்தில் அரவக்கிரியைச் சார்ந்ததாக உள்ள குறிப்பைத் தவிர வேறு செய்தி இல்லை.

மூன்றாம் சொற்பொழிவில் திருவேங்கடத்து மீதெழுந்த (அ) திருவேங்கடத்தந்தாதி (ஆ) திருவேங்கடமாலை (இ) திருவேங்கடக் கலம்பகம் (ஈ) சேடமலைப்பதிற்றுப் பத்தந்தாதி (உ) திருவேங்கட புராணம் என்ற நூல்கள் பற்றிய விளக்கம் அமைகின்றது.

(i)திருவேங்கடமலை வானுலகத்திற்கும், மண்ணுலகத்திற்கும் இடையில் இருப்பதாகவும், அதனால் மண்ணோரும், விண்ணோரும் வழிபடுவதற்கு ஏற்புடையதாக இருக்கிறதென்றும் கூறி மலையின் உயர்ச்சியை விளக்குவார்.

(ii)வேங்கடமலையின் சிறப்பினைத் திவ்வியகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் பாசுரங்களைக்கொண்டு விளக்குவார். இப்பகுதியில் பன்னிரு ராசிகளை மேடம், இடபம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்றவை மலையின் உயரத்தை விளக்கும் பாங்கைப் புலப்படுத்துவார். எடுத்துக்காட்டாக ‘திருமலையில் ஓங்கி வளர்ந்திருக்கும் மூங்கிலுக்கு நேராக சுறாவடிவம் போன்ற மகராசி வந்து பொருந்துங்கால் அது கம்பத்தின்மீது நடக்கும் கழைக்கூத்தைப்போல் திகழ்கிறது. திருமலையின் மீதுள்ள கோனேரியில் மீன் பிடிக்கக்காத்திருக்கும் கூனல் இளவெண்குருகு ஒன்று வானத்தில் செல்லும் மீன்வடிவமான மீனராசியின் நிழல் நீரில் தெரியக்கண்டு அதனை உண்மையான மீனென்று கொத்தி ஏமாந்து போகிறது. இதில் ஒளிமுறிவு (Refraction) என்ற அறிவியல் விதி பொருந்தியிருப்பது கவனிக்கத்தக்கது.

(iii)திவ்விய கவி மாலவன் சிறப்பையும், மாலவன் குன்றத்தின் சிறப்பையும் பக்தியுடன் எடுத்துக்காட்டுவதை விளக்குவார்.

2)கலியன் குரல்: பேராசிரியர் ரெட்டியார், திருமங்கையாழ்வார் அண்ணாமலை நகர்க்கருகிலுள்ள திருநாங்கூர் திருப்பதிகள் அடங்கிய பகுதியில் வாழ்ந்தவராதலால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருமங்கையாழ்வார் படைத்த பனுவல்களைப் பற்றிப் பேச வேண்டும் என்று பல்லாண்டுகள் கனவு கண்டார். அக்கனவு பதினைந்து ஆண்டுகட்குப் பிறகு நனவாகியது. பல்கலைக்கழகத்தில் இருந்து சொற்பொழிவுக்கு அழைப்பு வந்தது. திருமங்கையாழ்வார் பற்றி மூன்று பொழிவுகள் நிகழ்த்தினார். அவற்றிலடங்கிய சில கருத்துகள்:

(i)'திருமங்கையாழ்வார்' வாழ்க்கை அகச்சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

(ii)'திருநின்றவூர்' என்ற திவ்விய தேசம்பற்றிய பதிகமோ, பாடலோ இல்லாவிட்டாலும், 'நின்ற ஊர் நிதில்லத்தை' என்ற தொடர் இரண்டு பாடல்களில் வருகின்றது. இதுபற்றி உரைமன்னர் 'பெரிய வாச்சான் பிள்ளை' எடுத்துக்காட்டும் வரலாறு சுவையுடையதாகக் காணப்படுகிறது என்று கூறி விளக்கம் தருவது சுவையாக அமைந்துள்ளது.

(iii)திருமங்கையாழ்வார் கொள்ளைக்காரனாக வந்தபொழுது திருமணத் தம்பதியர் போல் வந்த நாராயணன்மூலம் 'வாள்வலியால் திருமந்திர உபதேசம்' பெற்றதையும், அம்மந்திரம் பிறந்த பதரி ஆசிரமத்திற்குத் திருத்தலப் பயணமாக சென்றதும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

(iv)திருமங்கையாழ்வார் பாசுரங்களில் அமைந்துள்ள கற்பனை நயம், சொல்வளம், ஒலிநயம், யாப்பமைதி, இயற்கை வருணனை ஆகியவை எடுத்துக்காட்டப்பெற்று விளக்கப் பெற்றுள்ளன.

3) தமிழ் இலக்கியத்தில் அறம்,நீதி, முறைமை: இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் திருமதி கிருஷ்ணா சஞ்சீவி-திருமதி கண்ணம்மாள் நடேசன் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் (1986-87) திட்டத்தின்கீழ் நிகழ்த்தப்பெற்ற மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பு.

முதற்பொழிவு 'தமிழ் இலக்கியங்களில் அறம்' என்பது பற்றியது. இதில்,

(i)'அறம்' மிக விரிந்த பொருளில் அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குவார்.

(ii)அகப்பொருளில் ‘அறம்’ என்பதற்குச் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள் போன்றவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகள் தரப்பெற்றுள்ளன.

(iii)புறப்பொருளில் ‘அறம்’ என்பதற்கு வள்ளுவத்தில், சிலம்பில் அறம் - வகையும், தொகையும் என்றெல்லாம் விளக்குவார். மனத்தின்கண் மாசு இல்லாமல் இருப்பதே சிறந்த அறம் என்றும் விளக்குவார்.

(iv)புறப்பொருளில் இல்லறவியல், துறவறவியல் என பாகுபாடு செய்து இல்லற இயலை நான்கு பகுதியாக வகுத்துக்கொண்டும், துறவறவியலை இரண்டு பகுதிகளாக வகுத்துக்கொண்டும் பல்வேறுபட்ட இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார்.

‘தமிழ் இலக்கியங்களில் நீதி’ என்பது இரண்டாவது சொற்பொழிவு. இதில் அடங்கியுள்ள சில கருத்துகள்:

(i)அரசனின் இன்றியமையாமைபற்றி பரிமேலழகரின் உரைகொண்டு விளக்குவார். செங்கோண்மை, நாட்டின் பொருள்வளம் போன்ற செய்திகள் இங்கு விளக்கப்பெற்றுள்ளன.

(ii)சேர, சோழ, பாண்டிய அரசர்கள் நீதி வழங்கியமுறை பல எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்படுகிறது.

(iii)இறைபெறும் நெறியைக்குறித்து வள்ளுவர் கருத்தையும், அறங்கூறு அவயம்மூலம் நெறிவழங்கும் முறையையும், மனுதர்மமும் வள்ளுவர் அறமும் என்பதையும், பொய்கறிபுகல்வோருக்குச் சதுக்கப்பூதம் வழங்கும் தண்டனையும் தெளிவாக விளக்கப்பெறுகின்றன.

‘தமிழ் இலக்கியங்களில் முறைமை’ என்பது மூன்றாவது பொழிவு. இதில் அடங்கய சில கருத்துகள்:

(i)முறைமை பற்றிய பல்வேறு கருத்துகள் சிலம்பு, மணிமேகலை, கம்பராமாயணம் இவற்றிலிருந்து எடுத்துக்காட்டுகள் தரப்பெற்றுள்ளன.

(ii)முறைக்கும், முறைமைக்கும் உள்ள மாறுபட்ட கருத்துகள் தெளிவாக்கப்பெற்றுள்ளன.

(iii)நீதி என்ற சொல் முறைமை என்ற பொருளில் வருவது குறித்து சில எடுத்துக்காட்டுகள் தரப்பெற்றுள்ளன.

(iv)ஊழ்செயற்படுதல், அண்டங்களின் ஒழுங்குமுறைபற்றிய கருத்துகள் தெளிவாக விளக்கப்படுகின்றன.

(v)பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், ஈட்டாசிரியர் இவர்கள் முறைபற்றி விளக்குவது தெளிவாக்கப்பெற்றுள்ளது.

(vi)‘வள்ளுவரின் ஊழ்’ - இதில் முறைமைபற்றிய விளக்கம் தரப்பெற்றுள்ளது.

(vii)காவியங்களில் ஊழ் கையாளப்படும் முறையும், முறைமையும் தெளிவாக்கப்பெறுகின்றன.

(viii)திக்கற்றவர்களின் கண்ணீர் அனைத்தையும் அழிக்கும் ஆற்றல் படைத்தது என்பதைப் பாவேந்தரின் அமுதவல்லி-உதாரன் வரலாற்றில் கண்ணீரின் ஆற்றல் செயற்படுவதை எடுத்துக்காட்டி விளக்குவது தனிச்சிறப்பு.

<u>4)ஆழ்வார்களின் ஆரா அமுது:</u> இந்நூல் திருவேங்கடவன் பல்கலைக்கழக விரிவுச் சொற்பொழிவு திட்டத்தின்கீழ் திருப்பதியைச் சுற்றியுள்ள பல சிற்றூர்களில் நிகழ்த்தப்பெற்ற ஆறு சொற்பொழிவுகளின் தொகுப்பாகும். 26.1.67ல் பாக்காலா தமிழ்ச்சங்கத்தில் ஆண்டாள் பாசுரங்களைப்பற்றி ‘ஞானப் பூங்கொடி’ என்ற தலைப்பிலும், இதே திட்டத்தின்கீழ் 2.7.67ல் ஏகாம்பரகுப்பம் என்ற சிற்றூரில் உள்ள கழக உயர்நிலைப்பள்ளியில் ‘பாணாகுலவிளக்கு’ என்ற தலைப்பில் திருப்பாணாழ்வார்பற்றியும், 5.2.67ல் பாக்காலா தமிழ்ச்சங்கத்தில் ‘மூவர் இயற்றிய மொழிவிளக்கு’ என்ற தலைப்பில் முதலாழ்வார்கள்பற்றியும், 31.3.68ல் குண்டக்கல் தமிழ்ச்சங்கத்தில் ‘தொண்டரடிப்பொடிகள்’ என்ற தலைப்பில் தொண்டரடிப் பொடியாழ்வார் பற்றியும் ஐந்துசொற்பொழிவுகள் நிகழ்த்தினார். 30.10.1969ல் கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கத்தில் ‘குலசேகரப் பெருமாள்’ என்ற தலைப்பில் குலசேகராழ்வார் பற்றி நிகழ்த்தப்பெற்ற சொற்பொழிவும் இத்தொகுப்பில் அடங்கியுள்ளது.

‘நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - நம்மாழ்வார் தத்துவம்’ என்ற தலைப்பில் பேராசிரியர் தம் பிச்.டி. பட்டத்திற்கு ஆய்வு நடத்திய காலம் இது. ஆதலால் ஆழ்வார் பாசுரங்களின் பக்திச்சுவையையும் அவை படிப்போரை பக்தியின் கொடுமுடிக்கு இழுத்துச் செல்வதையும், இடைஇடையே பாசுரங்களின் சொல்வளம், வைணவ உரையாசிரியர்கள் குறிப்பிடும் பாசுர நயங்கள் போன்ற கருத்துகள் தெளிவாக

விளக்கப்பெறுகின்றன. பின்னிணைப்பு இரண்டில் காட்டப்பெற்றுள்ள இந்த ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்கள்பற்றிய குறிப்புகள் ஆய்வு மாணவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கனவாக அமைந்துள்ளன.

5)பரணிப் பொழிவுகள்: இப்பொழிவுகள் பேராசிரியர் முன்னின்று நிறுவிய பாக்காலா தமிழ்ச்சங்கத்தில் நிகழ்த்தப்பெற்ற பொழிவுகளின் தொகுப்பு. பாக்காலா இருப்பு ஊர்தி சந்திப்பில் பல்வேறு மட்டங்களில் பணி ஆற்றிவந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் இலக்கியச் சுவையை நுகரும்பொருட்டு இச்சிறிய காவியத்தை அவர்களுக்கு அறிமுகம்செய்யும் பாங்கில் அமைந்தன இச்சொற்பொழிவுகள். இவற்றிலுள்ள சில கருத்துகள்:

(i)சிற்றிலக்கியங்கள் வளர்ந்த வரலாற்றைக்கூறி அவற்றில் ஒன்றாகிய பரணியை விளக்கி, கலிங்கத்துப்பரணி என்ற சிறு காவியத்தை அறிமுகம் செய்வதாக அமைந்தது.

(ii)இந்தச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்று கூறும் மரபை எடுத்துக்காட்டி, இவையாவும் தொல்காப்பியர் கூறும் ‘விருந்து’ என்ற தலைப்பில் அடங்கும் என்று விளக்கப்பெற்றுள்ளது.

(iii)நூலைப்பற்றி பருந்து நோக்காக எல்லா இயல்களையும் எடுத்துக் காட்டும்போக்கில் அமைந்துள்ளது இப்பொழிவு.

(iv)‘கடைத்திறப்பு’ என்ற பகுதியில் ஆசிரியர் கூறும் அகப்பொருள்பற்றிய சொல்லோவியங்கள் சிறப்பாக விளக்கப்படுகின்றன.

(v)‘பேய்கள் உலகம்’ பற்றிய குறிப்புகள், வரலாற்று குறிப்புகள், பிறிதோர் இடத்தில் விளக்கப்பெற்றுள்ளன.

(vi)ஐந்தாம் சொற்பொழிவு ‘பரணி காட்டும் சுவைகள்’ பற்றியது. சுவைபற்றிய உரையாசிரியராகிய பேராசிரியர் கூறும் விளக்கத்தையும், வடமொழிவாணர்கள் கூறும் ஸ்தாயிபாவம், சஞ்சாரிபாவம் போன்ற சுவை பற்றிய கருத்துகளையும் ஒப்பிட்டு விளக்கி இருப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

(vii)‘சுவைகளின் தோற்றம்’பற்றி தொல்காப்பியர் கூறுவதையும் வடமொழிவாணர்கள் கூறுவதையும் ஒப்பிட்டு விளக்கும் திறம், நுண்மான் நுழைபுலத்ததாக அமைந்துள்ளது.

(viii)வடமொழிவாணர்கள் கூறும் விபாவம், அநுபாவம், சஞ்சாரிபாவம் என்பவையும், ஆலம்பனவிபாவம், உத்தீபன விபாவம் பற்றிய கருத்துகளும் தெளிவாக்கப்பெற்றுள்ளன. இவற்றைத் தொல்காப்பியர் கூறும் முதற்பொருள், கருப்பொருள் இவற்றுடன் ஒப்பிட்டு விளக்குவது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

(ix)துஷ்யந்தன், சகுந்தலை மனதில் எழும் காதல்-சோகம், துஷ்யந்தன் நாடகத்தை நடிக்கும் நாடக மாந்தர்களின் மனத்தில் எழும் காதல்-சோகம், நாடகத்தைப் படிப்போர் மனதில் எழும் காதல்-சோகம் இவற்றுள் மூன்றாவதாக கூறப்பெறும் நாடகத்தைப் பார்ப்போர் மனத்தில் எழுவதே சுவை என்று வடமொழிவாணர்கள் கருதுகின்றனர் என்பதை அற்புதமாக விளக்குவார்.

(x)உலகியல் நிகழ்ச்சிகள் சுவை அன்று. இலக்கியம், நாடகம் முதலிய இலக்கியங்களிலிருந்து தோன்றுவதே சுவையாகும் என்று விளக்குவார்.

(xi)கலிங்கத்துப் பரணியிலுள்ள பாடல்களை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு பல்வேறு படிமங்களை விளக்கி இருந்தால் இந்நூலில் இப்பொழிவுகள் மிகச்சிறப்பாக அமைந்திருக்கும் என்பது இவ்வாய்வாளரின் கருத்து.

<u>6)புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் -ஒருகண்ணோட்டம்:</u>

இது புதுவைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பெற்ற அறக்கட்டளைச் சொற்பொழிவாகும். பாரதியாருடைய பாடல்கள் தேசிய கீதங்கள், தோத்திரப்பாடல்கள், வேதாந்தப்பாடல்கள், பலவகைப்பாடல்கள், சுயசரிதை, கண்ணன்பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு, வசன கவிதைகள் என்ற பகுப்புகளிலிருந்து பல நயமான கருத்துகளை இலக்கியச் சுவை ததும்ப கூறுவது இந்நூல். இதில் அடங்கியுள்ள சில கருத்துகள்:

(i)நாட்டுப்பற்றுக் கனல் பாரதியிடம் திகழ்ந்ததைப் பல எடுத்துக் காட்டுகளுடன் காட்டப்பெற்றுள்ளது.

(ii)பாரதியாரின் தமிழ்ப்பற்று, பாப்பா பாடலிலிருந்து பாவலர் போற்றும் பாடல்கள் வரையிலுள்ள பாடல்களில் பொதிந்துள்ளது என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டுவார் பேராசிரியர்.

(iii)ஆங்கிலக் கல்விபற்றிய பாரதி கூறும் கருத்துகள் பேராசிரியர் ரெட்டியார்க்கு உடன்பாடில்லை. சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு

மேலாகியும், நம் நாட்டுக்கேற்ற கல்விமுறையை வகுக்க முடியாத பரிதாப நிலையைக் காண முடிகிறது. பழைய ஆங்கிலக்கல்வி முறையில் சில ஒட்டு வேலைகள் செய்கின்றனரே அன்றி, அதனை அடியோடு அகற்றிட புதுக்கல்வி ஏற்பாட்டினை வகுக்கவில்லை. ‘வார்தா’ கல்வி முறையும், ராஜாஜி கொண்டு வந்த குலமுறை கல்விமுறையும் ஆங்கில கல்விமுறையை தகர்த்தெறிய இயலவில்லை. அவைதாம் நம் நாட்டில் செல்லாக் காசாயின என்பன பேராசிரியர் கருத்துகள். இன்று எம்மருங்கும் ஆங்கிலம் மூலம் கல்வி புகட்டும் பள்ளிகள், நர்சரி பள்ளியிலிருந்து தோன்றுவதைக் காண முடிகிறது.

(iv)அறிவியல் கல்விக்கு பாரதியார் அதிக முக்கியத்துவம் காட்டுவதைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுவார். நாடு விடுதலை பெற்ற பிறகு அறிவியல் கல்வியில் அதிக நாட்டம் செலுத்தப் பெறுகின்றது. ஆரியபட்டா, பாஸ்கரா, ஆப்பிள், இன்சாட் போன்ற விண்கலங்களை விண்வெளியில் செலுத்தி உலகப் புகழ் பெற்றனர் நம் நாட்டு அறிவியல் அறிஞர்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் போற்றுவார் பேராசிரியர்.

(v)தொழிற்கல்வி, பெண்கல்வி, புதுமுறைக்கல்வி போன்ற போக்குகளில் பாரதியார் உற்சாகம் காட்டுவதை உவப்புடன் எடுத்துக்காட்டுவார்.

(vi)பாரதியை வைணவச் செல்வராகவும், சீவன்முத்தராகவும் எடுத்துக்காட்டுவார். வைணவத் தத்துவமாகிய நவவித சம்மந்தத்தை கண்ணன் பாட்டிலிருந்து எடுத்துக்காட்டுவது ஒரு சிறந்த ஆய்வுக் குறிப்பு.

<u>7)தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்</u>: இஃது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் செ.அரங்கநாயகம் அறக்கட்டளைச் சொற்பொழிவாக அமைந்தது. இது இரண்டு பொழிவுகளின் அடக்கம். ஒன்று, ‘தமிழில் அறிவியல் அன்று’ என்பது; மற்றொன்று, ‘தமிழில் அறிவியல் இன்று’ என்பது. முன்னது தமிழ் இலக்கியக் கடலில் மூழ்கி முத்தெடுத்ததுபோல் கல்வியியல், அறிவியல் அறிஞர்கள், வானஇயல், வானியல், இயற்பியலும் வேதியலும், உளவியல், உயிரியல், மருத்துவ இயல், கணித இயல், வேளாண்மை இயல் இவை பற்றிய கருத்துகள் பொதிந்துள்ள இடங்களெல்லாம் தெளிவாக எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படுகின்றன. இரண்டாவது பேராசிரியர் பல துறை அறிவியலைக் கற்றவராதலால் முன் பொழிவில் சுட்டப் பெற்ற பத்து கருத்துகளையும் இன்றைய அறிவியலோடு இணைத்து விளக்குவதாகும்.

(இ)அறிவியல் படைப்புகள்

மேற்புல அறிஞர்கள் அறிவியலை ஆய்ந்து எண்ணற்ற நூல்களைப் படைத்துள்ளனர். அவை போன்ற நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும் என்பது பேராசிரியரின் விருப்பம். ‘புத்தம் புதிய கலைகள்’ தொடக்கத்தில் மொழிபெயர்ப்பு நூலாகவும், பின்னர் முதல் நூலாகவும் தோன்ற வேண்டும். தமிழில் இலக்கியச் செல்வத்திற்குக் குறைவில்லை. ஆனால் ஆங்கில மொழியில் அமைந்திருக்கும் ‘மொழிச்செல்வம்’, தமிழில் வரண்டு கிடக்கிறது. இதை நிவர்த்தி செய்வதற்கு ஒரு சில நூல்களை பேராசிரியர் படைத்துள்ளார். இராமர் கட்டிய சேதுவுக்கு ஒரு அணில் செய்த பங்கைப்போல, தாம் இப்பணியைச் செய்ததாக அடக்கத்துடன் கூறிக்கொள்வார்.

<u>(1)மொழிபெயர்ப்பு நூல்கள் (அறிவியல்):</u> (i) அணுக்கரு பௌதிகம், (ii) யுனெஸ்கோ அறிவியல் பயிற்றலில் மூல முதல்நூல், (iii) மானிட உடல்.

இம்மூன்று நூல்களை நோக்குங்கால், அவை முதல் நூலாகவே தோற்றமளிக்கும். ஆங்கில சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களும், அவற்றின் சொற்றொடருக்கு நேரான தமிழ்ச் சொற்றொடர்களும், ஆங்கில மரபுத் தொடருக்கு நேரான தமிழ் மரபுத் தொடர்களும் மிகக் கவனமாக கையாண்டிருப்பதை இந்நூல்களில் காணலாம். இவைபற்றிய கருத்துகள் பிறிதோர் இடத்தில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன.[6]

<u>(2)முதல் நூல்கள்:</u> (i) இளைஞர் வானொலி, (ii) இளைஞர் தொலைக்காட்சி, (iii) அதிசய மின்னணு, (iv) நமது உடல், (v) இராக்கெட்டுகள், (vi) அம்புலிப்பயணம், (vii) தொலை உலகச் செலவு, (viii) விண்வெளிப்பயணம், (ix) வாழையடி வாழை, (x) இல்லற நெறி, (xi) அறிவியல் விருந்து, (xii) அணுவின் ஆக்கம்.

முதல் நூலைப்பற்றி நன்னூல்,

> **‘வினையினீங்கி விளங்கிய வறிவின்**
> **முனைவன் கண்டது முதனூலாகும்’**[7]

என்ற நூற்பாவால் விளங்கும். இதனால் ‘இராமன் விளைவுகள்’ (Raman’s Effect) என்ற தலைப்பில் சர்.சி.வி.இராமனும், ஒப்பு நோக்குக் கொள்கை (Thoery of Relativity) பற்றி அறிவுலக மேதை ஐன்ஸ்டைனும்

எழுதியவையும், அணுவைப்பற்றிப் பல்வேறு கண்டுபிடிப்புகளை முதன் முதலாக தெரிவித்த அறிஞர்கள் எழுதிய நூல்களையும் முதல் நூலாகக் கொள்ள வேண்டும். ஆயினும், இந்த நூல்களைப்பற்றிப் பல்வேறு அறிவியல் அறிஞர்கள் தம் வாக்கினால் விளக்கும் நூல்களை சார்பு நூல்கள் என்று கொள்ளலாம் என்பது நன்னூலார் கருத்து. ஆங்கிலத்தில் இத்தகைய நூல்கள் எண்ணற்றவையாகத் தோன்றியுள்ளன. ஜப்பான், இரஷ்யா போன்ற நாடுகளில் உள்ள அறிவியல் அறிஞர்கள் தம் மொழியிலேயே பல முதல் நூல்களைப் படைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, 'பெட்ரன்ட் ரசல்' என்பார் எழுதிய 'அணு அரிச்சுவடி' (ABC of Atoms)யை கொள்ளலாம். இங்ஙனமே, பேராசிரியர் முதல் நூலென்று மேலே குறிப்பிட்ட நூல்களைத் தம்முடைய சொந்தமொழியில் எழுதிய முதல் நூல்கள் தமிழைப் பொருத்தமட்டிலும் இவற்றை முதல் நூல்களாகவே கொள்ளவேண்டும்.

<u>(ஈ)பணியில் இருக்கும்பொழுது உருவான கல்வியியல் பற்றிய நூல்கள்</u>

பேராசிரியர் ரெட்டியார் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார். இக்காலத்தில் நான்கு நூல்கள் முதல் நூல்களாகப் படைத்துள்ளார். அவை தமிழ்ப்பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை (இயற்பியல், உயிரியல் உட்பட) கல்வி உளவியல், கவிதைப் பயிற்றும்முறை என்பவையாகும். கல்வி உளவியல் பற்றியும், தாய்மொழி கற்பித்தல் பற்றியும் எண்ணற்ற நூல்கள் உள்ளன. அவற்றில் பலநூல்களைத் தேர்ந்தெடுத்துப் பயின்று, அவற்றிலுள்ள கருத்துகளை வகுப்புகளில் கையாண்டு பல்லாண்டுகளில் உருவாகியவை இந்நூல்கள். தமிழ் பயிற்றும்முறை உருவாகுவதற்கு <u>ஆறு</u> ஆண்டுகள் ஆயின என்றும், கல்வி உளவியல் எழுதி முடிப்பதற்கு <u>மூன்று</u> ஆண்டுகள் ஆயின என்றும், அறிவியல் பயிற்றும் முறை என்ற நூலைப் படைப்பதற்கு <u>ஓராண்டு</u> ஆயிற்றென்றும் பேராசிரியரே கூறியுள்ளார்.

இம்மாதிரிப் பணியில் இருந்துகொண்டே தம்முடைய கற்பித்தல் பற்றிய பட்டறிவைக்கொண்டு நூல் படைத்தோர்களில் இருவர் இந்த ஆய்வாளரின் கவனத்திற்கு வருகின்றனர். பேராசிரியர் மு.வ. அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ.வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது தம் அநுபவத்தைக்கொண்டும், ஆழ்ந்து அகன்ற படிப்பைக்கொண்டும், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத்திறன், இலக்கிய மரபு என்ற மூன்று திறனாய்வு நூல்களையும், மொழியியல், மொழி வரலாறு என்ற மொழிபற்றிய இரண்டு நூல்களையும் எழுதி ஆசிரியர்

உலகிற்கும், மாணவர் உலகிற்கும் வழங்கினார். அங்ஙனமே அதே பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய அ.ச.ஞானசம்பந்தம் அவர்களின் அற்புதப்படைப்பு 'இலக்கியக் கலை' என்பது. இவை இதழ்களில் வந்த கட்டுரைகளின் தொகுப்பு. இங்ஙனமே பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் அவர்கள் காரைக்குடியில் பணியாற்றியபொழுது 'தமிழ்ப்பயிற்றும் முறை', 'அறிவியல் பயிற்றும் முறை', 'கல்வி உளவியல்', 'கவிதைப் பயிற்றும்முறை' என்ற நான்கு நூல்கள் உருவாயின. திருப்பதியில் பணியாற்றிய காலத்தில் எம்.ஏ. மாணவர்களுக்குக் கற்பித்தபோது தம்முடைய அநுபவத்தையும், ஆழ்ந்த அகன்ற படிப்பையும் பயன்படுத்தி 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை', 'அகத்திணைக் கொள்கைகள்' என்ற இரு ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். இவை இன்று தமிழ் எம்.ஏ. பயிலும் மாணவர்களிடம் புழக்கத்தில் உள்ளன.

(உ)மெய்ப்பொருளியல் படைப்புகள்

பேராசிரியர் ரெட்டியார் திருப்பதியில் பணியாற்றியபொழுது பிஎச்.டி. ஆய்வுக்குப் பதிவு பெற்றுக்கொள்ளுதற்கு கால் நூற்றாண்டு முயற்சி செய்து அந்த முயற்சியின் விளைவாக பிஎச்.டி. ஆய்வுக்குப் பதிவுபெற்றார். வேங்கடவன் அருள் ஆட்சி நடைபெறும் புண்ணய தலத்திற்கு ஏற்பவும், வடமொழித்துறையில் பணியாற்றி வந்த துணைப் பேராசிரியர் டாக்டர் வி.வரதாசாரியாருடைய இயல்புக்கேற்பவும் 'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் - நம்மாழ்வாரின் தத்துவம்' என்ற பொருளை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு ஐந்தாண்டுகள் ஆராய்ந்தார். இதனால் வைணவம்பற்றிய தத்துவத்தைப் பயில்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பின் டாக்டர் பட்டமும் பெற்றார். இவர் மாணவர் ஒருவருக்கு வழிகாட்டியாக அமையும்பொழுது அந்த மாணவர் 'தாயுமானவர் பாடல்' பற்றி ஆய்ந்தார். இதனால் சைவசமய நூல்களையும், சைவ சமயத்தில் உள்ள பதினான்கு சாத்திரங்களையும் பயில நேர்ந்தது.

இவருடைய பிஎச்.டி. ஆய்வு நூல் சற்றேறக்குறைய ஆயிரம் பக்கங்களில் அமைந்து பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்தது. பல்கலைக் கழகத்தில் ஆய்ந்த பொருள், பொதுமக்களுக்குப் பயன்படும் பல நூல்களாக வெளி வர வேண்டும் என்பது பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் விருப்பம். இக்கருத்தைச் செயல்படுத்தியவர் பேராசிரியர் ரெட்டியார்.

பணியில் இருந்தபொழுதே 'மலைநாட்டுத் திருப்பதிகள்', 'தொண்டை நாட்டுத்திருப்பதிகள்', 'பாண்டிநாட்டுத் திருப்பதிகள்' உருவாகின. இவை

தவிர இவர் முன்னின்று நிறுவிய மூன்று தமிழ்ச்சங்கங்களில் இவருடைய ஆய்வுக் கருத்துகளைச் சொற்பொழிவுகளாக பொதுமக்களிடம் நிகழ்த்தினார்.

ஓய்வுபெற்ற பிறகு (அக். 1977) சென்னைக்கு வந்து குடியேறினார். இக்காலத்தில்தான் சமய நூல்கள் பல வெளிவந்தன; வெளிவந்தும் கொண்டிருக்கின்றன. இவற்றுள் சில இக்கட்டுரையில் மேலே குறிப்பிடப் பெற்றுள்ளன. இவை தவிர (1) விட்டு சித்தன் விரித்த தமிழ், (2) சடகோபன் செந்தமிழ், (3) பரகாலன் பைந்தமிழ், (4) நாவுக்கரசர், (5) ஞானசம்பந்தர், (6) தம்பிரான் தோழர், (7) மாணிக்கவாசகர் என்ற நூல்களைக் குறிப்பிலாம்.

(ஊ)மொழிபெயர்ப்பு படைப்புகள் (இலக்கியம்)

இத்தலைப்பின் கீழ் இந்நூல்களை அடக்கலாம்:

(i) வேமனர் ... தெலுங்கு
(ii) குரஜாடா ... தெலுங்கு
(iii) சி.ஆர்.ரெட்டி ... தெலுங்கு

இவை ஆங்கில மொழி மூலம் சாகித்திய அகாடமியால் அறிமுகப் படுத்தப்பெற்றவை. இவற்றைப் பேராசிரியர் மொழிபெயர்க்கும்போது வாசகர்கள் முதல்நூலாகவே கருத வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டு மொழிபெயர்த்தவை. இந்த நூல்களில் உள்ள தெலுங்குப் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பெற்றவை. போரசிரியர் மிகக் கவனமாக இவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கும்பொழுது அவற்றைத் தமிழ் மரபுக்கேற்ற முறையில் மொழிபெயர்த்திருப்பது கவனிக்கத்தக்கது. இத்தகைய பாடல்களின் மொழிபெயர்ப்பை பிறிதோர் இடத்தில்[8] காணலாம். ஆகவே, மொழிபெயர்ப்பில் மிக்க கவனம் செலுத்த வேண்டும் என்பது பேராசிரியரின் செயலால் தெளிவாகின்றது. இப்பணி தமிழ் மேம்பாட்டிற்குச் செய்யப்பெறும் சிறந்த பணியாகும். இவ்விடத்தில் வால்மீகி எழுதிய இராமகாதையைத் தமிழ்மொழியினுடைய மரபு கெடாது தமிழுக்குக்கொணர்ந்த கம்பன் படைப்பை நினைவுகூறலாம். ஆனால், அவன் படைப்பை மொழிபெயர்ப்பு என்று கூறலாகாது; அதனை ஓர் ஒப்பற்ற தமிழ்ப்படைப்பு என்றுதான் கருதவேண்டும்.

(எ)பயண இலக்கியத் தமிழ்

பயண இலக்கியத் தமிழில் வைணவத்தில் ஆறும், சைவத்தில் நான்குமாக படைத்துள்ளார். இந்த நூல்கள் பக்தியின் அடிப்படையாக

அமைந்தவையாதலால் இந்நூல்களின் போக்கே தனித்தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது. நூலைப்படிப்போர் செய்திகளைத் தெரிந்து கொள்வதுடன் தாம் புராணக் காலத்திற்குச் செல்வதுபோலவும், நிகழ்ச்சிகள் நடந்த காலத்திற்குச் செல்வது போலவும், பாடல்களின் விளக்கத்தை அறியும்போது பக்தியின் கொடுமுடியை எட்டுவதுபோலவும், சிலசமயம் இறைவனோடு இரண்டறக் கலப்பது போன்ற உணர்வுகளை அடைவதுபோலவும் வாசகர்கள் அநுபவிக்கின்றனர். பக்தி இலக்கியப் பயண நூல்களை முதல்முதலாக எழுதியவர் இவரே. இம்முறையில் இவர் தமிழ் இலக்கிய மேம்பாட்டை வளமுடையதாக ஆக்கியவர் ஆகின்றார்.

(ஏ)திறனாய்வுத் தமிழ்

தமிழில் திறனாய்வு நூல்கள் மிக அரியனவே ஆகும். உரையாசிரியர்கள் தம் உரையில் சில திறனாய்வுக் கருத்துகளை ஆங்காங்கு தூவியிருந்தபொழுதும், தனித் திறனாய்வு நூல்கள் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆங்கிலத்தில் திறனாய்வு நூல்கள், திறனாய்வு நூல்கள்பற்றிய திறனாய்வு நூல்கள் எழுந்தனபோல் தமிழில் எழவில்லை. ஆனால் சில திறனாய்வு நூல்களில், டாக்டர் பட்டத்திற்கு ஆராயும் மாணவர்களின் திறனாய்வுக் கூறுகள் தோன்றியிருத்தலைக் காணமுடிகிறது. திறனாய்வுத் துறையில் டாக்டர் மு.வ., பேராசிரியர் அ.சா.ஞானசம்பந்தன், கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் போன்றவர்கள் சில படைப்புகளைச் செய்துள்ளார்கள். ஆனால் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் எண்ணிக்கையில் சில நூல்கள் அதிகமாக செய்துள்ளார் எனக் கருதலாம். இம்முறையில் தமிழ்வள மேம்பாட்டிற்கு இவரது தொண்டு கணிசமான அளவிற்குப் பெருகியுள்ளதாக இவ்வாய்வாளர் கருதுகிறார்.

முடிவு

பேராசிரியர் பலதுறை அறிவினர். கல்லூரியில் கணிதம், வேதியல், இயற்பியல் பயின்றவர். பணியில் ஈடுபட்டபிறகு மிகுந்த ஆர்வத்துடன் முறையாகக் கற்ற துறைகள் அறிவியல், விண்வெளியியல், உயிரியல், கால்வழியியல், தத்துவ இயல்; பயிற்சிக் கல்லூரியில் பணிபுரியும் வாய்ப்பு நேரிட்டதால் கல்வியியல், கல்வி உளவியல் போன்ற துறைகளைப் பயில நேரிட்டது. ஆகவே, இந்தப்பின்னணியில் இவர் படைத்த நூல்கள் பலதுறை வாய்ந்தனவாக அமைந்தன. பலதுறைவாய்ந்த அறிஞர்கள் பலர் நம்நாட்டில் உள்ளனர். அவர்கள் பிற துறை அறிவினைத் தமிழில் வார்த்துக்காட்டிற்றிலர். இந்நிலையில் சமயத் தொண்டாற்ற வந்த மேனாட்டுப் பாதிரியார்கள் தமிழுக்குச்

செய்த தொண்டு போலவும், நம்நாட்டுச் சமயப் பெரியார்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு போலவும், அவர்கள் கொண்ட உணர்வைப்போல் பேராசிரியரும் கொண்டிருந்ததனால் பல நூல்கள் தமிழுக்கு வர நேர்ந்தன.

'என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே'[9]

என்ற திருமூலரின் அருள்மொழியை தம் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் பல துறையில் பல நூல்கள் தோன்றிய நிலையில் உள்ளன. இந்நிலையில் இவருடைய அருமை மாணாக்கர் டாக்டர் அர.சிங்காரவடிவேலன் எழுதியுள்ள

'ஆழ்வார்கள் பாசுரத்தில் மூழ்கிமூழ்கி
ஆழங்கால் படுவதவர் பிறவிப் பேறு;
வாழ்விக்கும் கருவிதரு விஞ்ஞானத்தில்
வாய்த்திருக்கும் பேரறிவு கல்விப்பேறு;
ஆழ்வாரில் தலைமணியாம் நம்மாழ்வாரை
அருகணைய வாய்த்ததுவோ ஆய்வுப்பேறு;
பால்வார்க்கும் தாய்போலத் துறைகள் தோறும்
பலநூல்கள் அவர்யாத்தல் தமிழர் பேறே'

என்ற கவிதையை ஈண்டு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

<u>**அடிக்குறிப்புகள்:**</u>

1. நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் காட்டும் நூற்பா பகுதி.
2. நன்னூல், நூற்பா 36
3. திரு.மந். 1158
4. சைவசமய விளக்கு, நூல்முகம்
5. ஆய்வுத் தமிழ், இயல் 7 : இந்நூல்
6. இவ்வாய்வேடு : பகுதி4, இயல் 8
7. நன்னூல், பொதுப்பாயிரம், நூற்பா 9
8. இந்நூல் : இயல் 8
9. திருமந்திரம்
10. வட.வேங்.திரு.வேங். : சிறப்புப்பாயிர பாமாலை, பாடல் 6

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பகுதி ~ VII

இயல் - 14

ஆய்வு முடிவுகள்

பகுதி 7 :<>: இயல் – 14

ஆய்வு முடிவுகள்

பொதுவாகத் தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழ் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு போன்ற நூல்களையே படைப்பதை பழக்கமாகக் கொண்டுள்ளனர். பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் பலதுறை அறிவினராதலால் பல்வேறு துறைகளில் இலக்கியங்களைப் படைத்துள்ளார். தமிழ்மொழி வளம்பெற வேண்டுமானால் பல துறைச் செல்வங்கள் தமிழ் உரைநடையில் பெருக வேண்டும் என்பது பேராசிரியரின் குறிக்கோள். அப்பொழுதுதான் 'சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை' என்ற 'வசைமொழி' இல்லாது ஒழியும் என்பது பேராசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆங்கில உரைநடையில் உள்ளதுபோல் பல்வேறு துறை அறிவுகளைக் கொண்ட உரைநடைச் செல்வம் தமிழ்மொழியில் பெருக வேண்டும் என்பது பேராசிரியரின் பேரவா. இந்த அடிப்படையில் அவர் பணியாற்றியதை அவரே, இராமர் கட்டிய சேதுவில் ஒரு அணில் பங்கு போன்றதென்று அடக்கமாகச் சொல்லிக்கொள்வார். என்றாலும் இந்த ஆய்வாளர் அவர் பணியை மாபெரும் பணியாகக் கருதுவார். ஆகவே இவரின் நூல்களை ஆய்வுக்காக எடுத்துக்கொண்டார். இந்த ஆய்வின் அடிப்படையில் சில முக்கியமான ஆய்வு முடிவுகள் ஈண்டு பட்டியலிட்டுக் காட்டப்பெறுகின்றன.

<u>கல்வியியல் தமிழ்</u>:

1.கற்பித்தல் உளவியல் அடிப்படையில்தான் நடைபெற வேண்டும் என்பது பல இடங்களில் வற்புறுத்தப் பெறுகின்றது. பாடத்தை மையமாக்கொண்டு விளக்குவதைவிட, குழந்தையை மையமாக்கொண்டு விளக்குவதே சிறந்தது என்பது பேராசிரியர் வற்புறுத்தும் கருத்தாகும்.

2.மொழி பயிற்றலில் வாய்மொழி பயிற்சி, படிப்பு, எழுத்துப் பயிற்சி இவற்றின் இன்றியமையாமை வற்புறுத்தப் பெறுகின்றன.

3.கவிதை கற்பித்தலில் கவிதையை அநுபவிப்பதே முக்கியமென்பது பேராசிரியரின் அசைக்கமுடியாத கருத்தாகின்றது. பாடல்களைச் சிதைத்து இலக்கணக் குறிப்பு, சந்த நயம், யாப்பமைதி போன்றவற்றை நுகர்ச்சியின் உறுப்புகளாக்கொண்டு கற்பிக்க வேண்டும்.

4.உரைநடைகள் ஆங்கில உரையாசிரியர்களாகிய கோல்ஸ்மித், ஸ்டீல், அடிசன் போன்றவர்களின் படைப்புகளைப்போன்று நல்க வேண்டும்

என்பது பேராசிரியரின் விருப்பம். இந்த முறையில் நவீன எழுத்தாளர்கள் கல்கி, ஆனந்தவிகடன் போன்ற இதழ்களில் சுவையாக எழுதும் கட்டுரையாளர்கள், தமிழ் அறிஞர்கள் உயிரூட்டும் முறையில் நல்ல தமிழில் எழுத வேண்டும்.

5.அறிவியல் பயிற்றலில் செய்து காட்டல், சுற்றுலா, உயிர்காட்சிசாலை முதலியவற்றிற்கு மாணாக்கர்களை இட்டுச்செல்லுதல் முக்கியமாகும். சில காட்சிகளை படத்தின் மூலமும் காட்டப்பெற்று விளக்கப்பெற்றால் அவை வாழும் சூழ்நிலையை காட்டுவதாக அமையும் என்பதை வற்புறுத்துவர்.

<u>**அறிவியல் தமிழ் (இயற்பியல், உயிரியல்):**</u>

1.அறிவியல் தமிழ் வளர்ச்சியில் (இரண்டு வகையிலும்) முன்னோடிகளாக இருப்பவர்கள் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளனர்.

2.அறிவியலை இலக்கியத்துடனும், இலக்கியத்தை அறிவியலுடனும், அறிவியலை தத்துவத்துடனும், தத்துவத்தை அறிவியலுடனும் ஒப்பிட்டுக்காட்டி சுவைபட விளக்கும் தனித்தன்மை இவர்தம் நூல்களில் காணப்பெறுகின்றன.

3.பண்டைத் தமிழ் இலக்கியத்தில் அறிவியல்பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டுவது இலக்கியப் புலவர்க்கும் ஒரு சிறந்த விருந்தாக அமைகின்றது.

4. அறிவியல் தமிழ் வளர்ச்சியில் கலைச்சொல்லாக்க முயற்சிகள், அதில் நேரிடும் இடர்ப்பாடுகள், இடர்ப்பாடுகளைச் சுட்டிக்காட்டியமை, ஆக்கபூர்வமான சிலநடைமுறைக் குறிப்புகள் எதிர்கால அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருக்கும்.

<u>**இலக்கியத் தமிழ்:**</u>

1.சாதாரண அறிவுள்ள மக்களும், சங்க இலக்கியங்கள் போன்ற மிடுக்கான கவிதைகளையும் எளிதாக சுவைக்கலாம் என்பதற்குப் பேராசிரியர் தொண்டு நினைவு கூறத்தக்கது.

2.ஆங்கில மொழியில் உள்ள பிறமொழி இலக்கியச் செல்வங்களையும் தமிழ் மக்கள் சுவையுடன் அநுபவிப்பதற்கு எளியமுறையில் பல நூல்களைப் படைத்திருப்பது பேராசிரியரின் சிறந்த தொண்டு.

திறனாய்வுத் தமிழ்:

1.பேராசிரியரின் திறனாய்வு நூல்கள் தனி இலக்கியம் பற்றியவை, இலக்கணம் பற்றியவை, பொதுவானவை என்ற மூன்று நிலைகளில் வகைப்படுத்தி அவற்றின் திறனாய்வுக் கூறுகள் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

2.பக்தி இலக்கியங்களில் மேற்கொள்ளப்பெற்ற கருத்துக்கள், தத்துவக் கருத்துகளாக ஆழ்வார் பெருமக்கள் அமைத்த பெருமையை எடுத்துக்காட்டும் பெற்றி, ஆழ்வார் பாசுரங்களில் தாய்ப்பாசுரங்கள், தோழிப்பாசுரங்கள், மகள் பாசுரங்கள் எனப்பிரித்து, ஒவ்வொன்றின் தத்துவமும் விளக்கப்பெற்ற நேர்த்தி இவை திறனாய்வு முறையில் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

3. பெரியாழ்வார் திருமொழியில் திருப்பல்லாண்டு ஒரு தனிப் பிரபந்தம் அன்று எனவும், திருமங்கையாழ்வார் அருளிச் செயல்களில் திருநெடுந்தாண்டவம் சரமப்பிரபந்தமா? பெரிய திருமடல், சரமப்பிரபந்தமா? என்ற ஆய்வில் ஈடுபட்டு, பெரிய திருமடல்தான் ஆழ்வாரின் சரமப்பிரபந்தம் என்று முடிவுகட்டுவதும் சிறந்த ஆய்வு முடிவுகளாகும்

ஆய்வுத் தமிழ்:

1.பேராசிரியரின் எல்லா நூல்களும் ஆய்வுக் கூறுகள் அடங்கியவை. ஆயினும் வசதியின் பொருட்டு சிலவற்றை இவ்வாறு பகுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

2.இந்தத் துறையில் ஆங்கிலத்தில் படைத்த இரண்டு நூல்களும் ‘ஆய்வுத்தமிழ்’ என்ற தலைப்பில் கொண்டுவரப்பெற்றுள்ளன.

மொழிபெயர்ப்புத் தமிழ்:

1.தொல்காப்பியர் காலந்தொட்டு, பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வரும் வடிவம் என்று எடுத்துக்காட்டி இலக்கியம், அறிவியல், கல்வியியல் என்ற மூன்று துறைகளிலும் சில நூல்களை மொழிபெயர்ப்புத் தமிழாக படைத்துக் காட்டுவது தமிழ்வள மேம்பாட்டிற்கு உகந்தது என்பது ஒரு சிறந்த முடிவாகும்.

தெய்வத் தமிழ் (சைவம்-வைணவம்):

1.சமயக்காழ்ப்பு ஒருகாலத்தில் அருகியிருந்து, பெருகிவரும் இன்று இரண்டு வகை தமிழ்களையும் பற்றிய பேராசிரியரின் படைப்புகள் இன்றைய தமிழ் மக்களின் சிந்தனைக்கு விருந்தாக அமையும்.

2.சைவம், வைணவம் என்ற இருசமயங்களிலும் இறைநிலை (பதி-ஈஸ்வரன்), ஆன்மநிலை (பசு-சித்து), உலகியல் நிலை (பாசம்-அசித்து) போன்றவற்றைத் தெளிவாக ஆராயப்பெற்றுள்ளமையால் கிட்டத்தட்ட இரண்டும் ஒன்றேயாகும் என்பது எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

3.இருசமயங்களிலும் வீடுபேறு அடைவதற்குரிய வழிகளிலும் ஒற்றுமை இருப்பதும், வீடுபேறு அடைந்த நிலையில் ஆன்மாவின் நிலையும் ஒன்றுபோல் அமைந்திருப்பதும் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

பயண இலக்கியத் தமிழ்:

1.வைணவத் திருத்தலங்கள் 108 என்றும், சைவத் திருத்தலங்கள் 275 என்றும் எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

2.வைணவத் திருத்தலங்களில், பாடல்களில் திருத்தலப்பெயர்கள் வந்தாலும் அவை மங்களாசாசனம் செய்யப்பெற்று திருத்தலங்களாக அமையும். சைவத் திருத்தலங்களில் அத்தலங்கள் பற்றிய பதிகம் அமைந்தவையே பாடல்பெற்ற தலங்களாகவும், பாடல்களில் பெயர் குறிப்பிடப்பெற்றத்தலங்கள் வைப்புத்தலங்களாகவும் அமைகின்றன என்று எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன.

3.இரண்டுவகை இலக்கியங்களிலும், தலங்கள்பற்றிய குறிப்புகள், அங்குள்ள இறைவன், இருப்பு, சூழ்நிலை, பாடல்களின் விளக்கம், இலக்கியக்குறிப்புகள், வரலாற்றுக்குறிப்புகள், புராணக்குறிப்புகள் முதலியன இயன்றவரை விளக்கப்பெற்றுள்ளன என்பது எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

4.வைணவத் திருத்தலங்களில் இயற்கைச் சூழ்நிலையை எடுத்துரைக்கும்போது வைணவத் தத்துவங்களாகிய சித்து, அசித்து, ஈசுவரன் இவற்றை விளக்குவது ஒரு தனிச்சிறப்பாகும் என்பது எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

வாழ்வியல் தமிழ்:

1.வாழ்வியல் தமிழில் 1920-30 ஆண்டுகளில் திண்ணைப்பள்ளிக்கூட கல்விமுறை இக்கால டால்டன் முறையைக்கூட விஞ்சுவதாக இருந்தமை அறியப்படுகின்றது.

2.1929 முதல் சில பாடங்கள் தமிழிலேயே கற்பிக்கும்முறை படிப்படியாக வளர்ந்த நிலை தெரிய வருகின்றது.

3.பேராசிரியர் பயின்ற காலத்தில் பார்ப்பனர்களைத் தவிர தமிழ் மக்களில் ஆசிரியர்கள் அதிகம் இல்லாமையால், சில பார்ப்பன ஆசிரியர்களிடம் சாதிச் செருக்கும், ஆணவமும் தலைதூக்கி நின்றதை இலைமறைகாய்போல் ஆங்காங்கு குறிப்பிடுவது இக்காலத்தவர்க்கு ஒரு புதிய செய்திபோல் தோன்றும்.

4.பேராசிரியர் பலதுறை அறிவினராதலால் நிகழ்ச்சிகனைக் குறிப்படும் போக்கில் இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், வரலாறு, கலை இவற்றைப்பொருத்தமாக அமைத்திருப்பது காட்டப்பெற்றுள்ளது.

5.இவர்தம் வாழ்க்கையில் பெற்ற நற்பழக்கம், எழுத்துப்பழக்கம், கற்றலில் இவர்க்கு இருந்த ஆர்வம், அக்கறை முதலியவை இக்கால இளைஞர்களுக்கு அகத்தெழுச்சியை எழுப்புவனவாக இருக்கும் என்பது காட்டப்பெற்றுள்ளது.

6.உயர்நிலைப்பள்ளியே இல்லாத ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துதல், அண்மையில் உள்ள சில ஊர்களில் 4,5 பள்ளிகளைத் தோற்றுவித்தல், இவற்றின் வளர்ச்சியில் பங்கு கொண்டமை ஆகிய செயல்கள் ஆசிரியர் உலகத்திற்கு எடுத்துக்காட்டாக அமையலாம்.

7.எல்லாநிலைகளிலும் மாணவர்களிடம் படைப்புத்திறன், ஆய்வுத்திறன் முதலியவை வளர்வதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகள் நினைவு கூறத்தக்கவை ஆகும்.

8.அனைத்திற்கும் மகுடமாக இவர் திருப்பதியில் ஆற்றிய பணி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்கதாகும்.

9.தமிழ் நடையாடாத ஆந்திரமாநிலத்தில், பேச்சுத் தமிழ் வழங்கும் சில பகுதிகளில் மூன்று தமிழ்ச்சங்கங்களை ஏற்படுத்தி பதிவுசெய்து அவற்றை இலக்கிய மேடையாகச்செய்த பெருமை பிற மாநிலங்களில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

தமிழ்வள மேம்பாட்டில் பேராசிரியர் ரெட்டியாரின் பணி:

1.இலக்கியம், தத்துவம், சமயம், அறிவியல், ஆராய்ச்சி இத்துறைகளில் பலநூல்கள் படைத்தமை தமிழ்வள மேம்பாட்டில் பேராசிரியரின் பணியாகும் என்பது எடுத்துக்காட்டப்பெற்றுள்ளது.

2.இவர் கையாண்ட உத்திகளில் கடித உத்தி தலைசிறந்தது. இதில் சைவம், வைணவம், தலைவன்-தலைவி உறவுமுறைகள் முதலியவை இந்த உத்தியில் கையாளப்பெற்றுள்ளது.

3.சொற்பொழிவுகள் என்பதை ஒரு உத்தியாகக் கொள்ளாவிட்டாலும், இவர் செய்த சொற்பொழிவுகள் யாவும் நூல்வடிவம் பெற்று சொற்பொழிவைக் கேட்கவாய்ப்பில்லாத மக்களுக்கும் அவற்றைப் படிக்கும் வாய்ப்பாக அமைகின்றது.

முடிவு:

இத்தகைய படைப்புக்களையெல்லாம் பணிக்காலத்தில் தொடர்ந்து செய்துவந்ததும், ஓய்வுபெற்றபிறகு விடாமல் தொடர்ந்து செய்து வருவதும் பாராட்டத்தக்கக் குறிப்புகளாகும். பேராசிரியர் இவற்றையெல்லாம் பணி என்று செய்யாமல் தாமே இலக்கியம், அறிவியல், தத்துவம், சமயம் முதலியவற்றை அநுபவித்த மகிழ்ச்சியின் பெருக்கே இத்தனை நூல்களாக வடிவம் பெற்றது. இவை பேராசிரியர் அப்பர்பெருமானின் ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற திருவாக்கை நினைத்த நிலையில் ஆரவாரம் இன்றி அமைதியாக வாழ்ந்துவருவது மாணாக்கர் உலகிற்கும், ஆசிரியர் உலகிற்கும், ஆய்வு உலகிற்கும் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது என்பதை இந்த ஆய்வாளர் மிகப்பணிவுடன் சுட்டிக்காட்டுகிறார்.

(☺)(☺)(☺)(☺)(☺)

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's
Contributions for the Enrichment of Tamil

பின்னிணைப்பு — 1

ஆய்வு மூலங்களாக அமைந்த பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்

(பொருள்முறைப் பகுப்பின்படி)

பின்னிணைப்பு – 1

ஆய்வு மூலங்களாக அமைந்த பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்

ஆசிரியம்:

01)தமிழ் பயிற்றும் முறை: பேராசிரியர் ரெட்டியார், ஆசிரியர் பயிற்சிக் கல்லூயில் பட்டப்படிப்பு (பி.எட்) ஆசிரியர்கட்குப் பத்தாண்டுகள் தமிழ் கற்பிக்கும் முறைகளைப் பயிற்றுவித்த பட்டறிவின் பயனாக எழுந்தது இந்நூல்.

02)அறிவியல் பயிற்றும் முறை: தமிழில் அறிவியல் பயிற்றும் முறையைப் பயிலும் பயிற்சிக் கல்லூரி மாணாக்கர்கட்குப் பயன்படும்முறையில் முதன் முதலாக நல்ல தமிழில் தெளிவான நடையில் எழுதப்பெற்று வெளிவந்த பெரிய நூல்.

03)கவிதை பயிற்றும் முறை: கவிதை பயிற்றலைப்பற்றி விளக்கும் அழகு நூல். கவிதை பயிற்றும் தமிழாசிரியர்கள் கற்றுக் கருத்தில் இருத்தி நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய கருத்துகள் பத்துத் தலைப்புகளில் பாங்குற எடுத்துரைக்கின்றது.

04)கல்வி உளவியல்: கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கட்குப் பயன்படும் முறையில் எழுந்த நூல் இது. கல்வித்துறையில் - பயிற்றுதலில் எந்த அயவுக்குப் பயன்படுகின்றது என்கதை விளக்கி உரைக்கும் கல்வி-உளவியல் பற்றியது

05)யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்: இ∴து ஒரு மொழிபெயர்ப்பு நூல். 'UNESCO Source Book of Science Teaching' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம்.

06)கல்வி உளவியல் கோட்பாடுகள்: கல்வியியல் மானுடவியலின் எல்லா இயலுக்கும் அடிப்படை இயலாகும். இந்நூலில், நூலறிவு, நுண்ணறிவு, பட்டறிவு, பகுத்தறிவு, பொது அறிவு, கல்வி கேள்விநலன்கள், மானிட ஆற்றலில் மகத்தான கல்வி சாதனைகள் அத்துணையும் விளக்கப்பெற்றுள்ளன. ஆங்கிலத்திலுள்ள சிறந்த உளவியல் நூல்களில் ஆங்காங்குச் சிறந்த ஆங்கில இலக்கிய மேற்கோள்கள் காட்டப்பெறுகின்றன. இவை படிப்போர்க்கு ஒருவிதத் தனி இன்பத்தை நல்குகின்றன.

இலக்கியம்:

07)கவிதையநுபவம்: தமிழைப்படித்து அதன் இன்பத்தை உய்த்த கவிஞரின் அநுபவம் இது. இது உணர்ச்சியின் தத்துவம், கவிதையின் தத்துவம், கற்பித்தலின் தத்துவம் என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியது.

08)கவிஞன் உள்ளம்: சங்க இலக்கியம் தொடங்கி நாலடியார், திருவாசகம், சிந்தாமணி, கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம், காஞ்சி புராணம் முதலிய நூல்களிலிருந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைச் சுவையுடன், இருபத்தைந்து கட்டுரைகளில், விளக்குவது இந்நூல்.

09)காலமும் கவிஞர்களும்: இது பேராசிரியர் ரெட்டியாரால் பல்வேறு இதழ்கள், பெரியார்களின் மணிவிழா மலர்கள் இவற்றிற்கு எழுதப்பெற்ற கட்டுரைகள், வானொலி உரைகள் ஆகிய பன்னிரு கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூல்.

10)காதல் ஓவியங்கள்: சங்க இலக்கியத்தொகுப்பாகிய எட்டுத்தொகை நூல்களில் அகநானூறு, புறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, கலித்தொகை என்ற ஐந்து நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற இருபத்து நான்கு பாடல்களின் விளக்கமே இந்நூல்.

11)அறிவுக்கு விருந்து: இந்த நூல் பல சிறப்பு மலர்களுக்கு எழுதப்பெற்ற இலக்கியக் கட்டுரைகளையும், இந்நூலுக்கென்றே எழுதப்பெற்ற கட்டுரைகளையும் உள்ளடக்கியது. இவை இலக்கியம், திறனாய்வு, இலக்கிய வரலாறு என்ற மூன்று பகுதிகளில் ஒன்பது கட்டுரைகள் அடங்கியது.

12)முத்தொள்ளாயிர விளக்கம்: இது முத்தொள்ளயிரத்திலுள்ள 108 பாடல்களையும் இலக்கியச் சுவை சொட்டும் வண்ணம் இலக்கியத்தைச் சுவைக்க வழிகாட்டும்முறையில் இனிய அழகிய எளிய தமிழில் எழுதப்பெற்றது.

13)பரணிப்பொழிவுகள்: திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் பணி ஆற்றிய பொழுது திருப்பதிக்கு அருகிலுள்ள பாக்காலா என்ற ஊரில் (இருப்பூர்தி நிலையம்) தம் முயற்சியால் பல அன்பர்களின் துணை கொண்டு தோற்றுவித்த தமிழ்ச் சங்கத்தில் 1965-66ல் வேங்கடவன் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் கலிங்கத்துப் பரணிபற்றி நிகழ்த்திய ஆறு விரிவுச் சொற்பொழிவுகளைக் கொண்டது அந்நூல்.

14)அறிவியல் தமிழ்: பல்வேறு சிறப்பு மலர்களில் அவ்வப்போது வெளிடப்பெற்ற 10 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். தில்லி

தமிழ்ச்சங்க வெள்ளி விழா மலரில் (1971) வெளிவந்த 'அறிவியல் தமிழ்' என்ற கட்டுரையே நூலின் தலைப்பாக அமைந்தது.

<u>**15)திருக்குறள் கருத்தரங்கு மலர் (பதிப்பு):**</u> பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலத்தில் தமிழ்த்துறைச் சார்பாக நடத்தப்பெற்ற திருக்குறள் (மூன்றுநாள்) கருத்தரங்கில் பல தமிழறிஞர்களின் ஆய்வுக்கட்டுகளின் தொகுப்பு இந்நூல். பேராசிரியரின் Tiruvalluvar's Philosophy of Education என்ற ஆங்கில ஆய்வுக் கட்டுரையும் இதில் அடங்கி உள்ளது.

<u>**16)கம்பனில் மக்கள் குரல்**</u>: 'விருந்தெனும் ஒன்பா விற்கு உயர் கம்பன்' என்று புலவர்களால் போற்றப்பேறும் கம்பன் மக்கள் கவிஞன். ஆவன் படைத்த கதைக் காவியத்தை – கம்பராமாயணம் - நன்கு சுவைத்து மாற்றித் திளைத்தவர் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார். அதனைச் சுவைக்கும் பாங்கில் பல்வேறு காலங்களில், பல்வேறு தலைப்புகளில் எழுதிய பதினொரு திறனய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

<u>**17)காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு):**</u> மகாவித்துவான் திரு கி.வேங்கடசாமி ரெட்டியார் 1934ல் வெளியிட்ட மூலத்தைக் குறிப்புரையுடனும், ஆய்வுரையுடனும் வெளியிடப்பெற்ற அருமையான பதிப்பு நூல்.

<u>**18)திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்**</u>: டாக்டர் ரா.பி.சேதுபிள்ளை வெள்ளிவிழா நினைவுச் சொற்பொழிவுகள் என்ற சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளையின் ஆதரவில் 1973-74 ஆண்டுக்குரிய திட்டத்தில் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய 'சங்ககால வேங்கடம்', 'இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம்', 'திருவேங்கடத்தில் மீது எழுந்தள்ள தமிழ் நூல்கள்' என்ற மூன்று பேருரைகளின் தொகுப்பு இந்நூல்.

<u>**19)தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை**</u>: 'தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரெட்டியார் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பு நூலாக மலர்ந்துள்ளது. 1. தமிழ் இலக்கியங்களில் அறம், 2. தமிழ் இலக்கியங்களில் நீதி, 3. தமிழ் இலக்கியங்களில் முறைமை என்ற மூன்று சொற்பொழிவுகள் அடங்கியது.

<u>**20)புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணி பாராதியார் - ஒரு கண்ணோட்டம்:**</u> புதுவைப் பல்கலைக் கழகத்தில் (திரு ஆனந்தரங்க கிருஷ்ணசாமிப்பிள்ளை-திருமதி அம்சம்மாள் அறக்கட்டளை: மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுச் சொற்பொழிவு – 1989) பேராசிரியர்

டாக்டர் ரெட்டியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு வடிவமே இந்நூல். பாரதியைப் பாட்டுக்கு ஒரு புலவர், நாடு, மொழிப்பற்றாளர், கல்விச் சிந்தனையாளர், வைணவச் செல்வர், சக்திதாசர், சமரச நோக்கர், புதுக்கவிதை நாயகர் என ஏழு கோணங்களில் பேராசிரியர் ஆய்வு செய்த அழகுநூல் இது.

21)பாவேந்தன் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம்: இந்நூல் பாரதிதாசன் நூற்றாண்டு விழாநினைவாக ரெட்டியார் வெளியிட்ட ஆய்வுநூல். பாரதிதாசனை 'புரட்சி கவிஞர்' என்ற அறிமுகக் கட்டுரையுடன் 'புதியதோர் உலகம்' என்பது வரை இந்நூல் ஒன்பது கட்டுரைகளைக்கொண்டு விளங்குகிறது.

சமயம், தத்துவம்:

(அ) விளக்க நூல்கள்

22)முத்தி நெறி: இந்த நூல் வைணவ சமயக் கொள்கைகளையும், விசிட்டாத்வைத் தத்துவங்களையும் தெளிவாக விளக்கும் ஓர் அற்புதப்படைப்பு. படிப்போர் மனதில் கருத்துகள் ஆழப் பதிவதற்காக, 'கடித உத்தி' முறையைக் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

23)சில நோக்கில் நாலாயிரம்: பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் நாலாயிரத்தை ஆய்ந்த காலத்தில் பல்வேறு ஆண்டு மலர்கட்கும், பல பெரியார்களின் மணிவிழா மலர்கட்கும் எழுதிய கட்டுரைகளும், சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளும், வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு இந்நூல். பத்தொன்பது கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன. இவை நாலாயிரத்தைப் பல கோணங்களில் விளக்குவனவாக அமைந்துள்ளன.

24)சைவ சமய விளக்கு: சைவ சித்தாந்தத்தைக் கடித உத்திகொண்டு விளக்கும் அருமையான நூல்; ஏழு இயல்களில் 51 கடிதங்கள்மூலம் சித்தாந்தக் கருத்துகள் தெளிவாக்கப்பெறுகின்றன.

25)ஆன்மீகமும் அறிவியலும்: டாக்டர் ரெட்டியார் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு தலைப்புகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். ஆன்மீகமும் அறிவியலும் ஆழங்கால்பட்டு ரெட்டியாரால் ஆய்வு செய்யப்பெற்ற நூல். இந்நூலின் முதற்கட்டுரைத் தலைப்பே 'ஆன்மீகமும் அறிவியலும்'; இதுவே இந்நூலுக்குப் பெயராக அமைந்தது.

26)கலியன் குரல்: அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சிறப்புப் பொழிவுகள் திட்டத்தின் கீழ் பேராசிரியர் ரெட்டியார் தமிழியல்துறையில்

நிகழ்த்திய மூன்று பொழிவுகள் ‘கலியன் குரல்’ என்ற தலைப்பில் நூல்வடிவம் பெற்றது.

27)கண்ணன் எழில்காட்டும் கவிதைப்பொழில் (பதிப்பு): பக்தனுக்கு இறைவனடி சேர்வதுதான் முக்கியம். அந்த முக்கியத்துவத்தைக் ‘கண்ணன் எழில்காட்டும் கவிதைப்பொழில்’ மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது. இந்நூலாசிரியர் கவிஞர் வி.மு.உலகநாதன் கவிதைபாடும் திறனை மிகவும் வளர்தீரக் கொண்ட கவியநுபவம் உள்ள புலவர்; இவருடைய நூலினை நயமான பதிப்புரையுடன் வெளியிட்டுள்ளார்.

28)ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் (பதிப்பு): கவிஞர் வி.மு.உலகநாதன் நாச்சியாரின் திருப்பாவை முப்பதையும் அடிபடையாகக் கொண்டு ‘ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும்’ என்ற இந்நூலை வியக்கத்தக்க வகையில் செய்துள்ளார். தமிழுக்கு ஒரு புது வரவாகும் இந்நூலை பேராசிரியர் ரெட்டியார் பதிப்புரையுடன் வெளியிட்டுள்ளார்.

29)கண்ணன் துதி: வில்லிபுத்தூரார் இயற்றிய வில்லிபாரதத்தில் உள்ள கண்ணன் பற்றிய அறுபத்தாறு பாடல்களின் தொகுப்பு நூல் இது. குறிப்புரை, ஆராய்ச்சி முகவுரைகளைக் கொண்டது.

30)இராமர் தோத்திரம்: கம்பன் காவியத்தில் காணும் இராமபிரான் ஓர் அவதாரபுருடன்; திருமாலே இராமனாக வந்ததைக் கூறுவது. இந்தக் காவியத்தில் கவிஞர் வாக்காகவும், ஏனைய காவியமாந்தர்களாகிய பரசுராமன், விராதன், இந்திரன், கவந்தன், அநுமன், நான்முகன், கருடன், சிவபெருமான், தேவர்கள் வாக்குகளாகவும், இராமர் தோத்திரமாக வரும் 74 திருப்பாடல்களைக் கொண்டது இச்சிறுநூல். தொகுப்பும், உரைக்குறிப்பும் கொண்டது.

31)முருகன் துதி அமுது: பிள்ளைத் தமிழ், புராணங்கள், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, பிற இலக்கியங்கள் ஆகியவற்றில் முருகன்மீது எழுந்துள்ள பாடலகளில் 81 பாடல்கள் தேர்ந்து எடுக்கப்பெற்று உரைக்குறிப்புடனும் ஆய்வு முகவுரையுடனும் பேராசிரியர் ரெட்டியார் அவர்களால் வெளியிடப்பெற்ற தொகுப்பு நூல் இது.

(ஆ) திருத்தலப் பயண நூல்கள்

32)மலைநாட்டுத் திருப்பதிகள்: ஆழ்வார்களின் மங்களாசாசனம்பெற்ற திருப்பதிகள் 108ல் மலைநாட்டில் (இன்றைய கேரளாவில்) மட்டிலும் 12 திருப்பதிகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றுமாக 13 திருப்பதிகள் உள்ளன. பேராசிரியர் டாக்டர் ரெட்டியார்

இத்திருப்பதிகட்குத் திருத்தலப்பயணத்தைக் குடும்பத்துடன் மேற்கொண்டுசென்று, தாம்பெற்ற அநுபவத்தை படிப்போர்க்கு உணர்த்தும் பாங்கில் எழுதப்பெற்ற பக்திப் பயணப் பனுவல். இந்நூல் 13 திருத்தலப்பயணக் கட்டுரைகளின் தொகுப்பு.

<u>33)தொண்டைநாட்டுத் திருப்பதிகள்</u>: 108 திருப்பதிகளில் தொண்டை நாட்டிலுள்ள 22 திருப்பதிகளும், நடுநாட்டிலுள்ள இரண்டு திருப்பதிகளுமாக 24 திருப்பதிகள் அடங்கும். இந்தத் திருப்பதிகள் யாவற்றையும் குடும்பத்துடன் சேவித்து அதனால் தாம்பெற்ற அநுபவத்தை படிப்போர்க்குத் தெளிவாக உணர்த்தக்கூடிய 24 கட்டுரைகள் அடங்கியது. இந்நூல் படிப்போரை மானசீகமாகத் தம்முடைய திவ்விய தேச யாத்திரையை நினைவுசெய்துகொண்டதாக மனநிறைவுபெறச் செய்யும்.

<u>34)பாண்டிநாட்டுத் திருப்பதிகள்:</u> 108 திருப்பதிகளுள் பாண்டி நாட்டிலுள்ள 18 திருப்பதிகளையும் குடும்பத்துடன் சேவித்து அதனால் தாம் பெற்ற இலக்கிய-பக்தி அநுபவங்களைப் படிப்போர்க்குத் தெளிவாக உணர்த்தக்கூடிய 18 கட்டுரைகள் அடங்கியது இந்நூல்.

<u>35)வடநாட்டுத் திருப்பதிகள்</u>: ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வடநாட்டிலுள்ள வைணவ திருப்பதிகளைப்பற்றியது. திருவேங்கடத்தில் தொடங்கும் இவரது பக்திப் பயணம் சிங்கவேள் குன்றம், நைமி சாரண்யம், துவாரகை, அயோத்தி, வடமதுரை, ஆயர்பாடி, பிருந்தநவனம், கோவர்த்தனம், கண்டம்கடிநகர், திருப்பிரிதி, பதரிகாசிரமம் ஆகிய திருத்தலங்களை சேவித்தவண்ணம் சாளக்கிராமத்தில் நிறைவு பெறுகின்றது. திருப்பாற்கடலையும், பரமபதத்தையும் கூட இப்பயணத்தில் மானசீகமாக தரிசனம் செய்யவைத்து விடுகின்றார் ஆசிரியர்.

<u>36)சோழநாட்டுத் திருப்பதிகள் (முதற்பகுதி</u>): ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 108 திருப்பதிகளுள் சோழநாட்டிலுள்ளவை மட்டிலும் 40. இவற்றை நேரில் குடும்பத்துடன் சென்று சேவித்துத் தாம்பெற்ற அநுபவத்தையும் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட அருமையையும் படிப்போரும் பெற வேண்டும் என்ற உயர்நோக்கத்தால் எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

<u>37)சோழநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பகுதி</u>): முதற்பகுதியில் சேவித்த 20 திருப்பதிகள் போக எஞ்சியுள்ள 20 திருப்பதிகளையும் சேவித்த ஆசிரியரின் அநுபவத்தை விளக்கும் 20 பக்திப் பயணக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். தில்லை திருச்சித்திரகூடம் தொடங்கி காழிச்சீராமவிண்ணகரம் முதலிய ஒன்பது திருப்பதிகளையும், திருநாங்கூர் திருப்பதிகள் பதினொன்றையும் சேவித்த தம் திருத்தலப்பயண அநுபவங்களை ‘பக்திச்சுவை நனிசொட்ட’ எடுத்துக்கூறும் 20 பயணக் கட்டுரைகளைக்கொண்ட தொகுப்பு.

38)தம்பிரான் தோழர்: சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இப்பெரியார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சுந்தரர் பாடிய திருத்தொண்ட தொகையையும், அவருக்குப் பின்னர் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியருளிய திருவந்தாதியையும் அடிப்படையாக்கொண்டு சேக்கிழார் சுவாமிகள் சுந்தரரின் வரலாற்றை விரித்துரைக்கின்றார். இந்நூல்களையும் சுந்தரர் பாடிய திருப்பதிகங்களையும் நன்கு ஆராய்ந்து பேராசிரியர் இவ்வரலாற்றை எழுதியுள்ளார்.

39)நாவுக்கரசர்: சைவ சமயக்குரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசர் சுவாமிகள் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல் இது. பொதுவாக ஞானசம்பந்தர் தமிழை இளமைத் தமிழ் என்றும், நாவுக்கரசர் தமிழை மூத்த தமிழ் என்றும், சுந்தரர் தமிழைத் தோழமைத் தமிழ் என்றும் குறிப்பிடுவது மரபு. இவ்வகையில் மூத்த தமிழ் பாடிய மூதறிஞர் நாவுக்கரசரின் வாழ்க்கையை விளக்குவது இந்நூல்.

40)ஞானசம்பந்தர்: ஞானசம்பந்தர்பற்றிய திருத்தலப் பயண நூல் இது. ஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் பதினாறு இயல்களாகப் பகுத்துக்கொண்டு விளக்குவது இந்நூல்.

41)மாணிக்கவாசகர்: மாணிக்கவாசகரின் சமயக்கோட்பாடுகள், தத்துவங்கள், இறைமைபற்றிய கருத்துகள் ஆகியவற்றை ஒன்றுவிடாமல் படித்து மாணிக்கவாசகரின் பிறப்பு முதல் அவர் அருள்பெற்ற திருத்தலங்கள்வரை இந்நீண்ட நெடியநூல் பேசுகிறது.

திறனாய்வு:

42)கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்: இந்நூலில் சிறு பாத்திரங்களைப்பற்றிய ஒரு பொதுக்கட்டுரையும், தாடகை, விசுவாமித்திரர், மந்தரை, சுமித்திரை, குகன், சூர்ப்பனகை, மாரீசன், சடாயு, தாரை, அங்கதன், சத்துருக்கன் என்ற சிறுபாத்திரங்களைப்பற்றிய பதினொரு கட்டுரைகளும் அடங்கியவை. சிறந்த திங்கள் இதழ்களாகத் திகழ்ந்த ‘குமரி மலரிலும்’, ‘ஜனநாயகத்திலும்’ வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகளே நூல் வடிவம் பெற்றன. சிலரைப்பற்றி விரிவாகவும் மற்றும் சிலரைப்பற்றிக் குறிப்பாகவும் ஆய்வுநோக்கில் இந்நூல் எடுத்துரைக்கின்றது.

43)அகத்திணைக்கொள்கைகள்: அக இலக்கியத்தின் கொள்கை எல்லாம் அடங்கிய ஒரு பெருநூல்; அகத்திணைக் கூறுகளை அடிப்படையுடன் அறிந்துகொள்வதற்குத் துணையாக இருப்பதுடன், அகத்திணையை ஆழ்ந்து கற்போருக்கும், ஆராய்வோருக்கும் பல புதிய

தடங்களையும் காட்ட வல்லது. இப்புதிய உரைநடைப் பனுவல் அகலிரு விசும்பு போல அனைத்து அகக்கூறுகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பது.

44)புதுக்கவிதை – போக்கும் நோக்கும்: கடந்த முப்பதாண்டுகளாக வளர்ந்துவரும் 'புதுக்கவிதை' நின்று நிலைத்து விட்டது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இறுதியாக இடம்பெற்ற ஒருவகைப் புதுவகை இலக்கியம் இப்புதுக் கவிதை. அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள சற்றேறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட புதுக்கவிதைத் தொகுப்புகளை மதிப்பீடுவது போன்ற ஒருவகைத் திறனாய்வு நூல் இது.

45)கண்ணன் பாட்டுத்திறன்: இது கவிதை இன்பத்தின், பக்தி அநுபவத்தின் எல்லைக்குப் படிப்போரை, பாடி அநுபவிப்போரை இட்டுச் செல்ல வல்ல பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' என்ற கவிதையைப் பல கோணங்களில் ஆய்ந்த இலக்கியத் திறனாய்வு நூல்.

46)பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு: இந்நூல் பாரதியாரின் சுவைமிகுந்த அற்புதப் படைப்பாகிய 'பாஞ்சாலி சபதம்' என்ற சிறு காவியத்தைப் பல கோணங்களில் ஆய்ந்த ஓர் இலக்கியத் திறனாய்வு நூல் இது.

47)பாரதீயம்: பாரதியின் படைப்புகளைப்பற்றிய முழுப்பார்வையில் திறனாய்வு செய்யப்பெற்ற படைப்பு இது. 'பாரதீயம்' என்ற தலைப்பு ஆழ்ந்த சிந்தனையில் எழுந்தது. பத்து ஆய்வுக் கட்டுரைகளைக்கொண்ட இந்நூலிற்கு முதல் கட்டுரையின் தலைப்பே நூலின் தலைப்பாக அமைந்தது. **(தமிழ் நாடு அரசு பரிசு பெற்றது).**

48)குயில் பாட்டு – ஒரு மதிப்பீடு: 'எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்' என்ற கொள்கைப் பிடிப்புடைய மகாகவி பாரதியாரின் 'குயில் பாட்டு' என்ற அற்புதப் படைப்பினை மதிப்பிடுகின்றது இச்சிறு நூல்.

49)உயிர் தந்த உத்தமன் (பதிப்பு): அநுமனின் பல்வேறு பண்புகளைப்பற்றி பேசும் நூல். 'உயிர் தந்த உத்தமன்' என்ற விருது சீதையால் அநுமனுக்கு வழங்கப்பெற்றதால் அந்த விருதின் பெயரையே இந்நூலும் பெற்றுள்ளது.

50)ஆழ்வார்களின் ஆராஅமுது: 'ஆழ்வார்களின் ஆராஅமுது' என்ற இந்த நூல் பேராசிரியர் டாக்டர் ந சுப்பு ரெட்டியார், திருப்பதியில் பணியாற்றிய ஒரு காலப்பகுதியில் திருப்பதியைச் சுற்றியுள்ள ஐந்து இடங்களில் நிகழ்த்திய ஆறு சொற்பொழிவுகள் அடங்கியது.

51)விட்டு சித்தன் விரித்த தமிழ்: பெரியாழ்வார்பற்றியும் அவருடைய அருளிச்செயல்கள்பற்றியும் கூறும் இந்நூல் பதினான்கு இயல்களாக அமைந்துள்ளது. முதல் இயல் ஆழ்வாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக உரைக்கின்றது. அதனைத் தொடர்ந்து வரும் பதின்மூன்று இயல்களும் அருளிச்செயல்களைப் பல கோணங்களில் ஆய்வன.

52)சடகோபன் செந்தமிழ்: நம்மாழ்வார் வரலாறு மற்றும் அவர்தம் அருளிச்செயல்கள் பற்றிய விளக்கங்கள்கொண்ட நூல். நம்மாழ்வார் பாடிய திருப்பதிகள், அருளிச்செயலில் அமைந்த அகப்பொருள், தத்துவம், பக்தி மேலிட்டு ஆழ்வார் பெண்மை நிலை அடைந்து பேசுகையில் அமைந்த திருவிருத்தம், திருவாய்மொழிப்பதிகங்கள் இவற்றை தமிழ் மரபுக்கேற்ப விரிவாக விளக்கும் நூல் இது.

53)தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை: தொல்காப்பியம் தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழிலக்கியத்தின் தொன்மையையும் நாகரிகத்தையும் விளக்கும் பழம்பெரும் நூலாகும். சிறப்பாகப் பொருளதிகாரம் என்னும் அதன் மூன்றாம் பகுதி தமிழர்களின் வாழ்க்கையையொட்டி அமைந்த இலக்கியத்திற்கும் இலக்கணம் கூறும் நூலாக அமைந்துள்ளது. இந்தப்பகுதியைத் திறம்பட ஆய்ந்து எழுதப்பட்ட நூலே இது.

வரலாறு, தன் வரலாறு:

54)நினைவுக் குமிழிகள் (முதற் பகுதி): பேராசிரியர் டாக்டர் ந சுப்பு ரெட்டியார் தம் வாழ்க்கை வரலாற்றை 'நினைவுக்குமிழிகள்' என்னும் தலைப்பில் வரைந்துள்ளார் மூால் தொகுயாகிய இந்நூலில் ரெட்டியாரின் பிறப்பு, பிள்ளைப் பருவநிகழ்ச்சிகள், பள்ளி-கல்லூரிப் படிப்பு, துறையூர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக அமர்த்தப்பெற்றமை ஆகிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

55)நினைவுக் குமிழிகள் (இரண்டாம் பகுதி): இத்தொகுதியில் பேராசிரியர் தம்முடைய துறையூர் வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று அதனை உயர்நிலைப்பள்ளியாக வளர்த்துப் பணிபுரிந்த காலத்தில் அவர் அடைந்த இடர்பாடுகள், இன்னல்கள், அவர்பெற்ற அநுபவங்கள் ஆகியவை இலக்கிய வடிவங்களாகப்பெற்றுள்ளன.

56)நினைவுக் குமிழிகள் (மூன்றாம் பகுதி): பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இந்நூல் மூன்றாம் பகுதியாக மலர்கிறது. இந்நூலில் பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் ஆசிரியர் பணிபற்றியும், காரைக்குடி வாழ்வுபற்றியுமான செய்திகள் நினைவுகளாகின்றன.

57)நினைவுக் குமிழிகள் (நான்காம் பகுதி): பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இந்நூல் நான்காம் பகுதியாக மலர்கிறது. இந்நூலில் பேராசிரியர் ரெட்டியார் அவர்களின் திருப்பதி வாழ்வு, அவர் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் ஆகியவை பேசப்படுகின்றன.

58)வேமனர்: இது திரு வி.ஆர்.நார்லா அவர்களால் ஆங்கிலத்தில், வேமனரின் வாழ்க்கையைப் பற்றித் திறனாய்வு முறையில் எழுதப்பெற்று, புதுதில்லி சாகித்திய அகாடெமியாரால் வெளியிடப்பெற்ற நூலின் தமிழாக்கம். தொல்காப்பியர் கூறும் 'அதர்ப்படயாத்தல்' என்ற குறிப்பின்கீழ் இந்நூல் அடங்கும்.

59)சி.ஆர்.ரெட்டி: திரு டி.ஆஞ்சனேயலு அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற டாகடர் சி.இராமாலிங்கா ரெட்டியை அறிமுகப்படுத்தும் நூல். சாகித்திய அகாடெமியின் வெளியீடு.

60)மலரும் நினைவுகள்: பேராசிரியர் ரெட்டியார் துள்ளித்திரிந்த பள்ளிப் பருவத்திலிருந்தே, தமக்குத் தமிழார்வத்தை ஊட்டி வளர்த்த தமிழ்ச் சான்றோர்கள், கல்வி நலம் காத்த பெரியோர்கள், பணிமேற்கொண்டு தனியாத ஆர்வமுடன் தமிழ்த்தொண்டாற்றிய காலத்தில் தொடர்புகொண்ட மூதறிஞர்கள் ஆகிய 30 பெரியோர்களுடன் தம் வாழ்வில் ஏற்பட்ட பிணைப்புகளை, மலரும் நினைவுகளாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

அறிவியல்:

61)மானிட உடல்: இ∴து எடித்இஸ் ப்ரெளல் எம்.டி. இயற்றியுள்ள 'The Science Book of Human Anatomy' என்ற ஆங்கில அறிவியல் நூலின் தமிழாக்கம். 15 இயல்களையும், கலைச் சொல்விளக்கம், கலைச்சொல்லகராதி, பொருட்குறிப்பு அகராதி என்ற மூன்று பின் இணைப்புகளையும் கொண்டு இலங்குவது இந்நூல். இதில் 92 எடுத்துக்காட்டு ஓவியங்களும்ஈ 32 ஒளிப்படங்களும் அடங்கியுள்ளன. தொல்காப்பியர் கூறும் 'அதர்ப்பட யாத்தலுக்கு' நல்லதோர் எடுத்துக்காட்டு.

62)அணுவின் ஆக்கம்: ஆக்க முறைகளில் அணுவாற்றலைப் பயன்படுத்தும் முறைகளை மிகத்தெளிவாக விளக்கும் முதல் பெரிய நூல். 44 விளக்கப்படங்களைக் கொண்டது. இயன்ற இடங்களில் சுவையூட்டுவதற்காக இலக்கிய மேற்கோள்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன. இது அணுவின் அற்புத ஆற்றல், அணுவின் அமைப்பு, ஆற்றல் கருவிலடங்கிய ஆற்றலும், தொடர்நிலை விளைவும்,அணு எரியைகள், அணுஉலைகள், மின்னாற்றல், கதிரியக்கம், கதிரியக்க ஓரிடத்தான்கள், அணு ஆராய்ச்சிக் கருவிகள், உயிரியலும் அணுவும்,

மருத்துவவத்துறையில் அணு, உழவுத்தொழில் அணு, தொழில் துறையில் அணு, எதிர்காலத்தில் அணுவாற்றல், மங்கல வாழ்த்து என்று 16 இயல்களைக் கொண்டது.

63)இளைஞர் வானொலி: குறைந்த கல்வியுடையவர்களும், அறிவியல் பயிலாதவர்களும் விருப்பார்வத்துடன் படிக்கத் தூண்டுவதற்கான எளிய இனிய தெளிவுடன் கூடிய ஓர் அறிவியல் நூல். இளமையிலிருந்தே அறிவியலில் ஆர்வம் கிளர்ந்தெழ வேண்டும் என்ற ஊக்கத்தை ஊட்டவல்லதற்கேற்ற நூல். ஒவ்வொரு படியிலும் சிறு சிறு விளக்கங்களைத் தந்து, வானொலியைப்பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளும் பாங்கில் அமைந்துள்ளது. இச்சிறுநூல் 35 விளக்கப் படங்களைக்கொண்டது. இறுதியில் பின்னிணைப்பாக கலைச்சொற்களை விளக்கும் பட்டியலையும் கொண்டது.

64)இளைஞர் தொலைக்காட்சி: வானொலியும் தொலைக்காட்சியும் எலக்ட்ரானிக் சகோதரிகள்; அவர்களில் ஒருவரை செவிமருத்தியார் (Ms Andilpe) என்றும், மற்றொருவரைக் கண்ணம்மையார் (Ms Visiple) என்றும் குறிப்பிடலாம். இருவருமே இன்று நமக்கு மிகவும் அறிமுகமானவர்கள். வுானொலி நிலையத்திலுள்ள நம் உள்ளங்கை அகலமுள்ள ‘ஒலி வாங்கியின்’ வாய் மண்ணைத் தின்ற கண்ணன் வாய்போல் உலகனைத்தையும் உண்டு ஒமிழும் வாயாக அமைந்துள்ளது. அங்ஙனமே தொலைக்காட்சி நிலையத்திலுள்ள நமது கண்ணைவிட மிகவும் சிறியதாகவுள்ள ஒளி-மின்சாரக் கலம் என்னும் ‘மாயக் கண்’ இந்த எல்லையற்ற அகிலம் முழுமையும் ஊருவிப் பார்க்க வல்லதாக அமைந்துள்ளது. இந்த மாயக்கண் செயற்படுவதைத்தான் இச்சிறுநூல் பதின்மூன்று தலைப்புகளாகப் பகுத்துக்கொண்டு விளக்குகின்றது. பல விளக்கப்படங்களைக்கொண்டது.

65)அதிசய மின்னணு: உலக முன்னேற்றத்திற்கு மிகமிக இன்றியமையாத பல துறைகளாகப் பரந்து காணப்பெறும் அறிவியலுள் மின்னாற்றல் மற்றெல்லாத் துறைகட்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது. இந்த மாபெறும் ஆற்றலை மனிதனின் அறிவாற்றல் அடிமைப்படுத்தி உலக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பணியாளனாக்கி விட்டது. மனிதனின் அன்றாட வாழ்க்கை முதல் அவன் வானுலகைத் துருவித்துருவி ஆராய்வதுவரை மின்னணுவின் ஆற்றல் எப்படி எப்படியெல்லாம் பயன்படுகின் என்பதை இச்சிறுநூல் தெளிவாக விளக்குகின்றது.

66)நமது உடல்: இந்த உலகில் நம் உடற்பயணத்தைக் கொண்டு செலுத்துவதற்கு வேண்டிய கருவிகரணங்கள் யாவும் நாம் பிறக்கும்பொழுதே இவ்வுடலில் அமைந்துள்ளன. இதயம், குருதி, மூளை, நரம்புகள், நுரையீரல்கள், இரைப்பை, சிறுநீரகங்கள், கல்லீரல்

போன்றவை யாவும் இவ்வுடற் பயணத்திற்குத் தேவையான உறுப்புகள் ஆகும். **(தமிழ் நாடு அரசு பரிசு பெற்றது).**

<u>67)இராக்கெட்டுகள்:</u> அமெரிக்க அரசுத் தலைவர் ஜான் கென்னடி தம் பதவிக்காலத்தில் ஒரு பத்தாண்டுக்குள் அமெரிக்கா அம்புலியை எட்டும் என்று செய்தார்; அந்த வாக்கு நம்நாட்டுத் தலைவர்களின் தேர்தல் வாக்குப்போலல்லாது அக்கால எல்லைக்குள் நிறைவேற்றவும் பட்டது. விண்வெளிப் பயணத்தில் மேலை நாடுகள் (குறிப்பாக அமெரிக்காவும் இரஷ்யாவும்) போட்டிபோட்டிக்கொண்டு முன்னேறி வருகின்றன. விண்வெளிப் பயணத்திற்கு அடிப்படையாக இராக்கெட்டு. 41 விளக்கப்படங்களின் துணைகொண்டு இச்சிறுநூல் உருவாக்கப் பெற்றுள்ளது. இளைஞருலகம் படித்துப் பயன்பெறவேண்டிய ஓர் அருமையான நூல் இது.

<u>68)அம்புலிப்பயணம்</u>: ‘சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்’ என்று கனவு கண்டார் பராதியார். அந்தக் கனவை நனவாக்கியது இந்நூல். அமெரிக்க அரசு 1969-சூலை 20-ம் நாள் (அமெரிக்க நேரப்படி) முதன் முதலாக அம்புலியில் கால் வைத்தான். அப்போலோ-11ல் பயணம் செய்த நீல் எ.ஆர்ம்ஸ்ராங்க் என்ற விண்வெளி வீரனுக்கு இந்தப் புகழ் கிடைத்தது. இந்த நூல் ‘அமுதளிக்கும் அம்புலி’ முதல் ‘எதிர்காலத் திட்டங்கள்’ வரை 20 பகுதிகளில் அம்புலிப் பயணத்தையும் அதன் பயனையும் அற்புதமாக விளக்குகின்றது.

<u>69)தொலை உலகச் செலவு</u>: ஊழ் என்பது இயற்கையின் விதிமுறை; அ∴து எளிதில் மாற்ற முடியாதது. மனித ஆற்றலைக் கடந்து நிற்பது அறிவியல். வலிமை வாய்ந்த அத்தகைய ஊழடன் போராடி அந்த ஊழையும் உப்பக்கம் காணச்செய்வது மனிதனின் முயற்சி. இங்ஙனம் மனிதன் தொலைஉலகங்களைக் காண வேண்டும் என்ற கனவை நனவாக்கிய மனித முயற்சிகளின் வெற்றியைக் கூறுவது இந்நூல். 17 தலைப்புகளில் மனிதன் மேற்கொண்ட தொலையுலகச் செலவுகளையும், அறிவியல் நுட்பங்களையும் விளக்கும்பாங்கில் பேராசிரியர் ரெட்டியாரின் சிந்தனையில் எழுந்த அற்புதப் படைப்பு.

<u>70)அணுக்கரு பௌதிகம்</u>: இ∴து ஒரு மொழிபெயர்ப்பு நூல்.ஹெய்சென்பெர்க் என்ற அறிவியலறிஞரின் ‘Nuclear Physics’ என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் ஆகும். பல விளக்கப்படங்களைக் கொண்டது. **(சென்னைப் பல்கலைக் கழக பரிசு பெற்றது).**

<u>71)இல்லறநெறி</u>: திருமணம் புரிந்துகொண்டு இல்லற வாழ்வில் நுழையும் நம்பி-நங்கையர்அறிந்துகொள்ள வேண்டிய அடிப்டைச் செய்திகளனைத்தையும் அறிவியல் அடிப்டையில் - உடற்கூற்றியல் ஒளியில் - வேலனுக்கு வேங்கடத்தான் எழுதும் ஐம்பது கடிதங்களாக 55 விளக்கப் படங்களின் துணைகொண்டு தெள்ளத்தெளிவாக விளக்கும் ஓர் அருமையான நூல்.

72)வாழையடி வாழை: அருமையான அழகியதோர் அறிவியல் நூல்; கால்வழி இயலைக் (genetics) கவர்ச்சியாக எடுத்துரைப்பது. ஐம்பத்து மூன்று படங்கள் கருத்துகளைத் தெளிவாக விளக்கத் துணை செய்கின்றன.

73)அறிவியல் விருந்து: இது பல்வேறு இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் எழுதப்பெற்று வெளிவந்த பத்து அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு. அணுவியல், கால்வழி இயல், இயற்பியல், வானியல், விண்வெளி இயல், உளவியல், தொல்பொருட்கலை இயல் போன்ற பல்வேறு துறைகளின் கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு தீந்தமிழ் நடையில் எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் செம்மையாக அமைந்தது.

74)தமிழில் அறிவியல்: - அன்றும் இன்றும்: உலகத்தமிழராய்ச்சி நிறுவனம் நடத்திய டாக்டர் செ.அரங்கநாயகம் அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவுகள் திட்டத்தின் கீழ் ‘தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகள் அடங்கியது.

ஆராய்ச்சி:

75)கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி: புலவர்கள் சுவைக்கும் நூலைப் பொதுமக்களும் மருளாது சுவைக்க வேண்டும் என்ற நோக்கில் ஆராய்ச்சிப் பாங்கில் எழுதப்பெற்றுள்ளது.

76)வடவேங்கடமும் திருவேங்கடமும்: கண்ணன் தேர்த்தட்டிலுருந்து கொண்டு காணடீபனுக்கு அருளிய அமுதவாக்கை வியாசபகவான் பதினெட்டு இயல்களில் அமைத்து வெளியிட்டதைப்போல், பேராசிரியர் ரெட்டியார் அவர்களும் இந்நூலை பதினெட்டு கட்டுரைகளாக அமைத்து வெளியிட்டுள்ளார். இவற்றுள் முதல் நான்பு கட்டுரைகள் ‘வடவேங்கடம்’ பற்றியவை. இவற்றில் ‘வடவேங்கடம்’ வேறு, ‘திருவேங்கடம்’ வேறு என்பனவற்றை இலக்கியச் சான்றுகளுடன் அறுதியிடுகின்றார். ஏனைய பதினான்கு கட்டுரைகளும் திருவேங்கடத்தையும் அங்கு நின்ற கோலத்தில் சேவை சாதிக்கும் வேங்கடவாணனையும் பற்றியவையாக விளங்குகின்றன. வைணவ உலகில் இது ஓர் அரிய ஆய்வு நூல்.

77)**Religion and Philosophy of Nalayiram with special reference to Nammalvar:** இ∴து அருமையான ஆங்கில நடையில் அமைந்த மிகப்பெரிய ஓர் ஆராய்ச்சி நூல். 927 பக்கங்கள்; ஆறு பிரிவுகளில் 32 இயல்களாக அமைந்துள்ளது. பேராசிரியர் டாக்டர் பட்டத்திற்கு எழுதிய ஆய்வுக் கட்டுரையின் அச்சு வடிவம். வைணவ சமயத்திற்கும், விசிட்டாத்வைத தத்துவத்திற்கும் ஓர் அடிப்படையான நூல்.

78)Collected Papers of Prof Dr N Subbu Reddiar: இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள், அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாடுகள் இன்னும் வேறு பல இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் பேராசிரியர் ரெட்டியார், சமர்ப்பிக்கப்பட்டனவும், சில ஆய்வேடுகளில் வெளிவந்தனவுமான ஆங்கில கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

{☺}{☺}{☺}*****{☺}{☺}{☺}

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பின்னிணைப்பு — 2

துணைநூற்பட்டியல்



பின்னிணைப்பு – 2:

துணைநூற்பட்டியல்

(1) தமிழ் நூல்கள்

01	அண்ணங்கராசாரிய சுவாமிகள்	நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் - திவ்வியார்த்ததீபிகை (கிரந்தமாலா ஆபிஸ், காஞ்சிபுரம்)
02	அரங்கநாத முதலிணார், ஆ	‘வைணவம் (சுவர்ணவிலாஸ், 13 பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5)
03	அருணைவடிவேல் முதலியார், சி	சித்தாந்த வினாவிடை, 1975 தருமையாதீனம், மயிலாடுதுறை, தஞ்சை வட்டம்
04	ஆழ்வார்கள்	நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் (கி.வேங்கடசாமி ரெட்டியார் 2ஆம் பதிப்பு 1981) திருவேங்கடத்தான் திருநெறிமன்றம், 31, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14
05	இராமநாதபிள்ளை, ப	சிவஞான சித்தியார் பரபக்கம், கழகம், 1968 முதற்பதிப்பு
06	இயம்பூரணர் (உ..ஆ.)	தொல்காப்பியம் - பொருளதிகாரம் கழகம், சென்னை, 1962 முதற்பதிப்பு
07	இராமாநுசாச்சாரி, ர	சைவசித்தாந்தம் (1963) கொ.நா.சீநிவாசன், 24, சின்னக்கடைத்தெரு, திருச்சி-2
08	இலட்சுமணன், கி	இந்திய தத்துவ ஞானம் (மூன்றாம் பதிப்பு-1980) பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14
09	இளங்கோவடிகள்	சிலப்பதிகாரம்-ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை (கழக வெளியீடு, சென்னை-1)
10	இளவழகனார்	கலித்தொகை – நச்சினார்க்கினியர் உரை கழக வெளியீடு
11	இறையனார்	களவியல் (நக்கீரர் உரை-கழக வெளியீடு)
12	ஔவையார்	கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி (மர்ரே ராஜம் பதிப்பு)
13	கந்தசாமி, சோ.ந.	தொல்காப்பியத்தெளிவு, அபிராமி பதிப்பகம் 1917, முதற்பதிப்பு
14	கம்பர்	கம்பராமாயணம் (வை.மு.கோ.பதிப்பு உரையுடன்)
15	கணேசர், தி.	மானுடத்துவமும் தாந்திரிகமும் தமிழ்புத்தகாலயம், சென்னை, 1981 முதற்பதிப்பு
16	காந்திமதிபிள்ளை, வி. பி.	சிவஞானபோதச் சொற்பொழிவு நூல் கழகம், 1960 (மறு அச்சு)
17	கைலாசபதி, க.	சமூகவியலும் இலக்கியமும் என்.சி.பி.எச், சென்னை 1979, முதற்பதிப்பு
18	சஞ்சீவி, ந.	திருக்குறளில் கற்பனைத்திறனும், நாடக நலனும், சென்னைப்பல்கலைக் கழகம் சென்னை, 1973 முதற்பதிப்பு

19	சாமி, பி.எல்.	இலக்கியத்தில் அறிவியல், சேகர் பதிப்பகம் சென்னை, 1981, முதற்பதிப்பு
20	சாமிநாதய்யர், உ.வே.	குறுந்தொகை மூலமும் உரையும் ‘தியாகராசவிலாச வெளியீடு, சென்னை 1962, நான்காம் பதிப்பு
21	சாமிநாதய்யர், உ.வே.	திருத்தக்க தேவரியற்றிய சீவகசிந்தாமணி மூலமும், நச்சினார்க்கினியருரையும் ‘தியாகராசவிலாச வெளியீடு 1969, ஏழாம்பதிப்பு
22	சஞ்சீவி, ந.	தெய்வத்தமிழ், சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு, 1975
23	சாமிநாதய்யர், உ.வே.	புறப்பொருள் வெண்பாமாலை உரை கழக வெளியீடு
24	சங்கப்புலவர்கள்	அகநானூறு, வேங்கடசலம் பிள்ளை, வேங்கடசாமிநாட்டார் உரை, கழகவெளியீடு
25	சங்கப்புலவர்கள்	ஐங்குறுநூறு, பொ.வே.சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு
26	சங்கப்புலவர்கள்	குறுந்தொகை (உ.வே.சா.உரை – பதிப்பு)
27	சங்கப்புலவர்கள்	புறநானூறு, அவ்வை துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு
28	சங்கப்புலவர்கள்	பரிபாடல், (உ.வே.சா.உரை – வெளியீடு)
29	சிவஞான முனிவர்	காஞ்சிபுராணம், கழக வெளியீடு
30	சிவபாதசுந்தரம், சோ.	மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17 இ.ப.1984
31	சித்பவானந்த அடிகள்	கடவுளின் வடிவங்கள் (1957) தபோவன வெளியீடு, திருப்பராய்த்துறை திருச்சி மாவட்டம்
32	சிவஞான சுவாமிகள்	சிவஞானபோதச் சிற்றுரை (1940) சைவசித்தாந்த மகாசமாஜம் 22ஏ, கல்லுக்காரத்தெரு, மைலாப்பூர், சென்னை-4
33	சிவலிங்கனார். ஆ	தொல்காப்பியம் (சிறப்புப்பாயிரம்) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, 1980 முதற்பதிப்பு
34	சீராமதேசிகாசாரியார்	தேசிகப்பிரந்தம் - உரை (ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்)
35	சுந்தரமூர்த்தி, இ.	திருக்குறள் அணிநலம் சென்னைப்பல்கலைக் கழகம், சென்னை 1971, முதற்பதிப்பு
36	சுந்நர ராமானுச சுவாமிகள்	தத்துவத்திரயம் - விளக்கஉரை (வேலூர், வைணவ சித்தாந்த மகாசங்கம்) 1951
37	சுப்பிரமணிய அய்யர், ஏ.வி.	தமிழ் இலக்கியத்தில் அறுவகைச் சமயம் (ஓர் ஆராய்ச்சி), நூலாசிரியர் வெளியீடு, திருநெல்வேலி, 1973 மு.ப.
38	சுப்பிரமணிய பிள்ளை, கா.	தமிழர் சமயம் கழகம், சென்னை, 1953, இ.ப.
39	சுந்தரவடிவேலு, நெ.து.	‘நினைவலைகள்’
40	சேக்கிழார் அடிகள்	பெரியபுராணம் (1970), திருபனந்தாள் வெளியீடு, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்

41	சேஷாத்திரிசிவனார் முதலியோர்	கட்டளைப்பிரபந்தங்கள், (1913, 1914) மதராஸ் ரிப்பன் அச்சுயந்திர சாலை.
42	ஞானசம்பந்தம், அ.ச.	இலக்கியக் கலை கழக வெளியீடு, மு.ப. 1953
43	ஞானப்பிரகாசம், வி.மி. அறவாணன், க.ப.	தமிழில் அறிவியல் கருத்துக்கள் பாரி நிலையம், சென்னை, 1975, மு.ப.
44	தாயுமான அடிகள்	தாயுமானவர் பாடல்கள் (தருமபுரப் பதிப்பு)
45	தண்டபாணி தேசிகர், ச.	நன்னூல் விருத்தியுரை பாரி நிலையம், சென்னை, 1971
46	தாதாசாரியார், அ.ரா.	வரலாற்றில் பிறந்த வைணவம் ஸ்ரீசாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம் கும்பகோணம்
47	திருவள்ளுவர்	திருக்குறள், பரிமேலழகர் உரை (கழக வெளியீடு)
48	திருஞானசம்பந்தர்	தேவாரம், காசி மடம் திருப்பனந்தாள், 1961
49	திருநாவுக்கரசர்	தேவாரம், காசி மடம் திருப்பனந்தாள், 1963
50	திருமூலர்	திருமந்திரம், குமரகுருபரன் டி.எம். பதிப்பாசிரியர், 1968
51	திருவிளங்கம், மு.	சிவப்பரகாசம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனை கழகம், 1974, மு.ப.
52	நக்கீரனார் (உரையாசிரியர்)	களவியல் என்ற இறையனார் அகப்பொருள் கழகம், சென்னை, 1952, மு.ப.
53	நாற்கவிராசநம்பி	அகப்பொருள் விளக்கம், கழக வெளியீடு
54	பவணந்தி முனிவர்	நன்னூல்காண்டிகை உரை (ஆறுமுக நாவலர் பதிப்பு)
55	பரஞ்சோதியார்	திருவிளையாடற்புராணம் (வேங்கடசாமிநாட்டார் உரை, கழக வெளியீடு)
56	பாம், ஏ.ஜே.	மெய்பொருளியர் - ஓர் அறிமுகம் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் சென்னை, 1971
57	பாரதியார்	பாரதியார் கவிதைகள் எஸ்.ஆர்.சுப்பிரமணியபிள்ளை வெளியீடு.
58	பாரதிதாசன்	பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி செந்தமிழ் நிலையம், 1983 25வது பதிப்பு, புதுக்கோட்டை
59	பிள்ளைஉலகஆசிரியர்	ஸ்ரீவசனபூஷணம் (புருடோத்தம நாயுடு பதிப்பு)
60	புருடோத்தமநாயுடு, பு.ரா.	ஸ்ரீவசன பூஷணம், மணவாள மாமுனிகள் வியாக்கியானத்தமிழாக்கம் (தி.கி.நாராயணசாமி நாயுடு, 2, சீதாராமநகர், கடலூர்)
61	புருடோத்தமநாயுடு, பு.ரா.	ஆசாரிய ஹிருதயம், மணவாளமாமுனிகள் வியாக்கியானத்தமிழாக்கம், (2 தொகுதிகள்), சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு
62	புருடோத்தமநாயுடு, பு.ரா.	ஈட்டின் தமிழாக்கம் (102 தொகுதிகள்) சென்னைப்பல்கலைக் கழக வெளியீடு

63	மயிலைக்கிழார் இளவழகனார்	தேவாரம் அடங்கன் முறை (2 பகுதிகள்) 150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை-2, 1953: பதிப்பாசிரியர்
64	மறைஞானசம்பந்தர்	பதிபசுபாசத்தொகை, 1940 தருமையாதீன வெளியீடு, மயிலாடுதுறை, தஞ்சை மாவட்டம்
65	மாணிக்கம், வ.சுப.	தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, 1962, மு.ப.
66	மாணிக்கவாசகர்	திருக்கோவையார், குமரகுருபரன், டி.எம். பதிப்பாசிரியர், 1952, காசிமடம், திருப்பனந்தாள்
67	மாணிக்கவாசகர்	திருவாசகம், புலியூர்க்கேசிகன் பதிப்பாசிரியர், 1963, மு.ப.
68	முத்தமிழ்கவி வீரசாக முதலியார்	திருவேங்கடக் கலம்பகம் (வை.மு.கோ. உரை)
69	மெய்கண்டார் முதலியோர்	மெய்கண்ட சாத்திரம், (பதினான்கு உபபகுதிகள்), கழக வெளியீடு
70	வரதராசன், மு.	இலக்கியத்திறன் பாரிநிலையம், சென்னை
71	வச்சிரவேலு முதலியார், க.	‘சித்தாந்தத் தெளிவியல்’, 1968 வெளியீடு தருமையாதீனம், மயிலாடுதுறை
72	வானமாமலை, நா.	தமிழர்பண்பாடும் தத்துவமும் என்.சி.பி.எச், 1973, மு.ப.
73	வேங்கடசாமி ரெட்டியார், கி.	நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (பதிப்பு) திருவேங்கடத்தான் திருமன்றம், 19பி, பெருமாள் முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை – 14
74	வேங்கடசாமி ரெட்டியார், கி.	திருவிருத்தம் உரை, திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை 14
75	வெள்ளைவாரணன், க.	பன்னிருதிருமுறை வரலாறு, 1972 அண்ணாமலைப்பல்கலைக் கழகம் கழக வெளியீடு

(2) ஆய்வேடுகள்

மணிவண்ணன், ஆ.	‘தமிழ்மொழி வளர்ச்சி – கலைக்கதிரின் பணி – ஓர் ஆய்வு’, அண்ணாமலை பல்கலைக் கழகம் : தமிழ்த்துறை, எம்.ஃ.பில் ஆய்வேடு, (1987-88)
சாந்தா, சி.	‘தமிழ்மொழி வளர்ச்சி: இயற்பியல் & வேதியியல்’ அண்ணாமலை பல்கலைக் கழகம் : தமிழ்த்துறை எம்.ஃ.பில் ஆய்வேடு, (1987-88)
சிவக்குமார், தி.	அண்ணாமலை பல்கலைக் கழகம் : தமிழ்த்துறை எம்.ஃ.பில் ஆய்வேடு, (1987-88)
நெடுஞ்செழியன், க.	மெய்க்கீர்த்திகள், எம்.ஃ.பில் பட்ட ஆய்வேடு, மதுரை பல்கலைக்கழகம்

(3) கலைக்களஞ்சியம்

01	கலைக்களஞ்சியம்	தொகுதி 1	தமிழ் வளர்ச்சிக் கழகம்
02	கலைக்களஞ்சியம்	தொகுதி 2	தமிழ் வளர்ச்சிக் கழகம்
03	கலைக்களஞ்சியம்	தொகுதி 3	தமிழ் வளர்ச்சிக் கழகம்
04	கலைக்களஞ்சியம்	தொகுதி 4	தமிழ் வளர்ச்சிக் கழகம்
05	கலைக்களஞ்சியம்	தொகுதி 8	தமிழ் வளர்ச்சிக் கழகம்

(4) அகராதி முதலியன

01	கதிர்வேற்பிள்ளை, நா.	தமிழ் மொழியகராதி, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1984, ஆறாம் பதிப்பு
02	சிங்காரவேலு முதலியார், ஆ.	அபிதான சிந்தாமணி, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1983, மூன்றாம் பதிப்பு

(5) இதழ்

டாக்டர் கே வேங்கடசுப்பிரமணியம், அறிவியல் தமிழ்
கலைமகள், டிசம்பர் 1988.

(6) ஆங்கில நூல்கள்

01. Abererombie, L. - Principles of Literary Criticism
Yora & Co, Bombay, 1971.ambridge, 1940.
02. Ayyar, G.V.N. - Origin and Early History of Saivism in South India Madras, 1936.
03. Bhattacharya, B. - Saivism and the Phalic World, Vol I & II
Oxford & IBH Publishing Co., 1975.
04. Campbell, Joseph - Philosophies of India
Routledge & Kegan Paul Ltd., London
05. Dass Gupta, S.N. - A History of Indian Philosophy, Vol I - III
Cambridge, 1940.
06. George, A.G. - Literary Criticism, Vol II
Asia Publishing House, Bombay, 1967.
07. Hirianna - Outlines of Indian Philosophy
G.A. & Unwin, India, 1973.
08. Hirianna - Essentials of Indian Philosophy
G.A. & Unwin, India, 1973.
09. Hudson, W.H. - An Introduction to the Study of Literature, 1946.
10. John Jacob Meyar - Sexual Life in Ancient India,
Motilal Banarsidas, Delhi, 1971.
11. Johan Brown - Language through Literature
Madras, 1967

12. Lunacharsky - On Art and Literature, First Edn. Moscow Publishers, 1970.
13. Murry, M. - Problem of Style Asia Publishing House, Bombay, 1965.
14. Radhakrishnan, S. - Religion and Culture Orient Paper Books, Delhi, 1968.
15. Zimmer, Heinrich - Philosophies of India Routledge & Kegan Paul Ltd., London EC 4, 1951

{☺}{☺}{☺}*****{☺}{☺}{☺}

ந சுப்பு ரெட்டியார் 100

தமிழ்வள மேம்பாட்டில்

முனைவர் ந சுப்பு ரெட்டியாரின் பணி

Professor Dr N Subbu Reddiar's

Contributions for the Enrichment of Tamil

பின்னிணைப்பு — 3

பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

பேராசிரியரின் அன்னையார்

பின்னிணைப்பு – 3

பேராசிரியர் ரெட்டியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

பிறப்பு	27.8.1916 : பெரகம்பி, இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் (திருத்தாயார் பிறந்த ஊரில்)
கல்வி	❖ 1920-1925 : திண்ணைப் பள்ளிக்கூடம், பெரகம்பி, மணலில் எழுதுதல் ❖ 1925-1930 : தொடக்கப்பள்ளி, கோட்டாத்தூர், முசிறி வட்டம், தந்தையார் பிறந்த ஊர், சொந்த ஊர் ❖ 1930-1931 : ஜமீந்தார் நடுநிலைப்பள்ளி, துறையூர், முசிறி வட்டம், எட்டாம் வகுப்பு ❖ 1931-1934 : ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளி, முசிறி, (4,5,6 படிவங்கள்) 1934ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறல் ❖ 1934-1936 : இடைநிலைவகுப்பு – திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி, முதல் வகுப்பில் தேர்ச்சி பெறல் ❖ 1936-1939 : திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பி.எஸ்.சி. (வேதியியல், இயற்பியல், கணிதம்) - மூன்றாம் நிலையில் தேர்ச்சி பெறல் ❖ 1940-1941: சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, எல்.டி. தேர்வு பெறல் (‘*அறிவியல் கழகங்கள்*’ என்ற ஆங்கிலக் கட்டுரையை கல்லூரி ஆண்டிதழில் வெளியிடல்)
வாழக்கை/ அலுவல்	➢ **1941-1950** : உயர்நிலைப்பள்ளி, துறையூர். தானே முன்னின்று தொடங்கிய பள்ளியில் தலைமையாசிரியர் பணி. ➢ 1945 : தமிழ் வித்துவான் தேர்வு பெறல் ➢ 1947 : பி.ஏ. முதல்வகுப்பு-முதல்நிலையில் தேர்வு பெறல் ➢ இக்காலத்தில் பள்ளியிலும், ஊரிலும் தமிழறிஞர்களைக்கொண்டு பல இலக்கியச் சொற்பொழிவுகள் ஏற்பாடு ➢ 1948 – பள்ளி மாணாக்கர்களிடம் படைப்பாற்றலை வளர்ப்பதற்கு ‘*இளைஞர் அறிவுச்சுடர்*’ என்ற தலைப்பில் கையெழுத்து இதழ் தொடங்குதல் ➢ 1949, 1950களில் ‘*இளைஞர் அறிவுச்சுடர்*’ அச்சு வடிவில் வெளியிடல். ➢ உடற்பயிற்சி, பள்ளி ஆண்டு விழாக்களைக் கோயில் திருவிழாக்கள்போல் பெரிய அளவில் ஏற்பாடு. ஊர்மக்கள் திரண்டு எழுந்தருளுதல். ➢ திருச்சி மாவட்டத் தமிழாசிரியர் சங்கம் நிறுவி அதன் தலைவராக மூன்றாண்டு பணி. ➢ இக்கழக ஆதரவில் மதுரைத் தமிழ்ச்சங்கம், மாணவர் மன்றம் பள்ளியிறுதித் தேர்வு மாணாக்கர்கட்கு தமிழ்த்தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்குவதுபோல் மாவட்டநிலையில் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்குதல் ➢ திருக்குறள் மாநாடு, ஆசிரியர் மாநாடுகள் முன்னின்று நடத்தும் பொறுப்புகள் ➢ பல வார, பிறை, திங்கள் இதழ்களுக்குக் கட்டுரைகள் வழங்குதல் ➢ திருச்சி வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபெறல் ➢ பாவேந்தர் பாரதிதாசனை ஒருவாரம் விருந்தினராக்கி அவருடன் அளவளாவுதல் - பள்ளியிலும் வெளியூர்களிலும் பல கூட்டங்கட்கு ஏற்பாடு செய்தல் ➢ **1950-1960**: ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி (காரைக்குடி) – தமிழ்ப்பேராசிரியர், துறைத்தலைவர் ➢ 1951 – தமிழ் எம்.ஏ. தேர்வு, இரண்டாம் நிலை

	➢ கல்லூரியில் நூலக வளர்ச்சி, ஆண்டு விழா, இலக்கிய நிகழ்ச்சிகள் இவற்றை ஏற்பாடு செய்யும் பொறுப்பு. ➢ குடிமைப்பயிற்சி முகாம்களில் முக்கிய பொறுப்புகள் (முக்கியமாக உணவு ஏற்பாடு) ➢ காரைக்குடி கம்பன் திருநாளில் பங்கு பெறுதல் ➢ பல இலக்கிய நிறுவனங்கள், பள்ளி ஆண்டு விழாக்கள் - சொற்பொழிவுகள், ஆண்டுவிழாத் தலைமையுரைகள். ➢ திருச்சி வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபெறல். ➢ பல ஆண்டுகள் காரைக்குடி இந்து மதாபிமான சங்க ஆயுள் உறுப்பினர்; பல ஆண்டுகள் ஆட்சிக்குழு உறுப்பினர். ➢ கம்பன் அடிப்பொடி சா.கணேசன், பெரும்புலவர் இராய.சொக்கலிங்கம், சீர்திருத்தச் செம்மல் அமராவதிப்புதூர் சொ.முருகப்பர் - இவர்களுடன் நெருங்கிய தொடர்பு. ➢ சென்னைப் பல்கலைக்கழகம் கல்விப்பேரவை மூன்றாண்டுகள் உறுப்பினர் பதவிகள் (தேர்வுமூலம்). ➢ அமராவதிப்புதூர் மகளிர் இல்லத்தில் மூன்று ஆண்டுகள் கம்பராமாயணப் பாடல்களின் ஆய்வில் முக்கிய பங்குபெறல். ➢ சென்னை மாநில ஆசிரியர் மாநாடு (மதுரை) பல்கலைப்பிரிவு பொறுப்பு. ➢ ஆறு பெரிய நூல்களை வெளியிடல். ➢ ‘அணுக்கரு பௌதிகம்’ மொழிபெயர்ப்புநூல் (1958) சென்னைப் பல்கலைக்கழக பரிசுபெறுதல். ➢ 1958: ஜபல்பூரில் நடைபெற்ற தேசியமட்ட ஆசிரியர் மாநாட்டுக் கருத்தரங்கில் பங்குபெறல். ➢ **1960-1977:** திருவேங்கடவன் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் - தலைவர் ➢ 1969-ல் பிஎச்.டி. பட்டம் பெறல். ‘நாலாயிரம்-நம்மாழ்வார்’ – ஆய்வுப் பொருள். ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற பெரிய ஆய்வுக்கட்டுரை. (1200 பக்கங்கள்) ➢ 1970-ல் தமிழக அரசு மானியம் பெற்று (பத்து ஆண்டு முயற்சியினால்) துறையில் எம்.ஏ., எம்.ஃபில், பிஎச்.டி. பட்டங்கள் பெற துறையை விரிவுபடுத்துதல். துணைக்கு மூன்று ஆசிரியர்கள் நியமனம். ➢ பாக்காலா தமிழ்ச்சங்கம், சித்தூர் தமிழ்ச்சங்கம், திருப்பதி கலாச்சாரக்கழகம் முன்னின்று நிறுவுதல். இவற்றின் ஆதரவில் பல இலக்கியக் கூட்டங்களுக்கு ஏற்பாடு. ➢ பல்கலைக்கழக மானிய ஆணை ஆதரவில் பல கருத்தரங்குகளை இயக்குநர் பொறுப்பிலிருந்து நடைபெறச்செய்தல். ➢ தேசியமட்டத்தில் தில்லி (1964), வாரணாசி (1968), கல்கத்தா (1969), உச்சயினி (1971), குருட்சேத்தரா (1972), தார்வார் (1974 – தலைமைப்பொறுப்பு) போன்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டுக் கருத்தரங்குகளில் பங்குபெற்று ஆய்வுக்கட்டுரைகள் வழங்கல். ➢ குண்டக்கல், பாக்காலா, நகரி, புத்தூர், ஏகாம்பரக்குப்பம் போன்ற தமிழர்வாழும் இடங்களில் விரிவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல். ➢ 26 நூல்கள் வெளியிடுதல். ➢ ‘இராக்கெட்டுகள்’, ‘நமது உடல்’ இரண்டு நூல்கள் தமிழக அரசு பரிசு பெறல் ➢ சென்னைப் பல்கலைக்கழகம் ராபி.சேதுப்பிள்ளை வெள்ளிவிழா அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல். ➢ **1978**: ஜனவரி முதல் சென்னை வாழ்வு ➢ (1978 பிப் - 1979 ஜூன்) தமிழ்க் கலைக்களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர். ➢ முதல்பதிப்பு 10 தொகுதிகள்; இரண்டாம் பதிப்பை 12

	தொகுதிகளாக வெளியிடுவதற்கு அடிப்படை வேலைகள் செய்தல். முதல்தொகுதி முற்றுப்பெறும் நிலையில் வேலைநிறுத்தப்பெற்றுத் திட்டத்தைக் கைவிடல். அனைவருக்கும் வேலை இழப்பு. ➢ 44 நூல்கள் எழுதி வெளியிடல். ➢ ஓய்.எம்.சி.ஏ.பட்டிமன்றத்தின் ஆதரவில் விழா அமைத்து சில நூல்களை பெரியோர்கள் தலைமையில் கற்றறிந்த சான்றோர்களைக் கொண்டு வெளியிடல். ➢ அண்ணாநகர் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவின் கீழ் விழா அமைத்து சில நூல்கள் வெளியிடல். ➢ ஓய்.எம்.சி.ஏ.பட்டிமன்றத்தில் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பற்றி 10 தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல். ➢ கோடம்பாக்கம் காஞ்சி மணிமொழியார் கல்லூரியில் அகத்திணைக் கொள்கைகள் மற்றும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல். ➢ அவ்வப்போது சில பிஎச்.டி. ஆய்வு மாணவர்கட்கு நெறிகாட்டி ஆலோசனைகள் வழங்குதல் (இவ்வாறு பயன்பெற்றோர் அறுவர்). ➢ அண்ணாநகர் தமிழ்ச்சங்கத்தை நிறுவுவதில் முக்கிய பங்குபெறல். ➢ திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தார் நிறுவியுள்ள ஆழ்வார்கள் பிரபந்த புராஜெக்டின் ஆதரவில் சென்னை வானமாமலை மடத்தில் ஒன்றும், திருக்கோவலூர் திரிவிக்கிரமன் சந்நிதியில் ஒன்றுமாக இரண்டு ஆய்வுப் பொழிவுகள் நிகழ்த்துதல். ➢ நான்கு நூல்கள் தமிழக அரசு பரிசு பெறல் ➢ திரு.வி.க.வின் பெயரில் அரசால் நிறுவப்பெற்ற பரிசு பெறல்; ரூ10000.00, தகுதியுரை, சால்வை வழங்கப்பெறுதல். ➢ இவர்தம் 'இலக்கியப்பணி'யைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக் கழகம் வாழ்நாள் தகுநிலைப் பேராசிரியர் பதவி (தமிழ் இலக்கியத்துறையில்) வழங்கல். ➢ இங்ஙனமே பாராட்டும்வகையில் மதுரை-காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' விருது, தகுதியுரை, மூன்று சவரன் தங்கப் பதக்கம் வழங்குதல். ➢ தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தக் குழுவில் முக்கிய உறுப்பனராகப் பணி. ➢ தமிழ்வளர்ச்சி இயக்ககம் நிறுவியுள்ள சிறந்த நூல்கட்கு மானியம் வழங்கும் வல்லுநர் குழு உறுப்பினராகப் பணி (மூன்றாண்டுகள் வீதம் இருமுறை). ➢ அகவைமுதிர்ந்த தமிழறிஞர்கட்கு நிதி உதவி வழங்கும் அரசால் நிறுவப்பெற்ற வல்லுநர் குழுவில் பணியாற்றல். ➢ திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தார் சிறந்த சமயநூல்களுக்கு மானியம் வழங்கும் வல்லுநர் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றல் (இருமுறை இரண்டாண்டுகள் வீதம்). ➢ தில்லி சாகித்திய அகாடமி நிறுவியுள்ள தமிழ் ஆலோசனைக்குழு உறுப்பினர் பணி (ஐந்தாணடுகள்). ➢ தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டி ஸ்ரீமத் ஏ.வி.இராமாநுசநாவலர் சுவாமிகள் சபையின் 62-வது மாநாட்டில் இவர்தம் வைணவப்பணியைப் பாராட்டி "ஸ்ரீசடகோபன் பொன்னடி" என்ற விருது வழுங்குதல். ➢ புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழக ஆதரவில் நடைபெற்ற ஆனந்நரங்கம்பிள்ளை-அம்சம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்துதல். ➢ சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் (திருமதி) கண்ணம்மாள் நடேசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்துதல். ➢ புனே (மகாராட்டிரம்) (1978), சாந்தினிகேதம் (1982) என்ற இடங்களில் நடைபெற்ற அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் வழங்குதல்.

ஆய்வில் அடங்கியவை

- பேராசிரியரின் கல்வியியல் தமிழ்
- பேராசிரியரின் அறிவியல் தமிழ்
- பேராசிரியரின் இலக்கியத் தமிழ்
- பேராசிரியரின் திறனாய்வுத் தமிழ்
- பேராசிரியரின் ஆய்வுத் தமிழ்
- பேராசிரியரின் மொழிபெயர்ப்புத் தமிழ்
- பேராசிரியரின் தெய்வத் தமிழ்
- பேராசிரியரின் வாழ்வியல் தமிழ்
- பேராசிரியரின் பயண இலக்கியத் தமிழ்



ஆய்வுக் களன்கள்

இவ்வாய்வேடு இனிவரும் ஆய்வாளர்களுக்குக் கீழ்க்கண்ட களங்களில் மேலாய்வு செய்ய வழிவகை செய்வதாக அமைகின்றது.

⇒ பேராசிரியரின் பன்முகப் பணிகள்
⇒ பேராசிரியரின் பன்முகப் நோக்கு
⇒ பேராசிரியரின் திறனாய்வுத் திறன்
⇒ பேராசிரியரின் தமிழிலக்கிய ஆளுமை
⇒ பேராசிரியரின் சமய இலக்கிய ஆளுமை

First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்

Books Published : **135**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) **Tamil Payitrum Murai [1957]**
2) **Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]**
3) **Kalvi Ulaviyal Kotpaadukal [1989]**
4) **Vainava Selvam [1995]**

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)

ISBN 978-81-939502-2-7

பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற 100 நூல்கள் (முழுமையாக)
http://tinyurl.com/nsr100collections
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

www.nasubbureddiar100.in